சிலப்பதிகார யாப்பமைதி

டாக்டர் ந. வீ. செயராமன்
எம். ஏ; எம். லிட்; பி. எச். டி; டிப். இன். லிங்.

அண்ணமலைப் பல்கலைக் கழகம்
WITH COURAGE AND FAITH
அண்ணமலை நகர்
தமிழ்நாடு
1977

Rs 15-00

முதற்பதிப்பு - ஜூலை-1977

பிரியா பிரிண்டர்ஸ்
100-அடி சாலை, டாட்டாபாத்
கோயம்புத்தூர்-641012

டாக்டர் வ. சுப. மாணிக்கம்.
எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.
பேராசிரியர், தமிழ்த்துறை.
முதன்மையர், இந்திய மொழிப்புலம்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

அண்ணுமலைநகர்.
நாள்: 5—2—1975

சான்றிதழ்

திரு. ந. வீ. செயராமன் எம். ஏ., எம். லிட். ‘சிலப்பதிகார யாப்பமைதி (Prosody in Silappathikaram) என்னும் தலைப்பில் ஆராய்ந்துள்ள இவ்வாய்வுக் கட்டுரை, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பிஎச். டி. பட்டத்திற்கென ஆய்ந்த கருத்துக்களின் தொகுதி எனவும், இக்கட்டுரை வேறு பட்டங்களின் அளிப்புக்கு அடிப்படையாக முன்பு அமைந்ததில்லை எனவும், இவ்வாய்வுப் பனுவல் பொருள் நோக்காலும், கருத்துத் திரட்சியாலும், கருத்துக்களைப் பயன்கொண்ட முறையாலும் கட்டுரையாளரின் தனித் தன்மையைக் காட்டுவது எனவும் சான்றிதழ் அளிக்கின்றேன்.

வ. சுப. மாணிக்கம்
மேற்பார்வையாளர்

நன்றியுரை

சிலப்பதிகாரக் காப்பியம் பல்நோக்கு ஆய்வுக்குரிய பாடுபொருண்மைத்து. இவ்வாய்வுரை அதன் யாப்பு நோக்குக் குறித்தெழுந்தது.

'சிலப்பதிகார யாப்பமைதி' என்னும் ஆய்வுப் பொருண்மைக்கு வித்திட்டு, வழிகாட்டி, தாயினும் சாலப் பரிந்து கட்டுரையைச் செப்பம் செய்தற்குத் துணை செய்த செம்மல், டாக்டர் வ. சுப. மாணிக்கனாருக்கு உள்ளம் நிறைந்த நன்றியன்.

என் ஆய்வுப் பொருண்மையை ஏற்று, நிறைதற்கு ஒல்லும் வகையான் துணை புரிந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி உரித்து.

ந. வீ. செயராமன்

பதிப்புரை

தமிழ்க் காப்பியங்களுள் முதற்காப்பியம் எனப்படும் சிலப்பதிகாரம் ஒன்றுதான் இசைத்தமிழோடு இயற்றமிழிலும் பல்வகை யாப்பு வளம் படைத்தது; முத்தமிழ் நாடகக் காப்பியம் என்ற பெறலரும் பெருமையும் உடையது. காப்பியத்தைப் படைக்க நினைத்த போதே யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையதாக அமைக்க வேண்டும் என்ற தொல்காப்பிய எண்ணம் இளங்கோ மனத்திற் பதிந்திருக்க வேண்டும். இவர், தொல் காப்பிய நினைவினர் என்பதற்கு வஞ்சிக் காண்டத்தின் தலைப்புக்களே உள்ளங்கை வரி போலச் சான்றாகும்.

சிலப்பதிகாரத்துக்குச் சிலம்பணிபோல இசைக்கலையும் கதை யோடு தொடர்புடைய பொருளாகும். கோவலன் மாதவி உறவு துறவுகள் இசையால் விளைந்தவை. ஆதலின் இசைப்பாடல் களின்றிச் சிலம்பு ஒலியா, நெஞ்சை அள்ளா.

சிலப்பதிகாரம் யாப்புத்துறையிலும் ஒரு புரட்சிக் காப்பியமே. எல்லா யாப்பும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத யாப்பு அன்று இல்லாத யாப்பே என்று பாராட்டுமளவுக்கு அடிகள் காலத்து வழங்கிய செய்யுள் எல்லாம் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள என்பது என் கருத்து.

மணிமேகலை, பெருங்கதைபோலச் சிலப்பதிகாரத்தும் ஒரு காதையை ஒரே பாவாக அடக்கிக் காட்டி வரும் மரபு மறு சிந்தனைக்கு உரியது. பல காதைகளை மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்று கூறுவது இராகமாலிகை என்பதுபோல் கூறற்ற தாகும். சிந்தாமணியில் ஓரிலம்பக முழுதும், இராமாயணத்து ஒரு படல முழுதும் ஒரே வகை விருத்தங் கொண்டவையா? ஒரு வகைப்பாதான், பாவினந்தான் ஒரு காதைக்கு வகுக்கவேண்டும் என்ற மனமையை அகற்றிச் சிலப்பதிகாரச் சோலையுள் நுழைந் தால் யாப்பு வண்ண மலர்கள் கணுத்தோறும் வேறு வேறுகப் பொலிந்து புது மணந் தருவதை உணரலாம்.

நன்றியுரை

சிலப்பதிகாரக் காப்பியம் பல்நோக்கு ஆய்வுக்குரிய பாடுபொருண்மைத்து. இவ்வாய்வுரை அதன் யாப்பு நோக்குக் குறித்தெழுந்தது.

'சிலப்பதிகார யாப்பமைதி' என்னும் ஆய்வுப் பொருண்மைக்கு வித்திட்டு, வழிகாட்டி, தாயினும் சாலப் பரிந்து கட்டுரையைச் செப்பம் செய்தற்குத் துணை செய்த செம்மல், டாக்டர் வ. சுப. மாணிக்கனருக்கு உள்ளம் நிறைந்த நன்றியன்.

என் ஆய்வுப் பொருண்மையை ஏற்று, நிறைதற்கு ஒல்லும் வகையான் துணை புரிந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி உரித்து.

ந. வீ. செயராமன்

பதிப்புரை

தமிழ்க் காப்பியங்களுள் முதற்காப்பியம் எனப்படும் சிலப்பதிகாரம் ஒன்றுதான் இசைத்தமிழோடு இயற்றமிழிலும் பல்வகை யாப்பு வளம் படைத்தது; முத்தமிழ் நாடகக் காப்பியம் என்ற பெறலரும் பெருமையும் உடையது. காப்பியத்தைப் படைக்க நினைத்த போதே யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையதாக அமைக்க வேண்டும் என்ற தொல்காப்பிய எண்ணம் இளங்கோ மனத்திற் பதிந்திருக்க வேண்டும். இவர், தொல்காப்பிய நினைவினர் என்பதற்கு வஞ்சிக் காண்டத்தின் தலைப்புக்களே உள்ளங்கை வரி போலச் சான்ருகும்.

சிலப்பதிகாரத்துக்குச் சிலம்பணிபோல இசைக்கலையும் கதையோடு தொடர்புடைய பொருளாகும். கோவலன் மாதவி உறவு துறவுகள் இசையால் விளைந்தவை. ஆதலின் இசைப்பாடல்களின்றிச் சிலம்பு ஒலியா, நெஞ்சை அள்ளா.

சிலப்பதிகாரம் யாப்புத்துறையிலும் ஒரு புரட்சிக் காப்பியமே. எல்லா யாப்பும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத யாப்பு அன்று இல்லாத யாப்பே என்று பாராட்டுமளவுக்கு அடிகள் காலத்து வழங்கிய செய்யுள் எல்லாம் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள என்பது என் கருத்து.

மணிமேகலை, பெருங்கதைபோலச் சிலப்பதிகாரத்தும் ஒரு காதையை ஒரே பாவாக அடக்கிக் காட்டி வரும் மரபு மறு சிந்தனைக்கு உரியது. பல காதைகளை மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்று கூறுவது இராகமாலிகை என்பதுபோல் கூறற்றாகும். சிந்தாமணியில் ஓரிலம்பக முழுதும், இராமாயணத்து ஒரு படல முழுதும் ஒரே வகை விருத்தங் கொண்டவையா? ஒரு வகைப்பாதான், பாவினந்தான் ஒரு காதைக்கு வகுக்க வேண்டும் என்ற மனமையை அகற்றிச் சிலப்பதிகாரச் சோலையுள் நுழைந்தால் யாப்பு வண்ண மலர்கள் கணுத்தோறும் வேறு வேருகப் பொலிந்து புது மணந் தருவதை உணரலாம்.

3. காதைகளின் புறத்தேயமைந்த செய்யுள் வகைகள் 116
புறத்தேயமைந்த செய்யுட்கள்
வெண்பாக்கள்
பதிகம்
உரைபெறு கட்டுரை
காண்டக் கட்டுரை
நூற் கட்டுரை

4. காதைத் தலைப்பும் முத்தமிழும் 151
காப்பியங்களின் உட்பிரிவுகள்
பாடல்
மாலை
வரி
குரவை
காதை

5. காதைகளின் யாப்பமைதி 183
மங்கலவாழ்த்துப் பாடல் முதலாக
வரந்தருகாதை ஈறுக உள்ள 30 பகுதிகள்

6. காதைகளின் பொருளும் யாப்பும் 311
தொல்காப்பியர் காலத்தில் பொருளும் யாப்பும்
சங்ககாலப் பொருள்யாப்பு நெறி
யாப்பு நெறியாளர்
கதை நிகழ்ச்சியும் நிலமண்டிலமும்
நிலமண்டிலத்தின் பழமைச் சிறப்பு
நிலமண்டிலத்துக்குரிய பொருண்மைகள்
உணர்வுப் பொருண்மையும் குறள்மிடை மண்டிலமும்
கிளைக்கதையும் கலிவெண்பாட்டும்

கூற்று மாற்றமும் உறழ்கலியும்
இன்பதுன்ப உணர்வும் மயங்கிசையும்
தொடர்ச்சிப்பொருண்மையும்
கொச்சக வொருபோகும்
குழுமப் பொருண்மையும் பாவினங்களும்

7. *இலக்கண உரைகளும் சிலம்பின் யாப்பும்* 346
சிலப்பதிகாரம் - புணர்ச்சி
பாட்டிடைவைத்த குறிப்பு
பொருளொடு புணர்ந்த நகைமொழி
தொன்மை
தோல்
அகநிலைக் கொச்சகக் கலி
தரவின்ருகித் தாழிசைபெற்ற கொச்சகவொருபோகு
ஆசிரியத் தாழிசை
யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு

8. *சிலப்பதிகார யாப்பு நெறி* 374
நிலைமண்டில ஆசிரியத்தின் யாப்பு நெறி
குறள்மிடை மண்டில யாப்பு நெறி
நேரிசை யாசிரிய யாப்புநெறி
வஞ்சிப்பாவின் யாப்பு நெறி
வெண்பாவின் யாப்புநெறி
கலிப்பாவின் யாப்புநெறி
பாவின நெறி
புதுவகைப் பாவினம்
நாடகக் கூறுகள்
இறுவாய் 429

பிற்சேர்க்கை

1. மறைந்த யாப்பியல் நூல்கள்
2. சிலம்பில் பயின்ற இயற்பாக்களும் இசைப்பாக்களும்
3. வரியும் குரவையும்
4. காதை வரிசையில் முத்தமிழ்க் கூறுகள்
5. சிலப்பதிகார யாப்பு மேற்கோள்
6. சிலப்பதிகாரம் முத்தமிழ் யாப்பு வடிவப் பதிப்பு

துணை நூல்கள்

தோற்றுவாய்

'சிலப்பதிகார யாப்பமைதி' என்பது என் ஆய்பொருள். சிலப்பதிகாரக் காப்பியத்தின் பாடுபொருண்மை குறித்துப் பல கோணங்களில் ஆய்வுரைகள் பல தமிழுலகில் வெளி வந்துள. தொல்காப்பியர், காக்கைபாடினியார் முதலிய யாப்பிலக்கணிகள் வகுத்துத் தந்த வழித்தடத்தில், ஏறத் தாழ ஐயாயிரம் அடிகள் கொண்ட தனி மூல காப்பிய மொன்றின் யாப்பமைதியைப் பொருளாகக் கொண்டு நிகழ்த்தப்பட்ட இவ்வாய்வு தமிழ் ஆராய்ச்சியுலகில் கன்னிமுயற்சியாகும்.

கண்டுணர் திறனாய்வு

இலக்கியத்தைத் திறன் செய்யும் நெறிகளைப் பலவாக வகுத்துரைப்பர் திறனாளிகள். கண்டுணர் திறனாய்வு நெறியும் (Inductive Criticism) அவற்றுள் ஒன்று. 'கண்டுணர் முறை முன்னமே வகுத்த விதிகளைக் கொண்டு ஆய்வதன்று; ஒரு நூலைக் கற்கும்போது அதிலிருந்தே விதிகளைக் கொண்டுணர்ந்து ஆய்வதாகும்'[1] என இந்நெறியை விளக்குவர் அறிஞர். இந்நெறிப்படி சிலப்பதி காரக் காப்பிய அமைப்பினின்றே யாப்பியல் விதிமுறைகளை அளவு கோலாகக் கொண்டு, நூலின் யாப்பமைதி, இக் கட்டுரைக்கண் ஆயப்பெற்றிருத்தலைக் காணலாம். வேற்று மொழி இலக்கியங்களைக் கற்று அதனால் அறியப்படும் விதிமுறைகளை அளவுகோலாகக் கொண்டு தமிழிலக் கியங்களை ஆயும் நெறியிலன்றி, தமிழ் யாப்பியலார் வகுத்த இலக்கணச் சட்டங்களாய களத்தில் நின்று, எடுத்துக்கொண்ட காப்பியத்தின் யாப்பு என்னும் அளவு கோலால், யாப்பியல் என்ற முழு நோக்கில் எழுத்தும்

1. இலக்கியத் திறன் - டாக்டர் மு. வரதராசன் - பாரி நிலையம் - பக். 312

அசையும் சீரும் தளையும் பாவும் பொருளும் எண்ணிச் செய்யப்பட்ட இவ்வாய்வுரை தனித் தன்மையுடையது.

உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும்

சிலப்பதிகார யாப்பமைதி பற்றிய ஆய்வுக்கு அடித் தளம் அமைத்துச் சென்றோர் பலர். அரும்பதவுரை யாசிரியர், அடியார்க்கு நல்லார் இருவரும் சிலப்பதி காரத்தின் யாப்பு வகையைச் சுட்டிய முன்னோடியர். காப்பி யத்தின் பகுதிகளனைத்திற்கும் விரிவான யாப்பு வகையைச் சுட்டாவிடினும் சிற்சிலப் பகுதிகளுக்கு நுட்பமான யாப்புக் குறிப்புக்களை உரைத்த பெருமையர் அரும்பதவுரைகாரர். அடியார்க்கு நல்லார், காதையின் இறுதிதோறும் ‘எல்லா வடியும் நேரடியாய் வந்து முடிதலின், நிலைமண்டிலவாசிரி யப்பா’ என்பது போன்று அவ்வப்பகுதிக்குரிய யாப்பு வகையைச் சுட்டிச் செல்லும் சிறப்பினர். கானல்வரிக்கும் வழக்குரைகாதை முதலாய பிற்பகுதிகட்கும் அடியார்க்கு நல்லார் உரையின்மையால், சிலவற்றுக்கு அவரது யாப்புச் சுட்டை அறிதற்கு வாய்ப்பில்லை.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளி யீடாய் வந்த நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் உரைப் பதிப்பே அனைத்துக் காதைகட்கும் உரிய யாப்பு வகைகளைச் சுட்டிய முதற் பதிப்பு.

புகார்க் காண்டத்திற்கு மட்டும் புத்துரையோடு வெளி வந்த டாக்டர் இரா. க. சண்முகம் செட்டியார் உரைப் பதிப்பு, கழக வெளியீடாய் வெளிவந்த பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் உரைப் பதிப்பு. இலிப்கோ வெளியீட்டகத்தின் மூலப் பதிப்பு, இராசம் வெளியீட்டகத்தின் மலிவுப் பதிப்பு, புலியூர்க்கேசிகனின் தெளிவுரையோடு வெளிவந்த மக்கள் பதிப்பு முதலியன நாட்டாரைப் பின்பற்றிக் காதைகட்குரிய யாப்புக் குறியீட்டை வழங்கின.

1958-ல் டாக்டர் வ. சுப. மாணிக்கனுரைப் பதிப் பாசிரியராகக் கொண்டு வெளிவந்த இரட்டைக் காப்பியப் பதிப்பு, யாப்பு வகைகளைச் சுட்டுவதில் பழஞ்சுவட்டைப் பின்பற்ருது புதுவகைப் பாட்டையில் நடந்தது. யாப்பு வகைகளின் வடிவத்திற்கேற்ப சிலப்பதிகாரப் பகுதிகளின் மூல வடிவங்கள் செப்பஞ் செய்யப்பட்ட சிறப்பு இப்பதிப்புக் குரியது.

யாப்பாய்வில், உரையாசிரியர் பதிப்பாசிரியர் நிலையில் நிகழ்த்தப்பட்ட பணிகள் இவை.

யாப்பியல் திறனிகள்

யாப்பு என்னும் பொதுப் பொருண்மை குறித்து ஆய்வு நிகழ்த்திய தமிழ்த் திறனிகளும் இவண் சுட்டுதற் குரியர். 'தமிழ் யாப்பியல் திறனுேக்கு' (The Advanced Studies in Tamil Prosody) என்னும் பொருண்மை குறித்துத் திறனுய்வு செய்து பட்டம் பெற்றவர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார். சிலப்பதிகாரத்துள் பயின்ற யாப்பு வகைகள் சிலவற்றைப் பழநோக்கிலும் புதுநோக்கிலும் தேவைப்படுமளவு தன்னுய்வுக் கட்டுரைக் கண் திறனித்த சிறப்பு இவருக்கு உரியது.

டாக்டர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனர் 'சங்கப் பாடலும் சிலப்பதிகாரமும்' என்னும் கட்டுரைக்கண் சங்கப் பாடல்களின் யாப்புவகை குறித்தும், சிலப்பதிகார யாப்பு வகை குறித்தும் சுருங்கிய அளவில் ஒப்பீட்டாய்வு நிகழ்த்தி யுள்ளார். சிலப்பதிகாரக் காதைகளின் யாப்பு வகைகள் குறித்து இக்கட்டுரையில் கூறப்பெற்ற கருத்துக்கள் அவரது 'குடிமக்கள் காப்பியம்' என்னும் நூலுள்ளும் இடம் பெற்றன. சிலப்பதிகாரத்துள் அமைந்த கானல்வரியின் பொருண்மைச் சிறப்புக் குறித்து, 'கானல்வரி' என்னும் பெயரால் டாக்டர் தெ. பொ. மீ.யால் எழுதப்பெற்ற நூலுள் அப்பகுதியின் யாப்புவகையைப் பற்றிய ஆய்வுக்

கூறும் அமைந்துள்ளது. காப்பியத்துளமைந்த தனிப் பகுதியொன்றின் பொருண்மைச் சிறப்பும் யாப்புச் சிறப்பும் நோக்கி எழுந்த முதல் நூல் இதுவே.

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையைச் சேர்ந்த அன்னிமிருதுலகுமாரி தாமசு எழுதிய 'சிலம்பின் யாப் பமைதி' என்னும் கட்டுரை சிலப்பதிகார யாப்பு நெறி களைப் பொதுநிலையில் சுட்டுவது. சிலம்புச் செல்வர் ம. பொ. சி.யின் 'சிலம்பிலுள்ள வெண்பாக்கள்' என்னும் கட்டுரையும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கொ. இலக்குமணசாமியின் 'சிலம்பில் வெண்பாக்கள்' என்னும் கட்டுரையும் காதைகளின் இறுதியில் இடம்பெற்ற வெண்பாக்கள் இளங்கோவடி களால் பாடப்பெற்றனவா? என்னும் பொருண்மையை ஆய்பொருளாகக் கொண்டவை, மா. இரா. பூபதியின் 'இளங்கோ கண்ட எழுசீர் விருத்தம்' என்னும் கட்டுரை, சிலப்பதிகாரத்துள் எழுசீர் விருத்தங்களும் இடம் பெற்றுள்ளன எனக்கூறி அதனைச் சான்றுகாட்டி நிறுவும் போக்கினது.

மேலே கூறிய யாப்பியல் திறனுய்வுகள் சிலப்பதிகாரப் பகுதிகளுக்குரிய பாவகைகளைக் கிடந்தாங்குப் பெயர் சுட்டியும், ஒருபகுதிக்குரிய யாப்பு வகைகளின் இயல்பு களைப் பாடுபொருளாய்க் கொண்டும் ஒருவகைப் பாவின் பயிற்சியிடங்கள் கூறியும் எழுந்தவை. இவை சிலப்பதி கார யாப்பமைதியின் சில நோக்குக் கோணங்களேயன்றி முழுநோக்குத் திறனுரை அல்லவென்பது அங்கைநெல்லி. திணைத்துணையாச் செய்த இவ்வாய்வுக் கூறுகள் 'சிலப்பதி கார யாப்பமைதி'யினைப் பனைத்துணையாச் செய்தற்குக் கருவிகளாயின. முன்னோர் நிகழ்த்திய யாப்பாய்வு வழியை உட்கொண்டு முழுமைநோக்கு காண்பதற்கு இவ்வாய்வுக் கட்டுரை துணை செய்யும்.

சிலப்பதிகாரப் பாடுபொருளின் பல்நோக்குக் குறித்து ஏறத்தாழ 210 அறிஞர் பெருமக்கள், நூல்களும் கட்டுரை களும் எழுதியுள்ளனர். இவர்கள் சற்றேறக்குறைய 100 எண்ணிக்கையளவையுடைய திறனாய்வு நூல்களையும், ஏறத்தாழ 270 எண்ணிக்கையளவையுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதித் தமிழுலகுக்கு அறிவுக்கொடை யாகத் தந்துளர்.[2] தனியொரு காப்பியம் குறித்து எழுந்த நூல்களும் கட்டுரைகளும் எண்ணிக்கையளவில் சிலப்பதி காரத்திற்கே மிகுதி. இவ்வெண்ணிக்கைப் பரப்பாய பெருங்கடலினூடு யாப்புநோக்குக் குறித்தெழுந்த திறனுரைகள் ஒருசில துளிகளேயாம்.

யாப்பு நோக்கிலெழுந்த சிறப்புப் பெயர்கள்

சிலப்பதிகாரம் என்பதே காப்பியன் இந்நூலுக்கிட்ட இயற்பெயர். 'சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' எனவரும் பதிகத் தொடர் இதனைச் சுட்டும். ஒரு பொருளுக்கு இயற் பெயருக்குமேலும், அதன் தன்மைகள் குறித்துப் பல்வகைச் சிறப்புப் பெயர்கள் எழுதல் இயல்பே! சிலப்பதிகாரக் காப்பியம் இம்முறையில், முதற்காப்பியம், குடிமக்கள் காப்பியம், புரட்சிக் காப்பியம், என்றின்னோரன்ன சிறப்புப் பெயர்கள் பலவற்றைப் பெற்று விளங்குகின்றது.

இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள், நாடகக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவரும் சிறப்புப் பெயர்களும் சிலப்பதிகாரத் துக்கு உரியனவென்பதை அடியார்க்கு நல்லாரின் உரை யாலும் பதிகத்தாலும் அறியலாம். இவண் குறிக்கப் பெற்ற பெயர்கள் மூன்றும், சிலப்பதிகாரத்துக்கு யாப்பு நோக்கிலெழுந்த சிறப்புப் பெயர்களேயாம் என்பது என் துணிபு.

2. சிலப்பதிகார ஆய்வடங்கல்-காசிராசன்-கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை வெளியீடு

'முத்தமிழும் விரவப்பெற்றதாகலின் இந் நூல் இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள் என்றும், நாடகவுறுப்புக்களை உடைத்தாதலின் நாடகக் காப்பியம் என்றும், உரைப்பாட்டும், இசைப்பாட்டும் இடையிடையே விரவப்பெற்றதாதலின் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் பெயர் பெறும்'[3] எனப் பதிப்பின் வேந்து டாக்டர் உ. வே. சாமிநாதையர் இம்மூவகைப் பெயர்களையும் தம் கருத்துக்கேற்ற விளக்கங் களோடு மொழிவர். எனினும் இம்மூவகைப் பெயர்களும் யாப்பு நோக்கு என்னும் சிறப்புக் கோணத்திலெழுந்த பெயர்களேயாம் என்பதை இவண் விளக்குவல்.

இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள்

அடியார்க்கு நல்லாரே இயலிசை நாடகப் பொருட் டொடர்நிலைச் செய்யுள் என்னும் யாப்புச் சிறப்புப் பெயரை முதன் முதலாக ஆண்டவர்.[4] சிலப்பதிகாரத்துள் பொதிந்து கிடக்கும் இயற்கூறுகளை விரிவாக விளக்கி, இசை நாடகக் கூறுகள் இயற்கூறு போலப் பெருவழக்கி லிலவாதலால் அவற்றைக் கூருது விடுப்பர் அடியார்க்கு நல்லார்.[5] இவ்விளக்கத்தால் இயலிசை நாடகம் என்னும் முவ்வகைப் பொருட்கூறுகளும் சிலப்பதிகாரத்துள் இடம் பெற்றுள்ளமையால் இக்காப்பியம் இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள் எனப் பெயர் பெற்றது

---

3. சிலம்பு - டாக்டர் உ. வே. சா. பதிப்பு, முகவுரை பக். 1

4. 'இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளை அடிகள் செய் கின்ற காலத்து....' - சிலம்பு. அடி. நல். உரை-உரைப்பாயிரம்

5. இனி, இசை நாடகத் தமிழ் நூலது பகுதியும் இவைபோலப் பெருவழக் கின்ருதலாலும், நிலத்தோடும் கலத்தோடும் கண்டத்தோடும் கருவியோடும் நிலையோடும் இயக்கத்தோடும் இருவகைப் பலவகை, விலக்குறுப்புக் கை, கால், வட்டணை, பொருள், யோனி. விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரிச் சேதம் என்பன வற்ருேடும் கதையோடும் பல கூத்துக் கூறுங்கால் உய்த்துணர் வில்லோர்க்குச் செவிச்சுவை பயக்குமாதலாலும் ஈண்டு விரியாது விரித் துலக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க பதிகம், உரை, அடி. நல்.

என்பது அடியார்க்கு நல்லாரின் கருத்தாதல் பெறப்படும். முத்தமிழ்ப் பொருட் கூறுகள் இடம் பெற்றுள்ளமையால் இப் பெயரெய்திற்று எனக்கூறும் அடியார்க்குநல்லார் கருத் துரை எனக்கு உடன்பாடன்று.

'இதில் இயற்றமிழின் பாகுபாடான வெண்பா, அகவற்பா, கலிப்பா என்பவைகளும் இசைத் தமிழின் பாகுபாடான ஆற்றுவரி, ஊசல்வரி, கந்துகவரி முதலிய பாக்களும் நாடகத் தமிழின் பாகுபாடான உரைப்பாட்டுக் களும் வந்துள்ளன'[6] எனவரும் டாக்டர் உ.வே.சா. வின் விளக்கம் சிலப்பதிகாரத்துள் இடம் பெற்ற முவ்வகை யாப்பாட்சியைக் குறிப்பாகச் சுட்டிற்று. முத்தமிழ் யாப்புக் கூறுகள் இடம் பெற்றமையால் இச்சிறப்புப் பெயர் இக் காப்பியத்திற்குரியதாயிற்று எனவரும் டாக்டர் உ.வே.சா. வின் கருத்துரையே என் துணிபுக்கு உதவிய பொருந்துரை.

நிலைமண்டில ஆசிரியப்பா, நேரிசையாசிரியப்பா, கலி வெண்பா, உறழ்கலி, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா முதலிய இயற்பாவகை களும், பண்ணத்தி என்னும் பாவினங்களாய இசைப்பா வகைகளும், உரை (சொல்), உரைத்தொடர் (சொற்றொடர்), கட்டுரை முதலாய நாடகக்கூறுகளும் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள. எனவே முத்தமிழுக்குரிய யாப்பு வகைகள் அமைந்த சிறப்பு காரணமாகவே சிலப்பதிகாரத்துக்கு 'இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள்' என்னும் சிறப்புப் பெயர் எய்திற்று.

நாடகக் காப்பியம்

அடியார்க்கு நல்லாரே 'நாடகக் காப்பியம்' என்னும் சிறப்புப் பெயரையும் தன்னுரையுள் முதன் முதலாகக் குறித் தனர்[7]. நாடகக் காப்பியத்தின் இலக்கணத்தை ஒருபுறம்

6. சிலம்பு, டாக்டர் உ. வே. சா. பதிப்பு, முகவுரை
7. சிலம்பு, அடி. நல். உரை-உரைப்பாயிரம்

அது காவியம்போல் உணர்ச்சியோடு கதை சொல்லும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்; இன்னொருபுறம் கதையைப் புலவர் கூருமல் நாடக மாந்தரே கூற வேண்டியிருத்தலின் தன்னுணர்ச்சிப் பாட்டுக்களைப்போல் உணர்ச்சிகளை நேரே வடிக்கும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்' எனப் பின்றைத் திறனியர் விளக்குவர்.[8] இவ்விளக்கம் நாடகக் காப்பியத்தின் பொருண்மை நோக்குக் குறித்து எழுந்ததேயன்றி, யாப்பு நோக்குக் குறித்து எழுந்ததன்று.

சிலப்பதிகாரத்துள், காப்பியனே, கதை கூறும் போக்கும் நாடகமாந்தரே தன்னுணர்ச்சிகளை நேரே வடிக்கும் போக்கும் ஆகிய இருவகைக் கூறுகளும் நிறைந்துள. மனையறம் படுத்தகாதை, அரங்கேற்றுகாதை, அந்திமாலைச் சிறப்புச்செய்காதை, முதலியன காப்பியனே தன் கூற்ருய்க் கதை கூறும் போக்கின. வழக்குரை காதை, கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை முதலியன நாடக மாந்தரின் தன்னுணர்ச்சிப் பாக்களாய் நேர்கூற்றமைப்பின. இவ்விரு வகைப் போக்கும் அமைந்த சிலப்பதிகாரக் காப்பியம் நாடகக் காப்பியம் என்னும் பெயருக்குரியதே. பொருண்மை நோக்கால் மட்டுமின்றி யாப்பு நோக்காலும் சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் என்னும் பெயருக்குரியதாகும்.

சிலப்பதிகாரத்துள் நாடகவுறுப்புக்களாய உரை, உரைத்தொடர், கட்டுரை முதலாயவை அமைந்துள்ளன வென்பது முன்னருஞ் சுட்டப்பட்டது. இச்சிறப்பால், நாடகக் காப்பியம் என யாப்பு நோக்குச் சிறப்புப் பெயரும் சிலம்புக்குரியதாயிற்று.

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்

சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயர்களில் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பதும் ஒன்று. 'உரை

8. இலக்கிய மரபு-டாக்டர் மு. வரதராசன், பாரி நிலையம், பக். 72

யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் உரைசாலடிகளருள' எனவரும் பதிகத் தொடர் இப்பெயரைச் சுட்டும். 'பாட்டும் உரையும் கலந்து வந்த காவியம்' என்று அரும்பதவுரை காரரும் 'உரையிடையிட்டனவும் பாட்டுடையனவுமாகிய செய்யுள்' என அடியார்க்கு நல்லாரும் இப்பெயர்த் தொடருக்கு விளக்கம் கூறியுள்ளனர். 'உரையிடையிட்ட' என்னும் தொடருக்கு 'உரையும் கலந்துவந்த' 'உரையிடையிட் டனவும்' எனக்கூறி உரை என்பதை இன்னதென விளக் காமலேயே உரையாசிரியர்கள் சுட்டியுள்ளது இதனல் பெறப்படும்.

டாக்டர் உ. வே. சா, இத்தொடரை விளக்குங்கால் 'உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே விரவப் பெற்றதாதலின் உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள் என்றும் பெயர்பெறும்' [9] என்று விளக்குவர். உரை என்பதற்கு உரைப்பாட்டு என டாக்டர் உ. வே. சா. பொருள் கொண்டமை இதனல் புலனும்.

பதிக ஆசிரியர், அரும்பதவுரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகியோர் 'உரை' என்னும் சொல்லை டாக்டர் உ. வே. சா. கூறியாங்கு 'உரைப்பாட்டு' என்னும் பொருளில் ஆண்டுள்ளனரா, அன்றி வேறு பொருளைக் கருதினரா என அறிய இயலவில்லை.

'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்னும் தொடரில் 'உரை' என்னும் சொல்லுக்குச் 'சொல்' எனப் பொருள் கொள்வதே நேரிது என்பதைச் சிலப்பதிகார அமைப்பு நமக்குச்செவ்விதின் விளக்கும். இளங்கோவடிகள் இசைப்பாடல்களின் இடையே இத்தகைய உரை அல்லது சொற்களை இடையில் மடுத்துப்பாடும் இயல்பினர். எனவே யாப்புக்குறியீட்டுச் சொல்லாகிய உரை என்பதை இடை யிடையே மடுத்துச் செய்யப்பெற்ற இசைப்பாக்களைப்

9. சிலம்பு - டாக்டர் உ. வே. சா. பதிப்பு-முகவுரை

பெற்று விளங்குதலால் இக்காப்பியத்திற்கு உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் என்னும் சிறப்புப் பெயர் உரியதாயிற்று. உரை என்னும் சொல்லுக்குச் சொல் என்பதே பொருள் என்னும் கருத்தைத் தமிழுலகுக்குத் தந்த பெருமை இரட்டைக்காப்பியப் பதிப்பாசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனுருக்குரியது.[10]

அடிப்படை விளக்கங்கள்

சிலப்பதிகாரக் காலத்து யாப்பு நெறி பற்றிய பொதுமை நோக்கிலும், காப்பியத்திலமைந்த யாப்பமைதி பற்றிய சிறப்பு நோக்கிலும் இவ்வாய்வுக் கட்டுரைக்கண் பலப்பல முடிபுகள் தெளிவுறுத்தி வரையறுக்கப்பட்டுள. இம் முடிபுகள் பற்றிய தெளிவுக்கு முன்னர், இக்கட்டுரைக்கண் குறிக்கப்பெற்ற இன்றியமையாத அடிப்படைவிளக்கங்கள் சிலவற்றை இவண் அறிதல் சாலும்.

சிலப்பதிகாரக் காலத்தில், தமிழின் முக்கூறுகளாய இயல் இசை, நாடகம் ஆகியவற்றுக்குத் தனித்தனியே யாப்பு வடிவங்கள் வழங்கின. தொல்காப்பியர், காக்கை பாடினியார் ஆகியோர் கூறிய வெண்பா, ஆசிரியம், வஞ்சி, கலிப்பா என்னும் நால்வகைப் பாக்களின் வகைகளும் இயற்றமிழ்ப் பாவகைகளாய் வழங்கின. பண்டு, எழுத் துருவம் பெருது ஏட்டில் எழுதா இலக்கியங்களாய்த் திகழ்ந்த பண்ணத்திகள் பாவினங்களாய் வடிவம் பெற்று இசைத்தமிழ்ப் பாக்களாய் விளங்கின. பண்ணத்திகளைப் பாவினங்களாய் உருக்கொடுத்து வெளிப்படுத்தி, இலக் கியத்தகுதி வழங்கிய பெருமை இளங்கோவடிகட்குரியது. கட்டுரைகளாகவும், உரையாகவும் உரைத்தொடராகவும் இடம் பெற்ற நாடகத் தமிழ்க் கூறுகளும் சிலப்பதி காரத்திலுள. எனவே முத்தமிழ்க் கூறுகளின் யாப்பு

10. சிலப்பதிகாரத் திறன் - இரட்டைக் காப்பியப் பதிப்பு-டாக்டர் வ. சுப. மா.

வடிவங்களை ஒருசேரப் பெற்ற காப்பியமாய்ச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது.

சிலப்பதிகாரத்துள் வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக்காதை ஆகிய பகுதிகளில் உரைப்பாட்டுமடை என்னும் பகுதி இடம் பெற்றுள்ளது. உரைப்பாட்டுமடை என்பதற்குப் பாட்டுக் களின் இடையே இடம்பெற்ற உரைநடைப்பகுதி என்றே தமிழுலகம் இதுகாறும் கருதிவந்துள்ளது. இதற்கு 'உரை யாகிய பாட்டை இடைப்படுத்தது' என அரும்பதவுரை காரரும், 'உரைப்பாட்டை நடுவே மடுத்தல்' என அடியார்க்கு நல்லாரும் பொருளுரைப்பர். '**உரையாகிய பாட்டு**' '**உரைப்பாட்டு**' என்புழி, செய்யுளைப் போன்று சந்தவினிமை அமையப் பெற்ற உரைநடைப் பகுதியையே உரையாசிரியர்கள் இவண் சுட்டியுள்ளமை போதரும். எனினும் உரைப்பாட்டுமடை என்னும் பெயரால் கூறப் பெற்ற பகுதிகள் சந்தவினிமை கொண்ட உரைநடைப் பகுதிகளாயமையாது, சந்தவினிமை அமையப் பெற்ற செய்யுட் பகுதிகளாகவே இருத்தலைக்காண இத்தொடரால் சுட்டப்படும் பொருண்மை விளக்கம் வேறொன்றாயிருத்தல் வேண்டும் எனத் துணியவியலும்.

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்னும் சிறப்புப் பெயர்த்தொடரில் 'உரை' என்னும் சொல்லுக்குச் 'சொல்' எனப் பொருள் கொண்ட விளக்க ஒளித்தடத்தின் வழிச்சென்று உரை என்பது சொல்லையும் பாட்டு என்பது இசைப்பாட்டையும் குறித்து வழங்கிய பொருண்மை நிலை இக் கட்டுரைக்கண் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத் தில் பயின்ற உரைப்பாட்டுமடைதோறும் அமைந்த உரையும் (சொல்லும்) பாட்டும் யாவை என்பது விளக்கந் தோன்ற தெளிவான யாப்பு வடிவோடு இவ்வாய்வுக் கட்டுரைக்கண் இனிது விளக்கப் பெற்றுள்ளது.

இளங்கோவடிகள் பண்ணத்திகட்கு யாப்பு வடிவங்களை உருவப்படுத்தியமையோடு இயற்றமிழ்ப்பாவகையிலும் புதுமை கண்ட புரட்சியாளர். சான்றாக, குறட்பாக்களையும் தனிச் சொல்லையும் நிலைமண்டில ஆசிரியத்தின் இடையே மடுத்துக் 'குறள்மிடை மண்டிலம்' என அழைக்கத்தக்க புதிய இயற்றமிழ்ப் பாவகையைக் கட்டுரை காதைக்கண் அமைத்திருப்பதைக் காணலாம்.

இசைப்பாக்கள் தாழிசை என்னும் பாவினமாய் வருங்கால் ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வரும் சிறப்புப் பாக்களாய் விளங்குதல் காக்கைபாடினிய நெறி. அடுக்கி வரும் இப்பொருண்மைச் சிறப்பைத் தாழிசைகளுள் மூன்றுக்கு மேலும் அடுக்கிவரச் செய்த சிறப்பும் தாழிசைகளே மட்டுமின்றிப் பிற பாவினங்களும் அடுக்கி வரச் செய்தமையும் இளங்கோவிடத்தில் நாம் காணும் சிறப்பு நிலைகள். இவற்றுக்கு மேலும் குறள்வெண்செந்துறை, ஆசிரியத்தாழிசை, கலிவிருத்தம் ஆகிய முவ்வகைப் பாவின் இனங்கள் ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வரும் புதுவகைப் பாவினமாய இசைப்பாவையும் இளங்கோவடிகள் வாழ்த்துக்காதைக்கண் வடித்தமைத்துள்ளதைக் காணலாம். இலக்கியம் கண்டதற்கேற்ப இயம்பப்படுவதே இலக்கண நெறியாயினும், இலக்கியம் கண்ட குறள்மிடை மண்டிலமாய பாவகைக்கும். மூவினம் அடுக்கி வந்த பாவினத்துக்கும் பின்றை யாப்பியலார்கள் இலக்கணச் சட்டம் வகுக்காது விடுத்தனர். உறழ்கலி, கொச்சகவொருபோகு முதலாய பாவகைகளை வழக்கிழந்தனவாகக் கருதி விடுத்தமை போன்று, இவற்றையும் இலக்கணச் சட்டத்துள் செறிக்காது விடுத்தனர் போலும்!

தொல்லிலக்கணியாய தொல்காப்பியர் கூறிய உறழ்கலி, பலவகைக் கொச்சகவொருபோகுப் பாடல்கள் ஆகிய பாவகைகட்கு இலக்கிய வாழ்விடம் தந்த பெருமையும் இளங்கோவடிகட்கு உரியது.

இத்தகு அடிப்படை விளக்கங்களோடு இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளமையும் சுட்டற்குரித்தாம்.

முந்தமிழ் யாப்பு வடிவப்பதிப்பு

சிலப்பதிகாரக் காப்பியத்திற்கு மூலப்பதிப்புக்களும் உரைப்பதிப்புக்களும் மொழிபெயர்ப்புப் பதிப்புக்களும் பல வெளிவந்துள்ளன. மூலப் பதிப்புக்களில் இரட்டைக்காப் பியப்பதிப்பு, இலிப்கோ நிறுவனப்பதிப்பு, மரே பதிப்பு ஆகியன வெளிவந்துள. அடியார்க்கு நல்லார் உரை யுடன் கூடிய புகார்க் காண்டப் பகுதியைத் தி. க. சுப்ப ராயச் செட்டியார், தி. இ. சீனிவாசராகவாச்சாரியார், இரா. க. சண்முகஞ்செட்டியார் ஆகியோர் தனித்தனியே வெளியிட்டுள்ளனர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை பொ. வே. சோமசுந்தரனுர் உரை, புலியூர்க்கேசிகன் உரை ஆகிய உரைப்பதிப்புக்களும் உள. அரும்பதவுரைகாரர் குறிப்புரையுடனும், அடியார்க்கு நல்லார் உரையுடனும் சிலப்பதிகாரம் முழுமையும் டாக்டர் உ. வே. சாமிநாதை யரால் வெளியிடப்பெற்றது. மலையாளம், இந்தி, சமக் கிருதம், செக்மொழி ஆகிய பிறமொழிகளில் பெயர்க்கப் பட்ட பதிப்புக்களும் இக்காப்பியத்திற்கு வெளிவந்துள.

மூலப்பதிப்புக்கள் உரைப்பதிப்புக்கள், மொழி பெயர்ப்புப் பதிப்புக்கள் எனப் பல்வகைப் பதிப்புக்கள் வெளிவந்திருப்பினும் சிலப்பதிகாரத்திற்கே சிறப்பாக அமையவேண்டிய முத்தமிழ் யாப்பு வடிவப் பதிப்பு வெளி வராதது ஒரு குறையே. பாவகைகள் பலவற்றையும், இசைப்பாக்களாகிய பாவினங்கள் பலவற்றையும் உரை நடைப் பகுதி முதலாய நாடகக் கூறுகளையும் பெற்று யாப்புக் கருவூலமாய் விளங்கும் இக்காப்பியத்திற்கு முத் தமிழ் யாப்பு வடிவப் பதிப்பு ஒன்று வெளிவர வேண்டியது மிகவும் இன்றியமையாதது. மிகுதியும் யாப்புச் சிக்கலில் தீர்வு காணப்பட வேண்டிய மங்கல வாழ்த்துப் பாடல்,

கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வழக்குரைகாதை, குன்றக் குரவை,வாழ்த்துக் காதை ஆகிய ஒன்பது பகுதிகளின் முத்தமிழ் யாப்பு வடிவ அமைப்பு இக்கட்டுரையின் இறுதிக்கண் உரிய விளக்கத் தலைப்புக்களோடு செவ்விதின் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வாய்வுக் கட்டுரை ஒரு குறையை நிறைவு செய்கின்றது என்பதைப் பணிவோடு கூறிக் கொள்கின்றேன்.

இயல்பொருட் பொதிவு

இவ்வாய்வுக் கட்டுரையகத்துட் புகுந்து யாப்பு வடிவங்களின் தோற்றம், வளர்ச்சியையும், காதையமைப்பில் அமைந்த யாப்பு வடிவங்களையும் அவை பற்றிய பிறர் கருத்தின் தகவு தகாமைகளையும் முறையாக ஓர்ந்தறிதற்கு முன்னர், என் ஆய்வுக் கட்டுரையில் இயல் தோறும் கிடக்கும் பொருட்பொதிவைக் குறிப்பாக இவண் சுட்டுவல்.

அ. தமிழிலக்கணம் முக்கூறுகள், நாற்கூறுகள். ஐங்கூறுகளுடையதாகக் கருத்துரைக்கப்படுதல் உண்டு,தொல்காப்பியமாய தொன்னூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என்னும் ஐங்கூறுகளோடு மெய்ப்பாடு என்ற ஒன்றையும் பெற்றிருத்தலால் அறுவகை இலக்கணக் கூறுடைய நூலாகவும் விளங்கும் சிறப்புக்குரியது. 'யாப்பு' என்னும் சொல் குறித்தும் அதன் பொருண்மை குறித்தும் இலக்கணியரும் திறனியரும் கூறும் விளக்கங்கள், யாப்பியல் நூல்களின் நுவல் பொருளாராய்ச்சி, மறைந்த யாப்பியல் நூல்களின் வரலாறு பற்றிய செய்திகள் ஆகியன 'தமிழ் யாப்பியல் வரலாறு' என்னும் முதலியற்கண் இடம் பெற்ற பொருண்மைக் கூறுகள். ஓவியம் எழுதுதற்குக் கிழி துணையாதல் போன்று, பின்னே நிகழ்த்தவிருக்கும் அகவாய்வுக்கு அடிப்படைக் கருவியாய இப்புறவாய்வு இவ்வியற்கண் நிகழ்த்தப் பெற்றுள்ளது.

ஆ. இலக்கியனுக்குப் பற்றுக்கோடாய அடிப்படை இலக்சண நூல் ஒன்றிருத்தல் இயல்பு. முத்தமிழ்க் காப்பியனுயை இளங்கோவடிகட்கு இயல், இசை, நாடகமாய முக்கூறுகளுக்கும் மூல இலக்கண நூல்களாக விளங்கியவை யாவை? சிலப்பதிகாரத்துள் அமைந்த நிலைமண்டிலம், குறள்மிடை மண்டிலம், நேரிசையாசிரியப்பா, கலிவெண்பா, உறழ்கலி, பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா, யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு, தரவுகொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, குறளடி வஞ்சிப்பா ஆகிய இயற்பாக்களும் மற்றும் இசை நாடகக் கூறுகளும் எம்மூல நூலின் இலக்கணச் சாயலைப் பெற்று விளங்குகின்றன? இன்னேரன்ன விஞக்கட்குரிய செவ்வ னிறையைச் சான்றுகளினடிப்படையில் விளக்குவது 'சிலம்பில் பயின்ற யாப்புவகைகள்' என்னும் இரண்டாம் இயல்.

இ. காப்பியத்தின் அகவுறுப்பாயினும் காப்பியப் பகுதிகளின் புறவுறுப்பாய் விளங்குவன வெண்பா, பதிகம், உரை பெறு கட்டுரை. காண்டக் கட்டுரை, நூற்கட்டுரை ஆகியன. காப்பியப் பகுதிகட்குப் புறமாயினும், இவை காப்பியனின் கருத்துக்குப் புறமானவையல்ல. இப்பகுதிகளின் யாப்பமைதி 'காதைகளின் புறத்தேயமைந்த செய்யுள் வகைகள்' என்னும் மூன்ரும் இயலின்கண் விளக்கப் பட்டுள்ளது. இவற்றைப் பாடியோர் யார்? என்னும் விஞவும் அகச் சான்றுகளின் அடிப்படையில் ஆயப்பட்டு விடையிறுக்கப்பட்டுள்ளது.

ஈ. 'காதைத் தலைப்பும் முத்தமிழும்' என்னும் பெயரியது நான்காம் இயல். தொட்ட தொட்டவிடமெல்லாம் யாப்பு மணம் கமழும் காப்பிய மலராய் விளங்குவது சிலப்பதிகாரம். யாப்பு அடிப்படையில் சிறப்புப் பெயர்கள் பெற்று விளங்கும் சீர்மை போன்று, சிலப்பதிகாரக் காதைகளின் பெயரமைப்பும் முத்தமிழ் யாப்பு நெறியை விளக்கும்

இயல்பினது என்பது யான் கொண்ட கருத்து. பாடல், மாலை, வரி, குரவை, காதை என வரும் ஐவகைச் சொல் முடிபுகளும் முத்தமிழ் யாப்புக் கூறுகளுள் ஒவ்வொன்றைச் சுட்டி நிற்றலால் பெயர் பெற்று விளங்குகின்றன என்பது இக்கட்டுரைக்குரிய ஆய்பொருள். பொருள் வகையாலும் பா வகையாலும் மட்டுமின்றி, தலைப்பிடு நெறியாலும் இக்காப்பியம் முத்தமிழ்க் காப்பியமாய் விளங்கும் நெறி இக்கட்டுரைக்கண் விளக்கப்பட்டுள்ளது.

உ. சிலப்பதிகாரத்தின் யாப்பமைதியை மேலோட்டமாகக் கண்டு. புறம்நின்று, பட்டாங்கு கூறுதல் திறன் செய்யும் நெறியன்று. நூலின் காண்டந்தோறும், காண்டத்தின் பகுதிதோறும், பகுதியின் அடிதோறும் ஊடாடி இணைந்து நின்று அதனுள் பொதிந்து கிடக்கும் யாப்பு நெறியையும், அதனால் அறியப்படும் விதிகளையும் விளங்க வுரைக்கும் கண்டுணர் திறனாய்வு நெறிக்குப் பெரிதும் சான்றாய் விளங்குவது 'காதைகளின் யாப்பமைதி' என்னும் இயல். மங்கல வாழ்த்துப் பாடல் முதல் வரந்தரு காதையீறாக அமைந்த முப்பது பகுதிகளின் யாப்பு நெறிகள் விரிந்த அளவில் இவ்வியற்கண் விளக்கப்பட்டுள.

ஊ. குறிப்பிட்ட பொருண்மைகளைக் குறிப்பிட்ட யாப்பு வகையால் பாடுதல் மரபு எனப் பொருளுக்கும் யாப்புக்கும் இயைபு நெறியைத் தொல்லிலக்கணியாகிய தொல்காப்பியரே வலியுறுத்துவர். யாப்பு மாறுபாடுகளாலும் ஒரேவகை யாப்பின் சந்த வேறுபாடுகளாலும் காப்பியக் கதையோட்டத்தை விரைந்தும் தொய்வின்றியும் நடத்திச் செல்வன் காப்பியன். இந்நெறிக்கேற்ப, குறிப்பிட்ட பொருண்மைக்குக் குறிப்பிட்ட யாப்பு வகையைப் பயன்படுத்திக் காப்பியத்தைக் கவின்பெறச் செய்தனர் ஆசிரியர். அடிகளார் கொண்ட பொருள் யாப்பு நெறிகளை வகைப்படுத்தியுரைப்பதும் காப்பியத்துள் பொருளுக்கேற்ற யாப்பு வகைகளை வகுத்துத் தந்த யாப்பு நெறி

யாளராய் அவர் விளங்கும் சிறப்பைக் கூறுவதும் 'காதைகளின் பொருளும் யாப்பும்' என்னும் ஆறும் இயலின் பாடுபொருண்மைகள்.

எ. யாப்புக் கருவூலமாய சிலப்பதிகாரத்தினின்று பலவகைப் பாக்களை யாப்பு வகைகட்குரிய மேற்கோள்களாக இலக்கண உரையாளர்கள் இயம்பியுள்ளனர். இவர்தம் துண்டுப்பார்வைக்குள் அகப்பட்ட யாப்பு வகைகள் யாப்பு நோக்காய முழுப்பார்வைக்குள் அகப்பட்டுழி, பெரும்பான்மை வேறுபட்டமைதல் இயல்பே! முழுநோக்கில் அப்பாக்கள் பெறும் யாப்புத் தகுதியைச் சான்று காட்டி அறுதியிட்டுரைக்கும் பணியைச் செய்வது 'இலக்கண உரைகளும் சிலம்பின் யாப்பும்' எனவரும் ஏழாம் இயல்.

ஏ. 'சிலப்பதிகார யாப்புநெறி' என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் இறுதியியல். சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற ஒவ்வொரு யாப்பு வகைக்குமுரிய யாப்பு நெறிகள் அதனுள் இடம் பெற்ற தளைகளின் துல்லியமான எண்ணிக்கையடிப்படையில் இவ்வியற்கண் விளக்கப்பட்டுள. 'இசைக்கு மிக நெருங்கிய தொடர்புடைய தாளத்தை மிக நுட்பமான முறையில் செவிக்குப் புலனுக்கும் முறையில் சொற்களில் அமைப்பதே தளையாகும்' என்பர்.[11] பாவகை தோறும் இடம் பெற்ற தளைகள் அப்பாவகையின் யாப்பு நெறியை விளக்கும் சான்றுயமைகின்றன. நிலைமண்டில ஆசிரியப்பா முதலிய இயற்பாக்கள், பிற இசைப்பாக்களாய பாவினங்கள் ஆகியவற்றின் யாப்பு நெறி, சிலப்பதிகாரத்துள் கண்டாங்கு இக்கட்டுரைக்கண் விளக்கப் பெற்றுள.

'சிலப்பதிகார யாப்பமைதி' என்னும் இவ்வாய்வுக் கட்டுரை ஒரு தனிக் காப்பியத்தின் யாப்பு வடிவு குறித்து

11. கவிதையனுபவம் - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் - பக் 197

முழுநோக்கில் ஆயப்பெற்ற முதற் கட்டுரை. குறிப்பிட்ட காலவெல்லேயில் எழுந்த ஒரு பேரிலக்கியத்தின் யாப்பு நெறியைச் சுட்டுவதன்மூலம் ஒரு காலத்தின் யாப்பமைதி யையும் இது விளக்கி நிற்கும். பலவகை யாப்புக் கூறுக ளுடைய பேழையாய், யாப்பமைதியாய ஆய்வுக் கண் ணோட்டத்திற்குரிய கருவியாய், தமிழுலகின் இலக்கிய ஞாயிருய், தமிழர்தம் நாகரிகக் களஞ்சியமாய் விளங்கும் சிலப்பதிகாரக் காப்பியத்தினைப் பற்றி அறிஞர் பாராட்டும் சிறப்புரையை மேற்கோள் சுட்டி, இவ்வாய்வுக் கட்டுரையைப் பணிவன்புடன் பணிப்பல்.

"சிலப்பதிகாரத்தைத் தமிழில் முதற்பெருங்காப்பியம் என்று காலச் சிறப்புக் கூறுவர். அங்ஙனந் தோன்றிய முதற் பெருநூல் தமிழக மூவேந்தர்க்கும் உரியதாய், முந்நாட்டினையும் பற்றியதாய், புகார் மதுரை வஞ்சி என்னும் முத்தலைநகரங் களால் காண்டப் பெயர் அமைந்ததாய், இயலிசை நாடகம் என்னும் துறைப்பாடல்கள் உடையதாய், யாப்பிற் பலவகை கண்டதாய், உரையிடையிட்ட பாட்டு நடைத்தாய். புகார்க் காண்டம் முற்றிற்று என்றதுபோல நூலறுதி காட்டுவதாய்ப் பொலிந்து இலக்கிய ஞாயிருக விளங்குகிறது. தமிழிசை மறு பிறவி எடுத்து வளர்வதற்கும் யாழ்நூல் தோன்றுவதற்கும் அடிப்படைச் செல்வம் நிரம்பியது சிலப்பதிகாரம். ஐந்திணை வளங்கள், திணைமக்களின் பழக்க வழக்கங்கள், பல்சமயத் திறங்கள், அயல்நாட்டு உறவுகள், தமிழக ஆட்சி முறைகள், மன்னர் வரலாறுகள், தமிழ்மொழியின் ஆற்றல் என்றினைய வெல்லாம் காட்டும் ஒரு தமிழ் நாகரிகக் களஞ்சியம் சிலப்பதிகாரம்"[12]

---

12. சிலப்பதிகாரத் திறன் - டாக்டர் வ. சுப. மாணிக்கம் - இரட்டைக் காப்பியப் பதிப்பு

தமிழ் யாப்பியல் வரலாறு

தமிழ் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகைப் படுத்திக் கூறுப. தமிழில் தோன்றிய இலக்கண நூல்கள், ஐவகை இலக்கணக் கூறு களும் உடையனவாகவும், தனித்தனி இலக்கணக் கூறுகள் உடையனவாகவும், இரண்டு அல்லது மூவகை இலக்கணக் கூறுகள் உடையனவாகவும் அமைந்துள்ளன. தமிழில் தோன்றிய இலக்கிய வகைகளின் யாப்பு நிலையை ஆராய்வதும், யாப்பிலக்கண நூல்களின் நுவல்பொருளை ஆராய்வதும் யாப்பியல் வரலாற்றின்பாற்படும். இக் கட்டுரைக்கண் இவ்விரு கூற்று ஆய்வுகளும் இடம் பெற்றுள. இவ்வாய்வுக்கு முன்னர், தமிழின் இலக்கணக் கூறுகள் பற்றிய வரையறையைத் தெளிவுபடுத்திக் கொள்வது சால்புடைத்து.

இலக்கணக் கூறு பற்றிய வரையறை

தமிழின் இலக்கணக் கூறுகளாகிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகையுள், அணியை விடுத்து, நால்வகை இலக்கணக் கூறுகளுடையதாகத் தமிழைக் கூறுவர் ஒருசாரார். இறையனுர் களவியல் உரையாசிரியர், சிறுகாக்கைபாடினியார் முதலியோர் நான்மையிலக்கணக் கூறுடைய மொழியாகத் தமிழைச் சுட்டும் கருத்தினர்.

இறையனுர் களவியல் உரையாசிரியர் 'தமிழ் நான்கு வகைப்படும். எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பு மென'[1] எனக் கூறும் பகுதி இக்கருத்தைச் சுட்டி நிற்கும்.

1. இறை. கள. நூ. 1. உரை

மேலும், இக்கருத்தை வலியுறுத்த, இவ்வுரை எழுந்தமைக்குக் கூறப்படும் பின்னணிக் கதையும் துணை செய்யும். 'எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம் என்று வந்தார்; வர, அரசனும் புடைபடக் கவன்று, என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே....எனச் சொல்லாநிற்ப' [2] என வரும் பின்னணிக் கதை பற்றிய வரலாற்றுப் பகுதியுள்ளும் நான்மை யிலக்கணக்கூறு பற்றிய மரபுண்மை தெளிவுறுத்தப்பட்டது.

இம்மரபு சிறுகாக்கைபாடினியத்துள்ளும் சுட்டப்பட்டுள்ளது.

நாட்டியல் வழக்கம் நான்மையில் கடைக்கண்
யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே [3]

என்பது சிறுகாக்கைபாடினியம். தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னர்க் குமரிநாடு கடல் கொள்ளப்பட்டபின் வாழ்ந்தவராகக் கருதப்படும் [4] சிறுகாக்கைபாடினியார் காலத்தில் இவ்வரையறை சுட்டப்பட்டிருத்தலால் இம்மரபின் பழைமை புலனாகும்.

இனி, தொல்காப்பியத்துள் எழுத்து, சொல், பொருள் ஆகிய முக்கூறுகளே விளக்கப்பட்டிருத்தலின், தமிழிலக்கணக் கூறுகளை மூவகைப் படுத்தி மொழிநரும் உளர். யாப்பதிகாரம், அணியதிகாரம் என்னும் பெயரால் யாப்பு, அணிக் கூறுகளின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் சுட்டவில்லை. எனினும், தொல்காப்பியருக்கு ஐந்திலக்கணக் கூறுகள் உடன்பாடே. பொருளதிகாரத்துள், செய்யுளியல் யாப்பிலக்கணத்தையும், உவம

2. இறை. கள. நூ. 1. உரை
3. தொல். எழு. நச்சி - கழகம் - முகவுரை-மேற்கோள்
4. தொல்-செய். நூ. 1. உரை விளக்கம்

வியல் அணியிலக்கணத்தையும் உணர்த்தி நிற்றலால், தொல்காப்பியரின் ஐந்திலக்கண உடன்பாட்டுக் கருத்து பெறப்படும். இக்கருத்தைத் தொல்காப்பிய உரையாளர்களும் தம்முரையுள் சுட்டிப் போந்தனர்.

'மற்றிதனை யாப்பதிகாரம் என வேறோர் அதிகாரமாக்கி உரைப்பாருமுளர்' எனவரும் பேராசிரியர் கூற்றும்[5] 'இனி அதுபோல என்பது தொகுக்கும் வழி தொகுத்தல் என்பதனால் தொக்கதாயின், அதனைச் சுட்டிக்கூறுவுவமையென அணியியலுள் ஆசிரியர் ஒருவமை வேறுபாடாகக் கூறல் பொருந்தாது' எனவும்[6] 'அவை செய்யுள்பற்றி வரும் உவம வழூ ஆகலின் ஈண்டைக்கு எய்தா, அணியியலுள் பெறப்படும்' எனவும்[7] வரும் சேனாவரையர் கூற்றுக்களும் இக்கருத்தைக் காட்டும் சான்றுகளாம்.

தொல்காப்பியத்துள் சுட்டப்படும் மெய்ப்பாட்டிலக்கணம் தனிவகை இலக்கணக் கூறாகக் கொள்ளும் பொருண்மையது. இதனைப் பின்றை இலக்கணிகள் தனி வகையாக வளர்க்கவில்லை. மெய்ப்பாடு நாடக நூலுக்குரியது என்ற கருத்து காரணமாக அங்ஙனம் வளர்க்காது விடுத்தனர் போலும்! மெய்ப்பாட்டிலக்கணத்தையும் ஒரு கூறாகக் கொள்ள, தொல்காப்பியம் அறுவகை இலக்கணம் கூறும் நூலாகவும் கொள்ளுதற்குரிய சிறப்புடைத்து.

இக்கருத்துக்களால், தமிழிலக்கணக் கூறுகளை ஐந்தெனக் கூறும் மரபோடு, நான்கெனக் கூறும் மரபும் பண்டைக் காலத்து வழங்கியது என்பதும், இவ்விரண்டனுள் ஐந்தெனக் கூறும் மரபே பெருவழக்கிற்று என்பதும் தொல்காப்பியம் அறுவகையிலக்கணக் கூறுகள் கொண்ட பெருநூலாகக் கொள்ளுதற்குரிய பொருண்மைத்து என்பதும் புலனும்.

5. தொல். செய். பேரா. நூ. 1. உரை
6. தொல். சொல். சேனா. நூ. 448 உரை
7. தொல். சொல். சேனா. நூ. 16 உரை

ஐந்திலக்கண நூல்கள்

தமிழின் ஐந்திலக்கணக் கூறுகளை விளக்கியெழுந்த நூல்கள் பல. தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம் முதலியன ஐந்திலக்கணங்களை ஒருசேர உணர்த்துவன.

இவற்றுள், தொல்காப்பியம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முந்தியது; தொல்காப்பியரால் இயற்றப் பட்டது. தொல்காப்பியத்துள் எழுத்ததிகாரம், சொல் லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்றதிகாரங்களில் அறுவகையிலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. வீர ராசேந்திரசோழன் காலமாகிய கி.பி. 11 ஆம் நூற்றுண்டில் பொன்பற்றி புத்தமித்திரனுரால் இயற்றப்பட்ட வீரசோழி யத்துள், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொரு ளதிகாரம், யாப்பதிகாரம், அலங்காரம் ஆகிய இயல் களில் ஐந்திலக்கணங்கள் விளக்கப்பட்டுள்ளன. இலக்கண விளக்கம், கி.பி. 17 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்ட நூல். தொல் காப்பிய அமைப்பையும் பொருண்மையையும் பின்பற்றி யமைந்த இந்நூலில், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பிரிவுகளும், பொருளதி காரத்துள் செய்யுளியல் அணியியல் ஆகிய உட்பிரிவு களும் அமைந்துள.

கி. பி. 17 ஆம் நூற்றுண்டில் வீரமாமுனிவரால் இயற் றப்பட்ட தொன்னூல் விளக்கத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணி யதிகாரம் ஆகிய பெயர்களால் ஐந்திலக்கணக் கூறுகள் உணர்த்தப்படும். திருச்சிராப்பள்ளி முத்துவீர ஆசிரிய ரால் கி. பி. 19 ஆம் நூற்றுண்டில் இயற்றப்பட்ட முத்து

வீரியத்துள் ஐந்திலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. சாமிகவிராசர் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் இயற்றிய சாமிநாதமும்[8] ஐந்திலக்கணங்களை உணர்த்துவது.

தொன்னூலாகிய தொல்காப்பியத்தைப் பின்பற்றிப் பவணந்தி முனிவர் பெருமானால் இயற்றப்பட்ட நன்னூலில் எழுத்து, சொல் பற்றிய இலக்கண விளக்கங்களேயமைந்திருப்பினும் அந்நூலும் ஐந்திலக்கணம் உணர்த்துவதாகவே பண்டு வழங்கியது என்பர். நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் 'பழையன கழிதலும்' என்று தொடங்கும் நூற்பாவுரையில் 'இந்நூலில் சொன்ன ஐந்ததிகாரத்துக்கும் சிங்க நோக்காய் நிற்பதொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று' என்று கூறியிருப்பதும், 'அரும் பொருள் ஐந்தையும் யாவரும் உணர' என நன்னூல் சிறப்புப் பாயிரத்தொடர் அமைந்திருப்பதும், 'நுதலிய பொருள் அரும் பொருள் ஐந்தென உணர்த்தினமையின் இந்நூலிற் கூறிய பொருள் யாப்பு அணி என்னும் மூன்றதிகாரங்களும் அக்காலத்துள்ளன போலும்' எனச் சங்கரநமச்சிவாயர் உரைப்பகுதி அமைந்திருப்பதும் நன்னூல் ஐந்திலக்கண நூலாகவே பண்டு அமைந்திருந்தது என்பதையுணர்த்தும் சான்றுரைகளாம்.

கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் தமிழ் நெறி விளக்கமும் ஐந்திலக்கணம் கூறும் நூல் என்பர்[9]. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் அறுவகை இலக்கணம் என்னும் நூல் எழுதியிருப்பதாகவும், அந்நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்

8. இந்நூலின் இரு இயல்கள் மட்டும் தமிழ்ப்பொழில் துணர் 4இல் திரு, இ. கோவிந்தசாமிப் பிள்ளையால் வெளியிடப் பெற்றுள்ளன.

எழுத்து சொற்பொருள் யாப்பு அலங்காரம் என்னும் ஐந்து
அமிழ்தின் இலக்கண விரிவோர் ஒன்றொரு மூன்றியலாய்
அடக்கியிச் சுவாமிநாதத்தில் மொழிகுவனே - சாமிநாதம். செய். 1

அண்மையில், அண்ணமலைப் பல்கலைக்கழக வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

9. தமிழ்நெறி விளக்கம் - டாக்டர் உ. வே. சா. முகவுரை

னும் ஐவகை இலக்கணங்களோடு புலமை இலக்கணம், என்ற ஒன்றையும் கூட்டி விளக்கியிருப்பதாகவும் அறிகின்றோம்.

ஐந்திலக்கண நூல்கள் தொல்காப்பியர் காலம் முதல் கி. பி. 19-ஆம் நூற்றாண்டுவரை தொடர்ந்து பல்வேறு கால கட்டங்களில் எழுந்துள்ளன என்பதையும், அங்ஙனம் தோன்றிய ஐந்திலக்கண நூல்கள் சிலவற்றில் சில பகுதிகள் பிற்காலத்தில் மறைந்துபோயின என்பதையும் இப்பகுதி தெளிவுறுத்தும்.

யாப்பு-பொருள் விளக்கம்

இனி, இலக்கியங்களின் யாப்பு நிலைகளையும் யாப்பிலக்கணநூல்களின் நுவல்பொருள்களையும் பற்றிய ஆய்விற்கு முன்னோடியாக 'யாப்பு' என்பதன் பொருள் விளக்க வரலாற்றை அறிவது ஏற்புடைத்து.

'யாப்பு' என்ற சொல்லுக்குப் பண்டு வழங்கிய பொருண்மைக்கும் பிற்காலத்தில் வழங்கிய பொருண்மைக்கும் மிகுதியும் வேறுபாடுண்டு. 'சொற்பொருள் விரிதல்' என்னும் மொழியியல் நெறிப்படி இச்சொல்லின் பொருண்மை, சுருங்கிய நிலையினின்று விரிநிலையாக வளர்ச்சியுற்றது.

தொல்காப்பியர் செய்யுளின் உறுப்புக்கள் முப்பத்து நான்கனுள் 'யாப்பு' என்பதையும் ஒன்றாகச் சுட்டியுள்ளார். இவ்வுறுப்பின் இலக்கணத்தை,

எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர் 10

என்னும் நூற்பாவால் விளக்கியுள்ளார். 'எழுத்து முதலாக அசை, சீர், அடி என ஈண்டுக் கூறப்பட்ட அடியினால், தான் குறித்த பொருளை இறுதியடியளவு முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பு' என்பது இளம்பூரணர் விளக்கம். ஓர்

10. தொல். செய். இளம். நூ. 74

அடிக்குள்ளாகவே தான் கருதிய பொருள் விளங்க அமையு மாறு பாடப்படும் பாட்டு நெறியே யாப்பு என்னும் செய்யுள் உறுப்பாக இவண் மொழியப்பட்டது இதனுல் போதரும்.

இந்நெறியை மேலும் விளக்கும் முறையில் பிற உரை யாளர்களின் விளக்கங்களும் அ மை ந் து ள. 'குறித்த பொருளை முடிய நாட்டல்' என்னும் நூற்பாத் தொட ருக்குத் 'தான் வைப்பக் கருதிய பொருளைப் பிறிதோரடியும் கொண்டு கூட்டாது அ மை ந் து மாறச் செய்தல்' என விளக்கம் தரும் நச்சினுர்க்கினியர், இவ்வுறுப்பை ந ன் கு தெளிவுறுத்துவர்.

இனி, நாற்சீரடி அன்றி இருசீரடியானும் முச்சீரடி யானும் குறித்த பொருளை முடித்துக் காட்டுதலும் யாப்பா கும் என்பதைப் பேராசிரியர் நச்சினுர்க்கினியர் உரைப் பகுதிகள் உணர்த்துகின்றன.[11]

மேலும் நாற்சீரடி அமைந்திருப்பினும் எழுத்தும் அசை யும் சீரும் பொருள் இலவாகிவரின் அவை யாப்பெனப் படாது எனக்கூறி, அதற்குச் சான்ருக 'முயற்கோடு சீவி முது விசும்பு போழ்ந்தான்' என்ற தொடரைக் காட்டுவர் பேராசிரியர். இவ் விளக்கம் நாற்சீர் அமைவதோடு மட்டு மின்றி, குறித்த பொருளை முடிய நாட்டுதலும் யாப்பென் னும் உறுப்பின் இலக்கணம் என்பதை விளக்கம் செய்யும்.

இக்கருத்துரைகளால், க வி ஞ ன், தா ன் குறித்த பொருளைப் பாடலுள் அமைந்த நாற்சீரடியில் முற்றுப்பெறு மாறு அமைத்தலும் வேருேர் அடியைக் கொண்டு பொரு ளைக் கூட்டாதவாறு அமைத்தலுமாகிய இலக்கண நெறியே 'யாப்பு' என்னும் குறியீட்டால் தொல்காப்பியர் காலத்தில்

11. யாப்பறி புலவர் என்றதனுல் இருசீராலும் முச்சீராலும் குறித்த பொருளை முடிப்பனவும் அங்ஙனம் முடித்தொழிந்து அச்சீரை மேல்வருகின்ற அடி யோடு பொருள்முடியச் செய்வனவும் சிறுபான்மை யாப்பென்று கொள்க
- தொல். செய். நச்சி. நூ 78

சுட்டப்பட்டது என்பதையும், யாப்பு என்பது செய்யுளின் உள்ளுறுப்புகளில் ஒன்ருக விளங்கியது என்பதையும் அறியலாம்.

யாப்பு என்னும் உறுப்பு எவ்வகைச் செய்யுட்களில் பயின்றுவரும் என்ற விளக்கமும் தொல்காப்பியத்தில் அமைந்துள்ளது. கீழ்வரும் நூற்பாவைக் காண்க.

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர் 12

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில், நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்ற எழுவகைச் செய்யுள் பாகுபாடும் யாப்பு என்னும் உறுப்போடு இயைந்து நடக்கும் இயல்பினவென்பது இந்நூற்பாவிற்குரிய உரை. இம்முறையில் யாப்பு என்பது பாட்டியாப்பு, உரையாப்பு, நூலியாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழியாப்பு, என எழுவகைப் பிரிவாய் விளங்கும்.

இந்நூற்பா, பாட்டு என்பதற்கும் செய்யுள் என்பதற்கும் தொல்காப்பியர் காலத்திருந்த வேறுபாட்டையும் விளக்கியது. மேலும், செய்யுளின் உறுப்பாகப் பாவென்பதை ஒன்ருகச் சுட்டியுள்ளமை செய்யுளுக்கும் பாவுக்கும் உள்ள வேறுபாட்டையும் தெளிவுபடுத்தும்.

எனவே, தொல்காப்பியர் காலத்தில் செய்யுள் என்பது விரிந்த அளவில் அனைத்துறுப்புக்களையும் அடக்கி நிற்கும் பொதுச் சொல்லாக விளங்கியது. பாட்டு, செய்யுளின் எழுவகைக் கூறுபாடுகளில் ஒன்ருக அமைந்தது. யாப்பு, பா,

12. தொல். செய். இளம். நூ. 75

ஆகியன செய்யுளில் பயின்று வரும் உறுப்புக்களாக விளங்கின.

யாப்பு-பொருள் மாறுபாடு

தொல்காப்பியர் காலத்தில் யாப்பு என்னும் சொல்லுக்கு வழங்கிய பொருண்மை பின்றைக் காலத்து மாறுபட்டது. 'யாப்பு' என்பதன் விளக்கம்,

எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கொடு
*இழுக்கா நடைய தியாப்பெனப் படுமே*13

என வரும் நூற்பாவால் யாப்பருங்கலத்துள் கூறப்பட்டது. எழுத்தும் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் தூக்கும் என்ற எழுவகை உறுப்புக்களோடும் புணர்ந்து குற்றமின்றி நடைபெறுவது யாப்பு என்பது இந்நூற்பாவின் கருத்து. இங்குப் பாவினுள் பயின்றுவரும் எழுவகை உறுப்புக்களோடும் இணைந்து நிற்கும் செய்யுளியைபு நெறியே யாப்பெனச் சுட்டப்பட்டது.

பல்காயம் நத்தத்தம் ஆகிய யாப்பிலக்கண நூல்களிலும் 'யாப்பு' இலக்கணம் இயம்பப்படும்.

யாப்பிய ருனே யாப்புற விரிப்பின்
எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கொடு
இழுக்கா மரபின் இவற்ரெடு பிறவும்
*ஒழுக்கல் வேண்டும் உணர்ந்திசி னேரே*14

என வரும் நூற்பாவில் பல்காயனர் யாப்பின் இலக்கணத்தை இயம்புவர். இலக்கண நிலையில் யாப்பருங்கலத்துக்கும் பல்காயத்துக்கும் வேறுபாடில்லை. நத்தத்தனர் இம்முறையிலேயே இலக்கணம் கூறிடினும், உறுப்புக்களின் எண்ணிக்கையைக் கூறுவதில் வேறுபடுகின்ருர். யாப்பருங்கலத்தாரும், பல்காயனரும் இவ்வுறுப்புக்களின் எண்ணிக்கையை ஏழெனச் சுட்ட, நத்தத்தனர் தூக்கு, தொடை, அடி என்ற மூன்றினை மட்டும் கூறுவர்.

13. யாப். உறு. நூ. 1
14. ,, ,, - மேற்கோள்

யாப்பெனப் படுவ தியாதென வினவின்
தூக்கும் தொடையும் அடியுமிம் மூன்றும்
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே [15]

என வரும் நத்தத்த நூற்பாவில் மூன்றுறுப்புக்கள் புணர்ந்தியலும் செய்யுள் நெறியே யாப்பெனக் கூறப்பட்டது.

யாப்பருங்கல உரையாசிரியர் விதப்புக் கிளவியின் துணைகொண்டு, அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என வரும் தொடர்நிலைச் செய்யுட்குரிய வனப்புக்களும் ஒருசாராசிரியரால் யாப்புறுப்புக்களாகக் கொள்ளப்பட்டன என்பர்.

உறுப்புக்களின் எண்ணிக்கையைக் கூறுவதில் இந்நூல்களில் வேறுபாடு காணப்படினும் இவ்வெண்ணிக்கையை ஏழாகக் கூறுவதே பெரும்பான்மையோர் கருத்தாம் என்பதை,

நாதன் முதலாக நல்லுறுப்பு ஏழியைந்து
ஏதமில் தன்மை இயலரசாம்-தாதுக்கள்
ஏழும் புணர்ந்த தியாக்கை; எழுத்தாதி
ஏழும் புணர்ந்த தியாப்பு [16]

என வரும் பழம்பாடல் விளக்குகின்றது.

யாப்பெனும் சொல்லின் பொருண்மை தொல்காப்பியர் காலத்தினின்றும் பிற்காலத்து மாறுபட்ட தன்மையை யாப்பருங்கலம், பல்காயம், நத்தத்தம் ஆகிய நூல்கள் நுவல்கின்றன.

செய்யுள் - பாட்டு - யாப்பு

தொல்காப்பியர் காலத்தில் செய்யுள், பாட்டு, பா, யாப்பு ஆகியவை வெவ்வேறு வகைப் பொருள் நிலையில் வழங்கினவென்பது முன்னர் விளக்கப்பட்டது. ஆனால் யாப்பருங்கலக் காலத்தில் செய்யுள், பாட்டு, யாப்பு

15. யாப். உறு. நூ. 1 - மேற்கோள்
16. ,, ,, ,,

ஆகியன ஒரு பொருட் கிளவிகளாக வழங்கின, இதனை 'யாப்பு எனினும் பாட்டு எனினும் தூக்கு எனினும், தொடர்பு எனினும் செய்யுள் எனினும் ஒக்கும்' என வரும் உரைத் தொடராலும்,

> யாப்பும்
> பாட்டும் தூக்கும் தொடர்பும் செய்யுளை
> நோக்கிற் றென்ப நுணங்கி யோரே'[17]

என வரும் நூற்பாவாலும் உணரலாம். இவற்றுள் பாவென்பது தனித்துச் சுட்டப்படவில்லையெனினும் 'பாவென மொழியினுந் தூக்கின் பெயரே'[18] என வரும் நத்தத்த நூற்பா உரை மேற்கோளாகச் சுட்டப்பட்டிருத்தலான் இக்கருத்தும் இக்கால உடன்பாட்டுக் கருத்தே என்பதை உணரலாம்.

நிகண்டுகள் காலத்தில் யாப்பு, தூக்கு, கவிதை, கவி, செய்யுள், பாட்டு என்பன ஒரு பொருட்கிளவிகளாக வழங்கின[19]. கி. பி. 10ஆம் நூற்றுண்டளவில் இச்சொற்களின் பொருண்மையுள் ஏற்பட்ட மாற்றம் தொடர்ந்து நீடித்தது என அறியலாம்.

எனவே, தொல்காப்பியர் காலத்தில் பல்வேறு பொருண்மைக் கிளவிகளாகப் பயின்ற சொற்கள் யாப்பருங்கலக் காலத்தில் ஒரு பொருட் கிளவிகளாக இருந்தன என்பதையும் பின்றைக் காலத்தும் இவை வேறுபாடின்றி ஒரு பொருட்கிளவிகளாகவே வழங்கின என்பதையும் இவற்ருல் அறியலாம்.

யாப்பு-பல்பொருள்

'யாப்பு' என்னும் தனிச்சொல்லின் பொருண்மை வரலாற்றை நோக்குழி, இலக்கிய இலக்கண நூல்களில் அச்சொல்லின் பல்பொருண்மை நிலைகளை அறியலாம். இலக்

17. யாப். காரி. - தற்பாயிரவுரை
18. நத்தத்த நூற்பா - யாப். நூ. 1. - மேற்கோள்
19. நாமதீபநிகண்டு - 657

கண நூல்களில் பாயிரவியல்பு பகருங்காலை, அது எண் வகைப் பொருள்களை வாய்ப்பக் காட்டுதல் வேண்டும் எனக்கூறி, அவற்றுள் ஒன்றாக 'யாப்பு' என்பதனையும் கூறுவர். இங்கு யாப்பு என்னும் சொல்லுக்கு நூல் யாக்கும் முறை என்பது பொருளாம்.

இலக்கியங்களில் 'யாப்பு' என்னும் சொல் பல்வேறு பொருள்களில் பயின்று வந்திருத்தல் காணலாம். கட்டுதல், கட்டு ஆகிய பொருள்களில் திருக்குறளிலும்[20], சீவக சிந்தாமணியிலும்[21] இச்சொல் ஆளப்பட்டுள்ளது. இச்சொல்லுக்கு அன்பு என்பதும் பொருளாகும் என்பதைக் திருக்குறள்[22] தெரிவிக்கின்றது. உறுதி என்னும் பொருளில் மணிமேகலையில்[23] இச்சொல் ஆட்சி பெற்றது. சிலப்பதிகாரவுரையாசிரியர் யாப்புறவு என்பதற்கு வினை என்றும் பொருத்தம் என்றும் பொருளுரைப்பர்[24]. இங்ஙனம் பல்வேறு பொருண்மை நிலையதாக யாப்பு என்னும் சொல் இலக்கண விலக்கியங்களில் ஆட்சி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வுக் கட்டுரைக்கண், செய்யுள் நெறியை விளக்கி நிற்கும் இலக்கணம் என்னும் பொருளில் யாப்பு என்னும் சொல் ஆளப்படும்.

திறனாய்வு நிலை விளக்கம்

யாப்பு என்னும் சொல்லுக்கு இலக்கணிகள் தரும் விளக்கத்தையும், இலக்கியர்கள் தரும் பொருண்மைகளையும் கண்ட நாம், திறனாளிகள் தரும் திறனாய்வுநிலை விளக்கங்களையும் காணுதல் சாலும்.

'அசைகளை ஓசை இனிமைக்கேற்பவும் இலக்கண மரபுக்கேற்பவும் ஒழுங்குபடுத்துங்கால் அமையும் நெறிகளும் வேறுபாடுகளுமே யாப்பு என்பதன் பொருள்' எனக்

20. திருக்குறள் - 777
21. சீவகசிந்தாமணி - 2011
22. திருக்குறள் - 1093
23. மணிமேகலை - பதிகம் - 57
24. சிலப்பதிகாரம் - கொலை. காதை 121 - 122 உரை

கூறுவர் ஆங்கிலத் திறனாளி செயிண்டுபரி[25]. யாப்பு நெறிக்கு அசைகளின் இன்றியமையாமை இவ் விளக்கத்தால் வெளிப்பட்டது.

'செய்யுளில் பயன்படுத்தப்பட்ட பாவமைப்பை விளக்குவது யாப்பு' என்றும், 'பாவமைப்பு செய்யுளின் ஓசையினிமையை அடிப்படையாகக் கொண்டது' என்றும் கூறுவதன் வாயிலாகப் பாக்களின் அமைப்பு நிலையையும், ஓசையினிமையையும் யாப்பு நெறிக்கு அடிப்படையாகச் சுட்டுவர் மாகுசு காலுசு [26].

பேராசிரியர் 'பா என்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால் அவன் சொல்கின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்வதற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை' எனப்பாவிற்குக் கூறும் விளக்கத்திலும்[27] பாட்டுக்கு ஓசைநயம் இன்றிமையாதது என்பது விளக்க பட்டுள்ளதைக் காணலாம்.

'முறைப்படி அமைக்கப்பட்ட செய்யுட்களின் சட்ட முறையே யாப்பு' என்றும் 'ஒழுங்கு முறைப்படி அமையாத சட்டங்களின் தொகுப்பு யாப்பன்று' என்றும் 'இச்சட்டங்களின் அமைப்பு வரையறைக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்' என்றும் சார்ச்சுயங்கு [28] செய்யுளின்

25. Prosody means the laws and variations observable in the rythmical and metrical grouping of syllables-History of English Prosody-Saintsbury - P. 42

26. By versification or Prosody is meant the description of those verse and stanza forms used in Poetry. The structure of verse depends on the rythm of poetry-A short history of English versification - Max Kaluza-Page 1.

27. தொல். செய். பேரா. நூ. 1. உரை

28. By a prosody is meant a system of rules of verse, arranged in order. A mere collection of rules, without arrangement is not a prosody. The arrangment must be systematic-George Young-An English prosody on Inductive lines-Page. 1.

அமைப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டு அதிலமைந்த ஒழுங்கு முறையை வலியுறுத்துவர்.

'ஒலிகள் அளவாலும் தன்மையாலும் முயற்சியாலும் வேறுபட்டு ஒழுங்காக அமைந்து வந்த அமைப்பே திரும்பத் திரும்ப வந்து இனிமை பயப்பது ஒலிநயம்....இயற்கையான இந்த ஒலி நயத்தை வளர்த்து வாய்பாடுகளாக்கி ஒரு வகைச் செயற்கை அமைப்பைத் தந்தனர் முன்னோர். அதற்கு யாப்பு (Metre) எனப் பெயரிட்டனர்' [29] என்பர் டாக்டர் மு. வரதராசனார். ஒலிநயத்திநின்று யாப்பு வரையறுக்கப்பட்டமை இவண் விளக்கப்பட்டது.

'கவிதையில் பயிலும் ஒலிநயத்தை வளர்த்து வாய்பாடுகளாக்கி ஒருவகைச் செயற்கை யமைப்பைத் தந்தனர் நம்முன்னோர். இந்த வாய்பாடுகள் அமையும் முறையையே யாப்பு என்று பெயரிட்டனர். எனவே வரையறுக்கப்பட்ட ஒலிநயமே யாப்பு என்பது' என இக்கருத்தை மேலும் விளக்கும் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் [30] ஒலி நயத்தின் இன்றியமையா நிலையை இனிதுறச் சுட்டுவர்.

அசைகளின் அமைப்பு, ஓசையினிமை, ஆகிய இரண்டுமே யாப்பிற்கு அடிப்படையாயமைந்தவை என்பதும், இவ்விரண்டனுள்ளும் இன்றியமையாது வரையறுக்கப்பட்ட ஒழுங்கு முறை இருத்தல் வேண்டும் என்பதும் திறனாளிகளின் விளக்கத்தால் தெளிவுபடுத்தப் பெற்றன.

ஓசையினிமையினின்றும் வளர்ச்சி பெற்றதே யாப்பெனினும், இரண்டுக்கும் உரிய வேறுபட்டை இனிதுற விளக்குவர் டாக்டர் மு, வ. 'யாப்பு என்பது அந்தந்த மொழியார் செயற்கையாக அமைத்துக் கொண்டது. ஒலி நயம் பொதுவானது; யாப்பு, அதிலிருந்து சிறப்பாகத் தேர்ந்து அமைத்துக் கொண்டது. ஒலிநயத்தின் வகைகள்

29. இலக்கியத்திறன்-டாக்டர் மு. வ. பக். 194.
30. கவிதையனுபவம்-டாக்டர் ந. சுப்புரெட்டியார் பக். 186

எல்லாம் யாப்பினுள் அடங்குவன அல்ல; தெளிவான சில வகைகள் மட்டுமே யாப்பு எனத் தனியே எடுத்து விளக்கப் படுகின்றன. இவ்வளவே வேறுபாடு' என்பது அவர்தம் வேறுபாட்டு விளக்கம் [31].

தமிழ் யாப்பு முறையில் அசைகளின் அமைப்பு நிலையால் வரையறுக்கப்பட்ட இனிய ஓசை பிறப்பதையும், இவ்வோசைச் சிறப்பினாலும் சந்த வேறுபாட்டாலும் பாக்கள் வேறுபடுக்கப்படும் சிறப்பினையும் காணலாம். தமிழ் யாப்பு முறையின் சிறப்பும் இனிமையும் 'தமிழ் யாப்பு முறை தனக்கென உரிய சிறந்த அமைப்புக்களைக் கொண்டது; எளிமையும் இனிமையும் உடையது' எனப்பாராட்டப் பெறும் [32].

யாப்பு வகைகளின் காலங்கள்

இலக்கியம் என்பது கவிஞனின் உணர்ச்சிப் பெருக்கால் வெளிப்படும் மொழி வடிவம். இவ்வகையில் எழுகின்ற இலக்கியம் குறிப்பிட்ட ஒருவகைப் பாவாகவே இருத்தல் இயலாது. அவ்வக்காலச் சூழலுக்கும் செல்வாக்குக்கும் ஏற்ப இலக்கிய வடிவங்கள் மாறுபடுவன. சமுதாய மாற்றங்களையும் உணர்வுகளையும் அவை உணர்த்துவன.

ஆங்கில இலக்கிய யாப்புவகைக் காலங்களை ஆங்கிலச் சாகுசன் காலம், சாகுசன் சாயல் காலம், இருண்ட காலம், சானட்டு காலம், செகப்பிரியர் காலம் என ஐவகையாகப் பிரித்துக் கூறுவர் பிரேவர் எனும் திறனாளி.

முதலாவதாக அமைந்த ஆங்கிலச் சாகுசன் காலத்திய இலக்கிய யாப்பமைப்பு புதிய வடிவம் உடையது. ஒவ்வொரு அடியும் இரு பகுதிகளாகப் பிரிந்து விளங்குவது. இதனுள் அழுத்தம் பெற்ற அசைகளின் எண்ணிக்கை

31. இலக்கியத்திறன்-டாக்டர் மு. வ. பக். 194-195
32. இலக்கியத்திறன்-டாக்டர் மு. வ. பக். 197
கவிதையனுபவம்-டாக்டர் ந. சுப்புரெட்டியார் பக். 195

நான்காக இருக்கும். அழுத்தம் பெருச் சீர்கள் எண்ணப் படுவதில்லை[33]. இத்தகைய யாப்பு வகை பயின்ற காலம் ஆங்கில இலக்கியத்தின் தொடக்க காலம் முதல் கி. பி. 1066வரை ஆகும்.

இதன் பின்னர்த் தொடங்கும் சாகுசன் சாயல் காலம் கி. பி. 1066 முதல் கி. பி. 1400வரை நிலவியது. இக் காலத்தில் ஆங்கில இலக்கியப் போக்கில் பிற நாட்டு இலக்கிய யாப்புச் செல்வாக்கு இடம் பெற்றது. பிரெஞ்சு நாட்டுக் கவிதைகளின் யாப்புச் செல்வாக்கின் சாயல் ஆங்கிலச் சாகுசன் சாயலுடன் பின்னிப் பிணைந்திருந்த காலம் இது[34]. கி. பி. 1401 முதல் கி. பி. 1500வரை ஒரு முழு நூற்றுண்டு கால அளவு பிரெஞ்சுப் போர்களின் விளைவால் மிகுதியான ஆங்கில இலக்கியங்கள் தோன்ற வாய்ப்பில்லாது போயிற்று.

இதன் பின்னர், சரே கோமகன் என்னும் ஆங்கில இலக்கியர் 'சானட்டு' என்னும் புதுவகை இலக்கிய வடிவை ஆங்கில இலக்கியத்தில் அறிமுகப்படுத்தினுர். இப்புதிய இலக்கிய வகையைக் கவிவாணர் பெரிதும் விரும்பி வரவேற்றனர். சேக்குவில் என்னும் கவிஞர் இப்பாவகையை நாடகத்துக்கு உரியதாக்கித் தன்வகையில் புதிய மரபைப் படைத்தார். மாரிலோ, இப்பாவகையை மேலும் வளர்த்தார். செகப்பிரியரும் மிலிதனும் இப் பாவகைக்குச் செம்மையான முழுமை நிலையைத் தந்தனர். அடுத்து வரும் செகப்பிரியர் காலத்தில், மிலிதன், திரைதன் போப்பு ஆகியோரும் ஆங்கில யாப்பியல் வகைகளை வளர்க்கும் பணிகளில் பெரிதும் ஈடுபட்டனர். செகப்பிரியர்

33. Each line is broken up tnto two short sections by a Pause, and contains four accented syllables, the number of the unaccented one is not being counted at first-The Art of Versification and the technicalities of Poetry-R. F. Brewar-P. 256

34. During the Semi-Saxon period 1066-1400......the foreign influences that were at work hardly affected it all - The Art of Versification and Technicalities of Poetry-R. F. Brewar-P. 259

காலத்தில் ஆங்கில யாப்புவகையுள் சொற்கள் பல்கிப் பெருகி புதிய தோற்றங்கள் அல்லது அமைப்பு வகைகள் உருவாயின.

ஆங்கில இலக்கிய வகைகளைக் கால அடிப்படையில் பிரித்தமைப்பது போன்று, தமிழ் யாப்பியல் வளர்ச்சி பல்வேறு இலக்கிய வகைகளோடு பிணைந்து வளர்ந் திருக்கும் நிலையையும், சங்க காலம், காப்பிய காலம், சிற் றிலக்கிய காலம், தற்காலம் எனக் காலக் கூறிட்டு ஆய்தல் சாலும்.

ஆங்கில இலக்கியத்தின் யாப்பியல் வகைகளை மேலே கூறியாங்கு கால அடிப்படையில் பகுத்துணர்த்துவதோடு இவற்றைப் பொருண்மையடிப்படையில் இசைக் கவிதை (Lyric Poetry) காவியக் கவிதை (Epic Poetry) நாடகக் கவிதை (Dramatic Poetry) வண்ணனைக் கவிதை (Descriptive Poetry) நீதிக் கவிதை (Didactive Poetry) சானட்டுக் கவிதை (Sonnet) நகைக் கவிதை (The Epi- gram) என ஏழாகப் பகுத்துணர்த்தி, இசைக் கவிதையின் வகைகளாக நிகழ்ச்சிப் பாடல் (The Ode) நாட்டுப்பாடல் (The Ballad) பத்திப் பாடல் (The Hymn) இரங்கற் பாடல் (The elegy) ஆகிய நான்கினையும் சுட்டுவர்[35] என்பதும் குறித்தற்குரியது.

சங்க காலத்துக்கு முன்னர் எழுந்த இலக்கிய வகை களின் யாப்பு நிலையை நேரடியாகக் காணவியலாவிடினும், இலக்கியம் எழுந்தமைக்குப் பின்னர் இலக்கண நூல் எழும் மரபைப் பின்பற்றி, தொல்காப்பியத் துணைகொண்டு ஓரளவு நோக்கவியலும். பாக்கள், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நால்வகையினவாக விளங்கின. இவற்றுள், வெண்பா என்னும் பாவகை

35. Art of Versification and Technicalities of Poetry-by R. F. Brewar-pp. 6-15

நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளைவெண்பா, பரிபாட்டு, அங்கதச் செய்யுள், அளவியல் வெண்பா என அறுவகையாக வழங்கியது. ஆசிரியப்பா அளவடிகளாக வருவதும் இடையடிகள் சீர்குறைந்து வருவதும் ஈற்றயலடி முச்சீரடியாக வருவதும் என மூவகையாய் வழங்கியது. கலிப்பா என்னும் பாவகை ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக்கலி, உறழ்கலி என நால் வகையாக நடந்தது. வஞ்சிப்பா இருசீரடியாலும், முச்சீரடியாலும் பயின்றது. இவற்றுக்குமேல் பண்ணத்தி என்னும் பெயரால் பாட்டிடைக் கலந்த பொருளவாகி வரும் பாக்களும் வழங்கின.

தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னர், சங்க காலத்துள் ஆசிரியம், கலி ஆகிய இருவகைப் பாவகைகளும் பிறவிரு பாவகைகளைவிடச் செல்வாக்குடையன வாய்த் திகழ்ந்தன. சங்கமருவிய காலமாகிய சிலப்பதிகாரக் காலம் யாப்பியல் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாகும். பல்வேறு வகை புதிய யாப்பு வகைகளையும், துறை, தாழிசை, விருத்தம் ஆகிய பாவினங்களையும் புதுவகை இலக்கணச் சாயலோடு இளங்கோவடிகள் இக்காலத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார். தன் காலத்துக்கு முன்னர் வழங்கும் சமுதாயப் பாடல்களுக்கெல்லாம் இலக்கிய வடிவம் தந்த பெருமையும் இளங்கோவடிகட்குரியது. காப்பியவெழுச்சியின்போது, தன் காலத்தில் வழங்கிவரும் சிறுசிறு பாக்களையும் பாக்கூறுகளையும் தொகுத்து இயைபு படுத்தி இலக்கிய வடிவளித்தல் காப்பியனின் இயல்பு என்பதை மேனாட்டு இலக்கியத் திறனாளிகளும் கூறுவர்[36].

பத்தி மறுமலர்ச்சிக் காலத்தில், இளங்கோவடிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட பாவினங்கள், மேலும் புதிய

36. In course of time these rude lyrical pieces were collected and commited to writing. With narrative verses interspersed, in order to give a unity to the collection; hence, in broad outline, the origin of Epic Poem-The Art of Versification and the Technicalities of Poetry-R. F. Brewar-p. 6.

மெருகோடு வளர்ச்சியுற்றன. ஆழ்வார்களும் நாயன்மார் களும் பத்திச் சுவையோடு யாப்பு வகைகளை இசைத் தமி ழாக்கித் தந்தனர். சமயக் கொள்கைகளை மக்களிடையே பரப்ப, எளிமையும் இனிமையும் நிறைந்த பாவினங்களைக் கையாண்டு யாப்பு வகைகளை வளர்த்த பெருமையில் பங்கு கொண்டனர்.

காப்பிய காலத்தில், பாவினங்களுள் ஒருவகையாகிய விருத்தப் பாக்களின் வளர்ச்சியைக் காண்கின்றோம். விரிந்துசெல்லும் கற்பனைப் பெருக்கை விளக்க, காப்பியர்கள் அடிநீண்டு செல்லும் விருத்தப் பாவகையைத் தேர்ந் தெடுத்தனர் போலும்! இவ்விருத்தப் பாக்களே பலவகைச் சந்தப் பாக்களாகவும் வளர்ந்தன.

சிற்றிலக்கிய காலத்தில், கலிவிருத்தம் என்னும் பாவினமே இடைவிட்ட அடிகள்தோறும் இறுதியில் முதல் தொடைக்கேற்ற தனிச்சொல் பெற்று, கண்ணி என்னும் பெயரால் கருத்து முற்றுப்பெறுங்காறும் வளர்ந்துசென்றது, உலா தூது முதலிய சிற்றிலக்கிய வகைகள் இவ்வியாப்பு வகையில் இயன்றன. பள்ளு, சதகம், பிள்ளைத்தமிழ் ஆகிய சிற்றிலக்கிய வகைகளில் விருத்தங்களே அடிதோறும் பல சீருடையனவாய்த் தழைத்தன. குறவஞ்சி முதலான சிற்றிலக்கியங்களில் இராகம், தாளம் ஆகிய குறிப்புக்க ளோடு கீர்த்தனங்கள் என்னும் இசைப்பாவகைகள் இடம் பெற்றன.

சில நூற்றாண்டுகட்கு முன் வரை, யமகம், திரிபு, முதலான சொல்லணிகள் அமையப் பெற்ற பாடல் வகை களைப் பாடுவதிலும் கவிஞர்கள் தம் புலமையைப் பயன் படுத்தினர். இத்தகைய பாடல்களைக் கலையின் பெற்றி யுணர்ந்தார் போற்றாது விடுத்தனர்.[37]

---

37. யமகம் திரிபு முதலான பெயர்கள் தந்து அவற்றைச் சொல்லணிகள் என்று புலவர் சிலர் போற்றியபோதிலும், கலையின் பெற்றி உணர்ந்தவர் அவற்றை ஒருநாளும் போற்றார் - இலக். திறன். டாக்டர் மு. வ, பக். 215

தற்காலத்தில் பழைய மரபுப் பாவகைகளோடு இயற் கும்மி, ஒயிற்கும்மி, ஓரடிக்கும்மி முதலான கும்மிப்பாடல் களும், சமனிலைச் சிந்து, வியனிலைச் சிந்து, காவடிச் சிந்து, நொண்டிச்சிந்து, வழிநடைச் சிந்து ஆகிய சிந்துப் பாடல் களும், இச்சிந்துப்பாடல்களிலிருந்து வளர்ந்த ஆனந்தக் களிப்பு, தென்பாங்கு முதலான பாடல்களும், கீர்த்தனம் என்னும் இசைப் பாவகைகளும் பல வகையினவாக பல்கிப் பெருகியுள்ளன. தற்காலக் கவிஞர்கள் சந்த மொன்றை வைத்தே பலவகை ஓசை வேறுபாடுடைய கவிதைகளைத் தந்துள்ளனர். இசைப் பாவகையில் இயைபுத் தொடைச் சுவையோடு திரையிசைப் பாடல் களும் பல்கியுள்ளன. மேலும் உணர்ச்சியையும் கற்பனை யையும் பெரிதாகக் கொண்டு, ஒலிநயத்தைப் பற்றியும் யாப்பைப் பற்றியும் கவலைப்படாத உரைநடைப்பாட்டு அல்லது வசன கவிதைகள் (Prose-Poetry) இப்பொழுது எங்கும் தோன்றி மதிப்புப் பெறுகின்றன. இவற்றுள் ஒலிநயமோ, யாப்போ, எதுகைமோனையோ இல்லை யெனினும் நுட்பமான வுணர்ச்சி நிறைந்துள்ளது. இவை, ஆங்கிலேயர் கூறும் எதுகையிலாச் செய்யுளினின்றும் (Blank verse) வேறுபட்டவை.

தமிழ் இலக்கிய வகைகள் காலந்தோறும் புதுப்புது யாப்பு வகைகளில் உருவெடுத்துத் தழைத்து விளங்கு கின்றன. நாளும் புதுப்புது இலக்கிய அமைப்புக்களைப் பெற்றுப் பொலியும் சிறப்பால் தமிழ் யாப்பியல் சீரிளமைத் திறம் குன்றாது சிறந்து விளங்கக் காண்கிறோம்.

யாப்பு நூல்களின் நுவல் பொருள்

யாப்பிலக்கண நூல்களாகக் கிடைத்தவற்றுள் தொல் காப்பியமே தொன்மைச் சிறப்புடையது. தொல்காப் பியருக்கு முன்னர், தொல்காப்பியரின் ஆசிரியராகக் கருதப் படும் அகத்தியர், அகத்தியம் என்னும் பழம் பெரும் இலக்கண நூலொன்று இயற்றியிருந்தார் எனவும், இந்

நூலே தலைச் சங்கத்தார்க்கும் இடைச் சங்கத்தார்க்கும் அடிப்படை இலக்கண நூலாக விளங்கியது எனவும் கூறுப. அகத்தியர், இயல், இசை, நாடகம் என்னும் தமிழின் முப் பிரிவுகளுக்கும் இலக்கணம் கூறினர் எனவும், இந்நூலுள் பன்னீராயிரம் நூற்பாக்கள் இருந்தனவெனவும் உரையா சிரியர் குறிப்புகளால் உணரலாம்[38]. அகத்தியர் பாடிய யாப்பியல் நூற்பாக்கள் சிலவற்றைத் தொல்காப்பிய உரை யாசிரியர் இளம்பூரணர் தம் உரையுளாண்டுள்ளார்[39]. அகத்தியம் முற்றும் கிடைக்காமையால் அவர் காலத்துக்கு முன்னர் வழங்கிய இலக்கிய வகைகளின் யாப்பு நிலையை அறிதற்கியலவில்லை.

கடைச்சங்கத்தார்க்கு அடிப்படை இலக்கண நூலாகத் தொல்காப்பியமே வழங்கியது. தொல்காப்பியர், செய்யுளியல் பகுதிகளில் 'யாப்பென மொழிப யாப்பறி புலவர்' என்பது போன்ற தொடர்களை ஆண்டுள்ளமை யால், தொல்காப்பியருக்கு முன்னர் யாப்பிலக்கண நூல்கள் பல தோன்றியிருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம். தொல் காப்பியர் தன் காலத்துக்கு முன்னர் வழங்கிய இலக்கிய வகைகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் கண்ட தற்கேற்ப இலக்கணம் இயம்பியுள்ளார். 'தொடக்ககால முதல் இன்றுவரை இடையீடு இல்லாத வளர்ச்சி நிலையை அறிவியலில் சுட்டுதல் போன்று, கலையின் வளர்ச்சியைச் சுட்ட வியலாது' என்பர்[40]. இம்முறையில் யாப்பிலக் கணம் போன்ற இலக்கணக் கலையின் வளர்ச்சியைத் தொடர்ச்சியாகச் சுட்டவியலாது. கவிஞன் வடித்த கற்

38. அது முதனூலாகிய அகத்தியமே போலும். என்னை ? அஃது இயற்றமிழ் இசைத் தமிழ் நாடகத் தமிழ் என்னும் மூன்று பிண்டத்தினையும் அடக்கி நிற்றலின் - தொல். பொருள். செய். பேரா. - நூ. 172 உரை
39. தொல்.செய். இளம். நூ. 126 உரை. தொல். செய். இளம். நூ. 117 உரை
40. The Progress of Art, unlike that of science, does not present an almost unbroken triumphal march from the earliest lines to the present day - The Art of Versification and the Technicalities of Poetry- R. F. Brewar-P. 254

பனைகளையெல்லாம் இலக்கணச் சட்டத்துள் செறித்துக் கூறும் நிலை இலக்கணிக் குரியது. தொல்காப்பியமென்னும் இலக்கணப் பேழையில் முறைப்படுத்தித் தொகுக்கப்பெற்ற இலக்கிய வடிவங்கள் அவருக்கு முன்னர் வாழ்ந்த இலக் கியவாணர்களின் கற்பனை வெளிப்பாடுகளே.

செய்யுளின் உறுப்பாக முப்பத்து நான்கினைச் சுட்டிய தொல்காப்பியர் அவற்றின் இலக்கண விளக்கங்களையே செய்யுளியலில் இயம்பினர். பிற்காலத்தில் நாம் காணும் நேர் நிரை, என்னும் ஈரசைகளோடு நேர்பு நிரைபு என் னும் ஈரசைகளையும் தொல்காப்பியர் கூறுவர். 'தன்சீர் உள்வழித்' தளைவகை இயல்பாக அமையுமாதலால், தொல் காப்பியத்துள் தளைஎன்பது செய்யுளின் உறுப்புக்களு ளொன்ருகக் கூறப்படவில்லை. எழுத்தெண்ணி அடி வகுக்கும் மரபும் சீரெண்ணி அடிவகுக்கும் மரபும் இவர் காலத்தில் விளங்கியமைக்கு நூலுள் அகச் சான்றுகளுள. தொல்காப்பியர் கூறிய பரிபாடல், மருட்பா, உறழ்கலி முதலிய பாவகைகள் பிற்காலத்து மிகுதியும் வழக்கிழந்தன. பாவகைகளை விடப் பாவினங்களின் வளர்ச்சி மிகுதி யாயிற்று. தொல்காப்பியத்தில் தனியே விதந்து கூறப் பெருத தளையென்பது தனியொருவுறுப்பாக, பிற்கால யாப்பிலக்கணிகளால் சுட்டப்பட்டது. எழுத்தெண்ணி அடி வகுக்கும் மரபு மறைந்து சீரெண்ணி அடிவகுக்கும் மரபு வளர்ச்சியுற்று நிலைபெற்றது.

தொல்காப்பியத்துக்குப் பின்னர், தொல்காப்பிய காலத்தை யொட்டி வாழ்ந்தவராகக் கருதப்படும் காக்கை பாடினியார் இயற்றிய காக்கை பாடினியம், இவருக்குப் பின்னர், குமரியாறு கடல் கொள்ளப்பட்ட காலத்து வாழ்ந்த சிறுகாக்கைபாடினியார் இயற்றிய சிறுகாக்கை பாடினியம், கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றுண்டில் எழுந்த தாகக் கருதப்படும் அவிநயம், மயேச்சுரம், நத்தத்தம்

முதலியன யாப்பிலக்கணம் பற்றி எழுந்த நூல்களாம். இவற்றுள், தொல்காப்பியர் கூறிய பலவகை யாப்பு மரபுகள் மாறியுள்ளன. இந்நூல்களனைத்தும் முழுமையாகக் கிடைக்கப் பெருதனவாயினும், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் மேற்கோளாகச் சுட்டும் பகுதிகளால், இந்நூற்களுள் கூறப்படும் யாப்பு மரபுகள் பற்றிய செய்திகளை அறிகின்ருேம். யாப்பருங்கலத்திலும், யாப்பருங்கலக் காரிகையிலும் சுட்டப்படும் யாப்பியல் மரபுகளையொத்தே பெரும்பாலான செய்திகள் இந்நூல்களுள் கூறப்பட்டுள்ளன.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலிய நூல்களின் தோற்றத்திற்கு முன்னர் இலக்கிய நிலையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன; இவ்வியாப்பியல் மரபுகளின் மாற்றங்களை இவ்விரு நூல்களும் நுவல்கின்றன. தொல்காப்பியர் கூறிய அசை, அடிவகுக்கும் மரபு, தளை ஆகிய யாப்பு நிலைகள் மாறியதோடு பாவினங்களும் இக்காலத்துப் பல்கின.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை இரு நூல்களுக்குப் பின்னர் மிகுதியாகச் சிற்றிலக்கியவெழுச்சியைக் காண்கின்ருேம். இவற்றுக்கேற்ப, யாப்பு நூல்களும் பாட்டியல் என்னும் புதுவகை யாப்புப் பிரிவுக்கு இலக்கணம் கூறத் தொடங்கின.

பாட்டியல் நூல்கள்

பாட்டியல் நூல்கள் பொருத்தங்கள் பற்றியும், சிற்றிலக்கியங்களின் இலக்கணம் பற்றியும் கூறுவன. இப்பாட்டியல் நூல்களுள், கி. பி. 12ஆம் நூற்ருண்டில் குணவீர பண்டிதரின் வெண்பாப் பாட்டியலும், கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் பன்னிரு பாட்டியலும், கி. பி. 14ஆம் நூற்ருண்டில் நவநீத நடஞரின் நவநீதப் பாட்டியலும், கி.பி. 16ஆம் நூற்ருண்டுக்குரிய பரஞ்சோதியாரின் சிதம்பரப் பாட்டியலும் கி. பி.

19ஆம் நூற்றுண்டுக்குரிய முத்துவீர ஆசிரியரின் முத்து வீரியமும் குறிப்பிடத்தக்கவை. மற்றும் வரையறுத்த பாட்டியல், வருணப் பாட்டியல், பாட்டியல் மரபு, தாத் தாத்திரேயப் பாட்டியல், அகத்தியர் பாட்டியல் ஆகியன வும் பெயரளவால் அறியப்படும் பிற பாட்டியல் நூல்கள்.

பொருத்தங்கள்

பாட்டியல் நூல்களுள் கூறப்படும் இருவகையிலக் கணங்களில் முதற்பிரிவு பொருத்தங்களைப் பற்றியது, மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணவு, வருணம், நாள், கதி, கணம் என்பவை பத்துப் பொருத்தங்கள். இவற்றுக்கு மேலும், நாழிகைப் பொருத்தம், பெயர்ப் பொருத்தம், புட்பொருத்தம் ஆகியன வற்றையும் சில பாட்டியல் நூல்கள் பகர்கின்றன. இப் பொருத்தங்கள் எல்லாம் பொருந்தும்படி பாடினுல் பாட் டுடைத் தலைவன் சிறப்புறுவான் என்றும், பொருத்த மின்றிப் பாடினுல் அவன் வீழ்ச்சியடைவான் என்றும் பாட்டியல் நூல்கள் கூறுப.

இப்பொருத்தங்களுள் செய்யுளில் பயிலும் சொல்லை அடிப்படையாகக் கொண்டவை மங்கலப் பொருத்தம், சொற் பொருத்தம் ஆகியன. சீரை அடிப்படையாகக் கொண்டு கணப்பொருத்தம் அமைந்துள்ளது. எஞ்சிய பொருத்தங்கள் செய்யுளில் பயின்றுவரும் எழுத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இப்பொருத்தங்கள் பற்றிய விதிகளை முதன் முதலாகக் கூறிய நூல் பன்னிரு பாட்டியல். பன்னிரு பாட்டியலில் கூறப்பட்ட இவ்விதிகள் பண்டைத் தமிழ் யாப்பியல் மரபுக்கு ஒவ்வாதவை என்று கூறுவர்[41]. பன்னிரு பாட்

41. To put it briefly, we might say that Pannirupattiyal does not represent any improvement upon the older prosodies but it has done great violence to the genius of the Tamil language. Thus it is evident that looking for Augury in verse was not a practice of the ancient Tamilians. - Advanced studies in Tamil Prosody - A.C. Chettiar P.194

டியலைப் பாடியுள்ள ஆசிரியர்கள் பொய்கையார், பரணர், இந்திரகாளியார், அவிநயனுர், அகத்தியர், கல்லாடனுர், கபிலர், சேந்தம்பூதனுர், கோவூர்கிழார், மாபூதனுர், சீத்தலையார், பல்காயனுர், பெருங்குன்றூர்கிழார் ஆகிய பதின்மூவர். பழம் புலவர்களின் பெயர்களாக இவ்வாசிரியர்களின் பெயர்களமைந்திருப்பினும், உண்மையில் இவர்கள் பழம்புலவர்களல்லர் என்பது வெள்ளிடைமலே.

இப்பொருத்தங்கள் பற்றிய விதிகளுக்குரிய முதல் நூல் பன்னிரு பாட்டியலாக இருப்பினும், இவற்றுக்கு வித்திட்ட பெருமை யாப்பருங்கல உரையாசிரியருக்கு உரியது. ஆனந்தம் அறுவகைப்படும் என்றும், அவை எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என்றும் கூறுவர் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர். பாக்களில் பயிலும் எழுத்து, சொல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவர்கூறும் குற்றங்களே, பொருத்தங்கள் என்னும் பெயரால் பாட்டியல் நூல்களுள் விரிவாக வளர்ச்சி பெற்றன எனக் கூறுதல் சாலும்.

நச்சினுர்க்கினியர், போராசிரியர் இருவர்க்கும் குற்றம் பற்றிய இக்கொள்கைகள் உடன்பாடில்லே. பேராசிரியர் இம்மரபினைப் பிற்கால வழக்கென்று கூறுவதோடு, பாட்டியல் மரபு என்னும் நூலினை எடுத்துக்காட்டி இந்நூல் நின்று பயனின்மை என்னும் குற்றத்திற்கு மேற்கோளாக அமைவது என்றும் கூறியுள்ளது[42] எதிர்ப்பு நிலையின் வன்மையை விளக்குகிறது. நச்சினுர்க்கினியர் மலைபடுகடாம் உரையில், 'நூற் குற்றம் கூறுகின்ற பத்துவகைக் குற்றத்தே தன்னுன் ஒரு பொருள்கருதிக் கூறல் என்னும் குற்றத்தைப் பின்னுள்ளோர் ஆனந்தக் குற்றம் என்பதோர் குற்றம் என்று நூல் செய்ததன்றி, அகத்தியனுரும்

42. தொல். பொருள். மர. நூ. 108 உரை

தொல்காப்பியனாரும் இக்குற்றம் கூறாமையில், சான்றோர் செய்யுட்கு இக்குற்றம் உண்டாயினும் கொள்ளார் என மறுக்க' என்றுரைத்திருப்பதும்[43] இக்கருத்தை விளக்கும்.

பாட்டியல் நூல்களின் பிறிதொரு பகுதி சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைச் சுட்டுவது. இலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு என்னும் வரையறைக்குட்படுத்திக் கூறுவது பாட்டியல் நூல்களின் கருத்து. எனினும் பன்னிரு பாட்டியலில் 65 இலக்கிய வகைகளைப் பற்றியும், வெண்பாப் பாட்டியலில் 56 இலக்கிய வகைகளைப் பற்றியும் நவநீதப் பாட்டியலில் 97 இலக்கிய வகைகளைப் பற்றியும் வரும் குறிப்புக்களை நோக்குழி, இலக்கியங்களை வரையறைப்படுத்திக் கூறுவதில் பாட்டியல் நூல்களிடையே மாறுபாடு இருந்தது புலனாம். தொண்ணூற்றாறு எனக் கூறும் வரையறை கி.பி. 16 அல்லது 17ஆம் நூற்றாண்டளவில்தான் ஏற்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதுவர். எனினும் தென்பாங்கு, அம்மானை, ஊசல், ஏசல், சிந்து, சீட்டுக்கவி, கும்மி, தாலாட்டு என இங்ஙனம் நாளும் புதிதாகத் தோன்றி வரும் சிற்றிலக்கிய வகைகளின் ஆக்கத்தை அறுதியிட்டுரைக்க இயலாதாகையால் இவ் வரையறை பொருந்தாவொன்றென்பதை அறியலாம்.

சிற்றிலக்கிய இலக்கணம்

தொண்ணூற்றாறு என்னும் வரையறைக்குட்பட்ட பட்டியலில் ஏறத்தாழ பதினைந்து சிற்றிலக்கிய வகைகளே வாழும் இலக்கியங்களாக வளம் பெற்றுள்ளன. எஞ்சியவற்றுள் பெரும்பாலானவை அகத்துறைகளோடும் புறத்துறைகளோடும் தொடர்புடையனவாம்[44]. பிற்காலத்தில் சிற்றிலக்கியங்கள் வளர்ச்சி பெற்றிருப்பினும், பாட்டியல் நூல்களில் கூறப்படும் கடிய இலக்கண விதிகளை அவை பின்பற்றவில்லை. பொருத்தங்களின் வீழ்ச்சியைப்போன்று சிற்றிலக்கிய இலக்கண விதிகளும் வழுவியுள.

43 பத்துப்பாட்டு - மலைபடுகடாம் - 145 - உரை
44 தூது இலக்கியங்கள்-ந. வீ. ஜெயராமன் பக். 10

இங்ஙனம் யாப்பிலக்கண நூல்கள் ஒரு பொருளே பற்றி எழுந்தனவாயினும், காலந்தோறும் தோன்றும் புது வகை இலக்கிய வடிவங்களுக்கும் இலக்கண நெறியை விரித்துணர்த்துமுறையால், அவற்றின் நுவல் பொருள் காலத்திற்கேற்ப மாறுபடுகின்றது. பாக்களின் இலக்கணம், பாவினங்களின் இலக்கணம், சிற்றிலக்கியங்களின் இலக்கணம், பொருத்தங்களின் இலக்கணம் என இம்முறையில் யாப்பிலக்கண நூல்களின் நுவல் பொருளூடே மாற்றங்கள் நிகழ்ந்தன. கி. பி. இருபதாம் நூற்றுண்டிலெழுந்த 'கவிஞராக' என்னும் யாப்பிலக்கண நூல் பழைமையான பாக்களுக்கும் பாவினங்களுக்கும் எளிய முறையில் இலக்கணம் கூறுவதோடு கும்மி, சிந்து முதலிய புதுவகை இசைப்பாக்களுக்குரிய இலக்கணத்தையும் கூறுகின்றது. அதுபோலவே, இந்நூற்றுண்டிலெழுந்த 'யாப்பதிகாரமும்' 'தொடையதிகாரமும்' அமைந்துள்ளன.

மறைந்த யாப்பியல் நூல்கள்

தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலிய யாப்பியல் நூல்களே இன்று பெரும்பான்மையாக வழக்கிலிருந்து வருபவை. இந்நூல்களேயன்றி, தொல்காப்பிய உரைக் குறிப்பாலும், யாப்பருங்கலம், காரிகை இவற்றின் உரை மேற்கோள்களாலும் பலவகை யாப்பிலக்கண நூல்களைப் பற்றி அறிய முடிகின்றது.

பிற தமிழ் நூல்களைப் போன்றே, யாப்பிலக்கண நூல்களும் மறைந்தமைக்குப் பல காரணங்கள் கூறலாம். சங்கத்தில் எழுந்த பேரிலக்கிய நூல்கள் பல கடல்கோளால் அழிந்தமை பற்றி, 'வாரணம் கொண்ட தந்தோ, வழிவழிப் பெயருமாள' எனக் கவிஞர் கையற்றுரைப்பர். பிற்காலத்தில் சுவடிச்சுக்கல தோன்றுமையாலும், சமயப் பகைமையாலும், விழாக்காலங்களில் ஏடுகளை ஆற்று வெள்ளத்திலிடும் மூடப்பழக்கத்தாலும், வேள்வியில் பழைய ஏடுகளை நெய்

யூற்றி எரித்துவிடும் மூடக் கொள்கையாலும், ஏதிலாராய பிற நாட்டு வேந்தர்கள் படையெழுச்சியாலும், சிதலென்னும் பூச்சிகளின் படையெழுச்சியாலும் ஏடுகள் பலவும் அழிந்தன; அழிக்கப்பட்டன. மறைந்தொழிந்த அத்தமிழ் யாப்புக் கருவூலங்கள் பற்றிய இன்றியமையாக் குறிப்புக் களை அறிந்தவரை இவண் தொகுத்துச் சுட்டுதல் சாலும்.

அகத்தியர் யாப்பியல்

அகத்தியர் தொல்காப்பியரின் ஆசிரியர் எனக் கூறப்படுபவர். தொல்காப்பியரின் ஆசிரியரராய அகத்தியரோ, அவரினின்று வேருன அகத்தியரோ யாரோ ஒருவர் தம் பெயரால் யாப்பியல் நூலொன்று செய்துள்ளார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் செய்யுளியலில் இளம்பூரணர் இரண்டிடங்களில்[45] ஐந்து நூற்பாக்களை எடுத்துக்காட்டி அவற்றை அகத்தியர் கூறுவதாகக் குறிப்பிடுவர்.

யாப்பருங்கல உரையாசிரியர் எழுத்தோத்து, ஒழிபியல் ஆகிய பகுதிகளில் எழுத்தானந்தம் ஆனந்தப்பையுள் ஆகியவற்றை விளக்குதற்கு இரு அகத்திய நூற்பாக்களை மேற்கோள் காட்டுவர்.

இளம்பூரணர் குறிப்பிடும் அகத்திய நூற்பாக்களும் யாப்பருங்கல உரையாசிரியர் குறிப்பிடும் அகத்திய நூற்பாக்களும் ஒரு நூலுக்குரியனவா, அன்றி வெவ்வேறு நூற்களுக்கு உரியனவா என அறியவியலாவிடினும் அகத்தியர் பெயரால் யாப்பியல் நூலொன்று இருந்திருத்தல் வேண்டும் என்ற கருத்துக்கு இவை சான்றுகளாக உள. இந்நூலின் காலம் கி. பி. 10ஆம் நூற்றுண்டுக்கு முந்தியதாகலாம்.

அகத்தியர் பாட்டியல்

அகத்தியர் பெயரால் யாப்பியல் நூலொன்று வழங்கியது போன்று பாட்டியல் நூலொன்றும் வழங்கியது

45. தொல். பொருள். செய். நூ. 117; தொல். பொருள். செய். நூ. 12

அறிகின்றோம். கி. பி. 16ஆம் நூற்றாண்டினராய பரஞ்சோதி தாம் இயற்றிய சிதம்பரப் பாட்டியலில்

பாமேவு தமிழ்ப்பொதியக் குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகிர்ந்திடுவேன் யானே

எனவரும் அவையடக்கச் செய்யுளைக் கூறியுள்ளார். அகத்தியர் பாட்டியல் என்பது அகத்தியர் யாப்பியலின் ஒரு பகுதியாக வழங்கியதாகலாம்; அன்றித் தனி நூலாகவும் வழங்கியதாகலாம். இதனைத் துணிதற்குச் சான்றுகளில.

பன்னிரு பாட்டியலில் குறிப்பிடும் ஆசிரியர் பெயர்களில் அகத்தியர் பெயரும் ஒன்று. இந்நூலாசிரியராகிய அகத்தியர் பன்னிரு பாட்டியல் குறிப்பிடும் அகத்தியரா, அன்றி வேறானவரா எனவும் அறிய இயலவில்லை.

பாட்டியல் வழக்கு மிகப் பிற்கால வளர்ச்சியே ஆதலாலும், யாப்பருங்கல விருத்தியுரையில் இந்நூலுக்குரிய நூற்பாக்கள் மேற்கோளாகச் சுட்டப்படாமையாலும், கி. பி. 16ஆம் நூற்றாண்டினராய பரஞ்சோதியார் இந்நூற்பெயரைச் சுட்டியுள்ளமையாலும் இந்நூலின் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 16ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகயிருத்தல் வேண்டும்

அவிநயம்

அவிநயனார் காலத்தை கி. பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டென நுவல்வர்[46]. யாப்பருங்கல விருத்தியுரையிலும்,யாப்பருங்கலக் காரிகையுரையிலும் அவிநய நூற்பாக்கள் பலவும், அவிநயர் கருத்துக்கள் பலவும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள. அவிநயனார் யாப்பு என்பதும் இந்நூலுக்கு வேறுபெயர்.

பெயரமைப்பால் யாப்பு நூலாகத் தோன்றிடினும், அவிநயம், எழுத்து, சொல், பொருள், யாப்பு என்ற

46. மறைந்துபோன தமிழ் நூல்கள் - மயிலை சீனி. வேங்கடசாமி பக். 243

நான்மைக் கூறுகளை உணர்த்தும் நான்கிலக்கண நூலாக இருத்தல் வேண்டும். நன்னூலில் எழுத்தியல், பதவியல், பெயரியல், வினையியல், பொதுவியல் ஆகிய பகுதிகளில்[47] உரையாசிரியராகிய மயிலைநாதர் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் கூறும் அவிநய நூற்பாக்களை மேற்கோள் காட்டியுள்ளமையாலும், வீரசோழிய உரையாசிரியர்[48] நேமிநாதவுரையாசிரியர்[49] ஆகியோர் சொல்லிலக்கணம் கூறும் அவிநய நூற்பாக்களை மேற்கோள் காட்டியுள்ளமையாலும், யாப்பருங்கல உரையாசிரியர் 'இனி ஒரு சாரார் அகத்திணை, புறத்திணை, அகப்புறத்திணை என மூன்றாய் அடங்குமென்ப; ஆமாறு அவிநயத்துட் காண்க' எனப் பொருளதிகாரப் பகுப்பு முறைக்கு அவிநயத்தைச் சான்று காட்டியுள்ளமையாலும்[50], அவிநயம் பிற எழுத்து, சொல், பொருள் கூறுகளுக்கும் இலக்கண முரைப்பது இனிது உணரப்படும். அணி இலக்கண ஆசிரியர்கள் அவிநயத்தை எங்கும் மேற்கோள் காட்டாமையால் அவிநயம் அணியிலக்கணக் கூறுடையதன்றுஎன்பது தெளிவு. இந்நூலுக்கு இராசப்பவுத்திர பல்லவதரையன் என்பார் உரையுண்டு.

அவிநயப் புறனடை

யாப்பருங்கலத்துக்குச் சார்பு நூலாய் யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல் யாப்பருங்கலப் புறனடை என்னும் பெயரால் வழங்குதல் போன்று, அவிநயம் என்ற பெருநூலுக்கும் அவிநயப் புறனடை என்னும் பெயரால் சார்பு நூலென்று வழங்கியது.

47. நன். பத. நூ 4; பெய. நூ 7; வினை. நூ. 1; பொது. நூ. 19; மயிலை. உரை மேற்கோள்
48. வீரசோ. வேற். பட. நூ-6; யாப். நூ. 19-உரை.
49. நேமி. சொல். நூ. 4. உரை
50. யாப். ஒழிபு. நூ. 2 உரை

அவிநயப் புறனடைக்கு நாலடி நாற்பது என அமைந்த வேறு பெயர், இந்நூல் நாற்பது பாக்களால் அமைந்தது என அளவினைச் சுட்டும். யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர், நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர் இருவரும் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளனர். அவிநயத்தின் காலத்தையொட்டியே இந்நூலின் காலமும் இருத்தல் வேண்டும்.

காக்கைபாடினியம்

தொல்காப்பியரால் பாடப்பெற்ற நூல் தொல்காப்பியம் என அழைக்கப்பட்டமைபோன்று காக்கைபாடினியமும், காக்கைபாடினியார் எனச் செய்தோனல் பெயர் பெற்ற நூலாம். காக்கைபாடினிய நூற்பாக்கள் யாப்பிலக்கணப் பகுதிகளில் மட்டுமே மேற்கோள்களாகச் சுட்டப்பட்டிருத்தலால், இந்நூல் யாப்பருங்கலம்போல யாப்புக் கூறொன்றனையே விரிவாக விளக்கிக் கூறும் பேரிலக்கண நூலாக இருந்திருத்தல் வேண்டும். (இந்நூல் 1974-இல் புலவர். இரா. இளங்குமரன் விளக்கவுரையோடு கழகப் பதிப்பாக வெளிவந்துள்ளது.)

காக்கைபாடினியார் என்ற பெயருடையார் பிற்காலத்திலும் யாப்பிலக்கண நூல் செய்தமையால், முன்னவரினின்று பிற்காலத்தாரை வேறுபடுத்திச் சிறுகாக்கைபாடினியார் எனச் செப்புவர்.

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் காக்கைபாடினியாரிடத்துப் பெருமதிப்பும் ஈடுபாடும் கொண்டவர்; 'காக்கைபாடினியார் முதலிய மாபெரும் புலவர்கள் என்றும் 'நல்யாப்புக் கற்றூர் மதிக்கும் கலைகாக்கைபாடினியார்' என்றும் யாப்பருங்கல உரையாசிரியர் குறிப்பிடும் சிறப்புத் தொடர்கள் இவரிடத்து அவருக்கிருந்த அளவிறந்த ஈடுபாட்டை அறிய உதவும் கட்டளைக் கற்களாகும்.

தொல்காப்பியர் விரித்துரைத்த யாப்பிலக்கணத்தையே காக்கைபாடினியார் தம் நூலுள் தொகுத்துரைத்தார் என்பதைப் பழம் நூற்பாவொன்றால்[51] அறியலாம். யாப்பருங்கல உரையாசிரியர், முன்னோராகிய காக்கை பாடினியார் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றும் முறையில் அவர் மொழிந்த நூற்பாக்கள் பலவற்றைத் தம் உரையில் எடுத்தாண்டுள்ளார். இம்முறையில் அறுபத் தெட்டுக் காக்கைபாடினிய நூற்பாக்கள் யாப்பருங்கல வுரையுள் எடுத்தாளப்பட்டுள்ளன.

இளம்பூரணர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலி யோரும் காக்கைபாடினிய நூற்பாக்களைத் தத்தம் உரையில் ஏற்றவிடங்களில் எழில்பெற ஆண்டுள்ளனர். இளம்பூரணர் 'நேர்பசை, நிரைபசை எனக் காக்கை பாடினியார் முதலாகிய ஒரு சாராசிரியர் கொண்டிலரால் எனின்........' என வரும் பகுதியில் காக்கைபாடினியாரைக் குறிப்பிட்டிருப்பதும்[52], பேராசிரியர் நச்சினார்க்கினியர் இருவரும், ஒரு சாராசிரியர் தளை என்பதனைத் தனியுறுப் பாகக் கொள்ளாமையைச் சுட்டுமிடத்துக் காக்கைபாடினி யாரைக் குறிப்பிட்டிருப்பதும்[53] பண்டைய உரையாசிரியர் களிடையே காக்கைபாடினியார் பெற்றிருந்த பெரு மதிப்பினை வெளிப்படுத்தும் சான்றுரைகளாம். வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார், யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் குணசாகரர் முதலியோரும் காக்கை பாடினிய நூற்பாக்களைத் தம்முரையுள் ஆண்டுள்ளனர்.

இக்காக்கைபாடினியார், தொல்காப்பியரோடு ஒரு சாலை மாணவர் எனக் கூறப்படுவார்[54]. தொல்காப்பியம் தன் நூல் வழங்குமெல்லையை 'வடவேங்கடந் தென்குமரி

51. தொல்காப்பியப் புலவர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காயனார் பகுத்துப் பண்ணினார்-நல்யாப்புக்
கற்றார் மதிக்கும் கலைகாக்கை பாடினியார்
சொற்றார்தந் நூலுட் டொகுத்து. யாப்- நூ. 1. மேற்கோள்

52. தொல். செய். இளம். நூ. 4

53. தொல். செய். நூ. 1. பேரா. நச்சி. உரை

54. தொல். செய். நூ. 1. நச்சி. உரை

ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்று சுட்டுதல் போலவே, காக்கைபாடினியமும் 'வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும், வேங்கடம் குமரி தீம்புனற் பௌவ மென்றந் நான்கெல்லை'55 எனச் சுட்டியுள்ளது அறியத் தக்கது. காக்கைபாடினியம் தொல்காப்பியத்துடன் ஒரு காலத்தில் இணைந்து எழுந்த நூல் என்னும் கருத்துப்பட, காக்கைபாடினியத்தை 'இணைநூல்' என்று சுட்டியுள்ளதும்56 குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் காலத்தவராகவே காக்கைபாடினியார் இருப்பினும், தொல்காப்பியம் முன்னரெழுந்த நூலாகவும் காக்கைபாடினியம் பின்னரெழுந்த நூலாகவும் கொள்ளுதல் சாலும். தொல்காப்பியர் கூறிய யாப்பியல் விதிகள் சிலவற்றைக் காக்கைபாடினியார் மாற்றியமைத்துத் தன் நூலைச் செய்துள்ளது சுட்டத்தக்கது. தொல்காப்பிய யாப்பியல் விதிகளோடு சில கோணங்களில் முரண்பட்டும் மாறுபட்டும் தன் நூலையமைத்து உள்ளமையால் காக்கை பாடினியம் தொல்காப்பியத்துக்குப் பின்னரே இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் எனலாம். பிற்காலத்தில் அவிநயம், மயேச்சுரம், நத்தத்தம் முதலியவற்றுக்கு இந்நூலே அடிப்படை மூல நூலாக விளங்கியதாகலாம்.

கையனார் யாப்பியல்

யாப்பருங்கல உரையாசிரியர், காரிகையுரையாசிரியர் குறிப்புக்களால், கையனார் என்னும் புலவர் யாப்பியல் நூலொன்று எழுதினமை புலனும். 'இயைபுத்தொடைக்கு ஏழு விகற்பமும் இறுதிச்சீர் முதலாகக் காட்டினார் கையனார் முதலாகிய ஒருசார் ஆசிரியர்' எனவும் 'முதலயற் சீர்க்கண் இல்லாததனைக் கீழ்க்கதுவாய் என்றும், ஈற்றயற்சீர்க்கண் இல்லாததனை மேற்கதுவாய் என்றும் வேண்டினார்

55. இறை. கள. நூ. 1. உரை மேற்கோள்
56. தொல். செய். நூ. 1. பேரா. உரை

கையனார் முதலாய ஒருசார் ஆசிரியர்....' எனவும் வரும் பகுதிகள்[57] யாப்பருங்கலக் காரிகையுரையாசிரியரால் ஆளப் பட்டுள்ளன, யாப்பருங்கலவுரைகாரரும் 'இஃது ஈறு பற்றி யறியுந் தன்மைத்தாகலின் இயைபுத் தொடைக்கிவ்வாறு எட்டு விகற்பமும் சொன்னார், கையனார் தொல்காப்பியனார் முதலாகிய ஒரு சாராசிரியர்' எனவும்[58] 'இவ்வாறு வண்ண விகற்பம் எடுத்தோதினார் தொல்காப்பியனாரும் கையனாரும் முதலாக உடையார்' எனவும்[59] கையனாரைப் பற்றிச் சுட்டியுள்ளார்.

கையனார் என்னும் பெயருக்குக் கையடனார் என்றும் பாட வேறுபாடுள்ளது. கையனார் யாப்பருங்கலவுரைகாரர் காலத்துக்கு முந்தியவர். சரியான காலம் அறியதற்கியல வில்லை. எனினும் அவிநயத்துக்குப் பின்னரும் யாப்பருங் கலவுரைக்கு முன்னரும் இந்நூல் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமாதலால், கி.பி. 7 அல்லது கி பி. 8ஆம் நூற்றாண் டாக இதன் காலத்தைச் சுட்டலாம்.

நன்னூல் விருத்தியுரையுள் 'இவ்வாறுதல் பற்றி ஏ ஓ ஐ ஔ என்ற நான்கினையும் வடநூலார் சந்தியக் கரமென்பர்; கையனார் 'நரமடங்கல்போல' என உவமையும் கூறினார்'[60] எனச் சிவஞான முனிவர் குறிப்பிட்டுள்ளமை யால், கையனார் எழுத்தியல் முதலான பிற கூறுகளுக்கும் இலக்கணம் எழுதியுள்ளாரோ என ஐயம் எழுகின்றது. எனினும், இக்கருத்தை உறுதி செய்யும் அளவில், பிற இயல்களில் கையனார் கருத்து மேற்கோளாகச் சுட்டப்படா மையால், கையனார் யாப்பியல் நூல் ஒன்றே இயற்றி யிருத்தல் வேண்டும் எனத் துணியலாம். சிவஞான முனி வர் காட்டும் சந்தியக்கர எழுத்துக்கள் பற்றிய விதிகள்,

57. யாப். காரி. நூ. 19. உரை
58. யாப். தொடை. நூ. 34 உரை
59. யாப். ஒழிபு. உரை
60. நன். நூ. 73-சிவஞானமுனிவர் விளக்கம்

அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்களின் இலக்கணம் பற்றியதாக, யாப்பியலோடு தொடர்புடையதாக இருக்கலாம்.

சங்க யாப்பு

யாப்பருங்கல விருத்தியாசிரியரும், யாப்பருங்கலக் காரிகையுரைகாரரும் சங்க யாப்பு என்னும் நூலிலிருந்து பல நூற்பாக்களைத் தம் உரையில் மேற்கோள் காட்டியுள்ளனர். இந்நூலின் பெயரமைப்பால் சங்ககாலப் புலவர் ஒருவரால் சங்க இலக்கிய யாப்பியல் மரபுகளைத் தொகுத்துரைப்பதாக இந்நூல் இருத்தல் வேண்டும் என்பது தெளியப்படும்.

சிறுகாக்கை பாடினியம்

காக்கைபாடினியார் இயற்றிய காக்கைபாடினியத்திலிருந்து இந்நூல் வேறுபட்டது. தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் 'இணைநூல் முடிபு தன்னூல் மேற்றே', என்பதால் காக்கைபாடினியார் ஓதிய தளை இலக்கணம் ஈண்டும் கோடல் வேண்டுமெனின், அதே கருத்தாயின் இவர்க்கும் அவர் முடிவே பற்றித் தளை களையல் வேண்டும்; அல்லதூஉம் அவர்க்கு இளையரான சிறுகாக்கைபாடினியார் தளை கொண்டிலரென்பது இதனாற் பெற்றாம்' எனப் பேராசிரியரும்[61], 'தொல்காப்பியரோடு ஒருசாலை மாணாக்கராகிய காக்கைபாடினியாரும் உறுப்பென்றார்; பின் தோன்றிய காக்கை பாடினியார்முதலியோர் கொள்வர். என நச்சினார்க்கினியரும்[62] சிறுகாக்கைபாடினியாரைப் பற்றித் தம் உரையுள் குறிப்பிடுவர்.

காக்கைபாடினியத்தின் காலம் தொல்காப்பியத்துக்குச் சற்றுப் பிந்தியதாதலால், சிறுகாக்கைபாடினியார் இக்காலத்துக்குப் பின்னர் வாழ்ந்தவராதல் வேண்டும்.

61. தொல். செய். நூ. 1. பேரா. உரை
62. தொல். செய். நூ. 1. நச்சி. உரை

தமிழகத்தின் தென்றிசைக்குரிய எல்லையைக் கூறியுள்ள குறிப்பால், சிறுகாக்கைபாடினியார், காக்கைபாடினியார் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், குமரி யாறு கடல் கொள்ளப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். சிறுகாக்கை பாடினியார் வாழ்ந்த இக்காலம் பற்றி 'ஒழிந்த காக்கை பாடினியத்து 'வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத் தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்' எனத் தென்றிசையும் கடலெல்லையாகக் கூறப்பட்ட தாகலான் அவர் குமரியாறுள்ள காலத்தாரல்லரென்பதும், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன்றென் பதும் பெற்றாம்' எனப் பேராசிரியர் தம்முரையில் வரைந்த குறிப்பும்[63] இவர் காலத்தை உறுதி செய்யும் சான்றாம்.

சிறுகாக்கைபாடினியத்தையும் தழுவிய யாப்பருங் கலம் பாடப் பெற்றது என்பதை அந்நூலின் உரையாசிரியர் குறிப்பால் அறியலாம். 'விருத்தம், துறை, தாழிசை என்று காக்கைபாடினியார் வைத்த முறைமையின் வையாது, தாழிசை துறை விருத்தம் என்பது தம்மதம் பட வைத்த தன்று; சிறுகாக்கை பாடினியார் முதலாகிய ஒருசாராசிரியர் வைத்த முறைமை பற்றி வைத்தாரென்க'[64] என யாப்பருங் கலவுரையாசிரியர் குறிப்பிட்டுள்ளமையால், யாப்பருங்கலத் துள் சுட்டப்படும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் முறைவைப்பு சிறுகாக்கைபாடினியத்தைப் பின் பற்றி யமைக்கப்பட்டது தெளிவாம். இந்நூலிலிருந்து யாப்பருங் கலத்துள் முப்பது நூற்பாக்கள் மேற்கோளாகச் சுட்டப் பட்டுள்ளன.

செய்யுளியல்

செய்யுளியல் என்னும் பெயரால் யாப்பியல் நூலொன்று இருந்தமைக்கு யாப்பருங்கல உரையும் யாப்பருங்கல

63. தொல். செய். நூ. 1. பேரா. உரை
64. யாப். செய். நூ. 3. உரை.

காரிகையுரையும் சான்றுகளாம். இந்நூலில் தொல்காப்பியக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளதோடு நூற்பாக்கள் சிலவும் ஆளப்பட்டுள்ளன. சான்ருக, 'நேர்க்கீழ், குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நேர்பசையாம்; நிரையசைக்கீழ் குற்றியலுகரம் வரினும் முற்றியலுகரம் வரினும் நிரைபசையாம் என்ருர் செய்யுளியலுடையார்' என வரும் யாப்பருங்கல உரைப் பகுதியில்[65] செய்யுளியலுடையார் கருத்தாகத் தொல்காப்பியக் கருத்து சுட்டப் பட்டது. இதுபோல, 'கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து........' என வரும் சொற்சீர் பற்றிய தொல்காப்பிய நூற்பா, செய்யுளியலுடையார் கூறிய நூற்பாவாக யாப்பருங்கல உரையாசிரியரால் சுட்டப்பட்டுள்ளது[66].

அசை பற்றிய கருத்து தொல்காப்பியத்தைத் தழுவி யுள்ளமையாலும், சொற்சீரடி பற்றிய நூற்பா தொல் காப்பிய நூற்பாவாகவே அமைந்திருத்தலாலும், யாப்பருங் கல விருத்தியாசிரியர் சுட்டும் செய்யுளியலுடையார் 'செய்யுளியல்' பாடிய தொல்காப்பியராக இருத்தல் கூடுமோ என்ற ஐயம் எழுதல் இயற்கை.

எனினும், 'அறந்தரு செங்கோலே' எனத் தொடங்கும் நேரிசை வெண்பாவொன்றையும், 'தண்டடைந்த' எனத் தொடங்கும் நேரிசை வெண்பா ஒன்றையும் சுட்டி 'இவை வெண்கூ வெண்பாவென்று செய்யுளியலுடையார் காட்டிய பாட்டு'[67] என்று யாப்பருங்கல விருத்தியுரை யாசிரியர் குறிப்பிடுவர். செப்பலோசையின் மூவகைப் பாகுபாட்டில் ஒன்ருக, ஒருசார் ஆசிரியர் குறிப்பிடும் இவ் வெண்கூ ஓசைபற்றித் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை யாதலால், இங்குக் குறிக்கப்பட்ட செய்யுளியலுடையார்,

65. யாப். நூ. 21 உரை
66. யாப். நூ 29 உரை. மேற்கோள்
67. யாப். செய். நூ. 4 உரை மேற்கோள்

செய்யுளியல் பாடிய தொல்காப்பியரினின்று வேறானவர் என்பது அங்கை நெல்லி.

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் குறிப்பிடும் செய்யுளியலுடையார் தொல்காப்பியர் கருத்திலும், சொல்லிலும், பெயரமைப்பிலும் மிகுதியும் ஈடுபாடுடைய பிற்காலத்தவர் என்பதும் அறியற்பாலது.

நத்தத்தம்

நத்தத்தனார் இயற்றிய யாப்பு நூல் நத்தத்தம் என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. 'மாவாழ்சுரம் புலிவாழ்சுரம் என்னும் வஞ்சி உரிச்சீர் இரண்டும் உளவாக வைத்து, ஒரு பயன் நோக்கி தூஉமணி, கெழூஉமணி என்றளபெடுத்து நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீர்க்கு உதாரணம் எடுத்துக் காட்டினார் நத்தத்தனார் முதலாகிய ஒரு சாராசிரியர்' என்று யாப்பருங்கலவுரையில் நத்தத்தம் பற்றிய குறிப்பைக் காண்கின்றோம்[68]. யாப்பருங்கலவுரையாசிரியர் இருபத்து நான்கு நத்தத்த நூற்பாக்களை தம் உரையில் மேற்கோள் காட்டியுள்ளார். இந்நூலாசிரியர் அவிநயனாருக்குப் பின்னர் வாழ்ந்தவராகலாம்.

நத்தத்தனார், நத்தத்தம் ஆகியவை நற்றத்தனார், நற்றத்தம் என்றும் பெயர் வேறுபட்டு வழங்குகின்றன. இனி, யாப்பருங்கலக் காரிகையுரையாசிரியர் 'நத்தத்தனார் அடிநூலுள் எடுத்தோதினார்'[69] என்று குறிப்பிடும் 'அடி நூல்' நத்தத்திற்கு வழங்கிய வேறு பெயராகவோ, அன்றி நத்தத்தனாரால் இயற்றப்பட்ட வேறு நூலாகவோ இருக்கலாம்.

பல்காயம்

பல்காயனாரால் பாடப்பெற்ற யாப்பிலக்கண நூல் பல்காயம் என வழங்கியது. தொல்காப்பியரால் விரித்துக்

68. யாப். நூ. 25. உரை
69. யாப். காரி. நூ. 39 உரை

கூறப்பட்ட யாப்பிலக்கணத்தையே பல்காயனார் பகுத்துச் செய்தார் என்பதை,

> தொல்காப்பியப் புலவோர் விரித்துரைத்தார்
> பல்காய னார்பகுத்துப் பண்ணினார்

எனவரும் பழைய வெண்பாவினால் அறியலாம். தொல்காப்பியரோடு ஒப்பவைத்து எண்ணும் பெரும்புலமைச் செல்வராய் இவர் விளங்கிய பான்மையை இவ்வெண் பாத்தொடர் விளக்கிடும்.

'நேர், நிரை, நேர்பு நிரைபு என்னும் நாலசையும் நாலசைப் பொதுச்சீரும் வேண்டினார் பல்காயனார் முதலிய ஒருசாராசிரியர்' எனவரும் யாப்பருங்கல விருத்தியுரைப் பகுதியால்[70] நாலசை முறையில் தொல்காப்பியரையும், நாலசைப் பொதுச் சீரமைப்பு முறையில் காக்கை பாடினியாரையும் பல்காயனார் பின்பற்றியுள்ளமை வெள்ளிடைமலை. காக்கைபாடினியத்துக்குப் பின்னர் இந்நூல் எழுந்ததாகலாம்.

பல்காய நூற்பாக்கள், யாப்பருங்கல விருத்தியுரையில் முப்பத்தாறும், யாப்பருங்கலக் காரிகையில் ஐந்தும், பன்னிரு பாட்டியல் உரையுள் நான்கும் மேற்கோளாகச் சுட்டப் பட்டுள்ளன.

மயேச்சுரம்

மயேச்சுரர் என்னும் மாப்புலவரால் இயற்றப்பட்ட யாப்பியல் நூலே மயேச்சுரம். யாப்பருங்கல விருத்தியுரை யாசிரியர் 'பேராசிரியர்' என்று குறிப்பிடுவதும், மயேச் சுரரையே குறிக்குமெனக் கொண்டு இருவரும் ஒருவராகவே இருத்தல் வேண்டும் என்பர்[71]. யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் மயேச்சுரரிடத்துப் பெரிதும் மதிப்பும்

70. யாப். நூ. 10 உரை
71. மறைந்துபோன தமிழ் நூல்கள்-மயிலை சீனி வேங்கடசாமி பக். 319

ஈடுபாடும் கொண்டவர் என்பதை, மயேச்சுரரைக் குறிக் அவர் கையாளும் சிறப்புத் தொடர்களே[72] தெரிவிப்ப அவிநயத்துக்குப் பின்னரும் யாப்பருங்கலத்துக்கு மு னரும் இந்நூல் எழுந்ததாகலாம்.

மயேச்சுரரைக் குறிக்கும்சிறப்புத் தொடர்களா முப்பத்து மூன்றிடங்களிலும், பேராசிரியர் என்ற பெயரா இருபத்து நான்கு இடங்களிலும் மயேச்சுர நூற்பாக்க யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் தம் உரையு மேற்கோளாகச் சுட்டியுள்ளார்.

பிற யாப்பியல் நூல்கள்

யாப்பருங்கல விருத்தியிலும், யாப்பருங்கலக் காரி யுரையிலும், தொல்காப்பியச் செய்யுளியல் உரைகளி மேற்கோள் சுட்டப்படும் பகுதிகளிலிருந்து மேலே கு பிட்ட யாப்பியல் நூல்களேயன்றி, வேறு பல நூல்களை பற்றியும், ஒருசில குறிப்புக்கள் அறியக் கிடக்கின்றன.

யாப்பருங்கல ஒழிபியலுரையில் இன்மணியா என்னும் செய்யுளிலக்கண நூலிலிருந்து ஒரு நூற் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கடிய நன்னியார் இயற் கைக்கிளைச் சூத்திரம் பற்றி இருவிடங்களில் யாப்பரு உரையுள் குறிப்புக்களைக் காணலாம். இக்குறிப்புக்கள இந்நூல் கைக்கிளைப் பொருண்மை பற்றி வரும் பாவ களுக்குரிய இலக்கணத்தை விளக்கிவருவது எனத் கிறது. தனியொரு பொருண்மை பற்றி வரும் பாவ களுக்குத் தனியொருவகை யாப்பு நூல் இருந்ததைய இறும்பூது அடைகின்றோம்.

கவிமயக்கறை என்னும் யாப்பிலக்கண நூல்

72 பிறைநெடுமுடிக் கறையிடற்றரனர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் என் போல சிவன் திருப்பெயரோடு சார்த்திக் கூறும் சிறப்புத் தொட ஏறத்தாழ இருபதுள.

கைச் சித்திரக் கவி வேறுபாடுகளே விளக்கியெழுந்தது. ரப்பருங்கல விருத்தியுரையாசிரியர் 'மாலைமாற்றே கரஞ் சுழி குளம்' என்னும் நூற்பாவுரையில் 'ஒழிந்த கற்பங்கள் கவிமயக்கறையுள்ளும் பிறவற்றுள்ளும் கண்டு காள்க' எனக் கூறியுள்ளார்.

குறுவேட்டுவச் செய்யுள். லோகவிலாசனி, பெருவள ல்லூர்ப் பாசண்டம் ஆகிய மூன்று நூல்கள் செய்யுட் ளில் விரவிவரும் பிறபாடைச் சொற்களுக்குரிய விதிகளைக் றுவனவென்பதை யாப்பருங்கல விருத்தியுரையால் றியலாம்[73]. நவநீதப் பாட்டியலுரையால் செய்யுள் கைமை என்பது பாட்டியல் இலக்கணம் கூறும் லென்று தெரிகிறது. பலவகைச் செய்யுட்களிலும் யின்றுவரும் அடிவகைகளின் இலக்கணம் கூறுவதாக க்கீரர் அடிநூல் என்றொரு நூல் வழங்கியதையும், இந் லாசிரியரின் பெயர் நக்கீரர் என்பதையும் யாப்பருங்கல ருத்தியுரை விளக்கும். நக்கீரர் அடி நூலினின்று ருக நக்கீரர் நாலடி நானூறு என்னும் நூல் வழங்கிய தயும் விருத்தியுரை கூறும். இந்நூல், நக்கீரர் அடி லுக்குப் புறனடை நூலாக இருத்தல் கூடும் என்பர்[74].

நல்லாறன் மொழிவரி என்னும் நூலொன்று செய்யுள் லக்கணம் கூறுவதாக வழங்கியதை விருத்தியுரை ாரரின் மேற்கோளால் அறியலாம். யாப்பருங்கல விருத்தி, யிலை நாதருரை ஆகியவற்றால் பரிமாணனார் என்பார் ாப்பிலக்கண நூலொன்று செய்தார் என அறியலாம். தொல்காப்பியத்தின் வழிநூலாகப் பல்காப்பியம் என்ற

. 'இனிப் பாவினங்களுட் சமக்கிருதமும் வேற்றுப்பாடையும் விரவி வந்தால் அவற்றையுமலகிட்டுப் பாச்சார்த்தி வழங்கப்படும் அவை குறு வேட்டுவச் செய்யுளும் லோக விலாசனியும், பெருவளநல்லூர்ப் பாசண் டமும் முதலாகவுடையன எனக் கொள்க' -யாப். ஒழிபு. உரை

4. மறைந்துபோன தமிழ் நூல்கள்-மயிலை சீனி. வேங்கடசாமி பக். 294

நூலொன்று வழங்கியதையும் [75] இந்நூலுக்குப் புறனடை யாகப் பல்காப்பியப் புறனடை என்னும் நூலொன்று வழங் கியதையும்[76] தொல்காப்பிய உரையாளர் பேராசிரிய குறிப்புக்களால் அறியலாம்.

யாப்பருங்கல விருத்தியுரை பாடலனர் இயற்றிய பாடலம் என்னும் யாப்பிலக்கண நூலைக் குறிப்பிட்டு அந் நூலினின்று நூற்பாவொன்றையும் மேற்கோளாகப் பெ றுள்ளது. சித்திரக் கவிகளை உணர்த்துவனவாக புணர் பாவை, போக்கியம், கிரணியம், வதுவிச்சை ஆகிய நூல்க வழங்கினவென்பதை யாப்பருங்கல விருத்தியுரை கூறும் பெரியபம்மம் என்னும் யாப்பிலக்கண நூலொன்று பெரியமுப்பழம் என்னும் பாட்டியல் நூலொன்று வழங்கின என்பதையும் விருத்தியுரை மொழியுப் முள்ளியார் கலித்தொகை என்னும் பாட்டியல் நூலொன் ருந்ததை நவநீதப் பாட்டியல் உரை விளக்கும்.

இங்ஙனம், யாப்பிலக்கணம் ஒன்று பலவாகப் புல் பெருகி தமிழ் இலக்கண வரலாற்றில் இன்றியமையா இட த்தைப் பெற்றுள்ளது. ஒரு மரத்தின் தனிக்கிளையொன் தனியே பூத்துக் காய்த்துத் தழைத்திருக்கும் தன்மை போன்று, தமிழிலக்கணத்தின் ஐவகைக் கூறுகளி ஒன்றாய யாப்பு, தனியொருவகை இலக்கணமாக, பாவுறு பிலக்கணம், பாவிலக்கணம், பாவினவிலக்கணம், பா டியல் இலக்கணம் எனப் பல்வகையாய்த் தழைத்து பெருகியது.

செயற்கை முறையில் ஏற்படுத்தப்பட்டதாக இருப்பினு தலைமைச் சிறப்புடையதாக வளர்ந்து சிறப்பிடம் பெற்ற

75. மற்றுப் பல்காப்பியம் முதலியனவோவெனின் அவை வழிநூலே; தொ காப்பியத்தின் வழித்தோன்றினவென்பது'-தொல். பொருள். மரபிய நூ. 95 உரை

76. தொல். பொருள். மரபு. நூ. 94 உரை

ப்பியலாகும். தமிழில் தோன்றிய இலக்கிய வகைகளில் றுபட்ட வடிவங்களை இலக்கணச் சட்டத்தில் செறித்துக் றும் யாப்பிலக்கண நூல்களின் பெரும்பணி மொழி லாற்றில் முதன்மைச் சிறப்பினது.

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னர் இடப்பெற்ற த்து, தொல்காப்பியமாய் முளைத்து, காக்கைபாடினிய ய் இலைவிட்டு. அவிநயம், பல்காயம், மயேச்சுரம், நத் த்தம், கையனார் யாப்பியல் முதலியனவாய்க் கிளைத்து, ாப்பருங்கலமாய்ப் பூத்து, காரிகையாய் அரும்பி, பாட் யல் நூற்களாய்க் காய்த்துத் தழைத்து விளங்கும் யாப்புப் யிராய் விளங்குகின்றது. (இக் கட்டுரையில் குறிக்கப் பெற்ற மறைந்த யாப்பியல் நூல்கள் பற்றிய விவரங்கள் தனிப்பட்டியலாகப் பிற்சேர்க்கை-1-ல் குறிப்பிடப் பெற் றுள்ளன.)

சிலம்பில் பயின்ற யாப்பு வகைகள்

மொழியின் வளர்ச்சிக்கு அளவுகோலாகவும், மக்களி வாழ்வியற் பண்பாடுகளை வெளிப்படுத்தும் கருவியாகவ அமைவது யாப்பு. சொற்களும் சொற்றொடர்களுமா பொற்றுகள் எல்லாம் ஒன்ருக்கப்பட்டு, நல்லிசை கவிஞனின் அறிவென்னும் கனலுடன் இணைந்து, உருகி செய்யுள் என்னும் அச்சில் வார்க்கப்பட்ட நிலையில், யாட் பென்பது அழகு மிகுந்த பொற்பாவையாகத் தோன்றிக் கற்றோர்க்கும் கேட்டோர்க்கும் கழிபேரின்பம் பயக்கின்றது.

யாப்பிலக்கண நெறிகளாய முத்துக்களைச் செய்ய ளியல் என்னும் பொன்னூலில் கோத்துத் தந்த தொல் லாசிரியர் தொல்காப்பியர். தொல்காப்பியச் செய்யுளியல் கூறும் யாப்பியல் மரபுகளைப் பின்பற்றியே பெரும்பாலான இலக்கிய வகைகள் எழுந்தன; எழுகின்றன. சிலப்பதிகா ஆசிரியர் இளங்கோவடிகள் தன் கற்பனைகளுக்கேற்பவு தான் கொண்ட கதைப்போக்குக்கு ஏற்பவும் பல்வேற யாப்பு வகைகளைப் படைப்பதற்கு வாய்ப்பாகத் தொல் காப்பியம் ஒன்றினை மட்டுமே மூல நூலாகக் கொள்ளாது, தொல்காப்பியர் காலத்திற்குச் சற்றே பின் தோன்றிய காக்கைபாடினியத்தையும் தன் காப்பியத்தின் இயற்றமிழ் இலக்கணக் கூறுகளை விளக்கும் மூல நூலாகக் கொண்டார் என்பது என் துணிபு. தொல்காப்பியத்தையும், காக்கை பாடினியத்தையும் எவ்விடங்களில் இளங்கோவடிகள் பின்பற்றியுள்ளார் என்பதும், எவ்வகைப் பாவகைகள் அவ்விலக்கண ஆசிரியர்களின் அடிச்சுவட்டில் அமைக்க பட்டுளவென்பதும் பிற இசைத்தமிழ், நாடகத் தமிழ் கூறுகளுக்கு உரிய அடிப்படை நூல்கள் யாவை என்பது

இக்கட்டுரைக்கண் விளக்கவெடுத்துக் கொண்ட ஆய் பொருள்களாம்.

சிலம்பின் காலம்

சிலப்பதிகாரத்தின் காலத்தைக் கணிக்க வெழுந்த அறிஞர்கள் பலரும் அக்காப்பியம் சங்கமருவிய காலத்தைச் சார்ந்ததெனச் சாற்றுப. யாப்பியல் நோக்காலும் இம் முடிபு வலியுறுத்தப் பெறும்.

சங்க இலக்கியங்களுள் பெரும்பாலானவை தனிப் பாடல்களே. புலவர்கள் பல்வேறு காலங்களில், பல்வேறு சூழல்களில் பாடிய தனிப்பாடல்களை எட்டுத்தொகையுள் அமைந்த நூல்களின் பெயரால் தொகுத்தனர். பத்துப் பாட்டு நூல்களுள் அமைந்த தனிப்பாடல்கள் கவிஞனின் கற்பனை விரிவுக்கு எற்ப நீண்டுசென்று முடியும் போக்கின.

சங்ககாலத்து எழுந்த இவ்வகை இலக்கிய வடிவங் ளின் வளர்ச்சித் தாக்கத்தைச் சங்க மருவிய காலமாகிய லப்பதிகாரக் காலத்திலும் காணலாம். நீண்டு சென்று ுடியும் தனிப்பாடல்கள் தனித்தனியே கதைப் பொருண்மை தழுவியனவாய்க் காப்பியத்தில் காதை என்னும் உள்ளுறுப்பாக விளங்கக் காண்பம். பாவகை களுக்கு மேலும் பாவினங்களின் தோற்றங்களையும் சிலப்பதிகாரம் விளக்குகின்றது. இயற்றமிழ்ப் பாவகை களுக்குமேல் இசைத்தமிழ்ப் பாக்கள், நாடகத் தமிழ்க் கூறுகள் முதலியவற்றின் வளர்ச்சியையும் சிலப்பதிகாரம் செப்பும். பரிபாடல் என்னும் இசைப்பா வகை சங்ககாலத்து இலக்கிய வகையுள் காணப்படும். அவ்விசைப்பாக் கூறுகளின் வளர்ச்சி நிலையைச் சிலப்பதி காரம் விளக்குகின்ற... இத்தகைய வளர்ச்சி பெற்ற பாவடிவங்கள் ...ர் காலத்தைச் சங்க மருவிய காலம் என உ... துப.

எனவே, தனிப்பாடல்களின் செல்வாக்கு மிகுந்திருந் சங்க காலத்துக்குப் பின்னரே, கதை தழுவிய தொட நிலைச் செய்யுளாகிய சிலப்பதிகாரம் எழுந்தது என கோடல் பொருந்தும்[1].

சிலப்பதிகாரம் சங்ககாலத்து நூலாக இல்லாது, சங் மருவிய காலத்து நூலாகவே இருத்தல் வேண்டும் என்ப தற்குப் பின்வரும் காரணங்களும் உறுதியுரைகளாம்.

(அ) *சங்க இலக்கியப் பாடல் தொகுதியுள் இளங்கோவடிகள் பாடியதாக ஒரு பாடலும் இல்லை.*

(ஆ) *சிலப்பதிகாரக் கதை சங்ககாலத்துக்குரியதாய் இருப்பின் அக்கதை நிகழ்ச்சியைப் பற்றிய குறிப்புக்கள் சங்க பாடல்களுள் இடம் பெற்றிருக்கலாம்.*

(இ) *சைவ வைணவ முதற் கடவுளர்களை வழிபடும் சங் காலச் சமய வழிபாட்டு நிலைக்கு மாறாக, பல்சமய பொதுமை வழிபாட்டையும், பத்தினி வழிபாட்டையு சிலப்பதிகாரம் உணர்த்தும்.*

அடிப்படை இலக்கண நூல்கள்

கடைச் சங்கத்தாருக்கு அடிப்படை இலக்க நூலாக விளங்கியவை அகத்தியமும் தொல்காப்பியமு என்ப.[2] சங்க மருவிய காலத்தெழுந்த சிலப்பதிகாரம் இய இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க் கூறுகளும் கொண் காப்பியமாதலால், ஒவ்வொரு பிரிவுக்கும் அடிப்படை மூ நூல்களாக விளங்கியவை யாவை என்பது ஆய்பொரு ஆதற்குரித்தாம்.

'இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர்நிலை செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ் நூ

1. That Cilappathikaram and Manimekalai are works of the age immediate following that of the 3rd Sangam age has been accepted by sever scholars-Advanced Studies in Tamil Pr... -Dr. A. C. Chettiar p. 78.
2. 'அவர்க்கு நூல் அகத்தியமு... தொல்... என்ப' - இறை. கள நூ. 1 - உரை.

தால்காப்பியமாதலாலும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பா லக்கணத்தனவாதலாலும் அந்நூலின் முடிபே இதற்கு டிபென்றுணர்க'[3] என வரும் உரைப்பாயிரப் பகுதி, லப்பதிகாரத்துக்கு மூல இயற்றமிழிலக்கண நூலாக ிளங்கியது தொல்காப்பியமேயாகும் என்னும் அடியார்க்கு ல்லார் கருத்தை விளக்குவதோடு, தொல்காப்பியம் பழங்கிய காலத்தில் பிறர் செய்த வேறு இலக்கண நூல் ளும் வழங்கி வந்தன என்னும் செய்தியையும் உணர்த்திற்று.

இயற்றமிழுக்குரிய அடிப்படை நூலைக் குறித்தாங்கு சை, நாடகத் தமிழுக்குரிய அடிப்படை நூல் என தனையும் வரையறுத்துச் சுட்டாவிடினும் இசை ணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், திவாணர் நாடகத் தமிழ் நூல் என்னும் ஐந்து நூல் ளைச் சுட்டிய அடியார்க்குநல்லார் 'இவ்வைந்தும் இந் டகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒரு டையொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ் ரையெனக் கொள்க'[4] என மொழிவர். இவ்வுரைப் யிரப் பகுதியால், சிலப்பதிகாரத்துள் கூறப்படும் இசை, டகத்தமிழ்ப் பகுதிகளுக்குரிய அடிப்படை நூல்கள் வையென அறிதற்கியலவில்லையாயினும், அடியார்க்கு ல்லாரின் இசை நாடகத் தமிழ்ப் பகுதிகளுக்குரிய உரைப் குதிக்கு மேலே கண்ட ஐந்து நூல்களும் அடிப்படை ல்களாக விளங்கின என்பதை அறியலாம்.

இளங்கோவடிகள் தாம் பாட எடுத்துக்கொண்ட ப்பியத்தின் அடிப்படை இயற்றமிழிலக்கண நூலாகத் தால்காப்பியம் ஒன்றை மட்டுமே கொண்டார் என டியார்க்குநல்லார் கொள்வது பொருந்தாது. தொல்

சிலம்பு. அடி நல். உரை. - உரைப்பாயிரம்

" " ,

காப்பியர் கூறாத பாவினங்கள் பல சிலப்பதிகாரத்து இடம் பெற்றுள்ளதைக் காண்கின்றோம். தொல்கா பியத்தை மட்டுமே முதனூலாகக் கொண்டிருப்பின், அ கூறாத பாவினங்களை இளங்கோவடிகள் கூறியிரு மாட்டார். இப்பாவினங்கள் பற்றிய இலக்கணங்க முதன் முதலாக விரித்துக் கூறும் யாப்பியல் நூல் காக்கை பாடினியமேயாம். தொல்காப்பியரோடு ஒருசாலை மான வராக விளங்கிய காக்கைபாடினியரால் தொல்காப்பிய திற்குப் பின்னர் இயற்றப்பட்டது காக்கைபாடினிய மேலும், தொல்காப்பியரால் கூறப்பெறாத, ஆனால் காக்கை பாடினியாரால் கூறப்பெற்ற மயங்கிசைக் கொச்சக கலிப்பா போன்ற பாவகைகளையும் இளங்கோவடி அமைத்துள்ளார். இச்சான்றுகளால் இளங்கோவடிக தம் காப்பியத்தைப் பாட அமைத்துக் கொண் அடிப்படை இயற்றமிழிலக்கண நூல்கள் தொல்கா யமும் காக்கைபாடினியமுமேயாம் என்பது தெளிவு.

இனி, இசை, நாடக தமிழுக்குரிய இலக்கண களாக இளங்கோவடிகள், எடுத்துக் கொண்டனவற் வரையறுத்துக்கூறும் சான்றுகள் இல. எனினும் பண் காலத்து வழங்கி, தன் காலத்திறந்த சில இசை நாட தமிழ் நூல்களை அடியார்க்கு நல்லார் தம் உரைப் பாயி பகுதியில் குறிப்பிடுவர்.[5] அவர் குறிப்பிடும் பெருநா பெருங்குருகு, பஞ்சபாரதியம், ஆகிய இசைத் தமிழ் நூ களும் பரதம், அகத்தியம் ஆகிய நாடக தமிழ் நூல்கள இசைக்குரியனவோ, நாடகத்துக்குரியனவோ என்று வ யறுக்க வியலாத முறுவல், சயந்தம், குணநூ

5. இனி, இசைத் தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிற தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாகவுள்ள தொன்னூல் இறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவு தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூ செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கி அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந் போலும்-சிலம்பு. அடி. நல். உரை-உரைப்பாயிரம்

பிற்றியம், ஆகிய நூல்களும், இளங்கோவடிகள்)த்துக்கொண்ட இசை நாடகத் தமிழ் முதல் நூல்களாக ருத்தல் கூடும்.

கடைச்சங்க காலத்திலெழுந்த நூல்களைக் குறிப்பிடும் றையனுர் களவியலுரைகாரர் 'நெடுந்தொகை நானூறும், றுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும் புற னூறும் ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது பியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பரிசையும் என்று இத்தொடக்கத்தன'[6] எனக் குறிப் டுவர். இவற்றுள் இறுதியில் குறிக்கப்பெறும் கூத்தநூல், ரிநூ, சிற்றிசை, பேரிசை ஆகியன கடைச்சங்க லத்து எழுந்த நாடக இசைத்தமிழ் நூல்களாம் இந் ளும் இளங்கோவடிகட்கு இசைநாடகத் தமிழ் ண மூல நூல்களாக விளங்கியிருக்கலாம் என்று வது பொருந்தும்

அடியார்க்கு நல்லார் குறிப்பிட்ட இசை நாடகத் தமிழ் களுள் இசைநுணுக்கம் என்பது இடைச்சங்க நூலென றயனுர் களவியலுரைகாரர் தம்முரையில் குறிப் வர். இனி, முதுநாரை, முதுகுருகு என்பவற்றைத் டச்சங்க நூல்களெனவும் அவர் சுட்டுவர். இவை. டியார்க்குநல்லார் கூறிய பெருநாரை. பெருங்குருகு கியனவற்றைச் சுட்டும் பெயர்களா, அன்றி இவற் ரின்று வேறுப்பட்ட நூல்களா என்பது அறிதற் லவில்லை. இறையனுர் களவியலுரையில் கூறப்பெற்ற டக இசைத்தமிழ் நூல்களைப் பேராசிரியரும் இளம் ணரும் குறிப்பிட்டுள்ளனர்.[7]

இறை களவியல் - நூ. 1 உரை

அ) 'கந்திருவமார்க்கத்து வரியுஞ் சிற்றிசையும் பேரிசையும் முதலாயின போலச் செந்துறைப் பகுதிக்கே உரியவாகி வருவனவும், கூத்த நூலுள் வெண்டுறையும் அராகத்துறைப் பகுதிக்கே உரியவாகி வருவனவும்' - தொல். செய். பேரா. நூ. 153. - உரைவிளக்கம்

ஆ) அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன - தொல். செய். இளம். நூ. 173, உரை விளக்கம்.

சிலப்பதிகாரம் இயலிசை நாடகப் பொருட்டொட நிலைச் செய்யுளாதலால், இக்காப்பியத்துள் இயற்றமிழு குரிய இயற்பா வகைகளும், இசைத்தமிழுக்குரிய இசைப்ப வகைகளும் நாடகத் தமிழுக்குரிய கட்டுரை முதலா கூறுகளும் விரவியுள. இவை எந்த யாப்பிலக்கண நூ களின் இலக்கணச் சட்டத்தோடு, பொருந்தியுள்ள என்பதை விரிவாகக் காண்பாம்.

இயற்றமிழ்ப் பாவகைகள்

நிலைமண்டில ஆசிரியம்

சிலப்பதிகாரத்துள் இடம் பெற்ற பாவகை தலைமைச் சிறப்புடையது நிலை மண்டில ஆசிரியப்பா காப்பியத்துள் பெரும்பாலான பகுதிகள் இப்பா யாலேயே அமைந்துள. முப்பது பகுதிகளில் பதினெ காதைகள்[8] இப்பாவகைக்குரியவை. இவற்றுக்கு பே கட்டுரை காதையுள்இடையில் குறள் வெண்பாக்கள் ப கப்பெற்று, முன்னும் பின்னும் வரும் நிலைமண் ஆசிரியப்பாக்கள் உள; இயற்பாவகையுள், தனித் த காதைகளுக்குரிய பாவகையாகப் பதினெட்டுக் காதைகள பயின்று வந்துள்ளதோடு மயங்கிசைக் கொச்சகக் கலிப் விலும் யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோ னுள்ளும் ஆசிரியச் சுரிதகப் பகுதியாகவும் இந்நி மண்டில யாப்பு பயின்றுள்ளது.

தொல்காப்பியர் நிலைமண்டில ஆசிரியம் என்பன ஆசிரியத்தில் ஒரு வகையாகச் சுட்டவில்லை எனினும்,

8. 1. மனையறம்படுத்த காதை 2. அரங்கேற்று காதை 3. அந்திமாலைச்சிற செய் காதை 4. இந்திரவிழவூரெடுத்தகாதை 5. கடலாடு காதை 6. வேனி காதை 7. நாடுகாண் காதை 8. காடுகாண் காதை 9. புறஞ்சேரியிறுத் காதை 10. ஊர்காண் காதை 11. அடைக்கலக்காதை 12. கொலைக்கள காதை 13. அழற்படு காதை 14. காட்சிக் காதை 15. கால்கோட் காதை 16. நீர்ப்படைக் காதை 17. நடுகற்காதை 18. வரந்தரு காதை என்பன

ஈற்றய லடியே ஆசிரிய மருங்கின்
தோற்ற முச்சீர்த் தாகு மென்ப[9]

னவரும் நூற்பாவால் ஆசிரிய வகைகளுள் ஒன்ருகப் பிற்காலத்தார் குறிப்பிடும் நேரிசை யாசிரியப் பாவைப் பற்றியும்,

இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே[10]

எனவரும் நூற்பாவால் ஆசிரிய வகையுள் பிறிதொன்ருகப் பிற்காலத்துக் கூறப்படும் இணைக்குறளாசிரியம் பற்றியும்

ஒத்தாழிசையும் மண்டில யாப்பும்
குட்டமும் நேரடிக் கொட்டின வென்ப[11]

னவும்,

டிலம் குட்டம் என்றிவை இரண்டும்
தூக் கியல வென்மனுர் புலவர்[12]

ஙும் நூற்பாக்களால் ஆசிரியப்பாவின் பிற இரு கைக் குறிக்கப்பெறும், அடிமறி மண்டிலம், நிலை ண்டிலம் பற்றியும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார் ன்பது இளம்பூரணர் உரையால் அறியப்படும் கருத்தாம்.

இளம்பூரணர் இப்பாவகைகளை மேலும்தெளிவுபடுத்தும் கையில் ' இனி இவ்வாசிரியப் பாவினை அடி நிலையாற் பயரிட்டு வழங்கப்படும். 'அஃதாமாறு - ஈற்றயலடி ச்சீரான் வருவதனை நேரிசையாசிரியம் என்ப........ டையிடை முச்சீர் வரின் இணைக்குறளாசிரியம் என்ப.... ல்லா வடியும் ஒத்துவருவதனை நிலைமண்டில ஆசிரியம் ன்ப........ இனிஎல்லா அடியும் ஒத்து வரும் பாட்டினையே டிமறி மண்டில ஆசிரியம் என்று வழங்குப.... இதனுள்

தொல். பொருள். செய் இளம். நூ. 65.
. தொல். பொருள். செய். இளம் நூ. 66
. ,, ,, ,, நூ. 111
. ,, ,, ,, நூ. 113

யாதானும் ஓரடியை முதலுமுடிவுமாக உச்சரித்தாலு ஓசையும் பொருளும் வழுவாது வருதலின் அடிமறிய யிற்று'[13] எனத் தம்முரை விளக்கத்துள்ளும் குறிப்பிடுவர்,

ஆசியப்பா நால்வகைப்படும் என்று தொகை குறிக்கு காக்கைபாடினிய நூற்பா கிடைக்கப் பெறவில்லை எனினும், அந்நான்கினையும் விளக்கும் தனித்தனி இலக்கண நூற்பாக்களால்[14] ஆசிரியப்பா நால்வகைப்படு என்பதே காக்கைபாடினியார் கருத்தாகக் கொள்ளவியலும்

இந்நால்வகையுள், நிலைமண்டில ஆசிரியப்பா எல்ல அடியும் தம்முள் அளவொத்து அடிதோறும் நாற்சீ கொண்டுவருவது. தொல்காப்பியரால் குறிப்பாகவு காக்கைபாடினியாரால் தெளிவாகவும் இலக்கணமு பெயர் வகையும் சுட்டப்பட்ட இந்நிலைமண்... ஆசிரிய பாவை இளங்கோவடிகள் தம் சிலப்பதிகா...ள்ள...

நிலைமண்டில ஆசிரியப்பாவின் இலக்கத,

ஒத்த அடித்தாய் உலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண் டிலமே

எனவும்,

என்னென் கிளவி யீருப் பெறுதலும்
அன்னவை பிறவும் அந்தம் நிலைபெற
நிற்கவும் பெறூஉ நிலைமண் டிலமே

எனவும் காக்கைபாடினியார் குறிப்பிடக் காண்கிறோம்[15]

---

13. தொல். பொருள். செய். இளம். நூ. 113 உரை

14. அ. அளவடி அந்தமும் ஆதியும் ஆகிக்
குறளடி சிந்தடி என்று யிரண்டும்
இடைவர நிற்ப திணைக்குற ளாகும்.

ஆ. உரைப்போர் குறிப்பின் உணர்வகை அன்றி
இடைப்பால் முதலீ றென்றிவை தம்முள்
மதிக்கப் படாதது மண்டில யாப்பே

இ. ஒத்த அடித்தாய் உலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண் டிலமே

ஈ. நேரிசையாசிரியா இலக்கண நூற்பா கிடைக்கவில்லை

15. யாப். காரிகை. நூ. 28. மேற்கோள்

இந்நூற்பாக்களால், நிலைமண்டில ஆசிரியப்பா அடி தாறும் நாற்சீர் பெற்று ஒத்த அடித்தாய் வரும் என்பதும் ஏன்' முதலாய ஈறுகளைப் பெற்று வருவதும் இப்பாவகை ின் சிறப்பு என்பதும் அறியப்படும். அவிநயனுர், மயேச் ரர், யாப்பருங்கலத்தார், யாப்பருங்கலக் காரிகையார் ன்றின்னேரும் இம்முறையிலேயே இப்பாவகையின் இலக் ணத்தைச் சுட்டுப.

கடைச்சங்க கால இலக்கியங்களுள், எட்டுத்தொகை பில் ஆசிரியப்பாவாலமைந்த நூல்கள் நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, என்பன. இவற்றுள் ஐங்குறுநூற்றில் மூன்று பாடல்களும் [16] குறுந்தொகையுள் நான்கு பாடல் களும்[17], பதிற்றுப்பத்தில் ஒரு பாடலும்[18] அகநானூற்றில் நான்கு பாடல்களும்[19], புறநானூற்றில் பதினைந்து பாடல் களும்[20] ஆக இருபத்தேழு பாடல்கள் நிலைமண்டில ஆசிரியப்பாவாக அமைந்துள. பத்துப்பாட்டுள் எந்தவொரு பாடலும் நிலைமண்டில யாப்பால் அமையவில்லை.

தொல்காப்பியத்துள் நிலைமண்டில ஆசிரியப்பாவின் இலக்கணமும் பெயரும் தெளிவாகக் குறிப்பிடப் பெருமை யாலும், காக்கைபாடினியத்துள் அவை தெளிவாகக் குறிப் பிடப் பெற்றிருத்தலாலும் இந்நிலை மண்டில ஆசிரியப்பா வகை தொல்காப்பியர் காலத்தில் சிறுவரவிற்றுக இருந்தது என்பதையும், காக்கைபாடினியார் முதலியஒரு சாராசிரியர் இப்பாவகைக்கு நிலைமண்டில ஆசிரியம் எனப் பெயரிட்டு வழங்கினர் என்பதையும் அறியலாம். சங்கப் பாடல்களின் தொகை 2381. இவற்றுள் நிலைமண்டில ஆசிரியப்பா யாப்பு இருபத்தேழு பாடல்களில் மட்டும் இடம் பெற்றுள்ளதை நோக்க சங்க காலத்திலும் இப்பாவகை சிறுவரவிற்றுக

16. ஐங்குறுநூறு 113 153 188
17. குறுந்தொகை 16 18 113 221
18. பதிற்றுப்பத்து 50
19. அகநானூறு 6 8 106 372
20. புறம் 33 44 60 76 113 147 175 212 214 235 242 291 344 379 383

இருந்ததென்பதும் மெல்ல இக்காலத்து வளர்ச்சியடைய தொடங்கியதென்பதையும் உணரலாம்.

இளங்கோவடிகள் தாம் பாட எடுத்துக் கொண் தொடர்நிலைச்செய்யுட்குரிய பெரும்பான்மை யாப்பா நிலைமண்டில ஆசிரியப்பாவைப் பயன்படுத்தினர் அவரொடு ஒரு காலத்தினராய்க் கருதப்படும் மணிமேகலை யாசிரியரும், இவரைப் பின்பற்றித் தம் தொடர்நிலை செய்யுட்கும் நிலைமண்டில ஆசிரியத்தைப் பெரிதும் பயன் படுத்தினர். பிற்காலத்துக் கொங்குவேளிரும், இளங்கோ வின் அடிச்சுவட்டில் நின்று, தம் பெருங்கதைக் காப்பிய முழுவதையும் நிலைமண்டில ஆசிரியப்பாவால் பாடினர்

சிலப்பதிகாரத்துள் தனி நிலைமண்டில யாப்பமைந் காதைகள் பதினெட்டனுள்ளும் எழுவகைத் தளைகளு இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். ஈரசைச் சீர்கள லாய மூவகைத் தளைகளுள் விகற்பத்தளையாகிய இயற் வெண்டளையே இவண் மிகுதியும் பயின்றுள்ளது. நேரொ ருசிரியத்தளை, நிரையொன்ருசிரியத்தளைகள் இம்முறை யிலேயே எண்ணிக்கை வரிசை பெறுப. மூவசைச் சீர்களா பிறக்கும் நால்வகைத் தளைகளுள் வெண்சீர் வெண்டளை கலித்தளை என்ற இரண்டும் பெரும்பான்மையாக பயின்றுள. எஞ்சிய ஒன்றிய வஞ்சித்தளையும், ஒன்று வஞ்சித்தளையும்மிகவும் சிறுபான்மையாகச் சிற்சில காதை களுள் மட்டும் ஓரிரண்டிடங்களில் இடம் பெற்றுள.

நிலைமண்டில ஆசிரிய ஈறு

ஆசிரியப்பாக்கள் இறுதியில் இன்ன ஈறுகளை பெற்று முடிதல் வேண்டும் என்ற வரையறை தொல்கா பியத்திலில்லை. எனினும், தொடர்நிலைச் செய்யுட்குரி எண்வகை வனப்புகளைச் சுட்டுங்கால்,

ஞகார முதலா னகார வீற்றுப்
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே[21]

னவரும் நூற்பாவால் இயைபு என்னும் வனப்பை
ணர்த்தியுள்ளார். ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள
ன்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வரும் தொடர்நிலைச்
சய்யுள் இயைபு வனப்புக்குச் சான்றாகும் என்பது இந்
ரற்பாக் கருத்து.

தொடர்நிலைச் செய்யுட்களில் இறுதியில் வரும் எழுத்
துக்கள் பற்றி 'இயைபு' என்னும் வனப்புப் பெயரால்
தால்காப்பியர் வரையறுத்த விதியின் வித்தே, காக்கை
டினியார் காலத்தில் ஆசிரிய ஈறுகளுக்குரிய விதியாகச்
ட்டப்பட்டது.

ஆசிரியப்பாக்கள் ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ என்னும் ஈறு
ப்பெற்று முடியும் என யாப்பருங்கல ஆசிரியர்கூறுவர்.
நயனாரும், மயேச்சுரரும் இம்முறையில் ஈறு கூறியதை
பருங்கலவிருத்தி மேற்கோள் நூற்பாக்களால் அறிய
ம். நேரிசையாசிரியம், இணைக்குறளாசிரியம், அடிமறி
ண்டிலவாசிரியம் ஆகிய பாவகைகளுக்கு ஈறுவிதந்து கூறா
டினும், நிலைமண்டில ஆசிரியப்பாவின் இலக்கணத்தை,

ஒத்த அடியின ஆகியும் ஒற்றிற
நிற்பவும் என்னும் நிலைமண் டிலமே[22]

ன ஈறு குறித்து யாப்பருங்கல ஆசிரியர் விதந்து கூறுவர்.
ஆதலின், பிற ஆசிரியப்பா வகைகளின் ஈறுகளைவிட நிலை
ண்டில ஆசிரியப்பாவினுள் குறிப்பிட்ட ஈறுகள் பயின்று
ருவது இன்றியமையாதது என்பது பெறப்படும். காக்கை
டினியார் நிலை மண்டில ஆசிரியப்பாவிற்கு 'என்'
ன்னும் ஈறு இன்றியமையாததென இயம்புவர்.
ாக்கைபாடினியத்துள் சுட்டப்பட்ட நிலைமண்டில யாப்புக்
ரிய இலக்கணத்தோடு அப்பாவுக்குரிய ஈறு இளங்கோ
டிகளால் சிறப்பாகப் பின்பற்றப்பட்டுள்ளது.

. தொல். செய். இளம். நூ. 232
. யாப். விருத்தி-செய். நூ. 21

காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென் (மனை. காத
வடுநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்தென் (அரங்.காதை
ந்கரங் காவல் நனிசிறந் ததுவென் (அந்தி. கதை
விண்ணவர் கோமான் விழவுநா ளகத்தென் (இந்திர. காதை
மாமலர் நெடுங்கண் மாதவி தானென் (கடலாடு காதை
மாமலர் நெடுங்கண் மாதவி தானென் (வேனிற் காதை
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென் (நாடு. காதை
ஐயைதன் கோட்ட மடைந்தென ராங்கென் (காடு. காதை
புறஞ்சிறை மூதூர் புக்கனர் புரிந்தென் (புறஞ். காதை
கோவலன் பெயர்ந்தனன் கொடிமதிற் புறத்தென் (ஊர்.காதை
கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென் (அடைக்.காதை
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென் (கொலை.காதை
வந்து தோன்றினள் மதுரா பதியென் (அழற்.காதை
அறைபறை யெழுந்தா லணிநகர் மருங்கென் (காட்.காதை
கற்கால் கொண்டனன் காவலன் ஆங்கென் (கால்.கா
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட் டுவனென் (நீர்.கா
வடதிசை வணக்கிய மன்னவ ரேறென் (நடு.கா
மல்லன்மா ஞாலத்து வாழ்வி ரீங்கென் (வரந்.கா

என வரும் சிலப்பதிகாரக் காதைகளின் ஈற்றடிகள் இ
வுண்மையை உணர்த்துவன.

சங்க காலத்தில் எழுந்த நிலைமண்டில ஆசிரியப்பா
களில் 'என்' ஈறு எந்தவொரு பாடலிலும் காணப்ப
வில்லை என்பதும், அவை அனைத்தும் 'ஏ' என்னும் இறு
பெற்றே முற்றுப்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிட
தக்கவை. இவ்வமைப்பை நோக்குழி, காக்கைபாடினியா
இலக்கணம் சங்க காலத்தில் செல்வாக்கிழந்திருந்
நிலைமை புலனும்.

இளங்கோவைப் பாவமைப்பில் பெரும்பாலும் பின்
பற்றிய மேகலையார் ஈற்றமைப்பிலும் பின்பற்றத் தவ
வில்லை. நிலைமண்டில ஆசிரியப் பாவால் அமைந்த மேகலை
காதைகளும் 'என்' என்னும் ஈறு பெற்றே முடிந்துள
யாப்பருங்கல விருத்தியாசிரியர் 'உதயணன் கதையு

ியாண கதையும் என் என்னும் அசைச் சொல்லால் ற்ற நிலைமண்டிலம்' என இவ்வீருல் முடிந்த காப்பியங் ளச் சுட்டுவர்[23].

காக்கைபாடினியத்தைப் பின்பற்றி, இளங்கோவடி ாால் அமைக்கப் பெற்ற நிலைமண்டில ஆசிரியப் பாவகை அனைத்துவகை இலக்கணக் கூறுகளாலும் அவ்விலக்கண ாலேயே பின்பற்றி அமைந்தது என்பது என் துணிபு.

றள் வெண்பாவும் நிலைமண்டிலமும் (குறள்மிடை மண்டிலம்)

நிலைமண்டில ஆசிரியப்பா, காதைகளில் தனித்துவரும் ாவகையாக விளங்குவதோடு, குறள் வெண்பாக்களுக்கு ன்னும் பின்னும் தொடர்ந்து வரும் பாவகையாக விளங் பதையும் கட்டுரை காதையில் காணலாம். இக்காதை ல், இரு நிலைமண்டில ஆசிரியப் பாக்களுக்கிடையே ன்று குறள் வெண்பாக்கள் மடுக்கப் பெற்றுள. முதலில் நபத்து நான்கடிகளாலாய தனி நிலைமண்டிலப் பாவும், ர்னர் மூன்று குறள் வெண்பாக்களும், அதன்பிறகு நூற் ்ழுபது அடிகளாலாய தனி நிலைமண்டிலப் பாவும் ட்டுரை காதையில் அமைந்துள. குறள் வெண்பாக் ளுக்கு இறுதியிலும் பின்னுள்ள நிலைமண்டில ஆசிரியப் வுக்கு முன்னருமாகக் 'காதில்' என்னும் தனிச் சொல் டம் பெற்றுள்ளது. இதனை நிலைமண்டில ஆசிரியப் வுக்கு அடிமுன்னர் வந்த கூனகக் கொள்ளுதல் பாருந்தும். தொல்காப்பியரும்,

சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே[24]

ன்னும் நூற்பாவால் வெண்பா, ஆசிரியம், கலி ஆகிய கைகளில் ஒரு சீரே கூனக வரும் எனச் சுட்டியுள்ளார். க்கைபாடினியாரும்,

. யாப். செய். நூ: 21 - உரை
. தொல். செய். இளம். நூ 47

உறுப்பிற் குறைந்தவும் பாக்கள் மயங்கியும்
மறுக்கப் படாத மரபின ஆகியும்
எழுவாய் இடமாய் அடிப்பொருள் எல்லாம்
தழுவ நடப்பது தான்றனிச் சொல்லே[25]

எனவும்

வஞ்சி மருங்கின் இறுதியும் ஆமெனக்
கண்டனர் மாதோ கடனறிந் தோரே[26]

எனவும் தனிச் சொல் (கூன்) அடியின் முதலில் வருத வேண்டுமென்பதையும் வஞ்சிப்பாவில் இறுதியிலு வருதல் உண்டென்பதையும் உணர்த்தியுள்ளார். காக்ை பாடினியார் தனிச்சொல் என வழங்குவது தொல்காப்பியர் கூன்என வழங்குவதும்ஒன்றே என்பதை 'தனிச் சொல்லைக் கூன் என்று வழங்குவாரும் உளர் என கொள்க' என வரும் யாப்பருங்கல விருத்தி உரை குறிப்பு[27] உணர்த்தும்.

இம்முறையில் முன்னுள்ளதை நிலைமண்டில ஆசிரிய பாவாகவும், மூன்று குறள் வெண்பாக்களை அடுத்துள்ளவ கூன் பெற்று வந்த நிலைமண்டில ஆசிரியப் பாவாக கொள்ளலாமெனினும் அங்ஙனம் கொள்வதில் இடர்ப்பா உண்டு. இளங்கோவடிகள் காலத்திய நிலைமண்டி ஆசிரியப்பாக்கள் 'என்' ஈறு பெற்று முடிதலை முன்னர் கண்டோம். இங்குள்ள இரண்டாம் நிலைமண்டில ஆசிரிய பா 'கானமர் புரிகுழற் கண்ணகி தானென்' என முடி பெற்றிருப்பினும், முதலிலுள்ள நிலைமண்டில ஆசிரியப் 'பட்ட கவற்சியேன் பைந்தொடி கேட்டி' என முடி துள்ளது. 'என்' என்று முடியும் நிலைமண்டில ஆசிரிய பாவின் ஈறு இங்கு வேறுபட்டுள்ளதைக் காண்கின்றோ நிலைமண்டில ஆசிரியப்பாவுக்குரிய ஈற்றினுல் முற்றுப் பெ திருக்கும் இப்பாவகையைத் தனி நிலைமண்டில ஆசிரிய

25. யாப் விருத்தி - ஒழிபு நூ 1 - மேற்கோள்
26. ,, ,, ,, ,,
27. ,, ,, ,, - உரை

வாகக் கொள்ள முடியாதிருக்கும் இடர்ப்பாடு இதுவே. தனைத் தனிப் பாவகையாகக் கொள்ள முடியாதநிலை றல் பின்னுள்ள பகுதிகளோடு சேர்த்து ஒரே வகைப் வாகக் கொள்ள வேண்டியுள்ளது. அங்ஙனம் கொள் ங்கால் கட்டுரை காதையின் பாவமைப்பு வடிவம் தொல் ாப்பிய, காக்கைபாடினிய இலக்கணச் சட்டங்களுள் பாருந்தவில்லை. எனவே இத்தகைய 'குறள் மிடை ண்டில யாப்பு' வகையைக் கூறும் யாப்பிலக்கண ரலொன்று இருந்திருக்கலாமோ என்னும் ஐயம் ழுகின்றது. அன்றியும், புதிய பாவகையை உருவாக்கும் ளங்கோவடிகளின் புரட்சியுள்ளங்கண்டு பெருமிதமும் ழுகின்றது.

ரிசையாசிரியப்பா

ஆசிரியப்பாவின் வகையுள் ஒன்றாகிய நேரிசை சிரியப்பா சிலப்பதிகார வேட்டுவ வரியின் முற்கூறாக மைந்துள்ளது. மங்கலவாழ்த்துப் பாடலாகிய மயங் சைக் கொச்சகக் கலிப்பா, குன்றக் குரவையுள் பயின்று நம் யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு பட்டுவ வரியில் அமைந்த பஃறாழிசைக் கொச்சகக் லிப்பா ஆகிய பாவகைகளுக்குரிய சுரிதகப் பகுதிகளும் ரிசையாசிரியப்பா என்னும் யாப்பு வகையால் அமைந் ள்ளன.

தொல்காப்பியர் இப்பாவகைக்குப் பெயர் சூட்டி லக்கணம் கூறாவிடினும்,

> *ஈற்றய லடியே ஆசிரிய மருங்கின்*
> *தோற்ற முச்சீர்த் தாகு மென்ப*[28]

னவரும் நூற்பாவால் இப்பாவகையை மொழிவர். க்கைபாடினியார் இப்பாவகைக்கு உரியதாகக் கூறிய லக்கண நூற்பா கிடைக்கவில்லை அவனினும், எர்

. தொல். செய். இளம். 65

கருத்தை விளக்குமுறையில் அவிநயனுர்[29], சிறுகாக்கை பாடினியார்[30], மயேச்சுரர்[31], யாப்பருங்கலத்தார்[32], யா பருங்கலக் காரிகையார்[33] ஆகியோர் கூறிய இலக்கண நூ பாக்கள் அமைந்துள்ளன. யாப்பருங்கல உரையாசிரிய இப்பாவகையின் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுங்கா 'மிக்க புகழும் சொல்லும் ஓசையும் உடைத்தாகலின நேரிசை என்பதும் காரணக் குறி' என்பர்[34].

வெண்பாவின் ஈற்றடி முச்சீராக வருவது போன்று இப்பாவகையின் ஈற்றயலடியும் முச்சீராக வருவது சிறப்பு குறியாகக் கருதியிருக்கலாம்[35].

சிலப்பதிகாரத்தில் வேறிடங்களில் இந்நேரிசை ஆசிரியப்பா தனி இயற்பாவகையாக இடம் பெறவில்லை வேட்டுவ வரியுள் 'கடுங்கதிர் திருகலின்' எனத் தொட கும் பகுதி முதல் 'வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே என முடியும் பகுதிவரை நேரிசையாசிரியப் பாவுக்கு பகுதியாகும். நிலைமண்டில ஆசிரியப்பா 'என்' ஈறு முடிந்தது போன்று, நேரிசை யாசிரியப்பா 'ஏ' ஈறு பெற் முடிந்துள்ளது. நிலைமண்டில ஆசிரியப்பாவில் சிறுபான்மை வஞ்சித்தளைகள் பயின்றன; ஆனல் இப்பா வகைய அவை சிறுபான்மைகூட இடம் பெறுமை சுட்டற்குரித்து

கலிவெண்பா

சிலப்பதிகாரத்தில் கனுத்திறமுரைத்த காதை, வ சினமாலை என்ற இரு பகுதிகளும் கலிவெண்பா என்

29. இற்றதன் மேலடி ஒருசீர் குறைய
நிற்பது நேரிசை ஆசிரி யம்மே - யாப். விருத்தி. செய். நூ. 18-மேற்கே
30. இறுசீர் அடிமேல் ஒருசீர் குறையடி
பெறுவன நேரிசை ஆசிரி யம்மே-யாப் விருத்தி. செய். நூ. 18 மேற்கே
31. ஈற்றயல் குறைந்தது நேரிசை - மயேச்சுரர் ,, ,, ,,
32. அந்த அடியின் அயலடி சிந்தடி
வந்தன நேரிசை ஆசிரி யம்மே-யாப். செய். நூ. 18
33. 'கடையயற் பாத முச்சீர்வரின் நேரிசை' - யாப். காரிகை. நூ. 34
34. யாப். விருத்தி. செய். நூ. 17-உரைக்குறிப்பு
35. That the Asiriya verse's peculiarity lies in its possession of only 3 f in the penultimate line even as occurence of 3 feet in the last line venpa is its distinguishing feature seems to have been as ancient atleast the days of Tholkappiyar-Advanced Studies in Tamil Pros -Dr. A, C. Chetttiar P. 63

பற்றமிழ் யாப்பு வகைக்குரியன. நால்வகைப் பாக்களுள் பிப்பாவின் வகைகளே சிலப்பதிகாரத்துள் மிகுதியாகப் ின்றவை.

தொல்காப்பியர் கலிப்பாவின் நால்வகையுள்[36] ஒன்று கலிவெண்பாவின் இலக்கணத்தை,

ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்
திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே[37]

னவரும் நூற்பாவால் விளக்குவர். இறுதிவரை ஒரு பாருளைக் குறித்துவரும் தன்மையுடையதாய் வெள்ளடி பலால் திரிபின்றி முடிவது கலிவெண்பாட்டின் லக்கணம் என்பதை இந்நூற்பா உணர்த்தும். 'வெள்ளடி பலால்' என்பதனை 'வெண்டளையான் வந்து ஈற்றடி சீராய் வருவனவும், பிறதளையான் வந்து ஈற்றடி சீராய் வருவனவும் கொள்க' என இளம்பூரணர் ாக்குவர்[38]. ஒரு பொருள் குறித்து வெண்டளையாலோ, தளையாலோ வந்து ஈற்றடி முச்சீராய் வெண்பாவைப் ால முடிவது கலிவெண்பா என்பது இளம்பூரணர் ருத்தாதலை இவ்வுரைவிளக்கம் உணர்த்தும்.

வெண்பா இலக்கணம் சிதையாதனவே ஒருபொருள் தல வேண்டும் என்றும், அவ்வாறின்றி வெண்பா இலக் ணம் சிதைந்து திரிந்து வருபவை ஒருபொருள் நுதலாது ரும் என்றும் வெண்பா இலக்கணத்தை அடிப்படையாக வத்து இப்பாவை இருவகையாக வேறுபடுத்திக் கூறு பேராசிரியர். இங்குச் சொல்லப்படும் வெண்பா இலக் ணமாவது, கட்டளையடியாய் வருதலும் தனக்குரிய வண்டளையான் வருதலும், பன்னிரண்டடிக்குள் தலும் என்பர் பேராசிரியர்[39]. இவர் விளக்கத்தைத் ழுவியே நச்சினார்க்கினியரும்[40] கூறினர்.

36. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே - தொல். செய். இளம். நூ. 126
37. தொல். செய். இளம். நூ. 147
38. தொல். செய். இளம். நூ. 147 - உரைவிளக்கம்
39. தொல். செய். பேரா. நூ. 153-உரைவிளக்கம்
40. தொல், செய். நச்சி. நூ. 153-உரைவிளக்கம்

இளம்பூரணர் கருத்துப்படி, வெண்டளையான் வந்து ஈற்றடி முச்சீராய் ஒருபொருள் நுதலிய கலிவெண்பா, பிறதளையால் வந்து ஈற்றடி முச்சீராய் ஒருபொருள் நுதலிய கலிவெண்பா என இப்பா இருவகைப்படும். பேராசிரியர், நச்சினார்க்கினியர் பிற உரையாசிரியர்தம் கருத்துப்படி வெண்பா இலக்கணம் சிதையாது ஒருபொருள் நுதலி வந்த கலிவெண்பா, வெண்பா இலக்கணம் சிதைந்து ஒரு பொருள் நுதலாது வந்த கலிவெண்பா என இப்பா இருவகைப்படும்.

காக்கைபாடினியார் கலிவெண்பாவின் இலக்கணத்தை

வெண்டளை தன்றளை என்றிரு தன்மையின்
வெண்பா இயலது வெண்கலி ஆகும்[41]

என மொழிந்து கலிவெண்பாவின் பெயரை வெண்கலி என வேறுபாடின்றி மாற்றியுரைப்பர். பிற்காலத்திலும் கலிவெண்பா-வெண்கலிப்பா இரண்டும் பெயர் வேறு பாடின்றி ஒரே வகைப் பாவாக விளங்கியது. இதனை

தன்றளை ஓசை தழீஇதின் நீற்றடி
வெண்பா இயலது கலிவெண் பாவே[42]

எனவரும் யாப்பருங்கலத்தால் அறியலாம். யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் 'வெண்கலிப்பா எனினும் கலி வெண்பா எனினும் ஒக்கும்'[43] எனக்கூறியுள்ள கூற்று இதனை வலியுறுத்தும். இளம்பூரணருக்கும் இக்கருத்து உடன்பாடே.

இக்குறிப்புக்களால் தொல்காப்பியர், காக்கைபாடினியார், யாப்பருங்கலத்தார் ஆகியோர் காலங்களில் கலி வெண்பா என்பதும் வெண்கலிப்பா என்பதும் வேறு பாடின்றி ஒரே வகைப்பாவுக்குரிய பெயராகவே வழங்கின என அறியலாம். பெயர்வகையால் இரண்டுக்கும் வேறு பாடில்லை எனினும் தொல்காப்பிய உரையாசிரியர்க

41. யாப்-விருத்தி நூ. 85 உரைமேற்கோள்
42. யாப். விருத்தி-செய். நூ. 32
43. யாப், விருத்தி-செய். நூ 32 உரைவிளக்கம்

ப்பாவுக்கு இருவகையாகவே விளக்கம் தந்துள்ளனர் ன்பதும் நினையத்தகும். யாப்பருங்கல விருத்தியுரை, கலிவெண்பாவுக்குத் தனி இலக்கணத்தையும், வெண் லிப்பாவுக்குத் தனி இலக்கணத்தையும் தந்தது. எனினும் ிருத்தியுரையாசிரியர் பழஞ்சுவட்டை மாற்றாது இரண்டும் ன்றே எனவும் கூறினர்.

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் 'ஈற்றடி கலி யாசை கொண்டு, வேற்றுத்தளை தட்டு முச்சீரால் இறு னவும் வெண் கலிப்பா என்று வழங்கப்படும்' என மாழிந்துள்ளமையால், கலியோசை கொண்டு, கலித் ளைதட்டு கடையடி வெண்பாவைப்போல முச்சீரடியால் றுவது கலிவெண்பா என்றும், ஈற்றடி கலியோசை தழுவி வற்றுத்தளை தட்டு முச்சீரால் இறுவது வெண்கலிப்பா ன்றும் பாகுபடுத்தினர் எனலாம். யாப்பருங்கலக் காரிகை ரையாசிரியரும் கலித்தளை தட்டுக் கலியோசை தழுவியது வண்கலிப்பா என்றும், வெண்தளை தட்டு வெள்ளோசை ழுவியது கலிவெண்பா என்றும் இருவகைப்படுப்பர்[44].

பொதுநிலையில் இவ்விருவகைப் பெயராலும் குறிப் ப்பெற்ற பாவகை தொடக்க காலத்தில் வேறு ாடின்றி வழங்கிடினும், தளைவகையாலும், பொருள்வகை ாலும், ஓசைவகையாலும் பிற்காலத்தில் வேறுபாடுற் மை நினையத்தகும்.

கலிவெண்பாவையும் வெண்கலிப்பாவையும் இரு வறு பாவகையாகப் பிரித்துத் தனித்தனியே இலக்கணம் றிய முதல்நூல் கி. பி. 11ஆம் நூற்றாண்டிலெழுந்த ீரசோழியமேயாகும்.[45]

வீரசோழிய ஆசிரியர், கலிவெண்பா தன் பெயரமைப் ால், வெண்பாவின் வகையுள் ஒன்றாகுமெனவும், வெண்

4. யாப். காரிகை. நூ. 40 உரைவிளக்கம்
5. நேரிசையே நீண்டிசையாம் கலி-வீர. நூ. 112
இறுதி சிந்தாய்த் திண்ணிய நேரடியால் வரும் வெண்கலி-வீர. நூ. 113

கலிப்பா தன் பெயரமைப்பால் கலிப்பாவின் வகை ஒன்ருகுமெனவும் குறிப்பிடுவர்.

ஒருபாவகை காலப்போக்கில் இருவேறு பாவகைகளாக வளர்ச்சி பெற்ற நிலையை இதனுல் அறியலாம் உரைக் குறிப்பில் இருவேறு வகையினவாக இப்பாவை குறித்த பேராசிரியர், நச்சினுர்க்கினியர் ஆகியோர், காம பொருள் நுதலிப் பாவகை சிதைந்து வரும் கலிவெண்ப காமப்பொருள் நுதலித் தளைவகை சிதைந்து வரு கலிவெண்பா, ஒருசார் தேவபாணியாக வரும் கலிவெண் விரவு உறுப்புடைய கலிவெண்பா எனக் கலிவெண்பாவி பலவகை வேறுபாடுகளைச் சுட்டியுள்ளதும் குறிக்கத்தகும்

கலிவெண்பாட்டுக்கு அடிவரையறை இல்லை; அ வேண்டியவாறே வரப்பெறும் இதனை,

கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை என்றிவை
தொகைநிலை மரபின் அடிநிலை என்ப[47]

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலா யாப்பருங்கல உரையுள் நான்கடி கொண்ட கலிவெ பாக்கள் மேற்கோட் செய்யுட்களாகச் சுட்டப்பட்டுள்ள யால் இதற்கு, நான்கடி அளவைக் கீழெல்லையா கொள்ளலாம். நான்கடிச் சிறுமையும், உள்ளக் கரு தினளவே பெருமையுமாய்ப் பெற்றுக் கலிவெண்பா வரு என்பது இதனுல் பெறப்படும்.

சங்கஇலக்கியத் தொகுதியுள் கலிப்பாவ அமைந்த தனி இலக்கியத்தொகுதி கலித்தொ இதனுள், கலிவெண்பா யாப்பிலமைந்தவை எட்டுப்பாட களே. நச்சினுர்க்கினியரும் 'நூற்றைம்பது கலியுட் க வெண்பாட்டு எட்டு; அவற்றுள் ஒருபொருள் நுத வருவனவற்றின் பொருள் வல்லார்வாய்க் கேட்டுணர் என இவ்வெண்ணிக்கையைக் குறிப்பர்[48]. கலிவெ

46. தொல். செய். நச்சி. நூ. 153 உரை விளக்கம்
47. ,, ,, நூ. 160
48. தொல். செய். நச்சி. நூ. 153 உரைவிளக்கம்

_டு எட்டினுள், நான்கு[49] வெண்பா இயலில் உள. ன்று[50] பெரும்பான்மை வெண்பாவியலாலும் றுபான்மை ஆசிரியவியலால் ஆசிரியத்தளை பெற்றும் ளை. ஒன்று[51] வெண்டளை ஆசிரியத்தளை, கலித்தளை பூகியனவற்றைப் பெற்றது. 'வெள்ளடியியலால் திரிபின்றி மடிவது கலிவெண்பாட்டு' என்று வரையறை செய்யப் பட்ட தொல்காப்பிய விதி சங்க காலத்திலேயே வழுவத் லைப்பட்டதை இதனுல் அறியலாம்[52].

சிலப்பதிகாரத்துள் கலிவெண்பாவாக அமைந்த குதிகள் கனுத்திறமுரைத்த காதை, வஞ்சினமாலை என)ரண்டு. கனுத்திறமுரைத்த காதையுள் வெண்பாவுக் ரிய வெண்டளைகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. பூயினும், வஞ்சினமாலையுள் இரண்டிடங்களில் ஒன்ருத ஞ்சித்தளையும் ஓரிடத்தில் கலித்தளையும் அமைந் துள்ளன. சிலம்பில் பயின்ற கலிவெண்பாவைக் குறிப் பிடுங்கால் 'வெண்பா இலக்கணப்படி 57 அடிகளாலாய பஞ்சின மாலையின் முழுப்பகுதியும் அமைந்துள்ளது' ன்றும், 'கலிவெண்பா யாப்பமைந்த பகுதியாகச் சிலம்பில் பஞ்சினமாலை ஒன்று மட்டுமே உள்ளது' என்றும் டாக்டர் அ. சி. செட்டியார் குறிப்பிடுவர்[53].

வஞ்சினமாலையுள் பிறதளையும் ஒரோவழி வந்தமை ாலும், கலிவெண்பா யாப்புக்குரியனவாய் இரு பகுதிகள் _ள்ளமையாலும் அவர் கூற்று பொருந்தாது.

வஞ்சினமாலையுள் கலித்தளையும், ஒன்ருத வஞ்சித் தளையும் அமைந்திருப்பதை நோக்க வெள்ளடியியலால்

49. கலி. 6 18 24 51
50. கலி. 37 65 111
51. கலி. 12
52. Thus Kalithokai discloses a tendency to deviate slightly though unwittingly from the rule of Tolkappiyar which requires this type to be in the nature of venpa - Advanced Studies in Tamil Prosody Dr. A. C. Chettiar, P. 116
53. Advanced Studies in Tamil Prosody- Dr. A. C. Chettiar P. 116

திரிபின்றி முடியும் கலிவெண்பாட்டின் இலக்கணம் ச
காலத்தில் கலித்தொகையுள் வழுவியுள்ளது போன்
சங்கமருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரத்துள்
வழுவியுள்ளது அறியலாம்.

(கனாத்திறமுரைத்த காதையுள் கனவுப் பொருண்மையு
வஞ்சினமாலையுள் வஞ்சினப் பொருண்மையும் அமை
திருத்தலால் 'ஒரு பொருள் நுதலும்' இலக்கணம் பொருந்
யிருப்பினும், 'வெள்ளடி இயலால் திரிபின்றி முடியு
இலக்கணம் வழுவியுள்ளது. எனினும் இளம்பூரண
கருத்துப்படி இக்கலிவெண்பாக்கள் தொல்காப்பி
இலக்கணத்திற்கு ஏற்புடையனவேயாம். அவர் கூறும் இ
வகைப் பிரிவுகளில் பிற தளையாலும் வந்து ஈற்றடி மு
சீராய் முடிந்த கலிவெண்பாக்களாக இவற்றைக் கொள்
லாம்.) அல்லது, 'வெண்டளை தன்றளை என்றிரு தன்
யின் வெண்பா இயலதாய்' வந்த வெண்கலியாகக் காக்
பாடினிய இலக்கணப்படியும் இதனைக் கொள்ளு
பிழையன்று.

உறழ்கலி

கலிப்பாவின் நால்வகையுள் உறழ்கலி என்பது
ஒன்று. பாண்டியன் அவைக்களத்தைச் சார்ந்
பாண்டிய மன்னன் அறிவறைபோகிய நெஞ்சினனு
இறைமுறை பிழைத்தோனாய்க் கோவலனை ஆராய
கொன்றான் எனக் கண்ணகி வழக்காடி வெற்றி பெ
பொருண்மையைக் கொண்ட வழக்குரை காதை உறழ்
என்னும் பாவகையாலமைந்தது.

(இப்பாவகை தொல்காப்பியரால் மட்டுமே சுட்டப்பட்
பாவகை. காக்கைபாடினியத்துள்ளும் பிற யாப்பிலக்க
நூல்களுள்ளும் இப்பாவகையிலக்கணம் இயம்ப
பெறவில்லை.)

தொல்காப்பியர் உறழ்கலியின் இலக்கணத்தை,

கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே'[54]

னவரும் நூற்பாவால் விளக்குவர். உறழ்கலி கூற்றும் ற்றமுமாக இடையிடை மிடைந்து வருதல் வேண்டும்; றழ்கலி போக்கு அல்லது சுரிதகம் இன்றி முடிதல் வண்டும் என இந்நூற்பாவின் மூலம் உறழ்கலிக்குரிய ன்றியமையா இருவிலக்கணங்களைக் குறிப்பிடுவர்.

இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் கருத் ப்படி, உறழ்கலி, இந்நூற்பாவுக்கு முன்னுள்ள நூற் வில் இலக்கணம் கூறப்பெற்ற உறுப்புக்களைப் பெற்று நம்.[55] அவையாவன, தரவுபெற்று வருதல், பாட்டிடை டைதல், ஐஞ்சீரடுக்கி வருதல், ஆறுமெய் பெற்று நுதல், பாமயங்கி வருதல், அம்போதரத்துக்குரிய ளவைப் பெறுதல் ஆகியவை.

உறழ்கலிக்குச் சுரிதகம் இல்லை என்பது தொல் ப்பிய விதியாயினும், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் து சிறுபான்மை போக்கிலக்கணம் பெறாத ஆசிரியச் தகம் பெற்றும் வரும் என்பர்[56]. மேலும் நாடகச் செய்யுள்

ால். செய். இளம். நூ. 149

இதனைக் கொச்சகக் கலியின் பின்வைத்தமையால் அக்கொச்சக றுப்பினெப்பன இதற்கு உறுப்பாகக் கொள்ளப்படும்-தொல். செய் ளம். நூ. 149 உரைவிளக்கம்

க்கின்று எனவே தரவு பெறுதலும் பாட்டிடை மிடைதலும் ஞ்சீரடுக்கலும் ஆறு மெய் பெறுதலும் ஒழிந்த சொற்சீரடி றுதலும் பாமயங்கி வருதலும் அம்போதரங்கத்திற்கோதிய ளவைப் பெறுதலுமெல்லாம் வெண்கலிப்பாட்டிற்குப் போல மனின்ற அதிகாரத்தாற் பெறப்படுவதாயிற்று'-தொல்.செய்.பேரா. நூ. 156 உரைவிளக்கம்

'போக்கின்றெனவே ஒழிந்த உறுப்புக்களெல்லாம் கலிவெண் பாட்டிற்கு ஓதியவாறே வருமென்பதும், பாமயங்கி வருமென்பதும், அம்போதரங்கத்தினளவே அளவென்பதும் மேனின்ற அதிகாரத்தாற் பெற்றாம்'-தொல். செய். நச்சி. நூ. 156 உரைவிளக்கம்

இயல்பின்றி விகாரவகையாற் சிலபோக்குடையவுமாம் என்றாலும்- தொல். செய். நூ. 156-பேரா. உரைவிளக்கம்

இயல்பெனவே, இயல்பன்றி விகாரவகையாற் சில போக்குடைய வாதலும் - தொல். செய். நச்சி. நூ. 156 உரைவிளக்கம்

போல வேறுவேறு துணிபொருளவாகிய பல தொடர் வேறுபாடு நோக்கியும்....' எனவரும் நச்சினார்க்கின் உரைக் குறிப்பால்[57] கூற்றும் மாற்றமுமாக நாட செய்யுள்போல இப்பாவகை அமைதல் வேண்டும் எ பதும் பெறும்.

இப்பாவகை பெற்றுவரும் உறுப்புவகைகளை நோ இளம்பூரணர் கருத்துப்படி கொச்சகக் கலியாகவே பேராசிரியர் நச்சினார்க்கினியர்தம் கருத்துப்படி வெண்பாவாகவோ அடக்கிக் கொள்ளலாம் எனினு கூற்றும் மாற்றமுமாக இடையிடைமிடைந்து நாட செய்யுள்போல வரும் பொருள் வேறுபாடு கருதி, இ தனியொரு பாவகையாகத் தொல்காப்பியரால் சுட் பட்டிருத்தல் கூடும்.

கலித்தொகையில் உறழ்கலிக்கு உரியனவாக பாடல்கள்[58] இடம் பெற்றுள. கலித்தொகைக்குப் பின் உறழ்கலியைக் கையாண்ட புலவர் இளங்கோவடிக யாவர். சிலம்புக்குப் பின்னர் இவ்வுறழ்கலி என் பாவகை தனித்து வளர்ச்சியடையவில்லை.

இதன் பொருண்மையும் இலக்கண அமைப்பும் காலத்தில் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா அ பொருளால் வேறுபட்ட கொச்சகவொருபோகு பாவகைகளோடு ஒத்தனவேயாம். தொல்காப்பி பின்னர் வந்த காப்பியர்களும் இலக்கியர்க என்னும் பாவகையைப் போற்றாமையால் த லுலகில் உறழ்கலி வழக்கிழந்தது.

இளங்கோவடிகளால் தொல்காப்பியத்தைப் அமைக்கப்பெற்ற பாவகை இதுவாகும். வழக்குரை காதையின் தொடக்க முதலே கூற் முமாக அமையாது, கோப்பெருந்தேவியின்

57. தொல். செய். நச்சி. நூ- 156-உரைவிளக்கம்
58. கலி. 87 91

மை விளக்கப் பகுதிகள் அமைந்துள்ளமையால்
்கில் காண்பார்க்கு அது மயங்கிசைக் கொச்சகக்
ு தோற்றத்தைத் தந்தது. ஆதலின் யாப்பருங்
போன்ற பிற்கால இலக்கணிகள் உறழ்கலிக்கு
கூறுது விடுத்தனர் போலும்!

ுரை காதையாகிய உறழ்கலியில் தனிச்சொல்,
அம்போதரங்கம் போக்கிலக்கிணம் பெருத
சிரியச் சுரிதகம், கூற்றும் மாற்றமுமாயமைந்த கொச்
கம் அல்லது பாட்டுப் பகுதிகள் ஆகியவை இடம்
ற்றுள.

கொச்சகம் அல்லது பாட்டுப் பகுதியுள் வஞ்சித் தளைகள்
ரண்டனையும் தவிர எஞ்சிய தளைகள் அனைத்தும்
டம் பெற்றுள்ளன. தாழிசையுள்ளும் போக்கிலக்கணம்
ருத சுரிதகத்துள்ளும் மட்டுமே கூடுதல் மூன்றிடங்
ரில் வஞ்சித்தளைகள் இடம் பெற்றுள்ளன. எஞ்சிய
ழிசைகளுள்ளும் அத்தளைகள் இடம் பெறவில்லை.

தாழிசைகளுள் முதலில், ஒருபொருள்மேல் மூன்
டுக்கிய நாற்சீர் ஈரடித் தாழிசைகள் உள. கருப்பம்
ற தலைப்பிலமைந்த தாழிசையுள் ஐஞ்சீரடியும்
கியலடியும் அமைந்துள்ளன. எனவே தொல்காப்பியர்
றிய உறழ்கலியின் இலக்கணப்படி, இளங்கோவடிகள்
வழக்குரைகாதையை அமைத்துள்ளார். இப்பகுதியை
றழ்கலி என்னும் பாவகையாகச் சுட்டிய பெருமை
ட்டைக்காப்பியப் பதிப்புக்கு உரியது.

ருழிசைக் கொச்சகக் கலிப்பா

சிலப்பதிகார வேட்டுவ வரியுள் முன்றிற்சிறப்பு
ன்னும் தலைப்பில் 'நாகநாறு நரந்தை நிரந்தன' எனத்
தொடங்கும் பகுதி முதலாக, வென்றிக் கூத்து என்னும்
லைப்பிலமைந்த 'குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே'

எனமுடியும் பகுதி வரை பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் பாவகையாகும்.

தொல்காப்பியர், இப்பாவகையை இப்பெயரால் குறிப்பிடாது, தரவின்றாகித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என்னும் பெயரால் கொச்சகவொருபோகின் ஒரு வகையாகக் குறிப்பிடுவர். தொல்காப்பியர், கொச்சகவொருபோகின் இலக்கணத்தை,

தரவின் ருகித் தாழிசை பெற்றும்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னம் குன்றியும்
அடக்கிய லின்றி அடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகும் என்ப[59]

எனவரும் நூற்பாவால் உணர்த்துவர். தரவின்ருகித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என்னும் பாவகைக்குள் காக்கைபாடினியர் யாப்பருங்கலத்தார் ஆகியோர் குறிப்பிடும் சிஃருழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகியவற்றை அடக்கிக் கூறுவர் தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய பேராசிரியரும்[60] நச்சினர்க்கினியரும்.[61] இளம்பூரணர், பிற்காலத்தார் கூறும் இப்பாவகைகளைத் தொல்காப்பியர் கூறும் வகையுள் அடக்கிக் கூறவில்லை.

59. தொல். செய். இளம். நூ. 143

60. 'பஃருழிசைக் கொச்சகமெனவும் அமையும். அவை சில வருவன சிஃருழிசைக் கொச்சகமெனப்படும்'-தொல். செய். பேரா. நூ. 149 - உரை விளக்கம்.

61. 'இவ்வாறு பல தொடர்ந்துவரிற் பஃருழிசைக் கொச்சகமென்றும் மூன்று தாழிசை வரிற் சிஃருழிசைக் கொச்சகமென்றும் கூறவமையும்.' -தொல், செய். நச்சி. நூ. 140 உரைவிளக்கம்

காக்கைபாடினியார், கொச்சகக் கலிப்பாவின் வகைகளை விரிவாக விளக்கி[62], 'எருத்தியலின்றி இடைநிலை பெற்றுவந்த கொச்சகம்' என்னும் பெயரால் இப்பாவகையை மொழிவர். அவிநயனார்[63], மயேச்சுரர்[64], யாப்பருங் கலத்தார்[65], யாப்பருங்கலக் காரிகையார்[66] ஆகிய யாப்பிலக் கணிகள் இப்பாவகையைப் பஃறாழிசைக் கொச்சகம் என இயம்புப.

---

62. எருத்தியல் இன்றி இடைநிலை பெற்றும்
இடைநிலை இன்றி எருத்துடைத் தாயும்
எருத்தம் இரட்டித் திடைநிலை பெற்றும்
இடைய திரட்டித் தெருத்துடைத் தாயும்
இடையும் எருத்தும் இரட்டுற வந்தும்
எருத்தம் இரட்டித் திடைநிலை ஆறாய்
அடக்கியல் காறும் அமைந்த உறுப்புக்
கிடக்கை முறைமையிற் கிழமைய தாயும்
தரவொடு தாழிசை அம்போ தரங்கம்
முடுகியல் போக்கியல் என்றிவை எல்லாம்
முறைதடு மாற மொழிந்தவை யின்றி
இடையிடை வெண்பாச் சிலபல சேர்ந்தும்
மற்றும் பிறபிற ஒப்புறுப் பில்லன
கொச்சகம் என்னும் குறியின ஆகும்-யாப். விருத்தி-செய். நூ. 33-
உரைமேற்கோள்

63. தரவே யாகியும் இரட்டியும் தாழிசை
...வும் பலவும் மயங்கியும் பாவே
...த்தா ழிசைக்கலிக் கொவ்வா உறுப்பின
...ச்சகக் கலிப்பா ஆகும் என்ப-யாப். விருத்தி. செய். நூ. 33
...மேற்கோள்

64. ...ய தரவிணை தாழிசை சிலபல
...முறை பிறழ அயற்பா மயங்கியும்
...சொற் பலவாய் இடையிடை நடந்தவும்
...ழிசைக்கலி உறப்பினிற் பிறழ்ந்தவும்
...ந்தவழி முறையால் வண்ணகச் சிறுவாய்
...கி வந்தவும் இயங்குநெறி முறைமையிற்
...சகக் கலியெனக் கூறினர் புலவர்-யாப். விருத்தி. செய். நூ. 33.
...மேற்கோள்

65. ...வ தரவிணை தாழிசை தாமும்
...ம் பலவும் சிறந்து மயங்கியும்
...றும் விகற்பம் பலவாய் வருநவும்
...ாச்சகம் என்னும் குறியின ஆகும்-யாப். விருத்தி நூ. 86.

66. ...ப். காரிகை நூ. 42.

வேட்டுவ வரியுள் அமைந்த இப்பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா, ஒருபொருள்மேல் மூன்றடுக்கிய தாழிசைகள் மூன்றும், பின்னர் இடைமடக்கி ஒருபொருள் மேல் அடுக்கிவந்த தாழிசைகள் மூன்றும், மீண்டும் ஒரு பொருள் மேல் அடுக்கிய தாழிசைகள் மூன்றும், பின்னர்த் தனிச் சொல்லும், இறுதியில் நான்கடியாலாய நிலைமண்டில ஆசிரியச் சுரிதகமுமாக அமைந்துள்ளது. இப்பாவகையைத் தொல்காப்பிய விதிப்படி, தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என்றே, காக்கைபாடினிய விதிப்படி எருத்தியலின்றி இடைநிலை பெற்ற கொச்சகக் கலிப்பா என்றே கொள்ளலாம். பிற்கால யாப்பிலக்கணிகள் இப் பாவகையையே பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் பெயரால் குறித்தனர்.

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு

(யாப்பினுல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு என்னும் பாவகை, சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை, துன்ப மாலை, குன்றக்குரவை முதலிய பகுதிகளில் உள்ளது. ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை ஆகியவற்றில் இரண் டிரண்டு பாடல்களும், குன்றக்குரவையுள் ஒரு [illegible] டலு மாக ஆக ஐந்து பாடல்கள் இவ்வியாப்பு வகைக்[illegible]வன.

கொச்சகவொருபோகின் வகைகளாகத் தொல்[illegible]பியர் குறிப்பிட்ட ஆறனுள் ஐந்தாவதாக அமைந்[illegible]ாப்பு வகையே யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொ[illegible]ாகு. யாப்பினுல் வேறுபட்டு வருதல் பலவகையாகும். [illegible]னப் பேராசிரியர் விரிவுற விளக்கியுள்ளார்.) 'ய[illegible]ன் வேறுபடுதலென்பது மேற்சொல்லினவாறு[illegible]னி வருகின்றவாறுமின்றி யாப்பிலக்கணத்தின் வேறு[illegible]ல்; அவை இருசீர் முதலாக எண்சீர்காறும் வந்த [illegible]மற் கூறியவாறன்றி நந்நான்கே பெற்று வருதலும் அ[illegible]ுட் பிற அடி விராய் வருதலும் பா மயங்கி வருதலும் இ[illegible]டும்

மூன்றும் நான்கும் ஆகிய அடியுள் ஈற்றடி குறைதலும் குறையாத வழி இயலசைச் சீர் வருதலும் மூன்றடியாயிற் குறையாது வருதலும் நான்கடிச் செய்யுள் முடியவும் அடியிரண்டு மிகுதலும் இனவியலின் வேறுபடுதலும் கடவுட்டொடர்நிலைகள் பல தரவுந் தாழிசையுமாகி இடையிடைச் செய்வனவும், அடக்கியலின்றி அடிப்பட நிமிர்ந்தொழுகுமெனப்பட்ட அடக்கியலுடைத்தாகலும் என்று இன்னோரன்ன பல பகுதியும் கொள்ளப்படும்' என்பது பேராசிரியர் விளக்கம்[67].

நச்சினார்க்கினியரும் யாப்பினால் வேறுபடுதல் என்பதைப் பேராசிரியரைவிட மேலும் விரிவாக விளக்கி யுள்ளார். உரையாசிரியர்களின் இக்குறிப்புக்களால் கலிப்பாவின் வகையில் எந்தவொரு பாவிலக்கணத்தோடும் பொருந்தாது வரும் யாப்பு வடிவங்களை யாப்பினால் வேறு பட்ட கொச்சகவொருபோகு எனக் குறித்தமை அறியலாம். உறுப்பு வகையால் குறைந்தும், யாப்பு வகையால் பலவகை வடிவங்கள் பெற்றும் இப்பாவகை வரும்.

ஆய்ச்சியர் குரவையுள் கொளு என்னும் பகுதியில் 'காரி கதனஞ்சான்' எனத் தொடங்கும் பகுதி முதல் எடுத்துக்காட்டு என்னும் தலைப்பில் 'விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே' என முடியும் பகுதிவரை கொச்சகங் களும் தனிச்சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்று முடிந்த யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகையாகும்.

அடுத்து, ஆய்ச்சியர் குரவையுள் 'மாயவனென்றாள்' எனத் தொடங்கும் பகுதி முதல் 'பின்றையைப் பாட்டெடுப் பாள்' என முடியும் பகுதி வரை கொச்சகம், தனிச்சொல் கொச்சகம், தனிச்சொல், கொச்சகம், தனிச்சொல்

67. தொல். செய். பேரா. நூ. 149-உரைவிளக்கம்

வெள்ளைச்சுரிதகம் ஆகிய உறுப்புக்களைப் பெற்றுவந்த யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகாகும்

துன்பமாலையுள், தொடக்கமுதல் 'சொல்லாடும் சொல் லாடுந் தான்' என முடியும் பகுதிவரை, யாப்பினுல் வேறு பட்ட கொச்சக வொருபோகு. இது,தனிச்சொல், கொச்சகம், தனிச்சொல், வெள்ளைச்சுரிதகம் ஆகிய உறுப்புக்களைப் பெற்று விளங்குகின்றது.

துன்பமாலையுள் 'எல்லாவோ' எனத் தொடங்கும் பகுதி முதல் இறுதிவரை முறையே தனிச்சொல், கந்திருவ மார்க்கத்தான் இடைமடக்கி வந்த தாழிசைகள், தனிச் சொல், கொச்சகம், தனிச்சொல், கொச்சகம், தாழிசைகள், தனிச்சொல், கொச்சகம் ஆகிய உறுப்புக்களைப் பெற்று வந்த யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகையைக் காண்கின்றோம்.

குன்றக்குரவையுள்ளும், கொச்சகம், உரைத் தொடர், தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்களைப் பெற்ற யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகை, தொடக்கமுதல் 'பெருமலை துஞ்சாது வளஞ் சுரக்கெனவே' என முடியும் பகுதியீருக அமைந்துள்ளது.

இங்ஙனம், சிலப்பதிகாரத்தில் பலவிடங்களில் அமைந்த இப்பாவகை தொல்காப்பியரால் கொச்சகவொரு போகின் வகையுள் ஒன்ருகச் சுட்டப்பட்டது. தொல் காப்பியர் கூறும் இலக்கணங்களுக்கேற்ப இளங்கோவடி களும் இப்பாவகையை அமைத்துள்ளார். காக்கை பாடினியார் மற்றும் பிற யாப்பிலக்கணிகள் இத்தகைய யாப்பு வகையைச் சுட்டவில்லை.

தொல்காப்பியர் கொச்சகவொருபோகின் இலக்கணம் கூறும் நூற்பாவையடுத்து,

*'ஒருபான் சிறுமை இரட்டியதன் உயர்பே'*68

என்ற நூற்பாவைக் கூறுவர். இளம்பூரணர், மேலே சுட்டிய கொச்சகவொருபோகுக்குரிய அடியளவை உரைப்பது இந்நூற்பா என்றுரைத்து, பத்தடிச் சிறுமையாகவும் இருபதடிப் பெருமையாகவும் இது வரும் என்பர். கொச்சகவொருபோகின் வகைகள் அனைத்திற்கும் இந்த அடியளவு உரியதா, அன்றி, யாதானும் ஒரு வகைக் குரியதா என்பது இளம்பூரணருரையில் தெளிவாகச் சுட்டப்படவில்லை. எனினும், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோர் இங்கு வரையறுக்கப்பட்ட அளவுநிலை கொச்சக வொருபோகினுள் ஒன்றாகிய அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகும் கொச்சகவொருபோகுக்குரியது என்பதைத் தெளிவிப்பர். எனவே சிலம்பில் பயின்ற யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் இப்பாவகைக்கு வரையறுக்கப்பட்ட அடி யளவுநிலை இல்லை என்பது போதரும்.

தரவு கொச்சகக் கலிப்பா

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையுள் ஆடுநர்ப் புகழ்தல் என்னும் தலைப்பிலமைந்த பாடல் தரவு கொச்சகக் கலிப்பா என்னும் பாவகையாம். 'மாயவன்றம் முன்னினொடும்' எனத் தொடங்கும் பகுதிமுதல் 'உள்வரிப் பாணி யொன்றுற்று' என முடியும் பகுதியீறாக இப்பாவகைப் பாற்படும்.

தொல்காப்பியர் தரவுகொச்சகக் கலிப்பா என்னும் பாவகையைத் தனியே பெயர் சுட்டி, இலக்கணம் கூற வில்லை. எனினும் அவர் கூறிய 'தாழிசையின்றித் தர வுடைத்தாகி வரும் கொச்சகவொருபோகு' என்பதை

68. தொல். செய். இளம். நூ. 144

விளக்கும் பேராசிரியரும்[69] நச்சினார்க்கினியரும்[70] பிற்கால யாப்பிலக்கணிகள் கூறும் தரவு கொச்சகக் கலிப்பாவும், தரவிணைக் கொச்சகக் கலிப்பாவும் இப்பாவகையுள் அடங்கும் என விளக்குப.

தொல்காப்பியர் மட்டுமின்றிக் காக்கைபாடினியாரும் இப்பாவகையின் பெயரைத் தரவு கொச்சகக் கலிப்பா எனக் குறிப்பிடவில்லை. 'இடைநிலையின்றி எருத்துடைத்தாய் வந்த கொச்சகக் கலி' என்றே காக்கைபாடினியார் இப்பாவகையைக் கூறுவார். எனினும் அவிநயர், மயேச்சுரர் யாப்பருங்கலத்தார், காரிகையார், வீரசோழியத்தார் முதலியோர் தரவு கொச்சகக் கலிப்பா என்னும் பெயரால் இதனையுரைப்பர்.

சிலப்பதிகாரத்துளமைந்த தரவு கொச்சகக் கலிப்பாவில் நான்கடித்தரவு ஒன்றும் தனிச்சொல்லொன்றும் ஈரடியாலாய குறள்வெண்பா யாப்பமைந்த வெள்ளைச் சுரிதகமொன்றும் இடம் பெற்றுள்ளன. இப்பாவகை, பேராசிரியர் நச்சினார்க்கினியர் கருத்துப்படி தொல்காப்பியர்கூறிய தாழிசையின்றித் தரவுடைத்தாகி வரும் கொச்சக வொருபோகாகவோ, காக்கைபாடினியார் கூறும் 'இடைநிலையின்றி எருத்துடைத்தாய் வந்த கொச்சகக் கலி'யென்றே கொள்ளுதற்கு உரியதாகும். இப்பாவகையையே பிற்காலத்தார் தரவு கொச்சகக் கலிப்பா என்னும் பெயரால் கூறுப.

69. மேல் தரவின்றாகி என்றதுபோல் ஈண்டுந் தாழிசையின்றி என்றதனால் தாழிசையொடுபட்ட தரவிலக்கணத்தில் திரிந்து வரும் இத்தரவெனக் கொள்க. அது தரவு கொச்சகமும், தரவிணைக் கொச்சகமுமென இரண்டாய் வருதலும் நான்கும் ஆறும் எட்டுமாய் வருதல் கடப்பாடின் றென்பதும் கொள்க - தொல். செய். பேரா. நூ. 149-உரைவிளக்கம்

70. ஆகியுமென்றதனால் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றும் பெறாதும் வருதலும் பெரும்பான்மை இரண்டிணைதலும் கொள்க. அவை தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்ற தரவு கொச்சகம், தரவிணைக் கொச்சகமெனப் பெயர் கூறப்படும்-தொல். செய், நச்சி. நூ. 149-உரைவிளக்கம்

மயங்கிசைக் கொச்சக கலிப்பா

யாப்பருங்கல ஆசிரியர் கொச்சகக் கலியின் வகையுள் ஒன்ருக மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவைக் குறிப்பர். சிலப்பதிகாரத்துள் மங்கல வாழ்த்துப் பாடலும் ஊர்சூழ் வரியும் இப்பாவகையின் இலக்கணப்படி அமைந்தவை.

தொல்காப்பியர் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் பாவகையைத் தனியே பெயர் சுட்டி இலக்கணம் கூறவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களும் இப்பா வகையைத் தொல்காப்பியர் கூறும் எந்தவொரு பாவகை யோடும் இயைபுடையதெனச் சுட்டவில்லை. எனவே தொல்காப்பியரால் முற்றிலும் கூறப்படாததாகவே இம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா அமையும்.

காக்கைபாடினியார் மயங்கிசைக் கொச்சகக் கலிப் பாவின் இலக்கணத்தைப் பின்வருமாறு கூறுவர்.

தரவொடு தாழிசை அம்போ தரங்கம்
முடுகியல் போக்கியல் என்றிவை எல்லாம்
முறைதடு மாற மொழிந்தவை யின்றி
இடையிடை வெண்பாச் சிலபல சேர்ந்தும்
மற்றும் பிறபிற ஒப்புறுப் பில்லன
*கொச்சகம் என்னும் குறியின வாகும்*71

அவிநயனுர், மயேச்சுரர், யாப்பருங்கலத்தார், காரிகையார், ஆகியோரும் கொச்சகக் கலியுள் ஒன்ருகிய இம்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவிற்குரிய இலக்கணங்களை இயம்புப. எனவே சிலப்பதிகாரத்துள் அமைந்த மயங்கிசைக் கொச் சகக் கலிப்பாக்கள் காக்கைபாடினிய இலக்கணத்தைத் தழுவி எழுந்தனவாம். யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் இப்பாவில் பயின்றுவரும் மயக்கம் அல்லது முறை தடுமாற்றத்தை விரிவாக விளக்குவர். 'கலிக்கு ஓதப்பட்ட உறுப்பெல்லாம் குறைவின்றிக் கலியது தன்மை பெற்ற

71. யாப்-விருத்தி. செய். நூ. 33-உரைமேற்கோள்

உறுப்புக்கள் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும்' வண்ணமும் அடியும் தொடையும் மயங்கியும் அராகஅடி அந்தாதித்தொடை தொடுத்தும், அத்தொடை பலவாய் வந்தும், கலிக்கண் வாரா என்ற நேரீற்று இயற்சீர் வந்தும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் வந்தும், ஐஞ்சீரடி வந்தும், முச்சீராலும் இருசீராலும் அம்போதரங்க உறுப்புப் பெற்றும் இவ்வாறு ஒத்தாழிசைக் கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவன எல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும் வழங்கப்படும் என்றவாறு'[72] என யாப்பருங்கல விருத்தியாசிரியர் கூறும் விளக்கம் விரிவுடையது.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவிற்குரிய மயக்கங்களும், யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகுக்குரிய வேறுபாடுகளும் ஏறத்தாழ ஒத்தனவாக இருப்பினும், உறுப்புக்களின் முறைமாற்றம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனவும், யாப்புவகையின் வேறுபாடு யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு எனவும் கொள்ளப்படும் என்ப.

மங்கலவாழ்த்துப் பாடலாகிய மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா தனிச்சொல் ஒன்றேடு தொடங்கி ஆறடித் தரவும் பின்னர்த் தனிச்சொல்லும் தாழிசையும் இடையிடை வந்து, அராக உறுப்பும் இறுதியில் இருபத்தொரு அடிகளாய ஆசிரியச் சுரிதகமும் பெற்று அமைந்தது.

ஊர்சூழ்வரி, வெண்பா அடியும் ஆசிரிய அடியும் வந்து மயங்கி, தாழிசை, தரவு, சுரிதகம், தனிச்சொல் ஆகிய உறுப்புக்கள் மயங்கியும் பிறழ்ந்தும் வந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகும்.

குறளடி வஞ்சிப்பா

வஞ்சிப்பா, பெற்றுவரும் சீர்களின் அமைப்பால் குறளடி வஞ்சிப்பா எனவும், சிந்தடி வஞ்சிப்பா எனவும்

72. யாப். விருத்தி. செய். நூ. 33-உரைவிளக்கம்

இருவகைப்படும் என்பர் பிற்காலத்தார். மூவசைச்சீர்கள் அறுபத்து நான்கனுள் காய் என்று முடியும் வெண்சீர் நான்கும் ஒழித்து எஞ்சிய அறுபது மூவசைச் சீர்களும் வஞ்சிப் பாவிற்குரியவை என்றும்[73], வஞ்சிப்பாவினுள் இவ்வறுபது மூவசைச்சீர்களேயன்றி எஞ்சிய சீர்களும் வரப்பெறும் என்றும்[74], வஞ்சிப்பாவின் இறுதி, ஆசிரியப்பாவைப் போல ஈற்றயலடி முச்சீராலும் நாற்சீராலும் வரப்பெறும் என்றும்[75] வஞ்சிப்பாவின் அடிகள் இருசீராலும் முச்சீராலும் வரப்பெறும் என்றும்[76] தொல்காப்பியர் வஞ்சிப்பாவின் இலக்கணங்களைக் கூறியுள்ளார். இளம்பூரணரும் இவ்விலக்கணங்களைத் தொகுத்துரைக்கும் முறையில் 'இனி வஞ்சிப்பா ஆவது வஞ்சியுரிச்சீராலும் ஏனைச்சீராலும் இருசீரடியாலும் முச்சீரடியாலும் தூங்கலோசையாலும் வந்து தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் இறுவது' என்று குறிப்பிட்டுளளார்[77].

இருசீரடி பெற்று வருவதை இருசீரடி வஞ்சிப்பா என்றும், முச்சீரடி பெற்று வருவதை முச்சீரடி வஞ்சிப்பா என்றும் இளம்பூரணர் குறிப்பிடுவார்.

காக்கைபாடினியார் வஞ்சிப்பாவின் இலக்கணத்தை,

தன்றளை பாதம் தனிச்சொல் சுரிதகம்
என்றிவை நான்கும் அடுக்கிய தூங்கிசை
வஞ்சி எனப்பெயர் வைக்கப் படுமே[78]

எனக் கூறுவர். குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா எனப் பெயர் வழங்கியமைக்கு இவண் சான்றில்லை. இருசீரான் வருவதைக் குறளடி வஞ்சிப்பா என்றும், முச்சீரான்

73. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை என்ப-தொல். செய். இளம். நூ. 19
74. வஞ்சி மருங்கி னெஞ்சிய உரிய - தொல். செய். இளம். நூ. 21
75. வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே-தொல். செய். இளம் நூ. 68
76. வஞ்சி யடியே இருசீர்த் தாகும் - தொல். செய். இளம். நூ. 43
77. தொல். செய். இளம். நூ. 115 உரை
78. யாப். விருத்தி. நூ, 90 உரைமேற்கோள்

வருவதைச் சிந்தடி வஞ்சிப்பா என்றும் பெயர் வைத்த சிறப்பு யாப்பருங்கல உரையாசிரியருக்கு உரியது.

வஞ்சிப்பா, ஆசிரியப்பாவின் சாயலுடையது என்பதை 'ஆசிரிய நடைத்தே வஞ்சி'[79] என வரும் தொல்காப்பிய நூற்பா அடி நுட்பமாக உணர்த்தும். புறநானூற்றுள் மூன்று பாடல்கள் வஞ்சிப்பா யாப்பில் அமைந்துள[80]. பத்துப்பாட்டில் அமைந்த பட்டினப் பாலையை வஞ்சி நெடும்பாட்டு என்றும், அது ஆசிரிய அடிவிரவி வந்த ஏந்திசைத் தூங்கலோசை விரவிய குறளடி வஞ்சிப்பா என்றும் யாப்பருங்கல உரையாசிரியர் குறிப்பிடுவர்[81]. ஆயினும் இதனை வஞ்சிப்பாட்டு எனக் கூறுதல் பொருந்தாது என்பது சிலர் கருத்து[82].

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையுள் 'கயலெழுதிய இமயநெற்றியின்' எனத் தொடங்கும் பகுதி முதல் 'இடைமுது மகன் வந்து தோன்றுமன்' என முடியும் பகுதிவரை குறளடி வஞ்சிப்பா என்னும் பாவகைக் குரிய பகுதி. இப்பாவினுள் ஐந்திடங்களில் நாலசைச் சீர்கள் பயின்றுள. தொல்காப்பியர், வஞ்சிப்பாவில் நாலசைச்சீர்கள் பயின்றுவரும் எனத் தனியே விதி கூற வில்லை. அசைகளையே நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்காக வகுத்துவிட்டமையால் தொல்காப்பியருக்கு நாலசைச்சீர் கூறவேண்டிய இன்றியமையாமை ஏற்படவில்லை.

79. தொல். செய். இளம். நூ. 104

80. புறம் 4 11 239

81. யாப். விருத்தி. செய். நூ. 37-உரைமேற்கோள்

82. Pattinappalai though taken by some commentators to be in Vanji form is not really a Vanji poem - Adavanced Studies in Tamil Prosody - Dr. A, C, Chettiar P. 94

காக்கைபாடினியார், வஞ்சிப்பாவினுள் நாலசைச் சீர்கள் பயின்றுவரும் என்பதைக் குறிப்பிடுவர்[83]. யாப்பருங்கல உரையாசிரியர் வஞ்சிப்பாவில் நாலசைச்சீர் வரப் பெறும் என்றும், ஓரடிக்கண் இரண்டு நாலசைச் சீர்கள் அருகியும் வரப்பெறும் என்றும் உரைப்பர்[84]. திருப் பாமாலைப் பாடலை யாப்பருங்கல உரையாசிரியர் மேற்கோள் காட்டி 'இக்குறளடி வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் பதினாறும் முதற்கண்ணே வந்தன' என்று குறிப்பிட் டுள்ளதும், 'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் புறப்பாடலில்[85] 'தீந்தேறற் றசும்புதொலைச் சினன்' என்ற அடியுள் நாலசைச்சீர் பயின்றுள்ளதும், வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் வரும் என்பதற்குச் சான்று களாம். எனவே தொல்காப்பிய இலக்கணத்தை அடிப் படையாகக் கொண்டும், காக்கைபாடினிய இலக்கணத் தைத் தழுவியும் இளங்கோவடிகள் இப்பாவகையைப் படைத்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் பயின்ற இயற்பாவகைகள் தொல் காப்பிய இலக்கணம் ஒன்றினை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளாது அவர் காலத்துக்குச் சற்றுப் பின்னரெழுந்த நூலாகக் கருதப்படும் காக்கைபாடினியத்தையும் அடிப் படையாகக்கொண்டு எழுந்துள்ளன என்பது இதனுல் பெறப்படும்.

இசைத்தமிழ்ப் பாவகைகள்

இளங்கோவடிகள் தம் சிலப்பதிகார யாப்பமைப்பால், இயற்றமிழுக்கென யாப்பு வகைகள் விளங்கியதுபோன்று'

83. நாலசை யான்நடை பெற்றன வஞ்சியுள்
ஈரொன் றணைதலு மேனுழி யொன்றுசென்
றுகலும் அந்தம் நிரையசை வந்தன
கூறிய வஞ்சிக் குரியன ஆதலும்
ஆகு மென்ப அறிந்திசி னோரே-யாப் காரிகை. நூ. 8-மேற்கோள்

84. யாப். விருத்தி. நூ. 15-உரை

85. புறம் 339

இசைத்தமிழுக்கெனவும் யாப்பு வகைகள் சில வழங்கின என்பதை அறியலாம். இவ்விசைத்தமிழ் யாப்பு வகைகளைக் கூறும் அடிப்படை இலக்கண நூல் எதுவென இன்று அறிதற்கியலவில்லையாயினும், அத்தகைய நூல்கள் பல இருந்திருத்தல் வேண்டும் என்று கருதலாம்.

சிலப்பதிகாரத்துள் அமைந்த இசைப்பாக்கள், இசைத் தமிழ்ப் பகுதிக்குரியனவாயினும் அவை யாப்பு நிலையில் இயற்றமிழில் இன்ன பாவகைக்குரியவை என விளக்கிக் கூறவியலும். இயற்றமிழ்ப் பாவகைகளாய் இசைத் தமிழ்ப் பொருண்மையுடைய இப்பாடல்கள் விளங்குதலால் அவை, ஈண்டு இசைத்தமிழ்ப் பாவகைகளென இயம்பப்பட்டன.

சிலப்பதிகாரத்துள் அமைந்த இசைத்தமிழ்ப்பா வகைகள் பெரும்பாலானவை பாவினங்களாகவே விளங்குபவை. சிறுபான்மையாக சில பாவகைகளும் இப் பொருண்மையுடையனவாய் உள. இவ்விசைத் தமிழ்ப் பாக்களை அறிதற்கு முன்னர், தொல்காப்பியர் கூறும் பண்ணத்தியின் வரலாற்றையும் இலக்கணத்தையும் அறிந்து கொள்வது சால்புடைத்து.

பண்ணத்தி

தொல்காப்பியர் பண்ணத்தி என்பதன் இலக்கணத்தை,

பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
*பாட்டின் இயல பண்ணத் தியியே*86

என்னும் நூற்பாவால் குறிப்பிடுவர். இந்நூற்பாவின் நுவல் பொருளை விளக்கத் தொடங்கும் இளம்பூரணர் 'இனிப் பிற நூலாசிரியர் விரித்துக் கூறின இசைநூலின் பாவினமாறு உணர்த்துதலின்' எனக் கூறுவர். இளம்பூரணரின் இவ் வுரைக்குறிப்பால் பாவினங்கள் இசைநூலுக்குரியவை என்பதும், இவற்றை வேறு பல இசைத் தமிழிலக்கண நூல்கள் விரித்துரைத்துள்ளன என்றும் அறியலாம். இவ்விசைத் தமிழ் நூல்கள் யாவை என்பதை விளக்கும்

86. தொல். செய், இளம் நூ. 173

முறையில் 'அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்ணத்தி என்னும் சொல் பண், நத்தி என விரியும். இச்சொல்லுக்கு இளம்பூரணர் உரை விளக்கம் கூறுங்கால் 'பண்ணைத் தோற்றுவித்தலால் பண்ணத்தி என்றார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாவினங்களே இசைக்கூறுகளமைந்த பண்ணத்தி என்னும் தம் கருத்துக்கேற்ப 'அடிநிமிர் கிளவி ஈராறாகும்' என வரும் பண்ணத்தி பற்றிய தொடருக்குப் 'பன்னிரண்டாவன ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி எனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவினத்தையும் உறழப் பன்னிரண்டாம்' எனப் பிற யாப்பியலார் கூறும் பாவினம் பற்றிய கருத்தையொட்டி விளக்கம் உரைத்திருப்பதும் அறியத்தக்கது. பண்ணத்தி பற்றி இளம்பூரணர் கூறும் கருத்துக்கள் பொருந்தாதவை என்பதும் சிலர் கருத்தாம்.[87]

இளம்பூரணர் கூறும் கருத்து பிற உரையாசிரியராகிய பேராசிரியருக்கும் உடன்பாடில்லை என்பதை அவர் உரையால் அறியலாம். 'பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி' என்பது பேராசிரியர் தரும் விளக்கம். நச்சினார்க்கினியர் பண்ணத்தி பற்றிய நூற்பாக்களுக்கு உரை எழுதாது பொருள் வெளிப்படை எனக் கூறி விடுத்தார்.

87. அ. இச்சூத்திரவுரையுள் இளம்பூரண அடிகள் எடுத்துக்காட்டிய பாவினப் பாகுபாடு ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை-தமிழிலக்கிய வரலாறு - தொல்காப்பியம். க. வெள்ளைவாரணம். பக். 267

ஆ. Hence Ilampuranar's interpretation of Pannathi as Pavinam does not appear to be right-Advanced Studies in Tamil Prosody- Dr. A. C. Chettiar P. 134

பேராசிரியர் கருத்து இளம்பூரணர் கருத்தொடு மாறு பட்டுள்ளது. இதனை மேலும் விளக்கும் பேராசிரியர் 'மெய்வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தியென்ப; இஃது எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்ப வென்பது; அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டும் மடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப் பாட்டும் கடகண்டும் முதலாயின' என்பர். பேராசிரியர் குறிப்பிடும் வஞ்சிப்பாட்டு, மோதிரப் பாட்டு கடகண்டு முதலாய நூல்கள் இன்று கிடைக்கவில்லை எனினும் எழுத்துப் பயிற்சியில்லாது பாட்டும் உரையும் போல அமைந்த சமுதாயப் பாடல்களாகிய நாடோடிப் பாடல்களையே இங்குப் பண்ணத்தி என்ற பெயரால் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவு.

பண்ணத்தி பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளதையும் அப்பகுதிகளுக்கு இளம்பூரணர் பேராசிரியர் உரைப் பகுதிகளையும் ஒருசேர நோக்கப் பின்வரும் முடிவுகள் புலனும். பண்ணத்தி என்பது பண்ணை விரும்பி வரும் பாவகைகளாகிய இசைப்பாடல்களுக்குரிய பெயராய்த் தொல்காப்பியர் காலத்தில் வழங்கியது. தமிழில், இயல் இசை நாடகம் ஆகிய மூவகைப் பாகுபாடுகளுக்கும் தனித் தனிப் பாவகைகள் விளங்கியமையால், இசைத் தமிழுக் குரிய பாவகைகள் பண்ணத்தி என்று வழங்கின. இவை தொடக்க காலத்தில் எழுத்துப் பயிற்சி இல்லாதனவாக அல்லது ஏட்டில் எழுதா இலக்கியங்களாக விளங்கின பிற்காலத்தில் இசைத்தமிழுக்குரிய பாக்களேயன்றி நாடகத் தமிழுக்குரிய இயற்பாக்களும் உரைநடைகளும் பண்ணத்தி என்னும் பெயரால் சிறுபான்மை வழங்கப் பட்டன. பொதுவாக இசை நாடகத் தமிழுக்குரிய பாக் களாகிய பண்ணத்திகள் பாவினங்களாகவே விளங்கின.

இயற்பாவகைகளுக்கும் இசைத்தமிழுக்குரியனவாகக் கூறப்படும் பண்ணத்திகளுக்கும் உரிய வேறுபாட்டையும் தொடர்பையும்,'பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தி என்றார். அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன' என்பர் இளம்பூரணர்; 'பாட்டிடைக் கலந்த பொருளவாகி என ஆசிரியர் கூறுதலால், இயற்றமிழ்ப் பாடல்களுக்குரியனவாகச் சொல்லப் பட்ட பொருள்களே பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுளாகிய இவ்விசைப் பாடல்களுக்கும் உரியன என்பதும் பாட்டு எனக் கூறாது பாட்டின் இயல என்றமையால் இயற்றமிழ்ப் பாடல்களுக்கு உரியனவாக முற்கூறப்பட்ட நோக்கு முதலிய செய்யுளுறுப்புக்கள் சிலவற்றை இவ் விசைப்பாடல்கள் பெற்றே வருதல் வேண்டும் என்னும் நியதியில்லையென்பதும் நன்கு விளங்கும்' எனவரும் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் விளக்கம் சிறப்புடையது.[88]

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னர், பாவினங்கள் இருந்தனவா என்பதைத் தெளிவிக்க இயலாவிடினும் தொல்காப்பியர் பண்ணத்தியைப் பற்றிக் குறித்திருத்தலாலும் தொல்காப்பியரோடு ஒருசாலை மாணக்கராகிய காக்கைபாடினியார் தம் நூலுள் பாவினங்களைப் பற்றிக் குறித்திருத்தலாலும், தொல்காப்பியர் காலத்துக்கு முன்னர் இசைப் பாக்களாகப் பண்ணத்தி என்னும் பெயராலும் பாவினங்கள் என்னும் பெயராலும் பாவினங்கள் வழங்கி யிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

இப்பாவினங்களின் தோற்றத்தையும் தொன்மையையும் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இவை முன்னரே வழங்கிய சிலவகைப் பாக்களினின்றும் வளர்ந்தனவா, அன்றி வேற்றுமொழி மூலத்தினின்று தமிழில் வந்து

88. தமிழ் இலக்கிய வரலாறு-தொல்காப்பியம்-க. வெள்ளைவாரணம்-பக். 267

வளர்ந்தனவா என்பதைஉறுதிப்படுத்தி உரைக்கவியலாது என்பர்[89]. மற்றும் சிலர் 'யாப்பியலைப் பொறுத்தவரை, இனங்காண முடியாத பொது திராவிடக் கூறு ஒன்று அனைத்துத் திராவிட மொழிகளுக்கும் உரியதாக இருந்திருக்க வேண்டும்' என்பர்[90]. பாவினங்கள் தமிழுக்கு உரியவை என்பதும், அவை தொடக்க காலத்தில் இசைப்பாக்களாகப் பண்ணத்தி என்னும் பெயரால் ஏட்டில் எழுதா இலக்கியமாக விளங்கியவை என்பதும் இவ்வாய்வில் கண்ட முடிபுகளாம்.

சிலம்பில் இசைப்பாக்கள்

சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாதலால், இசைத் தமிழுக்குரிய பாவகைகள் பல இக்காப்பியத்துள் இடம் பெற்றுள்ளன. இவ்விசைக் கூறுகள் கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை ஆகிய பகுதிகளில் இருப்பதை நோக்குழி, பொது மக்கள் கூடிச் செய்யும் சமுதாய நிகழ்சிகளில் இத்தகைய இசைப்பாக்கள் இடம் பெற்றன எனலாம். மேலும் நெய்தல், பாலை, முல்லை, குறிஞ்சி ஆகிய நிலங்களோடு தொடர்புடையனவாகவும் இசைப்பாக்கள் நிரம்பிய இப் பகுதிகள் அமைந்திருத்தலால், திணைவாழ்வோடு தொடர் புடையனவாகவும் இவ்விசைப்பாக்களை இளங்கோவடிகள் அமைத்துள்ள நுட்பம் அறிந்து மகிழ்தற்குரித்தாம்.

இளங்கோவடிகள் கூறும் இவ்விசைப் பாக்களில் பாவினங்கள் மட்டுமின்றிச் சிறுபான்மை பாவகைகளும் இடம் பெற்றுள்ளன. பாவினங்களை மட்டுமே பண்ணத்திகளாக வழங்காமல் குறிப்பிட்ட சிலவகைப் பாக்களையும்

89. Whether they were mere extensions of some kind or other of the already existing forms or whether they were borrowed into from some other source is a question which cannot be decided with certainty - Advaneed Studius in Tamii Prosody-A. C. Chettiar P. 135

90. சித்தாந்த தீபிகை தொகுதி 2-பக் 184

பண்ணத்திகளாக வழங்கியுள்ளதைக் காண, இளங்கோ வின் புதியது படைக்கும் புரட்சியுள்ளம் புலனும்.

ஆசிரிய விருத்தம்

இசைத் தமிழ்ப் பாக்களுக்குள் ஆசிரிய விருத்தமே மிகுதியாகச் சிலம்பில் இடம் பெற்ற பாவினமாகும். கானல்வரியுள் கோவலன் பாடியனவாக வரும் ஆற்றுவரி, சார்த்துவரிப் பாடல்களும், மாதவி பாடியனவாக வரும் ஆற்றுவரி, சார்த்துவரி, மயங்குதிணை நிலைவரிப் பாடல் களும், வேட்டுவ வரியுள் கூத்துள் படுதல், வெட்சி, வெட்சிப் புறனடை என்னும் தலைப்பிலமைந்த பாடல் களும் வாழ்த்துக் காதையுள் கந்துக வரிப் பாடல்களும்[91] இசைப்பாக்களாக விளங்கிடினும் ஆசிரிய விருத்தம் என்னும் யாப்பிலமைந்தவை. இவையனைத்துப் பாக் களும் அறுசீர் ஆசிரிய விருத்தங்களாகவே அமைந் துள்ளது குறிப்பிடத்தக்கது.

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி (ஆற்றுவரி-1).

என்பது இவ்வாசிரிய விருத்த யாப்பிலமைந்த இசைப் பாடலுக்குச் சான்றாகும்.

91. கந்துக வரிப்பாடல் எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்றும், இவ்வியாப்பு வகையில் திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தம் என்னும் நூலொன்று பாடியுள்ளார் என்றும் கூறுவர் - ஆறுவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை - இளங்கோ கண்ட எழுசீர் விருத்தம் மா. ரா. பூபதி பக் 461

ஆசிரிய விருத்தப் பாவின் இலக்கணத்தை,

அறுசீர் முதலா நெடியவை எல்லாம்
நெறிவயின் திரியா நிலத்தவை நான்காய்
விளைகுவ தப்பா இனத்துள விருத்தம்[92]

எனக் காக்கைபாடினியார் குறிப்பிட்டுள்ளார். அறுசீர் முதலாகப் பலசீர் பெற்று நான்கடியாய் வருவது இப் பாவினத்தின் இலக்கணம் என்பதை அறியலாம். யாப்பருங்கல உரையாசிரியர் அடிமறியாய் வரும் இப் பாவை ஆசிரிய மண்டில விருத்தம் என்றும், அடிமறி யாகாது வருவனவற்றை ஆசிரிய நிலை விருத்தம் என்றும் சுட்டுவர்[93]. பிற யாப்பிலக்கணிகளும் இப்பாவினத்தின் இலக்கணத்தைக் காக்கைபாடினியார் போலவே உரைப்பர். எனவே இவை ஆசிரிய விருத்தம் என்னும் யாப்பு வகையாலமைந்த இசைப்பாக்கள் என்பதும், இயல் வகையால் இளங்கோ காக்கைபாடினிய நூலைப் பின்பற்றினர் என்பதும் அறியலாகும்.

ஆசிரியத்துறை

ஆசிரியப் பாவின் பிறிதொரு இனமாகிய ஆசிரியத் துறை என்னும் யாப்பிலமைந்த இசைப்பாடல்கள் கானல் வரியுள் முகமில்வரி, கானல்வரி என்னும் தலைப்பில் அமைந்தவை.

ஆசிரியத் துறையின் இலக்கணத்தை,

அடித்தொகை நான்குபெற் றந்தத் தொடைமேல்
கிடப்பது நாற்சீர்க் கிழமைய தாகி
எடுத்துரை பெற்ற இருநெடில் ஏற்றின்
அடிப்பெறின் ஆசிரி யத்துறை ஆகும்

எனவும்,

92. யாப். விருத்தி-செய். நூ. 24-உரைமேற்கோள்
93. ,, ,, ,,

அளவடி ஐஞ்சீர் நெடிலடி தம்முள்
உறழத் தோன்றி ஒத்த தொடையதாய்
விளைவதும் அப்பெயர் வேண்டப் படுமே

எனவும் காக்கைபாடினியார் கூறுவர்[94]. யாப்பருங்கல உரையாசிரியர் இடையே ஓரடி குறைவது ஆசிரிய நேர்த் துறை என்றும் இடையே ஈரடி குறைவது ஆசிரிய இணைக் குறட்டுறை என்றும் ஒருசாராசிரியர் கருத்தாக வுரைப்பர்.

துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற
மாய்வான்
பொறைமலிப் பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது
போர்க்குங் கானல்
நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே
தீர்க்கும் போலும் (முகமில்வரி)

என வருவது சிலம்பில் பயின்ற ஆசிரியத்துறைக்குச் சான்றுப் பாடலாம். மயேச்சுரர், அவிநயனுர், யாப்பருங் கலத்தார், காரிகையார் ஆகியோரும் ஆசிரியத்துறையின் இலக்கணத்தைக் காக்கைபாடினியாரைப் பின்பற்றி மொழிப. சிலப்பதிகாரத்தில் அமைந்த இவ்விசைப் பாடல்கள் காக்கைபாடினிய இலக்கணத்திற்கேற்ப ஆசிரியத்துறைப் பாடலாக உள.

ஆசிரியத்தாழிசை

ஆசிரியவினப் பாடல்களுள் தாழிசையாய் அமைந்த இசைப் பாடல்களும் சிலப்பதிகாரத்திலுள. ஆய்ச்சியர் குரவையுள் ஒருபொருள்மேல் மூன்றடுக்கியனவாக ஓரி[illegible]ல் மட்டும் ஆசிரியத் தாழிசையில் அமைந்த இ[illegible]பாடல்கள் உள.

[illegible]க்கைபாடினியார் 'அடிமூன்று ஒத்திறின் ஒத்தா ழி[illegible]'[95] என இவ்வாசிரியத் தாழிசையின்

94. [illegible] விருத்தி-செய். நூ. 23- உரைமேற்கோள்
95. [illegible] காரிகை செய். நூ. 36-உ ரைமேற்கோள்

இலக்கணத்தை இயம்புவர். இவை ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவதே சிறப்பாகும் என்றும், ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வருவன ஆசிரிய ஒத்தாழிசை என்றும், ஒருபொருள்மேல் ஒன்றாயும், இரண்டாயும் மூன்றடுக்கிப் பொருள் வேறாயும், மூன்றின் மிக்கவும் ஆசிரியத் தாழிசை என்றும் யாப்பருங்கலவுரையாசிரியர் குறிப்புக்களால் அறியலாம்.

கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ

(ஆய். குரவை. 19-21)

எனவரும் பகுதி ஆசிரியத் தாழிசை யாப்பு வகையா லமைந்த இசைப்பாடல் தொகுதி. இப்பாடலுள் அடி தோறும் பயின்று வரும் சீர்களின் வரையறை குறிப்பிடப் பெறாமையால் எனைத்துச் சீராலும் அடிகள் வரும் எனக் கொள்ளுதல் சாலும்.

கலிவிருத்தம்

ஆசிரிய விருத்தம் போலக் கலிவிருத்த[illegible]ப்பும் சிலம்பில் பயின்ற மிகுதியான இசைப் பாடல்க[illegible]ரிய யாப்பு வகை. கானல்வரி, வேட்டுவவரி, ஆ[illegible]யர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை ஆகி[illegible]தை களில் இவ்வகை யாப்பில் அமைந்த இசைப் ப[illegible]ள. ஒரேவகை யாப்பு வகையாயினும், வேறுபட்டு [illegible]கும் சந்தங்கள் இப்பாடல்களில் நாம் காணும் சிறப்ப[illegible]

இதன் இலக்கணத்தைக் காக்கைபாடினியார்,

நாலொரு சீரால் நடந்த அடித்தொகை
ஈரிரண் டாகி இயன்றவை யாவும்
*காரிகை சான்ற கலிவிருத் தம்மே*96

என நூற்பிப்பர். சிறுகாக்கைபாடினியார், மயேச்சுரர், அவிநயனர், யாப்பருங்கலத்தார், யாப்பருங்கலக் காரிகையார் ஆகியோரும் இப்பாவகையின் இலக்கணத்தை உரைப்ப. யாப்பருங்கலவுரையாசிரியர் அடிமறியாய் இப்பாவகை வருங்கால் கலிமண்டில விருத்தம் எனவும், அடிமறியாகாது வருங்கால் கலிநிலை விருத்தம் எனவும் கூறப்படும் என்று விளக்குவர்.

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே

(*நிலைவரி. பா-11*)

எனவரும் பாடல் கலிவிருத்த யாப்பமைந்த இசைப்பாடலுக்குச் சான்றும். காக்கைபாடினியத்தின் இலக்கணத்திற்கேற்ப இவ்விசைப் பாடல்கள் அமைந்துள.

குறள்வெண் செந்துறை

வெண்பாவின் வகையுளொன்றுய் விளங்குவது குறள் வெண்பா. தொல்காப்பியர் குறுவெண்பாட்டு என்னும் பெயரால் குறட்பாவைச் சுட்டியிருப்பினும் குறட்பாவின் இனங்களைக் கூறவில்லை. குறள்வெண்செந்துறை யாப்பிலமைந்த இசைப்பாடல்கள் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையுள் பயின்றுள.

குறள்வெண்செந்துறையின் இலக்கணத்தைக் காக்கைபாடினியார்

அந்தம் குறையா தடியிண் டாமெனிற்
*செந்துறை என்னும் சிறப்பின தாகும்*97

96. யாப். விருத்தி. செய். நூ. 36-உரைமேற்கோள்
97. யாப். விருத்தி. செய். நூ. 10 உரைமேற்கோள்

என்றுரைப்பர். அவிநயனுரும், 'ஒத்த அடித்தே செந் துறை வெள்ளை'98 எனக் குறிப்பிடுவர். அடிகள் ஒத்திருத் தல் வேண்டும் என்னும் இலக்கணமே தொல்லாசிரியர் களால் வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். பிற்கால யாப்பருங்கல ஆசிரியர்,

ஒழுகிய ஓசையின் ஒத்தடி இரண்டாய்
*விழுமிய பொருளது வெண்செந் துறையே*99

என்று ஓசைச் சிறப்பும் பொருண்மைச் சிறப்பும் இக்குறள் வெண் செந்துறைக்கு இன்றியமையாதனவெனச்சுட்டுவர். யாப்பருங்கலவுரையாசிரியர் குறிப்பால் எனைத்துச் சீராலும் இப்பாவினம் வரப்பெறும் என அறியலாம்.

'குடப்பாலுறையா குவியிமி லேற்றின்' எனத்தொடங் கும் ஆய்ச்சியர் குரவைப் பகுதியுள் மூன்று குறள் வெண் செந்துறை யாப்பு வகையிலமைந்த இசைப்பாக்களுள.

குடப்பா லுறையா குவியிமி லேற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு;
உறிநறு வெண்ணெய் உருகா வுருகும்
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு;
நான்முலை யாய நடுங்குபு நின்றிரங்கும்
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு;
(ஆய். குரவை. பா-2-4)

எனவரும் பகுதியே ஆய்ச்சியர் குரவையுள் இவ்வியாப்பு வகையிலமைந்த இசைப்பாடல்கள்.

வெண்டாழிசை

வெண்பாவின் இனங்களில் ஒன்றுய வெண்டாழிசை யாப்பாலமைந்த இசைப்பாடல்களும் சிலம்பிலுள. மங்கல வாழ்த்துப் பாடல் என்னும் முதற் பகுதியின் தொடக் கத்தில் நூல் வாழ்த்தாக,

98. யாப். விருத்தி. செய். நூ. 10-உரைமேற்கோள்
99. „ „ „ „ „

திங்களைப் போற்றதும் திங்களைப் போற்றதும்
கொங்கலத் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்

எனத் தொடங்கும் நான்கு இசைப்பாக்களுள. இப்பாக்கள் நான்கும் மங்கல வாழ்த்துப் பாடலுக்கு வேருய் நூலின் தொடக்கத்திலமைந்த இசைத்தமிழ் வாழ்த்துப் பாடல் களாம்.

இவை, வாழ்த்து என்னும் ஒரு பொருள்மேல் நான் கடுக்கி வந்த இசைப்பாடல்கள்; வெண்டாழிசை என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்குரியவை. இப்பாவினத்தின் இலக்கணத்தை

தன்பா அடித்தொகை மூன்ருய் இறும்படி
வெண்பாப் புரைய இறுவது வெள்ளையின்
*தண்பா இனங்களிற் ருழிசை யாகும்*100

எனக் காக்கைபாடினியார் கூறுவர். இவ்விலக்கணத்திற் கேற்ப வாழ்த்துப் பொருண்மை பயின்ற இசைப்பாடல் களாய் ஒரு பொருள் மீது நான்கடுக்கி இவை வந்துள.

வெண்பாவகை

பண்ணத்தியாக வரும் இசைப்பாடல்களைப் பாவினங் களால் பாடியதோடு மட்டுமின்றிச் சிறுபான்மை பாவகைக ளாலும் இளங்கோவடிகள் பாடியுள்ளார் என்று முன்னர்க் கூறப்பட்டது. வெண்பாவின் வகையில் இன்னிசைவெண்பா, நேரிசைவெண்பா, பஃறெடை வெண்பா ஆகிய மூன்று பாவகைகளும் இசைப்பாடல் களாக அமைந்துள்ளன.

தொல்காப்பியர் நான்கடியால் வரும் வெண்பாக்களை 'ஒத்தாழிசை' என்ற சொல்லால் குறிப்பர். இதனைச் சமநிலை வெண்பா அல்லது அளவியல் வெண்பா என்னும் பெய ரால் உரையாசிரியர்கள் மொழிகுவர். இளம்பூரணர்,

100. யாப். விருத்தி. செய். நூ. 13-உரைமேற்கோள்

பிற யாப்பிலார் கூறும் நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பாக்களைச் சமனிலை வெண்பா என்னும் பெயருக் குரியனவாக உரைப்பர். இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா என்ற இரண்டனுள் இன்னிசை வெண்பாவே பழமையான அமைப்பு என்றும், புதிய அமைப்பாகப் பிற் காலத்தில் வளர்ச்சியடைந்த பாவகையே நேரிசை வெண் பாவாக ஆயிற்று என்றும் கூறுவர், டாக்டர் அ. சி. செட்டியார்.[101]

தொல்காப்பியர் காலத்தில் இது இருந்திருப்பினும், அவர் இப்பாவகையின் பெயரைச் சுட்டவில்லை என்பது அறியத்தக்கது. காக்கைபாடினியார்,

தனிச்சொல் தழுவல வாகி விகற்பம்
பலபல தோன்றினும் ஒன்றே வரினும்
இயற்பெயர் இன்னிசை என்றிசி னோரே[102]

என இன்னிசை வெண்பாவின் இலக்கணத்தை இயம்புவர்.

பஃறொடை வெண்பாவைத் தொல்காப்பியர் நெடு வெண்பாட்டு என்னும் பெயரால் குறித்ததோடு 'நெடு வெண்பாட்டே முந்நான் கடித்தே'[103] என அடிவரை யறையையும் சுட்டுவர். இப்பாவகையே பிற யாப்பிய லாரால் 'பஃறொடை வெண்பா' எனச் சுட்டப்பட்டது.

தொடையடி இத்துணை என்னும்
உடையதை இன்றி உறுப்பழி வில்லா
நடையது ப:றொடை நாமங் கொளலே[104]

எனக் காக்கைபாடினியாரும் இப்பாவகையின் இலக் கணத்தை இயம்புவர். நேரிசை வெண்பாவின் யாப்பு வகையும் காக்கைபாடினியரால் சுட்டப்பெற்றுள்ளது.

101. Thus we find that Innisai venpa was the earliest form known in the days of Tholkappiyar and that Nerisai venpa was a tater improvement of it-Advanced Studies in Tamil Prosody- Dr. A. C. Chettiar, P. 99-100

102. யாப். விருத்தி. செய். 8-உரைமேற்கோள்

103. தொல். செய். நூ. 151-இளம்

104. யாப். விருத்தி. செய். 9-உரைமேற்கோள்

வாழ்த்துக் காதையுள் அரசவாழ்த்துப் பொருண்மை பயின்ற

நீணில மன்னர் நெடுவிற் பொறையனல்
தாடொழார் வாழ்த்த றமக்கரிது சூழொளிய
எங்கோ மடந்தையு மேத்தினா ணீடுழி
செங்குட் டுவன்வாழ்க வென்று (29)

எனவரும் இன்னிசை வெண்பா யாப்பமைந்த பாடலும், வாழ்த்துக் காதையுள் 'வானவன் எங்கோ மகள்' எனத் தொடங்கும் நேரிசை வெண்பா யாப்பமைந்த பாடலும் குன்றக் குரவையுள் பாட்டுமடை என்னும் தலைப்பி லமைந்த அலர்பாடு.... என்றும், மறுதரவில்லாளை.... என்றும் தொடங்கும் பஃறொடை வெண்பா யாப்பமைந்த இருபாடல்களும் இளங்கோவடிகளால் இசைப்பாடல் களாய்க் கூறப்படுபவை. தொல்காப்பியரால் தோற்று விக்கப்பட்ட இப்பாவகைகளின் இலக்கணமே இவ்விசைப் பாடல்களின் இயற்றமிழ் யாப்புக்கு அடிப்படையாம்.

ஆசிரியப்பாவகை

ஆசிரியப் பாவகையுள் நிலைமண்டில ஆசிரியப் பா என்னும் யாப்பு வகையில் ஆய்ச்சியர் குரவையுள் அரச வாழ்த்துப் பொருண்மைக்குரிய இசைப் பாடலையும், குன்றக் குரவையுள் 'கடம்புசூடி' எனத் தொடங்கிய பாட்டு மடைப் பகுதிக்குரிய இசைப்பாடலையும், இளங்கோ அமைத்துள்ளார். மேலும் நேரிசையாசிரியப்பா யாப்பில் கானல்வரி குன்றக்குரவை வேட்டுவவரி ஆகிய பகுதி களில் அரச வாழ்த்துப் பொருண்மையுடைய இசைப்பாக் களையும் இளங்கோவடிகள் யாத்துள்ளார்.

கலிப்பாவகை

யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு, தர வின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என்னும் இருவகைக் கொச்சக ஒருபோகுகளும், இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை

ஆகிய காதைகளில் பயன்படுத்திய சிலவகை இசைப் பாடல்களுக்குரிய யாப்பு வகைகளாம்.

ஆய்ச்சியர் குரவையுள் படர்க்கைப் பரவல் என்னும் தலைப்பிலும் குன்றக்குரவையுள் கொளுச்சொல், சிறைப் புறம், 'பாடுகம்வா' என்று தொடங்கும் பாட்டுமடை ஆகிய தலைப்புக்களிலும், வாழ்த்துக்காதையில் சொல், அரற்று, அம்மானைவரி. ஊசல்வரி, வள்ளைப்பாட்டு ஆகிய தலைப்புக்களிலும் அமைந்த இசைப்பாடல்கள், யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் யாப்புக்குரியவை. வாழ்த்துக் காதையில் வாழ்த்து என்னும் தலைப்பிலமைந்த இசைப்பாடல்கள் தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என்னும் யாப்பு வகைக் குரியவை.

நாடகத் தமிழ்க் கூறுகள்

இயலுக்கென்றும், இசைக்கென்றும் அமைந்த யாப்பு வகைகளைப் போன்று, நாடகத் தமிழ்ப் பகுதிக்குரிய யாப்பு வகைகளும் பண்டைக் காலத்து விளங்கின. எனினும் சிலப்பதிகாரத்துள் உரைநடை, கட்டுரை, கருப்பம் என இங்ஙனம் உரைநடைப்பகுதிகளாக வருவனவும் தனிச் சொற்களும் நாடகத் தமிழுக்குரிய உறுப்புக்களாக விளங்குபவை. மேலும் இசைத்தமிழோடு தொடர்பு உடைய பாவகைகளும் பாவினங்களும் நாடகத் தமிழுக்கும் உரிமையுடையனவே.

இளங்கோவடிகள், இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாகிய சிலப்பதிகாரத்துள் இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்குமாகத் தனித்தனிப் பாவகைகளைப் பயன் படுத்தியுள்ளார். தன் காலத்து வழங்கிய பேரிலக்கண நூல்களையெல்லாம் தன் காப்பியத்தின் அடிப்படை இலக்கண நூல்களாகக் கொண்டார்.

பழமை இலக்கணிகள் வகுத்துத் தந்த இலக்கணப் பாதையைப் புறக்கணிக்காததுடன் புதிய யாப்பியல் நெறி

களைக் கண்டு, பின்னுள்ள இலக்கணிகள் இலக்கணச் சட்டம் செய்யவும் வழிவகுத்தார். ஏட்டுப் பயிற்சியின்றி எழுத்துப் பயிற்சியின்றி, சமுதாய இலக்கியமாய், நாடோடி இலக்கியமாய், ஏட்டில் எழுதா இலக்கியமாய் விளங்கிய பலவகைப் பாக்களுக்கு எழுத்துருவம் தந்து ஏற்றம் பெறச் செய்தார். பின்னுள்ள காப்பியர்களுக்கு யாப்பியல் நெறி காட்டும் கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்தார். (சிலம்பில் பயின்ற யாப்பு வகைகளின் விரிவான பட்டியல் பிற் சேர்க்கை-2இல் நிரலே கூறப்பட்டுள்ளது.)

காதைகளின் புறத்தேயமைந்த செய்யுள் வகைகள்

சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற முப்பெரும் காண்டங்களையும், மங்கலவாழ்த்துப் பாடல் முதல் வரந்தருகாதையீருக முப்பது பகுதிகளையும் உடைய பெருங் காப்பியநூல். சிலப்பதிகாரத்தின் கதைப் பொருண்மை முப்பது பகுதி களில் முற்றுப் பெற்றிருப்பினும், நூலமைப்பு நிலையில் காதைகளின் புறத்தே பிற செய்யுட்களும் இணைந்துள்ளன. மனித உடலுக்கு அழகையும் தோற்றத்தையும் தரும் ஆடை அணிகலன்களைப்போல, காதைகளின் புறத் தமைந்த இச்செய்யுள்வகைகள் சிலப்பதிகாரத்தை அழகு படுத்தி ஏற்றம் பெறச் செய்கின்றன.

இவை, காப்பியத்தின் அகத்துறுப்புக்களாகவே கருதுமளவு பெருமையும், வழக்குப் பயிற்சியுமுடையன. எனினும் காப்பியக் கதைக்கூறு அமைந்தவை முப்பது பகுதிகளே யாதலால், நூலுள் அமைந்த அவையல்லாத பிற செய்யுட்கள் இவண் புறத்தமைந்தனவாய்க் கருதப்பட்டன.

காதை, பாடல், மாலை, வரி, குரவை முதலாய சொல் முடிபுகள், சிலம்பின் முப்பது பகுதிகட்கும் உரியவை. இவற்றில் காதை என்னும் சொல் முடிபு மிகுதியான பகுதிகளின் ஈருயமைந்துளது. பிற பகுதிகளின் இறுதியில் அமைந்த செய்யுட்களிருப்பினும், பெரும்பான்மை வழக்கு நோக்கி, 'காதைகளின் புறத்தேயமைந்த செய்யுள் வகைகள்' என இக்கட்டுரைக்குத் தலைப்பிடப் பெற்றது.

புறத்தேயமைந்த செய்யுள் வகைகள்

காதைகளின் புறத்துள்ள செய்யுள் வகைகள் பல. சிற்சில காதைகளுக்குப் புறத்தே, காதைகள் முற்றுப் பெற்ற பின்னர் உள்ள வெண்பாக்களும், காப்பியத்தின் தொடக்கத்தில் அமைந்த பதிகமும், காப்பியக் கதைக்குப் பின்னர் நிகழ்ந்த வழிபாட்டு நிகழ்ச்சிகளைச் சுட்டும் உரைபெறு கட்டுரையும் ஒவ்வொரு காண்டமும் முற்றுப்பெற்ற பின்னர்க் கிடக்கும் காண்டக் கட்டுரைகளும், நூல் முடிந்த பின்னர் இறுதியில் இடம் பெற்ற நூற்கட்டுரையும் சிலப்பதிகாரத்தின் புறத்துள்ள செய்யுள் வகைகளாம். காதைகளின் புறத்தே அமைந்து நூலின் சிறப்பையும் புகழையும் விளக்கியுரைக்கும் இப்புறவுறுப்புக்களின் நுவல் பொருளையும் யாப்பியலையும் அறிதல் இவ் வாய்வுக்குரித்து.

வெண்பாக்கள்

சிலப்பதிகாரக் காப்பியத்தில் சிற்சில காதைகளுக்குப் பின்னர் வெண்பாக்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை அமைந்துள. இங்குக் காணப்படும் வெண் பாக்கள் அனைத்தும் நேரிசை வெண்பா யாப்பில் அமைந்தவை.

பின்வரும் பட்டியல், எந்தக் காதைகளுக்குப் பின்னர், வெண்பாக்களமைந்துள என்பதைச் சுட்டும். சிலப் பதிகாரத்துளமைந்த முப்பது காதைகளுள் பன்னிரு காதைகளுக்குப் பின்னர் மட்டுமே இவ்வெண்பாக்கள் இடம் பெற்றுள என்பதையும், சிலம்பின் முப்பெருங் காண்டங்களுள் வஞ்சிக் காண்டத்துக்குரிய எக்காதையின் பின்னரும் வெண்பாக்கள் இடம்பெறவில்லையென்பதையும் இப்பட்டியல் கூறுகின்றது. மேலும் புகார்க் காண்டக் காதைகள் ஏழன் பின்னர் எட்டு வெண்பாக்களும் மதுரைக் காண்டக் காதைகள் ஐந்தன் பின்னர் ஏழு வெண்பாக் களும் அமைந்துள.

காதை எண்	காதை	வெண்பாவின் தொடக்கம்	அமைந்த இடம்	அடி. நல். உரை	அரும்பத உரை
2	மனை. காதை	தூமப் பணிகள்	மூலத்தின்பின்	உரை இல்லை	உரைக் குறிப்பில்லை
3	அரங். காதை	எண்ணும்	,,	,,	,,
4	அந்தி. காதை	கூடினார்பால்	உரைக்குப்பின்	,,	,,
6	கடலாடு காதை	வேலைமடல்	,,	,,	,,
8	வேனிற்காதை	செந்தாமரை	மூலத்தின்பின்	,,	உரைக் குறிப்புண்டு
		ஊடினீர்	,,	உரை உண்டு	,,
9	கனாத். காதை	காதலி கண்ட	,,	,,	,,
10	நாடு. காதை	காலையரும்பி	கட்டுரைக்குப்பின்	உரை இல்லை	உரைக் குறிப்பில்லை
16	கொலைக். காதை	நண்ணும்	மூலத்தின்பின்	உரை உண்டு	உரைக் குறிப்புண்டு
20	வழக்குரை காதை	அல்லவை	,,	உரைஇல்லாதது	,,
		காவியுகுநீரும்	,,	,,	உரைக் குறிப்பில்லை
		மெய்யிற்	,,	,,	,,
21	வஞ்சினமாலை	பொற்புவழுதியும்	,,	,,	,,
22	அழற். காதை	மாமகளும்	,,	,,	உரைக் குறிப்புண்டு
23	கட்டுரை காதை	தெய்வம்	,,	,,	,,

நுவல்பொருள்

மனையறம் படுத்த காதையில் மூலத்தின் பின்னுள்ள 'தூமப் பணிகள்' எனத் தொடங்கும் வெண்பா, கோவலன் கண்ணகி ஆகியோர் மண்மேல் நிலையாமை கண்டவர் போல் தொலையாத இன்பமெலாம் துய்த்தார் என்னும் பொருண்மைத்து. இது மனையறம்படுத்த காதையின் கருப்பொருளைச் சுருக்கியுரைக்கும் பெற்றியது. 'இவ் வெண்பாவானது பல பிரதிகளில் இல்லை' என டாக்டர் உ. வே. சா. இவ்வெண்பாவுக்குக் குறிப்புரை எழுதி யுள்ளார். அரங்கேற்று காதையின் மூலத்தையொட்டி அமைந்த 'எண்ணும் எழுத்தும்' எனத் தொடங்கும் வெண்பா, பூம்புகார்ப் பொற்றொடியாய மாதவி ஆடரங்கில் ஆடிய ஆட்டச் சிறப்பைக் கூறுமுறையில் காதையின் கருப்பொருளை விளக்கி நிற்கின்றது.

போதவிழ்க்கும் கங்குற் பொழுதில் தோன்றிய திங்கள், மாதவிக்கும் கண்ணகிக்கும் முறையே நிழலாகவும் வெய்ய தாகவும் விளங்கியது என்னும் கருப்பொருளதாய், அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையில் அமைந்த 'கூடினார் பாலிழலாய்' எனத் தொடங்கும் வெண்பா உள்ளது. இக்காதையில் இளங்கோவடிகள் கூறும் 'கோலம் கொண்ட மாதவியையும்' 'கையறு நெஞ்சத்துக் கண்ணகி யையும்' இது ஓவியமாக்கிக் காட்டிற்று. முன்னிரு காதை களில் மூலத்தை ஒட்டி அமைந்த வெண்பாக்களைப் போலின்றி, இவ்வெண்பா அடியார்க்கு நல்லார் உரைக் குப்பின் டாக்டர் உ. வே. சா. பதிப்பில் அமைந்தது. பிற பதிப்பாளியரும் இம்முறையிலேயே சுட்டுவர்.

கடலாடு காதையுள் 'வேலைமடல்தாழை' எனத் தொடங்கும் வெண்பா 'வெங்கதிரோன்தேர்' காலையில் தோன்றியது எனக் காலை வண்ணனையுடையது. கடலாடு காதையின் கருப்பொருண்மைக் கூறதாய் இவ்வெண்பா அமையவில்லை. எனினும்,

பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணம் காட்ட
வெள்ளி விளக்கம் நள்ளிருள் கடிய
(கடலாடு காதை 115-117)

எனவரும் இக்காதைப் பகுதியை விளக்குவதாக நுவல் பொருளால் ஒத்துள்ளது. அந்தி மாலைச் சிறப்புச் செய்காதை போன்று, இக்காதையுள்ளும் மூலத்தை யொட்டியதாக வெண்பா அமையாது, அடியார்க்கு நல்லார் உரைக்குப்பின்னர் அமைந்துள்ளதை டாக்டர் உ. வே. சா. பதிப்பிலும் பிற பதிப்புகளிலும் காணலாம்.

வேனிற்காதைக்குப் பின்னர் மூலத்தின் பின் அமைந்த தாய் 'செந்தாமரை விரிய' 'ஊடினீரெல்லாம்' எனத் தொடங்கும் இரு வெண்பாக்களுள. அரும்பதவுரை காரரின் உரைக் குறிப்பு இவ்விரு வெண்பாக்களுக்குமுளது. 'இது கூனி ஓலை கொண்டு செல்லுகின்ற காலத்துத் தன்னுள்ளே சொல்லியது; கோவலனுக்கு அவள் சொல் லியதூஉமாம்' என முதல் வெண்பாவிற்கும், 'சாற்ற நீடிய கானலிற் பாட்டிலே வருந்தினுய்' என இரண்டாம் வெண்பாவிற்கும் அரும்பதவுரைகாரர் விளக்கமுரைத்தனர். அரும்பதவுரைகாரர் குறிப்பிடும் வெண்பாக்களின் நுவல் பொருண்மைக்குக் காதையின் மூலப்பகுதியில் குறிப்பில்லை.

'மாலை வாங்கிய வேலரி நெடுங்கண்
கூல மறுகிற் கோவலற் களிப்ப'
(வேனிற்காதை 72-73)

என்று மட்டுமே மூலப்பகுதி அமைந்துள்ளது. இங்ஙனம் இவ்வெண்பாக்கள் மூலப்பகுதியில் கூறப்படாச் செய் தியை விளக்குவனவாகவும் அமைந்துள்ளன என இதனல் அறியலாம். இவனுள்ள இருவெண்பாக்களில் பின்னுள்ள வெண்பா ஒன்றற்கு மட்டுமே அடியார்க்கு நல்லாருரை அமைந்தது.

கனாத்திறமுரைத்த காதையில் மூலப்பகுதியின் பின்னே 'காதலி கண்ட' எனத் தொடங்கும் வெண்பாவிற்கு அடியார்க்கு நல்லாருரையும், அரும்பத உரைகாரர் குறிப்பும் அமைந்துள. இப்பா கனாத்திறமுரைத்த காதையின் கருப்பொருளோடு தொடர்புடையதாக விளங்குவது. அன்றியும்,

வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சியா முன் (கனாத். காதை 78-79)

எனவரும் காதையின் இறுதியடிகள் இவ்வெண்பாவின் இறுதியடிகளாகவும் அமைந்துள்ள சிறப்பு சுட்டத்தக்கது. இவ்வெண்பாவில் குறிப்பிடப்பெறும் 'மாதவி தன்சொல்' என்பது 'காலை காண்குவம்' என வேனிற் காதையில் மாதவியின் கூற்றாக வரும் வார்த்தை எனப் பொருளமைதிகொண்டு முந்திய காதையோடு இவ்வெண்பா தொடர்ச்சி பெற்று விளங்குவதையும் அரும்பதவுரைகாரர் குறிப்பிடுவர்.

நாடுகாண் காதையில் இறுதியிலமைந்த 'காலையரும்பி' எனத்தொடங்கும் வெண்பா புகார்க் காண்டத்தின் இறுதியில் அமைந்துள்ளமையால் புகார் நகர வாழ்த்துப் பொருண்மைத்தாய் விளங்கிற்று. காதைக் கருப்பொருண்மையோடு இயைபுடையதாக விளங்கவில்லை. காண்டத்தின் இறுதியிலமைந்த காண்டக் கட்டுரைக்குப் பின்னர் இடம் பெற்றுள்ள இவ்வெண்பாவுக்கு அடியார்க்கு நல்லாருரையும், அருப்பதவுரைகாரர் குறிப்பும் இல.

மதுரைக் காண்டத்தில் கொலைக்களக் காதைக்குப் பின்னர் அமைந்த 'நண்ணும் இருவினையும்' எனத் தொடங்கும் வெண்பாவிற்கு உரையாசிரியர் இருவர் உரையும் உள. காதையின் கருப்பொருளை விளக்கி அறமுரைப்பதாகவும் இவ்வெண்பா அமைந்துளது.

வழக்குரைகாதையின் இறுதியிலமைந்த மூன்று வெண்பாக்களில் 'அல்லவை செய்தார்க்கு' எனத் தொடங்கும் முதல் வெண்பாவிற்கு மட்டும் அரும்பத வுரைகார் குறிப்பமைந்துள்ளது. எஞ்சியனவற்றுக்குக் குறிப்பில்லை. அடியார்க்குநல்லார் உரை,காதைப் பகுதிக்கே இல்லையாதலால் வெண்பாக்களுக்கும் இல்லை. இவை மூன்றும் காதைப்பொருளோடு ஒட்டிய பொருண்மை யனவே.

வஞ்சினமாலையின் இறுதியிலமைந்த 'பொற்பு வழு தியும்' எனத் தொடங்கும் வெண்பா முன்னுள்ள வஞ் சினமாலை, பின்னுள்ள அழற்படுகாதை ஆகியவற்றின் பொருண்மையை விளக்குவதாய் அமைந்தது. டாக்டர் உ.வே.சா. 'இவ்வெண்பா சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை' எனக் குறிப்புரைப்பர்.

'மாமகளும்' எனத் தொடங்கும் வெண்பா அழற்படு காதையின் பின்னே உள்ளது. காதைக் கருப்பொருளோடு தொடர்புடையதாய் விளங்கும் இவ்வெண்பாவிற்கு அரும் பதவுரைகாரர் குறிப்புரை உண்டு. மதுரைக் காண்டத் தின் இறுதிக் காதையாகிய கட்டுரை காதையில் 'தெய்வந் தொழாஅள்' எனத் தொடங்கும் வெண்பா இடம் பெற்றுள்ளது. புகார்க் காண்ட இறுதியிலுள்ளது போன்று காண்டக் கட்டுரைக்குப் பின்னே இல்லாது, முன்னரே மூலத்தையொட்டி இவ்வெண்பா இங்கு இடம் பெற்றது. இவ்வெண்பாவிற்கும் அரும்பதவுரைகாரர் குறிப்புரையுண்டு.

உரையாசிரியர்கள்

சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள இவ்வெண்பாக் களில் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதி மூன்று வெண் பாக்களுக்கு அமைந்துள்ளதும், அரும்பதவுரைகாரர்

குறிப்பு ஏழு வெண்பாக்களுக்கு அமைந்துள்ளதும் பட்டியலால் புலனும். அரும்பதவுரைகாரர் அடியார்க்கு நல்லார்க்குக் காலத்தால் முந்தியவர். அரும்பதவுரைகாரர் ஏழு வெண்பாக்களுக்குக் குறிப்புரை எழுதியிருக்கவும், அடியார்க்குநல்லார் அவற்றனுள் மூன்றிற்கு மட்டுமே உரையெழுதி எஞ்சியவற்றுக்கு எழுதாது விடுத்தார். வழக்குரைகாதை முதலாக உள்ள மூலப்பகுதிகளுக்கு அடியார்க்குநல்லார் உரை இல்லாமையால் அப்பகுதி முதலாக வரும் காதைகளின் பின்னர் அமைந்த வெண் பாக்களுக்கும் அவர் உரை இல்லாதிருத்தல் இயல்பே. வழக்குரை காதைக்கு முன்னுள்ள பகுதியில் அரும்பதவுரை காரர் குறிப்புரை வரைந்த பாடல் ஒன்றனுக்கு மட்டுமே அடியார்க்கு நல்லார் உரையெழுதாது விடுத்தார் என்னும் செய்தி பட்டியலால் தெளிந்தாம். உரைபோக்கில் வெளிப்படையாய் உள்ளனவற்றிற்கு உரையெழுதாது விடுத்துப்போகும் போக்குண்டு. அம்முறையில் இப் பாடலுக்கு அடியார்க்குநல்லார் உரை அமையாதிருக் கலாம். எஞ்சிய எட்டு வெண்பாக்களுக்கு அரும்பத வுரைகாரர் குறிப்பும் அடியார்க்கு நல்லார் உரையும் இல. வெள்ளிடைப் பொருளவாய வெண்பாக்களுக்கு இவர்கள் அருஞ்சொல் குறிப்பு அல்லது உரை வரையாது விடுத் தனர் போலும்!

இம்முறையில் அமைதிகொள்ள, இவ்வெண்பாக்கள் உரையாசிரியர்கள் காலத்துக்கு முன்னர்த் தோன்றியனவே என்பது வெள்ளிடைமலை.

பாடியவர் யார்

உரையாசிரியர்கள் காலத்துக்கு முன்னர் எழுந்த இவ்வெண்பாக்கள் நூலாசிரியரால் எழுதப்பட்டனவா, அன்றி நூலாசிரியர் காலத்துக்குப் பின்னர் எழுந்தனவா என்பது சிந்தித்தற்குரித்து. காப்பியக் கதையை வெண்பா

யாப்பில் பாடும் மரபு இருந்தது; பாரத வெண்பா என்னும் நூற்பெயர் மரபுக்குச் சான்று பகரும். சிலப்பதிகாரக் கதை, வெண்பா யாப்பில் பாடப்பெற்றுள்ள திரட்டொன்று இருந்திருக்க வேண்டும், அந்நூலிலுள்ள வெண்பாக் களாகவே இவ்வெண்பாக்கள் இருத்தல் வேண்டும் என இவற்றின் தோற்றம் குறித்துக் கருதவியலும்.

யாப்பருங்கல விருத்தியுரையில் பண்டைய கவிஞர் களால் பாடப்பெற்ற செய்யுட்களுக்குப் பெயர் வைத்தல் பற்றிக் கூறுங்கால்,

கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
ஒண்செங் குருதியுள் ஓஓ கிடந்ததே-கெண்டிக்
கெழுதகைமை இல்லேன் கிடந்தூடப் பன்னுள்
அழுதகண் ணீர்துடைத்த கை

என்ற வெண்பாவைச் சுட்டி இது பத்தினிச் செய்யுள் என்ற நூலுக்குரியது என்றும், இதற்கு ஆரிடப் போலி அல்லது ஆரிடவாசகம் என்ற பெயர் உரியது என்றும் உரையாசிரியர் மொழிகுவர்[1]. இது சிலப்பதிகாரக் காப்பியக் கதையுள், கோவலன் இறந்து கிடக்கும் காட்சி கண்டு கண்ணகி பாடுவது போன்றுள்ளது. இப்பாடலைக் கண்ணகியின் கூற்றுக ஏற்றுக்கொண்டால், பத்தினிச் செய்யுள் என்னும் இந்நூலிலிருந்தே சிலப்பதிகார வெண்பாக்கள் இடம் பெற்றிருத்தல் கூடும் எனவும் எண்ணுதற்கு இடனுண்டு.

இனி, கம்பராமாயணத்துள் அமைந்த வெள்ளிப்பாடல் கள் போன்று, சிலம்புச் சுவையில் சிந்தனை தோய்ந்த சுவைஞர்களால் அவ்வப்போது இவ்வெண்பாக்கள் பாடப் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதுவதும் பிழையன்று.

'சிலப்பதிகார வெண்பா' நூல் இருந்தமைக்குச் சான்று பகரும் குறிப்புக்கள் இல. பத்தினிச் செய்யுளில் அமைந்த

1. யாப். செய். நூ. 93, உரை மேற்கோள்

பாடல் வழூச் செய்யுளாதலின், இத்தகைய செய்யுட்கள் அமைந்த நூலொன்று வழங்கியதாகவும், சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற வெண்பாக்கள் இவ்வழூச் செய்யுள் நூலுக் குரியனவே என்று கொள்வதும் பொருந்தாப் போலிகள். சுவைஞர்களால் செய்யப்பட்டதென்பதும் சான்றில்லாப் பிழைக் கூற்று. எனவே சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற இவ்வெண்பாக்கள் சிலப்பதிகாரத்தை இயற்றிய அடிகளாரின் திருவாக்காகவே கொள்ளுதற்குரியவை எனக் கருதுவது சால்புடைத்து[1a].

உரையாளிகள் சான்றுரை

இவ்வெண்பாக்கள் இளங்கோவடிகளால் பாடப் பெற்ற பெருமைக்குரியனவேயாம். தான் பாடும் காப்பியத் தின் கதை விளக்கத்துக்காகவும் கருத்து விளக்கத்துக் காகவும் இத்தகைய வெண்பாக்கள் சிலவற்றைச் சில காதைகளின் பின்னர் இளங்கோவடிகளே பாடியிருத்தல் வேண்டும். இக்கருத்தை உறுதிப்படுத்தும் சான்றுரைகளை அரும்பதவுரைகாரர் அடியார்க்குநல்லார் ஆகியோர் குறிப் பிட்டுள்ளனர். கொலைக்களக் காதையின் இறுதியில்,

நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகிதன் கேள்வன் காரணத்தான் - மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை

எனவரும் வெண்பா இடம் பெற்றுள்ளது முன்னர்ச் சுட்டப் பட்டது. இவ்வெண்பாவிற்குக் குறிப்புரை வரைந்த பின்னர், 'கண்ணகிதன் கேள்வன் காரணமாக வளைந்தது; இது பண்டை வினை; இருவினையும் நண்ணும், ஆதலால் உலகத்தீர், அறஞ்செய்மின் என்று இளங்கோவடிகள்

1a. சிலப்பதிகார வெண்பாக்கள் இளங்கோவடிகள் பாடியவை அல்ல என்று கருதுவோரும் உண்டு. அக்கருத்து ஏற்கத்தக்கதன்று. இரண்டு அல்லது மூன்று வெண்பாக்கள் நீங்கலாக மற்றவை இளங்கோவடிகளால் பாடப் பட்டவை என்பதில் ஐயமில்லை - ம. பொ. சி. சிலப்பதிகாரத் திறனாய்வு - பக். 115.

அருளிச் செய்தது'[2] என்று அரும்பதவுரைகாரர் கூறியுள்ளார். அடியார்க்குநல்லாரும் 'பாண்டியன் முன்செய்த தீங்கின் விளைவாகி வந்த வினையாலே மண்ணில் வளையாத செங்கோல் கண்ணகிதன் கேள்வன் முன்னிலையாக வளைந்தது; ஆதலால் செய்தானொருவனை இருவினையும் நண்ணுமென்பதனையறிந்து, உலகத்தீர், நல்வினையே செய்யுமின்கள் என்று அடிகள் கூறினரென்க'[3] என்று குறிப்பிட்டுள்ளார்.

அரும்பதவுரைகாரர், அடியார்க்குநல்லார் ஆகியோர் குறிப்புக்களால் 'நண்ணும் இருவினையும்' எனத் தொடங்கும் இவ்வெண்பா இளங்கோவடிகளாலேயே எழுதப் பெற்றது என்பதையறியலாம். இவ்வெண்பாவைப் போலவே பிற வெண்பாக்களையும் இளங்கோவடிகளே எழுதியிருத்தல் வேண்டும்என்று கொள்ளுதல்பிழையன்று.

சிலப்பதிகாரம் நாடக வழக்குக்குரிய நாடகக் காப்பியம். கவிஞன் நாடகக் காப்பியக் கதையோட்டத்தினின்று உலகத்தார்க்கு அறிவுறுத்த விரும்பும் அறவுரைகள் பல உள. இத்தகைய அறக் கருத்துக்களைப் பாடுதற்கு வெண்பா யாப்பு வாய்ப்பும் பொருத்தமும் உடையது. 'நீதி வெண்பா' என யாப்பருங்கல உரையால் அறியப்படும் நூலின் பெயரும் இவ்வுண்மையைத் தெளிவிக்கும். எனவே, நாடகக் காப்பியனாய இளங்கோவடிகள் காப்பியக் கதையோட்டத்தினின்று தனித்து நின்று, கதையோட்டத்தால் அறிவுறுத்த விரும்பும் அறிவுரைகளையும் அறவுரைகளையும் இவ்வெண்பா யாப்பில் பாடிச் சேர்த்தார் எனக் கொள்வதே எல்லாவகையாலும் ஏற்புடைக் கருத்தாம்.

2. சிலம்பு கொலை. காதை-அரும். உரை - குறிப்பு

3. சிலம்பு. கொலை. காதை-பக். 436. டாக்டர் உ. வே. சா. பதிப்பு

இவ்வெண்பாக்களுள் மண்மேல் நிலையாமை கண்டவர்போல் என வரும் தொடரால் காஞ்சிப் பொருண்மை கூறப்பட்டது. 'வினைகடைக் கூட்ட வியங்கொண்டான்' என்பது ஊழின் வலியை உணர்த்துவது. 'நண்ணும் இருவினையும், நண்ணுமின்கள் நல்லறமே' என்பது அறம் செய்ய வேண்டிய இன்றியமையாமையை இனிதுணர்த்தும். இடையிடையே காதைப் பொருண்மைக்கரு அமைந்த பாடல்களும் இடம்பெற்றன. மேலும் முதல் வெண்பாவில் நிலையாமைக் கருத்தில் தொடங்கிய இளங்கோவடிகள் இறுதி வெண்பாவில் பத்தினி வழிபாட்டை வலியுறுத்தி முடிப்பர். இவ்வமைப்பு இளங்கோவடிகளின் இயல்'புள்ளமாய துறவினையும், குறிக்கோளுள்ளமாய பத்தினி வழிபாட்டையும் குறிப்பால் உணர்த்தியது என்று கொள்ளுதற்கும் வாய்ப்பினைத் தந்தது.

கருத்தொற்றுமை

'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்பதைக் காப்பியத்தின் முப்பெருங் குறிக்கோள்களில் ஒன்றாகப் பதிகம் கூறியுள்ளமைக்கேற்ப,

காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென்
(கொலை. காதை 216-217)

எனக் கொலைக்களக் காதையின் இறுதியடிகள் அமைந்துள்ளதும், இவற்றுக்கேற்ப 'மண்ணில் வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை விளைவாகி வந்த வினை' என இவ்வெண்பாவின் இறுதியடிகள் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கன.

பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
(வரந்.காதை 186-187)

என இளங்கோ கூறும் அறவுரைப் பகுதிக்கேற்பவே 'நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே' என வரும் வெண்பாவடி அமைந்துள்ளது. இளங்கோ, உலக மக்கள் நல்லறம் செய்து நன்மை பெற வேண்டும் என்னும் கருத்துடைய துறவியராதலால் இத்தகைய அருள்வாக்கு களைக் கூறினர். இதனால் இவ்வெண்பாக்கள் காதை களுக்குப் புறமாய் அமைந்தனவெனினும் இளங்கோவின் கருத்துக்குப் புறமாயவையல்ல என்பது பெறப்படும். காதைகளில் இளங்கோவின் உள்ளம் வெளிப்படுதல் போன்று இவ்வெண்பாக்களிலும் வெளிப்படுகின்றன.

யாப்பு நெறி

இப்பதினைந்து வெண்பாக்களிலும் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகை வெண்டளைகள் மட்டும் இடம் பெற்றுள. கீழே வரும் பட்டியல் இதனையுணர்த்தும்.

எண்	காதை	வெண்பா-தொடக்கம்	இ. வெ.	வெ. வெ.
1	மனையறம் படுத்த காதை	தூமப் பணிகள்	6	8
2	அரங்கேற்று காதை	எண்ணும் எழுத்தும்	7	7
3	அந்திமாலை. காதை	கூடினார்பால்	6	8
4	கடலாடு காதை	வேலைமடல்தாழை	5	9
5	வேனிற்காதை	செந்தாமரை	8	6
	,,	ஊடினீர்	7	7
6	கனாத்திற. காதை	காதலிகண்ட	9	5
7	நாடுகாண் காதை	காலையரும்பி	10	4
8	கொலைக்களக் காதை	நண்ணும் இருவினையும்	7	7
9	வழக்குரை காதை	அல்லவை	6	8
	,,	காவிஉகுநீரும்	7	7
	,,	மெய்யிற்	5	9
10	வஞ்சினமாலை	பொற்புவழுதியும்	5	9
11	அழற்படுகாதை	மாமகளும்	5	9
12	கட்டுரை காதை	தெய்வந்தொழாள்	10	4

தொடக்க அமைப்பு

சிலப்பதிகாரத்துள் இடம் பெற்றுள்ள இவ்வெண் பாக்கள் அனைத்தும் நேர் வாய்ப்பாட்டசையால் தொடங்குவன. நூலுள்ளும், வாழ்த்துக் காதையில் இசைப்பாவாய் இடம் பெற்ற நேரிசை வெண்பாவும்[4] நேர்வாய்பாட்டசையால் தொடங்குவதாக அமைந்திருப்பதும் இத்துடன் ஒப்புநோக்கத்தக்கது. வாழ்த்துக் காதையின் இறுதியில் இடம் பெற்ற அரசவாழ்த்துப் பாடலும் நேரசையால் தொடங்குவதாகவே அமைந்துள்ளது. ஆனுல் குன்றக் குரவையுள் பஃறொடை வெண்பாக்கள் இரண்டும் நிரை வாய்ப்பாட்டுச் சீரால் தொடங்குவனவாக உள. இவ் வமைப்பை நோக்குழி, தொல்காப்பியரால் அளவியல் வெண்பா எனக் குறிப்பிடப் பெற்ற நேரிசை, இன்னிசை வெண்பாக்கள் நேர்வாய்ப்பாட்டு அசையால் தொடங்குவது சிறப்புடையதாக இளங்கோவடிகள் காலத்தில் கருதப்பட்டிருக்கலாம் என எண்ணவியலும்.

ஈறுகள்

வெண்பாவின் ஈறுகள் நாள், மலர், காசு, பிறப்பு, என்ற வாய்ப்பாடுகளுக்குரியனவாய் அமையலாம் என்பர் காக்கைபாடினியார் முதலிய யாப்பியலார். சிலப் பதிகாரத்தில் அமைந்த வெண்பாக்கள் இந்நால்வகை வாய்ப்பாடுகளுக்கும் உரியனவாய் உள்ளன.

நாள் வாய்பாடு தேர்(4) காண்(6) முன்(7) காண்(10) (கூடாயி)ஞன்(11); மலர் வாய்பாடு - மனம்(5) புகார்(8) வினை(9) உயிர்(12); காசுவாய்பாடு- நின்று(1) வந்து(2) மற்று(13) மாது(14); பிறப்பு வாய்பாடு - பொழுது(3) விருந்து(15).

4. வானவன் எங்கோ மகளென்றும் வையையார்
கோனவன்றான் பெற்ற கொடியென்றாள் - வானவனை
வாழ்த்துவோம் நாமாக வையையார் கோமானை
வாழ்த்துவாள் தேவ மகள் - வாழ், காதை. 12

விகற்பங்கள்

இந்நேரிசை வெண்பாக்கள் அனைத்தும் இருவிகற்பங்களால் அமைந்தனவேயாம். முதல் இரண்டடியும் ஒரு விகற்பமாகவும், பின்னிரண்டடிகள் மற்றொரு விகற்பமாகவும் இப்பாடல்கள் அமைந்துள்ளன. அந்திமாலைச் சிறப்புச் செய்காதையில் உரையின் பின்னே அமைந்த,

கூடினார் பானிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே-கூடிய
மாதவிக்குங் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்குங் கங்குற் பொழுது

எனவரும் பாடல் ஒன்றில் மட்டும் முதலடி ஒரு விகற்பமாகவும் இரண்டாமடி ஒரு விகற்பமாயும், பின்னிரு அடிகள் ஒரு விகற்பமாயும் அமைந்துள. எனினும் முன்னிருஅடிகள் உயிரெதுகையாய்க் கொள்ளுதற்குரியன. இவ்வமைப்பால், இளங்கோவடிகள் காலத்தில் நேரிசை வெண்பாக்கள் இரு விகற்பமுடையனவாய் அமைதல் சிறப்பு எனக் கருதப்பட்டிருக்கலாம் எனக் கருத இயலும்.

தனிச்சொல்

இவ்வெண்பாக்கள் அனைத்தும் முதல் தொடைக்கேற்ற தனிச் சொல்லைச் சிறப்புறப் பெற்றமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. முதலடியின் முதற்சீர், இரண்டாமடியின் முதற்சீர், தனிச்சொல் முதலியன பின் வரும் பட்டியலில் சுட்டப்பட்டுள்ளன.

எண்	பாடல் தொடக்கம்	முதலடியில் முதற்சீர்	இரண்டாம் அடியில்முதற்சீர்	தனிச்சொல்
1	தூமப்பணிகள்	தூமம்	காமர்	நாமம்
2	எண்ணும்	எண்ணும்	பண்ணின்ற	மண்ணின்
3	கூடினார்பால்	கூடினார்	காவலன்	கூடிய
4	வேலைமடல்	வேலை	மாலை	காலை
5	செந்தாமரை	செந்தாமரை	ஐந்தார்	கொந்தார்
6	ஊடினீர்	ஊடினீர்	கூடுமின்	நீடிய
7	காதலிகண்ட	காதலி	மாதவி	மூதை
8	காலையரும்பி	காலை	மாலை	வேலை
9	நண்ணும்	நண்ணும்	கண்ணகி	மண்ணில்
10	அல்லவை	அல்லவை	பல்லவை	பொல்லா
11	காவிஉகுநீரும்	காவி	ஆவி	பாவியேன்
12	மெய்யிற்	மெய்யிற்	கையிற்	வையைக்கோன்
13	பொற்புவழுதியும்	பொற்பு	விற்பொலியும்	கற்புள்ள
14	மாமகளும்	மாமகளும்	கோமகளும்	நாம
15	தெய்வம்	தெய்வம்	தெய்வம்	தெய்வமாய்

முன்னர்ச் சுட்டிய 'கூடினார் பானிழலாய்' எனத் தொடங்கும் பாடல் ஒன்று தவிர, பிற பாடல்களில் முதல் தொடைக்கேற்ற தனிச்சொல் அமைந்த சிறப்பு நோக்கத் தகும்.

திருக்குறட் கருத்துக்கள்

இளங்கோவடிகள், காதையின் கருப்பொருளை விளக்குவனவாயும், காதையில் விளக்கம் பெருப் பகுதிகளைத் தெளிவுறுத்துவனவாயும் அறவுரைக் கருத்துக்களைச் சுட்டுவனவாயும் இவ்வெண்பாக்களைப் பாடியுள்ளார்

என்பது முன்னர்க் கூறினோம். சிறந்த நீதி இலக்கியமாய திருக்குறளின் சுவையிலும் கருத்திலும் கற்றுத் தோய்ந்த இளங்கோவின் புலமை நெஞ்சினையும் அவர்தம் பிறவிலக்கியப் புலமையறிவையும் இவ்வெண்பாக்களும் நூலைப் போலவே உரைகல்லாக நின்று விளக்குகின்றன.

அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை[5]

எனவரும் திருக்குறட்பாவின் கருத்தே 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்' என நூலின் குறிக்கோளில் ஒன்றாக விளக்கப்படுவதோடு,

அல்லவை செய்தார்க் கறம்கூற்ற மாமெனும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே-பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் தேவி
கடுவினையேன் செய்வதூஉங் காண்

என்ற வெண்பாக் கருத்தாகவும் விளங்குகின்றது. நான்மணிக்கடிகை,[6] மூதுரை[7] ஆகிய நீதி இலக்கியங்களுள்ளும் இவ்வறக் கருத்து விளக்கப்பட்டுள்ளது.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை[8]

எனவரும் திருக்குறட்பாவின் கருத்தே,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்-தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து

எனவரும் வெண்பாவில் பொன்னேபோல் பொதிந்து வைக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் இவ்வெண்பாக்கள்

5. திருக்குறள் - 555
6. நான்மணிக்கடிகை - 84
7. மூதுரை - 27
8. திருக்குறள் - 55

காதைகட்குப் புறமாய் அமைந்தனவேயன்றிக் காப்பிய னின் நெஞ்சிற்குப் புறமாய் அமைந்தவை அல்ல என்பது இனிதுரைப்படும்.

திருக்குறள் முதலிய முன்னோடி நீதி இலக்கியங்களைப் பொன்னேபோல் போற்றும் இளங்கோவின் நெஞ்சம் இதனால் புலனாம். இளங்கோவடிகளால் பாடப்பெற்ற இவ்வெண்பாக் கருத்துக்கள் பலவும் பிற்கால இலக்கியங் களில் வாழையடி வாழையாய் வாழ்கின்றன.

பதிகம்

சிலப்பதிகாரப் பதிகம் குறளடியும், சிந்தடியும் இடையே பெற்றுத் தொண்ணூறு அளவடிகளால் அமைந்த பகுதி. சிலப்பதிகாரம் எழுந்த வரலாற்றையும், சிலப்பதிகாரக் காதைகளின் பெயர்களையும் இப்பதிகம் இனிதுற விளக்கும்.

தொல்லிலக்கணமாகிய தொல்காப்பியத்துள் பாயிரம் என்னும் பகுதி சிறப்புற விளங்குகின்றது. சங்க இலக்கியத் தொகுதியுள் அமைந்த பதிற்றுப்பத்தில் பதிகம் என்ற பெய ரால் பாயிரம் வழங்கப்படும்.

பாடியது யார்?

பதிகம் பாடுவது நூலாசிரியனுக்கு உரியதன்று.

தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் தருமுறை காரனென்
றின்னோர் பாயிரம் இயம்புதல் கடனே[9]

என்வரும் நூற்பாவால் பாயிரம் பாடுதற்குரியார் இவரெனச் சுட்டப்பட்டது. இளங்கோவடிகள் காலத் திருந்த மணிமேகலையாசிரியர் சாத்தனே இப்பதிகம் பாடி யிருக்கலாம். சாத்தனைப் பற்றிய பதிகச் செய்தி படர்க்கை

9. நன்னூல் - நூ. 51

இடத்ததாக இருப்பினும் தன்னைப் பிறன்போல் கூறும் செய்யுள் நெறிக்கேற்ப இது அமைந்திருக்கலாம் என்று கருதுவது பிழையாகாது.

'தண்டமிழாசான் சாத்தன்' எனவரும் சிலப்பதிகாரத் தொடர், செங்குட்டுவற்கும் இளங்கோவிற்கும் சாத்தனே தமிழாசானாய் விளங்கியிருக்கலாம் என்னும் குறிப்பினை உணர்த்திற்று. இம்முறையில் ஆசிரியனாய் அமைந்த சாத்தனாலேயே இப்பதிகம் பாடப்பெற்றிருத்தல் வேண்டும் எனக்கொள்வது பெரிதும் ஏற்புடைக் கருத்தேயாம்.

பொதுப்பாயிரம்

இப்பதிகம் சிலம்பின் பொதுப்பாயிரமாகக் கொள்ளும் பொருண்மைத்து. நூல்வரலாறு, நூல்இயற்றிய ஆசிரியன் வரலாறு, நூல் நுவலப்படும் திறம், கேட்போன் திறம், கேட்கப்படும் இயல்பு ஆகிய ஐவகைச் செய்திகள் இதனுள் இடம்பெற்றுள எனலாம்.

சிலப்பதி கார்ம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்
(பதி. 59-60)

என்பதால் இந்நூல் முதல்நூல் என நூல்வரலாறும்,

குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்கு (பதி. 1-2)

என்பதால் நூலியற்றிய ஆசிரியன் பற்றிய குறிப்பும்,

அரசியல் பிழைத்தோர்க் கறம்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாக (பதி. 55-58)

என்பதால் நூல் நுவலப்படும் திறமும்,

மதுரைக் கலவாணிகன் சாத்தன் கேட்டனன் (பதி. 89)

என்பதால் நூல் கேட்போன் திறமும்,

இவ்வா றைந்தும்
உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள (பதி. 86-88)

என்பதால் நூல் கேட்கும் செய்தியும் இப்பொதுப் பாயிர மாகிய பதிகத்துள் உணர்த்தப்பட்டன. பதிகம் என்னும் பெயரால் இளங்கோவடிகள் காலத்திலேயே பொதுப் பாயிரம் சுட்டப்பட்ட நெறி இதனாற் பெற்றும்.

யாப்பமைதி

இப்பதிகம் அமைந்த யாப்பு வகையைக் குட்டச் செந்தூக்கு என்னும் என்னும் பெயரால் அடியார்க்கு நல்லார் கூறுவர். குட்டம் என்பது குறைந்து வருவது; செந்தூக்கு என்பது ஆசிரியம். எனவே குட்டச் செந்தூக் காவது இணைக்குறளாசிரியம் என்று பிற்காலத்தோர் குறிப்பிடும் யாப்பு வகையாம்.

இணைக்குறளாசிரியத்தின் இலக்கணத்தைத் தொல் காப்பியர் நேர்முறையில் பெயர் குறிப்பிட்டுக் கூறவில்லை. எனினும், 'இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே'10 என்ற நூற்பாவால் ஆசிரியப்பாவின் இடையில் முச்சீரடி வருதல் உண்டு என்று குறிப்பிடுவர். பேராசிரியர் 'இடையடி இரண்டுமாகி' எனவும் நச்சினார்க்கினியர் 'இடையிரண்டு இணைந்து வருதல்' எனவும் இப்பகுதிக்கு உரைவிளக்கம் கூறுப. உரையாசிரியர்கள் விளக்கங் களையும் மேற்கோட் பாவையும் நோக்குழி, இடையில் இரண்டு முச்சீரடிகள் இணைந்து வருவதையே இப்பா வகையின் இலக்கணமாக உரையாசிரியர் சுட்டினர் என்பது தெளிவு. இடையில் இரண்டு முச்சீரடிகள்

10. தொல். செய். இளம். நூ. 66

இணைந்து வருவது என்பது தொல்காப்பிய நூற்பா அமைப்பினுல் பெறப்படவில்லை. எனினும் உரையாசிரியர்கள் பின்றை யாப்பிலக்கணிகள் கூறும் இணைக்குறளாசிரியப் பாவின் இலக்கணத்தைக் கருத்தில் கொண்டே இடையில் இருமுச்சீரடிகள் இணைந்து வருவது எனப் பொருளுரைத்தனர் போலும்!

தொல்காப்பிய விதி காக்கைபாடினியத்துள் முரணியது. இடையில் குறைந்து வரும் அடிகள் முச்சீரடியாகவே இருத்தல் வேண்டும் என்ற வரையறையும் அவையும் இணைந்தே வருதல் வேண்டும் என்ற வரையறையும், காக்கைபாடினியத்தில் சுட்டப்படவில்லை.

அளவடி அந்தமும் ஆதியும் ஆகிக்
குறளடி சிந்தடி என்று யிரண்டும்
இடைவர நிற்பது இணைக்குறள் ஆகும்[11]

என்பது காக்கைபாடினிய நூற்பா. முதலடியும் இறுதி அடியும் மட்டும் அளவடியாகவர, இடையில் குறளடியும் சிந்தடியும் வரப்பெறும் என்பது நூற்பாக் கருத்து. இரு முச்சீரடிகள் இணைந்து வருதல் வேண்டும் என்ற தொல்காப்பிய உரையாசிரியர் கருத்து, இவண் சுட்டப்பெருமை அறிதற்குறித்து.

இணைக்குறளா? இடைக்குறளா?

இணைக்குறள் என்பது குறளடிகள் இணைந்துவர வேண்டும் என்றோ, இணையடிகள் குறுகிவர வேண்டும் என்றோ இருவகையில் பொருள்படும். பிறவகையில் பொருள்படாது.

தொல்காப்பியர், காக்கைபாடினியார் அல்லா[illegible] யாப்பியலார் இப்பாவகையின் இலக்கணத்தைப் பி[illegible]ரு மாறு சுட்டுப.

11. யாப். விருத். செய். நூ. 19 உரைமேற்கோள்

'காமருசீர் இடைபல குன்றின் இணைக்குறள்'[12]
'இணைக்குறள் இடைபல குறைந்திறல் இயல்பே'[13]
'இடையிடை சீர்தபின் இணைக்குற ளாகும்'[14]
'இணைபாம் ஏற்ற அடியின் இடைபல குறைந்தன'[15]

தொல்காப்பியர் 'இடையும் வரையார்' என்று சுட்டுவதையும், காக்கைபாடினியார் 'இடைவர நிற்பது' என்று கூறுவதையும், பிற யாப்பியலார் விளக்கங்களையும் ஒருங்கு நோக்குழி, இடையில் குறைந்து வருவதே இப்பாவின் இலக்கணமாய் வரையறை செய்யப்பட்டது தெளிவு. நாற்சீரினின்று இடையில் குறைந்து வருதல் என்னும் பொருண்மைக்கு ஏற்ப, தொல்காப்பியர் காலத்தில் அல்லது அதற்கு முன்னர் இப்பாவகையின் பெயர் இடைச்குறள் ஆசிரியப்பா எனச் சுட்டடப்பட்டிருக்கலாம் என்றும் கூற இயலும். காக்கைபாடினியார் காலத்து,இடையில் குறளடி சிந்தடி ஆகிய இணையடிகள் குறைந்துவரும் நெறி நிலவிய போது, இப்பாவகையின் பெயரும் இணைக்குறளாசிரியப்பா என வழங்கியிருக்கலாம். இணைமோனை என்பது அடுத்தடுத்து அமைந்த இருசீர்களைக் குறித்தாங்கு,இணைக்குறள் என்பதும், அடுத்தடுத்து அமைந்த குறளடி, சிந்தடி ஆகிய இணையடிகளைக் குறித்திருக்கலாம். எனவே இடையில் குறைவது என்னும் பொருண்மை,இணையடிகள் குறைவது என்னும் பொருண்மையைக் குறித்ததாய் மாறியிருக்கக் கூடும். எனினும் யாப்பருங்கலக் காலத்தில் இவ்வரையறை முற்றும் தளர்ந்தது. இடையில் குறளடியோ, சிந்தடியோ எதுவாயினும் பயின்றுவருவது இப்பாவகையின் இலக்கணமாயிற்று. 'இணைந்து குறைந்த அடியுடைத்தாகலின் இணைக்குறள் என்பதும் காரணக் குறி' என யாப்பருங்கல விருத்தியுரைகாரர் குறிப்பிடுவது[16] இதனை விளக்கும்.

12. யாப். காரிகை - நூ. 34
13. யாப். விருத்தி நூ. 72
14. யாப். விருத்தி செய். நூ. 19 உரைமேற்கோள்
15. யாப், விருத்தி செய். நூ. 19 உரைமேற்கோள்
16. யாப். விருத்தி செய். நூ- 17 உரைவிளக்கம்

தோற்றத்தின் காரணம்

தொல்காப்பியர், ஆசிரியப்பாவில் வஞ்சிப்பாவிற்குரிய சீர்களும் கலந்து வரலாம் என்பதை,

அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீர்
ஒன்றுத லுடைய ஒரோவொரு வழியே[17]

எனவரும் நூற்பாவால் விளக்குவர். வஞ்சிப்பாவிற்குரிய சீர்கள் வரலாம் என வகுக்கப்பட்ட விதி தளர்ந்து வஞ்சிப் பாவிற்குரிய இருசீரடிகளும் முச்சீரடிகளும் ஆசிரியப் பாவில் இடம்பெறும் நிலை உண்டாகி இருக்கலாம். இம் முறையில் வஞ்சிப்பாவின் தொடர்பு காரணமாக இணைக் குறளாசிரியப்பா தோன்றியிருத்தல் கூடும். அன்றியும் நிலைமண்டிலமாகப் பாடப்பெற்ற நிலை, சில காலத்துக்குப் பின்னர் ஈற்றயலடி குறைவதாகவும், பின்னர் இடை யடிகள் குறைவதாகவும் வளர்ந்தும் இணைக்குறளா சிரியப்பா தோன்றியிருக்கக்கூடும். இங்ஙனம் இணைக் குறளாசிரியத்தின் தோற்றத்திற்குக் காரணங்கள் கூறலாம்.

சிலம்பு காலத்தில் எழுந்த பிறிதொரு காப்பியமாகிய மணிமேகலையின் மூன்று காதைகள் இணைக்குறளாசிரிய மாகவுள. சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, பவத்திறம் அறு கெனப் பாவை நோற்ற காதை ஆகிய மூன்று காதைகளும் இணைக்குறளாசிரியப்பா என்னும் யாப்பு வகைக்குரியன.

பாவின் ஈறு

ஐவகைச் சமயமு மறிந்தன ளாங்கென் (சமய. காதை)
ஐய மின்றி அறிந்துகொள் ஆய்ந்தென் (தவத். காதை)
பவத்திறம் அறுகெனப் பாவைநோற் றனளென்
(பவத். காதை)

17. தொல். செய். இளம். நூ. 30

என்பவை ...கலைக் காதைகளுக்குரிய முடிபுகள். இணைக்குற... ...ப் பாவின் ஈருக 'என்' என்பதே சிலப்பதிகாரப் ...கப் பகுதியுள்ளும் பயின்றது.

பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபென் (சிலப். பதிகம்)

எனவரும் தொடர் 'என்' என்னும் ஈருல் முற்றுப் பெற்றுள்ளது. சிலப்பதிகாரத்தில், நிலைமண்டில ஆசிரியப் பாவுக்கும் 'என்'னீறு சிறப்புடையதாய்ப் பயின்றதை முன்னர்க் கூறினும். இவண், இணைக்குறளாசிரியத்துக்கும் இவ்வீறே பயின்றதை நோக்குழி, இவ்விரு பா வகைகளும் ஈறு வகையால் வேறுபாடின்றிச் சிலப்பதிகாரக் காலத்தில் வழங்கியது புலனும்,

கூன்

பதிகமாகிய இணைக்குறளாசிரியப்பாவில் இறுதியடியின் தொடக்கத்தில் 'இது' என்னும் அசை கூனுகப் பயின்று வந்துள்ளது.

சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே[18]

என்பது தொல்காப்பிய விதி. இங்கு அசையொன்றே நேரடிக்கண் கூனுக வந்துள்ளது. எனினும் பாவின் இடையே 'மடலவிழ்' என்ற சீர் நேரடிக்குரிய கூனுக வந்துள்ளதை நோக்கத் தொல்காப்பிய விதியும் வழுவாது வந்துள்ளதை உணரலாம். இம்முறையில் அசையும் சீரும் இணைக்குறளாசிரியத்தில் கூனுகப் பயின்று வரும் நெறி சிலப்பதிகாரக் காலத்திற்குரியது என அறியலாம்.

குட்டச் செந்தூக்கு

...சிலப்பதிகாரப் பதிகத்தின் யாப்பு வகையைக் குறிப்பிடு... அடியார்க்குநல்லார் இணைக்குறள் ஆசிரியப்பா

18. ...ல். செய். இளம். நூ. 47

என்று கூறுமல் குட்டச் செந்தூக்கு ... ால்காப்பி யத்தை ஒட்டிப் பெயர் கூறியுள்ளார். ...ும் 'அறுபத் தெட்டாமடியுள் "கடலாடு காதையும்" ...க் குறளடியும் "வாழ்த்து வரந்தரு காதையொடு" ... ச் சிந்தடியும் "இவ்வா றைந்தும்" எனக் குறளடியும் வந்து "ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற் றேற்ற முச்சீ...த் தாகுமென்ப" என்ற ஆசிரியர் "இடையும் வரையா...ர் தொடையுணர்ந் தோரே" என்றதனுற் குட்டச் செந்தூ...க் காயிற்று' எனவும் இப்பாவகை குட்டச் செந்தூக்காக... விளங்குதற்குரிய காரணத்தையும் கூறுவர்.

இப்பாவகை, இணைக்குறளாசிரியம் என்னும் பெயரால் வழங்குதற்குக் 'கடலாடு காதையும்' (68) என்னும் குற ளடியும், 'வாழ்த்து வரந்தரு காதையொடு' என வரும் சிந்தடியும் (85) இவ்வா றைந்தும் (86) எனமீட்டும் குற ளடியும் இப்பாவில் வந்தமையே காரணம் என்பதும் இவ் விளக்கத்தால் பெறப்படும்.

குட்டச் செந்தூக்கு என்னும் பெயர் தொல்காப்பி யத்தை அடியொற்றியதாக இருப்பினும், இடையில் இரு முச்சீரடிகள் இணைந்துவரும் இலக்கணம் இதனுள் இல்லை. ஆதலால் காக்கைபாடினிய இலக்கணமே இதனுள் பின் பற்றப்பட்டிருப்பது தெளிவு. எனவே சிலப்பதிகாரப் பதிகம் காக்கைபாடினியார் கூறும் இணைக்குறள் ஆசிரியப்பா என்னும் யாப்பு வகையின் இலக்கணத்தையே பின்பற்றி அமைந்துள்ளது என்பது போதரும்.

பின்வரும் பட்டியல் இவ்விணைக் குறளாசிரியப்பாவில் பயின்று வந்த தளை வகைகளை விளக்குகின்றது.

பாவகை	பகுதி	வெ.வெ.	இ.வெ.	நே.ஆ.	நி.ஆ.	...	...ரு.வ.
இணைக்குறள் ஆசிரியப்பா	பதிகம்	14	169	99	63		

இவ்வாசிரியப் பாவகையுள் ஈரசைச் சீரால் பிறக்கும் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை ஆகியன மிகுதியாகவும், மூவசைச் சீரால் பிறக்கும் வெண்சீர் வெண்டளையும் ஒன்றாத வஞ்சித் தளையும் சிறுபான்மையாகவும் அமையக் காண்கின்றோம்.

உரைபெறு கட்டுரை

காதைகளின் புறத்தமைந்த உறுப்புக்களில் உரைபெறு கட்டுரையும் ஒன்று. உரைபெறு கட்டுரை என்ற தொடருக்கு உரைத்துப் போதுகின்ற கட்டுரை என அரும்பதவுரைகாரரும், முற்கூறிய கட்டுரைச் செய்யுள் என அடியார்க்கு நல்லாரும் உரை கூறுப. மேலும் இப்பகுதிக்கு விளக்கம் தருமிடத்து, 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் உரை சாலடிகளருள, என்றமையால் காப்பியங்கட்குச் சிறுபான்மை இவ்வுறுப்புகளும் சில வருமெனக் கொள்க. என்னை? உரையும் பாடையும் விரவியும் வருமே[19] என்பது அணியியலாகலின்' என்றும் அடியார்க்குநல்லார் குறிப்பிட்டுள்ளார்[20]. இவ்வுரை பெறு கட்டுரை இளங்கோவடிகளால் செய்யப்பட்டது என்பதே அடியார்க்குநல்லார் கருத்தாதலை இவ்வுரைப் பகுதி விளக்கும். எனினும் 'பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் சாந்தி செய்ய' எனவரும் சொற்றொடர் அடிகளார் இயல்புக்கு மாறாயிருத்தலால் அடிகளார் இதனைச் செய்திருக்க மாட்டார் என்றும் கருதுவர்[21].

இனி, பொற்கொல்லரைப் பழிவாங்கிய செய்தியை 'மாவினால் ஆயிரம் பொற்கொல்லர் உருச் செய்து பலியிட்

19. தண்டி. பொது. நூ. 11
20. சிலம்பு. உரைபெறு கட்டுரை - அடி. நல். உரை விளக்கம்
21. இதன்கண் 'பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் சாந்தி செய்ய' என வரும் சொற்றொடரே அடிகளார் இதனைச் செய்திலர் என்பதற்குப் போதிய சான்றாகும் - சிலம்பு - கழகப் பதிப்பு-பெருமழைப் புலவர் பொ. வே. சோ. உரை - பக். 31

டனன்போலும்' என உரைத்து இதனுல் பத்தினித் தெய்வத்தின் பெருமை வெளிப்படுவதோடு இளங்கோவடிகளின் புகழுக்கும் தவநிலைக்கும் இழுக்குண்டாகாது என்றும் இயம்புவர்.[22]

அரும்பதவுரைகாரர் குறிப்பும், அடியார்க்குநல்லாருரையும் இப்பகுதிக்கு அமைந்திருத்தலால், உரைபெறு கட்டுரையாய் இதன் பழமை பெற்ரும். இளங்கோவடிகளார் திருவாக்கே இஃதென்பது தெளிவு. காப்பியம் பாடிய பின்னர் தன்காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளைச் சுட்டுதலும் காப்பியனின் பொறுப்பே. இது, நிகழ்ச்சியின் இயல்பைச் சீர்தூக்கிப் பாடிய பகுதியன்று. உள்ளதை உள்ளவாறுரைக்கும் இயல்புடைமை காரணமாக அடிகளார் இதனைப் பாடினுர். பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று கள வேள்வியால் சாந்தி செய்த நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டிருத்தலால், இதனை அடிகளார் பாடவில்லையென்றே, அல்லது அவரது துறவு நிலைக்கு இழுக்கு நேராதவாறு இம்முறையில் பொருள் கொள்ளலாம் என்றே உரைத்தல் அடிகளாரிடம் கொண்டுள்ள ஈடுபாட்டின் மிகுதியால் பிறந்த பொருந்தாக் கூற்றுக்கள். காப்பியனுய்க் காப்பியம் செய்து, வரலாற்ருசிரியனுய்த் தன் காலத்து நடந்த நிகழ்ச்சியையும் இளங்கோவடிகள் கூறினுர் எனக் கொள்ளுதலால் அடிகளின் புகழுக்குச் சிறப்பேயன்றி வசையன்று. மேலும், வரந்தருகாதையில் கூறப்படும் பத்தினி விழாவுக்குச் சோழ பாண்டியர் வாராமையும், அதனுல் அவர்தம் நாட்டில் நிகழ்ந்த தீமைகளும் அவற்றைப்போக்க, பத்தினித் தேவிக்கு அம்மன்னர்களும் விழா நிகழ்த்தினர் என்னும் குறிப்பும் இவ்வுரைபெறு கட்டுரையால் வெளிப்பட்டதும் உளங்கொளத்தகும்.

22. சிலம்பு. ந. மு. வே. நாட்டார் உரை

இளங்கோவடிகள் தன் காப்பியம் முற்றுப் பெற்ற பிறகு, தான் தொடங்கி வைத்த பத்தினி வழிபாட்டுநிலை நாடெங்கும் பரவியதையும், ஆரஞருற்ற வீரபத்தினியின் சினத்தீயால் சிதைந்தொழிந்த மதுரை, மீண்டும் நன் னகராய் உருவெடுத்த சிறப்பினையும் அறிந்து தன் காலத் திலேயே பத்தினி வழிபாட்டுச் சிறப்பினுலாய பயனையும் தன் நூலுள் முற்பகுதியில் பாடிச் சேர்த்திருக்கலாம். காப்பியம் பாடியதன் பின்னர் நிகழ்ந்த அண்மை நிகழ்ச்சி யாதலாலும் இவ்வுரைபெறு கட்டுரை சிலப்பதிகாரத்தின் முற்பகுதியில் இடம் பெற்றது என்றும் கூறலாம்.

நுவல்பொருள்

உரைபெறு கட்டுரை நான்கு தொடர்களாலாய பகுதி. ஒவ்வொரு தொடரும் சந்த இனிமைபெறப் பாவுக்குரிய சிறப்புடன் அமைந்திருப்பதோடு, 'நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே' எனப் இப்பகுதியின் இறுதியும் சந்தத்தோடு பாட்டிறுதியைப்போல் விளங்கு கின்றது. இவ்வுரைபெறு கட்டுரையால் நாம் அறியும் செய்திகளாவன : செங்கோல் வளைந்த நாள்முதல் பாண்டியநாட்டில் வறுமையும் நோயும் பரவின; வெற்றி வேற் செழியன் பத்தினிக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டான்; நாட்டுப்பிணி நீங்கியது; கொங்குநாட்டுக் கோசரும் இலங்கைக் கயவாகுவும் சோழன் பெருங் கிள்ளியும் கற்பிக்கு விழா நிகழ்த்தினர்; மழைவளம் பெருகிற்று''[23]

காண்டக் கட்டுரை

காண்டக் கட்டுரை என இங்கே சுட்டப்படுவது புகார்க் காண்டத்தில் நாடுகாண் காதைக்குப் பின்னரும், மதுரைக் காண்டத்தில் கட்டுரை காதைக்குப் பின்னரும்

23. இரட்டைக் காப்பியம் - காதைச் சுருக்கம் - பக், 2

வஞ்சிக் காண்டத்தில் வரந்தரு காதைக்குப் பின்னரும் காண்டங்களின் இறுதியிலமைந்த கட்டுரைகளேயேயாம்.

கட்டுரை-பொருள்

கட்டுரை என்னும் இப்பகுதிக்குத் தொகுத்துக் கூறுதல் என்பது பொருளாம். 'கானல் வரிக் காதையில் தலைப்பாக வரும் கட்டுரை என்ற சொல்லும் மதுரை மாதெய்வம் கூறும் சட்டுரை காதையும் எல்லாம் சில வற்றைத் தொகுத்துக் கூறுதல் என்ற பொருளைத் தரு பவை. அவ்வாறே காண்டக் கட்டுரைகள் அவ்வக் காண்டத்தின் அறனும் மறனும் ஆற்றலும், மூதூர்ச் சிறப்பும், ஆடல் பாடல் முதலான கலைச்சிறப்பும் என்றி வற்றைத் தொகுத்துக் கூறுவன' என்று இக்கட்டுரை என்னும் சொல்லின் பொருள் விளக்கத்தையும், இப் பகுதியின் நுவல் பொருளையும் இனிதுற மொழிகுவர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார்[24].

அமைப்பு நிலை

இக்கட்டுரைப் பகுதிகளின் முற்கூறுகள் செய்யுள் அமைப்புக்கேற்ப விளங்கினும் அவை உரைநடைப் பகுதியாகவே கொள்ளுதற்குரியவை என்பதைக் கட்டுரை களின் முடிவுநிலைகளும் கட்டுரை என்னும் பெயரும் விளக்குகின்றன. காண்டங்களின் புறத்தமைந்த செய் யுளுக்குரிய சந்தவின்னேசை பெற்றுவந்த கட்டுரை என்னும் இவ்வுரைநடைப் பகுதிகளை இளங்கோவடிகளே செய்துள்ளார். புகார்க் காண்டத்துக் கட்டுரைப் பகுதிக்கு அரும்பதவுரைகாரர் குறிப்புரையும், அடியார்க்கு நல்லார் விளக்கவுரையும் அமைந்துள. மதுரை, வஞ்சிக்காண்டக் கட்டுரைப் பகுதிகளுக்கு இருவர் உரைகளுமில.

24. சிலப்பதிகாரம் முற்றும் - டாக்டர் வ சுப. மாணிக்கம் பக். 493-ஆறுவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை - இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்

இக்கட்டுரைப் பகுதிகளின் தொடக்கங்கள் முறையே 'முடியுடை வேந்தர் மூவருள்ளும்' 'முடிகெழு வேந்தர் மூவருள்ளும்' 'முடியுடை வேந்தர் மூவருள்ளும்' என ஒப்புமையுடையனவாயுள. அதுபோல, இறுதியிலும், 'ஒருபரிசா நோக்கிக் கிடந்த புகார்க் காண்ட முற்றிற்று' 'ஒருபரிசா நோக்கிக் கிடந்த மதுரைக் காண்ட முற்றிற்று' 'ஒருபரிசு நோக்கிக் கிடந்த வஞ்சிக் காண்ட முற்றிற்று' என ஒப்புமையைக் காணலாம்.

அறனு மறனும் ஆற்றலும் அவர்தம்
பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா இன்பத் தவருறை நாட்டுக்
குடியும் கூழின் பெருக்கமும்

எனவரும் ஐந்தடிகளும் மூன்று கட்டுரைகளிலும் ஒத்தமைந்துள்ளன. இப்பகுதிக்குப் பின்னர், புகார்க் காண்டக் கட்டுரைப் பகுதியில்,

தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும்

எனக் காவிரியின் சிறப்பு மொழியப்படும். அதுபோலவே மதுரைக் காண்டக் கட்டுரைப் பகுதியில்

வையைப் பேரியாறு வளஞ்சுரந் தூட்டலும்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலும்

என வையையின் சிறப்பு கூறப்பட்டது. இவைபோலவே வஞ்சிக் காண்டக் கட்டுரையுள் பேரியாற்றுச் சிறப்பு உரைக்கப்படவில்லை என்பது அறியத்தக்கதாம்.

இக்கட்டுரைகளின் இறுதிப் பகுதியுள் அவ்வக் காண்டங்களில் காப்பியக் கதையுறுப்பினர்களாக வரும் மன்னர்களின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன. மதுரைக் காண்டக் கட்டுரையின் இறுதிப் பகுதியுள் 'புரைதீர் கற்பின் தேவி தன்னுடன் அரைசு கட்டிலில் துஞ்சிய

பாண்டியன் நெடுஞ்செழியன்' எனப் பாண்டிய மன்னன் சிறப்பும், வஞ்சிக் காண்டக் கட்டுரையின் இறுதிப் பகுதியில் 'பொங்கிரும் பரப்பில் கடல்பிறகோட்டிக் கங்கைப்பேர்யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன்' எனச் சேரமன்னன் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. ஆனல் புகார்க் காண்டக் கட்டுரையின் இறுதிப் பகுதியில் நெடுஞ்செழியனைப்போன்றும், செங்குட்டுவனைப் போன்றும், சோழ மன்னனின் சிறப்பும் பெயரும் சுட்டப்படவில்லை. நெடுஞ் செழியன் செங்குட்டுவன் இருவரைப் போன்று, சோழ மன்னன் காப்பியக்கதை உறுப்பினனாக விளங்காமையால் சோழமன்னன் பெயரும் சிறப்பும் சுட்டப்படவில்லை போலும்! 25

மதுரைக் காண்டக் கட்டுரைப் பகுதியில் 'புரைதீர் கற்பிற்றேவி தன்னுடன், அரைசு கட்டிலிற்றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனேடு ஒரு பரிசா நோக்கிக் கிடந்த மதுரைக் காண்ட முற்றிற்று' எனப் பாண்டியன் அவன் மனையாளுடன் இணைத்துச் சுட்டப்படுவான். வஞ்சிக் காண்டக் கட்டுரைப் பகுதியில் 'செங்குட்டுவனே டொரு பரிசு நோக்கிக் கிடந்த வஞ்சிக் காண்ட முற்றிற்று' எனச் சேரன் தனித்துக் குறிப்பிடப்பெறுவான். ஆனல் புகார்க் காண்டக் கட்டுரை 'ஒரு பரிசா நோக்கிக் கிடந்த புகார்க் காண்டம் முற்றிற்று' என்று மன்னன் பெயர் சுட்டப்படாமல் வாளா அமைந்தது. காப்பிய மாந்தர்கள் கதையில் பங்குபெறும் சிறப்பு நிலைக்கேற்ப இக்குறிப்புக்கள் அமைந்திருக்கலாம்.

புகார்க் காண்ட, மதுரைக் காண்டக் கட்டுரைப் பகுதிகள் ஒவ்வொன்றும் இருபதடிகளாகவும் வஞ்சிக் காண்டக் கட்டுரைப் பகுதி பதினைந்தடியுமாகப் பதிப்புக் களில் அமைக்கப்பட்டுள.

25. சிலப்பதிகாரம் - கழகப் பதிப்பு - பொ. வே. சோ. உரைக் குறிப்பு

நூற்கட்டுரை

காண்டங்களுக்குப் புறத்தே அமைந்தவற்றைக் காண்டக் கட்டுரை என்ற பெயரால் சுட்டினர். அதற்கேற்ப நூலின் புறத்தேயமைந்த கட்டுரை நூற்கட்டுரை என்ற பெயரால் கூறப்பட்டுள்ளது. காண்டச் செய்திகளைக் காண்டக் கட்டுரை தொகுத்துரைப்பது போன்று நூலோடு தொடர்புடைய செய்திகளை நூற்கட்டுரை தொகுத்துரைக்கும்.

அமைப்பு

காண்டக் கட்டுரைகளைப் போன்று, இந்நூற் கட்டுரையும் இன்னோசை நிரம்பிய செய்யுளமைப்புடையதாகவே திகழ்கின்றது. இந்நூற் கட்டுரை இளங்கோவடிகளால் செய்யப் பட்டதன்று என்றும் உரைப்பர்[26]. நூலையோ உரையையோ எழுதி முடிந்த பின்னர் 'முற்றும்' எனக் கூறும் மரபு தமிழிலக்கிய, இலக்கணவாணரிடையே நிலவியிருந்த வழக்கு. இவ்வழக்குக்கு ஏற்பவே நூலை எழுதி முடித்தபின்னர் 'முற்றும்' என்ற செய்தியை உரைப்பதாக இக்கட்டுரை விளங்குகின்றது. எனவே இந்நூற் கட்டுரை இளங்கோவடிகளால் கூறப்பட்டது என்பது தெளிவு.

நூற்கட்டுரை என்னும் இப்பகுதி இடம்பெற வேண்டிய இன்றியமையாமையைக் 'காண்டந்தோறும் ஒரு பரிசா என்று கூறிச் செல்லுதலின் வஞ்சிக் காண்டத்துக்குப் பின்னும் காண்டங்கள் வருமோ என்ற ஐயப்பாடு நிகழுமன்றே; அதனை நீக்கும் பொருட்டுச் சிலப்பதிகாரம் முடிவடைகின்றது என்று சொல்லும் நூற்கட்டுரை தேவைபட்டது,' எனவிளக்குவர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார்[27].

26. 'இக்கட்டுரை நூலாசிரியராலன்றிப் பிறராற் செய்யப்பட்டது. ஏனைக் காண்டங்களுக்கும் இங்ஙனம் வருகின்ற கட்டுரைகளும் நூல் முகப்பில் நின்ற உரைபெறு கட்டுரையும் பிறராற் செய்யப்பட்டன என்பதே எமது துணிவு' - சிலப்பதிகாரம் - கழகப் பதிப்பு பொ. வே. சோ. உரை
27. சிலப்பதிகாரம் முற்றும் - டாக்டர் வ. சுப. மாணிக்கம் பக். 493-ஆறுவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை - இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்

இந்நூற் கட்டுரையுள் 'குமரி வேங்கடம் குணகுட கடலா' என நூல் வழங்கும் நான்கெல்லைகளும்,

செந்தமிழ் கொடுந்தமிழ் என்றிரு பகுதியின்
ஐந்திணை மருங்கின் அறம்பொரு ளின்பம்
மக்கள் தேவர் எனவிரு சார்க்கும்
ஒத்த மரபின் ஒழுக்கொடு புணர (3—6)

என நூல் நுவலும் செய்திகளும்,

மணிமே கலைமேல் உரைப்பொருள் முற்றிய
சிலப்பதிகார முற்றும் (17—18)

எனத் தன் காலத்தெழுந்த பிறிதொரு காப்பியமாகிய மணிமேகலையுடன் இக்காப்பியத்துக்குஅமைந்த தொடர்பு நிலையும் விளக்கப்பட்டுள்ளன. கதைப் பகுதியால் சிலப் பதிகாரமும் மணிமேகலையும் தொடர்புடையன என்பதை யும் அவை இரண்டும் இரட்டைக் காப்பியங்களாக விளங்கும் சிறப்புடையன என்பதையும் அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரப் பகுதியாலும்[28] அறிகின்றோம்.

'மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகார முற்றும்' எனவரும் இந்நூற் கட்டுரைத் தொடருக்குச் சிலப்பதிகாரம் மணிமேகலைக் காப்பியத் தோடு முற்றுப் பெறும் என்ற கருத்து சிலப்பதிகார உரை யாசிரியர் அடியார்க்குநல்லார் காலமுதல் தமிழ் கூறு நல்லுலகத்தில் வழங்கி வருவதாம். இக்கருத்துப் பொருந் தாமைக்குரிய காரணங்களைச் சுட்டி இந்நூற் கட்டுரைத் தொடருக்கு, 'சிலப்பதிகாரம் மணிமேகலைத் துறவைச்

28. மணிமேகலை துறந்தாளென்பது உணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனோடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி அடிகள் சாத்தனுர்க்கு இவ்வுரையை உரைத்துழி, அவர், மணிமேகலை பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஒரு காப்பியம் செய்தமைத்தனமெனக் கேட்டு அவ்வடிகள் விரும்பி இவ்விரண் டினையும் ஒரு காப்பியமாக்கி 'உலகின்கண் நடாத்துவான் வேண்டவும் இருவர் செய்தலின் இரண்டாகி நடந்தனவென்க - சிலம்பு. அடி. நல்லார் - உரைப்பாயிரம்

சொல்லித் தன் கதைப் பொருளை முடிக்கின்றது' எனப் பொருந்தும் புதிய விளக்கத்தை எடுத்து மொழிவர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார்[29].

காதைகளின் புறத்தே அமைந்த வெண்பாக்கள், பதிகம், உரைபெறுகட்டுரை, காண்டக் கட்டுரை, நூற் கட்டுரை ஆகியவை நூலின் உள்ளுறுப்புக்களாய் நூலின் பகுதியாகவே வழங்கும் சிறப்பும் பயிற்சியும் மிக்கவை. இவற்றுள் வெண்பாக்கள், உரைபெறுகட்டுரை, காண்டக் கட்டுரை, நூற் கட்டுரை ஆகியன இளங்கோவடிகளாலேயே இயற்றப்பட்டவை என்பதை, இப்பகுதியில் விளக்கினோம். மேலும், பதிகம் சாத்தனாரால் இயற்றப் பட்டது என்பதும் கூறப்பட்டது.

புறத்தமைந்த பிற பகுதிகள்

இவையன்றி நூற்சிறப்புப் பாயிரம், உரைப்பாயிரம், உரைச் சிறப்புப் பாயிரம், அரும்பதவுரைகாரர் காப்புச் செய்யுள் ஆகியனவும் காதைகளின் புறத்தமைந்த செய்யுள் வகைகளாயுள. இவற்றுள், நூற் சிறப்புப் பாயிரத்தில் நேரிசைவெண்பா ஒன்றும், கட்டளைக் கலித்துறை ஒன்றும் கூடுதல் இரு பாடல்களுள. உரைப்பாயிரம், அடியார்க்குநல்லார் உரைக்குப் பாயிரமாய் விளக்கம் கூறப்படும் பகுதி. உரைச் சிறப்புப் பாயிரத்துள் நேரிசை வெண்பா ஒன்றும் இரு கட்டளைக்கலித்துறைப் பாடல் களும் கூடுதல் மூன்று பாடல்களுள. அரும்பதவுரைகாரர் கூறும் காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவாலாய ஒரு பாடல். காதைப் புறத்தமைந்த இவை உரையாசிரியர்கள் காலத்தனவாகலாம்.

நூலுள் கூறப்படும் கருத்தினை மேலும் விளக்குவன வாகவும், நூலுள் கூறப்படாது விடுக்கப்பட்ட செய்திகளை

29. சிலப்பதிகாரம் முற்றும் - டாக்டர் வ. சுப. மாணிக்கம் பக். 494-ஆறுவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை-இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்

விளக்குவனவாகவும், நூலின் வரலாறு பற்றிய தெளிவுக் குரிய சான்றுகளை விளக்குவனவாகவும் அமைந்த இப்புற வுறுப்புக்கள் பெருமையுடையவை. இவற்றுள் வெண்பா, பதிகம், நூற்சிறப்புப் பாயிரம், உரைச்சிறப்புப் பாயிரம் ஆகிய பகுதிகள் செய்யுள் நடையினவாகவும் எஞ்சியவை உரை நடைப் பகுதியினவாகவும் விளங்குகின்றன.

காதைத் தலைப்பும் முத்தமிழும்

சிலப்பதிகாரம் பல்வகையாலும் யாப்பு நெறிகாட்டும் ஒரு கலங்கரை விளக்கம். இளங்கோவடிகள், தன் காப்பியத்தின் காதைகளுக்குத் தலைப்பிடு முறையாலும் தன் கால யாப்பு நெறியின் அமைப்பு நிலையைச் சுட்டியுள்ளார். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்ற தமிழின் முப்பெரும் பிரிவுகளுக்குப் பெருங்காப்பியமாகிய இலக்கிய வகையைப் படைத்தவர் இளங்கோவடிகள். இக்காப்பியத்தில், காதைகளின் தலைப்புக்களும் முத்தமிழ்க் கூறுகளாகவே விளங்குகின்றன. முத்தமிழ்க் கூறுகளைக் காதைத் தலைப்புக்களே விளக்கி நிற்கும் புது நெறியையும் இளங்கோவடிகள் கூறியுள்ளார். காதைத் தலைப்புக்கள் முத்தமிழின் கூறுகளை விளக்கும் நெறியை ஆய்வதே இக்கட்டுரைப் பொருளாம்.

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களும் முப்பது காதைகளும் கொண்டது. புகார்க் காண்டத்தில் பத்துக் காதைகளும், மதுரைக் காண்டத்தில் பதின்மூன்று காதைகளும், வஞ்சிக் காண்டத்தில் ஏழு காதைகளும் இதனுள் அமைந்துள. இக்காதைகளின் பெயர்களை வரிசைமுறையாகப் பதிகப் பகுதி விளக்கும்.[1] இப்பெயர்களைப் பாடல், மாலை, வரி, குரவை, காதை என்னும் ஐவகைச் சொல் முடிவுகளாகப் பகுக்கலாம். பாடல் என்னும் சொல் முடிவு பெற்றதாக ஒரு காதையும்[2] மாலை என்ற சொல் முடிவுடையதாக இரு காதைகளும்[3] வரி என்ற சொல் முடிவுடன்

1. சிலம்பு. பதி. 63-85
2. மங்கல வாழ்த்துப்பாடல்
3. துன்பமாலை, வஞ்சினமாலை

மூன்று காதைகளும்[4] குரவை என்ற சொல் முடிவுடன் இரு காதைகளும்[5] காதை என்ற சொல் முடிவுடன் இருபத்திரண்டு காதைகளும்[6] காணப்படும்.

காப்பியங்களின் உட்பிரிவுகள்

சிலப்பதிகாரத்துள் மூன்று பெரும் பிரிவுகளும் காண்டம் என்னும் தலைப்புக்களை வரையறையாகப் பெற்றிருந்தும், அவற்றின் உட்பிரிவுகளாய பகுதிகள் பல்வேறு சொல் முடிவுடைய தலைப்புக்களைப் பெற்றுள. கம்பராமாயணத்துள் காண்டம் என்றும் படலம் என்றும் பெரும் பிரிவு, சிறு பிரிவுத் தலைப்புக்கள் முறையாக இடம் பெற்றுள. பெரிய புராணத்துள்ளும் சருக்கம் என்றும் புராணம் என்றும் இவை அமையக் காணலாம். சிலப்பதிகாரத்துடன் தோன்றியதாகக் கருதப்படும் மணிமேகலை பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படாவிடினும், அந்நூலின் அனைத்து உட்பிரிவுகளும் காதை என்னும் சொல் முடிவுடையனவாய் அமைந்துள. மணிமேகலையைப் போன்று சீவகசிந்தாமணியுள்ளும் பெரும் பிரிவுகள் இல; எனினும் அனைத்து வகை உட்பிரிவுகளும் இலம்பகம் என்னும் தலைப்பின. இங்ஙனம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற பிற காப்பியங்களில் உட்பிரிவுகளின் தலைப்புக்கள் முறையாக அமைந்துள. இலக்கிய உலகின் முன்னோடிக் காப்பியனாய இளங்கோ அமைத்த காதைத் தலைப்புக்களோ முத்தமிழ்க் கூறுகளை முறையாக விளக்குவனவாயுள. ஆதலால், பிற காப்பியங்களுள்

4. கானல்வரி, வேட்டுவவரி, ஊர்சூழ்வரி
5. ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை
6. மனையறம் படுத்தகாதை, அரங்கேற்றுகாதை, அந்திமாலை சிறப்புச்செய் காதை. இந்திரவிழவூரெடுத்த காதை, கடலாடு காதை, வேனிற் காதை, கனாத்திறமுரைத்த காதை, நாடுகாண் காதை, காடுகாண் காதை, புறஞ்சேரியிறுத்த காதை, ஊர்காண் காதை, அடைக்கலக் காதை, கொலைக்களக் காதை, வழக்குரை காதை, அழற்படு காதை, கட்டுரை காதை, காட்சிக் காதை, கால்கோட் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை, வாழ்த்துக் காதை, வரந்தரு காதை.

அமைந்த உட்பிரிவுகளின் பெயரொழுங்கு இக்காப்பியத்தில் அமையவில்லை. இளங்கோவடிகள் இயலுக்கென்று சில காதைகளும் இசைக்கென்று சில காதைகளும், நாடகத்துக் கென்று சில காதைகளும் அமைத்துள்ள நெறியைக் காதை களின் பெயர் அமைப்புக்களால் அறியலாம். இத்தலைப்பு அமைப்புக்களால் முத்தமிழுக்குரிய யாப்பு நெறியை இளங்கோவடிகள் எவ்வகையில் புலனாக்குகின்றார் என்பதும், எம்முறையில் இவ்வுட்பிரிவுகள் பெயர் பெற்று விளங்குகின்றன என்பதும் சிந்திக்கத்தக்கவை.

பாடல்

மங்கலவாழ்த்துப் பாடல் சிலப்பதிகாரக் காப்பியக் கோயிலின் நுழைவாயில். ஒரு மாளிகையின் அழகுச் சிறப்புக்களையும் உயர்வுப் பெருமைகளையும் தன் கலைநலம் மிளிரும் கவினுல் நுழைவாயிலே விளக்கி நிற்றல்போல, மங்கலவாழ்த்துப் பாடலும் சிலம்பின் சிறப்புக்கும் சீர்மைக்கும் எடுத்துக் காட்டாக மிளிர்கின்றது. பாடல் என்னும் சொல் முடிபு பெற்று விளங்குவது இக்காதை யொன்று மட்டுமேயாம்,

கதையை முன்னர்க் கூறி திருமணத்தை இறுதியில் விளக்கும் பெரும்பான்மையான காப்பிய மரபிலிருந்து மாறு பட்டு, இக்காப்பியக் கதை திருமணத்தில் தொடங்கி அதன்பின்னர், கதை நிகழ்ச்சிகள் சுட்டப்படும் புதிய மரபைப் பெற்றுள்ளது. இப்பகுதியுள் காப்பியத் தலைவி கண்ணகியும், தலைமகன் கோவலனும் புதிய கோணத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றனர்.

அடியார்க்குநல்லார் கருத்து

இப்பகுதி, மங்கலவாழ்த்துக் காதை என அழைக்கப் படாமல், மங்கலவாழ்த்துப் பாடல் என அழைக்கப்பட் டமைக்கு அடியார்க்குநல்லார் மூன்று காரணங்களை மொழிவர்.

அ. இது ஆசிரியப் பாவால் வாராது கொச்சகக் கலியால் வந்துள்ளது.

ஆ. மங்கலவாழ்த்துப் பாடல் என்னும் இப்பகுதியில் கதை நிகழ்ச்சியில்லை.

இ. இப்பகுதி வாழ்த்தும் உரையும் பாடலுமாய் அமைந்துள்ளது.

இக்காரணங்களாலேயே இப்பகுதிக்கு இளங்கோ வடிகள் மங்கலவாழ்த்துப்பாடல் எனப் பெயர் கொடுத்தார் என்பது அடியார்க்குநல்லார் கருத்தாம்.

அடியார்க்கு நல்லார் கூறும் இக்காரணங்கள் ஏற்புடையனவா? ஆசிரியப்பாவால் வருவன மட்டுமே காதை என்னும் பெயர்க்குரியவை எனின், ஆசிரியப்பாவால் வாராது கலிவெண்பாவால் வந்த பகுதி கனாத்திற முரைத்த காதை என்றும், உறழ்கலியால் வந்த பகுதி வழக்குரை காதை என்றும் அமைந்துள்ளது பொருந் தாததாகிவிடும் அன்றோ! மங்கல வாழ்த்துப்பாடல் என்னும் இப்பகுதியில், காப்பியத் தலைமக்கள் அறிமுகம், அவர்கள் திருமணம், திருமணத்தின்போது செம்முது பெண்டிர் வாழ்த்து ஆகிய அடிப்படைக்கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தலால், இப்பகுதியில் கதை நிகழ்ச்சி யில்லை எனக்கூறுதலும் பொருத்தமன்று.[7] வாழ்த்தும் உரையும் பாடலுமாய் அமைந்துள்ள வாழ்த்துக்காதை பாடல் என அழைக்கப்படாது காதை என்றே குறிப் பிடப்பட்டுள்ளது. எனவே அடியார்க்கு நல்லார் கூறிய காரணங்கள் ஏற்புடையனவாகா. எனினும் இம்மங்கல வாழ்த்துப்பாடல் வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வரு தலால் அமைப்பு நிலையைப் பொறுத்தவரை அடியார்க்கு நல்லார் கூறுவது பொருந்துவதே. எனினும் பாடல் என இப்பகுதி அழைக்கப்பட்டமைக்கு இஃதொன்றே முழுக்காரணமாகாது.

---

7. இதில் கதை நிகழ்ச்சியில்லை என்று அடியார்க்கு நல்லார் கூறுவது பொருந் தாது- சிலம்பு. பதிகம். பெருமழைப் புலவர் உரை

பெருமழைப் புலவர் கருத்து

கழகப்பதிப்பில் உரையாளி பெருமழைப் புலவர், இப்பகுதி, பாடல் என அழைக்கப்பட்டமைக்குப் பின் வரும் காரணங்களைக் கூறுவர். அ. இப்பகுதி இசையொடு புணர்த்துப் பாடுதற் கியன்ற 'உரு' என அறிவித்தற்கு இது பாடல் எனக் குறிக்கப்பெற்றது. ஆ. இக் காப்பியத்தை ஓதத் தொடங்குவோர் இசையினால் வாழ்த்துப் பாடித் தொடங்க வேண்டும் என்பது அடிகள் கருத்தாகும். இசைத்தமிழுக்கு ஏற்றவாறு வாரநடையும் கூடைநடையும் திரள் நடையுமாக இதனை அடிகளார் யாத்துள்ளார். இஃது இசைப்பாடலாதலால் திங்களைப் போற்றுதும் (1) என்பது தொடங்கி, ஓங்கிப் பரந்தொழு கலான் (12) என்னும் துணையும் வாரநடையாகவும் ஆங்கு (13) என்பது தொடங்கி ஈந்தார் மணம் (38) என்னும் துணையும் கூடைநடையாகவும், அவ்வழி முரசியம்பின (39) என்பது தொடங்கித் திரள்நடையாகவும் படிப்படியாக உயர்ந்து ஆரோசையாக நடக்கின்றது. அதுபோலவே நீலவிதானத்து (41) என்பது தொடங்கி அமரோசையாகப் படிப்படியாக இறங்கி மீண்டும் வார நடையாகச் செல்கின்றது. இவ்விசைக் குறிப்புக்களைப் பெற்று விளங்கும் சிறப்பால் இது பாடல் என அழைக் கப்பெற்றது. இ. இறைவனையும் கற்புடைத் தெய்வ மாகிய கண்ணகியையும் வாழ்த்துவதே குறிக்கோள் ஆதலால் அச்சிறப்பு நோக்கிக் காதை என்னாது பாடல் என்றே குறியீடு செய்தார்.

இசைக் கூறுகள் மிகுதியும் இருத்தலால் இப்பகுதி பாடல் என அழைக்கப்பெற்றது என்பதே பெருமழைப் புலவர் கூறும் இக்காரணங்களுள் அடிப்படைக்கருத்து. சிலப்பதிகாரம் 'இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்

படுவதும் இந்நூலுள் இசைக்கூறுகள் விரவிக் கிடக்கும் உண்மையைத் தெளிவுபடுத்தும். இசைக்கூறுகளை இப் பகுதி பெற்று விளங்கும் பொருண்மையை விளக்கும் நிலையில் பெருமழைப் புலவர் கூறுவது பொருந்துவதே. எனினும் பாடல் என அழைக்கப்பட்டமைக்கு இஃது ஒன்றே முழுக் காரணம் எனக் கூற இயலாது.

இசைக்குரிய யாப்பு

இளங்கோவடிகள் இசைக்குரிய பொருண்மைகளை இப்பகுதியால் விளக்கியுள்ளார், என்பதே முன்னர்க் கூறிய இருவர்தம் விளக்கத்தினின்றும் அறியும் செய்தி. இசைப்பொருண்மையை மட்டுமின்றி, இசைப்பொருண் மைக்குரிய யாப்பு வகையையும் இப்பகுதி பெற்றுள்ளது. இசைக்குரிய யாப்பு வகையை இப்பகுதி பெற்று விளங்குத லாற்றான், காதை என அழைக்கப்படாது, பாடல் எனக் கூறப்பட்டது. இசைக்குரிய யாப்பு வகையைப் பெற்ற பகுதி பாடல், என்னும் தலைப்பால், அழைக்கப்பெறும் நெறியை இளங்கோவடிகள் இவண் சுட்டியுள்ளார் என்று ஓர்தல் வேண்டும். மங்கல வாழ்த்துப் பாடல் என்னும் பகுதிக்குரிய யாப்பு வகையாகிய மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா இசைத் தமிழுக்குரிய யாப்பு வகையாம். இசைத் தமிழுக்குரிய யாப்பு வகை இப்பகுதியில் அமைந்த இயல்பு நிலையை விளக்குமுகத்தான் இப்பகுதி காதை எனப்படாது, பாடல் என அழைக்கப்பெற்றது. காதை என்னும் பெயர் இயற்றமிழ் யாப்பு வகையை உணர்த்தும் பகுதிக்குப் பெயராக அமையும் நிலையைப் பின்னர் விளக்குவாம்.

மங்கலம்

மங்கலம்,வாழ்த்து,பாடல் என இத்தலைப்பில் அமைந்த மூன்று சொற்களும் இப்பகுதியில் அமைந்த பொருண்மைக் கேற்ற சிறப்புச் சொற்களாம் என்பதை இவண் சுட்டுவாம்.

மங்கலவாழ்த்துப் பாடல் என்னும் தலைப்பில் முதற் சொல்லாக விளங்குவது 'மங்கலம்'. இச்சொல்லுக்குத் திருமணம் என்பது பொருள். நீலவிதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ், சாலியொருமீன் தகையாளை மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட, கோவலன் தீவலம் செய்து திருமணம் செய்து கொள்ளும் பொருண்மை இப் பகுதியுள் விளக்கிக் கூறப்பட்டுள்ளமையால், அதனை விளக்கும் முறையில் மங்கலம் என்னும் சொல்லாட்சி இத்தலைப்பில் இடம் பெற்றது.

மங்கலமென்பது மனைமாட்சி[8] என வள்ளுவரும் இப் பொருண்மையை விளக்கியுள்ளமை காணலாம். 'அகலுள் மங்கல அணியெழுந்தது'[9] 'அருந்ததி யன்னாளை மங்கல நல்லமளி ஏற்றினர்'[10] என மங்கலம் என்னும் சொல் திருமணமாகிய சிறப்புப் பொருண்மையை விளக்கி நின்றதும் அறியலாம்.

வாழ்த்து

'வாழ்த்து' என்பது இத்தலைப்பின் இரண்டாம் சொல்லாம். மங்கலமாய திருமணத்தை வாழ்த்துவதே இப்பகுதியின் சிறப்புப் பொருண்மையாயினும், இம்மங்கல வாழ்த்தின் உட்கூறாய் அரச வாழ்த்துப் பகுதியும் தொடக்கத்தில் நூல் வாழ்த்தும் இவண் அமைந்துள.

திங்களைப் போற்றுதும் எனத் தொடங்கும் நூல் வாழ்த்துப் பொருண்மை இப்பகுதியின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ளது. திங்கள், ஞாயிறு, மாமழை, பூம்புகார் ஆகியவற்றை வாழ்த்தும் பொருண்மை இதனுள் அமைந்தது. அடியார்க்குநல்லார் 'திங்களைப் போற்றுதும்' எனவரும் பகுதிக்கு உரைவிளக்கம் கூறுங்கால் 'திங்களை

8. திருக்குறள் -60
9. சிலம்பு-மங்கல வாழ்த்துப் பாடல் -47
10. சிலம்பு-மங்கல வாழ்த்துப் பாடல்-60

முற்கூறினர்; இத்தொடர்நிலைச் செய்யுட்குச் சிறந்த முதன்மொழி அதுவாகலான்' எனக் குறிப்பிடுவர். அடுத்து, காப்பியத் தலைமக்களாய கோவலன் கண்ணகி திருமணத்தைத் தன் கூற்றாலும், திருமணத்திற்கு வந்திருக்கும் செம்முது பெண்டிர் கூற்றாலும் இளங்கோவடிகள் வாழ்த்தியுள்ளார். இத்திருமணக் காட்சியை இளங்கோவடிகள் 'தீவலஞ் செய்வது காண்பார்கண் நோன்பென்னை'(53) எனத் தன் கூற்றாக வாழ்த்துகின்றார். திருமணத்தைக் காணப் புகார் நகரமே திரண்டு வந்திருந்தது.

விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டினர் ஒசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
ஏந்திள முலையினர் இடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்ந்த மூரலர்
போதொடு விரிகூந்தல் பொலனறுங் கொடியன்னார்
(மங். வாழ்த்து. 54-60)

திருமண விழாக் காணத் திரண்டுவந்த கூட்டத்தினரை இளங்கோவடிகள் மேலே குறிப்பிட்டுள்ளார். இவர்கள் 'காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக' (61-62) எனச் சின்மலர் கொடுதூவி மணமக்களை வாழ்த்தினர். சமுதாய நிகழ்ச்சிகளில் மன்னனை வாழ்த்துவதும் மரபாகும். அம்முறையில் புகாரில் நடைபெற்ற திருமணமாகிய இச்சமுதாய நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர், திருமணம் முடிந்தபின்னர்

இப்பால் இமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா வெப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே
(மங். வாழ்த்து. 65-68)

என நாட்டையாளும் மன்னனை வாழ்த்தினர். இங்ஙனம் இப்பகுதியுள் வாழ்த்துப் பொருண்மைகள் இடம் பெற்றிருக்கும் சிறப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாடல்

இப்பகுதி காதையென்றழைக்கப்படாமல், பாடல் என்று அழைக்கப்பட்டமைக்குக் காரணம் கூறும் அடியார்க்கு நல்லார், வாழ்த்தும் உரையும், பாடலுமாய் அமைந்துள்ளது இப்பகுதி எனச் சுட்டியுள்ளதையும், பெருமழைப் புலவர் 'இசைக் கூறுகள் மிகுதியாக இப்பகுதியுள் கிடத்தலால் பாடல் என அழைக்கப்பட்டது எனச் சுட்டியுள்ளதையும் நினைவுகூர்தல் பொருந்தும். மேலும், மங்கல நிகழ்ச்சியாகிய திருமணத்திற்கு வந்திருந்த முது பெண்டிர் கோவலனையும் கண்ணகியையும் வாழ்த்திப் பாடினர் என்ற குறிப்பையும், மக்கள் கூறிய அரச வாழ்த்தும் பாடலாகவே விளங்கியது என்ற குறிப்பையும் 'பாடல்' என இத்தலைப்பில் இடம் பெற்ற சொல் விளக்கி நின்றது. இங்ஙனம் மங்கலவாழ்த்துப் பாடல் என்னும் பகுதி, தன் தலைப்புக்கேற்ப, பொருண்மைச் சிறப்புக்களையும் பெற்று விளங்குகின்றது.

மாலை

மாலை என்னும் சொல் முடிபு பெற்றனவாக விளங்குவன துன்பமாலை, வஞ்சினமாலை என்னும் இரு பகுதிகள். மாலை என்ற சொல்லுக்கு இயல்பு என்றும், தொடர்ச்சி என்றும் இருவகையாகவும் உரையாசிரியர் பொருள் உரைப்பர். 'தீத்திறம் கேட்ட துன்பமாலையும் என்னும் பதிகத் தொடருக்கு 'அவன் கொலையுண்ட தீத்திறத்தைக் கண்ணகி கேட்டுத் துன்புற்ற இயல்பும்' என்றும், 'வஞ்சின மாலையும்' என்னும் பதிகத் தொடருக்கு 'நெடுஞ்செழியன் தேவியை நோக்கிக் கண்ணகி வஞ்சினம்

கூறிய இயல்பும்' என்றும் அடியார்க்குநல்லார் பொருள் விளக்கம் கூறியுள்ளமையாலும், 'மாலை-தொடர்ச்சியுமாம்' என உரையாசிரியர் நாட்டார் கூறியுள்ளமையாலும் மாலை என்னும் சொல்லுக்குரிய இப்பொருண்மைகளை அறியலாம்.

அடியார்க்கு நல்லார்

துன்பமாலையின் பெயர்க் காரணத்தை விளக்கும் அடியார்க்குநல்லார் 'இதுவும் ஊர்சூழ் வரியும் சிறிது கதை நிகழ்ச்சி யுளவெனினும் மருட்கையென்னும் மெய்ப்பாடும் அவலம் அரற்றுக் கவலை கையாறென்னு மிவையும்[11] நிகழ் தலியல்பினுன் இதனை மாலையென்ருரெனக் கொள்க' என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோலவே வஞ்சினமாலையின் பெயர்க் காரணத்தை விளக்குங்கால் 'இக்கலி வெண் பாட்டுப் பத்தினித்தன்மைத்தாகிய ஒருபொருளையே கருதிக்கூறிய இயல்புடைத்தாகலின் மாலையென்ருர்' எனக்கூறியுள்ளார். ஈரிடத்தும் மாலை என்ற சொல்லுக்கு இயல்பு என்றே அடியார்க்கு நல்லார் பொருள் கொண்டுள்ளதை இப்பகுதிகள் விளக்கின.

கதை நிகழ்ச்சிகள்

துன்பமாலைப் பகுதியில் ஆயர்முதுமகள் நகருக்குச் சென்றது, கொலைச் செய்தியை அறிந்து திரும்பியது, பின்னர் மகளிருடன் கூடிநின்று இச்செய்தியைக் குறித்துப் பேசி அஞ்சியது, செய்தியறிந்த கண்ணகி தன் துன்பநிலை யைப் பலபடியாகப் புலம்பியது, காய்கதிர்ச் செல்வனை நோக்கிக் கள்வனே என் கணவன் எனக் கேட்டது, காய்கதிர்ச் செல்வன் இல்லையென விடையிறுத்தது ஆகிய காப்பியக் கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள. வஞ்சின மாலைப் பகுதியுள் கண்ணகியின் சூளுறவு, மதுரையை எரித்தல், தீக்கடவுள் கண்ணகியின் ஏவல் கேட்பது முதலிய கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள.

11. மணி. 30:116

கதை நிகழ்ச்சிகளை விளக்கி இயற்றமிழ்ப் பாவகைகளாகவே விளங்கும் இப்பகுதிகள் காதை என்னும் பெயருக்கு உரியனவேயாம். எனினும் பொருண்மைச் சிறப்புக்களால் இவை மாலை எனப் பெயர் பெற்றன. துன்பமாலையுள் கண்ணகியின் துன்பப் பொருண்மையும், வஞ்சினமாலையுள் கண்ணகியின் வஞ்சினப் பொருண்மையும் சிறந்தன. எனவே இயற்றமிழ் யாப்பு வகைக்கு உரியனவாயினும் பொருண்மை வகையால் சிறப்புப் பெயர் பெறுதலும் உண்டு என்ற தலைப்பு நெறியை இதனால் அறியலாம்.

மாலை - பொருண்மை

மாலை என்னும் சொல்லுக்கு இயல்பு என்றே ஈரிடத்தும் உரையாளிகள் பொருள் கொண்டனர் என்பதை முன்னர்ச் சுட்டினும். மாலை என்னும் சொல் இப்பொருண்மைகளை உணர்த்தாது மாலைக்காலம் என்னும் பொருண்மையை உணர்த்துவதாகக் கொள்ளுதல் நேரிது. அந்திமாலைச் சிறப்புச் செய் காதை என்பது போன்று இக்காதைகளிலும் மாலை என்னும் சொல் சாயுங்காலம் எனும் காலப் பொருண்மையை உணர்த்தியது. கண்ணகியின் வாழ்வில் துன்பம் நிறைந்த மாலைப்பொழுது என்றும், கண்ணகி வஞ்சினம் கூறிய மாலைப்பொழுது என்றும் இப்பகுதிகளுக்குப் பொருள் விரித்துரைக்கலாம்[12]. துன்பத்தின் இயல்பை அல்லது தொடர்ச்சியை உரைப்பது என்றோ வஞ்சினத்தின் இயல்பை உரைப்பது என்றோ பொருள் கொள்வதிலும், மேலே கூறியாங்குப் பொருள் கொள்வது கதை நிகழ்ச்சிகளின் கால இயைபை வெளிப்படுத்தி சிறந்து நிற்கும்.

துன்பமாலை

துன்பமாலைப் பகுதியுள், கண்ணகியின் துன்புநிலை முகிழ்த்து அரும்பிக் காய்த்துக் கனிந்து கொழுந்து விட்டு

12. டாக்டர் வ. சுப. மாணிக்கனர் கருத்துரை

எரிகின்றது. இத்துன்பங்கள், ஒரு மாலைக் காலத்துத் தொடர்ந்து வரும் சிறப்பை இளங்கோவடிகள் படிநிலை வளர்ச்சி முறையில் கூறிச் செல்வர். காதலனைக் காண வில்லை என்ற துணுக்கம், நண்பகற்போது முதல் நடுக்கு நோய் மிகுந்த நலிவு, ஏதிலார் கூறுமொழி எம்மொழியோ என்ற அறிதல் வேட்கை, வஞ்சம் உண்டு என நெஞ்சம் மாழ்கும் அவலம், கணவன் கள்வனென்று கொலை குறிக் கப்பட்டான் என்றறிந்து பொங்கியெழும் துயரம், எங்குற்ருய் என விளித்தழும் புலம்பல், அன்பனை இழந் தேன் என்று அவலங்கொண்ட ஆற்ருமை, மன்னவன் தவறிழைத்தான் என்ற சினம், காய்கதிர்ச் செல்வனை நோக்கிக் கள்வனே என் கணவன் என வினவும் வேகம்- இங்ஙனம் கண்ணகிக்கு ஒரு மாலைக் காலத்து நிகழ்ந்த துன்பங்களின் கூறுகள் கணவன் கொலைப்பட்ட துன்பத் தினின்று கிளைத்தெழுவன.

வஞ்சினமாலை

வஞ்சினம் கூறுவது பழந்தமிழ் மரபு. பகைவரை நோக்கி வீரர்கள் விடுத்த வஞ்சின மொழிகளையும், பகை மன்னரை நோக்கி மன்னர்கள் விடுத்த வஞ்சின மொழி களையும் புறநானூறு முதலிய நூல்கள் புகல்வ. சிலப்பதி காரத்துள்ளும் கண்ணகியின் வஞ்சின மொழிகள் அமைந் துள. ஆனல் பிற புற இலக்கியங்களில் காணப்படும் வஞ் சின மொழிகளுக்கும் கண்ணகியின் வஞ்சின மொழிகளுக் கும் வேறுபாடுண்டு. ‘கணவனை இழந்தோர்க்குக் காட்டு வதில்’ என மயங்கி வீழ்ந்து மன்னவன் இணையடி தொழுது தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடுவாள் போலக் கோப் பெருந்தேவியும் குலைந்து வீழ்ந்தாள். புரைதீர்க் கற்பின் தேவியுடன் மன்னன் அரசு கட்டிலில் துஞ்சியது அறியா மல், ஓவியச் சுற்றம்போல அவையினர் உரையவிந்திருந் தனர். கண்ணகியும் கோவேந்தன்தேவி குலைந்துபட்டது அறியாமலேயே அவளை நோக்கி வஞ்சினம் கூறுகின்ருள்.

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீ (வஞ்சினமாலை 35-38)

கண்ணகி வஞ்சினம் கூறுவதாக எண்ணித் தன் வெஞ்சினத்தை வெளிப்படுத்தி ஆறுதல் கொள்கின்றாள். புகார்க் காண்டத்தில் அந்திமாலையை வண்ணித்து கண்ணகியின் துயரத்தையும் மாதவியின் இன்பத்தையும் கூறியாங்கு, மதுரைக் காண்டத்தில் மாலைப்பொழுதுகளை வண்ணிக்காது அக்காலத்து நிகழ்ந்த கண்ணகியின் துன்பத்தையும், வஞ்சினத்தையுமே இளங்கோவடிகள் வண்ணித்தனர். பொருண்மைச் சிறப்பால் பெயர் பெற்ற இப்பகுதிகள் இயற்றமிழ் யாப்பு வகைக்கு உரியவை.

வரி

கானல்வரி, வேட்டுவவரி, ஊர்சூழ்வரி, ஆகிய மூன்று பகுதிகள் வரி என்னும் சொல்லால் முடிபு பெற்றவை. வரி என்பது பாட்டுக்கும் கூத்துக்கும் உரிய பொதுப் பெயர். வரிப்பாட்டு என்ற இசைத் தமிழையும், வரிக் கூத்து என்ற நாடகத் தமிழையும் உணர்த்துவதாய் இச்சொல் அமையும். வரிப்பாட்டு, வரிக்கூத்து என்பவை பெயரால் தொடர்புடையன போலக் காணப்படினும் இரண்டும் வேறுபட்டவை என்பது சிலப்பதிகார அமைப்பால் புலனும். கூத்து நிகழ்த்துங்கால் பாட்டும் பாடப் பெறும். குரவைக்கூத்து நிகழ்த்துங்கால் பாடப் பெறும் பாடல் குரவைப்பாட்டு என அழைக்கப்படும். ஆனல் வரிக்கூத்து நிகழ்த்துங்கால் பாடப்பெறும் பாடல் வரிப்பாடல் எனப் பெயர் பெறுவதில்லை என்பதைச் சிலப் பதிகார அமைப்பால் அறியலாம்.

வரிப்பாடல்

'வரிப்பாடல்கள் நாடோடிப் பாடல்கள் போன்றவை அவை சமுதாயப் பாடல்களாய் அமைந்து அரசர்களையும்

நாட்டையும் வாழ்த்துவது உண்டு' என்பர் டாக்டர் தெ. பொ. மீ.[13] வரிப்பாடல்களை விளக்கும் அரும்பத வுரைகாரர் 'பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறுதும் வரும்; அதுதான் தெய்வஞ் சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும்[14] எனக் கூறுவர். அரும்பதவுரைகாரர் தரும் விளக்கத்தின் நுட்பம் இன்று அறிதற்கு இயலவில்லை. 'இவற்றின் நுட்பமெல்லாம் தெரியாமற் போனாலும் பலவகை இராகங்களும் பலவகைக் கதைப் பகுதிகளும் கலந்து வரும் கலவையான இசைப் பாட்டே என்று இதனைக் கொள்ளலாம்' என்பர் டாக்டர் தெ. பொ. மீ.[15] இவ்விளக்கங்களால், நாடோடிப்பாடல் போல சமுதாயப் பாடல்களாய்ப் பலவகை இராகங்களும் கதைப் பகுதிகளும் நிறைந்த பொருண்மையோடு வரும் கலவையான இசைப் பாடல்களே வரிப்பாடல்களாய் விளங்குவன என்பது புலனும்.

இவ்வரிப்பாட்டை அமைப்பு நிலையால் முகமுடை வரி, முகமில்வரி, படைப்புவரி என மூவகைப் படுத்தி மொழிவர். முகமுடை வரியாவது வரிப்பாட்டுக்கு முகமாக-தொடக்கமாக-அமைவது[16]. முகமொழிந்து ஏனைய உறுப்புக்களால் வருவதை முகமில்வரி என்பர். எல்லாவுறுப்பும் ஒன்றுனும் பலவானும் வெண்பாவாலும் ஆசிரியத்தாலும் கொச்சகம் பெற்றும் பெறுதும் வேறு வேறுகி வருவது படைப்பு வரியாகும்.

13. கானல்வரி - டாக்டர் தெ. பொ. மீ. பக்-104

14. சிலம்பு. கானல். அரும்பதவுரைகாரர் குறிப்பு

15. கானல்வரி - டாக்டர் தெ. பொ. மீ-பக். 103

16. நிலமுத லாகிய வுலகியல் வரிக்கு
முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே - சிலம்பு. கானல். அரும். உரை மேற்கோள் குறிப்பு

சிலப்பதிகாரத்தில் வரி என்னும் சொல்முடிவு பெற்ற மூன்று பகுதிகளில் கானல்வரி என்னும் பகுதியில் இசைத்தமிழ் கூறுகள் நிரம்பியிருத்தலால், இப்பகுதியின் தலைப்பு இசைத்தமிழ்ப் பாவகைகளைப் பெற்றமையால் அமைந்த பெயராகும். 'கானல்வரி' என்னும் பதிக வரிக்குப் பொருளுரைக்கும் அடியார்க்கு நல்லார் 'இஃது இசைப்பாவால் பெற்ற பெயர்'[17] என்று விளக்கியிருப்பதும் இதனை வலியுறுத்தும். கானல்வரிப் பகுதியில் கோவலன் கூற்றாக வரும் ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில்வரி, கானல்வரி, நிலைவரி, முரிவரி, திணைநிலைவரி, என்பனவும், மாதவி கூற்றாக வரும் ஆற்றுவரி, சார்த்துவரி, திணைநிலை வரி, மயங்குதிணை நிலைவரி, சாயல்வரி, முகமில்வரி, என்பனவும் வரிப்பாடல்களாய் அமைந்தவை. இங்குள்ள வரிப்பாடல்களின் இயல்பை ஆராயுங்கால், அரும்பத வுரைகாரர் கூறும் 'எட்டனியல்பு ஆறனியல்பு' என்பவை இங்குப் பயின்றுவரும் உறுப்புகளின் எண்ணிக்கையைக் குறித்ததாக இருக்கலாம் எனக் கருத இயலும்

உறுப்புக்களின் விளக்கம்

ஆற்றுவரி என்பது ஆற்றைப் புகழ்ந்துரைத்துப் பாடப் பெறுவது. சார்த்துவரி, பாட்டுடைத் தலைவன் பதியொடும் பெயரொடும் சார்த்திப் பாடப் பெறுவது. இதை முகச்சார்த்து, முரிச்சார்த்து, கொச்சகச் சார்த்து என மூன்று பிரிவுகளாகக் கூறுவர் அரும்பதவுரைகாரர். கானல்வரி என்பது நெய்தலங்கானலின் சிறப்பைப் புகழ்ந்துரைப்பது. நிலைவரி, பாட்டுடைத்தலைவனின் அல்லது தலைவியின் உள்ள நிலையை உரைக்கும் பொருண்மை பெற்றது. 'முகமும் முரியும் தன்னொடு முடியும் நிலையை உடையது நிலையெனப்படுமே' என்ற மேற்கோள் பாடலை அரும்பதவுரைகாரர் இதற்குச் சுட்டுவர்.

17. சிலம்பு. பதி. அடி 69 உரை

முரிவரி என்பதை 'எடுத்தவியலும் இசையும் தம் மில் முரித்துப் பாடுதல் முரியெனப்படுமே' எனவரும் மேற்கோள் பாடலால் அரும்பதவுரைகாரர் விளக்குவர். தலைமகன், பாங்கன் கேட்க, தனக்கு உற்றதையுரைத்தல் என்னும் அகப்பொருள் துறைப் பொருண்மையை உள் ளடக்கியதாய் முரிவரிப்பாடல்கள் அமைந்துள. நெய்தல் திணையின் கருப்பொருளும் உரிப்பொருளும் கலந்துவரத் திணையின் சிறப்பைப் புகழ்ந்துரைப்பது திணைநிலைவரி யாகும். திணைகளின் மயக்கத்தைச் சிறப்பித்துரைப்பதும் இத்திணைநிலைவரிக்கு உரியதாகும். சாயல்வரி என்பது, தலைவி அல்லது தலைவன் தன் உள்ளங் கவர்ந்தாரிடத்துக் கொண்ட காதல் மிகுதியால் பண்டைச் சாயல் இழந்த நிலையைச் சிறப்பித்துப் பாடுவது.

கானல்வரி - பெயர்க் காரணம்

இவ்வரிப் பாடல்கள் கானலிடத்துப் பாடப்பெற்றவை. இப்பாடல்களை உள்ளடக்கியமையால் இப்பகுதி கானல்வரி என்னும் பெயர்த்து. கானல்வரி என்னும் தொடர் வேற்றுமை விரியாய்க் கொள்ளும் இலக்கணத்தது. கானல் வரிப் பகுதியில் அமைந்தவை கோவலனும் மாதவியும் பாடிய இசைப் பாடல்கள். எனவே ஆற்றுவரி சார்த்துவரி என்பனவற்றுள் வரியென்பது இசைப் பாடலை உணர்த் திற்று. ஆனால் இப்பகுதிக்குரிய பெயராய கானல்வரி என்பது வேற்றுமை விரியாய்க் கானலில் நிகழ்ந்தவை என்னும் பொருண்மைத்து. இவ்விரண்டன் வேறுபாடு அறிதற்பாற்று. அரும்பதவுரைகாரர், வரிப்பாட்டு, தெய்வஞ் சுட்டியதாகவும், மக்களை வாழ்த்தி வருவதாக வும் வரும் இயல்புடையது எனக் கூறி மேற்கோள் பாடல்

களையும்[18] சுட்டுவர். சிலப்பதிகாரக் கானல்வரிப் பாடல்கள் கோவலன் கூற்றாகவும் மாதவி கூற்றாகவும் அமைந்து மக்களைச் சுட்டிய வரிப்பாடல்களாய் உள்ளன.

கானல்வரிப் பகுதியுள் கோவலன், மாதவி இருவரும் கானல்வரிப் பாடல்கள் பாடுதல், ஒருவரை மற்றொருவர் தவறாக எண்ணுதல், ஆடலாலும், பாடலாலும் அழகாலும் தன்னைக் கவர்ந்த மாதவியைவிட்டுக் கோவலன் பிரிதல் ஆகிய கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருப்பினும் இருவர் பாடும் வரிப்பாடல்கள் கதை நிகழ்ச்சிப் பொருண்மையை விட சிறப்பிடம் பெறுதலாலும், இவ்வரிப் பாடல்களைப் பாடும் களம் நெய்தலங் கானலாக அமைந்துள்ள சிறப் புடைமையாலும், இப்பகுதி கானல்வரி என்னும் பெயர் பெற்றது.

வரிக்கூத்து

கூத்து பற்றிய விளக்கத்தை அரங்கேற்று காதையில் அரும்பதவுரைகாரர் குறிப்புக்களாலும் அடியார்க்கு நல் லாரின் விளக்கம் நிறைந்த உரைப்பகுதியாலும் அறியலாம். கூத்து, அகக்கூத்து, புறக்கூத்து என இருவகைப்படும். அவற்றுள் அகக்கூத்து, சாந்திக்கூத்து, விநோதக்கூத்து என இருவகைப்படும் என அடியார்க்குநல்லாரும் தேசி, மார்க்கம் என இருவகைப்படும் என அரும்பதவுரைகாரரும் கூறுவர்.

---

18. அழலணங்கு தாமரை யருளாழி புடையகோ னடிக்கீழ்ச் சேர்ந்து
நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும்
நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்று மாயின்
தொழலணங்கு மன்புடையார் சூழொளியும் விழ்கரியுஞ் சொல்லா வன்றே
- தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டு
திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி
- மக்களைச் சுட்டிய வரிப்பாட்டு
(சிலம்பு-கானல். அரும்பதவுரை. மேற்கோள்)

இருவகை அகக்கூத்தின் இலக்கணங்களையும் அறிந்து பலவகைப்பட்ட புறநடங்களையும் விலக்குறுப்புக்களையும் சேரப்புணர்க்கவும் வல்லனாகி, பதினொரு வகைக் கூத்துக்களும் கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும், வாத்தியக் கூறுகளும் தாளங்களும் தாளங்கள் வழிவந்த தூக்குகளும் அறிந்தவனாக இருத்தல் வேண்டும் என்பது ஆடலாசிரியனுக்குரிய இலக்கணமாகும். இதனுள் கூறப்பட்ட விலக்குறுப்புக்கள் பதினான்கு என்றும் அவை பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதம் என்பவை என்றும் அடியார்க்குநல்லார் குறிப்புக்களால் அறியலாம்.

இவற்றால் வரிக்கூத்தாவது அகக்கூத்திற்குரிய விலக்குறுப்புக்கள் பதினான்கனுள் ஒன்று என்பது தெளிவாம். 'விலக்குறுப்பாவது தலைவன் செலுத்துகின்ற கதையை விலக்கியும் அக்கதையையே நடாத்தியும் முன்புசெய்த கதைக்கே உறுப்பு ஆவதாகும். இவ்வுறுப்புக்கள் இசைத்தமிழ் ஆகுங்காலத்தே விலக்குண்டு, அப்பாவே நாடகத்தமிழ் ஆகுங்காலத்துப் பாட்டொடு புணர்க்கப்படுமாதலால் இப்பெயர் பெற்றன போலும்' என விலக்குறுப்புக்குரிய விளக்கத்தையும் பெயர்க் காரணத்தையும் உரையாசிரியர் பெருமழைப்புலவர் கூறியுள்ளார். அடியார்க்குநல்லாரும் 'தலைவன் செலுத்துகின்ற கதையை விலக்கியும் அக்கதையை நடாத்தியும் முன்பு செய்த கதைக்கே உறுப்பாகுவதென்ப' எனக் கூறியுள்ளார்[19].' விலக்குறுப்புக்கள் பதினான்கனுள் ஒன்றாகிய வரிக்கூத்து என்பது பிறந்த நிலத் தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழில் தன்மையும் தோன்ற நடித்தலாகும். இதனை,

19. சிலம்பு. அரங். காதை. அடி. நல். விளக்கம் அடி. 12

வரியெனப் படுவது வகுக்கும் காலைப்
பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும்
அறியக் கூறி யாற்றுழி வழங்கல்[20]

எனவரும் பழம்பாடலால் அறியலாம்.

கூத்து வகைகள்

வரிக்கூத்து எண் வகைப்படும். அவை கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சி வரி, எடுத்துக்கோள்வரி என்பன. இவற்றுள் கண்கூடு வரியாவது ஒருவர் கூட்டத் தோன்றுது தானே வந்து காட்சி அளிக்கும் நடம். காண்வரியாவது பிறர் அழைக்க வந்து அவர் போகச் சொல்லியபின் போகிய நடமாகும். உள்வரி என்பது வேற்றுருக் கொண்டு நடித்தல். புறவரி யாவது தலைவனுடன் அணையாது புறத்து நின்று விளை யாடுவது. கிளர்வரியாவது நடுநின்ருர் இருவருக்கும் சந்து சொல்லக் கேட்டு நிற்கும் நடமாகும். தேர்ச்சிவரியாவது காதலன் உறவினர்களுக்குத் தன் துன்பங்களைத் தேடிச் சென்று கூறும் நடமாகும். காட்சிவரி என்பது தன் வருத் தத்தைப் பலரும் காண நடிப்பது. எடுத்துக்கோள் வரி யாவது தான் கையறவு எய்தி வீழ்ந்தாள்போல வீழ்ந்து பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்தலாகும். இவ்வெட்டு வகை வரிக்கூத்துக்களையும் மாதவி ஆடியதாக வேனிற் காதையில் கூறப்பட்டுள்ளது.

அகக் கூத்தின் விலக்குறுப்புக்கள் பதினுன்கனுள் ஒன்ருகிய இவ்வரிக் கூத்தை அகக்கூத்தில் ஒருவகை யாகிய விநோதக் கூத்தினுள் ஒன்ருகச் சிலர் கூறுவர். 'இனி இவ்வரி என்பதனை நிலனும் தொழிலும் தோன்ற நடிக்கும் விநோதக் கூத்தென்பாருமுளர்'[21] எனவரும் அடியார்க்குநல்லார் உரைப்பகுதியால் இதனை அறியலாம்.

20. சிலம்பு. அரங். காதை. -அடி நல். உரைமேற்கோள். அடி. 24
21. சிலம்பு. ஊர்காண. 150 அடி. நல். விளக்கம்

விநோதக் கூத்து, குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என அறுவகைப்படும்[22] என்பதே கருத்தாதலால், வரிக்கூத்தை விநோதக் கூத்தினுள் ஒன்ருக அடக்கிக் கூறுவது பொருந்தாது.

வரிக்கூத்து எட்டு வகைப்படும் என்று கூறுதற்கு மேலும், இது பலவகைப்படும் என்றும், அதனுல் இவ்வரிக் கூத்து பல்வரிக்கூத்து எனப் பெயர் பெறும் என்றும் சிலர் கூறுவர். பல்வரிக்கூத்து என்பார் அவற்றின் வகைகளைப் பழம்பாடல்[23] ஒன்றின் துணைகொண்டு கூறுப. பல்வரிக் கூத்தை விளக்கும் இப்பழம்பாடலுள், நாம் பிற்காலத்தில் இலக்கிய உறுப்புக்களாகக் காண்பவை பல சுட்டப்பட்டுள் ளதைக் காணலாம். திருவாசகத்தில் உள்ள அம்மானை, சாழல், உந்தி என்பனவும் இங்கு வரிக்கூத்தின் வகை களாகக் கூறப்பட்டனவே.

வேட்டுவ வரியும், ஊர்சூழ்வரியும் நாடகத் தமிழ்க் கூருய வரிக்கூத்துப் பொருண்மைகளை விளக்கிநிற்றலால் பெயர் பெற்றுள்ளன, பதிகத்துள் இப்பெயர்களுக்கு உரிய விளக்கங்களைச் சுட்டும் அடியார்க்குநல்லார் இவ்விரு பெயர்களையும் 'கூத்தால் பெற்ற பெயர்கள்' என்று குறிப் பிட்டிருப்பதும் இவ்வுண்மையை விளக்கும்.

வேட்டுவவரி - பெயர்க்காரணம்

வேட்டுவ வரியுள் வேட்டுவ மகள் சாலினி கொற்றவை உருக்கொண்டு ஆடக் காண்கிருேம். இது வரிக்கூத்தினுள் ஒன்ருகிய உள்வரியின் பாற்படும். உள்வரி என்பதை,

'உள்வரி என்பது உணர்த்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோ ருருவம்
கொண்டும் கொள்ளாதும் ஆடுதற் குரித்தே'[24]

22. சிலம்பு. அரங். காதை அடி. நல். விளக்கம் அடி. 12
23. சிந்துப் பிழுக்கை யுடன்சந்தி யோர்முலை
... ...
ஏற்ற உழைமை பறைமைமுத லென்றெண்ணிக்
கோத்த வரிக்கூத்தின் குலம்-சிலம்பு. அரங். காதை அடி. நல். உரை மேற்கோள்
24. சிலம்பு. வேனிற். அடி. நல்லார் விளக்கம் அடி 84-89.

எனவரும் நூற்பாவால் அடியார்க்குநல்லார் விளக்குவர். இதனையே பிறரைப்போல் கோலங்கொண்டு ஆடும் கோலச்சாரி என்றும் விளக்குவர். வேட்டுவ மகள் சாலினி கொற்றவைக் கோலம் பூண்டு நிற்கும் சிறப்பை,

கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றவிப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ
(வேட். வரி. வள். கூத். 1)

என வேட்டுவ வரி பாடுகின்றது. இங்ஙனம் வரிக்கூத்தி னுள் ஒன்றாகிய உள்வரிக்கூத்து என்னும் வகைக்குரிய வேற்றுருக் கொண்டு நடித்தலைப் பொருண்மையாகக் கொண்டு இப்பகுதி விளங்குதலால் கூத்துத் தமிழ்க் கூறாய் இப்பகுதியின் தலைப்பு அமைந்துள்ளது. வென்றிக்கூத்து, வள்ளிக்கூத்து, கூத்துள்படுதல் எனக் கூத்துத் தொடர் பான உள் தலைப்புக்களும் இக்கருத்தை உறுதி செய்வன. வேட்டுவவரி, பாலைநில மக்கள் கொற்றவையை நோக்கி நிகழ்த்தும் வழிபாட்டையும் விளக்குவது. தெய்வமேறிய நிலையில் சாலினி கண்ணகியை வாழ்த்தும் பகுதி [25] காப்பியத் தலைவியின் பண்பு நலத்தையும் உயர்ந்தோரால் தொழப்படவிருக்கும் உயர் நிலையையும் சுட்டிக் காட்டுவது. எனினும் இச்சிறப்புடைமையைவிட பாலைநில மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சியே, அவர்களுள் ஒருத்தி கொற் றவைக் கோலம் பூண்டு நிற்கும் உள்வரிக் கூத்துப் பொருண்மையே சிறப்புற்றிருத்தலால் இப்பகுதி கூத்துத் தமிழால் பெயர் பெற்றது.

ஊர்சூழ்வரி - பெயர்க் காரணம்

ஊர்சூழ்வரியில் கண்ணகியின் அறக் கற்பு மறக் கற் பாக மாறும் நிலை விளக்கப்படும். குலப்பிறப்பாட்டி இல் லிறந்து வருதல் இல்லை. ஆனால் தன் கணவன் குற்றமற்ற

25. இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி - சிலம்பு. வேட்டு. 47-50

நிலையில் விசாரிக்கப்படாமல் கொல்லப்பட்டான் என்று அறிந்த கண்ணகி ஊர்மக்கள் காண, நாணிழந்து வெளிப் பட்டாள். கண்ணகி அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண் ணீரோடு, புலம்பி, ஊர்சூழ வருதலை மதுரை நகர மக்கள் எல்லோரும் கண்கூடாகக் காணுகின்ருர்கள். முறையில் லாத அரசன்தன் ஊரில் வாழ்கின்ற நிறையுடைப் பத்தினிப் பெண்டிரை விளித்துத் தனக்கு நேர்ந்த அவலக் கதையை அரற்றுகின்ருள். கண்ணகி நாணிறந்து வீதி வலம் வந்து அல்லற்பட்டு ஆற்ருது அழுவதைக் கண் டேங்கி 'மல்லல் மதுரையார்' எல்லோரும் மயங்கினர்.

கண்ணகி அனைவரும் காண ஊர்சுற்றிப் புலம்பி வரும் அவலக் காட்சியில் கண்கூடுவரி, காட்சிவரி முதலிய வரிக் கூத்தின் சாயல்கள் நிரம்பியுள. கண்கூடுவரியை 'அவற் றுட் கண்கூடாவது பிரியதரிசனம். அஃதாவது காட்சி. அஃது ஒருவர் கூட்டவன்றித் தானே வந்து நிற்கும் நிலைமை. என்னை ?

கண்கூ டென்பது கருதும் காலை
இசைப்ப வாராது தானே வந்து
தலைப்பெய்து நிற்கும் தன்மைத் தென்ப

என்ருராகலின்'[26] எனவும் காட்சிவரியைக் 'காட்சிவரி என்றது தன்வருத்தத்தைப் பலரும் காணும்படி நடித்தல். என்னை?

காட்சிவரி என்பது கருதும் காலைக்
கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முனர்ப்
பட்டது கூறி பரிந்துநிற் பதுவே

என்ருராகலின்[27] எனவும் அடியார்க்குநல்லார் விளக்கி யுள்ளார். இங்ஙனம் கண்கூடுவரி, காட்சிவரி ஆகிய வரிக் கூத்தின் சாயல்களை மிகுதியும் பெற்று விளங்குதலால், இப்பொருண்மை அமைந்த பகுதி கூத்துத் தமிழ்க் கூருய்ப் பெயர் பெற்றது,

26. சிலம்பு. வேனிற். 74-77 அடி. நல். விளக்கம்
27. சிலம்பு. வேனிற். 105-106 அடி. நல். விளக்கம்

கண்ணகி, ஊரில் உள்ள பத்தினிப் பெண்டிருக்குத் தான் பட்ட துயரத்தைக் கூறுதல், மாமதுரைக் கம்பலை மாக்கள் கணவனைக் காட்ட அவன் உடலைக் கட்டிப் புலம்புதல், கண்ணகியின் புலம்பல் கேட்டு வெட்டுண்டு கிடக்கும் கோவலன் உயிர்பெற்று எழுதல், கண்ணகிக்கு ஆறுதல் கூறி மறைதல், அரசன் கோவில் நோக்கிக் கண்ணகி செல்லல் ஆகிய கதை நிகழ்ச்சிகள் இப்பகுதியுள் இருப்பினும் குலப்பிறப்பாட்டி ஒருத்தி ஊர்காண வரும் அவலக் காட்சி சிறப்புடையதாய் இருத்தலால் அச்சிறப்புப் பொருண்மை பற்றிக் கூத்துத் தமிழுக்குரிய பாவகையாய் இப்பகுதி தலைப்பிடப் பெற்றுள்ளது.

வரி என்ற முடிபுடைய பகுதிகள் மூன்றனுள், கானல் வரி இசைத்தமிழ் யாப்பு வகையைப் பெற்றமையால் அப் பெயர் பெற்றது என்பதும், வேட்டுவவரி, ஊர்சூழ்வரி ஆகியன கூத்துத் தமிழ் யாப்பு வகையைப் பெற்றமையால் அப்பெயர் பெற்றன என்பதும் இதனாற் புலனும். மேலும் வரி எனப் பெயர் பெற்ற காதைகள் இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் உரிய பொதுப் பெயராய் வழங்கிய தனையும் இதனல் அறியலாம்.

குரவை

குரவை என்னும் சொல் முடிவு பெற்றனவாக ஆய்ச்சியர் குரவை. குன்றக்குரவை ஆகிய இரு பகுதிகள் சிலப்பதிகாரத்திலுள. குரவை என்னும் பெயரும் இசைத் தமிழுக்கும் கூத்துத் தமிழுக்கும் உரிய பொதுவான பெயரே. இது குரவைக் கூத்து, குரவைப்பாட்டு என இருவகைப் படும். வரிப்பாடல் வரிக்கூத்து போலன்றிக் குரவைக் கூத்தும் குரவைப்பாட்டும் ஒன்ருேடொன்று தொடர் புடையவை. குரவையாட்டம் நிகழுங்கால் குரவைப் பாட்டும் இடம் பெறும் என்பதைச் சிலப்பதிகார அமைப் பால் அறிகின்ருேம்.

கூத்து வகை

குரவைக் கூத்து, பண்டைத் தமிழ்க் கூத்து வகைகளுள் திணைநிலை மக்களின் உணர்ச்சி வெளிப்பாடாய்த் திகழ்வது. கூத்தின் இருவகைப் பிரிவுகளில் ஒன்றாய அகக்கூத்தின் இருவகையுள் விநோதக் கூத்தென்பதும் ஒன்று என்பது முன்னர்ச் சுட்டப்பட்டது. இவ்விநோதக் கூத்து குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என அறுவகைப்படும்.

இவற்றுள் குரவைக்கூத்தாவது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது. கலிநடவென்பது கழாய்க்கூத்து. குடக்கூத்தென்பது பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் குடம்கொண்டு ஆடுவது. கரணமாவது படிந்த ஆடல். நோக்கென்றது பாரமும் நுண்மையும் மாயமும் முதலாயினவற்றை உடையது. தோற்பாவை என்பது தோலாற் பாவை செய்து ஆட்டுவிப்பது. இவ்வாறுடன் வசைக் கூத்தென்னும் விதூடகக் கூத்தைக் கூட்டி, விநோதக் கூத்தின் வகை ஏழென்பாரும் உளர்.

குரவைக் கூத்து

குரவையின் இலக்கணத்தை

குரவை என்பது கூறும் காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்த வுரைக்கும் இயல்பிற் றென்ப

எனவும்,

குரவை என்ப தெழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்து
அந்நிலைக் கொப்பநின் றாட லாகும்

எனவும் வரும் நூற்பாக்களால்[28] அறியலாம். இவற்றுள் முதல் நூற்பா குரவையின்போது பாடப்பெறும் பாடல் இலக்கணத்தையும், இரண்டாம் நூற்பா ஆடல் இலக்கணத்தையும் உணர்த்தி நின்றன. குரவைக் கூத்தின் இலக்கணக் கூறுகள் ஆய்ச்சியர் குரவையுள் விளங்கக் கூறப்படுகின்றன.

ஆயர்சேரியில் நிகழ்ந்த உற்பாதங்களைக் கண்டு, மாதரி தன் மகள் ஐயையை நோக்கி, ஆயர்பாடியுள் கண்ணனும் பலராமனும் நப்பின்னையுடன் ஆடிய குரவையை நாம் இப்போது ஆடுவோம் என்றுரைத்து கன்னியர் எழுவரை நிறுத்தி, ஏழிசையின் பெயர் களாகிய குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகியவற்றை அவர்கட்குப் பெயர்களாக வைத்து, அவருள் குரல் ஆகியவளைக் கண்ணன் என்றும், இளியாகியவளைப் பலராமன் என்றும் துத்தமாகியவளைப் பின்னை என்றும் ஏனை நரம்புகளாகியோரை மற்றை நால்வர் என்றும் படைத்துப் பெயரிட அவர்கள் நடுவிரலும் அணிவிரலும் முன்னே மடக்கி மற்றை இரு விரல்களையும் கோத்தாடினர்,

இவ்வெழுவரும் வட்டமாக நிற்கும் முறை இருவகை யாக அமையும். பன்னிரண்டு இராசிகளில் இடபம், கடகம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம், மீனம் என்ற ஏழிடத்தும் குரல் முதலாய எழுவரும் நிற்பது ஒருமுறை. இனி, துலாம், தனுசு, கும்பம், மீனம், இடபம், கடகம், சிங்கம் என்ற ஏழிடத்தும் குரல் முதலாய எழுவரும்

28. சிலம்பு. பதி 77 அடி நல். மேற்கோள் பாடல்கள்

நிற்பது பிறிதொரு முறை. இதனைப் பழம்பாக்கள் உணர்த்தி நிற்கின்றன[29].

இம்முறையில் வரிசையுற நின்று மகளிர் ஆடும் இக் குரவைக் கூத்தைத் 'தகவுடையது' என மாதரி கூற்றாக இளங்கோவடிகளும் பாராட்டுகின்றார்[30]. ஆய்ச்சியர் குரவைப் பகுதியில், கோவலன் கொலையால் கண்ணகி தங்கியிருந்த ஆய்ச்சியர் சேரியில் உற்பாதங்கள் தோன்று தல், அவ்வுற்பாத சாந்தியாக ஆய்ச்சியர் குரவை யாடுதல் ஆகிய கதை நிகழ்சிகளும் இடம் பெற்றுள. முல்லை நில வாழ்வியல் பண்பாடாகத் திணைநிலை மக்களின் நாகரிக வெளிப்பாடாக விளங்கும் குரவைக் கூத்தின் சிறப்பு இப்பகுதியில் நிறைந்திருத்தலால், இளங்கோவடிகள் கூத்தால் பெயர் பெற்ற பகுதியாக இதன் தலைப்பை அமைத்துள்ளார்.

குரவைப்பாடல்

குரவைக் கூத்து நிகழ்த்துங்கால் குரவைப்பாட்டும் நிகழும் என்றும் அப்பாட்டே குரவைப்பாட்டு எனக் கூறப் பெறும் என்றும் முன்னர்ச் சுட்டப்பட்டது.

கன்று குணி'லாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ[31]

---

29. அ) ஏத்து மிடப மலவனுடன் சீயம்
கோற்றனுக் கும்பமொடு மீனமிவை பார்த்துக்
குரல்முதற் றார மிதுவாய்க் கிடந்த
நிரலேழுஞ் செம்பாலை நேர்

ஆ) துலைநிலைக் குரலும் தனுநிலைத் துத்தமும்
நிலைபெறு கும்பத்து நேர்க்கைக் கிளையும்
மீனத் துழையும் விடைநிலத் திளியும்
மானக் கடகத்து மின்னிய விளரியும்
அரியிடைத் தாரமு மணைவுறக் கொளலே

-சிலம்பு. ஆய். குரவை. அடி. நல். உரைமேற்கோள்

30. மாயவன்றம் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தம் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோறு
ஆய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத்
தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே

சிலம்பு. ஆய் குரவை-29

31. சிலம்பு. ஆய். குரவை. 19

எனவரும் பகுதிகள் குரவைப்பாட்டின் இயல்பை விளக்கு கின்றன. ஆய்ச்சியர் குரவையுள் குரவைக் கூத்தும் குரவைப் பாடலும் இணைந்திருப்பினும் நாடகத் தமிழ்ப் பாவகையாக அப்பகுதியின் தலைப்பை இளங்கோவடிகள் அமைத்துள்ளார்.

குன்றக்குரவை என்னும் தலைப்பும் அப்பகுதியில் நாடகத் தமிழ்க் கூறுரிய கூத்துக் கூறுகள் இடம் பெற்றிருத் தலால் பெயர் பெற்றது என்னும் கருத்துடையவர் அடியார்க்குநல்லார். இக்கருத்தை விளக்கும் முறையில் 'அக்குன்றின் கண் ஆடிய குரவையும்' என்றும், 'ஆய்ச்சியர் குரவையிற் கூறியது இதற்கும் கூறுக' என் றும் பதிகப் பகுதி உரையில் அடியார்க்குநல்லார் குறிப்பிட் டுள்ளார். எனினும் குன்றக்குரவை என்னும் தலைப்பு இசைத்தமிழ்க் கூறுகளைப் பெற்றமையால் அமைந்த பெயர் எனக் கொள்ளுதலே சிறப்புடைத்து.

குருவியோப்பியும் கிளிகடிந்தும் அருவியாடியும் சுனை குடைந்தும் வாழும் இயல்புடைய குறவர் மக்கள் மலை வேங்கை நறுநிழலில் முலையிழந்து வந்து நின்ற கண்ணகி யைக் கண்டு தொழுதுநின்ற எல்லையில் விண்ணிலிருந்து இழிந்து வந்த விமானத்திலேறி அவர் கட்புலம் காண விட் புலம் படர்ந்தாள் கண்ணகி. இத்தெய்வீக நிகழ்ச்சியைக் கண்ட குறவர் மக்கள் 'இவள்போலும் நம் குலத்துக்கு இருந்தெய்வம் இல்லை' எனக் கொண்டு வழிபாடு செய் கின்றனர்.

ஆய்ச்சியர் குரவை என்ற பெயர் கூத்துத் தமிழ்க் கூறுகள் நிரம்பியமையால் பெயர்பெற்றது போன்றுகுன்றக் குரவை என்ற தலைப்பும் இசைத்தமிழ்க் கூறுகள் நிரம்பி யமையால் பெயர்பெற்றது. இப்பகுதியுள் இசைத் தமிழ்க் கூறுகளே மிகுதியும் இடம் பெற்று விளங்கக் காண் கின்றோம்.

குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின் (குன்ற. 18)

என்பது குறவர்மக்கள் கூற்று.

'உரவுநீர் மாகொன்ற வேலேந்தி யேத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி
(குன்ற. 7: 3-4)

என்பது குலதெய்வமும் நிலத் தெய்வமுமாய முருகனைக் குறவர் மக்கள் ஏத்திப் பாடுவது.

என்றியாம் பாட மறைநின்று கேட்டருளி (குன்ற. 19: 1)

என்பதில் 'பாட' என்னும் சொல் பயின்றது காணலாம்.

பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும் யாம் (குன்ற. 21: 6-7)

என்னும் பகுதியில் பத்தினி வழிபாட்டுடன் பாட்டும் கலந்துள்ளது.

பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுகம்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே (குன்ற. 22)

என்னும் பகுதியில் கண்ணகியைப் போற்றிப் பாடும் குறவர் மக்களின் குழுவிசையைக் கேட்கின்றோம். குரவைப் பாட்டே மிகுதியாக இக்காதையுள் இடம் பெற்றுள் ளமைக்கு இப்பகுதிகள் சான்றுகளாம். குரவைப் பாட லாயினும் இது, குரவைக் கூத்துடன் இணைந்து பாடப் பெறுவதே என்பதை,

என்றியாம்
கொண்டு நிலைபாடி யாடும் குரவையை (குன்ற. 26:1-2)

எனவரும் பகுதியால் இளங்கோவடிகள் விளக்கியுள்ளார். இங்ஙனம் குன்றக் குரவைப் பகுதியில் குறவர்கள் பாடும்

குரவைப் பாட்டும், குறவர்கள் ஆடும் குரவைக் கூத்தும் இடம் பெற்றுள்ளனவெனினும், இவ்விரண்டனுள் கூத்தினைவிடப் பாடலே மிகுதியாக இடம் பெற்றுள்ளது. எனவே குன்றக்குரவை என்னும் பகுதியை, அடியார்க்கு நல்லார் கூறுவதுபோல் கூத்தால் பெற்ற பெயராகக் கொள்ளாது இசையால் பெற்ற பெயராகக் கொள்ளுவதே இசைவுக்குரியது.

குன்றத்தில் வாழும் குறவர்கள் கண்ணகியைக் கண்டு அவள் வரலாறு அறிதல், தங்கள் குலக் கடவுள் வழிபாட்டுடன் கண்ணகிக்குப் பூவும் புகையும் தூவிப் பாடி வழி படுதல் ஆகிய கதை நிகழ்ச்சிகள் குன்றக் குரவைப் பகுதியில் இடம் பெற்றிருப்பினும், குறவர்கள் தங்கள் வாழ்வியல் விளக்கமாக ஆடிப்பாடும் நிகழ்ச்சியே சிறப்புக்குரியதாக விளங்குகின்றது. ஆடல், பாடல் ஆகிய இரண்டனுள் பாடற்கூறுகளே இப்பகுதியுள் மிகுதியும் பேசப்படுதலால் இப்பகுதிக்குரிய தலைப்பு இசையுரிமையால் பெயர் பெற்றது என்பது புலனும்.

(இப்பகுதியில் இடம் பெற்ற வரி, கூத்து ஆகியவற்றின் விளக்கத்தைப் பிற்சேர்க்கை 3-இல் காண்க.)

காதை

முப்பது பகுதிகளைக் கொண்ட சிலப்பதிகாரத்தில் இருபத்திரண்டு பகுதிகள் காதை என்னும் சொல் முடிவுடையன. இசைப்பாவால் பெயர் பெற்ற காதைகள் இவை எனவும், கூத்துப் பகுதியால் பெயர் பெற்ற பகுதிகள் இவை எனவும் அடியார்க்கு நல்லார் விதந்து கூறியுள்ளமையால் எஞ்சிய இவை அனைத்தும் இயற்றமிழுக்குரிய பாவகைகளையுடையன என்பது அவரது கருத்தாதல் அறியலாம். அடியார்க்குநல்லார் கருத்துப்படி கதையுடையது காதை எனப்பட்டது. அடியார்க்குநல்லாரின்

இக்கருத்தைக் 'கதையுடையது காதையாமாதலாலும்'[32] எனவரும் தொடரால் அறியலாம்.

கதையும் காதையும்

அனைத்துப் பகுதிகளும் கதை தழுவியே அமைந்திருக்கின்றன. அம்முறையில் நோக்க அனைத்துப் பகுதிகளும் காதையென்னும் பெயருக்கு உரியனவாகவே அமையும். எனினும் சில பகுதிகள் இசை, நாடகக் கூறுகளுக்குரிய பாவகைகளைப் பெற்ற சிறப்பினால் அப்பகுதிகள் வேறு வகையாகப் பெயரிடப்பட்டன.

பாட்டும் காதையும்

காதை என்பதற்குப் பாட்டென்பதும் பொருளாகும் என்பதை நீலகேசித்திரட்டு உரையால் அறியலாம்[33]. சிலப்பதிகார ஆசிரியர் காதையென்பதற்குப் பாட்டென்னும் பொருளைக் கருதியிருப்பாராயின் மங்கல வாழ்த்துப் பாடல் எனக்கூறாது மங்கல வாழ்த்துக் காதை யென்றே கூறியிருப்பார். அங்ஙனம் கூறாமையால் காதையென்பதற்குப் பாட்டு என்னும் பொருளை அடிகளார் கருதவில்லை என்பது பெறப்படும்.

காதாவும் காதையும்

டாக்டர் உ. வே. சா. தம் பதிப்பின் முன்னுரையில் 'காதை என்பதை இசையோடு பாட்டுப்பாடுவதாகிய செய்யுளென்று பொருள் படுகின்ற 'காதா' என்னும் வடமொழிச் சிதைவென்று கொண்டால் யாதோர் இழுக்குமின்றென்று வடமொழியாளர் கூறுவர். இதனாலேயே இந்நூலின் பல பகுதிகள் காதையென்று பெயர் பெற்றன போலும்' எனக் கூறியுள்ளார்[34].

---

32. சிலம்பு. பதி. 62-63. அடி. நல்-உரைவிளக்கம்

33. முன்றான் பெருமைக்கண் நின்றான் என்னும் காதையை அனுவதித்தவாறு-நீலகேசித்திரட்டு-குண்டலகேசி வாதச் சருக்கம்-27-உரை.

34. சிலம்பு. டாக்டர் உ. வே. சா. 3ஆம் பதிப்பு-முகவுரை

இயற்றமிழ் யாப்புச் சொல்

பாடல், வரி, குரவை என்னும் சொல் முடிபுடைய பகுதிகள் இசைத்தமிழ்க் கூறுடைய பகுதிகளை விளக்கி நிற்றல்போலவும், வரி, குரவை என்பனவற்றை முடிபாகப் பெற்ற பகுதிகள் கூத்துத் தமிழ்ப் பகுதிகளைப் பெற்றன என உணர்த்தி நிற்றல் போலவும் காதை என்னும் பெயரை முடிபாகப் பெற்றவை இயற்றமிழ் யாப்பு வகைக்குரியனவாம். பாடல், வரி, குரவை முதலாயவை இசை நாடகத் தமிழுக்குரிய யாப்புச் சொற்களாய் விளங்குதல் போன்று காதை என்பதும் இயற்றமிழுக்குரிய யாப்புக்குறியீடாய் விளங்குகின்றது. காதை என இப்பகுதிகள் பெயர் பெற்று விளங்குதற்குக் காரணம் அவை இயற்றமிழ்க் கூறுகளைப் பெற்றிருத்தலேயாம்.

பதிகத்துளமைந்த காதைகளின் பெயர்க் காரணம் கூறுங்கால் 'இது இசைப்பாவால் பெற்ற பெயர்' 'இது கூத்தாற் பெற்ற பெயர்' என அடியார்க்கு நல்லார் விதந்து உரைத்துள்ளமையால் எஞ்சியவை இயற்றமிழால் பெற்ற பெயர்கள் என்பதும் பெறப்படும்.

சிலப்பதிகாரத்தின் உட்பிரிவுகள் பெயர் பெற்று விளங்கும் நெறியால் பண்டு, முத்தமிழ்க் கூறுகளமைந்த பகுதிகளைச் சிறப்புப் பெயர்களால் சுட்டும் மரபுண்மையை அறியலாம். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க் கூறுகளுக்குத் தனித்தனியே யாப்பு வகைகள் வழங்கியது போன்று யாப்புக் குறியீட்டுச் சொற்களும் வழங்கின.

காதை என்பது இயற்றமிழ் யாப்பு வகை நிரம்பிய பகுதியைக் குறிக்கும் குறியீட்டுச் சொல்லாகும். இயற்றமிழ் யாப்பு வகைகளைக் கொண்ட மணிமேகலைக் காப்பியத்தில் அனைத்துப் பகுதிகளும் காதை என்றே

பெயர் பெற்று விளங்குதல் இம்மரபினைத் தெளிவுறுத்தும். இசைநாடகக் கூறுகளாய பாவகைகள் இடம் பெற்ற பகுதிகள் காதை என்று பெயர் பெருது பிற வகையால் பெயர் பெற்றன.

பொருள் வகையாலும் பாவகையாலும் மட்டுமின்றி தலைப்பிடு நெறியாலும் சிலப்பதிகாரக் காப்பியம் முத்தமிழ்க் காப்பியமாக விளங்குவது. மங்கலவாழ்த்துப் பாடல், கானல் வரி, குன்றக்குரவை ஆகியன இசைத் தமிழாலும், வேட்டுவவரி, ஊர்சூழ்வரி, ஆய்ச்சியர் குரவை ஆகியன நாடகத் தமிழாலும் எஞ்சியன இயற்றமிழாலும் பெயர் பெற்று விளங்குகின்றன. காதைகளாகிய உட்பிரிவுகளில் இத்தகைய பகுப்பு முறையைக் காண, அக்காலத்து இயலுக்கென்றும் இசைக்கென்றும், நாடகத்துக்கென்றும் தனித்தனிப் பாவகைகள் விளங்கின என்ற குறிப்பையும் உணரலாம். காதையின் தலைப்புக்கள் முத்தமிழை விளக்கி யாப்பு நெறியைச் சுட்டும் சிறப்பு இதனுல் புலனும்.

காதைகளின் யாப்பமைதி

சிலப்பதிகாரம் பொருள் வகையால் மட்டுமின்றி, யாப்பு வகையாலும் புரட்சிப் போக்குடைய புதுமைக் காப்பியம். தொல்காப்பியரும் காக்கைபாடினியாரும் கூறிய பாவகைகளும் பாவினங்களும் உரிய இடங்களில் அமைந்து இக்காப்பியத்தைக் கவின் செய்ப. முப்பது பகுதிகளாகப் பிரிந்து கிடக்கும் இக்காப்பிய உறுப்புக் களாகிய முத்துக்கள், யாப்பு என்னும் பொன்னுணில் அழகு பெறக் கோத்தமைக்கப்பட்டுள்ளன.

காதைதோறும் கவின்பெற மிளிரும் யாப்பு வகைகளை நிரல்பட விளக்குவது இக்கட்டுரை. உரையாளியரும் பதிப்பாளியரும் காதைகளுள் அமைந்த பாவகைகளையும் பாவினங்களையும் வகைப்படுத்தி ஆங்காங்கு உரைத்துள் ளனர். பதிகத்தின் யாப்புவகை முன்னரே ஆயப்பெற்ற தாதலின் நூலுள் அமைந்த முப்பது பகுதிகளின் யாப்பியல் போக்கே இவண் எடுத்துக்கொள்ளப்பெற்ற ஆய்பொருள். பகுதிகளைக் கிடக்கை முறையான் நிரலே எடுத்துக் கொண்டு, அவற்றின் யாப்பியல் போக்கு இவண் விளக்கப் படும். ஒவ்வொரு பகுதியுள்ளும் அமைந்த இயற்றமிழ் யாப்புவகை இசைத்தமிழ் யாப்புவகை. நாடகக் கூறுகள் ஆகியவை ஆங்காங்கே விதந்து சுட்டப்படும்.

1. மங்கலவாழ்த்துப் பாடல்
(வெண்டாழிசை, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, இசைப்பாக்கள்)

நூலின் முதற் பகுதியாக விளங்குவது மங்கல வாழ்த்துப் பாடல். திங்களைப் போற்றுதும் எனத் தொடங் கும் நூல் வாழ்த்துப் பகுதியும் இதன் உள்ளுறுப்பாய்

விளங்குகின்றது. 'ஆங்குப் பொதியிலாயினும் இமயமாயினும்' எனத் தொடங்கும் பகுதிக்கு முன்னர், கீழுள்ள பன்னீரடிகளாலாய பகுதி நூலின் வாழ்த்துப் பகுதியாம்.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரிநாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்
பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற்கு அவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான் (மங். வாழ். 1—4)

காதையின் யாப்பு வகையாய மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா போன்று இப்பகுதியும் இசைத்தமிழ்ப் பாவாய் விளங்குகின்றது. 'இக்காப்பியத்தை ஓதத் தொடங்குவோர் இசையினல் வாழ்த்துப் பாடித் தொடங்கவேண்டும் என்பது அடிகளார் கருத்தாகும். எனவே இஃது இசைத் தமிழ் என்பது பெற்றும்'[1] எனவரும் பகுதியும் இக்கருத்தைத் தெளிவிக்கும்.

பொருண்மை

இந்நான்கு பாக்களும் வாழ்த்து என்னும் பொதுப் பொருண்மைக்கு உரியவை. முதற் பாடல் சோழனின் குடைச் சிறப்பையும், இரண்டாம் பாடல் சோழனின் திகிரிச் சிறப்பையும், மூன்றும் பாடல் சோழனின் அளிச் சிறப்பையும் நான்காம் பாடல் சோழனின் குலச் சிறப்பையும் பாராட்டுவன. மேலும் இவை, முறையே திங்கள்,

1. சிலம்பு-பதிகம்-பெருமழைப் புலவர் உரை-கழகப் பதிப்பு

ஞாயிறு, மாமழை, பூம்புகார் ஆகியவற்றையும் வாழ்த்துவன.

சோழன் குடைச் சிறப்பைப் பாராட்டும் முதற் பாடல் குடைமங்கலம் என்னும் தொல்காப்பியப் புறத்துறைக்கு இளம்பூரணராலும்[2] நச்சினார்க்கினியராலும்[3] எடுத்துக் காட்டாகக் காட்டப் பெற்றது. சோழன் திகிரியைப் பாராட்டும் இரண்டாம் பாடல் தொல்காப்பியம்-நச்சினார்க் கினியத்தில்[4] திகிரியைப் புனைந்துரைத்தமைக்கு எடுத்துக் காட்டாய் விளங்குவது. இவை செம்பியனையும் புகாரினை யும் சிறப்பித்தன என அரும்பதவுரைகாரரும் கொடையும் திகிரியும் உயர்ச்சியும் புனைந்து கூறியது என அடியார்க்கு நல்லாரும் இப்பாடல்களின் பொருண்மையைச் சுட்டுவர். முதல் மூன்று பாடல்களும் கடவுளை வாழ்த்துவனவே என்றும் இப்பாடல்களின் பொருண்மையைப் பிற்கால உரையாளி சுட்டுவர்[5].

யாப்பமைதி

இப்பாடல்கள் நான்கையும் சிந்தியல் வெண்பாக்கள் என அரும்பதவுரைகாரர் குறிப்பர்[6]. நூலின் பிற பகுதி களுக்கு யாப்புக்குறிப்பு எழுதும் வழக்கு அரும்பதவுரை காரருக்கு இல்லை. எனினும் நூலின் தொடக்கத்தில் அமைந்த இப்பாக்களுக்கு மட்டும் யாப்புக் குறிப்பு வரைந் துள்ளார் என்பது அறிதற்குரித்து.

வாழ்த்து என்னும் ஒரு பொருண்மைக்கு உரியனவாகக் கொள்ளப்படின் இவற்றைச் சிந்தியல் வெண்பாக்கள் என்று கொள்வதிலும் ஒரு பொருள்மீது அடுக்கி வந்த

2. தொல். இளம். புறத். நூ. 30
3. தொல் நச்சி புறத். நூ. 36
4. தொல். நச்சி. புறத். நூ. 36
5. இம்மங்கல வாழ்த்தைப் பின்னும் கூர்ந்து ஆராயுங்கால், இவ்வாழ்த்து அடிகளார் கடவுளை வாழ்த்தும் வாழ்த்தே என்பது புலப்படும்- சிலம்பு மங். வாழ். 7-9 கழகப் பதிப்பு.
6. இவை நான்கு சிந்தியல் வெண்பாவும் செம்பியனையும் புகாரினையும் சிறப் பித்தன-சிலம்பு-மங்கல. 1-12 அரும். குறிப்பு

வெண்டாழிசைகள் என்று கொள்ளுதலே நேரிதாம். வெண்டாழிசை என்னும் பெயரும் வெள்ளொத்தாழிசை என்னும் பெயரும் ஒரேவகை இனத்திற்குரிய வேறு வேறு பெயர்கள். காக்கைபாடினியார் இப்பாவினத்தை வெண்டாழிசை என்ற பெயராலும், சிறுகாக்கைபாடினியார் அவிநயனுர் முதலியோர் வெள்ளொத்தாழிசை என்ற பெயராலும் குறித்திருப்பது இக்கருத்தை விளக்கும்.

யாப்பருங்கல உரையாசிரியரே வெண்டாழிசைக்கும் வெள்ளொத்தாழிசைக்கும் வேறுபாடு சுட்டிய முதலாசிரியர். சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்று வந்து நடப்பது வெள்ளொத்தாழிசை என்றும், பிறதளை தட்டு, ஒன்ருயும் இரண்டாயும் ஒரு பொருள் மேல் மூன்ருயும், மூன்றின் மிக்கு வருவனவும் எல்லாம் வெண்டாழிசை என்றும் இருவகைப் பெயர்களுக்கும் வேறுபாடு சுட்டி இவர் விளக்கம் கூறுவர். இவ்வெண்டாழிசைகளில் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகிய வெண்டளைகள் மட்டுமே பயின்றுள. நான்கு தாழிசைகளும் ஈற்றடி முச்சீராய் 'நாள்' வாய்பாட்டு அசைச்சீரோடு இற்றுள்ளன.

தளையும் பொருளும்

வெள்ளொத்தாழிசை வெண்டளையால் ஒரு பொருள் மேல் மூன்று மட்டும் பயிலல் வேண்டும் என்றும், வெண்டாழிசை பிற தளையாலும் வரப்பெறும், ஒரு பொருள் பேல் ஒன்ருய், இரண்டாய், மூன்ருய் மூன்றின் மிக்கனவாயும் வரப்பெறும் என்றும் யாப்பருங்கல உரையால் அறியலாம். எனினும் இளங்கோவடிகள் இப்பெயர் வகைகளில் வேறுபாடு ஏற்படாத காலத்து, வெண்டளை மட்டும் பயின்றனவாய், ஒரு பொருள் மேல் மூன்றின் மிக்கனவாய் இப்பகுதியை அமைத்துள்ளார். யாப்பருங்கல உரையாசிரியர் கூறும் இலக்கண நெறியில்

இப்பாக்களைப் பொருத்துங்கால், வெள்ளொத்தாழிசைக் குரிய தளை அமைப்பையும், வெண்டாழிசைக்குக் கூறிய பொருளமைப்பையும் இப்பாக்கள் பெற்று விளங்குதலை அறியலாம். தளைவகையாலும் பொருள் வகையாலும் இப்பாவினம் இருவேறு பெயர்களால் வேறுபடுத்தப் படாது இளங்கோவடிகள் காலத்தில் இருந்தது என்ற யாப்பியல் நெறியையும் இதனுல் உணரலாம். இங்ஙனம் மங்கலவாழ்த்துப் பாடலின் உள்ளுறுப்பாய் அமைந்த இவ்வாழ்த்துப் பாக்கள் நான்கும் வேற்றுத்தளை விரவாது வெண்டளையே பயின்றனவாய், ஒருபொருள் மேல் மூன்றின் மிக்கடுக்கி வந்த வெண்டாழிசைகளாய் அமைந்துள.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

கோவலன் கண்ணகி இருவரின் திருமண வாழ்த்துப் பொருண்மையைக் கூறும் நூற்பகுதி 'ஆங்கு' பொதிய லாயினும் இமயமாயினும்' எனத் தொடங்குகின்றது. காதையின் இறுதியாகிய 'ஒருதனி யாழி உருட்டுவோன் எனவே' என வருவது ஈறுக இப்பகுதி மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் யாப்பு வகையில் அமைந்தது. இப்பகுதியின் பாவகையை அனைத்து உரையாளியரும் பதிப்பாளியரும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றே சுட்டுப. இப்பாவில் தரவு, தாழிசை ஆகிய கலிப்பாவின் முதலுறுப்புகளும் தனிச்சொல், அராகம், சுரிதகம் என்ற துணையுறுப்புகளும் பயின்று முறை பிறழ்ந்து வந்துள்ளன. அவற்றின் அமைப்பு நிலையையும் இல்க்கண நெறியையும் இவண் விதந்து சுட்டுவல்.

தரவு

'பொதியிலாயினும் இமயமாயினும்' எனத்தொடங்கும் அடிமுதல் 'முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே' என முடியும் பகுதிவரை தரவு என்னும் உறுப்பாகும்.

'சுருங்கிற்று மூன்றடி, ஏனைத்தரவு இருமூன்றடியே' 7 என்னும் காரிகைத் தொடராலும். யாப்பருங்கல உரைக் குறிப்பாலும் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா ஆகியவை மட்டும் ஆறடித்தரவால் வரும் என்பதையும் எஞ்சிய கலிப்பாக் களின் தரவுக்கு மூன்றடியே சிறுமை, பெருமைக்கு வரையறையில்லை என்பதும் போதரும்.

அடிவரையறை பற்றிய இவ்விலக்கணத்துக்கு ஏற்ப இம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவின் தரவு ஆறடிகளாலாயது. தரவினுள் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை ஆகியன மிகுதியாகப் பயின்றுள. ஓரிடத்தில் கலித்தளை அமைந்துள்ளது. தரவாய ஆறடிப் பகுதி, முதல் மூன்றடிகளில் பொதியில்-பதியெழு-பொதுவறு என ஒரு விகற்பமாயும் பின் மூன்றடிகளில் நடுக்கின்றி-ஒடுக்கம்-முடிந்த என ஒரு விகற்பமாயும் கூடுதல் இருவிகற்பங்களால் அமைந்துள்ளது.

தாழிசை

தாழிசையின் அடி அளவைக் கூறும் யாப்பருங்கலக் காரிகையார் 'தாழிசைப் பா சுருங்கிற்றிரண்டடி யோக்கம் இரட்டி'8 எனவரும் தொடரால் இரண்டடி சிறுமை என்றும் நான்கடி பெருமை என்றும் குறிப்பிடுவர். யாப்பருங்கல உரைகாரரும் இவ்வளவைச் சுட்டுவர்9.

இப்பாவில் நாகநீள் நகரொடு...., போதிலார் திருவினுள்...., பெருநில முழுதாளும்...., மண்டேய்த்த புகழினுள்...., இருபெருங் குரவரும் எனத் தொடங்கும் நான்கடிகளால் அமைந்த பகுதிகள் தாழிசைகள் என்னும் உறுப்புக்களாம்.

7. யாப். காரிகை நூ. 56
8. யாப். காரிகை நூ. 57
9. யாப். நூ. 82 மேற்கோள்

தரவை அடுத்து வரும் இத்தாழிசைகளில் முதல் இரண்டும் கண்ணகியைச் சிறப்பிப்பன. அடுத்துள்ள இரண்டும் கோவலனைப் பாராட்டுவன. இறுதியிலுள்ளது திருமணச் செய்தி கூறுவது. இவை ஒருபொருள் மேல் இரண்டடுக்கி வந்தனவாக இரு இணையும், தனித்து வந்த தாக ஒன்றும் உள.

நான்கு தாழிசைகள்

நாகநீள் நாகரொடு...., போதிலார் திருவினள்...., எனத் தொடங்கி வரும் இரு தாழிசைகளும் கண்ணகியின் சிறப்புரைக்கும் பொருண்மைமீது இரண்டடுக்கி வந்தவை. பெருநில முழுதாளும்....' மண்டேய்த்த புகழினன்.... எனத் தொடங்கி வருவன இரண்டும் கோவலன் சிறப் புரைக்கும் பொருண்மைமீது இரண்டடுக்கி வந்தவை.

இத்தாழிசைகளில் நிரையொன்றாசிரியத் தளை, இயற் சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை முதலியன பயின்றுள. பெருநில முழுதாளும் எனத் தொடங்கும் ஒரு தாழிசையில் மட்டும் ஓரிடத்தில் ஒன்றாத வஞ்சித்தளை அமைந்துள்ளது. இத்தாழிசைகள் அனைத்தும் ஒரு விகற்பத்தால் இயன்றுள. முதல் தாழிசையுள் நாக-போக-மாக-ஈகை என்றும், இரண்டாம் தாழிசையுள் போதிலார்-தீதிலா - மாதரார் - காதலாள் என்றும் மூன்றாம் தாழிசையுள் பெருநிலம்-ஒருதனி-வரு நிதி-இருநிதி என்றும், நான்காம் தாழிசையுள் மண் -பண்- கண்டு-கொண்டு என்றும் இவ்விகற்பச் சிறப்பு அமைந் துள்ளது காணலாம். மேலும் முதல் தாழிசையின் இறுதி 'அகவையாள்' என முடிந்தமைக்கேற்ப மூன்றாம் தாழிசை யின் இறுதி 'அகவையாள்' என முற்றியது. இரண்டாம் தாழிசையின் இறுதி 'என்பாள் மன்னோ' என முடிந் தமைக்கு ஏற்ப நான்காம் தாழிசை 'என்பான் மன்னோ'என அமைந்தது. ஒருபொருள் அடுக்கிய தாழிசைகளில் இறுதி

யொத்து வரும் சிறப்பினைப் போன்று, தனித்தனிப் பொருளில் அடுக்கி வந்த தாழிசைகட்கிடையேயும் இறுதியொப்பு அமைந்தது சிறப்பாகக் குறித்தற்குரித்து.

'இருபெருங் குரவரும்' எனத் தொடங்கும் தாழிசை ஒரு பொருள்மீது தனித்து வந்தது. முன்னுள்ள தாழிசைகளைப்போல் நாற்சீர் நான்கடியால் வாராது, இத்தாழிசை நான்காம் அடியாகிய ஈற்றடியில் முச்சீர்பெற்று வெண்பாவுக்குரிய தோற்றத்துடன் விளங்குகின்றது. இதனுள் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகியவற்றோடு நிரையொன்றாசிரியத்தளையும் மூன்றிடங்களில் பயின்றுளது.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவில் வரும் தாழிசை, ஈற்றடி குறைந்தும் வரப்பெறுதல் உண்டு. இதனைச் 'சிறந்து என்று மிகுத்துச் சொல்லிய அதனால் இவற்றின் தாழிசை ஈற்றடி குறைந்து வரவும் அமையும் எனக் கொள்க' என வரும் யாப்பருங்கல உரைகாரர் குறிப்பால்[10] அறியலாம். திருமணப் பொருண்மை கூறும் இத்தாழிசை ஈற்றடி குறைந்து முச்சீரால் வந்தது. இதனுள், முந்தைய தாழிசைகளைப்போன்று விகற்பச் சிறப்பில்லை.

அராகம்

மங்கலவாழ்த்துப் பாடலில் அவ்வழி என்னும் தனிச் சொல்லையடுத்து,

முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்
வெண்குடை
அரசெழுந்ததொர் படியெழுந்தன அகலுள்மங்கல
அணியெழுந்தது

என இரண்டடிகள் அமைத்துள்ளன. இவை இப்பாவின் அராகம் என்னும் உறுப்பு. இவ்வடிகள் நான்கடிச்

10. யாப். நூ. 86. உரைவிளக்கம்

சிறுமையாய் அளவடியால் வந்த அராகவுறுப்பாகக் கொள்ளுதற்குரியன. இப்பகுதியை

முரசி யம்பின முருட தீர்ந்தன
முறையெ ழுந்தன பணிலம் வெண்குடை
அரசெ ழுந்ததொர் படியெ ழுந்தன
அகலுள் மங்கல அணியெ ழுந்தது

என நான்கடிகளாகத் துணித்து அமைத்துக்கொள்ள, அராகவுறுப்பின் அமைப்புப் புலனும். இவ்வுறுப்பினுள் அகவலோசையும், ஆசிரியத் தளைகளும் இடம் பெற்றுள்ளன. எனவே இது, அகவல் விரவிய ஓசையதாய் அளவடியாய், நான்கடியால் வந்த அராகவுறுப்பாய் அமைந்துள்ளது.

தனிச்சொல்

'ஒரு சொல்லாய்ப் பொருள் நிரம்பித் தனியே நிற்றலின் தனிநிலை என்பதூஉம் காரணக் குறி' எனத் தனிச் சொல்லின் இலக்கணத்தை,

உறுப்பிற் குறைந்தவும் பாக்கள் மயங்கியும்
மறுக்கப் படாத மரபின ஆகியும்
எழுவாய் இடமாய் அடிப்பொருள் எல்லாம்
தழுவ நடப்பது தான்றனிச் சொல்லே

எனக் காக்கைபாடினியார் கூறுவர்[11]. தனிச்சொல்லுக்கு விட்டிசை, கூன், தனிநிலை என்பனவும் வேறு பெயர்கள்.

கலிப்பாக்களில் தனிச்சொல்

தனிச்சொல் அல்லது கூன் கலிப்பாவில், அடி முதலில் பயின்று வரும் எனினும், உரையாசிரியர்கள் சில வகைக் கலிப்பாக்களில் இத்தனிச் சொல் இடையிடையே வரப் பெறும் என்றும் குறிப்பிடுப. இளம்பூரணர் ஒத்தாழிசைக் கலியுள் தனிச்சொல் என்னும் உறுப்பு தாழிசைக்குப்

11. யாப். ஒழி. நூ. 1 உரைமேற்கோள்

பின்னரும், தாழிசைக்கு முன்னரும், தாழிசைதோறும் பயின்றுவரும் என்று குறிப்பிட்டுள்ளார்[12]. கொச்சகக் கலிப்பாக்களிலும் தனிச்சொல் என்னும் உறுப்பு இடையிடையே வரவும் பெறும் என்பதை யாப்பருங்கலவுரை யாசிரியர் 'தாமும்' என்ற விதப்புக் கிளவியால் விளக்குவர்[13]. தனிச்சொல் அசையாகவோ, சீராகவோ சிறுபான்மை அடியாகவோ வரப்பெறும்.

பயின்ற தனிச்சொற்கள்

ஆங்கு, அதனால், அவளுந்தான், ஆங்கு, அவனுந் தான், அவரை, அவ்வழி என வரும் ஏழு தனிச்சொற்கள் இம்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவின் இடையே பயின்றுள. இவை அனைத்தும் பொருள் பயின்றனவே.

முதற்சொல், 'பொதியிலாயினும் இமயமாயினும்' எனத் தொடங்கும் தரவுப் பகுதிக்கு முன்னர் அமைந் துள்ளது. தரவின் முன்னரும் தனிச்சொல் பயின்றுவரும் என்பதை,

எனவாங்கு
துணைவளைத்தோள் இவள்மெலியத் தொன்னலம்
துறப்புண்டாங்
கிணைமலர்த்தார் அருளுமேல் இதுவதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ

என வரும் யாப்பருங்கல மேற்கோள் பகுதியால்[14] அறிய லாம். அதனால், அவளுந்தான், ஆங்கு, அவனுந்தான், அவரை ஆகிய ஐந்தும் ஐந்து தாழிசைகளின் முன்னர்

12. அ) தனிச் சொல்லைப் பின் எண்ணியவதனான் தாழிசைதோறும் தனிச் சொல் வரவும் பெறும் என்று, கொள்க' - தொல். செய். இளம். நூ. 128 - உரை விளக்கம்

ஆ) தாழிசைப்பின்னர் நடத்தலைப் பயின்றுழுகு மெனவே, தாழிசைக்கு முன் னர் வருதலும் சிறுபான்மை உளதென்று கொள்க' - தொல், செய். இளம். நூ. 131 உரை விளக்கம்

13. யாப். செய். நூ. 33 - உரை விளக்கம்

14. யாப். செய். நூ. 33 - உரை மேற்கோள்

இடம் பெற்றன. தாழிசைதோறும் தனிச்சொல் பயின்று வரும் என்பதை யாப்பருங்கல உரையாசிரியர் குறிப்பால் அறியலாம். மேலும் அங்ஙனம் பயின்று வந்த மேற்கோள் பாடல்களையும் அந்நூலுள்[15] காணலாம். 'அவ்வழி' என்னும் தனிச்சொல் அராக உறுப்பிற்கு முன்னர் வந்துள்ளது. இம்முறையில் வந்த கொச்சகக் கலியையும் யாப்பருங்கலத்துள்[16] காணலாம். எனவே இம்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவில் உறுப்புக்களின் இடையிடையே தனிச்சொற்கள் அமைந்துள்ளன.

சுரிதகம்

காக்கைபாடினியார்,

'ஆசிரியம் வெண்பா எனவிவை தம்முள்
ஒன்ருகி அடிபெற் றிறுதி வருவது
சுழியம் எனப்பெயர் சுரிதக மாகும்'[17]

என இச்சுரிதக இலக்கணத்தைச் சுட்டியுள்ளார். இளம்பூரணர் ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குரிய சுரிதகத்தின் அடி அளவைக் கூறுங்கால், 'தரவியல் ஒத்தலாவது சிறுமை நான்கடியாகவும், பெருமை பன்னிரண்டடியாகவும் வருதல்' என்று குறிப்பிடுவர். எனினும் பேராசிரியர் நச்சிஞர்க்கினியர் உரைக் குறிப்புக்களால், சுரிதகம் சிறுபான்மை தரவின் அளவைவிட மிக்கும் வரப்பெறும் என்று அறியலாம். யாப்பருங்கல உரையாசிரியரும்,'தரவின் துணையே சுரிதகம் ஆவது சிறப்புடைமையால் எடுத்து ஓதினர்; தரவின் மிக்கும் குறைந்தும் உளவாயினும் எனக்கொள்க'[18] எனவரும் பகுதியால் சுரிதகத்தின் அடி அளவைச் சுட்டுவர். இக்குறிப்புக்களால் சுரிதகத்தின் அடியளவு, தரவின் அளவைவிட மிகுதியாகவும் வரப்

15. யாப். செய். நூ. 33 - உரை மேற்கோள்
16. யாப். செய். நூ. 33 - உரை மேற்கோள்
17. யாப். செய். நூ. 29 - உரை மேற்கோள்
18 யாப். செய். நூ. 29 உரைவிளக்கம்

பெறும் என்றறியலாம். கலித்தொகையுள் தரவினும் மிகுதியான அடியளவைக் கொண்டு சுரிதகம் இற்ற பாடலும்[19] இதற்குரிய இலக்கியச் சான்றாக உள்ளது. மேலும், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவில், கலிப்பாவுக்கு உரிய உறுப்புக்கள் மிக்கும் குறைந்தும், உறழ்ந்தும் பிறழ்ந்தும் வருமாதலால் சுரிதகம் பன்னீரடியின் மிக்கு வருதலும் உண்டெனஅறியப்படும்.

மங்கலவாழ்த்துப் பாடலில் 'மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து' எனத் தொடங்கும் பகுதி முதல் 'ஒரு தனியாழி உருட்டுவோன் எனவே' என முடியும் பகுதி ஈறாக வருவது சுரிதகம். இது, ஈற்றயலடி முச்சீராய் நேரிசையாசிரியப்பா என்னும் யாப்பால் இருபத்தோரு அடிகளாலாய அகவற் சுரிதகம். இதனுள், நேரொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை ஆகிய தளைகள் பயின்றுள. இச்சுரிதகத்துள் ஈற்றயலடி முச்சீராய், ஈற்றடி ஏகார இறுதியாய் அமைந்துள்ளது.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, கலிப்பாவுக்கு ஓதிய உறுப்புக்களோடு மயங்கிவந்தால் இயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், பிற பாக்களோடு மயங்கி வந்தால் அயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும் வேறுபடுத்தி வழங்கப்படும். இதனை யாப்பருங்கல உரையாசிரியர் குறிப்பால்[20] அறியலாம். அம்முறையில் கலிப்பாவிற்குரிய உறுப்புக்களோடு மட்டுமே மயங்கிவந்த இப்பா, இயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் பெயருக்கு உரியது.

இங்ஙனம் மங்கலவாழ்த்துப் பாடல் ஆறடித்தரவும் தாழிசைகளும் அராகவுறுப்பும், ஆசிரியச் சுரிதகமும் இடையிடையே தனிச்சொற்களும் பெற்று, கலிக்கு ஓதப்

19. கலி. 16
20. யாப். செய். நூ. 33 - உரைவிளக்கம்

பட்ட உறுப்புக்களோடு மயங்கி வந்த இயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாக அமைந்துள்ளது. இக்கட்டுரைக் கண் சுட்டப்பெற்ற யாப்பியல் விளக்கத்திற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்ட மூலப் பகுதி இறுதியில் பிற்சேர்க்கையாக உள்ளது. நிலைமண்டில ஆசிரியப்பா அல்லாத பிற பகுதிகளின் யாப்பு மூலங்களும் பிற்சேர்க்கைக்கண் விளங்க அமைக்கப்பட்டுள.

2. மனையறம்படுத்த காதை (நிலைமண்டில ஆசிரியப்பா)

சிலப்பதிகாரத்தின் இரண்டாவது பகுதியாக விளங்குவது மனையறம்படுத்த காதை. கோவலன் கண்ணகி இருவரும் மனையறம் செய்யும் மாண்பினை விளக்கும் இப்பகுதி, நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்புவகையால் இயன்றது. அனைத்து உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் இக்கருத்தைக் கூறுப.

அடியார்க்கு நல்லார்

இப்பகுதியின் பாவகையைக் கூறும் அடியார்க்கு நல்லார் ‘எல்லாவடியும் நேரடியாய் வந்து முடிதலின் இது நிலைமண்டில ஆசிரியப்பா’ என்று குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் நாற்சீர் கொண்ட அடியில் பத்து முதல் பதினான்கு எழுத்தளவுகாறும் ஐந்து நிலம் பெற்று வருவதை நேரடி என்பர்[21]. காக்கைபாடினியார் நாற்சீர் கொண்டது அளவடி என்பார்[22]. நாற்சீர் கொண்ட அடிகளையே அடியார்க்கு நல்லார் இவண் நேரடி என்னும் பெயரால் குறிப்பிட்டார். சீரெண்ணி அடிவகுக்கும்

21. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒதத நாலெழுத் தேற்றலங் கடையே - தொல். பொ. செய். 37 இளம்.

22. இருசீர் குறளடி; சிந்தடி முச்சீர்;
அளவடி நாற்சீர்; அறுசீ ரதனின்,
இழிப நெடிலடி என்றிசி னோரே - யாப். நூ. 24 - உரை மேற்கோள்

மரபையே அவர் உளங்கொண்டார் என்பதற்குச் சிலப்பதிகாரப் பதிகவுரை சான்றாக அமைந்துள்ளது.

புதிய பகுதி

சிலப்பதிகாரப் பதிப்பாசிரியர் டாக்டர் உ. வே. சா. தமக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடியொன்றில், இக்காதையின் முற்பகுதியில் பின்வரும் புதிய பகுதி கிடைத்துள்ளதெனக் குறிப்பிடுவர்.

திருவின் செல்வியொடு பெருநில மடந்தையை
ஒருதனி யாண்ட செருவடு திண்டோள்
கரிகாற் பெரும்பெயர்த் திருமா வளவனைப்
பாலை பாடிய பரிசிலன் றெடுத்த
மாலைத் தாகிய வளங்கெழு செல்வத்
தாறைந் திரட்டியு மாயிரங் குடிகளும்
வீறுசால் ஞாலத்து வியலணி யாகி
உயர்ந்தோ ருலகிற் பயந்தரு தானமும்
இல்லது மிரப்பும் நல்லோர் குழுவும்
தெய்வத் தானமும் திருந்திய பூமியும்
ஐய ருறையுளும் அறவோர் பள்ளியும்
விண்ணவ ருலகினி னண்ணிடு நகரமொ
டெண்ணுவரம் பறியா விசையொடு சிறந்த[23]

கரிகாற்பெருவளத்தானின் ஆட்சிச் சிறப்பையும் அவனால் ஆளப்பெற்ற பூம்புகாரின் சிறப்பையும் விளக்கி, இக்காதையின் தொடக்கத்தில் உள்ள,

உரைசால் சிறப்பி னரைசுவிழை திருவின்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்

என்ற அடிகளோடு பொருள் தொடர்ந்து சென்று இது முற்றுப்பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டப் பகுதியில் நெடுஞ்செழியன் பற்றிய குறிப்பும், வஞ்சிக்

23. மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் வீட்டுப் பிரதியில் இப்பதின்மூன் றடிகளும் காணப்படுகின்றன என்பது டாக்டர் உ. வே. சா. குறிப்பு.

காண்டப் பகுதியில் செங்குட்டுவன் பற்றிய குறிப்பும் இருத்தல் கண்டு, புகார்க் காண்டப் பகுதியில் சோழன் கரிகாலன் பற்றிய குறிப்பும் இருத்தல் வேண்டும் என எண்ணிச் சேர்க்கப்பெற்ற பகுதியாக இது இருக்கலாம். அரும்பதவுரைகாரர் அடியார்க்கு நல்லார் ஆகியோர் உரைகளும் இப்பகுதிக்கு இல. இங்ஙனம் மனையறம் படுத்த காதை தொண்ணூறு அடிகளாலாலாய நிலை மண்டில ஆசிரியப்பாவாய் உள்ளது.

நிலைமண்டில ஆசிரியப் பாவால் அமைந்த காதைகள் அனைத்தும் பெரும்பாலும் ஒரேவகை இலக்கண நெறி யினவாதலால் இவை இக்கட்டுக்கண் சுருங்கவுரைக்கப் படும். எனினும் விளக்கத்துக்குரிய பகுதிகளாயின் விரித்துச் சுட்டப்படும். நிலைமண்டிலப் பாவகை யால் அமையாத பிற பகுதிகளே இக்கட்டுரைக்கண் விளக்கமாக உரைக்கப்பட்டுள.

3. அரங்கேற்றுகாதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

காப்பியத்தின் முப்பெரும் மாந்தருள் ஒருத்தியாய மாதவி அறிமுகப்படுத்தப்படும் காதையே அரங்கேற்று காதையாகும். ஆடல்மகள், ஆடலாசிரியன், இசையா சிரியன், கவிஞன், தண்ணுமையாசிரியன், குழலாசிரியன், யாழாசிரியன், ஆகியோர் இலக்கணங்களைக் கூறி, மாதவியின் அரங்கேற்றத்தை விளக்கும் பொருண்மை கொண்ட இக்காதை, நிலைமண்டில ஆசிரியப்பாவால் அமைந்தது.

பதிப்பாசிரியர்களும் உரையாசிரியர்களும் இப்பகுதி யின் யாப்பு வகையை நிலைமண்டில ஆசிரியம் என்றே குறிப்பிடுப. நூற்று எழுபத்தைந்தடிகளாலாய இப்பகுதியில் ஆசிரியப்பாவிற்குரிய சீர்களே மிகுதியாகப் பயின்றிருப்

பினும் முப்பது இடங்களில் கருவிளங்காய், கூவிளங்காய், தேமாங்காய், புளிமாங்காய் ஆகிய வாய்பாடுகளுக்குரிய வெண்பாவுரிச்சீர்களும் விரவியுள.

வந்தவாரம்

அரங்கேற்று காதையில் 'வந்தவாரம் வழிமயங்கிய பின்றை' (153) எனவரும் அடி, பல்வேறு பதிப்புக் களிலும் பலவகை உருவமைப்புடன் விளங்குன்றது'. 'வந்த-வாரம் வழி-மயங்கிய-பின்றை[24] எனவும், வந்த-வாரம்-வழிமயங்கிய-பின்றை[25] எனவும் வந்தவா-ரம்வழி மயங்கிய-பின்றை[26] எனவும் இவ்வடி பல்வகைப் பிரிப்பு நிலையுடையதாய்ப் பதிப்புக்களில் விளங்குகின்றது.

வந்த-வாரம்வழி-மயங்கிய-பின்றை என்ற பிரிப்பினல் இரண்டாம் சீருக்கும் மூன்ரும் சீருக்கும் இடையே ஒன்றிய வஞ்சித்தளை பிறக்கும். சிறப்பில் சீரும் தளையும் பயின்றதாக இப்பிரிப்பு அமைந்துள்ளது. வந்த-வாரம்-வழிமயங்கிய-பின்றை என்ற பிரிப்பில் வழி மயங்கிய என்றசீர் சிறப்பில் சீராகிய நிரைநடுவாகிய வஞ்சியுரிச் சீராக அமைகின்றது. சிறப்பில் தளையும் சீரும் பயின்றன வாக அமையும் இப்பிரிப்புக்களைவிட, வந்தவா-ரம்வழி-மய்ங்கிய-பின்றை எனவரும் பிரிப்பு நிலையில் சொற் பிரிப்பிருப்பினும் ஓசையினிமையும் சந்தவழகும் முன் பின்னடிகளோடு ஒத்த ஓசையியையபும் அமைந்து விளங்கு கின்றன. நேர்நிரை-நேர்நிரை-நிரைநிரை-நேர்நேர்-என இத்தொடர் அலகு பெற்றும் வெண்டளை ஆசிரியத்தளை பெற்றும் உள்ளது. வந்த-வாரம்-வழிமயங்-கிய பின்றை; எனப்பிரிப்பினும் பொருந்துவதே.

நூற்று எழுபத்தைந்து நாற்சீர் அளவடிகளாலாய இப்பகுதி, ஆசிரியப்பாவுக்குரிய சீர்களும் தளைகளும்

24. டாக்டர் உ. வே. சா, டாக்டர் ரா. க. ச. பதிப்புக்கள்
25. டாக்டர் வ. சுப. மா - பதிப்பு
26. கழகப் பதிப்பு - நாட்டார், பொ, வே, சா. உரைப் பதிப்புக்கள்

பெற்று நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்புவகைக்கு உரியதாய் விளங்குகின்றது.

4. அந்திமாலைச் சிறப்புச்செய் காதை (நிலைமண்டில ஆசிரியப்பா)

நான்காவதாகிய அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் மாலைவருகை, திங்கள் விளக்கம், மாதவி மகிழ்ச்சி, கண்ணகி தனித்துயர், காமன் நகராட்சி முதலிய பொருண்மைகள் அமைந்துள. இப்பகுதி நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்பு வகையில் அமைந்துள்ளது. அனைத்துப் பதிப்பாசிரியர்களும் உரையாசிரியர்களும் இதனை உறுதி செய்வர்.

அடியார்க்குநல்லார்

அடியார்க்குநல்லார், 'இதுமுதல் நடு இறுதி அளவடியான் முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா' என இப்பாவகையைச் சுட்டுவர். முதலும் நடுவும் இறுதியும் கூறவே எஞ்சிய பகுதிகளும் அதனுள் அடங்கும். எனவே எல்லா அடியும் அளவடியால் முடிந்துள்ளன எனச் சுட்டுவதே அடியார்க்குநல்லார் கருத்தாம்.

நிலவுப் பயன்

நிலவுப் பயன் — கொள்ளும் — நெடுநிலா — முற்றத்து (31) எனவரும் பிரிப்பமைப்பில் முதலிரு சீர்களுக்கிடையே ஒன்றுத வஞ்சித்தளை பிறக்கக் காணலாம். ஆசிரியத்துள் இடையே வஞ்சிச் சீர்கள் வருதலுண்டு.[27] எனினும்

அந்துகின் மேகலை அசைந்தன வருந்த
நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியும் காதலற் களித்தாங்கு[28]

---

27. நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து (நெடுநல். 95)
28. சிலம்பு. அந்தி. அடி. 30-32

என முன்னும் பின்னுமுள்ள அடிகளின் ஓசைக்கு ஏற்பப் பிரித்துக் கொள்வது சிறப்பாகும்.

இம்முறையில், எண்பத்து நான்கடியாலாய இக்காதை தன்றளையும் பிற தளையும் பயின்று வந்த நிலைமண்டில ஆசிரியப் பாவாக விளங்குகின்றது.

5. இந்திரவிழவூரெடுத்த காதை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

இந்திரவிழவூரெடுத்த காதையில் கதிரவன் தோற்றம், மருவூர்ப்பாக்க வீதிகளின் வண்ணனை, பட்டினப்பாக்க வீதிகளின் வண்ணனை, நாளங்காடிப் பூத இயல்பு, கரிகாலன் வெற்றி, ஐவகை மன்றங்கள், இந்திரவிழா நிகழ்ச்சிகள், கண்ணகி மாதவி நிலைகள் ஆகிய பொருண்மைகள் விளக்கப்பட்டுள. அடியார்க்குநல்லார் 'இஃது எல்லாவடியும் அளவடியாய் வந்து முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா' என்று இப்பகுதியின் பாவகையைக் குறிப்பிடுவர். பிற உரையாளியரும் பதிப்பாளியரும் அவரையே வழிமொழிப.

இருநூற்று நாற்பதடிகளாலாய இப்பகுதி ஆசிரியச் சீர்களையும் பிற சீர்களையும் பெற்று வந்த நிலைமண்டில ஆசிரியப் பாவகையாக அமைந்துள்ளது.

6. கடலாடு காதை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

புகார் நகர மக்கள் இந்திரவிழாவையொட்டிக் கடலாட்டு நிகழ்த்தச் செல்லும் செய்தியும், மக்கள் மனம் மகிழ மாதவி பதினோராடல்களை நிகழ்த்திய செய்தியும், மாதவியின் கோலம், கோவலன் ஊடல் ஆகியனவும் கடற்கரைக் காட்சிகளும் விளக்கப்படும் பகுதியே கடலாடு காதையாகும்.

இதன் பாவகையை 'இது நிலைமண்டில ஆசிரியப்பா' என மொழிகுவர் அடியார்க்குநல்லார். பிறரும் இதனை உறுதி செய்வர்.

நூற்று எழுபத்து நான்கடிகளாலாய இப்பகுதியும் நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் பாவகையாக விளங்குகின்றது.

7. கானல்வரி
(இசைப்பாக்களும் நாடகக்கூறுகளும்)

சிலப்பதிகாரத்தில் ஏழாவது பிரிவாக விளங்குவது கானல்வரி. காப்பியத்தின் திருப்புமுனைகளில் இக்கானல் வரிப் பகுதியும் ஒன்றும். கோவலன், வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்து விடுதலறியா விருப்பினனாக மாதவியுடன் வாழ்ந்த பின்னர், அவளைவிட்டும் நீங்கி மீண்டும் கண்ணகியுடன் கூடுதற்குக் கால்கோள் அமைந்த இடம் இதுவே. கோவலன் கானல்வரிப் பாடல்களைப் பாடுவது, அதைக் கேட்ட மாதவி இவன் தன்னிலை மயங்கினனெனக் கலவியால் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ் வாங்கித் தானுமோர் குறிப்பினளாய்க் கானல்வரிப் பாடல்களைப் பாடுவது, கோவலன் மாதவியைத் தவறுகப் புரிந்து கொண்டு 'மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள்' என ஏசிப் பிரிவது ஆகிய கதைப் பொருண்மைகள் இப்பகுதியுள் அமைந்து, இப்பகுதியை இக்காப்பியத்தின் திருப்புமுனைக் களமாக்குகின்றன.

யாப்புவகை

கானல்வரி என்னும் இப்பகுதி பலவகை இசைப்பாடல்களின் கலவையாக விளங்குகின்றது. அரும்பதவுரைகாரர் இவ்விசைப்பாடல்கள் மக்களைச் சுட்டி வந்தனவென்பார்.[29] கானல்வரியுள் அமைந்த பாவகைகள் சிலவற்றுக்கு அவர்

29. 'இனி மக்களைச் சுட்டிய வரிப்பாட்டு வருமாறு-'திங்கண்மாலை ....காவேரி' என்பது போல வருவது - சிலப். கானல். (2) அரும்பத. குறிப்பு

குறிப்பு வரைந்துள்ளாரேயன்றி பாக்கள் முழுமைக்கும் யாப்பியல் குறிப்பு வரையவில்லை. எனினும், இறுதிப் பகுதியில் 'தீத்துழைஇ வந்தவிச் செல்லன் மருண்மாலை' எனத் தொடங்கும் பகுதிக்குக் குறிப்புரை எழுதுங்கால் 'இது கொச்சகம். முகநிலை முரிகளாற் பயந்த வேறுபடு பொருண்மையெல்லாம் தன்னகத்தடக்கி ஒருநெறிப்படுத் தலாற் கொச்சகமெனப்படும். அது வெள்ளையானும் அகவ லானும் முடியும்' எனக் குறிப்பிட்டுள்ளார்[30]. இக் குறிப்பால் கானல்வரியின் இறுதிப்பகுதி ஒருவகைக் கொச்சகக் கலிப்பாவாக, சுரிதகம் என்னும் உறுப்பைக் கொண்டு முடிந்தது என்பது அவர்கருத்தாதல் அறியலாம்.

உரையாசிரியர் நாட்டார் 'இதில் ஆற்றுவரி முதலிய பலவகைப்பாடல்கள் இருப்பினும் யாவும் கானலிடத் தனவாகலின் கானல் வரி எனப்பட்டன' என இக் காதையின் பெயரமைப்'புக்குக் காரணமும், 'இதிலுள்ளன இசைத்தமிழ்ப் பாட்டுகளும் கட்டுரைகளும் ஆம், என இசைத்தமிழ் நாடகத்தமிழ் உறுப்புக்கள் இப்பகுதியில் நிறைந்துள்ளதையும் சுட்டுவர்.

உரையாசிரியர் பொ. வே. சோமசுந்தரனார் 'கோவலன் பாடிய திங்கள் மாலை வெண்குடையான் என்பது தொடங்கி, தீத்துழைஇ என்னும் மாதவி பாடிய இப்பாட்டீறாக அனைத்தும் முகநிலைவரி, முரிவரி முதலிய பல்வேறு உறுப்புக்களையுடைய கொச்சகக் கலி என்னும் இசைத்தமிழால் இயன்ற கானல்வரிப் பாடலாகும்: கொச்சகக்கலி வெண்பாவானுதல் ஆசிரியத்தானுதல் முடிதல் வேண்டும் என்பது விதி, ஆதலின் இக்கோவலன் தொடங்கிய கானல்வரியை மாதவி ஈண்டுக் கடவுள் வாழ்த்தோடு முடித்தனள். இனி, கட்டுரை இடையிட்டு வந்த பாட்டுடைக் செய்யுளாகிய இக்கொச்சகத்தை

30. சிலப் கானல் - (51) - அரும். குறிப்பு

அடிகளார் இயற்றமிழின் பாற்படுத்து ஆசிரியத்தான் முடிப்பர்' எனக்கூறி, இசைத்தமிழ்க் கூறுகளும் நாடகத் தமிழ்க் கூறுகளும் விரவியதாய்க் கொச்சகக் கலி என்னும் இயற்றமிழ்ப் பாவகையில் அமைந்ததாய் இப்பகுதி விளங்குவதைக் குறிப்பிடுவர்.

டாக்டர் வ. சுப. மாணிக்கனார் இப்பகுதியைக் கொச்சகக் கலி என்ற பொதுப் பெயரால் சுட்டுவர். டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் 'கானல்வரி முழுவதையும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என ஒன்றாகவே கொள்ளலாம்' என்றும்[31] இருவராய்ப் பாடுவது உறழ்கலியானாலும் இங்கே வெளிப்படையான கூற்றும் மாற்றமுமாக அமையவில்லை ஆதலின் இக்கானல் வரி முழுதும், முடிவில் மயங்கிசைக் கொச்சகக் கலிப் பாவாகவே கொள்ளுதல் வேண்டும், அல்லது வேட்டுவ வரியை அடியார்க்கு நல்லார் கொள்ளுதல் போல் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவாகக் கொள்ளுதல் வேண்டும் என்றும்[32] குறிப்பிட்டுள்ளார்.

கானல்வரி முழுவதையும் ஒரேவகைப் பாவகையாகப் கொள்வது ஏற்புடையதாகாது என்பதையும் நாடகத் தமிழ்க் கூறுகளாய கட்டுரைகளை இடையிடையே பெற்று, வெவ்வேறுவகை இயற்றமிழ்ப் பாக்களால் அமைந்த தனித்தனி இசைத்தமிழ்ப் பாக்களாகக் கொள்வதே ஏற்புடையதும் சிறப்புடையதுமாம் என்பதையும் பின்னே விரிவாகக் கூறுவாம்.

நாடகக்கூறு

கானல்வரியுள், 'சித்திரப் படத்துட்புக்கு.... வாசித்தல் தொடங்குமன்' என்றும், 'கானல்வரிப் பாடல் கேட்ட....

31. கானல்வரி - டாக்டர் தெ. பொ. மீ பக். 104
32. கானல்வரி - டாக்டர் தெ. பொ. மீ, பக். 303

பாடத் தொடங்குமன்' என்றும், 'ஆங்ஙனம் பாடிய.... பெயர்த்தாள்' என்றும், 'கானல்வரி யான் பாட.... மாதவி தன் மனைபுக்காள்' என்றும் நான்கிடங்களில் 'கட்டுரை' என்னும் புதிய பகுதி இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரைகள் நூற் கட்டுரை, காண்டக் கட்டுரை போல உரைநடைப் பகுதிகளாய், நாடகத் தமிழின் உறுப்புக்களாய் அமைந்து விளங்குவன. முன்னும் பின்னுமுள்ள இசைப்பாடல் களின் இடையே கதை நிகழ்ச்சியைத் தொடர்புபடுத்து வனவாக இத்தகைய நாடகத் தமிழ்க் கூறுகளாய கட்டுரைப் பகுதிகள் இடம் பெற்றுள்ளன. பிற்கால இலக்கிய வகையான நொண்டி நாடகத்துள் முன்னும் பின்னுமுள்ள பகுதிகளின் இயைபு நோக்கி கட்டுரைத் தன்மை பெற்ற உரைநடைப் பகுதிகள் இடையிடையே இடம் பெற்றிருக்கும் அமைப்பு நிலையும் இங்கு ஒப்பநோக் கத்தகும். ஆசிரியன் கூற்றுக இடம் பெற்ற இவ்வுரை நடைப் பகுதிகள் சந்தவினிமை அமையப் பெற்ற செய்யுள் போலவே அமைந்துள. எதுகை மோனை முதலாய தொடைச் சிறப்புக்களும் இப்பகுதிகளில் மிளிரக் காணலாம். கிடக்கை முறையான் இக்கட்டுரைப் பகுதிகள் ஆங்காங்கு விளக்கப்படும்.

இசைப் பாடல்கள்

கானல்வரியுள் கோவலன், மாதவி ஆகியோர் கூற்றுக வரும் வரிப்பாடல்கள் அனைத்தும் இசைப்பாடல்களேயாம். இதனை இளங்கோவடிகளும் கானல்வரியில் ஆங்காங்கே சுட்டியுள்ளார். கோவலன் கையில் யாழ் ஏந்தி, யாழிசை பொருந்த வரிப்பாடல்களைப் பாடினன் என்பதை 'மாதவி தன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்' என்றும் 'கானல் வரிப் பாடல் கேட்ட மானெடுங்கன் மாதவியும்' என்றும், 'கானல்வரி யான் பாட' என்றும் வரும் குறிப்புக்களால் அறியலாம். மாதவியும் இங்ஙனமே யாழிசையோடு தன் குரலிசை பொருந்தப் பாடினள் என்பதைக் 'கலத்தொடு

புணர்ந்தமைந்த கண்டத்தால் பாடத் தொடங்குமன்' என்றும், 'மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினுள்' என்றும் வரும் குறிப்புக்களால் அறியலாம். கானல்வரிப் பகுதியுள் அமைந்தவை இசைப்பாடல்களாக அமைந் துள்ளன என்பதை இக்குறிப்புக்களே விளக்குகின்றன. கோவலன், மாதவி ஆகியோர் இசைப்பாடல்களையே யாழிசையோடு பொருந்தப் பாடினர் என்பதற்கு அரும்பத வுரைகாரர் குறிப்புக்களும்[33] சான்ருக உள. மேலும் கோவலன் பாடிய ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில்வரி, கானல்வரி, நிலைவரி, முரிவரி, திணை நிலைவரி ஆகியனவும் மாதவி பாடிய ஆற்றுவரி, சார்த்துவரி, திணை நிலைவரி, மயங்குதிணை நிலைவரி, சாயல்வரி, முகமில்வரி ஆகியனவும் வரி என்னும் பெயரமைப்பைப் பெற்று விளங்குகின்றன. எனவே இவை இயற்றமிழ் வடிவில் இருப்பினும் இசைத் தமிழ்ப் பாடல்களாகத் திகழ்வதை அறியலாம்.

இசைப்பாக்களின் யாப்பு வடிவங்கள்

இசைப் பாடல்கள் அனைத்தும் இயற்றமிழ் வடிவு உடையவை. ஒரே பொருள் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய மூவகைத் தமிழிலும் வருங்கால் அவ்வத் தமிழுக்கேற்ப வடிவம் மாறுபட்டு வரும். சான்ருக, தேவபாணி என்பது இயற்றமிழ்ப் பாவகையில் கொச்சக வொருபோகு யாப்பில் பாடப் பெறும். இசைத்தமிழாய் வருங்கால் முதநிலை கொச்சகம் முரி முதலாய வரிப் பாடல்

33. அ) இவற்றுள் 'திங்கள்மாலை' முதலாயின மூன்றும் முகமுடைவரி. இவை கண்டன கூறிற்ருக யாழிலிட்ட பாட்டு - சிலப். கானல் (4)- அரும். விளக்கம்

ஆ) கோவலன் வாசித்த உருக்கள் கனவில் தலைமகன் கூற்ருதலால்.... வேறு குறிப்புடையான்போல இவனுக்குத் தோன்ற தானும் கானல் வரிப்பாணி பாடத் தொடங்கினளென்க - சிலப். கானல் (25) - விளக்கம்

இ) என்றிவள் பாடக்கேட்டுச் சொல்வான் : நான் கானல்வரி பாடத் தான் அப்படிப் பாடாதே என்னை யொழியப் பிறிதொரு பொருள் மேல் மனம் வைத்து, மாயஞ் செய்வாளாகலின், இப்படிப் பாடினு ளென்று - சிலப். கானல் (52) - அரும், விளக்கம்

களாகப் பாடப் பெறும். நாடகத் தமிழில் வருங்கால் பெருந்தேவபாணி, சிறுதேவபாணி என்னும் இருவகையாய் வெண்பாவால் பாடப்பெறும். இதனை அடியார்க்குநல்லார் உரைக் குறிப்பால் அறியலாம்[34]. எனவே இசைத்தமிழ்ப் பாடல்களாய வரிப்பாடல்கள் இயற்றமிழில் பாவினங்களாய பண்ணத்திகளாக யாப்பு வடிவம் பெற்று அமைந்துள்ளன. இவ்வமைப்பு நிலையின் அடிப்படையில், இசைத் தமிழ்ப் பாடல்களின் யாப்பு வடிவங்கள் இப்பகுதிக்கண் ஆயப்பட்டுள்ளன.

தொடக்கக் கட்டுரை

இசை நாடகத் தமிழ்க் கூறுகளின் யாப்பியல் நிலைகளை இனி விரிவாகச் சுட்டுவல். சித்திரப் படத்துட் புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து (1) எனத் தொடங்கும் அடிமுதல், மாதவி தன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன் (20) என முடியும் அடியீறாக, கானல்வரிப் பகுதியின் தொடக்கத்திலமைந்த கட்டுரை. இப்பகுதி எவ்வகை யாப்பையும் தழுவாது, சந்தவினிமை பெற அமைந்த உரைநடைப் பகுதியாகும்.

இக்கட்டுரையில் 'தொடங்குமன்' என இறுதிப்பகுதி அமைந்துள்ளதும் இது உரைநடைப் பகுதி என்பதை விளக்குகின்றது. பிற கட்டுரைப் பகுதிகளும் இத்தகைய முடிபு நிலைகளையே பெற்று விளங்குகின்றன.

பாணி யாது

இக்கட்டுரைப்பகுதியில் 'ஏவலன்பின் பாணியாதென' எனவரும் தொடரை அரும்பதவுரைகாரர் 'ஏவலன் பின் பாணியாதென' எனப் பிரித்துப் பொருள் கூறுவர். உரையாசிரியர் பொ. வே. சோ. இத்தொடரை 'ஏவல் அன்பின் பணியாது' எனப் பிரித்து 'யான் செய்யக் கடவ பணி யாதோ' எனப் பொருள் விளக்கமும் செய்வர்.

---

34. சிலம்பு. கடலாடு. அடி. 35 - அடி. நல். உரை விளக்கம்

எட்டுவகையி னிசைக்கரணத்துப்
பட்டவகைதன் செவியினோர்த்து
ஏவலன்பின் பாணியாதெனக்
கோவன்கை யாழ்நீட்ட அவனும்

எனவரும் பகுதியிலமைந்த 'ஏவலன்பின் பாணியாதென' என்ற தொடரில் உரையாசியர் பொ. வே. சோ. கூறும் பிரிப்பு நிலை இளங்கோவின் கருத்துக்கும் கதையோட்டத் திற்கும் முரணியது. 'ஏவலன்பின் பாணியாதென வென்றது-இப்பொழுது இதனை வாசியென்று விதிக் கின்றேனல்லேன்; வாசிக்கும் தாளமியாதென்று யான் அறியலுறுகின்றனெனன்பாள்போலக் கொடுத்தாளென்க; ஏவலன்-தன்மையொருமை' என இப்பகுதிக்கு அரும்பத வுரைகாரர் தந்துள்ள விளக்கத்தில் பாணி-தாளம் என்ற பொருளோடு கதையோட்டத்திற்குப் பொருந்த விளக்கப் பட்டுள்ளது. 'ஏவலன்பின் பாணியாதென' என்பதும் இத்தொடருக்குரிய பிறிதொரு பாடவேறுபாடு என்பதை டாக்டர் உ. வே. சா. குறிப்பால் அறியலாம். இவற்றுள் 'ஏவலன்பின் பாணியாது' என அரும்பதவுரைகாரர் கொண்ட பாடமே கதையோட்டத்திற்கு ஏற்ற சிறப் புடையதாம்.

ஆற்றுவரி

திங்கள்மாலை....மன்னுமாலை....உழவரோதை.... எனத் தொடங்கும் மூன்று பாடல்களும் காவிரியை வாழ்த்தி வரும் பொருண்மை மீது மூன்றடுக்கி வந்த இசைப் பாடல்கள். கோவலன் பாடுவதாயமைந்த இவ்விசைப் பாடல்கள் அறுசீர் ஆசிரிய விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்குரியவை.

இப்பாடல்கள் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியவை என்பதற்கு,

'மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி',
'மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி'
'மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி'

என இப்பாடல்களின் இறுதியடிகளில் 'வாழி காவேரி' என ஒத்த இறுதித் தொடர் பயின்று வருவதே சான்ரும். இவை மூன்றும் அடிதோறும் அறுசீர் அமைந்த நான் கடிப் பாடலாய் உள. ஆசிரிய விருத்தம் அடிமறியாய் வந்தால் ஆசிரிய மண்டில விருத்தம் எனவும், அடி மறியாகாது வந்தால் ஆசிரிய நிலை விருத்தம் எனவும் கூறப்படும் என்பதை யாப்பருங்கல உரைவிளக்கத்தால் அறிகின்ருேம்[35]. அம்முறையில் இங்கமைந்த பாடல்கள் ஆசிரிய நிலை விருத்தம் என்னும் யாப்பமைப்பினவாய் உள்ளன.

ஆசிரியத்துறை என்னும் பாவினத்தில் இடையில் பயின்ற அடி இடை மடக்கி வரும் என்பர் யாப்பியலார். ஆசிரியத்துறையின் இடைமடக்கி வரும் இயல்பை, இளங் கோவடிகள் ஆசிரிய விருத்தத்தால் அமைந்த இசைப் பாடல்களுக்கும் உரியதாக்கிக் காட்டியுள்ளார். இடைமடக்கி வரும் தன்மை அசைமடக்கு, சீர்மடக்கு, அடிமடக்கு, என மூவகைப்படும் என்பதை,

இரண்டாம் அடியை இனிதின் மடக்கலும்
இரண்டாம் அடியின் இறுதிச்சீர் மடக்கலும்
இரண்டாம் அடியின் ஈற்றசை மடக்கலும்
இவ்வா றென்ப மடக்குதல் தானே[36]

எனவரும் பழைய நூற்பாவால் அறியலாம். ஆசிரிய விருத் தத்தில் அடிமடக்காகிய இடைமடக்கு நெறியை இளங் கோவடிகள் பின்பற்றியுள்ளார் என்பதை,

35. யாப். செய். நூ. 24 உரை விளக்கம்
36. யாப். செய். நூ. 23 - உரை மேற்கோள்

கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்

எனவும்,

கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்

எனவும்,

விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தவெல்லாம் வாய்காவா

எனவும் வரும் பகுதிகளால் அறியலாம். இத்தகைய இடைமடக்கு நெறியே பிற்காலத்தில் அந்தாதி என்னும் இலக்கிய வகைக்கு வித்தாயிற்று.

இப்பாக்களில் அமைந்த சீர்கள் மாச்சீர் மாச்சீர் காய்ச்சீர், மாச்சீர் மாச்சீர் காய்ச்சீர் என ஒழுங்குபட்ட சந்த இனிமையோடு விளங்குவததோடு அடிதோறும் வாய்பாடுகளும் மடக்கி வரும் சிறப்புடன் விளங்குகின்றன. ஆற்றுவரி என்ற பெயருக்கேற்ப ஆற்றில் சிற்றலையின் பின்னே பேரலை வருதல் போல, குறுகிய சீர்களுக்குப் பின்னே நெடிய சீர்கள் அழகுபெற அமைந்துள்ளன. டாக்டர் தெ. பொ. மீ, 'திங்கள் மாலை வெண்குடையான் எனவரும் ஆற்றுவரி மாச்சீர் மாச்சீர் காய்ச்சீர் என்ற முறையில் முச்சீர் இரட்டித்து வரும் அறுசீர் ஆசிரிய விருத்தம்போல் அமைந்துள்ளது' என இப்பகுதின் யாப்பு வகையைச் சுட்டுவர்.

இப்பாடல்களில், முதலிரு பாடல்களில் நேரொன்று சிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை

கலித்தளை ஆகியனவும், இம்முறையில் கோவலன் பாடியனவாய ஆற்றுவரி, என்னும் தலைப்பிலமைந்த இவ்விசைப் பாடல்கள் இடைமடக்கி ஆசிரிய நிலை விருத்தம் என்னும் இயற்றமிழ்ப் பாவகைக்கு உரியனவாக அமைந்துள்ளன. 'இவை மூன்றும் ஆற்றுவரி, வண்ணம் ஒழுகு வண்ணம்' என இவ்விசைப் பாடல்களுக்குரிய வண்ண அமைப்பையும் அரும்பதவுரைகாரர் சுட்டினர்.

சார்த்துவரி

சார்த்துவரி என்னும் தலைப்பில் 'கரிய மலர்'....காதலாகி....மோது முதுதிரையான்....' எனத்தொடங்கியமைந்த மூன்று பாடல்களும் கோவலன் பாடிய இசைப்பாக்கள். இவை புகார்ச் சிறப்புக் கூறுதல் என்னும் பொருள் மீது மூன்றடுக்கி வந்தவை. இவை ஒரு பொருண்மை பயின்ற இசைப் பாடல்களேயாம் என்பதற்குப் பாடல் தோறும் 'புகாரே எம்மூர்' எனவரும் ஒத்தத் தொடரமைப்பு சான்றாக உள்ளது.

சார்த்துவரியாவது பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும் சார்த்திப்பாடுவது. இச்சார்த்து வரி முகச் சார்த்து, முரிச் சார்த்து, கொச்சகச் சார்த்து என மூவகைப்படும். அவற்றுள் இங்குள்ள சார்த்துவரிப் பாடல்கள் முகச்சார்த்து என்னும் இசைப் பிரிவுக்குரியன. முகச்சார்த்து என்பதை விளக்கும் அரும்பதவுரைகாரர் 'மூன்றடி முதல் ஆறடி யீறாக வரும்; இடை நான்கடியானும் ஐந்தடியானும் வரும்' எனக் கூறுவர்[37].

திங்கள் மாலை வெண்குடையான் எனத் தொடங்கி வரும் ஆற்றுவரிப் பாடல்களைப் போலவே இச்சார்த்து வரிப்பாடல்களும் அறுசீர் ஆசிரிய நிலைவிருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்கு உரியன. அறுசீர் ஆசிரிய

37. சிலம்பு. கானல் (7) - அரும். உரை விளக்கம்

விருத்தம் என்பதற்கேற்ப, இப்பாடல்களின் இரண்டா மடிகள் பின்வரும் முறையில் அறுசீர் அடிகளாக அமைத்துக் கொள்ளுதற்கு உரியனவாம்.

'அரிய சூள்பொய்த்தா ரறனிலரென் றேழையம்
யாங்கறி கோமைய'
ஏதிலார் தாமாகி யாமிரப்ப நிற்பதை யாங்கறி கோமைய'
மாதர் வரிமணல்மேல் வண்ட லுழுத ழிப்ப மாழ்கியைய'

டாக்டர் தெ. பொ. மீ, 'கரியமலர்....' எனவரும் சார்த்துவரி, நான்குகாய், மா தேமா எனவரும் அறுசீர் ஆசிரியமாக அமைந்துள்ளது. நான்கு காய் என்று கூறுவதிலும், முதலில் வெண்டளை நான்கு வரும் என்று கூறுவது அதன் வரலாற்றினை நன்கு விளக்குவதாகும். காய்ச்சீர் வராதபோதுதான் 'கரிய' என்ற மாமுன் 'மலர் நெடுங்கண்' என்ற நிரை வந்து வெண்டளையாம்' என இப்பாடல்களின் யாப்பமைதியைச் சுட்டியுள்ளதும் அறியத்தக்கது[38].

ஆசிரிய நிலை விருத்தமாக அமைந்த இப்பாடல்களில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய வெண்டளைகளும் நேரொன்றாசிரியத்தளை, கலித்தளை ஆகியனவும் அமைந்துள்ளன. எனவே கோவலன் பாடியன வாக அமைந்துள்ள இச்சார்த்துவரிப் பாடல்களாய இசைப் பாடல்கள் அறுசீர் ஆசிரிய நிலை விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்கு உரியனவாய் ஒரு பொருள்மீது மூன்று அடுக்கி வந்துள்ளன.

முகமில்வரி

'துறைமேய் வலம்புரி' எனத் தொடங்கும் ஒரு பாடல் முகமில்வரி என்னும் தலைப்பில் அமைந்த இசைப்பாடல். இப்பாடல் இயற்றமிழ் நெறியில் ஆசிரியத்துறை என்னும் யாப்பு வகைக்குரியது.

---

38. கானல்வரி - தெ. பொ. மீ, பக். 176

ஆசிரியத்துறைப் பாடல் ஈற்றயலடி குறைந்து வரப் பெறும் என்னும் யாப்பியல் நெறிக்கேற்ப, ஈற்றயலடி இரு சீர் குறைந்து இங்கு வந்துள்ளது. யாப்பருங்கல விருத்தி உரைக் குறிப்பின்படி இடையில் ஓரடி குறைந்து வருவன ஆசிரிய நேர்த்துறை என்றும், இடையில் ஈரடி குறைந்து வருவன ஆசிரிய இணைக்குறட்டுறை என்றும் வழங்கப் படும்[39]. இம்முறையில் இடையில் ஓரடி குறைந்து வந்த இப்பாடல் ஆசிரிய நேர்த்துறை என்னும் யாப்பு வகைக் குரியது. இப்பாடலுள் பயின்ற அகப்பொருண்மையைக் 'குறியிடத்துச் சென்ற பாங்கன் தலைமகளது காதன் மிகுதி யைக் குறிப்பினால் அறிந்து கூறியது' என அரும்பதவுரை காரர் குறிப்பிடுவர்.

இப்பாடலுள் அமைந்த அடிகளில் முதலிரண்டு அடி களும் நான்காமடியும் அறுசீரடிகளாகவும், ஈற்றயலடி யாகிய மூன்றுமடி நாற்சீராகவும் உள்ளன. அறுசீரடி களில் முதன் மூன்றிடங்களில் வெண்டளை பயின்றுள்ளது. நான்காம் சீர்கள் காய்ச்சீர்களாகவுள. இறுதியிலுள்ள ஐந்து ஆறும் சீர்கள் மாவும் தேமாவுமாகவுள. இம்முறையில் ஈற்றயலடி குறைந்து நான்கடியாய் வந்த ஆசிரிய நேர்த் துறையாக இம்முகமில்வரி என்னும் தலைப்பில் அமைந்த இசைப்பாடல் விளங்குகின்றது.

கானல்வரி

கானல்வரி என்ற பகுதித் தலைப்பிற்கும், இங்கமைந்த கானல்வரி என்னும் வரிப்பாடல் தலைப்பிற்கும் வேறுபாடு உண்டு. கானல்வரி என்னும் பகுதித் தலைப்பிற்குக் கழிக்கானலிடத்து நிகழ்ந்த வரிப்பாடல்கள் என்பது பொருள். கானல்வரி என்னும் இவ்வரிப் பாடல் தலைப் பிற்குக் கழிக்கானல் பொருண்மை பற்றிய வரிப்பாடல் என்பது பொருள். எனவே கானல் என்னும் சொல்

39. யாப். செய். நூ. 23 - உரை விளக்கம்

முறையே இடத்தையும் பொருண்மையையும் ஈரிடத்தும் விளக்கி நின்றது. முகமில்வரியை அடுத்து, நிணங்கொள்... என்றும், வலை வாழ்நர்.... என்றும் தொடங்கும் இரு பாடல்கள் கானல்வரி என்னும் தலைப்பில் அமைந்துள்ளன. மணம்கமழ் பூங்கானல் என்றும், அலைநீர்த் தண்கானல் என்றும் இவ்விரு பாடல்களிலும் கானல் வண்ணனை இடம் பெற்றுள்ளது. 'அறியேன், அறிவேனேல் அடையேன் மன்னே' எனவரும் தொடர் இவ்விரு பாடல்களிலும் இறுதியில் ஒத்து அமைந்துள்ளமையால், இவை ஒரு பொருள் நுதலி வந்தவை என்பது பெறப்படும்.

மேலேயுள்ள முகமில்வரிப் பாடலில் 'பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது போர்க்குங் கானல்' எனக் கானல் வண்ணனை ஒத்திருப்பினும் பின்னுள்ள பாடல்களோடு இணைந்து ஒரு பொருள் நுதலி மூன்றடுக்கி வந்தனவாக இவை கொள்ளப்படவில்லை. முகமில்வரி, கானல்வரி என இவற்றின் தலைப்புக்கள் வேறுபடுவதோடு, இறுதி அடிகளும் வேறுபட்டுள்ளன. இக்காரணங்களால் இவை வேறு வேறு தலைப்பில் சுட்டப்பட்டிருப்பினும், இவை மூன்றையும் ஒரு பொருள் நுதலியனவாகக் கொள்வதே சிறப்புடையதாகும்.

கானல்வரி என்னும் தலைப்பில் அமைந்த இரு பாடல்களையும் முன்னுள்ள முகமில்வரி தலைப்பில்அமைந்த பாடலோடு சேர்த்து, மூன்றையும் ஒருபொருள்மீது அடுக்கி வந்தனவாகக் கருதப் பின்வரும் காரணங்களும் துணையாக உள்ளன. கானல்வரிப் பகுதியில் அமைந்த பாடல்கள் பெரும்பாலானவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கியன வாகவே உள்ளன; இரண்டாவதாக, கானல்வரி என்னும் தலைப்பில் அமைந்த பாடல்களில் கானல் வண்ணனை இடம் பெற்றிருப்பது போன்று, மேலேயுள்ள முகமில்வரிப் பாட லிலும் கானல் வண்ணனை இடம் பெற்றுள்ளது. மூன்றுவ

தாக, கானல்வரி தலைப்பில் அமைந்த இரு பாடல்களைப் போன்று,முன்னுள்ள முகமில்வரி தலைப்பில் அமைந்த பாடலும் ஆசிரிய நேர்த்துறை என்னும் யாப்பு வகையிலமைந்துள்ளது. இங்ஙனம், அமைப்பு நிலையாலும், நுவல்பொருளாலும் யாப்பு வகையாலும் ஒத்தமைந்துள்ள இப் பாடல்கள் மூன்றும் ஒருபொருள்மீது அடுக்கி வந்தனவாகக் கொள்ளப்படுவது சிறப்பு.

யாப்பு வகையில், முகமில்வரித் தலைப்பில் அமைந்த பாடலைப் போன்று ஆசிரிய நேர்த்துறையாக அமைந்த இப்பாடல்களில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத் தளை ஆகியன இடம் பெற்றுள்ளன. இரண்டு பாடல்களுள் முதற் பாடலில் மட்டும் ஈரிடங்களில் கலித்தளையும் அமைந்துள்ளது. இங்ஙனம் முதலிரு அடிகளும் நான்காமடியும் அறுசீர்களாகவும், மூன்றாம் அடி நாற்சீராகவும் அமைந்து ஆசிரிய நேர்த்துறை என்னும் யாப்பு வகைக் குரியனவாக இவ்விசைப் பாடல்கள் விளங்குகின்றன.

நிலைவரி

நிலைவரி என்னும் தலைப்பில், கயலெழுதி....என்றும் எறிவளைகள்.... என்றும், புலவுமீன்....என்றும் தொடங்கும் பாடல்கள் மூன்று அடுத்துள்ளன. நிலைவரியின் இலக்கணத்தை,

முகமும் முரியும் தன்னொடு முடியும்
நிலையை உடையது நிலையெனப் படுமே

எனவரும் நூற்பாவால்[40] அரும்பதவுரைகாரர் விளக்கியுள்ளார். அகப்பொருண்மை நிலையில் இவை மூன்று பாடல்களும் தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைமகன் கூறியனவாக அமைந்துள.

40. சிலம்பு. கானல், 13 - அரும். உரை மேற்கோள்

தலைவியின் நலம் பாராட்டல் என்னும் பொருண்மை மீது அடுக்கி வந்த இம்மூன்று பாடல்களிலும் இறுதியில் 'அதுவே' எனவரும் ஒரேசொல், இவை ஒரு பொருள் மீது அடுக்கி வந்தனவென்பதற்குச் சான்று தருகிறது. ஒவ்வொரு பாடலிலும் இரண்டாம் அடியின் இறுதிப் பகுதி, மூன்றும் அடியின் தொடக்கமாக அந்தாதித்து அமைந்துள்ள சிறப்பையும் இப்பாடல்கள் பெற்று விளங்கு கின்றன. இத்தகைய அந்தாதி அமைப்பு நிலையால் இப்பாடல்கள் இருவிகற்பப் பாக்களாக உள்ளன.

இயற்றமிழ் யாப்பு வகையில் இப்பாடல்கள் கலி வி[illegible]ம் என்னும் யாப்புவகைக்கு உரியவை. அடிமறியாய் வ[illegible]தைக் கலிமண்டில விருத்தம் என்றும், அடிமறியாய் அ[illegible]ு வருவதை கலிநிலை விருத்தம் என்றும் கூறப் ப[illegible] இதனை யாப்பருங்கல உரைக்குறிப்பால்[41] அறிய ல[illegible] இம்முறையில் நிலைவரி என்றும் தலைப்பில் அமைந்த இ[illegible]சைப்பாக்கள் கலிநிலை விருத்தம் என்னும் இயற் ற[illegible] யாப்புவகையினவாய் உள்ளன.

[illegible]ப்பாக்களுள் முதற்பாவில் நேரொன்றாசிரியத்தளையும் இ[illegible]டாம் பாவில் கலித்தளையும் ஒவ்வோரிடங்களில் ப[illegible]றுள. வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண் டளை[illegible]யும் மூன்று பாக்களிலுமுள. எனவே இவ்விசைப் பாக்கள் நாற்சீர் நாலடியாய் கலிநிலைத்துறை என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்குரியனவாயுள.

முரிவரி

பொழிறரு நறுமலரே....என்றும், திரைவிரி தருதுறையே.... என்றும், வளைவளர் தருதுறையே....என்றும் தொடங்கும் மூன்று இசைப்பாடல்கள் முரிவரி என்னும் தலைப்பில் அமைந்துள்ளன. முரிவரி என்பதை,

41. யாப். செய். நூ. 36 - உரை விளக்கம்

'எடுத்த வியலும் இசையும் தம்மில்
முரித்துப் பாடுவது முரியெனப் படுமே'

எனவரும் பழைய இசையிலக்கண நூற்பாவால்[42] அரும் பதவுரைகாரர் விளக்குவர்.

இவை ஒரு பொருள்மீது அடுக்கி வந்தன. 'எனையிடர் செய்தவையே' எனவரும் தொடர் பாடல் இறுதி தோறும் ஒத்தமைந்துள்ளது இதற்குச் சான்றும். இவை மூன்றும் பாங்கன் கேட்ப உற்றதுரைத்த தலைமகன் கூற்றாய் அகப் பொருண்மை பயின்றுள.

ஒரேவகை இயற்றமிழ்ப் பாவகையில் வேறு ... று சந்தஅமைப்பைப் பயன்படுத்தி வேறுபடுத்திக் காட ... து புலமைச் சிறப்பு. இளங்கோவடிகள் முன்னுள்ள ... லை வரித் தலைப்பில் அமைந்த கலிநிலை விருத்தப் ப ... ளி னின்றும், இம் முரிவரித் தலைப்பில் அமைந்த க ... லை விருத்தப்பாடல்களைச் சந்த அமைப்பால் வேறுப ... து கின்றார். பாடல்தோறும் ஒவ்வொரு அடியிலும், ... டாம் சீர் இறுதியிலும், நான்காம் சீர் இறுதியிலும் ... எண்ணேகாரத்தை அமைத்துள்ளமையால் பா... ன் ஓட்டத்தில் முடுகியல் அமைகின்றது.

பொழிதரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே எனையிடர் செய்தவையே[43]

எனவரும் பாடலில் அடிதோறும் இருசீர்களிலும் எண்ணேகார அமைப்பு இனிய சந்தக்குழிப்பை ஏற் படுத்துதலைக் காண இயலும்.

42. சிலம்பு. கானல், 14-16 - அரும். உரை மேற்கோள்
43. சிலம்பு. கானல் - 14

'கருவிளம் கருவிளங்காய் கருவிளம் கருவிளங்காய்' எனவரும் வாய்பட்டமைப்பு அடிதோறும் பயின்றுள்ளது. எனினும் முதற்பாடலில் மூன்றிடங்களில் கருவிளங்காய் என்பதற்குப் பதிலாக கூவிளங்காய் என்றும், ஏனைய இரு பாடல்களில் இறுதிச் சீர்களில் மட்டும் கருவிளங்காய் என்பதற்குப் பதில் கூவிளங்காய் என்றும் இடம் பெற்றுள்ளன. வாய்பாடு மாறினும் அனைத்தும் காய்ச்சீர் களாகவேயுள.

'முரிவரிப் பாடல்கள் தனதன தனதன என்ற சந்தக் குறிப்பு இரட்டித்துவரும் அடிகளைக் கொண்டவை. இங்கே அராகம் அல்லது உருட்டு வண்ணம் வரக் காண்கின்றோம். தனதனனு என்பதற்குப் பதிலாக தந்தனனு என்றும் வருவதும் உண்டு. மூடிவோ தையதனு என்றே நெகிழ்ந்து வருகிறது' என டாக்டர் தெ. பொ. மீ. இம்முரிவரிப் பாடல்களின் இசைக்குறிப்பை விளக்குவர்.

இயற்சீர் வெண்டளை, நிரையொன்றாசிரியத்தளை, கலித்தளை ஆகிய முத்தளைகள் மட்டுமே இப்பாடல்களில் பயின்றுள்ளன. இங்ஙனம் அடிதோறும் நாற்சீராகி, சந்தக் குழிப்போடு அமைந்த இவ்விசைப் பாடல்கள் இயற்றமிழ் யாப்பு வகையாகிய கலிநிலை விருத்தத்திற்கு உரியனவாக விளங்குகின்றன.

திணை நிலைவரி

திணை நிலைவரி என்னும் தலைப்பில் ஏழு இசைப் பாடல்கள் உள. இவற்றுள், முதல் மூன்றும் ஒரு கூறாகவும் அடுத்துள்ள மூன்றும் ஒரு கூறாகவும், இறுதிப் பாடல் தனிக் கூறாகவும் அமைந்தவை. எனினும் இவை ஏழும் ஒரு தலைப்புக்குரிய இசைப்பாடல்களே என்பதை 'இவை ஏழும் திணை நிலைவரி' என்னும் அரும்பதவுரைகாரர் குறிப்பால் அறியலாம்.

இவ்வேழு பாடல்களும் ஒரேவகைத் தலைப்புக்குரிய இசைப்பாடல்களாகவும், யாப்பு வகையால் கலிநிலை விருத்தம் என்னும் ஒரேவகை யாப்புக்கு உரியனவாகவும் இருப்பினும், நுவல் பொருளாலும், சந்த அமைப்பாலும் வேறுபட்டிருத்தலால் இவை மூவேறு கூறுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. முதல் மூன்று பாடல்கள் புணர்ச்சி நீட, இடந்தலைப்பாட்டில் புணர்தலுறுவான் தன் ஆற்ருமை கூறிய அகப்பொருள் துறைக்குரியனவாயும், அடுத்துள்ள மூன்று பாடல்கள் குறியிடத்துக் கண்ட பாங்கன் சொல்லிய அகப்பொருள் துறைக்குரியனவாயும் அல்லது புணர்ந்து நீங்குவான் விடுத்தலருமையால் ஆற்ருனுய்த் தன்னெஞ் சிற்குச் சொல்லிய அகப்பொருள் துறைக்குரியனவாயும் இறுதிப்பாடல் காமஞ்சாலா இளமையோள்வயின் ஏமஞ் சாலா இடும்பை எய்தியோன் சொல்லிய அகப்பொருள் துறைக்குரியதாயும் உள்ளன.

முதற்கூற்றுப் பாடல்கள்

திணைநிலைவரி என்னும் தலைப்பில் அமைந்த முதல் மூன்று பாடல்கள், தலைப்பிற்கேற்ப, நெய்தல் நிலத் தலைவி யொருத்தியின் இடைச் சிறப்பை விளக்குவன. இப் பொருள் குறித்தே இம்மூன்று இசைப்பாடல்களும் அடுக்கி வந்துள்ளன என்பதற்குச் சான்ருக, இறுதிதோறும் 'இடை யிழவல் கண்டாய்' 'நுசுப்பிழவல் கண்டாய்', 'மருங்கிழவல் கண்டாய்' எனவரும் கருத்தொத்த தொடர்கள் சான்று களாகவுள. இவை, சில ஏடுகளில் சாயல்வரி என்னும் பெயரால் குறிக்கப்பட்டுள்ளன என்பதை டாக்டர் உ. வே. சா. குறிப்பால் அறிகின்ருேம்.

இரண்டாம் கூற்றுப் பாடல்கள்

பவளவுலக்கை என்றும் புன்னை நீழல் என்றும், கள்வாய் நீலம் என்றும் தொடங்கும் மூன்று பாடல்கள் திணைநிலைவரியின் இரண்டாம் கூருய், நெய்தல் நிலத் தலைவியின் கண்ணைச் சிறப்பித்தல் என்னும் பொருள் குறித்து மூன்றடுக்கி வந்தனவாம்.

இப்பாடல்களில் இடைமடக்குச் சிறப்பும் அமைந்து உள்ளது. பாடல்தோறும் இரண்டாம் அடியே மூன்றும் அடியாகவும் மடக்கியுள்ளது.

தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண் எனவும்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண் எனவும்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண் எனவும்

இப்பாடல்கள் மடக்கி வந்துள்ளன. இவை, சில ஏடு களில் நிலைவரி என்றும் துள்ளல் வரி என்றும், துள்ள லோசை என்றும் குறிக்கப்பட்டுள்ளதாக டாக்டர் உ. வே. சா. குறிப்பால் அறிகின்கிறோம்.

மூன்றும் கூற்றுப்பாடல்

சேரல் மடவன்னஞ் சேர னடையொவ்வாய் எனத் தொடங்கும் பாடல் நெய்தல் நிலத் தலைவியின் நடைச் சிறப்பைப் புகழ்ந்துரைக்கும் பொருளமைதி கொண்டது. இரண்டாம் கூற்றுப் பாடல்களில் இடைமடக்கி இரண் டாமடி மூன்றுமடியாக வந்துள்ளது போன்று, இப் பாடலில் முதலடியே இரண்டாமடியாகவும், நான்காமடி யாகவும் முதல் மடக்கி வந்துள்ளது.

இடை, கண், நடை

இங்ஙனம் திணை நிலைவரி என்னும் தலைப்பில்அமைந்த இவ்வேழு பாடல்களாகிய மூன்று கூறுகளும், முறையே நெய்தல்நிலத் தலைவியின் இடைச் சிறப்பையும் கண் சிறப்பையும் நடைச்சிறப்பையும் கூறுவனவாயுள. நுவல் பொருள்களால் வேறுபட்டுள்ளது போன்று, இவை சந்த வமைப்பாலும் வேறுபட்டுள்ளன. ஏழு பாடல்களும் கலிநிலைவிருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக் குரியனவாயிருப்பினும்,

'தனன்ன தன தன்ன தானன்ன தன என்றும்
தனன தனன்ன தனு தன்ன என்றும்
தான தனதன்ன தான தனதன்ன என்றும்

மூவகைச் சந்த வேறுபாடுகள் உடையனவாயுள்ளன. முதற்கூறில்,

'புளிமா புளிமாங்காய் தேமாங்காய் தேமா என்றும்

இரண்டாம் கூறில்,

'புளிமா புளிமா தேமா தேமா என்றும்

மூன்றாம் கூறில்,

'தேமா புளிமாங்காய் தேமா புளிமாங்காய் என்றும்

வாய்ப்பாட்டமைப்பும் வேறுபட்டுள்ளது.

தளையமைப்பு

முதற்கூறாய் அமைந்த மூன்றுபாடல்கள் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகை வெண்டளைகளால் அமைந்துள்ளன. இரண்டாம் கூறாய மைந்த பாடல்கள் நேரொன்றாசிரியத் தளையாலும் இயற் சீர் வெண்டளையாலும் இயன்றுள்ளன. மூன்றாம் கூறாய மைந்த பாடலில் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண் டளை ஆகிய இருவகைத்தளைகளும் இடம் பெற்றுள்ளன. மூன்றாம் கூறாயமைந்த பாடல் தளையமைப்பில் முதற் கூறையும் மடக்கு நிலையில் இரண்டாம் கூறையும் ஒத்தமைந்துள்ளது.

தனிச்சொல்லும் கட்டுரையும்

கோவலன் பாடியனவாக மேலே அமைந்த இசைப் பாடல்களையும் அடுத்துவரும் நாடகத் தமிழுறுப்பாய கட்டுரைப் பகுதியையும் இணைக்கும் இணைப்பாக 'ஆங்கு' என்னும் தனிச்சொல் இரண்டுக்கும் இடையே இடம் பெற்றுள்ளது. இத்தகைய இணைப்புச் சொற்கள் பல வற்றை இடையில் பெற்றமையால் உரையிடையிட்ட

பாட்டுடைச் செய்யுள் என்னும் சிறப்புப் பெயருக்குச் சிலப்பதிகாரம் உரியதாகின்றது என்பது பின்னர் விளக்கப்படும்.

ஆங்கு என்னும் தனிச்சொல்லையடுத்து, 'கானல் வரிப்பாடல் கேட்ட மானெடுங்கண் மாதவியும்' எனத் தொடங்கும் பகுதி முதல், 'கண்டத்தால் பாடத்தொடங் குமன்' எனமுடியும் பகுதிவரை நாடகத்தமிழ் உறுப்பாய் அமைந்த கட்டுரை என்னும் பகுதியாகும். கோவலன் பாடத் தொடங்குமுன்னர் அமைந்த கட்டுரை 'மாதவி தன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்' என முடிந் துள்ளது போன்று, மாதவி பாடத் தொடங்குமுன்னர் அமைந்த கட்டுரைப் பகுதியும், 'கண்டத்தால் பாடத் தொடங்குமன்' என முடிந்துள்ளது ஒப்பு நோக்கத்தக்கது.

ஆற்றுவரி

மருங்குவண்டு, பூவர்சோலை, வாழியவன்றன் என்று தொடங்கும் மூன்று பாடல்கள் மாதவி பாடியனவாக வரும் ஆற்றுவரிப் பாடல்கள். இவை மூன்றும் ஒரு பொருள்மீது அடுக்கி வந்தன. பாடல் இறுதிதோறும் 'வாழிகாவேரி' எனவரும் ஒத்த தொடர் இதனை விளக்கும்.

கோவலன் பாடிய ஆற்றுவரிப் பாடல்களைப் போன்றே இவையும் இரண்டாம் அடி மூன்றுமடியாக அடுக்கி வரும் இடைமடக்கைப் பெற்றுள.

கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம்
நின்கணவன்

எனவும்,

காமர்மாலை யருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை யருகசைய நடந்த வெல்லா நின்கணவன்

எனவும்;

ஊழி யுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி
ஊழி யுய்க்கும் பேருதவி யொழியா தொழுக
லுயிரோம்பும்

எனவும் இடைமடக்கி வரும் அடிகளைக் காணலாம்.

இப்பாக்களின் சீர்களும் கோவலன் பாடிய பாடற் சீர்கள் போன்று 'மாச்சீர் மாச்சீர் காய்ச்சீர் மாச்சீர் மாச் சீர் காய்ச்சீர்' என்னும் அமைப்பினைப் பெற்று விளங்குவன. இயற்றமிழ் யாப்பு வகையாலும் இவை ஆசிரிய நிலை விருத்தமாகவே உள.

இறுதிப் பாடல் இரண்டிலும் முதற்பாடலில் இல்லாத வெண்சீர் வெண்டளை இடம் பெற்றுள்ளது. இயற்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை, கலித்தளை ஆகிய தளைகள் மூன்று பாடல்களிலும் இடம் பெற்றுள.

சார்த்துவரி

தீங்கதிர், மறையின் மணந்தாரை, உண்டாரை என்று தொடங்கும் மூன்று பாடல்கள் சார்த்துவரி என்னும் தலைப்பில் புகார்ச் சிறப்பை உணர்த்தி வருபவை. புகார்ச் சிறப்பு என்னும் ஒருபொருள்மீது மூன்றடுக்கி இப்பாடல்கள் வந்துள்ளன என்பதற்குப் பாடல்தோறும் இறுதியில் 'புகாரே யெம்மூர்' எனவரும் ஒத்தமைந்த தொடரே சான்றாகும்.

அகப்பொருண்மையில், முதற்பாடல் கையுறை மறுத்தல் என்னும் துறைக்கும், எஞ்சிய இரு பாடல்கள் தோழியிற் கூட்டம் கூடிப் பின்பு வாரா வரைவலென்றாற் குத் தோழி கூறியது என்னும் துறைக்கும் உரியன.

இப்பாடல்கள் மூன்றும் கோவலன் பாடிய சார்த்து வரிப் பாடல்களைப் போன்றே அறுசீர் ஆசிரிய நிலை விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்குரியவை. இப்பாடல்களின் இரண்டாம் அடிகளை,

'வாங்குநீர் முத்தென்று வைகலும் மால்மகன்
போல்வரு தீரைய'

'இறைவளைக ஏற்றுவதை யேழையம் எங்ஙனம்
யாங்கறி கோமைய

'தண்டாநோய் மாதர் தலைத்தருதி என்பதி
யாங்கறி கோமைய'

என அறுசீராகப் பிரித்தமைத்துக் கொள்ளல் வேண்டும். முதற்பாடலின் இரண்டாமடியில் 'மால்மகன் போல்வரு திரைய' என்றிருப்பதைவிட 'மால்மகன் போல்வரு தீரைய' என்றிருப்பது பின்னுள்ள பாடல்களின் இரண் டாமடியோடு ஒத்த ஓசையதாய் அமையும்.

மாதவி பாடிய சார்த்துவரி என்னும் தலைப்பிலமைந்த இவ்விசைப்பாடல்களில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை, கலித்தளை ஆகியவை இடம் பெற்றுள்ளன.

திணை நிலைவரிப் பாடல்கள்

கோவலன் பாடிய வரிப்பாடல்களில் இறுதியாக அமைந்தவை திணைநிலைவரிப் பாடல்கள். ஆனால் மாதவியின் பாடல்களில் சார்த்துவரி பாடல்களை அடுத்தே திணைநிலைவரிப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. கோவலன் பாடிய திணைநிலைவரிப் பாடல்களில் மூன்று கூறாய் ஏழுபாடல்கள் இடம் பெற்றிருந்தன. ஆனால் மாதவி பாடிய பாடல்களுள் இரண்டு கூறாய் ஆறு பாடல்களே இடம் பெற்றுள. இப்பாடல்களும் கலிநிலை விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்குரியனவே.

இவ்வாறு பாடல்களுள், முதற்பாடல் அறியேனென்று வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்த அகப்பொருள் துறைக்குரியதாகவும், எஞ்சிய ஐந்து பாடல்கள் காம மிக்க கழிபடர் கிளவித்துறைக்கு உரியனவாகவும் அமைந்துள.

அகப்பொருண்மையால் இவை ஒன்றும் ஐந்துமாகப பிரிந்துள்ளனவேயன்றி, யாப்புவகையால் கலிநிலைத்துறை என்னும் ஒரேவகையாகவே உள.

இவ்வாறனுள் இறுதியிலமைந்த புண்ணியன் மான்றேர், நேர்ந்த நங்காதலர், நேர்ந்த நங்காதலர் எனத் தொடங்கும் மூன்று பாடல்களும் கடலோதம் கண்டு இரங்கும் பொருண்மையுடன் இருத்தலால் இவை மூன்றும் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்தனவாகக் கொள்ளலாம்.

எஞ்சிய மூன்றனுள் முதற்பாடலை ஒரு கூருகவும் எஞ்சிய இருபாடல்களை ஒரு கூருகவும் கொள்ளுதற்கேற்ப அவற்றின் அமைப்பு நிலைகள் உள. எனவே மாதவி பாடிய திணைநிலைவரிப் பாடல்கள் ஒன்றும் இரண்டும் மூன்றுமாய் முக்கூறுகளாக அமைந்துள எனலாம். ஒரேவகை யாப்பாயினும், சந்தவேறுபாடின்மையால் இவையனைத்தும் திணைநிலைவரி என்ற ஒரே தலைப்புக்கு உரியனவாக அமைக்கப்பட்டுள்ளன போலும்!

நான்காம் பாடலிலும் ஆரும் பாடலிலும் மட்டும் இடைமடக்குச் சிறப்பைக் காண்கிறேம்.

தெள்ளுநீ ரோதம் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீ ரோதம் சிதைத்தாய்மற் றெம்மோடீங்கு

எனவும்,

ஊர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்வாழி கடலோதம்
ஊர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்மற் றெம்மோடு

எனவும் இப்பாடல்களில் இடைமடக்கு உள்ளது. ஆரும் பாடலில் அமைந்த இரண்டாமடி 'ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்வாழி கடலோதம்' என்று அமைந்துள்ளது. ஊர்ந்தாய்வாழி என்ற மூன்ரும் சீர் நாலசைச்சீராக உள்ளது. இதனுல் வாழி என்னும் சொல் இடம்பெரு

திருப்பின் சிறப்பாக இருக்கும். நான்காம் பாடலில் இரண்டாமடியின் இறுதியும் நான்காமடியின் இறுதியும் 'மற்றென் செய்கோ' என ஒத்து அமைந்துள்ளது போன்று இப்பாடலிலும் இரண்டாமடியில் இறுதியிலும் நான்காம் அடியில் இறுதியிலும் 'வாழி கடலோதம்' என ஒத்து அமைதல் வேண்டும் என்றெண்ணிய ஒப்புமை உணர்வால் இம்மிகைச் சொல் இடம் பெற்றிருக்கலாம்.

ஐந்தாம் பாடலும் ஆறும் பாடலும் 'நேர்ந்த நங் காதலர்' என்ற ஒரேவகை முதற்குறிப்பு உடையனவாய் உள்ளன. மேலும்,

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய............

என்று இரண்டாமடியின் இரண்டாம் சீர்வரை இரண்டு பாடலடிகளும் ஒத்து அமைந்துள்ளன. நேர்ந்த நங்காதலர் எனத் தொடங்கும் ஐந்தாம் ஆறும் பாடல்களின் பின்னர், புள்ளியல் மான்றேர் எனத் தொடங்கும் நான்காம் பாடல் சில ஏடுகளில் இடம் பெற்றுள்ளதாக டாக்டர் உ. வே. சா. குறிப்புரைப்பர்[44].

இப்பாடல்கள் ஆறனுள்ளும் வெண்சீர் வெண்டளை இயற்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகள் மட்டுமே சிறப்பாக இடம் பெற்றுள்ளன. எனவே திணைநிலைவரி என்னும் தலைப்பிலமைந்த இவ்விசைப் பாடல்கள் ஒன்றும் இரண்டும் மூன்றுமாய மூன்று கூறுகளாக, கலிநிலை விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்கு உரியனவாம்.

மயங்கு திணை நிலைவரி

'நன்னித்திலத்தின்' 'வாரித்தரளம்' 'புலவுற்றிரங்கியது' 'இளையிருள்' 'கதிரவன்' 'பறவை பாட்டு' என்று முதற் குறிப்புடைய பாடல்கள் ஆறும் மாதவி பாடிய

44. சிலம்பு, கானல், 34 - டாக்டர் உ, வே. சா. குறிப்பு

மயங்குதிணை நிலைவரிப் பாடல்கள் ஆகும். இவற்றுள் முதல் மூன்றுபாடல்கள் அலர் அறிவுறுத்தி வரைவுகடாவும் அகப் பொருண்மை உடையன என்றும், எஞ்சிய மூன்றும் பொழுது கண்டு ஆற்றளாகிய தலைமகள் தோழிக்கு உரைத்தல் என்னும் அகப்பொருண்மை உடையன என்றும் அரும் பதவுரைகாரர் குறிப்பர்.

முதல் மூன்று பாடல்களிலும் நான்காம் அடியின் இறுதிதோறும் 'என்செய்கோ' என்னும் ஒத்த தொடர் அமைந்துள்ளது. இப்பாடல்களில் இரண்டாம் அடிகளின் இறுதியிலும் 'திரையுலாவு கடற்சேர்ப்ப' என்னும் தொடர் ஒத்துள்ளது.

முதல் மூன்று பாடல்களும் டாக்டர் உ. வே. சா, பதிப்பில் நாற்சீர் நான்கடிகளாகப் பதிக்கப் பெற்றிருப் பினும் திங்கள் மாலை என்றும் மருங்குவண்டு என்றம் தொடங்கும் ஆற்றுவரிப் பாடல்களைப் போன்று, சந்தம் ஒத்துள்ளதால் இவையும் அறுசீர் ஆசிரிய நிலை விருத்தத்தால் அமைந்தனவே. டாக்டர் தெ. பொ. மீ. 'இவை ஆற்றுவரிபோல முதலில் மூன்று பாடல்களாகவே தொடங்குகின்றன. அறுசீராகக் கொள்ளாமல் நாற்சீராகவே கொண்டு முதற்சீரையும் மூன்றும் சீரையும் பொதுச்சீராக்கலாம். அறுசீராகப் பிரிக்கப்பட்டது பிற்காலத்தே எனவும் கருதலாம்' என்று சுட்டுவர்[45]. நாற்சீராகக் கொள்வதில் அடிதோறும் இருசீர்களை நாலசைப் பொதுச்சீராகக் கொள்ளவேண்டிய இடர்ப்பாட்டையும் அறுசீராகப் பிரித்துக் கூறும் மரபுண்டு என்பதையும் அறிய டாக்டர் தெ. பொ. மீ. யின் குறிப்பு துணை செய் கின்றது.

மயங்குதிணை நிலைவரியின் இரண்டாம் கூறுக அமைந்த மூன்று பாடல்களும் ஒரு பொருள்மேல் மூன்று

45. கானல்வரி - டாக்டர் தெ. பொ. மீ. - பக். 299

அடுக்கி வந்தவை. நான்காமடியின் இறுதிதோறும் 'வந்த விம்மருண்மாலை' என்னும் தொடர் ஒத்தமைத்துள்ளதும் இரண்டாமடியின் இறுதிதோறும் 'உகுத்தனவே' என்னும் சொல்லொத்து அமைந்திருப்பதும் இப்பாடல்கள் பொழுது கண்டிரங்கல் என்னும் பொருண்மை பயின்றனவே என்ற உண்மையை மொழிகின்றன. இவ்வரிப் பாடல்கள், இயற்றமிழ் யாப்பு வகையில் நாற்சீர் நான்கடியால் அமைந்த கலிநிலை விருத்தம் என்னும் பாவகைக்கு உரியன.

முதற்கூறு பாடல்களுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, நேரொன்றாசிரியத்தளை ஆகிய தளைகள் பயின்றுள்ளன. அவற்றுள் வாரித்தரளம் என்ற முதற்குறிப்புடைய இரண்டாம் பாடலில் மட்டும் ஓரிடத்தில் ஒன்றாத வஞ்சித் தளையும் அமைந்துள்ளது. இரண்டாம் கூறு பாடல்களுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, நிரையொன்றாசிரியத்தளை ஆகிய தளைகள் டயின்றுள்ளன. அவற்றுள் கதிரவன் என்னும் முதற்குறிப்புடைய இரண்டாம் பாடலில் மட்டும் இயற்சீர் வெண்டளை இடம் பெறவில்லை

இங்ஙனம் அறுசீர் ஆசிரிய நிலைவிருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகையாலும், கலிநிலை விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகையாலும் ஒருபொருள் நுதலியனவாய் மூன்றடுக்கிய இவ்விசைப் பாடல்கள் அமைந்துள்ளன.

சாயல்வரி

கைதைவேலி என்றும், கானல்வேலி என்றும், அன்னந் துணையோடு என்றும் முதற் குறிப்புடைய மூன்று பாடல்களும் சாயல்வரி என்னும் தலைப்புக்குரிய இசைப் பாடல்கள். இவை மூன்றும் மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல் என்னும் அகத்துறைக்கு உரியனவாகவோ,

ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி இயற்பழிக்கத் தலைமகள் இயற்பட மொழிந்த அகத்துறைக்கு உரியனவாகவோ கொள்ளுதற்குரியவை.

இப்பாடல்களில் இரண்டாம் அடியின் இறுதிதோறும் 'ஒருவர்' என்ற சொல்லும், மூன்றும் அடியின் இறுதி தோறும் 'அவர்தம்' என்ற சொல்லும், நான்காம் அடியின் இறுதிதோறும் 'அல்லர்' என்ற சொல்லும் ஒத்தமைந்துள்ள சிறப்பைக் காண்கின்றோம். பாடல்தோறும் இரண்டாம் அடியே மூன்றும் அடியாக இடைமடக்கி வரும் சிறப்பும் இப்பாடல்களில் உளது. சந்த அமைப்பில் இவ்விசைப் பாடல்கள், கோவலன் பாடிய திணைநிலைவரிப் பாடல் களின் இரண்டாம் பகுதியை ஒத்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்த லழித்துப் போனா ரொருவர்
பொய்த லழித்துப் போனா ரவர்தம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர்

என்னும் சாயல்வரிப் பாடல்

பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய

என்னும் திணைநிலைவரிப் பாடலைச் சந்த அமைப்பால் ஒத்திருத்தல் காணலாம்.

இப்பாடல்களில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகை வெண்டளைகள் மட்டுமே பயின்றுள. சாயல்வரி என்னும் தலைப்பில் அமைந்த இவ் விசைப் பாடல்கள் இயற்றமிழ் யாப்புவகையில் கலிநிலை விருத்தம் என்னும் வகைக்குரியன.

முகமில்வரி

மாதவி பாடிய வரிப்பாடல்களுள் முகமில்வரி என்னும் தலைப்பிலமைந்த பாடல்களே இறுதியில் அமைந்தவை. இத்தலைப்பில் இடம் பெற்ற ஐந்து பாடல்களுள் அடையல் குருகே எனத் தொடங்கும் பாடல் ஒரு கூறாகவும், நுளையர் விளரி என்றும், பிரிந்தார் என்றும் பையுண்ணேய் என்றும் தொடங்கும் பாடல்கள் ஒரு கூறாகவும் தீத் துழைஇ வந்த எனத் தொடங்கும் பாடல் ஒரு கூறாகவும் கூடுதல் மூன்று கூறுகளாக அமைந்துள.

முதற்கூறாய் அமைந்த தனிப்பாடல் காமமிக்க கழி படர் கிளவியாகவும், இரண்டாம் கூறாய் அமைந்த பாடல்கள் பொழுது கண்டு புலம்பும் பொருளமைதி உடையனவாயும், மூன்றாம் கூறாய் அமைந்த பாடல் தெய்வ வணக்கப் பாடலாயும் அமைந்துள்ளன.

முதற்கூறு

முதற்கூறாய் அமைந்த அடையல் குருகே எனத் தொடங்கும் பாடல் இதுவாகும்.

அடைல் குருகே அடையலெங் கானல்
அடையல் குருகே அடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே அடையலெங் கானல்

இப்பாடலின் அமைப்பு நிலை கோவலன் பாடிய திணை நிலைவரியில் மூன்றாம் கூறாயமைந்த

சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்
சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்
ஊர்திரைநீர் வேலி உழக்கித் திரிவாள்பின்
சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்

எனவரும் பாடலோடு அமைப்பாலும் சந்தத்தாலும் ஒத்துள்ளது குறிப்பிடத்தக்கது. முகமில் வரியின் முற்

கூறு பாடலாய அடையல் குருகே எனத் தொடங்கும் பாடலில் முதலடியே இரண்டாமடி, நான்காம் அடியாகவும் முதல் மடக்கி வந்துள்ளது. இப்பாடலில் ஓரிடத்தில் வெண்சீர் வெண்டளையும் எஞ்சிய இடங்களில் இயற்சீர் வெண்டளைகளும் அமைந்துள. இவ்விசைப் பாடல் இயற்றமிழ் யாப்பு வகையால் கலிநிலை விருத்தம் என்னும் யாப்பு வகைக்குரியது.

இரண்டாம் கூறு

இரண்டாம் கூருக அமைந்த முகமில் வரிப் பாடல் களும் இயற்றமிழ் யாப்பு வகையில் கலிநிலை விருத்த மாக அமைந்தனவே. இப்பாடல்கள் பொழுது கண்டு புலம்புதல் என்னும் பொருண்மைமீது அடுக்கி வந்தவை எனச் சுட்டப்பட்டன. மாதவி பாடிய மயங்குதிணை நிலவரியின் இரண்டாம் கூருய் அமைந்த பாடல்கள் மூன்றும் பொழுதுகண்டு புலம்புதல் என்றும் பொருண்மை அமைந்தனவே என்பதும் முன்னர்ச் சுட்டப்பட்டது. இங்ஙனம் மாதவி பாடியனவாக வரும் வரிப்பாடல்களில் பொழுது கண்டு புலம்பும் பொருண்மை பயின்றன இரு முறை வருதலையும், கோவலன் பாடிய வரிப்பாடல்களுள் இப்பொருண்மை பயின்ற பாடல்கள் இல்லாதிருத்தலையும் ஒருங்கு நோக்க இரங்கற் பொருண்மையாகிய உரிப் பொருள் ஆடவரை விட பெண்டிருக்கே சிறப்பாகப் போற்றப்பட்ட மரபு நிலையை அறியலாம்.

முகமில் வரிப் பாடலின் இரண்டாம் கூருய் அமைந்த இப்பாடல்களில் இரண்டாம் அடியின் இறுதிதோறும், நான்காமடியின் இறுதிதோறும் 'மாலை' என்னும் சொல் ஒத்தமைந்துள்ளது. இப்பாடல்களுள்ளும் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகளே இடம் பெற்றுள. எனவே முகமில் வரிப்

பாடலின் இரண்டாம் கூறாய இம்மூன்று இசைப் பாடல்களும் இயற்றமிழ் யாப்புவகையில் கலிநிலை விருத்தமாக அமைந்துள.

மூன்றாம்கூறு

முதற்கூற்றைப் போலவே, மூன்றாம் கூற்றாய் அமைந்த 'தீத்துழைஇ வந்த' எனத் தொடங்கும் பாடலும் தனித்து, அமைந்துள்ளது. வரிப்பாடலின் இறுதியில் தெய்வ வணக்கப் பாடல் அமைந்தது போலவும், மாதவி தான் தொடங்கிய பாடலைத் தெய்வ வணக்கப் பாடலுடன் முடித்தது போலவும் இவ்வமைப்பு சிறந்து விளங்குகின்றது. 'மாக்கடல் தெய்வம் நின் மலரடி வணங்குதும்' எனவரும் இப்பாடலின் இறுதியடி இதன் பொருண்மையை நன்கு விளக்கும். முந்திய கூறுகளைப் போலவே கலிநிலை விருத்தம் என்னும் யாப்பால் அமைந்த இவ்விசைப் பாடலில் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை, கலித்தளை, நிரையொன்றாசிரியத்தளை ஆகியன இடம் பெற்றுள.

கட்டுரை

மாதவி பாடிய முகமில்வரியின் முதற்கூற்றுக்கும் இரண்டாம் கூற்றுக்கும் இடையேயும், மூன்றாம் கூற்றுக்குப் பின்னேயும் இக்கட்டுரைப் பகுதிகள் இடம் பெற்றுள்ளன. இக்காதையில் முன்னர்ப் பயின்ற இரு கட்டுரைப் பகுதிகளைப் போன்று 'மன்' என்னும் ஈற்றசையால் இப் பகுதிகள் முற்றுப் பெற்றில. 'பாங்கினிற் பாடியோர் பண்ணுப் பெயர்த்தாள்' என்றும் 'காதலனுட னன்றியே மாதவிதன் மனைபுக்காள்' என்றும் இவ்விரு பகுதிகளும் முற்றுப் பெற்றுள.

முதலிலுள்ள கட்டுரையின் முன்னும் பின்னும் தனிச் சொற்களில. ஆனால் பின்னுள்ள கட்டுரைப் பகுதியின் முன்னும் பின்னும் முறையே 'எனக்கேட்டு' என்றும்

'ஆங்கு' என்றும் தனிச்சொற்கள் பயின்றுள. முதற் கட்டுரைப்பகுதி மாதவி தன் யாழிசையில் பண் மாற்றிப் பாடினுள் என்னும் பொருண்மையையும், இரண்டாம் கட்டுரைப்பகுதி மாதவியும் கோவலனும் ஒருவரை யொருவர் தவருகப் புரிந்து கொண்டு பிரிந்து செல்லும் பொருண்மையையும் புகல்வன. சந்தவினிமை அமையப் பெற்ற இவ்விரு கட்டுரைப் பகுதிகளும் முன்னும் பின்னுமுள்ளவற்றை இணைக்கவரும் கவிஞன் கூற்றுக் களாய் விளங்குபவை.

அரச வாழ்த்து

பொது மக்கள் கூடிச் செய்யும் சமுதாய நிகழ்ச்சி களின் இறுதியில் நாட்டுப் வாழ்த்தைப் போலவே அரச வாழ்த்து பாடப்பெறுவதும் மரபு என்பதை மங்கல வாழ்த்துப் பாடல் சுட்டியது போன்று இக்கானல் வரியும் கூறுகின்றது.

மங்கல வாழ்த்துப் பாடலில் வந்த அரச வாழ்த்துப் பகுதி ஒரு பாவின் உள்ளுறுப்பாக அமைந்தது. ஆனல் கானல் வரியுள் பயின்ற இவ்வரச வாழ்த்துப் பாடல் தனித்து வந்த இசைப்பாவாக விளங்குவது. நேரிசை ஆசிரியப்பா என்னும் பாவகையாக அமைந்த இவ்விசைப் பாடல் செம்பியன் சிறப்பைச் செப்புகின்றது. ஈற்றயலடியில் முச்சீரையும் இறுதியில் ஏகாரச் சிறப்பையும் இது பெற்று உள்ளது. இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை, நேரொன்ருசிரியத்தளை, நிரையொன்ருசிரி யத்தளை ஆகிய தளைகள் இப்பகுதியில் உள.

வரிப்பாடல் ஒற்றுமை-வேற்றுமை

கீழ்வரும் பட்டியல் கோவலன், மாதவி பாடிய வரிப்பாடல்களின் யாப்பு வகைகளையும், அமைப்பு வேறு பாடுகளையும் ஒருசேரச் சுட்டுகின்றது.

எண்	கோவலன் வரிப்பாடல்	யாப்பு வகை	எண்	மாதவி வரிப்பாடல்	யாப்பு வகை
1.	ஆற்றுவரி	அறுசீர் ஆசிரிய விருத்தம் - மூன்றடுக்கு	1.	ஆற்றுவரி	அறுசீர் ஆசிரிய விருத்தம்- மூன்றடுக்கு
2.	சார்த்துவரி	அறுசீர் ஆசிரிய விருத்தம் - மூன்றடுக்கு	2.	சார்த்துவரி	அறுசீர் ஆசிரிய விருத்தம்- மூன்றடுக்கு
3.	முகமில்வரி	ஆசிரியத்துறை- மூன்றடுக்கு	3.	திணை நிலை வரி	கலிவிருத்தம் - ஆறு பாடல்கள் 1—2—3
4.	கானல்வரி	ஆசிரியத்துறை- மூன்றடுக்கு	4.	மயங்குதிணை நிலைவரி	அறுசீர் ஆசிரிய விருத்தம்- கலிவிருத்தம்- ஆறு பாடல்கள் 3—3
5.	நிலைவரி	கலிவிருத்தம் - மூன்றடுக்கு	5.	சாயல்வரி	கலிவிருத்தம்- மூன்றடுக்கு
6.	முரிவரி	கலிவிருத்தம் - மூன்றடுக்கு	6.	முகமில்வரி	கலிவிருத்தம்- ஐந்துபாடல்கள் 1—3—1
7.	திணை நிலை வரி	கலிவிருத்தம் - ஏழு பாடல்கள் 3—3—1			

கோவலன் மாதவி இருவரும் பாடிய வரிப்பாடல்கள் ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில்வரி, திணை நிலைவரி ஆகிய நான்கே. இவற்றுள் ஆற்றுவரி, சார்த்துவரி ஆகியன இரண்டும் அறுசீர் ஆசிரிய விருத்தங்களாகவும் திணை நிலை வரி முகமில்வரி ஆகியன இரண்டும் கலிவிருத்தமாயும் உள. கோவலன் சிறப்பாகப் பாடியவை கானல்வரி, நிலைவரி, முரிவரி ஆகியன. மயங்குதிணை நிலைவரி, சாயல் வரி ஆகியன மாதவியால் சிறப்பாகப் பாடப் பெற்றவை.

இங்ஙனம், கானல்வரி என்னும் இப்பகுதி இசைத் தமிழ் நாடகத் தமிழ் உறுப்புக்களால் நிறைந்து விளங்கு கின்றது. இசைத்தமிழ் உறுப்பாய் வரும் இசைப்பாடல்கள் ஆசிரிய நிலைவிருத்தம், கலிநிலை விருத்தம், ஆசிரிய நேர்த் துறை, நேரிசையாசிரியப்பா முதலான இயற்றமிழ் யாப்பு வகையினவாய் விளங்குகின்றன.

8. வேனிற் காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

கானல்வரியை அடுத்து அமைந்த பகுதி வேனிற் காதை. இப்பகுதியில், கடற்கரைச் சோலையிடத்துக் காவலனும் கோவலனைப் பிரிந்த மாதவியின் தனித் துயர நிலை, அவள் விடுத்த தூதியாகிய வயந்தமாலையிடம் மாதவியை ஆடல் மகள் எனக் கோவலன் பழித்து உரைத்தல், தூதியுரைத்த செய்தியறிந்த மாதவி மாலை வாராராயினும் காலை காண்குவம் என எண்ணியவளாய்ப் பூமலர் அமளிமிசை பொருந்தாது வதிந்த துன்பநிலை ஆகிய கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள.

இப்பகுதி நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்பு வகையால் அமைந்தது. உரையாசிரியர்களும் பதிப்பாசிரி யர்களும் இதனைச் சுட்டியுள்ளனர். நிலைமண்டில ஆசிரியப் பாவின் இலக்கண அமைதிக்கு ஏற்ப இதனுள் அமைந்த அனைத்து அடிகளும் நாற்சீர் கொண்ட அளவடிகளாகவே உள.

நூற்றுப் பதினெட்டு அடிகளாலாய இப்பகுதி அளவடி களைப் பெற்று நிலைமண்டில ஆசிரியப் பாவாக அமைந்துள்ளது.

9. கனாத்திறமுரைத்த காதை
(கலிவெண்பா)

கண்ணகி, தன் பார்ப்பனத் தோழியாகிய தேவந்தி யோடு உரையாடும் வேளையில், கோவலன் வருதலும்,

கண்ணகி நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச் சிலம்புள கொண்ம் எனக் கூறுதலும், இச்சிலம்பையே முதலாகக் கொண்டு உலந்த பொருளனைத்தும் ஈட்டுவேன் என்ற உறுதியுடன் கனைசுடர் கால்சீயாமுன், கண்ணகியுடன் மாடமதுரைக்குக் கோவலன் புறப்படுதலும் ஆகிய கதை நிகழ்ச்சிகள் கனாத்திறமுரைத்த காதைப் பகுதியில் இடம் பெற்றுள.

இப்பகுதியின் யாப்பு அமைப்பைக் குறிப்பிடும் அடியார்க்குநல்லார் 'இது கனவென்னும் பொருளையே கருதாது, மாலதி கதையையும் தேவந்தி கதையையும் கலந்து கூறிற்றேனும், உறுப்பழிவு இன்றி நடந்ததேனும் முந்நான்கடியில் இறந்து வருதலால் நெடுவெண்பாட்டாகாது கலிவெண்பாட்டாதல் உணர்க'[46] என்று குறிப்பிட்டுள்ளார். பிறரும் இப்பாவகையையே குறிப்பிடுவர்.

இப்பகுதி கலிவெண்பா யாப்பில் எல்லா அடியும் அளவடியாய், ஈற்றடி முச்சீர் கொண்ட சிந்தடியாய், இறுதிச் சீர் 'முன்' என நாள்வாய்பாட்டு ஓரசைச் சீரால் முற்றுப் பெற்றுளது.

குறுவெண்பாக்கள்

வெண்பாவிற்கு உரிய வெண்டளைகளே பயின்றிருத்தலால், தனிப்பட்ட ஏதேனும் ஒரு கருத்தை உள்ளடக்கி நிற்கும் பகுதிகளைக் குறள் வெண்பாக்களாகவும், சிந்தியல் வெண்பாக்களாகவும் அளவியல் வெண்பாக்களாகவும் பிரித்துக் காண முடிகின்றது.

சான்றாக, கோவலன் கூற்றாக வரும்,

'சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத் தரும்

46. சிலம்பு. கனா. காதை 73-79 - அடி. நல். உரை விளக்கம்

எனவரும் பகுதி ஒரு விகற்பத்தால் வந்த சிந்தியல் வெண்பா அமைப்புடையது. காதையின் இறுதியில் கவிஞன் கூற்ருக வரும்

வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சியா முன்

எனவரும் பகுதி குறள் வெண்பா அமைப்புடையதாகும்.

இங்ஙனம், கலிவெண்பா யாப்பு அமைப்பினதாய் வெள்ளோசை தழுவியதாய், அமைந்த இப்பகுதி எழுபத் தொன்பது அடிகளாலாயது.

10. நாடுகாண் காதை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

வான்கண் விழியாத வைகறை யாமத்தில், புகார் நகரைவிட்டுக் கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லுதல், இடைவழியில் தவமுனிவர் கவுந்தியைச் சந்தித்து அவரை வழித் துணையாகப் பெற்றுப் பயணத்தைத் தொடர்தல் ஆகிய கதை நிகழ்ச்சிகள் நாடுகாண் காதையில் அமைந்துள. நாடுகாண் காதையின் யாப்பு அமைப்பைக் குறிப்பிடும் அடியார்க்குநல்லார் 'இஃது எல்லா அடியும் தம்முள் ஒத்து முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா' எனக் குறிப்பிடுவர். பிறரும் இவ்வாறே சுட்டிடுவர். இருநூற்று நாற்பத்தெட்டு அடிகளாலாயது இப்பகுதி.

11. காடுகாண் காதை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

மதுரைக் காண்டத்தின் தொடக்கக் காதையாக விளங்குவது காடுகாண் காதை. கவுந்தியடிகளின் வழித் துணையோடு மதுரை செல்லும் கோவலனும் கண்ணகியும் இடையில் மாங்காட்டு மறையோனைச் சந்தித்தல், வழிச் செல்வோரை மயக்கும் வனதெய்வம்

வயந்தமாலையின் உருவில் வந்து கோவலனை மயக்க முயன்று, பின்னர் அஞ்சியோடுதல் முதலிய கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்ற பகுதி இக் காடுகாண் காதை.

நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்பு வகையால் இப்பகுதி அமைந்துள்ளது. 'இஃது எல்லா அடியும் நேர் அடியாய் வருதலின் நிலைமண்டில ஆசிரியப்பா' என இப் பகுதியின் யாப்பமைதியை அடியார்க்குநல்லார் சுட்டியுள்ளார். பிறரும் இப்பாவகையாகவே குறிப்பிடுவர். இரு நூற்றுப் பதினாறு அடிகளாலாயது இப்பகுதி.

12. வேட்டுவ வரி

(நேரிசையாசிரியம், பஃறாழிசைக் கொச்சகம், இசைப்பாக்கள்)

நெய்தல் நில மக்களின் ஒழுகலாறுகளைக் கானல்வரி விளக்கியது போன்று பாலைநில மக்களின் வாழ்வியற் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் விளக்குவது வேட்டுவ வரியாகும். கானல்வரி என்னும் பெயரமைப்பைப் போலவே இப்பகுதியும் வேட்டுவவரி என்று முடிந்து இருத்தலால் இசைத் தமிழ்க் கூறுய வரிப்பாடல்கள் இதனுள் நிறைந்திருப்பது பெறப்படும்.

இப்பகுதியின் யாப்பு வகையை 'இது பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா' என அடியார்க்குநல்லார் சுட்டுவர். டாக்டர் வ. சுப. மாணிக்கனார் கொச்சகக் கலி எனப் பொதுவகையாகக் குறிப்பிடுவர். பிறரும் இப்பகுதியின் யாப்பு வகையைப் பஃறாழிசைக் கொச்சகம் என்றே கூறுப. தாழிசைகள் பலவும் ஒருபொருள் மேல் மூன்றடுக்கியன வாய் அமைந்துள்ளமை கண்டு, இப்பகுதி அனைத்தையும் ஒரேவகைப் பாவாகக் கொண்டு, அதனைப் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்ற பெயரால் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். வேட்டுவ வரிப் பகுதியைத் தனியொரு பா வகையாகக் கொள்வதிலும், கானல்வரி போன்று பல வகைப்பாக்களின் தொகுதியாகக் கொள்வதே

ஏற்புடைத்து. இயற்றமிழுக்குரிய பாவகைகளும், இசைத் தமிழுக்குரிய பாவகைகளும் கலந்து வரும் கலவையாக இக்காதை விளங்குகின்றது. நேரிசை ஆசிரியப்பா, பஃறொழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகிய இயற்றமிழ்ப் பாவகைகளும், ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், நேரிசையாசிரியம் ஆகிய இயற்றமிழ்ப் பாவகைகளால் அமைந்த இசைத் தமிழ்ப் பாவகைகளும் இப்பகுதியில் அமைந்துள என்பது இவண் விளக்கப்படும்.

உரைப்பாட்டுமடை

வேட்டுவ வரியில் 'கடுங்கதிர் திருகலின் நடுங்கஞர் எய்தி' என்ற தொடக்க அடி முதல் 'வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே' என்ற அடிவரை உள்ள எழுபத்து நான்கு அடிகளுள் ஈற்றயலடி தவிர எஞ்சியவை நாற்சீர் அளவடிகள். ஈற்றயலடி 'அமரிளங் குமரியு மருளினள்' என முச்சீர் கொண்ட சிந்தடி. நாற்பத்தாறும் அடிக்கும், நாற்பத்தேழாம் அடிக்கும் இடையே 'இவளோ' என்ற தனிச் சொல் ஒன்று அமைந்துள்ளது. இப்பகுதியின் தொடக்கத்திலும் இறுதியிலும் 'உரைப்பாட்டுமடை' என்னும் பெயர் இடம் பெற்றுள்ளது.

ஈற்றயலடி முச்சீராகவும் ஏனையடி நாற்சீராகவும் அமைந்துள்ளமையாலும், ஈற்றடி 'வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே' என ஏகாரத்தால் முடிந்துள்ளமையாலும் இப்பகுதி நேரிசையாசிரியப்பா என்னும் பாவகையாக விளங்குவது தெளிவு. கவிஞன் கூற்றாக, இசை தழுவாது இப்பகுதி அமைந்திருத்தலால், இது இயற்றமிழ்ப் பாவகையாக விளங்குகின்றது. நேரிசையாசிரியப்பா என்னும் இயற்றமிழ்ப் பாவாகிய இப்பகுதியை இளங்கோ அடிகள் 'உரைப்பாட்டு மடை' எனச் சுட்டியமைக்கு உரிய காரணம் சிந்தித்தற்குரித்து.

உரைப்பாட்டுமடை என்பதற்கு 'உரைச் செய்யுளை இடையே மடுத்தல்' என அரும்பதவுரையாசிரியரும், 'உரைப்பாட்டை நடுவே மடுத்தல்' என அடியார்க்கு நல்லாரும் விளக்கம் தருவர். இப்பகுதி சந்த இனிமை அமையப் பெற்ற உரைநடைப் பகுதியாகவே கருதப்பட்டது என்பதையும், இசைப் பாக்களின் இடையே இவ்வுரை நடைப் பகுதி இடம் பெற்றிருத்தலால் இது உரைப்பாட்டு மடை எனக் கூறப்பட்டது என்பதையும் உரையாளியர் தம் விளக்கங்களால் அறியலாம். எனினும் இப்பகுதியை உரைநடையாகக் கொள்ளாமல், செய்யுளாகக் கொள்வதே ஏற்புடையது என முன்னர் விளக்கப்பட்டது. உரைநடைப் பகுதி என்பதற்கும் உரைப்பாட்டுமடை என்பதில் வரும் உரை என்பதற்கும் வேறுபாடு அறியாது இவ்விளக்கங்கள் எழுதப்பட்டன போலும்!

உரைப்பாட்டுமடை என்பதில் உள்ள உரை என்பதற்குச் சொல் என்பதே பொருளாகும். டாக்டர் வ. சுப. மாணிக்கனார் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பதில் உள்ள உரை என்பதற்குச் சொல் எனப் பொருள் கூறுவர்[47]. இம்முறையில் உரைப்பாட்டுமடை என்பதிலும் உரை என்பதற்குச் சொல் எனப் பொருள் கொள்ளலாம். உரையோடு பாட்டும் இயற்பாவின் இடையே மடுக்கப் பெற்றது என்பதே இவண் உரைப்பாட்டுமடை என்பதன் பொருளாகக் கொள்ளுதல் வேண்டும். இயற்றமிழ்ப் பாவாகிய நேரிசையாசிரியத்துள் 'இவளோ' என வரும் சொல் ஒன்று இடம் பெற்றுள்ளது. மேலும் சாலினி கூற்றுக வரும்,

கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி...

47. இரட்டைக் காப்பியங்கள் - சிலப்பதிகாரத்திறன் - பக். 42

எனவரும் பகுதி தெய்வமேறப் பெற்ற நிலையில் கூறப்படும் இசைப்பாவாகும். 'இவளோ' என வரும் உரையும் கொங்கச் செல்வி எனத் தொடங்கும் பாடலுமே இவண் உரையும் பாட்டுமாய்ச் சுட்டப்பட்டன. உரை (சொல்)யும் பாட்டும் நேரிசையாசிரியப் பாவாகிய இவ்வியற்றமிழ்ப் பாவின் இடையே மடுக்கப் பெற்றிருத்தலால் இப்பகுதி உரைப்பாட்டுமடை என்னும் பெயர்த்தாயிற்று. இப்பகுதி பின்வருமாறு பிரித்துப் பதித்தற்குரித்து.

இணைமலர்ச் சீறடி இணைந்தனள் வருந்திக்
கணவனோ டிருந்த மணமலி கூந்தல
இவளோ
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்ப

இயற்றமிழ்ப் பாவகையாகிய இந்நேரிசையாசிரியப்பா இடையே சொல்லொன்றையும் பாட்டொன்றையும் பெற்றிருத்தலால் உரைப்பாட்டுமடை என அழைக்கப் பெற்றது இதனால் தெளிவாகும்.

பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா

வேட்டுவ வரியின் முதற்கூருக அமைந்த நேரிசை ஆசிரியப்பாவை அடுத்து, பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் பாவகை இடம் பெற்றுள்ளது. இப்பஃருழிசைக் கொச்சகக் கலிப்பாவில் முன்றிற் சிறப்பு என்னும் தலைப்பில் மூன்று தாழிசைகளும், வள்ளிக் கூத்து என்னும் தலைப்பில் மூன்று தாழிசைகளும், முன்னிலைப் பரவல் என்னும் தலைப்பில் மூன்று தாழிசைகளும், தனிச்சொல் ஒன்றும் நிலைமண்டில யாப்பால் அமைந்த அகவற் சுரிதகம் ஒன்றும் அமைந்துள. 'நாக நாறு நரந்தை நிரந்தன' எனத் தொடங்கும் (2) தாழிசை முதல் வென்றிக்கூத்து என்னும் தலைப்பில் அமைந்த

ஆசிரியச் சுரிதகம் (11) ஈருக இப்பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் இயற்றமிழ் பாவகையாகும்.

தாழிசைகள்

முன்றிற் சிறப்பு என்னும் தலைப்பில் ஒருபொருள் மேல் மூன்றடுக்கிய தாழிசைகள் உள. இவை ஒரு பொருள் மேல் அடுக்கி வந்தவை என்பதற்குச் சான்ருக 'முன்றிலே' என்னும் சீரொன்று பாடலிறுதி தோறும் ஒத்தமைந்துள்ளது. இத்தாழிசைகளில் நேரொன்ருசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, நிரையொன்ருசிரியத்தளை கலித்தளை ஆகிய தளைகள் இடம் பெற்றுள.

வள்ளிக்கூத்து என்னும் தலைப்பில் அமைந்த மூன்று தாழிசைகளும் ஒருபொருள் மேல் அடுக்கி வந்தனவே. 'குலனே குலனும்' எனவரும் சீர்கள் பாடலின் இறுதி தோறும் ஒத்தமைந்து இதனை உணர்த்துகின்றன. கொற்றவை வேடம் கொண்ட குமரியின் குலத்தைச் சிறப்பித்துக் கூறும் பொருண்மை இத்தாழிசைகளில் பயின்றுள்ளது. பாடல் தோறும் இரண்டாமடியின் முற்கூருய இருசீர்களும் மூன்ரும் அடியின் முற்கூருய இருசீர்களாக அமைந்துள. இவற்றுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்ருசிரியத்தளை ஆகிய தளைகள் அமைந்துள.

முன்னிலைப் பரவல் என்னும் தலைப்பில் அமைந்த தாழிசைகள் ஒருபொருள்மீது மூன்றடுக்கி நான்குஅடியால் வந்தன. பாடலின் இறுதிதோறும் 'நிற்பாய்' என வரும் சொல் ஒத்து அமைந்துள்ளதும் இரண்டாம் அடியின் இறுதிதோறும் 'மேல் நின்ருயால்' என வரும் சொற்கள் ஒத்து அமைந்துள்ளதும் இவை ஒருபொருள்மீது அடுக்கி வந்ததை விளக்கும். இத்தாழிசைகளுள் வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகள் மட்டுமே உள.

தனிச்சொல்லும் சுரிதகமும்

தாழிசைகளுக்குப் பின்னர் ஆங்கு என வரும் தனிச் சொல்லும் 'கொன்றையுந் துளவமுங் குழுமத் தொடுத்த' என வரும் நான்கடி நிலைமண்டில ஆசிரியச் சுரிதகமும் அமைந்துள்ளன. இச்சுரிதகப் பகுதியில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத் தளை, நிரையொன்றாசிரியத்தளை, கலித்தளை ஆகிய தளை களைக் காணலாம்.

இங்ஙனம், ஒருபொருள்மேல் மூன்று அடுக்கி வந்த தாழிசைத் தொகுதிகள் மூன்றையும், தனிச் சொல்லையும், நான்கடி அகவற் சுரிதகத்தையும் பெற்று, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவாக, வேட்டுவ வரியின் நடுக்கூறு விளங்குகின்றது.

இசைப் பாடல்கள்

நேரிசையாசிரியப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப் பா ஆகிய இயற்றமிழ்ப் பாவகைகளுக்குப் பின்னர் இசைத் தமிழ்ப் பாக்கள் இடம் பெற்றுள, வேட்டுவ வரிக்கூத்து தொடங்கப்படும் இடம் இதுவே என்பதைக் 'குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே' என வரும் சுரிதகப் பகுதி யால் அறியலாம். கூத்துடன் பாட்டும் நிகழ்கின்றது. எனவே இப்பகுதி முதல் இசைப் பாடல்கள் இடம் பெற்றுள.

மூன்று தலைப்பில் இசைப் பாடல்

கூத்துள் படுதல், வெட்சி, வெட்சிப் புறநடை என மூவேறு தலைப்புக்களில் மூன்று இசைப் பாடல்கள் உள. இவை மூன்றும் ஒருபொருள்மீது அடுக்கி வந்தன. இதனைப் பாடல் இறுதிதோறும் 'போலும்' என வரும்

ஒத்த சொல் அமைப்பால் அறியலாம். கோவலன், மாதவி ஆகியோர் பாடிய ஆற்றுவரிப் பாடல்களில் இடைமடக்கி வந்துள்ளது போன்று இப்பாடல்களிலும் இடைமடக்குச் சிறப்புள்ளது.

மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை
மரக்கால்மேல் வாளமலையா டும்போலும்
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை
மரக்கான்மேல் வாளமலை யாடுமாயின்

எனவும்,

வெட்சி மலர்புனைய வெள்வா
ளுழத்தியும் வேண்டும் போலும்
வெட்சி மலர்புனைய வெள்வா
ளுழத்தியும் வேண்டின் வேற்றூர்

எனவும்,

புள்ளும் வழிப்படரப் புல்லார்
நிரைகருதிப் போகும் போலும்
புள்ளும் வழிப்படரப் புல்லார்
நிரைகருதிப் போகுங் காலை

எனவும் இப்பாடல்களுள் இரண்டாம் அடியே மூன்றும் அடியாகவும் இடைமடக்கி வந்துள்ளது.

ஒருபொருள்மேல் மூன்றடுக்கிய இவ்விசைப் பாடல்கள் இயற்றமிழ்ப் பாவகையில் அறுசீர் ஆசிரிய நிலை விருத்தம் என்னும் யாப்பு வகைக்கு உரியவை. ஆயினும் இம்மூன்று பாடல்களும் 'முதலடி அறுசீராயும் மற்றையடி எண்சீரா யும்' ஏட்டுப்பிரதிகளில் உளவென்று டாக்டர் உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். எனினும் இவற்றுள் இரண்டாம் பாடல், மூன்றும் பாடல்களில் இரண்டு முதல் நான்கு வரை உள்ள அடிகளை எண்சீராகப் பிரிக்க இயலாதவாறு உள்ளமையால் அங்ஙனம் கொள்ள இயலாது. எனவே இவற்றை அறுசீர் அடிகளாகக் கொள்வஃதே அமைவுடைத்து.

அடியார்க்குநல்லார் இவ்விசைப் பாடல்களுள் முதற் பாடல் கூத்துள் படுதல் என்னும் பொருண்மைக்கு உரியதாகவும் எஞ்சிய இரண்டும் கொற்றவை நிலைக்கு உரியனவாகவும் குறிப்பிடுவர். இவ்விசைப் பாடல்கள் மூன்றனுள்ளும் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத் தளை, கலித்தளை ஆகியன அமைந்துள. முதற் பாடலில் மட்டும் ஈரிடங்களில் ஒன்றாத வஞ்சித் தளையும் அமைந்துளது. எனவே கூத்துள் படுதல், வெட்சி, வெட்சிப் புறநடை ஆகிய மூவேறு தலைப்புக்களில் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த இவ்விசைப் பாடல்கள் இயற்றமிழ்ப் பாவகையில் அறுசீர் ஆசிரிய நிலை விருத்தங்களாம்.

கொடை - இசைப் பாடல்கள்

கொடை என்னும் தலைப்பில் இளமாவெயிற்றி, முருந்தேரிளநகை, கயமலருண் கண்ணாய் எனத் தொடங்கும் மூன்று இசைப் பாடல்கள் அடுத்து அமைந்துள. இப்பாடல்களின் இறுதியில் துறைப்பாட்டுமடை என்னும் தொடர் உள்ளது. துறைப்பாட்டுமடை என்பதை விளக்கும் அரும்பதவுரைகாரர் 'வெட்சித் துறை சொன்ன பாட்டு' என்று உரைப்பர். அடியார்க்குநல்லார் துறைப் பாட்டுமடை என்பதற்குத் துறைப்பாட்டுக்களை நடுவே மடுத்தல் என்று விளக்கம் கூறி இவை மூன்றும் கொடை என்னும் துறை என்றும் கூறுவர். உரையாசிரியர் குறிப்புக்களால் வெட்சித் திணையின் துறையாகிய கொடைத் துறைக்குரிய பொருண்மை இவ்விசைப் பாடல்களில் இடம் பெற்றிருத்தல் புலனும். எனவே இவை துறைப் பாட்டுமடை என அழைக்கப் பெற்றன.

துறை என்னும் பிரிவுப் பெயர் புறத்திணைக்கே சிறப்பாக உரியது. புறப்பொருளில் கரந்தையாரிடமிருந்து வெட்சியார் கைக்கொண்ட ஆனிரைகளைத் தம் முன்றிலில்

நிறுத்தி, போரில் துணை செய்தார்க்கும் புள் நிமித்தம் அறிந்துரைத்த புலவருக்கும், ஒற்றுய்ந்து உரைத்தார்க்கும் பிறரு .குும் கொடையாகக் கொடுப்பர்.

தலைநாளை வேட்டகத்துத் தந்தநல் லானிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்தம் முன்றி னிறைந்தன

என்றும்,

கரந்தை யலறக் கவர்ந்த வினநிரைகள்
கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்
புள்வாய்ப்புச் சொன்ன கணிமுன்றி னிறைந்தன

என்றும்,

அயலூ ரலற வெறிந்தநல் லானிரைகள்
நயனின் மொழியி னரைமுது தாடி
எயினர் எயிற்றியர் முன்றி னிறைந்தன

என்றும் வெட்சித் துறையின் கொடைப் பொருண்மை இவ்விசைப் பாடல்களில் பயின்றது.

இப்பகுதியின் துறைக் கருத்தை இக்கால உரையாசிரியர் 'இவை மூன்றும் வஞ்சித் திணையின் துறை பற்றி வந்தன' எனக் குறிப்பிட்டிருப்பது[48] பிறழவுணர்ந்த கருத்தாம். வஞ்சித் திணையுள்ளும் 'கொடுத்தல் எய்திய கொடைமையாலும்'[49] எனக் கொடைப் பொருண்மை உடைய துறை வரினும், அது பாணர் புலவர் முதலியோருக்குப் பொன்னும் பொருளும் கொடையாகத் தருவதையே குறிப்பது. சிலம்புப் பாடல்களுள் ஆனிரைக் கொடையே பேசப்படுதலின், இதனை வெட்சித் திணைக்குரிய கொடைத் துறையாகவே கொள்ளல் வேண்டும். தொல்காப்பியத்துள்

48. சிலம்பு. கழகப் பதிப்பு - பொ. வே. சோ. உரை
49. தொல். பொருள். இளம். நூ. 65

வெட்சித் திணையின் கொடை என்னும் துறைக்குச் சான்றாகச் சிலம்பிலுள்ள இப்பாடல்களையே இளம்பூரணர் எடுத்தாண்டுள்ளதும்[50] இக்கருத்துக்கு வலியூட்டும்.

இப்பாடல்கள் ஒருபொருள்மேல் மூன்றடுக்கியனவாய் உள்ளன; கலிநிலை விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்கு உரியன. இவற்றுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகள் உள. இறுதிப் பாடலில் மட்டும் ஓரிடத்தில் இவற்றோடு கலித் தளையும் பயின்றுள்ளது. எனவே கொடை என்னும் தலைப்பில் அமைந்த இவ்விசைப் பாடல்கள் நாற்சீர் நான்கு அடியாய்க் கலிநிலை விருத்தம் என்னும் யாப்பு வகைக்கு உரியனவாய உள.

அவிப்பலி - இசைப்பாடல்கள்

அவிப்பலி என்னும் தலைப்பில் சுடரொடு, அணிமுடி, துடியொடு எனத் தொடங்கும் பாடல்கள் மூன்றும் ஒரு பொருள்மேல் அடுக்கிவந்த இசைப் பாடல்கள். நான்காம் அடிதோறும் ‘விலையே’ என்ற சொல்லும், இரண்டாம் அடிதோறும் ‘அடிதொழுதேம்’ என்ற தொடரும் முதல் இரு பாடல்களிலும் ஒத்தமைந்துள. ஒரு பொருள்மீது மூன்றடுக்கியனவாய் உள்ள இப்பாடல்களில் முதல் இரு பாடல்களில் மட்டும் ஒத்த தொடரும் சொல்லும் அமைந் திருக்க மூன்றாம் பாடல் அம்முறையில் ஒவ்வாது அமைந் துள்ள மாறுபாடு இங்கு உள்ளது. எனினும் இம்மூன்று இசைப் பாடல்களும் பொருளாலும் சந்த அமைப்பாலும் ஒத்தனவே.

இவ்விசைப் பாடல்களில் இனிய குறுஞ்சீர் வண்ணம்[51] பயின்று வருவது இன்னோசை பயக்கின்றது.

50. தொல். பொருள். இளம். நூ. 61 உரைமேற்கோள்
51. குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும் - தொல். செய். நூ. - 522 இளம்.

சுடரொடு திரிதரு முனிவரு மமரரும்
இடர்கெட வருளுநி னிணையடி தொழுதேம்
அடல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறறரு விலையே

தனதன தனதன தனதன தனதன - எனவரும் இனிய சந்த ஒழுக்கு, பாடல் முழுதும் பரவி நிற்கின்றது.

இவ்விசைப் பாடல்களுள் முற்பகுதி கொற்றவைப் பரவலாகவும் பிற்பகுதி அவிப்பலி அளித்தலாகவும் பொருண்மை பெற்று அமைந்துள்ளதும் இப்பாடல்களின் இயைபு நிலையை விளக்கும். நிரையொன்றாசிரியத்தளை மட்டும் இப்பாடல்களுள் மிகுதியாகப் பயின்றுளது. ஒவ் வோரிடத்தில் மட்டும் இயற்சீர் வெண்டளையும் கலித் தளையும் அமைந்துள்ளன. இங்ஙனம் இனிய சந்த அமைப்பு பெற்ற இவ்விசைப் பாடல்கள் நாற்சீர் நான்கு அடியாய் இயற்றமிழ் யாப்பு வகையில் கலிநிலை விருத்தப் பாடல்களாய் அமைந்துள.

பலிக்கொடை—இசைப்பாடல்கள்

வம்பலர் பல்கி, துண்ணென்றுடியொடு, பொருள் கொண்டு எனத் தொடங்கும் மூன்று பாடல்களும் பலிக் கொடை என்னும் தலைப்பில் ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வந்த இசைப்பாடல்கள். இவை ஒருபொருள் மீது அடுக்கி வந்தமைக்குச் சான்றாக, இரண்டாம் அடியின் இறுதி தோறும் உண்குவாய் என்ற சொல்லும், நான்காமடியின் இறுதி தோறும் செய்குவாய் என்ற சொல்லும் இடம் பெற்றுள. முதற்பாடலில் மட்டும் ‘செய்குவாய்’ என்ற சொல்லுக்குப் பதிலாகச் ‘சேர்த்துவாய்’ என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. இம்மூன்று பாடல்களும் கொற்றவையைப் பரவுவார் கூற்றும்.

நாற்சீர் நான்கடியாய் அமைந்த இவ்விசைப் பாடல் களுள் இயற்சீர் வெண்டளையே மிகுதியும் பயின்றுள்ளது. இரண்டாம் பாடலில் இயற்சீர் வெண்டளையோடு வெண்சீர் வெண்டளையும், மூன்ரும் பாடலில் இயற்சீர் வெண்டளை யோடு வெண்சீர் வெண்டளையும் நிரையொன்ருசிரியத் தளையும் அமைந்துள. இவ்விசைத் தமிழ்ப் பாடல்கள் கலிநிலை விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகைக்கு உரியன.

அரசவாழ்த்துப் பாடல்

கானல் வரியில் நான்கடியாலாய அரசவாழ்த்துப் பாடல் நேரிசையாசிரியம் என்னும் யாப்பு வகையால் அமைந்துள்ளது போன்று, வேட்டுவ வரியிலும் ஈற்றயலடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் நேரிசையாசிரியம் என்னும் யாப்புவகையில் அமைந்த இசைப்பாடல் ஒன்று இறுதியில் அமைந்துள்ளது. 'வெட்சி சூடுக விறல்வெய் யோனே' என்று ஏகார ஈறுபெற்று இப்பாடலின் இறுதி அடி அமைந்துள்ளது. இப்பாடலில் நேரொன்ரு சிரியத்தளை, நிரையொன்ருசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை ஆகியனவும், ஓரிடத்தில் வெண்சீர் வெண்டளையும் உள.

வேட்டுவ வரியில் பயின்ற பாடல்களின் அமைப்பு நிலையைப் பின்வரும் பட்டியல் காட்டுகின்றது. முதற் கூறும் நடுக்கூறும் இயற்றமிழ்ப் பாவகைகளாவும் இறுதிக் கூறு இசைத்தமிழ்ப் பாக்களின் தொகுதியாகவும் விளங்கு வதை இதனல் அறியலாம்.

எண்	பாடல்	இயல் அல்லது இசை	சிறப்புக்கள்
1.	கடுங்கதிர் . . . . எனவே (1—74)	இயற்றமிழ்ப்பா ; நேரிசையாசிரியம்	உரையும், பாட்டும் இடையே பெற்றது
2.	நாகநாறு . . . . கூத்துள் படுமே (2—11)	இயற்றமிழ்ப்பா ; பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா	முன்றிற்சிறப்பு, வள்ளிக்கூத்து, முன்னிலைப்பரவல் என்னும் தலைப்பில் மூன்றடுக்கிய தாழிசைகள்; தனிச்சொல்; அகவற் சுரிதகம்
3.	கூத்துள்படுதல், வெட்சி, வெட்சிப்புறநடை	இசைத்தமிழ்ப் பாக்கள்; அறுசீர் ஆசிரியவிருத்தம்	மூவேறு தலைப்பு களில் ஒரு பொருள் மீது அடுக்கின
4.	கொடை	இசைத்தமிழ்ப் பாக்கள்; கலிநிலை விருத்தம்	துறைப்பாட்டு மடை; ஒரு பொருள்மீது மூன்றடுக்கின
5.	அவிப்பலி	இசைத்தமிழ்ப் பாக்கள்; கலிநிலை விருத்தம்	குறுஞ்சீர்வண்ணம்; ஒருபொருள் மீது மூன்றடுக்கின
6.	பலிக்கொடை	இசைத்தமிழ்ப் பாக்கள்; கலிநிலை விருத்தம்	ஒருபொருள் மீது மூன்றடுக்கின
7.	அரசவாழ்த்து	இசைத்தமிழ்ப்பா; நேரிசையாசிரியம்	வாழ்த்துப் பொருண்மை; ஏகாரவீறு

இங்ஙனம் வேட்டுவ வரியின் முற்கூறு நேரிசை ஆசிரிப்பாவாகவும், நடுக்கூறு பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பாவாகவும் பிற்கூறு இசைப்பாடல்களாயும் அமைந் துள்ளன.

13. புறஞ்சேரியிறுத்த காதை (நிலைமண்டில ஆசிரியப்பா)

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மதுரைமாநகரின் புறத்தே அமைந்த அறம்புரி மாந்தரன்றிச் சேராப் புறஞ்சிறை மூதூரிடத்துத் தங்கிய செய்தியை விளக்கும் பகுதி புறஞ்சேரியிறுத்த காதை. நூற்றுத் தொண்ணூற்ருறடிகளால் நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்பு வகையால் இப்பகுதி இயன்றுள்ளது. அடியார்க்கு நல்லார் உள்ளிட்ட உரையாளியரும் மற்றும் பதிப்பாளியரும் இப்பகுதியின் பாவகையை நிலைமண்டில ஆசிரியம் என்றே நவிலுப.

அந்தாதி அமைப்பு

அடிமடக்குச் சிறப்பின் வளர்ச்சியே பிற்காலத்தில் அந்தாதி இலக்கியமாய்ப் பூத்தது. சிலப்பதிகாரத்துள் பெரும்பாலான இசைப்பாடல்களில் அசை மடக்கும், சீர் மடக்கும், அடிமடக்குமாய சிறப்புக்கள் நிறைந்துள. இயற்றமிழ்ப் பாவாகிய இந்நிலை மண்டில ஆசிரியத்துள் நின்ற அடியின் இறுதிச்சீர் அல்லது அசை வரும் அடியின் முதற்சீர் அல்லது முதலசையாக அமைந்து அந்தாதி அமைப்புடன் அழகு பெறுகிறது.

படையமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்தும்
வீழ்துய ருற்ருேள் விழுமம் கேட்டு (70-71)

எனவும்,

தாழ்துய ரெய்தித் தான்சென் றிருந்தும்
இருந்துய ருற்ருே ளிணையடி தொழுதேன் (72-73)

எனவும்,

மண்ணுடை முடங்கல் மாதவி யீத்ததும்
ஈத்த வோலைகொண் டிடைநெறித் திரிந்து (76-77)

எனவும் ஈரடிகட்கு இடையே அந்தாதி அமைப்பு விளங்கக் காணலாம்.

இங்ஙனம், அந்தாதிச் சிறப்புடன் எல்லா அடியும் அளவடியால் வந்த நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்புக்கு உரியதாய் இக்காதை விளங்குகின்றது.

14. ஊர்காண் காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

ஊர்காண் காதையுள் கோவலன், கண்ணகியைக் கவுந்தியடிகள் பாதுகாப்பில் விடுத்து, மதுரை சென்று அவ் வூரின் வளங்களைக் கண்ட கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள. இருநூற்றுப் பதினெட்டடிகளாலாய இப்பகுதி நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் பாவகையில் அமைந்தது.

15. அடைக்கலக்காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

சிலப்பதிகாரத்தின் உயிர்நாடிக் காதை எனப் பாராட்டப்பெறுவது அடைக்கலக்காதை. கோவலனைக் கடக்களிறு அடக்கிய கருணை மறவனாகவும், செல்லாச் செல்வனாகவும், இல்லோர் செம்மலாகவும் காட்டும் காதை இதுவே. எல்லா அடிகளும் அளவொத்து அமைந்த நாற்சீரடிகளாலாய நிலைமண்டில ஆசிரியப்பா இப்பகுதியின் பாவகை. அடியார்க்கு நல்லார் 'இஃது எல்லா அடியும் முதனடுவிறுதி அளவடியான் முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா' என இதன் பாவகையைச் சுட்டுவர். பிறரும் இப்பாவகையையே இக்காதைக்கு உரியதாய்க் கூறுப. இருநூற்றுப் பத்தொன்பது அடிகளால் ஆயது இக்காதை.

16. கொலைக்களக்காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் பாவகையே அடைக்கலக் காதைக்குப் பின்னரமைந்த கொலைக்களக் காதைக்கும் உரியதாகும். கோவலன் கொலைப்படும் நிகழ்ச்சியாகிய காப்பியத்தின் உச்ச நிகழ்ச்சி இக்காதையில் இடம் பெற்றுள்ளது.

இக்காதையின் பாவகையை 'இஃது எல்லாவடியும் அளவடியாய் வந்து முடிதலின் நிலைமண்டில ஆசிரியப்பா' என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுவர். இக்காதையின் பாவகை பற்றிய கருத்து பிறருக்கும் உடன்பாடே. இஃது இருநூற்றுப் பதினேழு அடிகளாலாயது.

17. ஆய்ச்சியர் குரவை

(இயற்பாக்கள், இசைப்பாக்கள், நாடகக் கூறுகள்)

ஆய்ச்சியர்களாகிய முல்லை நில மக்களின் வாழ்வியல் பாங்குகளை விளக்குவது ஆய்ச்சியர் குரவை. கோவலன் கொலை நிகழ்ச்சியால், ஆயர் சேரியில் ஏற்பட்ட உற்பாதங்களைக் கண்டு, கண்ணனை நோக்கிக் குரவைக் கூத்து நிகழ்த்தப்படும் பொருண்மை இதற்கு உரியது.

யாப்பமைதி

ஆய்ச்சியர் குரவை என்ற பெயருக்கு விளக்கம் கூறும் அடியார்க்கு நல்லார் 'இது கூத்தாற் பெற்ற பெயர்' என்று குறிப்பிட்டுள்ளதும், அரும்பதவுரைகாரர் 'குரவைச் செய்யுள்' என இதனைக் குறிப்பிட்டுள்ளதும் கூத்துக்குரிய பாடல் வகைகள் இப்பகுதியுள் மிகுதியும் பயின்று வந்துள்ளதை விளக்கும் சான்றுகள்.

இப்பகுதியின் பாவகையைக் 'கொச்சகவொருபோகு' என நாட்டாரும், பொ. வே. சோவும் குறிப்பிட்டுள்ளனர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் கொச்சகக்கலி எனப் பொதுப் பெயரால் கூறுவர். இதனை ஒரேவகைப் பாவாகக் கொள்ளாது, பலவகைப் பாக்களின் தொகுதியாகக் கொள்வதே ஏற்புடைத்து என்பது இவண் விளக்கப்பெறும். ஆய்ச்சியர் குரவையில் கூத்தாடுவார் கூற்றும் இடையிடையே மிடைந்து வருதலரல் இப்பகுதி பாவகையும் உரைநடையும் கலந்து வரும் அமைப்பினைப் பெற்றுள்ளது. இயற்றமிழ்ப் பாவகைகளும் நாடகத் தமிழ்க் கூருய உரைநடைப் பகுதிகளும் கலந்து வரும் தொகுதியாக இப்பகுதி அமைந்துள்ளது.

குறளடி வஞ்சிப்பா

ஆய்ச்சியர் குரவையின் தொடக்கத்தில் 'கயலெழுதிய' எனத் தொடங்கி 'வந்து தோன்றுமன்' என முடியும் பகுதிவரை குறளடி வஞ்சிப்பா என்னும் யாப்புவகைக்கு உரிய பகுதியாம்.

கயலெழுதிய இமயநெற்றியின்
அயலெழுதிய புலியும்வில்லும்
நாவலந்தண் பொழில்மன்னர்
ஏவல்கேட்பப் பாரரசாண்ட
மாலைவெண்குடைப் பாண்டியன் கோயிலில்
காலைமுரசம் கனைகுரலியம்பும்
ஆகலின்
நெய்ம்மு றைநமக் கின்ரு குமென
ஐயைதன் மகளைக் கூஉய்க்
கடைகயிறு மத்துங்கொண்
டிடைமு துமகள் வந்து தோன்றுமன்

என்பது இக்குறளடி வஞ்சிப்பா அமைய வேண்டிய வடிவாம்.

இவ்வஞ்சிப்பாவின் முற்பகுதியில் ஐந்திடங்களில் நாலசைச்சீர்கள் பயின்று வந்துள. வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் பயின்று வரலாம் என்பர் யாப்பியலார். 'அங்கண்வானத் தமரரசரும்' எனவரும் திருப்பாமாலைப் பாடலை யாப்பருங்கல உரைகாரர் காட்டி, 'இக்குறளடி வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் பதினாறும் முதற்கண்ணே வந்தன' என்று குறிப்பிட்டுள்ளதும்[52] தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் புறப்பாடலில்[53] 'தீந்தேறற் றசும்புதொலைச்சினன்' என்ற அடியுள் நாலசைச்சீர் பயின்றுள்ளதும், வஞ்சிப்பாவினுள்

52. யாப். விருத்தி. நூ. 13 உரை
53. புறம். 239

நாலசைச்சீர் பயின்று வருவதற்குச் சான்றுகளாம். இக் குறளடி வஞ்சிப்பாவினுள் எழுவகைத்தளைகளும் இடம் பெற்றுள.

இப்பகுதியை உரைநடையாகக்கொண்டு இளம்பூரணர் பாட்டிடை வைத்த குறிப்பு என்னும் பகுதிக்கு இதனைச் சான்று காட்டுவர். 'இடைமுதுமகள் வந்து தோன்றுமன்' என உரைநடைச் சாயலுடையதாக இறுதியடி முற்றுப் பெற்றிருப்பதும், உரைப்பாட்டுமடை என்னும் பெயர் இப் பகுதியின் இறுதியில் இடம் பெற்றிருப்பதும் இளம் பூரணர் கருத்தினை உறுதிப்படுத்தும் சான்றுகளாயுள. எனினும், வேட்டுவ வரியில் இடம் பெற்ற உரைப்பாட்டு மடை போன்று இப்பகுதி அமையவில்லை ஆதலால் இதனைச் செய்யுட்பகுதியாகக் கொள்வதே நேரிது. இறுதியடி உரைநடைச் சாயலுடைதாயும் வஞ்சிப்பாக் களில் பயின்றுவரும் மரபு இருந்திருக்கலாம். உரைப் பாட்டுமடை என்னும் பெயர் கருப்பத்தின் பின்னே வரும் கொளு என்னும் பகுதிக்கே உரியதாகும் என்பதைப் பின்னர் விளக்குவாம்.

குறள்வெண்செந்துறை

குறளடி வஞ்சிப்பாவையடுத்து, 'குடப்பாலுறையா' எனத் தொடங்கும் மூன்று ஈரடி நாற்சீர்ப் பாடல்கள் உள. உரைப்பாட்டுமடை, என்னும் தலைப்பு இப்பகு திக்கும் உரியதுபோலப் பதிப்புக்களில் அமைந்துள்ளது. எனினும் இத்தலைப்பு இப்பகுதிக்குப் பொருந்தும் தலைப் பன்று. கருப்பம் என்னும் பகுதிக்குப் பின்னர் உள்ள 'கொளு' என்ற பகுதிக்கே உரைப்பாட்டுமடை என்னும் இத்தலைப்பு உரியதாகும். கொளு என்னும் பகுதிக்குரிய விளக்கத்தில் இக்கருத்து தெளிவுறுத்தப்படும்.

'குடப்பாலுறையா' எனத் தொடங்கும் மூன்று ஈரடி நாற்சீர்ப் பாடல்களும் குறள்வெண் செந்துறை என்னும் யாப்பு வகையில் அமைந்தனவாகும். பாவினங்களில் தாழிசைக்கே ஒருபொருள் மீது அடுக்கி வரும் தன்மை உரியது. இளங்கோவடிகள் குறட்பா இனமாகிய இத் துறைப்பாடலுக்கும் பொருண்மை மீது அடுக்கி வரும் சிறப்பை உரியதாக்கினர். இப்பாடல்களில் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகளே இடம் பெற்றுள.

கருப்பம்

'குடத்துப் பாலுறையாமையும்' எனத் தொடங்கும் கருப்பம் என்னும் பகுதி நாடகத் தமிழ்உறுப்பாய உரை நடைப் பகுதியாகும். முன்னுள்ள குறள் வெண் செந்துறைப்பாடலின் கருப்பொருளையே இக்கருப்பப் பகுதி யும் கருவாகக் கொண்டுள்ளது. பாடல்களுள் சுட்டப்படும் தீக்குறிகள் உரைநடைப் பகுதியாலும் விளக்கப்பட்டுள. இக்குறிகளால் கறவை கன்றுக்குத் துயர் நேராதிருக்க, கண்ணனும் பலராமனும் நப்பின்னைப் பிராட்டியோடு தொழுநை ஆற்றிலாடிய பிள்ளைப் பருவக் கூத்தை ஆடு மாறு மாதரி கூறுவதும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது.

கருப்பம் என்னும் இப்பகுதி, பின்னே நிகழவிருக்கும் கேடுகளுக்குக் கருவாக அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்றது. கருப்பம் என்பதற்குக் 'கேட்டுக்குக் கருப்பம்' என அரும்தவுரைகாரரும், 'இவை கேட்டிற்குக் கருப்பம்' என அடியார்க்கு நல்லாரும் உரைக்குறிப்பு வரைந் துள்ளனர். கோவலன் கொலை, மதுரை பற்றியெரியும் நிகழ்ச்சி முதலிய கேடுகளுக்கு ஆயர்பாடியில் நிகழ்ந்த தீக்குறிகள் கருவாக அமைந்துள என்பதைக் கருப்பம் என்பது காட்டுகின்றது.

கானல்வரியுள் 'கட்டுரை' என்னும் தலைப்பில் அமைந்த உரைநடைப்பகுதி போன்று, பொருள்வகையால் பெயர் பெற்ற இக் கருப்பம் என்னும் பகுதியும் உரை நடைப் பகுதியேயாம்.

கொளு

கொளு என்னும் தலைப்பில் குறள் வெண்பா யாப் பமைந்த பாடல்களை ஒத்த ஏழு பாடல்கள் உள. கொளு என்ற சொல்லுக்குக் 'குரவைக்குக் கருத்து' என அரும் பதவுரைகாரரும், 'குரவைக் கூத்திற்குக் கருத்து' என அடியார்க்குநல்லாரும் உரை கூறுவர். கொளு என்பதைத் 'துறைக் கருத்தைத் தன்னுட் கொண்டுள்ள நூற்பா' எனப் புறப்பொருள் வெண்பாமாலை உரைகாரர் குறிப்பிடுவர். இளங்கோவடிகள் அமைத்துத் தந்த இக்கொளுவின் அமைப்பைப் பின்பற்றியே, பிற்காலத்தில் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் தம் நூலுள் கொளு என்பதன் அமைப்பை அமைத்திருக்கலாம்.

முதற்பாவை அடுத்து எட்டாம் சீராகச் 'சுட்டு' என்ற சொல் டாக்டர் உ. வே. சா. பதிப்பில் சேர்த்துப் பதிப் பிக்கப்பட்டுள்ளது. டாக்டர் வ. சுப மாணிக்கனுர் பதிப் பிலும், கழகப் பதிப்பிலும் 'சுட்டு' என்ற சொல் முதற்பா வுக்கும் இரண்டாம் பாவுக்கும் இடையே தலைப்பாக அமைத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 'சுட்டு-இது முதற் சுட்டு' என அடியார்க்கு நல்லார் இச்சொல்லுக்கு உரை கூறுகின்றார். அஃதாவது இதுவும் கீழ்வருவனவும் மாதரி குரவையாடுதற்குரிய ஆய மகளிரைத் தனித்தனிச் சுட்டிக் காட்டிக் கூறுவன என்றவாறு' என்று உரையாசிரியர் பொ. வே. சோ. இதற்கு விளக்கம் கூறுவர்.

உரைப்பாட்டு

'சுட்டு' எனவரும் உரையாகிய சொல்லே இவண் வெளிப்படையாக இடம் பெற்றது. வேட்டுவ வரியில்

அமைந்தது போன்று உரையும் பாட்டும் இங்கு அமைய வில்லை. உரை (சொல்) மட்டுமே இடம் பெற்றிருத்தலால் இது உரைமடை என்று கூறுதற்கு உரியதேயன்றி உரைப் பாட்டுமடை என்னும் பெயருக்கு உரியதாகாது. எனினும் உரைப்பாட்டுமடை என்பதே இப்பகுதிக்குரிய பெயராகும். எனவே சுட்டு என்னும் சொல்லின் கீழமைந்த பகுதியே இவண் பயின்று வந்த பாட்டாகக் கொள்ளற்கு உரியது. கொளு என்னும் பெயரால் இப்பகுதி குறிக்கப்பட்டுள்ளது. முன்னுள்ள ஈரடிகள் கொளுவாகவும் அடுத்து உரையும் பாட்டுப்பகுதியும் இடம் பெற்றதாகவும் இதனைக் கொள்ள வேண்டும். பிற்காலத்துப் புறப்பொருள் வெண்பா மாலையில் பயின்று வரும் கொளு அமைப்பும் இவண் ஒப்புநோக்கத் தக்கதாகும்.

'காரி கதனஞ்சான்' எனத் தொடங்கும் இப்பகுதி முதல் எடுத்துக்காட்டு என்னும் தலைப்பில் 'விரிதரு பூங் குழல் வேண்டிய பெயரே' என முடியும் பகுதிவரை யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் யாப்பு வகைக்குரிய பகுதியாகும்.

யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் இயற்றமிழ்ப் பாவகையில் இடையே உரையும் (சொல்லும்) பாட்டும் இடம் பெற்றிருத்தலால் இப்பகுதி உரைப் பாட்டுமடை என்னும் பெயருக்குரியதாயிற்று.

கொச்சகம்

குறள் வெண்பாக்கள் போல அமைந்த இவ்வேழு பாக்களும் ஒருபொருள்மேல் அடுக்கி வந்த யாப்பினால் வேறுபட்ட கொச்சக வொருபோகின் கொச்சகம் என்னும் பகுதியாகும். கொச்சம் என்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும் ஆசிரியவடி வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற் சீரடி, முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகை

அடியானும் அமைந்த பாக்களை உறுப்பாக உடைத்தாகி வெண்பா வியலாற் புலப்படத் தோன்றுவது' என்று இளம்பூரணர் இவ்வுறுப்பை விளக்குவர்[54].

கொச்சகமாகிய இப்பகுதியுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகள் இடம் பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டு

பெண்களைத் தொன்றுபடு முறையால் நிறுத்தி, இடை முதுமகள் ஒவ்வொருவரையும் பெயரிட்டழைப்பாள். ஒவ்வொருவரையும் எடுத்துச் சுட்டி ஒருவகைப் பெய ரால் அழைத்தலால் இப்பகுதி எடுத்துக்காட்டு என்னும் பெயரதாயிற்று.

முன்னுள்ள கொச்சகப் பகுதிகளையும் பின்னுள்ள சுரி தகப் பகுதியையும் இணைக்கும் சொல்லாக ஆங்கு என்னும் தனிச்சொல் இடையில் பயின்றது. 'தொழு விடையேறு குறித்து வளர்த்தார்' என்று தொடங்கும் பகுதி முதல் 'விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே' என முடியும் பகுதிவரை, யாப்பினால் வேறுபட்ட கொச் சக வொருபோகு என்னும் இப்பாவகையின் அகவற் சுரிதகப் பகுதியாகும், இறுதியடி நாற்சீரடியாக ஏகா ரத்தில் இற்ற இச்சுரிதகத்துள் இடை இருசீரடியாகவும், முச்சீரடியாகவும், நாற்சீரடியாகவும் அமைந்துள்ளது. எனவே அகவற் சுரிதகமாகிய இப்பகுதி குட்டச் செந் தூக்கு அல்லது இணைக்குறளாசிரியம் என்னும் யாப்பு வகைக்கு உரியதாகும். இப்பகுதியில் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை, நிரை யொன்றாசிரியத்தளை, கலித்தளை ஆகிய ஐவகைத் தளை கள் இடம் பெற்றுள.

54. தொல். செய். இளம். நூ. 117 உரை விளக்கம்.

கொச்சகவொருபோகு

'மாயவனென்றுள் குரலை' எனத் தொடங்கும் பகுதி முதல் 'பின்றையைப் பாட்டெடுப்பாள்' என முடியும் பகுதி வரை, அடுத்து வந்த யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகு என்னும் பாவகையாக அமைந்துள்ளது. கொச்சகம் தனிச்சொல் சுரிதகம் என்னும் முறையில் முதலில்அமைந்த யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொரு போகினைப் போன்றே இப்பாவும் அமைந்துள்ளது. எனினும் கொச்சகம், தனிச்சொல் ஆகிய உறுப்புக்கள் அம்முறை யிலேயே மீண்டும் இரட்டித்து அமைந்துள்ள சிறப்பை இவண் காணலாம்.

இப்பாவில் 'மாயவனென்றுள்' 'மாயவன் சீருளார்' 'வண்டுழாய் மாலையை' 'செந்நிலை மண்டிலத்தால்' எனத் தொடங்கும் பகுதிகள் நான்கும் கொச்சகங்களாகும். நேரிசை வெண்பா அமைப்பில் முதல் கொச்சகமும் இன்னிசை வெண்பா யாப்பமைப்பில் இரண்டாம் கொச் சகமும் அமைந்துள்ளன. 'வண்டுழாய் மாலையை' என்றும் 'செந்நிலை மண்டிலத்தால்' என்றும் தொடங்கும் இரு பாடல்களும் பஃறொடைவெண்பா அமைப்பில் நாற்சீர் ஐந்தடிப் பாடல்களாய் அமைந்துள. மேலும் பஃறொடை வெண்பா யாப்பில் அமைந்த இப்பாடல்களின் தொடக் கத்தில் முறையே 'அவருள்' என்றும் 'அவர்தாம்' என்றும் தனிச்சொற்கள் இடம் பெற்றுள்ளன. இரண் டாமடியின் இறுதியில் இப்பாடல்களுள் நான்காம் சீர்கள் தனிச்சொல்லாக முதற்றொடைக்கு ஏற்பவும் அமைந்துள.

பின்னுள்ள இரு கொச்சகங்களும் அமைப்பு நிலை யாலும் பொருளாலும் ஒத்துள்ளன. எனவே கூத்துள் படுதல் என்னும் தலைப்புக்கு இவ்விரு பாடல்களுமே உரியனவாக இருத்தல் சாலும். எனினும் முதற்பாடலை

முன்னுள்ள இரு பாடல்களோடு இணைத்தும், பின்னுள்ள பாடல் ஒன்றை மட்டுமே 'கூத்துள் படுதல்' என்னும் தலைப்புக்கு உரியதாகவும் அமைத்துள்ளனர். முதற் பாடலும் கூத்துள் படுதல் எனனும் தலைப்புக்கு உரிய தேயாம் என்பதற்குத் 'தண்டாக் குரவை தானுள் படு வாள்' எனவரும் பாடற்றொடர் சான்றாகும். கூத்துள் படுதல் என்னும் தலைப்புக்குத் 'தான் கூத்துக்குள் ஒத்தாடுதல்' என அரும்பதவுரைகாரரும், 'ஆடத் தொடங்குதல்' என அடியார்க்கு நல்லாரும் உரை கூறுப.

கொச்சகங்களாக அமைந்த இந்நான்கு பாக்களும் வெண்பா யாப்பினவாதலால் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகளால் மட்டுமே இயன்றுள.

மூன்றும் கொச்சகத்தின் தொடக்கத்தில் அமைந்த 'அவருள்' என்னும் தனிச்சொல் இரண்டாம் கொச்ச கத்தின் தொடக்கத்தில் இருத்தல் வேண்டும் என டாக்டர் உ. வே. சா. பாட வேறுபாட்டால் காட்டுவார். அரும் பதவுரைகாரர் உரைக்குறிப்பால் இச்சொல் முதற் கொச் சகத்தின் முன்னமைந்திருக்கலாம் என்றும் கருத முடி கின்றது. அவருள் என்னும் தனிச்சொல்லை முதலில் கூறி, அதன் பின்னரே முதற் கொச்சகத்துக்குக் குறிப் புரை வரைந்துள்ளார் அரும்பதவுரைகாரர். இங்ஙனம் 'அவருள்' என்னும் தனிச்சொல் முன்னுள்ள கொச்சகங் களின் முன்னர் இருத்தல் வேண்டும் என்பது கருத்தா யினும், மூன்றும் கொச்சகத்தின் தொடக்கத்தில் அமைந் திருப்பதே, அமைப்பு நிலைக்கும் பொருண்மை நிலைக்கும் ஏற்றது. இக்கருத்தை உணர்ந்தே டாக்டர் உ. வே. சா. மூன்றும் கொச்சகத்தின் தொடக்கத்திலேயே இச் சொல்லை அமைத்துப் பதிப்பித்துள்ளார்.

சுரிதகம்

இக்கொச்சகங்களை அடுத்து 'என' என்ற தனிச்சொல் லும் நேரிசை வெண்பா யாப்பில் அமைந்த வெள்ளைச் சுரிதக மொன்றும் அமைந்துள. குரவைக் கூத்துக்கு உரியாரைத் தேர்ந்தெடுத்து, அவரை முறைப்படி நிறுத்திப், பின்னர்க் கூத்தினைத் தொடங்கச் செய்து, அதற்கு இயைய மாதரி பாடத் தொடங்குகின்றாள் என்ற பொருண்மை கொண்டதாக இச்சுரிதகப் பகுதி அமைந் துள்ளது. வெள்ளைச் சுரிதகமாகிய இப்பகுதியில் இயற் சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகை வெண்டளைகளும் இடம் பெற்றுள.

இசைப் பாடல்கள்

1. **ஆசிரியத்தாழிசை**

யாப்பினால் வேறுபட்ட இக்கொச்சகவொருபோகு களாகிய இயற்றமிழ்ப் பாக்களை அடுத்து ஆய்ச்சியர் பாடும் பொருண்மைக்கு உரியனவாகிய இசைப்பாக்கள் இடம் பெற்றுள. இவற்றுள் 'கன்று குணிலா' எனத் தொடங்கும் இசைப்பாக்கள் முதலில் உள. இவை ஆசிரி யத்தாழிசை என்னும் யாப்பு வகைக்கு உரியன. இபபாடல்களின் யாப்பு நிலையைச் சுட்டும் இலக்கண உரையாசிரியர் பலரும் பல்வேறு யாப்பு வகையாகச் சுட்டுப. இலக்கண உரையாசிரியர்தம் கருத்துக்களின் பொருத்தமும் பொருத்தமின்மையும் பின்னர்ச் சுட்டப்படும்.

இப்பாடல்கள் யாப்பு வகையால் ஆசிரியத் தாழிசை களாய் அமைந்துள. ஆய்ச்சியொருத்தி தன் தோழியை விளித்து, தங்கள் குலதெய்வமாகிய கண்ணனைப் பரவும் தேவபாணியாக அமைந்து விளங்கும் பொருண்மையை இவ்விசைப் பாடல்கள் பெற்றுள. இவற்றுள் முறையே கொன்றை, ஆம்பல், முல்லை எனப் பண்களின் பெயர்கள்

சுட்டப்பட்டிருத்தலும் இவை இசைப்பாடல்கள் என்பதை விளக்கும். இப்பாடல்களுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை எனும் இரு வெண்டளைகளும் இடம் பெற்றுள.

2. குறள்வெண்பா

தொழுநைத் துறைவனோ டாடிய பின்னை
அணிநிறம் பாடுகேம் யாம்

எனவரும் குறள்வெண்பா யாப்பில் அமைந்த பாடல் முன்னும் பின்னுமுள்ள இசைப்பாடல்களின் நடுவே இயைபின்றி அமைந்துள்ளது. எனினும் பின்னே வரும் இசைப் பாடல்களின் பொருண்மையைக் கூறுவதாய் உள்ளது. கானல் வரியுள் மாதவியின் பாடற் பகுதி களுக்கு இடையே அவள் பண்ணுப் பெயர்த்துப் பாடிய செய்தியை விளக்கி நிற்கும் கட்டுரைப் பகுதி போன்று, பின்னேயுள்ள இசைப் பாடல்களின் பொருண்மையை விளக்கும் முறையில் இது பாடல் அமைப்பிலேயே இடம் பெற்றதாகலாம். எனினும் அரும்பதவுரைகாரர் உரைக் குறிப்பால் இப்பாடல் பல ஏட்டுப் பிரதிகளில் இல்லை என்பதையும், இடைச்செருகலாகப் பிற்காலத்தில் அமைக் கப்பட்டிருக்கலாம் என்பதையும் அறிகிறோம். இதனுள் அனைத்திடங்களிலும் இயற்சீர் வெண்டளை ஒன்றே இடம் பெற்றுள்ளது.

3. கலிவிருத்தம்

'இறுமென் சாயல்' என்றும், 'வஞ்சஞ் செய்தான்' என்றும், 'தையல்கலையும்' என்றும் தொடங்கும் மூன்று பாடல்கள் கலிவிருத்தம் என்னும் யாப்பில் அமைந்த இசைப்பாடல்களாய் இதன் பின்னர் உள. இப்பாடல்களில் இரண்டாம் அடியே மூன்றும் அடியாக இடைமடக்கி உள்ளது. ஒருவிகற்பத்தால் அமைந்த இப்பாடல்களுள் இரண்டாம் அடி, நான்காம் அடிகளின் இறுதிதோறும் 'என்கோயாம்' எனவரும் வடிவொத்த தொடர் அமைந்

துள்ளது. ஒரு பொருள் மீது மூன்றடுக்கியனவாகவும் இவையுள. இப்பாடல்களில் நேரொன்றாசிரியத்தளை இயற்சீர் வெண்டளை ஆகிய இருவகை ஆசிரியத்தளை களும் அமைந்துள.

4. இரண்டடுக்கல்

'கதிர் திகிரியான் மறைந்த' என்றும் 'மயிலெருத் துறழ்மேனி, என்றும் தொடங்கும் இருபாடல்கள் கலி விருத்தம் என்னும் யாப்பில் அமைந்த இசைப்பாடல் களாய் உள. இவை ஒன்றன் பகுதி என்றும் தலைப் புக்கு உரியவை. ஒருபொருள் மேல் இரண்டடுக்கியவை. முதற்பாடலின் முதலடியின் இறுதிச்சீர் 'இடத்துளான்' என்றும், இரண்டாம் பாடலின் முதலடியின் இறுதிச்சீர் 'வலத்துளான்' என்றும் முரணியன. அங்ஙனமே முதற் பாடலின் இரண்டாமடியின் இறுதிச்சீர், 'வலத்துளான்' என்றும், இரண்டாம் பாடலின் இரண்டாமடியின் இறு திச்சீர் 'இடத்துளான்' என்றும் முரணியன. இப்பாடல் களில் வெண்சீர் வெண்டளை, கலித்தளை, நிரையொன்றா சிரியத்தளை ஆகிய முத்தளைகளும் அமைந்துள.

'ஒன்றன் பகுதி' எனவரும் இப்பாடல்களின் தலைப் புக்கு 'ஒற்றைத் தாளத்தின் கூறு' என அரும்பதவுரை காரரும் அடியார்க்கு நல்லாரும் உரைப்ப. எனவே இவை தாளவகையோடு குரவை மகளிர் பாடியாடும் சிறப்புப் பொருண்மை உடையவை என்பதை அறியலாம்.

5. தரவு கொச்சகக் கலிப்பா

குரவைக் கூத்தினுள் பங்கெடுத்துப் பாடியாடும் ஆய்ச்சியரை மாதரியின் கூற்றால் இளங்கோவடிகள் ஏத்திப்புகழும் பகுதியே 'ஆடுநர்ப்புகழ்தல்' என்னும் தலைப்பில் அமைந்த தரவு கொச்சகக் கலிப்பா என்னும் யாப்பு வகைக்கு உரிய பாவாகும். இப்பாவில் தரவு,

தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்கள் அமைந்துள. தரவுப் பகுதியில் வெண்சீர் வெண்டளை, கலித்தளை ஆகிய இருவகைத் தளைகள் இடம் பெற்றுள.

தரவுக்குப் பின்னர், 'எல்லா நாம்' என்வரும் தனிச் சொல்லை அடுத்து குறள்வெண்பா யாப்பில் அமைந்த வெள்ளைச் சுரிதகம் உள்ளது. இதில் இயற்சீர் வெண்டளை ஒன்று மட்டுமே அனைத்திடங்களிலும் பயின்றுள்ளது. 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும், என வரும் தொடர் அமைப்பை ஒத்துப் 'புள்ளூர்க் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்' எனவரும் தொடரமைப்பு அமைந்துள்ளது.

6 உள்வரி வாழ்த்து

உள்வரி வாழ்த்தென்பது கண்ணன் பாண்டியனாகவும் சோழனாகவும் சேரனாகவும் உள்வரிக் கோலம் பூண்டு வந்து மன்னுயிரை வாழ்வித்தான் எனப் பாராட்டிக் கூறும் பொருண்மையது. 'உள்வரி வாழ்த்தென்பது பிறிதோர் உருவம் கொண்டும் கொள்ளாதும் வாழ்த்து வது' எனவரும் அரும்பதவுரைகாரர் உரைப்பகுதியில் இடைச்சிதைவுற்றது.

திருவுடை மன்னரைத் திருமாலாக எண்ணிப்பாடு வது பூவைநிலை என்னும் புறத்துறையின் இலக்கணம். அடியார்க்கு நல்லார் இப்பாடல்களின் விளக்கவுரையின் இறுதிப் பகுதியில் 'இவை மூன்றும் பூவை நிலை' எனச் சுட்டியுள்ளமையால் இப்பாடல்கள் மூன்றும் இப்புறத் துறைக்கு உரியனவாம் என்பது பெறப்படும். டாக்டர் உ. வே. சா. வும் 'கோவா மலையாரம் முதலிய மூன்றும் தென்னவன் முதலியோரை மாயோனாகக் கூறியது' எனக் குறிப்பிடுவர்[55].

55. டாக்டர் உ, வே. சா-ஆய். குர-உரைக் குறிப்பு (29)

இவை மூன்றும் கலிவிருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகையால் ஒரு பொருள் மீது மூன்றடுக்கி வந்த இசைப்பாடல்கள். இப்பாடல்களில் இரண்டாம் அடியே மூன்ரும் அடியாகவும் இடைமடக்கிய சிறப்பையும், பாடலின் இறுதிதோறும் 'என்பரால்' என்பது ஈற்றில் வரும் சிறப்புச் சொல்லாக வருவதையும் காணலாம். இப்பாடல்களில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண் டளை ஆகிய வெண்டளைகளே இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

7. முன்னிலைப் பரவல்

இறைவனை முன்னிலையாக வைத்து வாழ்த்தும் முறையில் பாடப் பெறுவது முன்னிலைப் பரவல். முன் னிலைப் பரவல் என்னும் தலைப்பில் அமைந்த மூன்று பாடல்களும் கலிவிருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகையில் அமைந்த இசைத் தமிழ்ப் பாடல்கள். தேவ பாணியாய் வரும் இவை மூன்றும் ஒருபொருள்மீது மூன்று அடுக்கியனவாயுள. பாடலின் இறுதிதோறும் 'மாயமோ மருட்கைத்தே' எனவரும் சொற்கள் சிறப்புச் சொற்களாயுள. பாடல்கள் மூன்றும் இருவிகற்பத்தால் இயன்றுள. இப்பாடல்களில் வெண்சீர் வெண்டளை, கலித்தளை, இயற்சீர் வெண்டளை, நிரையொன்ருசிரியத் தளை ஆகியனவுள. இரண்டாம் பாடலில் ஓரிடத்தில் மட்டும் ஒன்றிய வஞ்சித்தளையும் அமைந்துள்ளது.

8. படர்க்கைப் பரவல்

இறைவனைப் படர்க்கையிடத்து வைத்துப் பாராட்டிக் கூறும் பொருளமைதி உடையவை 'படர்க்கைப் பரவல்' என்னும் தலைப்பில் அமைந்த இசைப்பாடல்கள். இங்குப் பயின்ற இசைப்பாக்கள் மூன்றும் யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் இயற்றமிழ்ப் பாவகைக்கு உரியவை. நச்சினர்க்கினியர் யாப்பினுல் வேறுபட்ட

கொச்சகவொருபோகுக்கு இப்பகுதியைச் சான்றுகக் காட்டி 'இவை படர்க்கைப் பரவலாய் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி நான்கடி இற்றபின் ஓரடிமிக்கு வந்தன'[56] என்பர். இப்பாவகை,

வேயே திரண்மென்றோள் வில்லே கொடும்புருவம்
வாயே வளர்பவள மாந்தளிரே மாமேனி
நோயோ முலைசுமப்ப வென்றோர்க் கருகிருந்தார்
ஐயோ விவளொருத்தி பேடியோ வென்றார்
எரிமணிப்பூண் மேகலையார் பேடியோ வென்றார் 57

எனப் பிற்காலப் பெருங்காப்பியங்களுள் பயின்று வந்து இருப்பது அறியத்தக்கது.

இப்பாவினுள் முதல் நான்கு அடியும் ஒருவிகற்ப மாயும், இறுதி அடி ஒருவிகற்பமாயும் அமைந்துள்ளது. மேலும் நான்காம் அடியே சிறிது வேறுபட்ட நிலையில் ஐந்தாம் அடியாகவும் இடைமடக்கியது. இப்பாக்களுள் வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை ஆகியனவே பெரும்பாலும் பயின்றுள. முதற்பாடலில் ஏழிடங்களில் கலித்தளையும் மூன்றும் பாடலில் ஓரிடத்தில் நேரொன்று சிரியத்தளையும் பயின்றுள. மூன்று பாடல்களும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியவை.

9. தனிச்சொல்

முன்னுள்ள படர்க்கைப் பரவல் என்னும் பகுதிக்கும் பின்னுள்ள அரச வாழ்த்தாக வரும் இசைப்பாடலுக்கும் இடையே தொடர்புச் சொல்லாக 'என்றியாம்' எனவரும் சொல் இடம் பெற்றுள்ளமையால் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகவும் இக்காதை விளங்குகின்றது.

56. தொல். செய். நச்சி. நூ. 149 உரை
57. சீவகசிந்தாமணி 652

10. அரச வாழ்த்து

'கோத்த குரவையுள்' எனத் தொடங்கும் பகுதி முதலாக 'தென்னவன் கடிப்பிகு முரசே' எனவரும் இறுதிப் பகுதிவரை உள்ளது, அரச வாழ்த்து என்னும் பொருண்மைக்கு உரிய இசைப் பாடலாகும். இப் பாடல் நாற்சீர் கொண்ட அடிகளாய், இறுதியில் ஏகாரத்தால் இற்ற நிலைமண்டில ஆசிரிய யாப்பால் அமைந்தது. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றா சிரியத்தளை ஆகிய நால்வகைத் தளைகள் இதனுள் இடம் பெற்றுள.

கீழ்வரும் பட்டியல், ஆய்ச்சியர் குரவையில் இடம் பெற்ற பாவகைகளை விளக்கும்.

எண்	பாடல்	பாவகை-இயல், இசை, நாடகம்	சிறப்புக்கள்
1.	கயலெழுதிய... தோன்றுமன்	குறளடி வஞ்சிப்பா; இயற்பா	நாலசைச்சீர் பயின்றது
2.	குடப்பால்... ஒன்றுண்டு மூன்றுபா	குறள், செந்துறை; இயற்பா	ஒருபொருள் மேல் மூன்றடுக்கியது
3.	கருப்பம்	உரைநடை; நாடகக்கூறு	கேட்டுக்குக் கருப்ப மாய செய்திகளை விளக்குவது
4.	கொளு	யாப். கொச். ஒருபோகு; இயற்பா	உரையும் பாட்டும் விரவியது; உரைப் பாட்டுமடை என்னும் பெயருக்குரியது; கொச்சகம், தனிச் சொல், சுரிதகம்- உறுப்புக்கள்

எண்	பாடல்	பாவகை-இயல், இசை, நாடகம்	சிறப்புக்கள்
5.	மாயவன்...... பாட்டெடுப்பாள்	யாப். கொச் ஒருபோகு; இயற்பா	கொச்சகம், தனிச் சொல், கொச்சகம், தனிச்சொல், சுரிதகம்-உறுப்புக்கள்
6.	கன்றுகுணிலா...தோழீ; மூன்றுபா	ஆசிரியத்தாழிசை; இசைப்பாக்கள்	தேவபாணி
7.	தொழூநை...	குறள்வெண்பா	இடைச்செருகல்-அரும், உரை. குறிப்பு
8.	இறுமென்...என் என்கோயாம்; மூன்றுபா	கலிவிருத்தம்; இசைப்பாக்கள்	ஒருபொருள்மீது மூன்றடுக்கல்
9.	ஒன்றன்பகுதி; இருபாடல்கள்	கலிவிருத்தம்; இசைப்பாக்கள்	ஒருபொருள்மீது இரண்டடுக்கியவை
10.	ஆடுநர்ப் புகழ்தல்	தரவுகொச். கலிப்பா;இசைப்பா	—
11.	உள்வரி வாழ்த்து	கலிவிருத்தம்; இசைப்பாக்கள்	பூவைநிலை; மூன்றடுக்கல்
12.	முன்னிலைப் பரவல்	கலிவிருத்தம்; இசைப்பாக்கள்	மூன்றடுக்கியன
13.	படர்க்கைப் பரவல்	யாப். கொச். ஒருபோகு; இசைப்பாக்கள்	,,
14.	தனிச்சொல்	நாடகக்கூறு	—
15.	அரச வாழ்த்து	நிலைமண்டில ஆசிரியப்பா; இசைப்பா	—

இங்ஙனம், இயற்றமிழ்ப் பாவகைகளும் இசைத் தமிழ்ப் பாவகைகளும், உரை என்னும் நாடகக் கூறும் விரவிய தொகுதியாய் இக்காதை அமைந்துள்ளது.

18. துன்பமாலை

(யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகுப் பாக்கள்)

துன்பமாலைப் பகுதியின் பாவகையை அடியார்க்கு நல்லார், நாட்டார், பொ. வே. சோமசுந்தரனுர் ஆகியோர் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்பர். டாக்டர் வ. சுப. மாணிக்கனுர் 'கொச்சகக்கலி' எனப் பொதுவகையால் குறிப்பர்.

துன்பமாலைப் பகுதியை ஒரேவகைப் பாவகையாகக் கொள்வதைவிட இரு யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகுக்களாகக் கொள்ளுதலே நேரிது. அதற்கு ஏற்ற வகையில் அப்பாக்களின் உறுப்புகளும் இக் காதையுள் சிறப்புற அமைந்துள.

முற்கூறு

'ஆங்கு' என்னும் தனிச்சொல் முதல் 'சொல்லாடும் தான்' என முடியும் பகுதிவரை உள்ள முதற்கூறு தனித்து வந்த யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொரு போகு என்னும் யாப்பு வகையில் அமைந்த பா.

'ஆங்கு' என்னும் தனிச்சொல் இப்பாடலின் தொடக் கத்தில் தொடர்புச் சொல்லாக அமைந்துள்ளது. இத் தனிச் சொல்லை அடுத்து 'ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்' எனத் தொடங்கும் இரண்டாம் அடிமுதல் 'விரைவொடு வந்தாளுளள்' எனவரும் ஏழாம் அடிவரை இப்பாவின் கொச்சகமாம். பஃறொடை வெண்பா அமைப் பினதாய இக்கொச்சகம் ஈற்றடி முச்சீராய், ஏனையடி

நாற்சீராய் அமைந்துள்ளது. இதனுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகை வெண்டளைகளும் அமைந்துள்ளன.

கொச்சகத்தை அடுத்து 'அவடான்' எனவரும் தனிச்சொல் முன்னுள்ள கொச்சகத்திற்கும் பின்னுள்ள வெள்ளைச் சுரிதகத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. தனிச்சொல்லுக்குப் பின்னர்க் குறள் வெண்பா யாப்பினதாகிய வெள்ளைச் சுரிதகம் அமைந்துள்ளது.

சொல்லாடாள் சொல்லாடா நின்றாளந் நங்கைக்குச்
சொல்லாடும் சொல்லாடும் தான்

என்பது சுரிதகப்பகுதி. இது ஏந்திசைச் செப்பலோசையாய் அமைந்துள்ளதும் வந்த சொல்லே மீண்டும் இரட்டித்து வர அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதனுள் அனைத்திடங்களிலும் வெண்சீர் வெண்டளையே பயின்று வந்துள்ளது.

இரண்டாம் கூறு

துன்பமாலையின் இரண்டாம் கூறும் முதற் கூற்றினைப் போன்று தனித்து வந்த யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகை. 'எல்லாவோ' என வரும் தனிச்சொல் முதல் 'ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்' எனவரும் பகுதிவரை இப்பாவகைக்கு உரியது.

மூன்றடுக்கிய தாழிசைகள்

'எல்லாவோ' எனவரும் தனிச்சொல்லை அடுத்து நாற்சீர் நான்கடித் தாழிசைகள் மூன்று ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்துள்ளன. இவை ஒரு பொருள் மீது மூன்றடுக்கி வந்தமைக்குச் சான்றாகப் பாடல்தோறும் இரண்டாம் அடியின் இறுதியில் 'என்நெஞ்சன்றே' என்ற

சிறப்புத் தொடரும், மூன்றுமடியின் இறுதியில், 'என் நெஞ்சாயின்' என்ற சிறப்புத் தொடரும், நான்காமடியின் இறுதியில் 'சொன்னது எவன் வாழியோ தோழி' என வரும் சிறப்புத் தொடரும் இடம் பெற்றுள்ளன.

இடைமடக்குச் சிறப்பு

சணவனைப் பிரிந்து கலங்கும் நெஞ்சுடன் ஊதுலை தோற்க உயிர்த்து அவலம் கொண்டு அழியும் கண்ணகியின் எண்ணத்தை வண்ணமுற விளக்கும் இப்பகுதியில் பாடல்தோறும் இரண்டாம்அடியே மூன்றுமடியாய் இடைமடக்கியதும் காணலாம்.

ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே
ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சாயின்

எனவும்,

அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சன்றே
அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சாயின்

எனவும்,

வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சாயின்

எனவும் இடைமடக்குச் சிறப்பு இப்பாடல்களில் அமைந்துள்ளது. இத்தாழிசைகளில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நிரையொன்றாசிரியத்தளை ஆகிய மூவகைத் தளைகள் இடம் பெற்றுள.

கொச்சகங்கள்

இத்தாழிசைகளை அடுத்து 'சொன்னது' என்னும் தனிச்சொல்லும் அதன் பின்னர் 'அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்' எனத் தொடங்கும் நாற்சீர் நான்கடிக் கொச்சகம் ஒன்றும் உள்ளன. இம்முறையிலேயே அடுத்தும் 'எனக்கேட்டு' எனவரும் தனிச்சொல்லும்,

'பொங்கியெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்' எனத் தொடங்கும் நாற்சீர் நான்கடிக் கொச்சகம் ஒன்றும் அமைந்துள்ளன. தனிச்சொற்களின் பின்னர் அமைந்த இவ்விரு கொச்சகங்களும் யாப்பினுல் வேறுபட்ட இக் கொச்சக வொருபோகின் கொச்சக உறுப்புக்களாக விளங்குவன.

இவ்விரண்டனுள், முதற்கொச்சகத்தில் இரண்டாம் அடியே மூன்ரும் அடியாய் இடைமடக்கி அமைந் துள்ளது. இரு கொச்சகங்களும் ஒரு விகற்பத்தால் அமைந்தவை. முதற் கொச்சகத்துள் இயற்சீர் வெண் டளை, வெண்சீர் வெண்டளை, நிரையொன்ருசிரியத்தளை ஆகியனவும், இரண்டாம் கொச்சகத்தில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகளும் இடம் பெற்றுள்ளன.

தாழிசைகள்

அடுத்து, 'இன்புறு தங்கணவர்' என்றும் 'நறைமலி வியன்மார்பின்' என்றும், 'தம்முறு பெருங்கணவன்' என்றும் தொடங்கும் ஒருபொருள்மேல் மூன்றடுக்கிய தாழிசைகள் அமைந்துள. இம்மூன்று தாழிசைகளும் ஒருவிகற்பத்தால் அமைந்தவை. இவற்றுள் பாடல் தோறும் இரண்டாம் அடியின் இறுதியில் 'மகளிரைப் போல்' என்ற தொடரும் மூன்ரும் அடியின் இறுதியில் 'தவறிழைப்ப' என்ற தொடரும் நான்காம் அடியின் இறுதியில் 'அழிவலோ' என்ற சொல்லும் சிறப்புற அமைந்துள. இத்தாழிசைகளுள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நிரையொன்ருசிரியத்தளை, கலித் தளை ஆகிய நால்வகைத் தளைகள் இடம்பெற்றுள்ளன. எனினும் இரண்டாம் தாழிசையில் இயற்சீர் வெண்டளை இடம் பெறவில்லை.

தனிச்சொல்லும் கொச்சகமும்

இத்தாழிசைகளின் பின்னர் 'காணிகா' என்ற தனிச் சொல்லும் அதனை அடுத்து 'வாய்வதின் வந்த குரவை யின் வந்தீண்டும்' எனத் தொடங்கும் ஏழடியாலாய கொச்சகம் ஒன்றும் இடம் பெற்றுள. இக்கொச்சகத்துள் 'ஆய மடமகளி ரெல்லீரும் கேட்டீமின்' என்ற இரண்டாம் அடியே 'ஆய மடமகளி ரெல்லீரும் கேட்டைக்க' என மூன்றும் அடியாக மீண்டும் வந்து இடை மடக்கியது. மேலும் ஐந்தாம் அடியின் இறுதிப் பகுதியில் 'கள்வனோ என்கணவன்' எனவரும் தொடர் ஆறும் அடியின் தொடக்கத்தில் 'கள்வனோ அல்லன்' என அந்தா தித்தும் அமைந்துள்ளதைக் காண்கின்றோம். இக்கொச் சகத்துள் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை கலித்தளை ஆகிய முத்தளைகள் இடம் பெற்றுள.

பின்வரும் பட்டியல் இப்பகுதியில் அமைந்த பாவகை களின் உறுப்புக்களை விளக்கி நிற்கின்றது.

எண்.	பாவகை	உறுப்புக்கள்
1.	யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகு (ஆங்கு...... சொல்லாடுந்தான்)	தனிச்சொல், கொச்சகம், தனிச்சொல், வெள்ளைச் சுரிதகம்
2.	யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொரு போகு (எல்லாவோ...... ஒருகுரல்)	தனிச்சொல், தாழிசைகள் தனிச்சொல், கொச்சகம் தனிச்சொல், கொச்சகம். தாழிசைகள், தனிச்சொல் கொச்சகம்

இங்ஙனம் துன்பமாலைப் பகுதி தொடர்ந்து வரும் ஒரே வகைப் பாவாக இல்லாது, இரு வேறு தனித்தனிப் பாவகைகள் இணைந்து நிற்கும் பகுதியாக விளங்குகின்றது.

19. ஊர்சூழ்வரி

(அயன் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா)

கண்ணகி மதுரை நகர மக்களுக்குத் தன் துன்பம் கூறிப் பின்னர் 'தீவேந்தன்தனைக் கண்டித் திறங் கேட்பல் யான்' என அரசன் செழுங்கோயில் வாயில்முன் சென்ற செய்தியைத் தொகுத்து உரைக்கும் பகுதியே ஊர்சூழ்வரி. இது யாப்பு வகையில், பலவகை உறுப்புக்கள் மயங்கி வரும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாக விளங்குகின்றது.

இப்பகுதியின் பாவமைப்பை அடியார்க்குநல்லார் அயன் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், நாட்டார், பொ. வே. சோ, ஆகியோர் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், டாக்டர் வ. சுப. மாணிக்கனார் 'கொச்சகக் கலி' என்றும் குறிப்பிடுவர்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, இயல் மயங்கிசைக் கொச்சகம், அயல் மயங்கிசைக் கொச்சகம் என இரு வகைப்படும் என்பதை யாப்பருங்கல விருத்தியால்[58] அறியலாம். கலிக்கு ஓதப்பட்ட உறுப்புக்களோடு மட்டும் மயங்கி வந்த பாவகை இயல் மயங்கிசைக் கொச்சகம் என்றும், பிற பாவினோடு மயங்கி வந்தது அயல் மயங்கிசைக் கொச்சகம் என்றும் கூறப்படும். 'காமர் கடும்புனல்' எனத் தொடங்கும் கலிப்பாடலில்[59] வெண்பா அடியும் ஆசிரிய அடியும் விரவி வந்துள்ளமையால் இதனை அயல் மயங்கிசைக் கொச்சகத்திற்குச் சான்றாகக் காட்டுப. மயங்கிசைக் கொச்சகங்களில் நேரீற்று இயற்சீர், நிரைநடுவாகிய வஞ்சியுரிச் சீர், ஐஞ்சீரடி ஆகியனவும் ஒரோ வழி வருதல் உண்டு.

58. யாப். விருத்தி, 33 உரை
59. கலி. 39

வெண்பா அடிகள்

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகிய இப்பகுதியுள்,

அழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையா டன்கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை
யாற்பற்ற

எனவரும் அடிகளும் பிறவும் வெண்பா அடிகளாகவே மயங்கி இருத்தல் காணலாம். இங்ஙனம் வேற்று அடிகள் விரவி உள்ளமையால் இப்பாவகை அயல் மயங்கிசைக் கொச்சகக் கலி என அழைக்கப் பெற்றது.

அந்தாதி அமைப்பு

இப்பகுதியின் தொடக்கம் சென்ற பகுதியின் தொடர்ச்சியாகக் கதைப் போக்கில் அமைந்து உள்ளது போன்று, சென்ற பகுதியின் இறுதி அடியில் பயின்ற சொல்லே இப்பகுதியின் தொடக்கச் சொல்லாகவும் அமைந்து அந்தாதி அமைப்பினையும் பெற்று விளங்குகின்றது.

'ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொரு குரல்' என வரும் முற்பகுதியின் ஈற்றடி 'என்றனன் வெய்யோன்' என அந்தாதி அமைப்பில் இப்பகுதியின் தொடக்க அடியாய் அமைந்தது.

ஈதொன்று - தாழிசைகள்

ஊர்சூழ் வரியின் தொடக்கத்தில் அமைந்த பதினான்கு அடிகளை நான்கடித் தாழிசை ஒன்றாகவும் ஈரடித் தாழிசைகள் ஐந்தாகவும் அமைத்துக் கொள்ளல் வேண்டும். பதினான்காம் அடியில் அதாவது ஐந்தாம் ஈரடித் தாழிசையின் இரண்டாம் அடி,

'நோதக்க செய்தாளென் றென்ன லிதுவொன்றென்று'

என அமைந்துள்ளது. இறுதிச் சீரில் அமைந்த 'என்று'

என்பதை இவ்வடியோடு சேர்த்துக் கூறுது தனியே தனிச் சொல்லாக அமைத்துக் கொள்வது இத்தாழிசைகளின் வடிவை நன்கு புலனுக்கும். 'என்று' என்னும் இத்தனிச் சொல், முன்னுள்ள 'ஈதொன்று' என்ற சொல் முடிவு பெற்ற தாழிசைகட்கும் பின்னுள்ள 'இதுவென்கொல்' என்னும் சொல் முடிவு பெற்ற தாழிசைகட்கும் இணைப்புச் சொல்லாய் விளங்குகின்றது.

இத்தாழிசைகள் ஆறும் ஈற்றில் 'ஈதொன்று' என வரும் சிறப்புச் சொல்லைப் பெற்றுள்ளன. நான்காம் தாழிசையின் இரண்டாம் அடி, ஐந்தாம் தாழிசையின் முதல் அடியாகவும், ஐந்தாம் தாழிசையின் இரண்டாம் அடி, ஆறும் தாழிசையின் முதல் அடியாகவும் இறுதி மடக்காய் அந்தாதித்து அமைந்துள்ளதும் இவண் சுட்டத்தக்கது. முதல் தாழிசையுள் மட்டும் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகியனவற்ரேடு ஓரிடத்தில் கலித்தளையும் பயின்று வந்துள்ளது. எஞ்சிய தாழிசைகளில் முன்னர்க் குறிப்பிட்ட இரு தளைகள் மட்டுமே பயின்றன.

இதுவென்கொல்-தாழிசைகள்

என்று எனவரும் தனிச்சொல்லுக்குப் பின்னர் 'இதுவென்கொல்' என்ற முடிபுடைய தாழிசைகள் அமைந்துள. நாற்சீர் நான்கடித் தாழிசைகள் மூன்று ஒருபொருள்மேல் அடுக்கியனவாய் இங்கு அமைந்துள. கண்ணகியின் சீற்றத்தையும் கோலத்தையும் கண்ட ஊர் மக்கள் 'இதுவென்கொல்' என வியப்பும் அச்சமும் தோன்ற உரைத்த பொருண்மை உடையவை இத்தாழிசைகள். இறுதி தோறும் 'இதுவென்கொல்' என்னும் தொடர் இவற்றில் சிறப்புற அமைந்துள்ளது. இரண்டு, மூன்று தாழிசைகளில் இரண்டாம் அடியின் இறுதியிலும் இவ் வியப்புச் சொற்கள் ஈற்றுச் சொற்களாக இடம் பெற்றுள. இத்தாழிசைகளில் முதலாம் தாழிசையில் இயற்சீர்

வெண்டளை, வெண்சீர் வெண்டளை, ஆகியனவற்றோடு ஓரிடத்தில் கலித்தளையும் அமைந்துள்ளது. எஞ்சிய தாழிசைகளில் மேலே குறிப்பிட்டவற்றுள் கலித்தளை தவிர எஞ்சிய தளைகளே இடம் பெற்றுள.

தனித்தாழிசை

அடுத்து, தனித்து நான்கடியால் அமைந்த தாழிசை ஒன்று இருவிகற்பத்தால் அமைந்துள்ளது. வம்பப் பெருந் தெய்வம் போல மதுரை நகரில் சுற்றித் திரியும் கண்ணகிக்கு மதுரையில் வாழும் கம்பலை மக்கள் அவள் கணவன் வெட்டுண்டு கிடந்த இடத்தைக் காட்டும் பொருண்மை உடைய இத்தாழிசையுள் இயற்சீர் வெண் டளையும் வெண்சீர் வெண்டளையும் இடம் பெற்றுள.

சுரிதகம்

தாழிசைகளை அடுத்து 'மல்லன்மாஞாலம்' எனத் தொடங்கும் வெள்ளைச் சுரிதகம் அமைந்துள்ளது. இது இன்னிசை வெண்பா யாப்பினது. இரண்டாம் அடியின் தொடக்கம் 'செவ்வென் கதிர் சுருங்கி' என்றுள்ளது. எனினும் 'செல்லும் கதிர் சுருங்கி' எனப் இப்பகுதிக்கு அமைந்துள்ள பாடவேறுபாடே சிறந்த பாடமாகும். அங்ஙனம் கொள்ளின், மல்லல்-செல்லும்-புல்லென்-ஒல்லென் என எதுகைநயம் சிறப்புற அமையும். இப் பகுதியில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகள் இடம் பெற்றுள.

தனித்தாழிசைகள்

சுரிதகப் பகுதியை அடுத்து, காலையில் கொழுநனைத் தழுவி அனுப்பிய கண்ணகி, மாலையில் அவன் உயிரற்ற உடலைக் கண்டு கடுந்துயர் அடைந்தாள் என்னும் பொருண்மை உடையதாய் நாற்சீர் நான்கடித் தாழிசை

ஒன்று இடம் பெற்றுள்ளது. இதனுள்ளும் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகள் அமைந்துள.

உரையாரோ-தாழிசைகள்

தனித்தாழிசையை அடுத்து, உரையாரோ என்னும் சொல் முடிபினைப் பெற்ற மூன்று நாற்சீர் நான்கடித் தாழிசைகள் இடம் பெற்றுள. இத்தாழிசைகள் மூன்றும் ஒருவிகற்பத்தால் அமைந்தவை. இரண்டாம் அடியின் இறுதிதோறும் ‘கிடப்பதோ’ என்ற ஈற்றுச் சொல்லையும் நான்காம் அடியின் இறுதிதோறும் ‘உரையாரோ’ என்ற ஈற்றுச் சொல்லையும் பெற்று விளங்குபவை. மூன்று தாழிசைகளும் கண்ணகியின் புலம்பல் என்னும் ஒரு பொருள்மீது மூன்றடுக்கியன. நிரையொன்றாசிரியத்தளை, கலித்தளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை ஆகிய நால்வகைத் தளைகள் ஈண்டு இடம் பெற்றுள. கண்ணகி தனிமகளாகக் கணவனை இழந்து புலம்பிய இப்பாடல்கள் முதுபாலை என்னும் புறத்துறைக்கு உரியவை.

உண்டுகொல்-தாழிசைகள்

ஈரடித் தாழிசைகளையும், நான்கடித் தாழிசைகளையும் வரைந்த இளங்கோவடிகள் இவண் மூவடித் தாழிசைகளையும் மொழிந்தனர். இத்தாழிசைகள் மூன்றடியாய் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்துள. இவற்றில், முதல் அடியும் மூன்றும் அடியும் ஒத்து முதல் மடக்காய் வந்துள்ள சிறப்பும் உண்டு. கண்ணகிக்கு ஏற்பட்ட இகழ்ச்சியாலும் ஐயத்தாலும் சொற்கள் இரட்டிக்கவும் அடி இடை விட்டு இரட்டிக்கவும் காண்கின்றோம். இத் தாழிசைகளில் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் இடம் பெற்றுள.

தரவு

'என்றிவை சொல்லி அழுவாள்' எனத் தொடங்கும் பகுதி முதல் 'எழுதெழில் மலருண்கண் இருந்தைக்க எனப் போனான்' எனவரும் பகுதி ஈறாக இம்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவின் தரவு என்னும் உறுப்பாகும். இப்பகுதியில் இரண்டிரண்டு அடிதோறும் வினையெச்சங்கள் தொடர்ந்து சென்று இறுதியில் உள்ள வினையோடு சென்றியைந்து பொருள் முடிவு கொண்டன. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, நிரையொன்றாசிரியத்தளை ஆகியன இவண் பயின்றுள.

இத்தரவினுள் இரண்டாம் அடியின் இறுதிச்சீர் 'தழீஇக் கொள்ள' என நான்கு அசைச் சீராக அமைந்திருப்பினும், 'சீரும் தளையும் சிதையின் சிறிய இ, உ அளபோடு ஆரும் அறிவர் அலகு பெருமை'[60] எனவரும் யாப்பியலார் விதிப்படி, அலகு காரியம் இல்லையென ஒழித்து மூவசைச் சீராகவே கொள்ளப்படும்.

தாழிசை

தரவையடுத்து அமைந்த தாழிசை ஒன்று நான்கு அடியாய்த் தனித்து வந்துள்ளது. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, நிரையொன்றாசிரியத் தளை ஆகிய தளைகள் இதனுள் பயின்றுள.

சுரிதகம்

இறுதியில் 'என்றாள் எழுந்தாள்' எனத் தொடங்கும் பகுதி முதல் 'செழுங்கோயில் வாயில்முன்' என முடியும் பகுதி ஈறாக இம்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவின் சுரிதகப் பகுதியாம். இப்பகுதி நாற்சீர் நான்கு அடியாய் நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் பாவகைக்கு உரியதாய் அகவற் சுரிதகமாய் அமைந்த பகுதி. சுரிதகத்துக்கு

60. யாப். காரிகை ஒழிபு. நூ. 1

முன்னர்த் தனிச்சொல் அமைவது கலிப்பாவின் வடிவம் ஆயினும், இம்மயங்கிசைக் கொச்சகத்துள் தனிச்சொல் இன்றியே சுரிதகம் அமையக் காண்கின்றோம். இதனுள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பயின்றுள.

கீழ்வரும் பட்டியல் இம்மயங்கிசைக் கொச்சகக் கலிப் பாவின் உறுப்புக்களை விளக்கி அமைப்பைத் தெளிவு படுத்தும்.

பாவகை	உறுப்பு	சிறப்பு
அயன்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா	ஈதொன்று; தாழிசைகள்	நான்கடியாலொன்றும், ஈரடியால் ஐந்தும் அமைந்துள.
	தனிச்சொல்	
	இதுவென்கொல் தாழிசைகள்	நான்கடித்தாழிசை மூன்று; அடுக்கிவந்தன.
	தனித்தாழிசை	நாற்சீர் நான்கடி
	சுரிதகம்	இன். வெண். யாப்பு
	தனித்தாழிசை	நாற்சீர் நான்கடி.
	உரையாரோ; தாழிசைகள்	நாற்சீர் நான்கடித் தாழிசை மூன்று; அடுக்கி வந்தன
	உண்டுகொல்; தாழிசைகள்	மூன்றடி மூன்று தாழிசை; அடுக்கி வந்தன
	தரவு	எட்டடி
	தனித்தாழிசை	நாற்சீர் நான்கடி
	சுரிதகம்	அகவல். நிலை. ஆசிரியம்

இங்ஙனம் ஊர்சூழ்வரியாகிய இம்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா தாழிசைகளும் தனிச்சொற்களும்

தரவும் சுரிதகமும் பெற்று வேற்றடி விரவப்பெற்ற அயன்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாய் அமைந்து உள்ளது.

20. வழக்குரைக்காதை
(உறழ்கலி)

உறழ்கலி என்பது தொல்காப்பியரால் சுட்டப்பெறும் கலிப்பாவின் வகைகளில் ஒன்று. இருவர் உரையாடும் முறையில் அமைவது இப்பாவின் அமைப்புநிலை. பிற்காலத்தில் வழக்கிழந்துபோன இப்பாவகை வழக்குரை காதையில் உயிர்ப்புடன் விளங்குகின்றது. வழக்குரை காதைப் பகுதி அனைத்தும் உறழ்கலி என்னும் பாவகைக்கு உரியதே.

அடியார்க்குநல்லார் உரைப்பகுதி இக்காதை முதலாக நூல் முழுமைக்கும் கிடைக்கவில்லை. இப்பகுதியை மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என நாட்டார் குறிப்பிடுவர். இதனை உறழ்கலி என்னும் பாவகையாக முதலில் சுட்டிய பெருமை இரட்டைக் காப்பியப் பதிப்பிற்கும், பதிப்பாளர் டாக்டர் வ. சுப. மாணிக்கனாருக்கும் உரியது.

தனிச்சொல்லும்தாழிசையும்

காதையின் தொடக்கத்தில் 'ஆங்கு' என்னும் தனிச்சொல் அமைந்துள்ளது. பின்னர் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கிய தாழிசைகள் மூன்று அமைந்துள்ளன. இத்தாழிசைகள் நாற்சீர் ஈரடி மூன்றாய் இறுதிதோறும் 'காண்பென் காண் எல்லா' எனவரும் தொடரைப் பெற்று விளங்குபவை. இவற்றுள் இயற்சீர் வெண்டளை, வெண் சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகள் இடம் பெற்றுள்ளன.

தாழிசை-கருப்பம்

அடுத்து, நான்கடித் தாழிசை ஒன்று 'கருப்பம்' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. ஆய்ச்சியர் குரவையுள் கருப்பம் என்னும் பகுதி கேட்டுக்குக் கருப்பமாயவற்றை உரை நடையால் விளக்கி நிற்றல் போல, இங்குக் கேட்டுக்குக் கருப்பமானவற்றைத் தாழிசைப் பகுதி விளக்கி நிற்கின்றது,

இத்தாழிசையுள் 'மறிந்து வீழ்தரும்' 'இரவு வில்லிடும்' ஆகியன நிரை நடுவாகிய வஞ்சியுரிச் சீர்கள் 'திசையு மதிர்ந்திடும்' என்பது நாலசைச்சீர். இவற்றை இலக் கணத்துக்கேற்ப ஐஞ்சீரடியாகவும் முடுகியலடி யாகவும் அமைத்துக் கொள்வது சிறப்புடைத்து. அங்ஙனம் கொள்ளவே, இத்தாழிசைப்பகுதி,

செங்கோலும் வெண்குடையும் செறிநிலத்து மறிந்து வீழ்தரும்
நங்கோன்றன் கொற்றவாயில் மணிநடுங்க நடுங்குமுள்ளம்
இரவு வில்லிடும் பகல்மீன்விழும் இருநான்கு திசையும் அதிர்ந்திடும்
வருவதோர் துன்பமுண்டு மன்னவற் கியாமுரைத்தும்

என அமையும். முதலடி ஐஞ்சீரடியாகவும், மூன்றுமடி அறுசீரடியாக-முடுகியலடியாகவும் அமைந்துள்ளன.

'மன்னவற் கியாமுரைத்தும்' என இறுதிப் பகுதியை அமைத்துக் கொள்ளவே அடுத்து 'என' என்பது தனிச்சொல்லாக அமையும். இத்தாழிசையுள் ஒன்றுத வஞ்சித்தளை ஒன்று தவிர ஏனைய அறுதளைகளும் இடம் பெற்றுள.

அம்போதரங்கம்

'என' என்னும் தனிச்சொல்லை அடுத்து அமைந் துள்ள பகுதி அம்போதரங்கம் என்னும் கலியுறுப்பாகக்

கொள்ளுதற்கு உரியது. உறழ்கலியுள் பயின்று வரும் அம்போதரங்க உறுப்பாகிய இப்பகுதி,

ஆடி யேந்தினர் கலனேந்தினர்
அவிர்ந்து விளங்கும் அணியிழையினர்
கோடி ஏந்தினர் பட்டேந்தினர்
கொழுந்தி ரையலின் செப்பேந்தினர்
வண்ண மேந்தினர் சுண்ணமேந்தினர்
மான்ம தத்தின் சாந்தேந்தினர்
கண்ணி யேந்தினர் பிணையலேந்தினர்
கவரி யேந்தினர் தூபமேந்தினர்

எனவரும். முச்சீர் எட்டு அம்போதரங்கமாக இப்பகுதி விளங்குகின்றது.

சுரிதகம்

அடுத்துள்ள பகுதி ஆசிரியச் சுரிதகமாகக் கொள்ளும் அமைப்பு உடையது. இச்சுரிதகப் பகுதியை,

கூனும் குறளும் ஊமும் கூடிய
குறுந்தொழி லிளைஞர் செறிந்து சூழ்தர
நரைவி ரைஇய நறுங்கூந்தல
ருரைவி ரைஇய பலர்வாழ்ந்திட
எண்டுநீர் வையங் காக்கும்
பாண்டி யன்பெருந் தேவி வாழ்கென
ஆயமுங் காவலுஞ்சென் றடியீடு பரசியேத்தக்
கோப்பெருந் தேவி சென்றுதன்
தீக்கனாத் திறமுரைப்ப
அரிமா னேந்திய அமளிமிசை யிருந்தனன்
திருவீழ் மார்பிற் றென்னர் கோவே

என இணைக்குறளாசிரிய வடிவுடைய ஆசிரியச் சுரிதகமாகக் கொள்ளுதல் பொருந்தும். இதனை அடுத்து அமைந்த 'இப்பால்' என்பது முன்னுள்ள சுரிதகத்திற்கும் பின்னுள்ள பாட்டுக்கும் இடையே அமைந்த தனிச்சொல். இப்பகுதியில் எழுவகைத் தளைகளும் அமைந்துள.

கூற்றும்மாற்றமும்

கூற்றும் மாற்றமுமாக வருவது பிற்பகுதியாகும். 'வாயிலோயே' எனத் தொடங்கும் பகுதி முதல் ஆறடிகள் கண்ணகி கூற்று. 'வாழி' எனத் தொடங்கும் பகுதி முதல் பதினைந்தடிகள் வாயிற் காவலன் கூறுவது. அடுத்துள்ள ஓரடி மன்னவன் சொல். பின்னர் ஈரடிகள் கவிக்கூற்று. அடுத்து அமைந்த ஈரடிகள் மன்னன் உரை. 'தேராமன்னா' என்பது முதலாகப் பதினான்கடிகள் கண்ணகி சொல். பின்னர் ஈரடிகள் பாண்டியன் உரை. அடுத்து, கண்ணகியின் கூற்றாக ஈரடிகளும் பின்னர் மன்னன் கூற்றாக மூன்றடிகளும் உள. இதற்குப்பின் கவிக்கூற்று ஈரடிகளாகவும் மன்னன் கூற்று ஐந்தடிகளாகவும் உள. இறுதியில் நான்கடிகள் கவிக்கூற்றாகவும் மீட்டும் அமைந்துள. இங்ஙனம் உறழ்கலியின் பிற்கூறு கூற்றும் மாற்றமுமாக அமைந்துள்ளது.

உறழ்கலியுள் கூற்றும் மாற்றமுமாக வருகின்ற பகுதிகள் கொச்சகம் என்றோ பாட்டு என்றோ அழைக்கப் பெறுதல் வேண்டும் என்பதை முறையே இளம்பூரணர் உரைக் குறிப்பாலும் பேராசிரியர் உரைக் குறிப்பாலும் அறியலாம். கூற்றும் மாற்றமுமாய இப்பகுதிகளில் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை ஆகிய ஐவகைத் தளைகள் இடம் பெற்றுள.

இவற்றுள் கண்ணகியின் கூற்று மூன்றிடங்களிலும், வாயிலோன் கூற்று ஒரு இடத்திலும் மன்னவன் கூற்று ஐந்திடங்களிலும், கவிக்கூற்று மூன்றிடங்களிலும் அமைந்துள. கவிக்கூற்றுப் பகுதிகள் தவிர எஞ்சிய பிறகூற்றுப் பகுதிகளின் இறுதிதோறும் தவறாது 'என' என்ற தனிச்சொல் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

மேலும் வாயிலோன் (30), பெண்ணணங்கே (63), ஒள் ளிழை (65) மணிகண்டு (72) ஆகிய நான்கு சொற்கள் சொற்சீரடிகளாகவும் பயின்றுள. சொற்சீரடிகளாகிய இவை முன்னும் பின்னுமுள்ள பகுதிகளைப் பொருட் கோவையுறப் பொருத்திவைக்கும் இணைப்புச்சொற்களாம்.

வாயிற்காவலன் கூற்றுப் பகுதியில் 'கணவனை இழந்தாள் கடையகத்தாளே' என வரும் தொடர் அச்ச உணர்வால் இடைமடக்கி இரட்டித்து வர அமைந்தது.

கீழ்வரும் பட்டியல் உறழ்கலியின் பாவமைப்பை விளக்கி நிற்கும்.

பாவகை	உறுப்பு	சிறப்பு
உறழ்கலி	தனிச்சொல்-தாழிசைகள்	நாற்சீர் ஈரடி; மூன்று அடுக்கி வந்தன
	தனித்தாழிசை	ஐஞ்சீரடியும் முடுகியல் அடியும் உடையது
	தனிச்சொல்	
	அம்போதரங்கம்	முச்சீர் எட்டு
	சுரிதகம்	இணைக்குறளாசிரிய யாப்பு
	தனிச்சொல்	
	கொச்சகங்கள் (அ) பாட்டுக்கள்	கூற்றின் இறுதியில் தனிச்சொல்லும் சொற்சீரடியும் உண்டு

இங்ஙனம் தனிச்சொல்லும், தாழிசைகளும் அம்போத ரங்கமும் உறுப்புக்களாய்ப் பெற்று, கொச்சகம் அல்லது பாட்டுப் பகுதிகளையும் இடையே பெற்று, முடுகியலடி சொற்சீரடி ஆகிய உறுப்புக்களையும் பெற்று வந்த உறழ் கலியாக இவ்வழக்குரைகாதை அமைந்துள்ளது.

21. வஞ்சினமாலை
(கலிவெண்பா)

கண்ணகியின் வஞ்சினத்தைப் பொருண்மையாகக் கொண்டு விளங்கும் வஞ்சினமாலை 'கலிவெண்பா' என்னும் யாப்பமைப்பில் உள்ளது. கனாத்திறமுரைத்த காதை கலிவெண்பாவால் அமைந்துள்ளது போன்று கண்ணகியின் கற்புத்திறமுரைக்கும் இப்பகுதியும் கலி வெண்பா யாப்பால் அமைந்துள்ளது. கனாத்திறமுரைத்த காதையுள் தேவந்தியின் கதை கிளைக்கதையாக அமைந் துள்ளது போன்று, இதனுள்ளும் கற்புடைப் பெண்டிர் எழுவர் வரலாறுகள் கிளைக் கதைகளாக அமைந்துள.

இப்பகுதியின் பாவமைப்பைக் கலிவெண்பா என்றே பதிப்பாசிரியர்கள் சுட்டினர். கலிவெண்பாவின் இலக் கணத்திற்கேற்ப இப்பகுதி அளவொத்த நாற்சீரால் அமைந்து இறுதியடி முச்சீர் பயின்ற சிந்தடியாய் உள்ளது.

சிறுபாவமைப்பு

இப்பகுதியுள் சிறுசிறு பகுதிகளாகக் குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா அமைப் புடைய பாடல்கள் பல ஆங்காங்கே பொருள் முற்றுப் பெற அமைந்துள்ளதைக் காணலாம். சான்றாக,

பெற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூட னகர் (வஞ்சின. 56-57)

எனவரும் பகுதி குறள் வெண்பா அமைப்பிலும்,

பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க (வஞ்சின. 53-55)

எனவரும் பகுதி சிந்தியல் வெண்பா அமைப்பிலும்,

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீ (வஞ்சின. 35-38)

எனவரும் பகுதி இன்னிசை வெண்பா அமைப்பிலும் விளங்கக் காணலாம்.

இக்கலிவெண்பாப் பகுதியில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகியனவே பெரும்பாலும் பயின்று வந்துள. இவற்றுக்கு மேலும் ஓரிடத்தில் மட்டும் கலித்தளையும் ஈரிடங்களில் ஒன்றுத வஞ்சித்தளைகளும் அமைந்துள.

22. அழற்படுகாதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

கண்ணகியின் கட்டளைப்படி அங்கி வானவன் மதுரை நகரை அழற்படுத்திய செய்தியை விளக்குவது, நூற்று ஐம்பத்தேழு அடிகளாலாய அழற்படுகாதை. யாப்பு வகையில் நிலைமண்டிலமாக அமைந்தது இக்காதை. நூற்று ஐம்பத்தேழு அடிகளில், நால்வகைப் பூதங்கள் பற்றிய செய்தியை விளக்கும் ஐம்பத்தொன்பது அடிகள் இடைச்செருகலாக இருக்கலாம் என்பர். இடைச்செருகல் எனக் கருதப்படும் பகுதியில் 'முகிழ்த்தகை (47)' என வருவது மட்டும் சொற்சீரடியாக அமைந்துள்ளது.

23. கட்டுரை காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

இக்காதையின் பாவமைப்பினை, இரட்டைக் காப்பியப் பதிப்பு 'நிலைமண்டில ஆசிரியப்பா' என்றும் 'இடையில் குறள் வெண்பாக்களுமுள' என்றும் கூறுகின்றது.

இக்காதையின் பாவமைப்பு புதிய அமைப்பினது. முதல் இருபத்து நான்கடிகள் நிலைமண்டில ஆசிரியமாகும். அடுத்து மூன்று குறள் வெண்பாக்களும், பின்னர்க் 'காதில்' எனவரும் கூன் ஒன்றும், நூற்று எழுபத்து நான்கு அடிகளாலாய நிலைமண்டிலமும் உள.

தொடர்ந்து வரும் நிலைமண்டிலத்தின் இடையே குறள் வெண்பாக்கள் மடுக்கப் பெற்றிருத்தலால் காதையின் சொற்றொடர்பும் பொருட்டொடர்பும் அறு வண்ணம் 'காதில்' எனவரும் கூன் ஒன்று அமைக்கப் பட்டது போலும்! குறள் வெண்பாவின் முன்னுள்ள பகுதியைத் தனி நிலைமண்டிலமாகவும், பின்னுள்ள பகுதியைத் தனி நிலைமண்டிலமாகவும் கொள்ளுதல் வேண்டும். பின்னுள்ள நிலைமண்டிலப்பாவின் தொடக்கத்தில் கூன் சொல் அமைந்துள்ளதாகவும் கொள்ளல் வேண்டும். இடையில் குறள் வெண்பாக்கள் தனித்து வந்தன என்றே அல்லது குறள்மிடை மண்டிலம் என்னும் புதுவகை யாப்பமைப்பு என்றே இது கொள்ளு தற்குரித்து.

இங்ஙனம் கட்டுரை காதை முன்னும் பின்னும் நிலைமண்டில ஆசிரியப் பாக்களாகவும் இடையில் குறள் வெண்பாக்களாகவும் அமைந்து குறள்மிடை மண்டிலம் என்னும் புதுவகை யாப்பாக மிளிர்கின்றது.

24. குன்றக்குரவை

(யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு, இசைப்பாக்கள்)

சிலம்பின் மூன்ருவது பிரிவாகிய வஞ்சிக் காண்டத் தின் தொடக்கக் காதையாக விளங்குவது குன்றக்குரவை. இப்பகுதியைக் கொச்சகக் கலிப்பா என்னும் பெயரால் பதிப்பாசிரியர்களும் உரையாசிரியர்களும் உரைப்பர். எனினும் அங்ஙனம் கொள்வதைவிடப் பலவகைப் பாக்

களும் இசைப்பாக்களும் விரவிய பகுதியாகக் கொள்வதே சிறப்புடைத்து. பாக்களின் அமைப்பு நிலை இதனை விளக்கும்.

உரைப்பாட்டுமடை

குருவியோப்பியும் எனத் தொடங்கும் குன்றக்குரவையின் முற்பகுதி உரைப்பாட்டுமடை என்னும் தலைப்பின் கீழ்ப் பதிக்கப்பட்டுள்ளது. முதலில் அமைந்த இருபத்திரண்டிகள் இம்முறையில் உரைப்பாட்டுமடை என்னும் பெயருக்கு உரியனவாயுள.

வேட்டுவ வரியின் தொடக்கத்தில் உரைப்பாட்டு மடை எனத் தலைப்பிட்டிருப்பதும் நேரிசையாசிரியப்பாவாகிய அப்பாவின் இடையே 'இவளோ' எனவரும் தனிச்சொல்லும் பாட்டும் இடம் பெற்றிருப்பதும் ஆய்ச்சியர் குரவையுள் கொளு என்னும் பகுதிக்கு உரைப்பாட்டுமடை என்னும் பெயர் உரியது என்று சுட்டப்பட்டமைக்கேற்ப சுட்டு என்னும் உரையும் அதன் கீழ்ப்பாட்டும் விரவி வந்துள்ளதும், இவண் நினைவுகூரத் தக்கன. ம்இமுறையில் குன்றக் குரவையின் தொடக்கத்தில் அமைந்த இப்பாவகையும் யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகையாய் உரைப்பாட்டுமடை என்னும் பெயருக்கு உரியதாய் விளங்குகின்றது.

'குருவியோப்பியும்' எனத் தொடங்கும் பகுதி முதல் 'பெருமலை துஞ்சாது வளஞ்சுரக்கெனவே' எனவரும் பகுதிவரை யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகையாகும். இதனுள் கொச்சகம், உரைத்தொடர், தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்கள் உள.

கொச்சகம்

குருவியோப்பியும் என்பது முதலாக அடிதோறும் நாற்சீர் அமைந்த ஒன்பது அடிகள் இப்பாவின் கொச்சகம்

என்னும் உறுப்பாக அமையும். இப்பகுதியுள் 'குருவி யோப்பியும்' 'அருவியாடியும்' என நிரைநடுவாகிய வஞ்சியுரிச் சீர்களும் வந்துள; எழுவகைத் தளைகளும் பயின்றுள.

உரைத்தொடர்

கொச்சகத்தை அடுத்து 'இவள்போலும் நங்குலக் கோர் இருந்தெய்வம் இல்லை' எனவரும் தொடர் இப் பாடலின் இடையே இடம்பெற்ற உரைத்தொடராம். உரைப்பாட்டுமடைப் பகுதியில், இடையில் உரையே (சொல்லே) யன்றி உரைத்தொடரும் (சொற்றொடரும்) இடம் பெறுதல் உண்டு என்பதற்கு இப்பகுதி சான்றாகும்.

தனிச்சொல்

உரைத்தொடரை அடுத்து 'ஆதலின்' எனவரும் சொல் அமைந்துள்ளது. இது முன்னுள்ள உரைத் தொடருக்கும் பின்னுள்ள பாட்டாகிய சுரிதகத்திற்கும் இடையே இணைப்புச் சொல்லாக விளங்குவது. இத் தனிச்சொல் பத்தாம் அடியோடு இணைத்துக் கொள்ளப் படாமல் தனியே தனிச்சொல் என்றும் உறுப்பாக அமை தற்குரித்து.

பாட்டு-சுரிதகம்

'சிறுகுடியீரே சிறுகுடியீரே' எனத் தொடங்கும் பகுதி முதல் இறுதியில் 'பெருமலை துஞ்சாது வளஞ்சுரக்கெனவே' எனவரும் பகுதிவரை இப்பாவகையில் அகவற் சுரிதக மாம். மேலும் இச்சுரிதகமே 'உரைப்பாட்டுமடை' என்னும் பெயருக்கேற்ப பாட்டுப் பகுதியாகவும் கொள்ளுதற்குரிய தாகும். சுரிதகமே பாட்டாக அமையும் சிறப்பை இங்குக் காண்கிறோம். நேரிசையாசிரியமாகிய இச்சுரிதகம் ஈற்ற

யலில் முச்சீரடி பெற்று இறுதியில் ஏகாரத்தால் இற்றுள்ளது. இச்சுரிதகப் பகுதியுள் ஒன்றுத வஞ்சித்தளை ஒன்று தவிர ஏனைய அறுதளைகளும் இடம் பெற்றுள்ளன.

கொளுச்சொல்-இசைப்பாக்கள்

'ஆங்கொன்று காணாய்' எனத் தொடங்கி ஐந்தடியாகவும் 'ஆடுதுமே தோழி' எனத் தொடங்கி மூன்று அடியாகவும் கொளுச்சொல் என்றும் தலைப்பில் அமைந்த இருபாடல்களும் யாப்பினுல் வேறுபட்ட கொச்சவொருபோகு என்னும் பாவகையில் அமைந்த இசைப்பாக்கள். கொளுச்சொல் என்பதனை விளக்கும் அரும்பதவுரைகாரர் 'கொளுச்சொல், என்பதற்கு மேற்சொல்கின்ற மூன்று பாட்டின் சொற்களைப் போதந்........இப்பாட்டின் கருத்தென்றுமாம்' எனக் கூறியுள்ளார். அவர் விளக்கம் கூறிய பகுதியில் இடைச் சிதைவு ஏற்பட்டிருப்பினும் பின்னே சிறைப்புறம் என்னும் தலைப்பில் அமைந்த மூன்று பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்துரைப்பது கொளு எனக் கொள்ளலாம்.

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் யாப்பு வகைக்கு உரிய இப்பாவில் முதற் கொச்சகத்தில் வெண்டளைகளும், இரண்டாம் கொச்சகத்தில் வெண்டளைகளோடு நேரொன்றுசிரியத் தளையும் இடம் பெற்றுள்ளன.

சிறைப்புறம்

சிறைப்புறம் என்னும் தலைப்பில் தோழிக்குத் தலைமகள் சொல்லிய முன்னிலைப் புறமொழிகள் அமைந்த பாடல்களும் முன்னுள்ள பகுதியைப் போன்று யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகையாக விளங்குவன. இம்மூன்று இசைப் பாடல்களின் இறுதியடிகள் 'கற்றீண்டி வந்த புதுப்புனல்' 'பொன்னுடி வந்த புதுப்

புனல்' 'போதாடி வந்த புதுப் புனல்' எனப் பொருளால் ஒத்து அமைந்தவை. இப்பாக்களில் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகளும் இடம் பெற்றுள.

பாட்டுமடை

அகப்பொருண்மைப் பாடல்களுக்கு இடையே வழி பாட்டுப் பொருண்மை உடைய இசைப் பாடல்கள் மடுக்கப்பட்டிருத்தலால் இப்பகுதி பாட்டுமடை என்னும் பெயரதாயிற்று. நான்கடியாய்க் கலிவிருத்தம் என்னும் யாப்பில் அமைந்த இவ்விசைப் பாடலுள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் இடம் பெற்றுள்ளன.

தெய்வம் பராஅயது

தெய்வத்தைப் பரவும் பொருண்மை உடைய இசைப் பாடல்கள் மூன்று, ஒரு பொருள் மேல் அடுக்கியனவாய் அமைந்துள. குன்றக் குறவர்கள் தங்கள் குலதெய்வமாய முருகனின் வேலைப் புகழ்ந்துரைக்கும் பொருண்மை உடையவை இப்பாடல்கள்.

இறைவன் கைவேலன்றே, ஏந்திய வேலன்றே, திருக்கை வேலன்றே எனவரும் இரண்டாம் அடியின் ஈற்றுத் தொடர்களும், சுடரிலைய வெள்வேலே, மாறட்ட வெள்வேலே, கொன்ற நெடுவேலே எனவரும் நான்காம் அடியின் ஈற்றுத் தொடர்களும் இவை ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்ததை மொழியும் சான்றுகள். கலிவிருத்தம் என்னும் யாப்பு வகையால் அமைந்த இவ்விசைப் பாடல்களுள் வெண்டளைகளே இடம் பெற்றுள. இரண்டாம் பாடலில் மட்டும் ஓரிடத்தில் கலித்தளையும் இடம் பெற்றுள்ளது.

பாட்டுமடை (அறத்தொடுநிலை)

வழிபாட்டுப் பாடல்களின் இடையே மீண்டும் அகப் பொருண்மைத் துறைப் பாடல்கள் மடுக்கப் பெறுதலால் அடுத்துவரும் பாடல்களும் பாட்டுமடை எனப் பெயர் பெற்றன. இவை ஒரு பொருள்மேல் நான்கு அடுக்கிய இரு தொகுதிகளாய் இடம் பெற்றவை. கலிவிருத்தம் என்னும் யாப்புக்கு உரியவை. இவ்விசைப் பாடல்களில் முதல் நான்கும் அறத்தொடு நிலை என்னும் அகத்துறைப் பொருண்மைக்கு உரியனவாகவும் பின்னுள்ள நான்கு பாடல்கள் துறை குறிப்பிடப் பெருதனவாகவும் உ.வே.சா. பதிப்பில் அமைந்துள. எனினும் முதல் நான்கு பாடல்கள் வெறிவிலக்கல் துறைக்கு உரியனவாகவும் அடுத்து உள்ள நான்கு பாடல்கள் அறத்தொடு நிற்றல் துறைக்கு உரியனவாகவும் இரட்டைக் காப்பியப் பதிப்பு வேறுபடுத்தியுள்ளது சிறப்பாகச் சுட்டத்தக்கது.

முதற்கூறு அமைந்த நான்கு பாடல்களில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகியன அமைந்துள. மேலும் முதலாம் பாடலில் ஓரிடத்தில் ஒன்ருத வஞ்சித் தளையும் மூன்ரும் பாடலில் ஓரிடத்தில் நேரொன்ருசிரியத் தளையும் அமைந்துள. இரண்டாம் கூருய் அமைந்த நான்கு பாடல்களில் வெண்டளைகளும் ஒன்ருத வஞ்சித் தளையும், நிரையொன்ருசிரியத்தளையும் அமைந்துள.

பாட்டுமடை

அடுத்தும் கலிவிருத்த யாப்பில் அமைந்த இசைப் பாடல் ஒன்று 'என்றியாம் பாட மறைநின்று கேட்டருளி' எனத் தொடங்குகின்றது. இதனுள் வெண்டளைகள் மட்டுமே பயின்றுள.

நிலைமண்டிலம்

இவ்விசைப் பாடல்களைத் தொடர்ந்து நிலைமண்டில ஆசிரிய யாப்பில் ‘கடம்பு சூடி உடம்பிடி ஏந்தி’ எனத் தொடங்கும் இசைப்பா ஒன்று அமைந்துள்ளது. ஆறடிகளாலாய இப்பாடலுள் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை ஆகிய மூத்தளைகளும் இடம் பெற்றுள.

பஃறொடை வெண்பா

‘என்றிங்கு’ எனவரும் தனிச்சொல் ஒன்று முன்னுள்ள நிலைமண்டில யாப்பில் அமைந்த இசைப்பாடலுக்கும் பின்னுள்ள பஃறொடை வெண்பா யாப்பில் அமைந்த இசைப் பாடலுக்கும் இடையே அமைந்துள்ளது.

பஃறொடை வெண்பா யாப்பில் அமைந்த இசைப் பாடல் ‘அலர்பாடு பெற்றமை யானுரைப்பக் கேட்டு’ எனத் தொடங்குகின்றது. ஏழு அடிகளாலாய இப்பஃறொடை வெண்பா ஒரு விகற்பத்தாலாயது. ஈற்றடியாய சிந்தடி ‘நாள்’ வாய்பாட்டுச் சீரால் இற்றது. இப்பாடலுள் இரு வகை வெண்டளைகளும் இடம் பெற்றுள.

கொச்சகவொருபோகு

‘பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்’ எனத் தொடங்கும் ஆறு அடியாலாய யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு யாப்பில் அமைந்த இசைப்பாடல் ஒன்று அடுத்து அமைந்துள்ளது. இப்பாடலில் முதல் அடியே முற்றும் மாறுபல் இரண்டாம் அடியாகவும் முதல் மடக்கியது. முதல் இரு அடிகளுக்குப் பின்னர் அமைந்த நான்கு அடிகளும் ஒரு விகற்பமாய் உள. இப்பாடலுள்ளும் இரு வகை வெண்டளைகள் மட்டுமே இடம் பெற்றுள.

கலிவிருத்தம்

'பாடுற்று' எனவரும் தனிச்சொல்லை அடுத்து 'பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்' என்றும், 'வானக வாழ்க்கை அமரர் தொழுதேத்த' என்றும் தொடங்கும் இரு கலிநிலை விருத்த யாப்பில் அமைந்த இசைப் பாடல்கள் அமைந்துள. இவற்றுள் இரண்டாம் அடியின் பகுதியே மூன்றும் அடியாகவும் இடைமடக்கி வந்த சிறப்பைக் காண்கின்றோம். இப்பாடல்களிலும் இரு வகை வெண்டளைகள் இடம் பெற்றுள.

ப∴றொடை வெண்பா

அடுத்து ஐந்து அடியால் ஒரு விகற்பத்தால் அமைந்த ப∴றொடை வெண்பா யாப்பாலாய இசைப்பாடல் நாள் வாய்பாட்டுச் சீரால் இற்றுள்ளது. வெண்டளைகள் இப் பாடலுள் இடம் பெற்றுள்ளன.

தனிச்சொல்லும் அரச வாழ்த்தும்

முன்னுள்ள இசைப் பாடல்களின் பொருண்மைகளி னின்று வேறுபட்டு அரசவாழ்த்துப் பொருண்மையதாக அமைந்த இசைப்பாடலை வேறுபடுத்து முறையில் 'என்றி யாம்' எனவரும் தனிச்சொல் அடுத்து அமைந்துள்ளது. தனிச்சொல்லுக்குப் பின்னர் 'கொண்டு நிலைபாடி ஆடுங் குரவையை' எனத் தொடங்கும் அரச வாழ்த்துப் பொருண்மை நிறைந்த இசைப்பாடல், நேரிசை ஆசிரிய யாப்பால் அமைந்துள்ளது. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை ஆகிய முத்தளைகள் இப்பகுதியில் இடம் பெற்றுள.

கீழ்வரும் பட்டியல் இக்குன்றக் குரவையுள் அமைந்த பாக்களின் இயல்புகளையும் அவற்றின் உறுப்புக்களையும் விளக்கி நிற்கின்றது.

பாடல்	சிறப்பு (அல்லது) உறுப்புக்க்ள்
யாப்பினல் வேறுபட்ட கொச்சகவொருபோகு; இயற்பா	உரைப்பாட்டுமடை என்னும் பெயருக்கு உரியது; கொச்சகம் உரைத்தொடர், தனிச்சொல், சுரிதகம் (பாட்டு)
யாப்பினல் வேறுபட்ட கொச்சகவொருபோகு; இசைப்பா	இருகொச்சகம்-கொளு என்னும் தலைப்பு
,, ,,	மூன்று பாடல்கள்-ஒருபொருள் மீது மூன்றடுக்கியவை
கலிவிருத்தம்; [இசைப்பா	பாட்டுமடை
,, ,,	மூன்று பாடல்கள்-ஒருபொருள் மீது மூன்றடுக்கியவை
,, ,,	பாட்டுமடை; நான்கடுக்கியவை; இருதொகுதிகள்
,, ,,	ஒரு பாடல்-பாட்டுமடை
நிலைமண்டில ஆசிரியம்; இசைப்பா	ஆறடிகளாலாயது
தனிச்சொல்	—
பஃறெடைவெண்பா; இசைப்பா	ஏழடிகளாலாயது;ஒருவிகற்பம்
யாப்பினல் வேறுபட்ட கொச்சகவொருபோகு இசைப்பா	ஏழடிகளாலாயது
கலிவிருத்தம்;இசைப்பா	இருபாடல்கள்;இடைமடக்குச் சிறப்பு
தனிச்சொல்	—
நேரிசையாசிரியப்பா-அரசவாழ்த்து; இசைப் பாடல்	—

இங்ஙனம் குன்றக்குறவைப் பகுதியின் முற்கூறு யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகுப் பாடலாகவும், பிற்கூறு கலிவிருத்தம், நிலைமண்டில ஆசிரிய விருத்தம், யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு, பஃறொடை வெண்பா, நேரிசையாசிரியம் ஆகிய யாப்பில் அமைந்த இசைப்பாடல்களாகவும் அமைந்துள்ளது.

25. காட்சிக்காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

காட்சிக்காதை என்னும் பகுதி நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்பு வகைக்கு உரியது. நூற்றுத் தொண்ணூற்று நான்கு அடிகளால் அமைந்த இக்காதையுள் காப்பியக் கதையோடு தொடர்பு உடைய செங்குட்டுவன், வேண்மாள், சாத்தன், வில்லவன் கோதை, அழும்பில் வேள் முதலியோர் அறிமுகப்படுத்தப் படுகின்றனர்.

26. கால்கோட்காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

கால்கோட்காதை என்னும் பகுதியும் நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்பு வகைக்கு உரியது. இருநூற்று ஐம்பத்து நான்கு அடிகளால் ஆயது.

27. நீர்ப்படைக்காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

இருநூற்று இருபத்தாறு அடிகளால் நிலைமண்டில ஆசிரிய யாப்பால் அமைந்த பகுதியே நீர்ப்படைக் காதையாகும்.

28. நடுகற்காதை
(நிலைமண்டில ஆசிரியப்பா)

பத்தினித் தேவிக்குப் படிமம் சமைத்து விழாச் செய்த நிகழ்ச்சியை விளங்க உரைப்பது நடுகற்காதை.

இருநூற்று முப்பத்து நான்கு அடிகளால் நிலைமண்டில ஆசிரியப்பாவாய் அமைந்தது.

29. வாழ்த்துக்காதை
(நாடகக்கூறு, இசைப்பாக்கள்)

கண்ணகி, பத்தினித் தெய்வமாய்ப் பொன்னஞ் சிலம்போடும் புனைந்த மேகலையோடும் மின்னுக்கொடி போல, மீவிசும்பில் தோன்றித் 'தென்னவன் தீதிலன்' எனக்கூறிச் செங்குட்டுவனுக்குக் காட்சி தரும் காதை யாகிய வாழ்த்துக்காதை நாடகக் கூறும் இசைப் பாட்டுக்கள் பலவும் கலந்து நிற்கும் தொகுதியாம்.

இக்காதையின் பாவகையைக் கொச்சகக் கலி என உரையாசிரியர் நாட்டாரும் பதிப்பாசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனாரும் குறிப்பிடுவர். உரையாசிரியர் பொ. வே. சோ. கொச்சகக் கலியால் இயன்ற இசைப்பாடல்கள் என இயம்புவர். அனைத்துப் பாடல்களையும் கொச்சகக் கலி என ஒரேவகைப் பாவாகக் கொள்ளாமல் தனித்தனியே வந்த இசைப்பாடல்களின் தொகுதியாகக் கொள்ளுதலே சிறப்புடையது என்பதைப் பாக்களின் அமைப்பு நிலை விளக்குகின்றது.

உரைப்பாட்டுமடை

கதைத் தொடர்பையும் நிகழ்ச்சித் தொகுப்பையும் விளக்கும் கட்டுரைப் பகுதியொன்று இக்காதையின் தொடக்கத்தில் உரைப்பாட்டுமடை என்னும் பெயரால் அமைந்துள்ளது. வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய காதைகளிலும் உரைப்பாட்டுமடை என்னும் பெயருடைய பகுதிகள் அமைந்துள்ளன. எனினும் வாழ்த்துக் காதையுள் அமைந்த உரைப்பாட்டு மடை என்னும் பகுதிக்கும் பிற காதைகளில் அமைந்த உரைப்பாட்டுமடைப் பகுதிகளுக்கும் வேறுபாடுண்டு.

பாடலின் இடையே உரை அல்லது சொல் இடம் பெற்று உள்ளமையாலும் பாட்டு இடம் பெற்றுள்ளமையாலும் அக்காதைகள் உரைப்பாட்டுமடை எனப் பெயர் பெற்று விளங்கின. ஆனால் வாழ்த்துக் காதையுள் அமைந்த உரைப்பாட்டுமடையோ முற்றிலும் உரைநடைப் பகுதி யாகவே அமைந்துள்ளது. பிற உரைப்பாட்டுமடைகளின் அமைப்போடு ஒப்பிட்டு நோக்க, இப்பகுதி, உரைப்பாட்டு மடை எனப் பெயர் பெறாமல் கட்டுரை அல்லது உரை மடை எனப் பெயர் பெற்றிருப்பின் பொருத்தமாக இருக்கும் என எண்ணத் தோன்றுகிறது. அமைப்பு நிலையால் காண் டங்களின் இறுதியிலும் நூலின் இறுதியிலும் அமைந்த கட்டுரைகளை ஒத்தும், நுவலும் பொருளால் கானல் வரியுள் அமைந்த கட்டுரைப்பகுதிகளை ஒத்தும் அமைந் துள்ள இப்பகுதி, கட்டுரை அல்லது உரைமடை எனப் பெயர் பெறுவதே சால்புடைத்து.

நுவலும் பொருள்

உரைப்பாட்டுமடை என்ற பெயரால் அமைந்த இதன் முற்பகுதியில், செங்குட்டுவனிடம் வடவாரிய அரசர் கூறிய இகழ்ச்சியுரையை மாதவர் கூறியது, செங் குட்டுவன் இமயஞ்சென்று, பகையை வென்று பத்தினிச் சிலை கொணர எண்ணியது, ஆரியஅரசர் தலையில் கல்லைச் சுமத்திக் கொணர்ந்து, கங்கையில் தூய்மை செய்து திரும் பியது, கோயில் செய்து விழா நிகழ்த்தியது, மாசாத்துவான் துறவு, அவன் மனையாள் இறப்பு முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள. முந்திய வஞ்சிக் காண்டக் காதைகளில் கூறிய கதை நிகழ்ச்சிகளாகிய இவற்றை மீண்டும் அடிகள் கூறியுள்ளார். காதைகளுள் கூறியவற்றையே உரையாலும் ஆசிரியர் இவண் தொகுத்துரைத்தார் எனக் கொள்ளலாம்.

தேவந்தி, காவற்பெண்டு, அடித்தோழி ஆகிய மூவரும் கண்ணகியைக் காண மதுரை இடைச்சேரிக்கு வந்து ஐயையைக் கண்டு செய்தியறிந்து சேர நாட்டில் விழா நிகழும் இடத்திற்கு வந்தனர். இதுவே 'உரைப் பாட்டுமடை'யால் விளக்கப்படும் புதிய செய்தி.

உரைப்பாட்டுமடையில் கதையோட்டத்திற்குரிய புதிய இச்செய்தி விரித்துரைக்கப்படவில்லையெனின் வாழ்த்துக் காதையின் தொடக்கத்தில் அமைந்த தேவந்தி, காவற் பெண்டு, அடித்தோழி ஆகியோர் கூற்றுக்கள், புதியன வாயும், தொடர்பில்லாதனவாயும் தொடர்ச்சி இயைபின்றி வியப்பூட்டுவனவாயும் அமையும். சோணாட்டில் கண்ணகி யோடு வாழ்ந்த இவர்கள் சேரநாட்டில் நிகழும் விழாவுக்கு எங்ஙனம் வந்திருக்கவியலும் என எண்ணி நாம் வியப் படையலாம். காப்பியம் கற்போருக்கு ஏற்படும் இக்குழப் பத்தை நீக்குவதில்'உரைப்பாட்டுமடை'என்னும் பெயரால் அமைந்த இக்கட்டுரைப் பகுதி சிறந்த பணி புரிகின்றது.

இளங்கோவடிகள் அமைத்த பிற உரைப்பாட்டுமடை களின் சாயலைப்பெறுது, நூற்கட்டுரை, காண்டக்கட்டுரை ஆகியவற்றின் சாயலை இப்பகுதி பெற்றிருத்தலாலும், முந்திய கதை நிகழ்ச்சிகள் கூறியது கூறலாக இருத்த லாலும், முன்னுள்ள காதைகளுக்கும் இக்காதைக்கும் இடையே தொடர்பு நிகழ்ச்சிகள் சில படைக்கப்பட்டிருத் தலாலும் பிற்காலத்தில், சுவைஞர்ஒருவரால் இத்தொடர்பு உரையாகிய 'உரைப்பாட்டுமடை' எழுதப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. அறிஞருலகம் இது பற்றி ஆய்வு செய்தல் வேண்டும். இப்பகுதிக்கு அரும்பத வுரைகாரர் குறிப்புரை அமைந்துள்ளமையால் அவர் காலத்துக்கு முன்னரே இம்மாற்றம் நிகழ்ந்திருக்கக்கூடும் என்றும் கருதலாம்.

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு

உரைப்பாட்டுமடை என்னும் பெயரில் அமைந்த கட்டுரைப் பகுதிக்குப் பின்னர், தேவந்தி, காவற்பெண்டு, அடித்தோழி ஆகியோரின் சொல்லாக மூன்று பாடல்களும், அரற்றுக மூன்று பாடல்களும், தேவந்தி ஐயையைக் காட்டி அரற்றிய பொருண்மை உடைய ஒரு பாடலும் ஆகிய மூன்று தொகுதிகளாய இசைப் பாடல்கள் அமைந்துள்ளன. இவை அனைத்தும் யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் யாப்பு வகைக்கு உரியவை.

முதல் தொகுதியுள் அமைந்த மூன்று பாடல்களும் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கியவை.

'சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்'
'தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்'
'பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்'

எனவரும் இப்பாடல்களில் இறுதித் தொடர்கள் இதனை விளக்குகின்றன. முதற்பாடல் தேவந்தி சொல்; இரண்டாம் பாடல் காவற்பெண்டு சொல்; மூன்றும் பாடல் அடித்தோழி சொல்.

இப்பாடல்கள் முதல் நான்கடி ஒருவிகற்பமாயும் இறுதியடி ஒருவிகற்பமாயும் கூடுதல் இருவிகற்பமாய் அமைந்துள்ளன. நான்காம் அடியின் இறுதியும், ஐந்தாம் அடியின் இறுதியும் சொல்லொத்தும் பொருளொத்தும் பாடல்தோறும் உள.

இரண்டாம் தொகுதியாக அமைந்த அரற்றுப் பாடல்கள் மூன்றும் முறையே தேவந்தி, காவற்பெண்டு, அடித்தோழி ஆகியோர் அரற்றிய பாடல்கள். இப்பாடல்களும் ஐந்தடியாய் அமைந்துள. முதல் மூன்றடிகள் ஒரு விகற்பமாகவும், நான்காம் அடி ஒரு விகற்பமாகவும், ஐந்தாம் அடி ஒரு விகற்பமாகவும் கூடுதல் மூன்று விகற்பங்களாய் இவை அமைந்துள. மேலும் முந்திய

தொகுதி அமைப்பைப் போன்று நான்காம் அடியின் இறுதிச்சீர்கள் ஐந்தாம் அடியின் இறுதிச் சீர்களாகவும் ஒத்துள. இவை மூன்றும் ஒரு பொருள் மேல் அடுக்கியவை.

மூன்றும் தொகுதியாகிய ஒரு பாடல், தேவந்தி ஐயையைக் காட்டி அரற்றிய பொருண்மையது. இது ஒரு பொருள்மீது தனித்து வந்த இசைப்பாடல்.

முதல் தொகுதிப் பாடல்களில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, நேரொன்றாசிரியத் தளை ஆகியனவும், இரண்டாம் தொகுதிப் பாடல்களில் வெண்டளைகளோடு நேரொன்றாசிரியத்தளையும் மூன்றாம் தொகுதிப் பாடலில் வெண்டளைகளும் நேரொன்றாசிரியத் தளையும் அமைந்துள்ளன.

கலிவிருத்தம்

செங்குட்டுவன் கூற்றாகவும், செங்குட்டுவற்குக் கண்ணகியார் கடவுள் நல்லணி காட்டியதாகவும் அமைந்த இருபாடல்கள் கலிவிருத்தம் என்னும் யாப்பின. முதற் பாடலில் 'என்னே இஃது, என்னே இஃது, என்னே இஃது என்னே கொல்' எனவரும் தொடர் செங்குட்டுவன் கூற்றுய்ச் சொற்றொடர் பின்வருநிலை பயின்று வந்த சிறப்புடைத்து. இவ்விரு பாக்களிலும் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகளும் இடம் பெற்றுள்ளன.

வஞ்சி மகளிர் சொல்

வஞ்சி மகளிர் சொல் என்னும் தலைப்பில் அமைந்த பாடலொன்று ஒன்பதடிகளாலாய ஒரே பாடலாகப் பதிப்புக்களில் அமைந்துள்ளது. இதனை, முறையே இரண்டடியாலும் மூன்றடியாலும் நான்கடியாலும் வந்த மூன்று பாடல்களாகக் கொள்ளுதல் நேரிது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'வம்மெல்லாம்' என்ற தொடர்

ஒத்தமைந்துள்ளதும் இரண்டாம் பாடலிலும், மூன்றும் பாடலிலும் ஈற்றயலடியின் பகுதி ஈற்றடியின் பகுதியாக மடக்கி வந்துள்ளதும் இவ்வமைப்பு நிலையை நன்கு தெளிவிக்கும்.

இவை மூன்றும் ஒரு பொருள்மேல் அடுக்கி வந்துள்ள சிறப்புக்கு உரியனவாயும் விளங்குகின்றன. பாவினங்களுள் ஒரு குறிப்பிட்ட பாவினங்களே மூன்றாய் அடுக்கி வருதல் போல, இங்கு மூவேறு பாவினங்கள், மூவேறு அடியளவு உடையவை, பொருள் நுதலும் திறத்தால் அடுக்கிவரக் காண்கின்றோம். இளங்கோவின் யாப்புப் புரட்சியுள் சிறப்பாகச் சுட்டத்தக்க பகுதி இதுவாம்.

இவை ஒரு பொருள் நுதலிவந்த மூன்று பாடல்களே என்பதற்கு இவற்றின் அமைப்பு நிலையும் சான்றாக உள்ளது. முதற் பாடல் இரண்டடியாய் ஒரே வகை எதுகை பெற்று 'வம்மெல்லாம்' என ஈற்றுச் சொல் பெற்று முடிந்தது. இரண்டாம் பாடல் மூன்றடியாய் முதலிரு அடியில் ஒரே வகை எதுகை பெற்று மூன்றும் அடி தனிவிகற்பமாய் 'வம்மெல்லாம்' என ஈற்றுச்சொல் பெற்று முடிந்தது. மூன்றும் பாடல் நான்கடியாய், முதல் மூன்றடிகளில் ஒரே வகை எதுகை பெற்று, நான் காமடி தனிவிகற்பமாய் 'வம்மெல்லாம்' என ஈற்றுச்சொல் பெற்று முடிந்தது. இவ்வமைப்பு நிலையாலும் ஒரு பொருள் நுதலி மூன்றடுக்கி வந்த பாடல்கள் இவை என்பது புலனும்.

இப்பாடல்களில் முதற்பாடல் குறள்வெண்செந்துறையாகவும் இரண்டாம் பாடல் ஆசிரியத்தாழிசை ஆகவும், மூன்றும் பாடல் கலிவிருத்தமாயும் அமைந்துள. இம்மூவகைப் பாவினங்களிலும் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகளே இடம் பெற்றுள.

ஆயத்தார் சொல்

ஆயத்தார் சொல் என்னும் தலைப்பில் இருவிகற்பத்தால் அமைந்த நேரிசை வெண்பா ஒன்று இசைப் பாடலாய் அமைந்துள்ளது. இப்பாவினுள்ளும் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் இடம் பெற்றுள.

வாழ்த்து

வாழ்த்து என்னும் தலைப்பில் அடுத்து அமைந்துள்ள பாடல், தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொரு போகு என்னும் யாப்பில் அமைந்த இசைப்பாடல். இப்பாவில் முதலில் இரு நான்கடித் தாழிசைகளும் 'எல்லா நாம்' எனவரும் தனிச்சொல்லும் குறள்வெண்பா யாப்பில் அமைந்த வெள்ளைச் சுரிதகமொன்றும் உறுப்புக்களாக அமைந்துள.

நான்கடித் தாழிசைகள் இரண்டும் முறையே, பாண்டியர் தொல்குலத்தையும் சேரர் தொல்குலத்தையும் பாராட்டி வாழ்த்தும் பொருண்மையன. இவ்விரு பாடல் களும் இரண்டாம் அடிதோறும் 'வாழியரோ என்ற சொல்லையும் நான்காம் அடிதோறும் 'கோமான் தன் தொல்குலமே' என்ற சீர்களையும் பெற்று விளங்குபவை. மேலும் இரண்டாம் அடியின் இறுதியில் அமைந்த 'வாழியரோ' என்னும் சொல் மூன்றும் அடியின் தொடக்க மாகவும் அந்தாதித்து அமைந்துள்ளது.

தாழிசைகள் இரண்டனுள்ளும் இருவகை வெண் டளைகளும் நேரொன்றாசிரியத்தளையும் இடம் பெற்றுள. குறள் வெண்பா யாப்பமைந்த வெள்ளைச் சுரிதகத்தில் இயற்சீர் வெண்டளை ஒன்றே எல்லா இடங்களிலும் அமைந்துள்ளது.

அம்மானைவரி

அம்மானை என்பது மகளிர் விளையாடல்களுள் ஒன்று. மூவர் அமர்ந்து, ஒருத்தி வினாத் தொடுப்பதாகவும் ஒருத்தி விடையிறுப்பதாகவும் ஒருத்தி பொதுவாகப் பாடுவதாகவும் வரும் முறையில் விளங்குவது.

பாட்டொடு கலந்த ஆட்டம் ஆகிய இவ் வம்மானையை ஆடும் பெண்கள் பாடுவதாக வருவன அம்மானை வரி என்னும் தலைப்பில் அமைந்த நான்கு பாடல்கள்.

இவை நான்கும் புகாரை வாழ்த்துதலும் சோழனை வாழ்த்துதலுமாகிய பொருண்மைகளோடு ஒரு பொருள் மீது நான்கடுக்கி வந்தன. யாப்பினால் வேறுபட்ட கொச்சக வொருபோகு என்னும் யாப்பில் அமைந்தவை. இவ் விசைப்பாடல்களுள் ஒவ்வொரு பாடலும் மூன்று பெண் களின் கூற்றுகளாக அமைந்துள்ளது. இளங்கோவடிகள் காட்டிய இவ்வாம்மானைப் பாடல்களின் அமைப்பே மணிவாசகர் திருவம்மானை பாடுதற்கும், அம்மானை என்னும் சிற்றிலக்கியவகை உருவாவதற்கும் வித்தாக அமைந்தது. முதல் மூன்று பாடல்கள் ஐந்து அடிகளாலும் இறுதிப் பாடல் ஆறு அடிகளாலும் அமைந்துள்ளன.

முதல் நான்கு பாடல்களில் தொடக்கத்தில் உள்ள நான்கடிகள் ஒரு விகற்பமாயும் இறுதி அடி ஒரு விகற்பமாயும் அமைந்துள்ளன. மேலும் இரண்டாம் அடி மூன்றுமடியிலும், நான்காம் அடியின் இறுதி ஐந்தாம் அடியிலும் அந்தாதித்து அமைந்துள்ளது. இறுதிப் பாடலில் இரண்டாம் அடி மூன்றும் அடியிலும், மூன்றும் அடி நான்காம் அடியிலும் அந்தாதித்து அமைந்துள்ளது.

இப்பாடல்கள் நான்கனுள்ளும் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகள்

இடம் பெற்றுள. இவற்றுக்கு மேலும் இரண்டாம் பாடலில் நேரொன்றாசிரியத்தளை, கலித்தளை ஆகியனவும் மூன்றாம் பாடலில் கலித்தளையும் அமைந்துள்ளன. அம்மானை வரியுள் முதற்பாடல் இவண் சான்றாகச் சுட்டப் பட்டுள்ளது.

வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த உரவோன்யா ரம்மானை
ஓங்கரணங் காத்த உரவோ னுயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடலோ ரம்மானை

'பாடேலோரம்மானை' எனவரும் அமைப்பு 'பாடேலோ ரெம்பாவாய்' எனவரும் பாவைப்பாட்டின் இறுதியை ஒத்துள்ளது சுட்டத்தக்கது.

கந்துகவரி

கந்துகவரி என்னும் தலைப்பில் அறுசீர் ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த மூன்று இசைப்பாடல்கள் உள்ளன. இவை மூன்றும் பாண்டியனை வாழ்த்தும் பொருண்மைமீது அடுக்கி வந்தன. பந்தடிக்கும் பெண்கள் பாண்டிய மன்னனைப் பாராட்டிப் பாடுவதாக அமைந்துள்ளமைக்கு ஏற்ப இதன் சந்த அமைப்பும் இனிமை பெற அமைந்துள்ளது.

'தன்ன தன்ன தாந்தன தனன்ன தான தந்தன'

எனவரும் இனிய சந்த அமைப்பில் பந்துகள் மெத்தென்று அடித்து எழுப்பும் இன்னோசை அமைந்து விளங்கக் காணலாம்.

பொன்னி லங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னி லங்கு மேகலைக ளார்ப்ப வார்ப்ப வெங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க வென்று சென்றுபந்த டித்துமே
தேவ ரார மார்பன் வாழ்க வென்றுபந்த டித்துமே.

எனவரும் இப்பாடல்களுள் இறுதியில் அமைந்த இரண்டு அடிகளும் பாடல்தோறும் ஒத்து அமைந்துள்ளன. இவற்றுள் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை. வெண்சீர் வெண்டளை ஆகிய நால்வகைத் தளைகளும் இடம் பெற்றுள்ளன.

ஊசல்வரி

அம்மானை வரியைப் போன்று ஊசல்வரிப் பாடல்களும் யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு யாப்பில் அமைந்த இசைப் பாடல்கள். பெண்கள் ஊசல் ஆடுங்கால் பாடப் பெறும் பாடல்களின் அமைப்பில் இவை அமைந்துள. முறையே ஊசல்வரிப் பாடல்கள் சேர மன்னனை வாழ்த்தும் பொருண்மை உடையவை. ஐந்தடி நாற்சீராய் அமைந்த இப்பாடல்கள், முதல் நான்கு அடியில் ஒரு விகற்பமாகவும், இறுதி அடியில் ஒரு விகற்பமாகவும் அமைந்துள. நான்காம் அடி, ஐந்தாம் அடிகளின் இறுதி 'ஆடாமோ ஊசல்' எனவரும் ஈற்றுத் தொடரைச் சிறப்பாகப் பெற்றுள. ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த இப்பாடல்களில் இருவகை வெண்டளைகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

அம்மானைவரி, கந்துகவரி, ஊசல்வரி எனவரும் இவ்விசைப் பாடல்கள் அனைத்தும் முறையே சோழனையும் பாண்டியனையும், சேரனையும் வாழ்த்தும் பொருண்மையன.

வள்ளைப்பாட்டு

வள்ளைப்பாட்டு என்னும் தலைப்பில் அமைந்த மூன்று பாடல்கள் சோழன், பாண்டியன், சேரன் ஆகியோர்களை முறையே வாழ்த்துவனவாய் உள. வாழ்த்து என்னும் ஒரு பொருண்மைமீது மூன்றடுக்கி வந்த இப்பாடல்களும் யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் யாப்பில் அமைந்தவை. ஒவ்வொரு பாடலும் ஐந்து அடிகளாய், முதல் இரு அடிகள் ஒரு விகற்பமாய் அடுத்த

ஈரடிகள் ஒரு விகற்பமாய் இறுதி அடி ஒரு விகற்பமாய் அமைந்துள்ளன. நான்காம் அடியிலும் ஐந்தாம் அடியிலும் 'பாடலே பாடல்' எனவரும் தொடர் ஈற்றில் சிறப்புத் தொடராக அமைந்துள்ளது. இப்பாடல்களில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத் தளை, கலித்தளை ஆகிய தளைகள் இடம் பெற்றுள்ளன.

தனிச்சொல்லும் அரச வாழ்த்தும்

வள்ளைப் பாட்டை அடுத்து 'ஆங்கு' என வரும் தனிச் சொல்லும், இறுதியில் அரச வாழ்த்துப் பொருண்மை அமைந்த இன்னிசை வெண்பா ஒன்றும் இடம் பெற்று உள்ளன. பாடலின் இறுதி 'காசு' என்னும் வாய்பாட்டுச் சீரால் இற்றது. அரச வாழ்த்தாக வரும் இவ்விசைப் பாடலில் இருவகை வெண்டளைகளும் இடம் பெற்றுள்ளன.

எனவே, வாழ்த்துக் காதை யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு, கலிவிருத்தம், குறள் வெண் செந்துறை, ஆசிரியத் தாழிசை, நேரிசை வெண்பா, ஆசிரிய விருத்தம், இன்னிசை வெண்பா ஆகிய பல வகைப் பாவினங்களால் அமைந்த இசைப் பாடல்களின் தொகுதியாய் விளங்குகின்றது.

கீழே அமைந்த பட்டியல் இக்காதையுள் அமைந்த பாவகைகளைத் தொகுத்துச் சுட்டும்.

பாடல்	பாவகை	சிறப்பு
உரைப்பாட்டுமடை	நாட கக்கூறு	உரைமடை என்று பெயர் பெற்றிருப்பின் சிறப்பு
சொல்; பாடல்கள் 3	இசைப் பாக்கள்; யா.வே.கொ. ஒருபோகு	பொருளால் அடுக்கியவை
அரற்று; பாடல்கள் 3	,,	,,
ஐயையைச்சுட்டி அரற்று	இசைப்பா; யா.வே.கொ. ஒருபோகு	தனித்துவந்தது

பாடல்	பாவகை	சிறப்பு
செங்குட்டுவன் கூற்று	இசைப்பா; கலிவிருத்தம்	தனித்து வந்தது
வஞ்சிமகளிர் சொல்	இசைப் பாக்கள்; கு.வெ. செந்துறை, ஆ.தாழிசை கலிவிருத்தம்	மூவேறு இனங்கள் ஒருபொருள் மீது அடுக்கியன
கண்ணகி நல்லணி காட்டுதல்	இசைப்பா; கலிவிருத்தம்	—
ஆயத்தார்சொல்	இசைப்பா; நே. வெண்பா	—
வாழ்த்து	இசைப்பா; தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சக ஒருபோகு	இருதாழிசைகள், தனிச்சொல், வெள்ளைச்சுரிதகம் ஆகிய உறுப்புக்கள்
அம்மானைவரி	இசைப் பாக்கள்; யா.வே.கொ. ஒருபோகு	நான்கு ஒருபொருளில் அடுக்கின.
கந்துகவரி	இசைப் பாக்கள்; அறுசீர் ஆசிரிய விருத்தம்	மூன்று ஒருபொருளில் அடுக்கின
ஊசல்வரி	இசைப் பாக்கள்; யா.வே.கொ. ஒருபோகு	,,
வள்ளைப்பாட்டு	இசைப் பாக்கள்; யா.வே.கொ. ஒருபோகு	,,
தனிச்சொல்	நாடகக்கூறு	—
அரசவாழ்த்து	இசைப்பா; இன்னிசை வெண்பா	—

30. வரந்தரு காதை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

சிலப்பதிகாரத்தின் இறுதிக் காதையாக விளங்கும் வரந்தரு காதை, நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் யாப்பு வகையால் அமைந்தது. இக்காதையின் பாவகையை நிலைமண்டில ஆசிரியம் என்றே பதிப்பாசிரியர்களும் உரையாசிரியர்களும் சுட்டுவர்.

இருநூற்றிரண்டு அடிகளாலாய இக்காதையுள் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை ஆகிய ஐவகைத் தளைகள் இடம் பெற்றுள்ளன.

இங்ஙனம் சிலப்பதிகாரம் என்னும் காப்பிய மாளிகை பலவகைப் பாக்களும் பாவினங்களுமாய அழகுத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுக் கற்போருக்குக் கழி பேருவகை தருகின்றது. இளங்கோவடிகளின் யாப்பியல் புரட்சிக் கூறுகளைத் தெளிவாகவும் நிரலாகவும் விளக்குவதோடு, பகுதிதோறும் அமைந்து கிடக்கும் இலக்கண வரையறை நிலைகளையும் இக்கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது.

—

௬. காதைகளின் யாப்பும் பொருளும்

யாப்பு வடிவத்திற்குப் பொருளின் தன்மையால் வேறு படும் உணர்ச்சிகளே அடிப்படைக் காரணமாம். உணர்ச்சி-பொருண்மை-யாப்பு வடிவம் என்ற இம் மூன்றும் ஒன்றற்கு ஒன்று காரண காரியத் தொடர்பின. பொருண்மை உணர்ச்சிக்கேற்ப வேறுபடுகின்றது. பொருண்மை வேறு பாட்டுக்கேற்ப யாப்பின் வடிவங்கள் மாறுபடுகின்றன. இம்முறையில் பொருளுக்கும் யாப்புக்கும் தொடர்பு நிலை காணலாம்.

இலக்கியங்கள் உணர்வுக்கேற்ப யாப்பு வடிவங்கள் பெறுபவை. உணர்ச்சியைப் பாட்டின் கருத்திலோ, வடிவிலோ, பொருளிலோ, ஒலிநயத்திலோ அமைத்தல் உண்டு. எனினும் பொருளிலும் கருத்திலும் உணர்ச்சியை அமைத்தலே சிறப்புடைத்து என்பர் வினுசெசுடர் என்னும் திறனுளி[1]. டாக்டர் மு. வரதராசனர்பாட்டின் வடிவத்திலும் பொருளிலும் உணர்ச்சியை ஒருங்கே புலப்படுத்து மாறு அமையும் பாட்டே உயர்வுடைத்து என்று உரைப்பர்[2]. எனவே யாப்பாகிய வடிவத்திலும் பொருளிலும் உணர்ச்சியைப் புலப்படுத்தும் நெறியே பொருள் யாப்பு நெறி என்பது பெற்றும்.

பொருண்மைக்கு ஏற்ப யாப்பு வடிவம் மாறுபடும் என்பதை மேனுட்டுத் திறனுளிகளும் விளக்குவர். பிரௌனிங்கின் பாடல்களில் பொருளுக்கு ஏற்ப யாப்பு வடிவங்கள் எங்ஙனம் மாறுபடுகின்றன என்பதை இலாம் பரன் இனிதுற மொழிகுவர்[3].

---

1. Some principles of Literary Criticism - C T. Winchester P. 103
2. இலக்கியத் திறன் - டாக்டர் மு. வரதராசன், பக். 75
3. The rudiments of Criticism - E. A. G. Lamborn pp. 40-41

சிலப்பதிகாரக் காதைகளுள் அமைந்த யாப்பின் பல்வேறு வடிவங்களும் பொருண்மைக்கேற்ப மாறுபட்டு அமைந்தனவே. பொருண்மை என்பது பலவகைப்படும். பல்வேறு கூறுபாடுகளை உடைய பொருண்மைகள் ஒவ்வொரு காதையுள்ளும் யாப்பின் பல்வகை வடிவ மாறுபாடுகளால் எங்ஙனம் சிறக்கின்றன என்பது இக்கட்டுரைக்கண் விளக்குதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆய்பொருளாம். சிலப்பதிகாரக் காதைகள் இவண் பொருண்மை யாப்பு ஆகிய வரிசை முறையில் எடுத்துக்கொள்ளப் பெற்று விளக்கப்படுகின்றன. இளங்கோவடிகள், குறிப்பிட்ட யாப்பு வடிவைக் குறிப்பிட்ட பொருண்மைக்குரியதாகவே பயன்படுத்தியுள்ள சிறப்பும் இக்கட்டுரைக்கண் விளங்கக் கூறப்படும். தொடர்புநிலை கருதி, தொல்காப்பியர் காலம், சங்க காலம் ஆகியவற்றுள் பொருண்மைக்கும் யாப்புக்கும் உரிய இயைபுநிலை இவண் சுட்டப்படும்.

தொல்கரப்பியர் காலத்தில் பொருளும் யாப்பும்

மக்களின் வாழ்வியல் பண்பாடுகளை வெளிப்படுத்தும் இலக்கியங்களில் காணப்படும் நெறிகளையும் மரபுகளையும் ஒழுங்குபடுத்தி அமைக்கும் சட்டகமே இலக்கணம். இவ்வியைபு நெறியையே பண்டைத் தமிழ்ச் சான்றோர் 'இலக்கியம் கண்டதற்கேற்ப இயம்பப்படுவது இலக்கணம்' என்றனர். ஆங்கிலத் திறனாளிகள் செயிண்டுபரியும்[4] இலாம்பரனும்[5] இந்நெறியைச் சுட்டுப.

தொல்காப்பியர் நால்வகை யாப்பு வடிவங்களைத் தம் நூலுள் கூறுவர். அவை வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா என்பவை.

4. The rule comes from the work, not the work from the rule-History of English Prosody-Saintsbury-Preface P. VI
5. Though works of art are not made by rule, yet rules may be made from them.-The rudiments of Criticism-E. A. G. Lamborn P. 36

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே[6]

என்பது நூற்பா. தொகைநிலை வகையால் பா இது எனச் சுட்டப்படும் இலக்கணம் இன்றி, எல்லாப் பாவிற்கும் பொதுவாக நிற்கும் பரிபாடல் பற்றியும்,

பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயனெறி யின்றிப்
பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப[7]

எனவரும் நூற்பா விளக்குகின்றது. இதனை வெண்பாவின் வகையாய்க் குறிப்பிடுவர் தொல்காப்பியர்.

தொல்காப்பியர், சிலவகைப் பொருண்மைகளைக் குறிப்பிட்ட யாப்பு வகையில் பாட வேண்டும் என வரையறை செய்துள்ளார். இதனால் பொருளுக்கேற்ற யாப்புவகை பண்டைக் காலத்தே வரையறுக்கப்பட்டிருந்தை அறியலாம்.

புறநிலை வாழ்த்து பற்றிய பாடல் ஆசிரியம் அல்லது வெண்பா யாப்பில் அமைதல் வேண்டும் என்றும், கலி அல்லது வஞ்சிப்பா யாப்பில் அமைதல் கூடாது என்றும் கூறுவர் தொல்காப்பியர்[8]. வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ பற்றிய பொருள்களும் மேற் கூறிய யாப்பு வகையிலேயே அமைதல் வேண்டும்[9]. கைக்கிளைப் பொருண்மை வெண்பா யாப்பில் தொடங்கி ஆசிரியப்பா யாப்பில் முடியும்[10].

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனர் புலவர்[11]

---

6. தொல். பொருள். செய். இளம். நூ. 101
7. தொல். பொருள். செய். இளம். நூ. 116
8. தொல். பொருள். செய். இளம். நூ. 109, 159
9. தொல். பொருள். செய். இளம். நூ. 110
10. தொல். பொருள். செய். இளம். நூ. 118
11. தொல். பொருள். அகத். நூ. 56

எனவரும் நூற்பா, நாடக வழக்கானும், உலகியல் வழக்கானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந் திணை இறுவாய்க் கூறுப்படுகின்ற அகப்பொருளுக்குக் கலி, பரிபாடல் என்ற இருவகை யாப்புக்களும் உரியவை என்னும் வரையறையைச் சுட்டிற்று. இங்ஙனம் குறிப் பிட்ட பொருண்மைக்கு உரிய யாப்பு வகைகளைத் தொல் காப்பியர் வரையறுத்துச் சுட்டியிருப்பினும், இவ்வரை யறைகள் பிற்காலத்து வழக்கிழந்து போயின என்பதும் அறியத்தகும்[12].

சங்ககாலப் பொருள்யாப்பு நெறி

சங்க இலக்கியத்துள் பெரும்பாலான தனிப்பாடல் களும் சில தொடர்நிலைப் பாடல்களும் அமைந்துள. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு ஆகியனவும் பத்துப்பாட்டு நூல்களும் பெரும்பான்மை ஆசிரியப் பாக்களாலும் சிறு பான்மை வஞ்சிப் பாக்களாலும் ஆயவை. கலித்தொகை கலிப்பாடலாலும், பரிபாடல் பரிபாட்டாலும் அமைந்தவை.

சங்க இலக்கியங்களில் யாப்புக்கும் பொருளுக்கும் இடையே நெருங்கிய வரையறையைக் காண இயலாது. எனினும் பொருளுக்கும் யாப்பின் வடிவ வேறுபாட்டுக்கும் இடையே இயைபு நிலையைக் காணலாம். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் முதலிய அகப் பொருளுக்கு உரிய உரிப்பொருள்களும் புறப்பொருளுக்கு உரிய துறைகளும் ஒரேவகை யாப்பினுல் இயன்றனவே. அகப்பொருள், புறப்பொருள் என்ற பொருள் வேறுப் பாட்டை யாப்பு வேறுபாட்டால் அறிய இயலாது. எனி னும் ஒரேவகை யாப்பினுள் அமைந்த வடிவ வேறு

12. 'இன்ன இன்ன பொருள் பற்றிப் பாடும்போது இன்ன இன்ன யாப்பில் அமைதல் மரபு என்றும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். அம்மரபுகள் பிற்காலத்தில் படிப்படியே கைவிடப்பட்டன - இலக்கியமரபு - டாக்டர் மு. வ. பக். 187

பாடுகள் இப்பொருண்மை வேறுபாட்டைச் சுட்டுவன வாயுள. அகப்பொருளில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, மற்றும் பிறமாந்தருள் கூற்று வேறுபடினும், இவ் வேறுபாட்டை யாப்பின் வடிவ வேறுபாடுகளே சுட்டுவன. நிகழ்ச்சித் தொகுப்பு, இயற்கைப் புனைவு, அறமுரைத்தல் ஆகிய எப்பொருள்களாயினும் அவை யாப்பு வேறு பாடின்றி வடிவ வேறுபாட்டால் மட்டுமே குறிப்பிடப் பெறுதலை அறியலாம். எனவே, சங்க இலக்கியப் பாடல் களுள் பெரும்பாலானவை ஒரேவகை யாப்பினுல் இயன் றனவாயினும், அவ்வொருவகை யாப்பினுள் பலவகை வடிவ மாறுபாடுகள் அமைந்து பொருண்மையைச் சிறப்பிக்கும் பாங்கினைக் காணலாம். இதனுல் பொருளுக் கென்று வரையறுக்கப்பட்ட யாப்பு வகைகள் சங்க காலத்தில எனினும் வடிவ மாறுபாடுகளுள என்பது அங்கை நெல்லி.

யாப்பு நெறியாளர்

இளங்கோவடிகள், பொருண்மைக்கேற்ப யாப்பு வகை களை இலக்கிய வடிவில் படைத்துக் காட்டிய நெறி யாளர். தாம் பாட எடுத்துக் கொண்ட பெருங்கதை தழுவிய தொடர்நிலைச் செய்யுளில் பயின்றுவரும் பல் வேறு வகைப் பொருண்மைகளுக்கு ஏற்ப பல்வேறு யாப்பு வகைகளைப் படைத்துக் கொண்டு, பொருளுக் கேற்ற யாப்பு வகையை நெறிப்படுத்தினர். சிலப்பதி காரத்துள் பொருளுக்கேற்ப யாப்பு நெறி வரையறை செய்யப்பட்ட பாங்கினை இவண் விரிவாகக் காண்பாம்.

கதை நிகழ்ச்சியும் நிலைமண்டிலமும்

தொடர்ந்து செல்லும் கதை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து செல்லும் யாப்பு வகையால் பாடுதல் எளிது. ஏற்ற இறக்கம் இன்றி அடிதோறும் நாற்சீரால் அமைந்து

கவிஞனின் கற்பனை விரிவுக்கேற்ப நெடுந்தூரம் நீண்டு செல்லும் இயல்பு ஆசிரியப்பாவுக்கு உண்டு. சங்கப் புலவோர் பலரும் தம் கற்பனை விரிவை விளக்க இப் பாவகையையே தேர்ந்தனர். வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றுக்கு முறையே அடிவரையறையும் உறுப்பு வரையறையும், சீர்வரையறையும் உள. பிற பாக்களைத் தேர்ந்தெடுப்பின், இவ்வரையறைக்கு உட்பட்டுத் தத்தம் கற்பனைகளைச் செறிக்கவும் சுருக்கவும் வேண்டிய இன்றியமையாமை கவிஞனுக்கு ஏற்படும். கருத்தின் விரிவையும் கற்பனைப் பெருக்கையும் செறிக்கவும் சுருக்கவும் நேரும் இடர்ப்பாட்டைப் போக்க, நீண்டு செல்லும் தொடர் ஓட்டமுள்ள ஆசிரியப்பாவையே கவிஞர்கள் தேர்ந்தனர். கூண்டுக்குள் கட்டுப்பட விரும்பாது, விரும்பியாங்கு பறக்கவெண்ணும் பறவைகள் போல, கவிஞர்களும் அடி, உறுப்பு, சீர்ச் சிறைக்குள் அகப்படாது அடியளவால் நீண்டு செல்லும் இயல்பினதும், உறுப்புக்கள் இல்லாததும் சீர் எண்ணிக்கை ஒத்தமைந்ததுமாய ஆசிரியத்தைத் தம் பாடுபொருளுக் கேற்ற யாப்பு வகையாகத் தேர்ந்தனர். கதையோட்டம் இயற்கை வண்ணனை, அறமுறைத்தல் ஆகிய பொருண் மைகளுக்கும் ஆசிரியப்பாவே வாய்ப்புடைய யாப்பு வகையாம்.

நிலைமண்டிலத்தின் பழமைச் சிறப்பு

ஆசிரியப்பாவுள் நிலைமண்டிலமே பழமைச் சிறப் பினது. நிலைமண்டிலத்தினின்றே பிறவகை ஆசிரியப் பாக்கள் வளர்ந்தன. நிலைமண்டிலம் ஒன்றையே ஆசிரியப்பா என்னும் பெயரால் தொல்காப்பியர் சுட்டு வர். இப்பாவின் ஈற்றயலடி முச்சீர்த்தாதலையும் இடை யிடையே சீர் குறைத்தாதலையும், முன்னும் பின்னும் பொருள் வேறுபடாது அடிமாற்றம் உடைத்தாதலையும்

முறையே நேரிசையாசிரியம், இணைக்குறளாசிரியம், அடிமறிமண்டிலவாசிரியம் என்ப. எனவே ஆசிரியத்துள் பழமைச் சிறப்பினதாய நிலைமண்டில ஆசிரியப்பாவை, இளங்கோவடிகள் தம் காப்பியத்தைப் பாடுதற்குரிய பெரும்பான்மை யாப்பு வகையாக அமைத்துக் கொண்டனர். நிலைமண்டில யாப்பில் அமைந்தனவாய் உள்ளவை, சிலம்பில் தனித்து வந்த பதினெட்டுக் காதைகளும், குறள் வெண்பாக்களை இடையில் பெற்றதாய் ஒருகாதையும், கூடுதல் பத்தொன்பது காதைகள். இவை நிலைமண்டில யாப்பு வகையால் பாடுதற்குரிய பொருண்மைச் சிறப்பை எங்ஙனம் பெற்று விளங்குகின்றன என இனிக் கூறுவாம்.

மனையறம் படுத்த காதை

கதையோட்டப் பொருண்மை

'கதையை உடையது காதையாம்' எனக் கூறுவர் அடியார்க்கு நல்லார். காதை என்னும் தலைப்புடைய பகுதிகளில் மட்டும் கதை நிகழ்ச்சிகள் உளவென்பது அவரது கருத்து. இக்கருத்து, பெரும்பான்மை நிலையில் ஏற்புடைத்தே. காதை என்னும் தலைப்புடைய பகுதிகளில் பிற பகுதிகளைப் போலன்றிக் கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றே இருத்தல் வேண்டும் என்பதும் இவ் விளக்கத்தால் புலனும்.

இக்காதையில், இருமுது குரவரும் கோவலன் கண்ணகி இருவரையும் இல்வாழ்க்கையில் அடிப்படுத்த வேண்டி வேறுபடவிட்ட கதை நிகழ்ச்சி விளக்கப்படும். கயமலர்க் கண்ணியாகிய கண்ணகியும், காதற் கொழுநனுகிய கோவலனும், திருமணத்திற்குப் பின்னர் நெடுநிலை மாடத்து இடைநிலத்து, மயன்விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை இருந்தனர். முதிர்கடல் ஞாலம் முழுதும் விளக்கும் கதிர் ஒருங்கிருந்த காட்சிபோல புதுமண இணையர் ஆண்டிருந்த மாட்சி விளங்கியது.

உள்ளத்தால் கலந்த அக்கேண்மையர் உடலாலும் கலக்க, அவர்தம் தாரும் மாலையும் மயங்கின. திருமகள் ஒத்த கண்ணகியின் திருமுகம் நோக்கித் தீராக் காதலுடன் கோவலன் குறியாக் கட்டுரையைக் கூறினான். மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே என உலவாக் கட்டுரை பலபாராட்டி மகிழ்ந்தான். தம் மக்கள் விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கை நிகழ்த்த விரும்பி, அவர்களை உரிமைச் சுற்றமொடு தனி இல்லில் அமைத்தனர் பெற்றோர். இவ்வாழ்வில் சில ஆண்டுகள் சென்றன. மனையறம் படுத்த காதையில் இடம் பெறும் கதையோட்ட நிகழ்ச்சிகள் இவை.

கோவலன், கண்ணகி ஆகியோரின் உரையாடல்களாக இப்பகுதி அமைந்திருப்பின் கூற்றும் மாற்றமுமாய் வரும் பொருண்மைக்கு உரிய யாப்பு வகையாகிய உறழ்கலியால் அடிகளார் இதனைப் பாடியிருப்பர். ஆனால் கோவலன் கூறும் குறியாக் கட்டுரைகளுக்குக் கண்ணகி விடை கூறவில்லை. அச்சமும், மடமும் நாணும் பயிலப் பெற்ற தமிழ்ப் பெண்ணாய், வாளா விருந்தாள் கண்ணகி. கோவலன் மட்டுமே உலவாக் கட்டுரை பல பாராட்ட, கண்ணகி அக்கூற்றுக்கு மாற்றம் உரையாது இருந்தமையாற்றான், தொடர்ந்து செல்லும் கதையோட்டமாய இந்நிகழ்ச்சியையும் கோவலன் கண்ணகியைப் பாராட்டி உலவாக்கட்டுரை கூறும் வண்ணனைப் பகுதியையும் அடிகளார் நிலைமண்டில ஆசிரியப் பாவால் பாடினர்.

கோவலன்-கண்ணகி வாழ்வின் முதல் நாள் தொடங்கி, தனிக்குடும்பம் அமைத்து வாழும் சில ஆண்டுகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளாய கதை ஓட்டமும் உலவாக்கட்டுரையாய வண்ணனையும் நிலைமண்டில ஆசிரியப்பாவால் இவண் பாடப்பெற்றன.

அரங்கேற்றுகாதை
இலக்கணம் கூறும் பொருண்மை

கோவலன் கண்ணகி இருவர் வாழ்க்கையில் மூன்றுமவளாக நுழைபவள் மாதவி. ஆடல், பாடல், அழகு என்ற மூன்றில் ஒன்றிலும் குறைபடாது, ஈராறும் அகவையில் தன் கூத்தின் சிறப்பைச் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி அரங்கேறியவள் இவள். அரங்கேற்றம் முடிந்த பின்னர், மாலைவாங்குநர் சாலுநம் கொடிக்கெனக் கூறி நகரநம்பியர் திரிதரு மறுகில் கூனி நிற்ப, அம்மாலையைக் கோவலன் வாங்கி, வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்து, மாதவியின் மணமனைபுக்கு விடுதலறியா விருப்பினன் ஆயினன்.

கூத்தி, ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன் தண்ணுமையாசிரியன், குழலோன், யாழாசிரியன், அரங்கு முதலியோரின் இலக்கண இயல்புகள் இக்காதைக்கண் சுட்டப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு பொருளின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறும் பொருண்மைக்கு அடிகளார் நிலைமண்டில ஆசிரியப் பாவையே பயன்படுத்தியுள்ள பாங்கு இங்குப் புலனும்.

ஐயாண்டில் தண்டியம் பிடித்து, ஏழாண்டு நடம் நவின்ற மாதவி மங்கைப் பருவத்தே அரங்கேறிய கதை நிகழ்ச்சியும் இலக்கணம் கூறும் செய்தியும் அமைந்த இக்காதை நிலைமண்டில யாப்பால் பாடப்பெற்றது.

அந்திமாலைச் சிறப்புசெய் காதை
இயற்கை வண்ணனைப் பொருண்மை

கோவலன், மாதவியின் மனைபுக்க பின்னர், ஒரு அந்திமாலைப் பொழுதை வண்ணிப்பது மூலமாக, மாதவியின் இன்ப வாழ்க்கையையும், கண்ணகியின் துன்ப வாழ்க்கையையும் இளங்கோவடிகள் விளக்குவர். நிலவுப்

பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்தில், கோலங் கொண்ட மாதவி கலவியும் புலவியும் காதலற்கு அளித்து இன்பமாய்த் திகழ்வதையும், கணவனைப் பிரிந்த கண்ணகி அஞ்செஞ்சீறடி அணிசிலம்புஒழிய, மென்துகில் அல்குல் மேகலை நீங்க, கொங்கை முன்றிலில் குங்குமம் எழுதாது கையற்ற நெஞ்சினளாய் அனங்கவேளால் அமுதங்கொண்டு எழுதப்பட்ட ஓவியம் புகை உண்டிருத்தல் போல விளங்குவதையும் இக்காதைக்கண் இளங்கோவடிகள் இயம்புவர். இவற்றுக்கு மேலும் இக்காதையுள் சிறப்பாகச் சுட்டத்தக்கது, வண்ணனைப் பொருண்மை. அந்தி மாலையின் அழகு நலங்கள் வண்ணிக்கப்பட்டு, அவ்வண்ணனைப் போக்குடன் கதை நிகழ்ச்சியும் கலந்து உரைக்கப்பட்டுள்ளது.

அந்திக்காலத்து மாலையைச் சிறப்புசெய்து வண்ணித்துப் பாடுவதன் மூலம் காப்பியத் தலைமாந்தரின் வாழ்க்கைக்கு உரிய இன்பச் சிறப்பும் துன்பப் புழுக்கமும் நிலைமண்டில யாப்பால் இவண் பாடப்பட்டன.

இந்திரவிழவூரெடுத்த காதை
நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை

புகார் நகர மக்கள் தீம்புனலுலகத் தெய்வமாய இந்திரனுக்கு ஆண்டுதோறும் நிகழ்த்தும் இந்திர விழாவைச் சிறப்புறச் செய்த கதை நிகழ்ச்சியை விளக்குவது இக்காதை. மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் என்னும் நகரின் இருபகுதிகளுக்கு இடையே நாளங்காடியில் அமைந்த பூதத்திற்கு மறக்குடிப் பெண்டிர் பூப்பலி செய்து பொங்கலிட்டுப் படைத்தனர்; ஐவகை மன்றங்களில் பலிகொடுக்கப்பட்டன; வச்சிரக் கோட்டத்திருந்த முரசை யானையின் பிடரியில் ஏற்றி விழா வறைந்தனர். கன்னிக் காவிரியின் புண்ணிய நன்னீர் கொணர்ந்து இந்திரனை நீராட்டி விழாச் செய்தனர்.

இவ்விழா நிகழ்ச்சிகள் நேரடியாகக் காப்பியக் கதைக்குத் தொடர்பற்ற முறையில் வண்ணிக்கப்பட்டிருப்பினும், காதையின் பிற்பகுதியில் கோவலன் மாதவியைக் கூடி இன்பங் கொள்ளுதல்போல, புகார் நகர ஆடவர் பரத்தையரைக் கூடி இன்புற்றனர், என்றும், குரல்வாய்ப் பாணரொடும் நகரப் பரத்தரொடும் திரிதரும் கோவலன்போல வண்டின் ஓசையுடனும், இன்னிள வேனிலுடனும் தென்றல் வீசியது என்றும் காப்பியத் தலைவன் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உவமையாக்கிக் காட்டுவதன் மூலம் காப்பியக்கதை நிகழ்ச்சியோடு கவிஞர் இக்காதையை இயைபுறுத்துவர். மேலும் கண்ணகி கருங்கணும், மாதவி செங்கணும் இடத்திலும் வலதினுந் துடித்தன எனக் காப்பியத் தலைவியரின் வாழ்க்கையில் நிகழவிருந்த மாற்றங்களையும் குறிப்பால் அடிகளார் இவண் பெற வைப்பர்.

இங்ஙனம் நிகழ்ச்சி வண்ணனையை உள்ளடக்கி கதை நிகழ்ச்சிகள் உவமைகள் வாயிலாகவும் குறிப்பாலும் விளக்கப்படும் இப்பகுதி நிலைமண்டில ஆசிரிய யாப்பால் பாடப் பெற்றது.

கடலாடுகாதை

நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை

இந்திரவிழவூரெடுத்த காதை போன்று, கடலாடு காதையுள்ளும் புகார் நகர மக்கள் இந்திர விழாவின் போது கடலாடி மகிழ்ந்த நிகழ்ச்சியைப் பற்றிய வண்ணனை விரிந்து செல்லும். பின்னர், மாதவி அவ்விழாக்களில் ஆடல் நிகழ்த்தினள் என்றும், கோவலனும் மாதவியும் கடலாடச் சென்றனர் என்றும் காப்பியக் கதைநிகழ்ச்சிகளோடு இக்காதை தொடர்புறுத்தப்பெறும்.

இந்திரவிழாவின்போது, மாதவி ஆடிய பதினோராடலும், பாடிய பாட்டின் பகுதியும் விதிமாண் கொள்

கையின் விளக்கப்பட்டன. ஆடல் காரணமாக ஊடல் கொண்டிருந்த கோவலன் உள்ளத்தை மகிழ்விக்க மாதவி கொண்ட ஒப்பனைக்கோலம் செப்பப்பட்டது. வான வண்கையனுய கோவலன் அத்திரி ஏறியும், மானமர் நோக்கி மாதவி, வையம் எறியும் கடற்கரைக்குச் சென் றனர். புன்னை நிழலில், புதுமணற் பரப்பில் வெண் கால் அமளிமிசையிருந்த கோவலனும் மாதவியும் கானற் பாவை இசைக்கத் தொடங்கினர். இங்ஙனம் கதையின் திருப்புமையப் பின்னணிக் களமாய இக்காதையுள் இடம் பெற்ற வண்ணனைப் பொருண்மையால் இப்பகுதி நிலை மண்டில ஆசிரியப்பாவால் அமைந்தது.

வேனிற்காதை

இயற்கை வண்ணனைப் பொருண்மை

வேனிற்காதையுள் இளவேனிற் பருவம் வந்ததை அடி களார் விளக்கிப் பருவ வரவால் கதை நிகழ்ச்சிகளின் மாற்றத்தையும் மொழிவர். கானல் வரிப்பாடல் காரண மாக கோவலனும் மாதவியும் பிரிந்த பின்னர், பருவ வரவு கண்டு, பிரிவாற்ருமையால் துயருறும் மாதவி, கோவலனுக்கு மலர்க்கடிதம் எழுதினுள். அதனைக் கொண்டு சென்ற தூதி வயந்தமாலை கூலமறுகில் கோவலற்கு அளித்தாள். கோவலனே, மாதவியை 'மாயப் பொய் பலகூட்டும் மாயத்தாளாக' எண்ணி மனங் கவன்ற நிலையில் இருந்தமையால் 'ஆடல் மகளே' எனக் கூறி, ஆயிழை எழுதிய மணித்தோட்டு திருமுகத்தை வாங்க மறுத்து விட்டனன். செய்தியறிந்த மாதவி 'மாலைவாரா ராயினும் காலை காண்குவம்' என்ற நம்பிக்கையில் பூமலர் அமளிமிசை பொருந்தாதிருந்தாள்.

மாதவியின் தனிமை வாழ்வின் துயரத்தையும் பிரிவுக்குப் பின்னர் கோவலனைப் பெற மாதவி மேற் கொண்ட முயற்சிகளையும் விளக்கும் இக்காதை வேனிற்

பருவமாய இயற்கைச் சிறப்பை வண்ணிக்கும் பொருண்மையால் நிலைமண்டில ஆசிரியப்பாவால் பாடப்பெற்றது.

நாடுகாண் காதை

வண்ணனைப் பொருண்மை

கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப்பட்டுச் செல்வது அவர்தம் வாழ்வில் நிகழும் திருப்பு நிகழ்ச்சி. நாட்டைக் காண்பதற்குப் புறப்பட்டுச் செல்லும் இடைவழியில்தான் தவமூதாட்டி கவுந்தியடிகள் வழித்துணை ஆகின்றாள். இடையிடையே பன்னாள் தங்கி நாடோறும் காவதமல்லது கடவாராய்ச் சென்ற நிலையில்தான் கோவலன் உள்ளம் கண்ணகியிடம் மீண்டும் மெல்ல மெல்ல ஈடுபாடு கொள்ளத் தொடங்கியது. வழியில் 'உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை கடவதும் உண்டோ' என்ற வம்பலர் வாய்மொழி கேட்டுச் செவியகம் புதைத்துக் காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்கி ஒடுங்கினள்.

பிரிந்தவர் உள்ளம் ஒன்றும் இவ் இடைவழிப் பயணம் காப்பியக் கதையோட்டத்தில் இன்றியமையாதது. காப்பியத் தலைமக்களின் இடைவழிப் பயணத்தை வண்ணிக்கும் பொருண்மைச் சிறப்பால் நிலைமண்டில ஆசிரிய யாப்பு வகையே இக்காதைக்கும் உரித்தாயிற்று.

காடுகாண் காதை

வண்ணனை, சமயவாதப் பொருண்மை

நாடுகாண் காதையில் கவுந்தியடிகள் என்ற காப்பிய மாந்தியின் அறிமுகம் நிகழ்தல் போன்று காடுகாண் காதையில் குடமலை நாட்டு மாங்காட்டு மறையோன் என்னும் மாந்தனின் அறிமுகம் நிகழ்கின்றது. மதுரைக்குச் செல்லும் வழியைக் கூறும் வழிகாட்டியாக இவண் காப்பியக் கதையோடு தொடர்பு பெறுவன். கிளை நிகழ்ச்சியாக வைணவ-சமண சமயத் தத்துவ வாதப் பொருண்மையையும் அடிகள் இக்காதையின் இடையே இணைப்பர்.

காப்பியத் தலைமாந்தர்களாய கோவலனும் கண்ணகியும் வாழ்க்கைப் புதுமை கருதி மதுரை செல்லும் நீண்ட வழிப் பயணத்தின் இரண்டாவது பிரிவு வண்ணனையாகவும் சமய வாதத்தை விளக்குவதாகவும் இக்காதைப் பொருண்மை அமைந்து இருத்தலால் இக்காதையும் நிலைமண்டில ஆசிரியப் பாவகையால் இயன்றது.

புறஞ்சேரியிறுத்த காதை

நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை

மதுரைக்குச் செல்லும் வழிப் பயணத்தினை விளக்கும் தொடர் காதைகளில் மூன்றுவதாகவும் இறுதியாகவும் விளங்குவது புறஞ்சேரி இறுத்த காதை. தங்கள் வழிப் பயணத்தின் இறுதியில், கோவலனும் கண்ணகியும் மதுரையின் எல்லையில் அமைந்த புறஞ்சேரியைச் சென்று அடைந்த கதைச் செய்தி இக்காதையில் விளக்கப் பெறும். மதுரைப் புறஞ்சேரி காப்பியக் கதையில் தலையிடம் பெறும் இடமேயாம். இங்குதான் தலைமாந்தி கண்ணகி கொடும்பாடு இல்லா வாழ்வு உடைய ஆயர்குல மாதரிடம் அடைக்கலம் தரப்படுகின்றுள் என்பது பின்னர்ச் சுட்டப் படும். புறஞ்சேரி இறுத்த பயண நிகழ்ச்சியாய வண்ணனைப் பொருண்மையை உள்ளடக்கிய இக்காதையும் நிலைமண்டில ஆசிரியப் பாவால் அமைந்தது.

ஊர்காண் காதை

நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை

கோவலனல் 'செங்கோல் தென்னவர் காக்கும் நாடு' எனப் பாராட்டுப் பெறும் பாண்டிய நாட்டின் தலைநகராம் மதுரைத் திருநகரைக் கோவலன் சுற்றிக் காணும் நிகழ்ச்சி இக்காதைக்கண் இனிது வண்ணிக்கப் பெறும். தனி நிலையில் நோக்க வம்பமகன் ஒருவன் ஒரு நகரைச் சுற்றிப் பார்க்கும் கிளை நிகழ்ச்சியாகவே இப்பகுதி அமையும்.

எனினும் அம்மகனைக் கோவலனாகக் கூறுவது இப்பகுதியைக் காப்பியக் கதையோடு தொடர்புபடுத்துகின்றது. நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை இடம் பெற்ற இக் காதை நிலைமண்டில ஆசிரியத்தால் பாடப் பெற்றது.

அடைக்கலக் காதை

நினைவோட்ட நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை

பதியெழு அறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூரின் மாண்பினை மாதவத்தாட்டியிடம் கோவலன் கூறுங்கால், தலைச்செங்கானத்து மாமறை முதல்வன் மாடலன் அவண் வருவன். காப்பியத்துள் புதிய மாந்தனாய் இவன் இங்கு அறிமுகம் பெறுகின்றான் கோவலனைக் கண்ட மாடலன், அவன், புகார் நகரில் கடக்களிறு அடக்கிய கருணை மறவனாகவும், நல்வழிப் படுத்திய செல்லாச் செல்வனாகவும் இல்லோர் செம்மலாகவும் வாழ்ந்த ஏற்றமிக்க வாழ்க்கையை எடுத்து இயம்பினன். இக்காட்சிகள் காப்பியத்துள் இடம் பெறும் நினைவோட்ட நிகழ்ச்சிப் பொருண்மைகள்.

கவுந்தி அடிகள், தன்னைத் தொழ வந்த ஆயர் முதுமகள் மாதரியிடம் கண்ணகியை அடைக்கலம் தருகின்றார். மாதரி, இருவரையும் அழைத்துக்கொண்டு இடைச்சேரி சேர்ந்தாள். இவ்விடைச்சேரி வாழ்வு, காப்பியக் கதையுள், இன்றியமையா நிகழ்ச்சி. இங்குதான், தலைவனும் தலைவியும் கூடி ஒரு நாளாயினும் உள்ளம் ஒன்றி இல்லறம் நிகழ்த்தும் இனிய காட்சி இயம்பப்படும். காப்பியத் தலைமக்கள் இறுதியாக இணைந்து வாழ்ந்த இன்பக் காட்சியை நல்கும் இடம் இடைச்சேரி ஆகும். எனவே நினைவோட்ட நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மையும் கதையோட்டப் பொருண்மையும் அமைந்த இப்பகுதி நிலைமண்டில ஆசிரியப் பாவால் அடிகளாரால் பாடப் பெற்றது.

கொலைக்களக் காதை

கதையோட்டப் பொருண்மை

கோவலனும் கண்ணகியும் மாதரியின் இடைச்சேரியில், பூவல் ஊட்டிய புனைமாண் பந்தர்க் காவல் சிற்றிலில் தனியே வாழ்ந்தனர். கண்ணகி, தன் மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய் அரிந்து, தன் திருமுகம் வியர்க்க, செங்கண் சிவக்க அட்டில் சமைத்து அமுதம் உண்க அடிகள் என அழைத்துக் கோவலனுக்குப் படைத்தாள். உண்ட பின்னர், கோவலன் தன் வாழ்க்கைத் துணைவியை நோக்கித் தன் தவற்றுக்கு வருந்த, கண்ணகியும் அவ்வாய்ப்பைப் பயன்படுத்திப் 'போற்றாவொழுக்கம் புரிந்தீர்' என இடித்து உரைத்தாள்.

கோவலன், கண்ணகியிடம் விடை பெற்றுச் சிலம்பை விற்கச் சென்றான். நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர, வந்த பொற்கொல்லனைக் கண்டு தன் சிலம்பைக் காட்டினான். பொற்கொல்லனோ 'கரந்து யான் கொண்ட காலணி ஈங்குப் பரந்து வெளிப்படா முன்னம், புலம் பெயர்ப் புதுவனிற் போக்குவன் இப்பழியை' என எண்ணி, மன்னனிடம் அதனை உரைத்துக் கொலைஞரோடு திரும்பினான். கொலைஞருள் ஒருவனாகிய கல்லாக் களிமகன் கோவலன்மீது வாள் எறிந்து அவனை வீழ்த்தினான்.

கதைப் போக்கில் உச்ச நிகழ்ச்சியாய இக்கதையோட்டப் பொருண்மை, நிலைமண்டில ஆசிரியப் பாவால் பாடப் பெற்றது.

அழற்படு காதை

கதையோட்டமும், நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மையும்

கோவலன் கொலைப்பட்டதை அறிந்து கண்ணகி காவலன் முன்னர்ச் சென்று வழக்காடி வென்று, அதனால்

உள்ளம் அமையாது மதுரை நகரைத் தீக்கிரையாக்கினுள். நகரில் தீக்கொளுவும் பல்வேறு காட்சிகளை அழற்படு காதை அழகுற வண்ணிக்கின்றது. மதுரை நகரின் வீதிகளில் இயங்கியும் மயங்கியும் இருந்த கண்ணகி முன்னர், கொந்தழல் வெம்மைக் கூரெரி பொருது மதுராபுரித் தெய்வம் வந்து தோன்றினள். உரைசால் பத்தினி, உயர்ந்தோர் ஏத்தும் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படும் சிறப்புக் கதைப் பொருண்மையும் அழல் பற்றும் வண்ணனைப் பொருண்மையும் இக்காதைக்கு உரியன. ஆதலால் இக்காதை நிலைமண்டில ஆசிரிய யாப்பால் அமைந்தது.

காட்சிக் காதை

கதையோட்டமும், நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மையும்

வஞ்சிக் காண்டத்தில் இரண்டாவது காதையாக விளங்கும் காட்சிக் காதையில் செங்குட்டுவன், வேண்மாள், சாத்தனுர், வில்லவன் கோதை, அழும்பில் வேள் ஆகிய காப்பிய மாந்தர்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். வஞ்சிக் காண்டக் கதை நிகழ்ச்சிகள் காப்பியத்தில் கிளைக் கதை நிகழ்ச்சிகளாகத் தொடங்கிடினும், போகப் போக மூலக் கதையோடு பின்னிப் பிணைந்து வேறுபாடு அற்றனவாகவே ஆகிவிடுகின்றன.

மஞ்சுசூழ் சோலை மலைவளம் காணச் சேரமன்னன் செங்குட்டுவன் சுற்றத்தாரோடு சென்ருன். பெருமலை விலங்கிய பேரியாற்றங் கரையில், குன்றக்குறவர் பல வகைக் கையுறைப் பொருட்களோடு மன்னனைக் கண்டு கானவேங்கைக் கீழ் ஓர் காரிகை முலையிழந்தாளாய்த் துயருழந்தாளாய் வானவர் போற்ற வானகம் சென்ற செய்தி கூறினர். அருகிருந்த தண்டமிழாசான் சாத்தன் ஒண்டொடி மாதர்க்கு உற்றதை எல்லாம் திண்டிறல்

வேந்தனுக்குச் செப்பினர். வல்வினை வளைத்தகோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்ந்துச் செங்கோலாக்கியது கண்டு உவகையுற்ருன் செங்குட்டுவன். 'பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' என அவன் மனையாள் கூறினள்.

நூலறிபுலவர் 'பொதியிலும் இமயத்திலும் கற்கால் கொள்ளினும் கடவுளாகும்' என மொழிந்தனர். பொதியில் கல் கொள்வது சிறப்போடு வரூஉம் செய்கை யன்று என எண்ணிய செங்குட்டுவன் இமயத்தினின்றே கல் கொணர முடிவெடுத்தான். இமயத்தில் கல்கொணரப் போவதைப் பறை அறைந்தனர்.

காட்சிக்காதையின் கதைப்பொருள் கிளை நிகழ்ச்சி ஆயினும், கண்ணகியின் சிலைக்கே கல்கொணரச் சென்றனர் ஆதலால், இது மூலக்கதையோடு இணைந்தது. குன்றக்குரவர் மன்னனைக் காணக் கொணர்ந்த கையுறைப் பொருள்கள் பற்றியதும் தண்டமிழ்ச் சாத்தன் கூறும் கண்ணகி கதை பற்றியதும் வண்ணனைப் பொருண்மையாகவே விளங்குதலால், இக்கதைப் பகுதியை இளங்கோவடிகள் நிலைமண்டில ஆசிரியப்பாவால் யாத்தார்.

கால்கோட் காதை

கதை, புறத்திணைப் பொருண்மை

காட்சிக் காதையில் தொடங்கிய கதை நிகழ்ச்சியே பிறவஞ்சிக் காண்டக் காதைகளிலும் தொடர்ந்து செல்கிறது. காப்பியத் தலைமாந்தியாய கண்ணகியின் புற வாழ்வுக் கதை இக்காதைகளில் சுட்டப்படுகின்றது.

செங்குட்டுவன் நன்முழுத்தத்தில் வாளையும் குடையையும் வடதிசைக்குப் புறவீடு செய்தான். பூவா வஞ்சியில் பூத்த வஞ்சியைச் சூடிச்சென்ற செங்குட்டுவன் அருந்தமிழாற்றல் அறியாது எதிர்ந்த காவா நாவிற்

கனகவிசயரை வென்றான். இறுதியில் பொற் கோட்டு இமயத்தில் பொருவறு பத்தினிக்குக் கற்கால் கொண்டான். படைச் செலவும், போர்வென்றியும் இக்காதைக்கு உரிய புறத்திணைப் பாடுபொருள்கள். இவற்றைப் பிறவகை யாப்பினாலும் பாடி இருக்கலாம் எனினும், கதையோட்டத்தின் இன்றியமையாமையை விளக்குமுகத்தான் புறத்திணைப் பொருண்மையும் இடம் பெற்ற இப்பகுதி கதையோட்டப் பொருண்மைக்கு உரிய யாப்பு வகையாகிய நிலைமண்டிலப் பாவால் பாடப்பெற்றது எனலாம்.

நீர்ப்படைக் காதை

கதை நினைவோட்டத் தொடர்புப் பொருண்மை

வடபேரிமயத்தில் கடவுள் பத்தினிக்குக் கல் கால் கொண்டு கனகவிசயர்தம் கதிர் முடியேற்றிக் கங்கைப் பேரியாற்றில் நீர்ப்படை செய்து மீண்டான் செங்குட்டுவன். இடைவழியில் மாடலமறையோன் எதிர்ப்படுகின்றான். 'மாதவி மடந்தை கானற்பாணி கனகவிசயர் தம் முடித்தலை நெரித்தது' என முக்காண்டக் கதை நிகழ்ச்சிகளை ஈரடிகளில் நினைவோட்டப் பொருண்மை நிலையில் இயைபுறுத்திக் கூறினன். இறுதியில், செங்குட்டுவன் அருந்தமிழாற்றல் தெரியாது மலைந்த கனகவிசயரை இருபெரு வேந்தர்க்குக் காட்டிட ஏவினன்.

இக்காதையுள், மாடல மறையோன் வருகை இன்றியமையாச் சிறப்பினது. புகார், மதுரை நகர நிகழ்ச்சிகளின் பிற்பகுதியை மாடலன் வாய்மொழியால் நினைவோட்ட முறையால் அறிகின்றோம். முந்திய காண்டங்களின் கதைத் தொடர்ச்சியே வஞ்சிக் காண்டத்தும் பேசப்படுகின்றது என்ற தொடர்பு உணர்ச்சியையும் இது நமக்கு உண்டாக்குகின்றது. கதையோட்டத்தை விளக்கி, கதை நிகழ்ச்சிகளின் நினைவோட்டத் தொடர்புக் களமாய் விளங்கும் இக்காதை, நிலைமண்டில ஆசிரியப்பா வகையால் மொழியப்பட்டது.

நடுகற் காதை
கதை, புறத்திணைப் பொருண்மை

கொடிமதில் மூதூர் நடுநின்றோங்கிய தமனிய மாளிகைப் புனைமணி அரங்கில் கூத்தச் சாக்கையன் ஆடலில் மகிழ்ந்திருந்தான் மன்னன். அதுகாலை, 'உயிருய்ந்தோரை வெல்போர்க்கோடல் வெற்றமன்று' எனச் செம்பியனும் செழியனும் செப்பிய மொழிகளை நீலன் கூற, செங்குட்டுவனின் தாமரைச் செங்கண் தழல் நிறம் கொண்டது. மருங்கிருந்த மாடலன் மன்னனை அமைதிப்படுத்தி, 'அரசர்க்கோங்கிய பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்' என வேண்டினன். அவன் சொல்லிய முறைமையின் வேள்விச் சாந்தியின் விழாக் கொள வேந்தனும் ஏவினன். வேள்விக்குப் பின்னர் கண்ணகிக்கு வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்துக் கடவுள் மங்கலம் செய்கென விதித்தனன் செங்குட்டுவன். மாடலமறையோன் யாக்கை, செல்வம், இளமை ஆகிய வற்றின் நிலையாமையாகிய காஞ்சிப் பொருண்மையை விளக்குவதும் இக்காதையில் இடம் பெற்றுள்ளது. புறத்திணையாகிய காஞ்சிப் பொருண்மை விளக்கப்படுதற்கு உரிய யாப்புவகையாகவும் நிலைமண்டில ஆசிரியம் விளங்கும் சிறப்பு இதனால் பெற்றாம்.

கதையோட்டப் பொருண்மையும் புறத்திணையாய காஞ்சிப் பொருண்மையும் செறிந்து விளங்கும் இக்காதை நிலைமண்டில ஆசிரியப் பாவால் ஆக்கப் பெற்றது.

வரந்தருகாதை

கதை, நினைவோட்டஉத்திப் பொருண்மை

சிலப்பதிகாரத்தின் இறுதிக் காதையாக இயல்வது வரந்தருகாதை. காப்பியக்கதை நிகழ்ச்சிகள் இறுதிவரை தொடர்ந்து செல்லும் இயல்பினை விளக்கும் முறையில்

இவ்விறுதிக் காதையும் நிலைமண்டில ஆசிரியப்பா யாப்பினால் அமைந்தது.

தெய்வ நல்லணி கொண்ட கண்ணகி செங்குட்டுவன் முதலாய மன்னர்க்கு விரும்பிய வரந்தந்த கதை நிகழ்ச்சிகளைக் கருவாய்ப் பெற்றது இக்காதை. மாடலன், தேவந்தி வரலாறு கூறும் நிகழ்ச்சி புகார்க் காண்டக் கதை நிகழ்ச்சியோடு நினைவோட்ட உத்தி நிலையில் இக்காண்டக் கதை நிகழ்ச்சிக்கு உரிய இயைபினைச் சுட்டும். கதையின் இறுதிக் கூறாய் அமைந்ததும் நினைவோட்ட உத்திக் கூறினைப் பெற்றதுமாய இக்காதை நிலைமண்டில ஆசிரிய யாப்பால் அமைக்கப் பெற்றது.

நிலைமண்டிலத்துக்கு உரிய பொருண்மைகள்

நிலைமண்டில ஆசிரியப்பா, குறிப்பிட்ட கதை நிகழ்ச்சி ஒன்றினை மட்டுமே விளக்கும் யாப்பு வகையன்று. கதையோட்டப் பொருண்மையுடன், இலக்கணங்கூறுதல், இயற்கை வண்ணனை, சமயவாதம், புறத்திணை, ஆகிய பொருண்மைகளை விளக்குதற்கு உரிய யாப்பு வகையாகவும் விளங்கியது. கதைப்பொருண்மை அனைத்துக் காதையுள்ளும் நீக்கமற நிறைந்திருப்பது. அதற்கு மேலும் மேற்கூறிய பொருண்மைகளும் இக்காதைகளில் நிறைந்துள.

இத்தகைய பொருண்மைகள் நிலைமண்டில யாப்பால் பாடப்பெறலாம் என்னும் வரையறையைச் சிலப்பதிகார அமைப்பால் அறிகின்றோம். பிற பகுதிகளிலும் கதைப் பொருண்மை இருப்பினும், அவற்றுக்கு மேலாக இன்றியமையாப் பிற பொருட் சிறப்பினால் அக்காதைகள் பெயர் பெற்றன என்பதை ஆங்காங்கு விளக்குவல்.

உணர்வுப் பொருண்மையும் குறள்மிடைமண்டிலமும்

மதுரைக் காண்டத்தின் இறுதிக்காதையாய கட்டுரை காதை நிலைமண்டில ஆசிரியப்பாக்களுக்கு இடையே

குறட்பாக்கள் மூன்றினைப் பெற்று 'குறள் மிடை மண்டில' மாக விளங்குவது.

தொடர்ந்து செல்லும் கதையோட்டம், இலக்கணம் கூறல், வண்ணனைப் பொருண்மை முதலானவற்றை விளக்க நிலைமண்டில ஆசிரியத்தை இளங்கோவடிகள் பயன்படுத்திய யாப்பு நெறி முன்னர் விளக்கப்பட்டது. குறட்பாக்கள் இடையே மடுக்கப்பெற்ற இந்நிலை மண்டிலயாப்பு இக்காதைக்கு உரிய யாப்பு வகையாகப் பயன் படுத்தப்படுதலால், இப்பகுதிக்கு உரிய பொருண்மை வேறுபடுவது புலனும்.

கட்டுரை காதையில் பொற்கைப் பாண்டியன் வர லாறு, பராசரன் வரலாறு, பரதன் வரலாறு ஆகிய மூவேறு கிளைக்கதைகள் மதுராபதித் தெய் வத்தின் கூற்றுய் இடம் பெற்றுள்ளன. மூவேறு கிளைக் கதைகள் இடம் பெற்றுள்ளதைத் தொடர்பு படுத்தி அறிமுகப்படுத்தும் முறையில் இக்காதைக்கண் மூன்று குறள் வெண்பாக்கள் இடம் பெற்றன. ஒவ்வொரு கிளைக்கதையையும் விளக்கும் கருவாய் இக்குறள் வெண் பாக்கள் ஒவ்வொன்றும் அமைந்துள.

பொற்கைப் பாண்டியன் வரலாறு : அவல உணர்ச்சி

பொற்கைப்பாண்டியன், கீரந்தையின் புதவக்கதவம் புடைத்தமைக்காக, வச்சிரத் தடக்கை இந்திரனின் உச்சிப் பொன்முடியில் ஒளிவளை உடைத்த தன் கையையே குறைத்துக் கொண்டனன். மறைநா ஓசை அல்லது மணிநா ஓசை கேட்காத பாண்டிப் பெருநாட்டில், கோவலன் கொலை நிகழ்ச்சி ஒரு விரைவு நிகழ்ச்சியாய், ஆராயா நிகழ்ச்சியாய் அமைந்து விட்டது. செங்கோல் திறம்பா மன்னவன் நாட்டு மதுரைத் தெய்வம் எதிர் பாராது நிகழ்ந்த இத்துன்ப நிகழ்ச்சியால் வருந்திப் புலம்பும் அவல உணர்ச்சியை,

பெருந்தகைப் பெண்ணொன்று கேளாயென் னெஞ்சம்
வருந்திப் புலம்புறும் நோய்

எனவரும் முதல் குறள் வெண்பா விளக்குகின்றது.

பராசரன் வரலாறு: இரக்க உணர்வு

பராசரன் வரலாறு, பாண்டியன் ஆட்சியில் நிகழ்ந்த ஒரே பிழையைச் சுட்டுவது; பாண்டியன் அழியும் ஊழ் வினைக்குக் காரணமாய் விளங்குவது.

தோழிநீ ஈதொன்று கேட்டியெங் கோமகற்கு
ஊழ்வினை வந்தக் கடை

எனவரும் இரண்டாம் குறள் வெண்பா மதுராபதித் தெய்வத்தின் இரக்க உணர்வோடு இயைபுடைத்தது.

பரதன் வரலாறு: துன்ப உணர்வு

முன்னைப் பிறவியில் பரதனால் கொலைப்பட்ட சங்கமன் மனைவி நீலி இட்ட வழுவில் சாபம் இப் பிறவியில் கோவலன் கொலைக்குத் தீதுற வந்த வினை யாயிற்று. பரதன் வரலாறு,

மாதரா யீதொன்று கேளுன் கணவற்குத்
தீதுற வந்த வினை

எனவரும் மூன்றும் குறட்பாவோடு தொடர்புடைத்து. மதுராபதித் தெய்வம் கோவலனுக்கு நிகழ்ந்த முடிவுக்காக வருந்தும் துன்ப உணர்வு இக்குறட்பாவில் விளங்கக் காணலாம்.

இங்ஙனம் கதைப்பொருண்மையை விளக்குதலோடு மூவேறு கிளைக்கதைப் பொருண்மைகளையும் மதுராபதித் தெய்வத்தின் வேறுபட்ட உணர்ச்சிகளை விளக்கும் பொருண்மையையும் உடைத்தாயிருத்தலால், 'குறள்

மிடை மண்டிலப் பா' வாய் இக்காதை அமைந்திருக்க கலாம் என எண்ண இயலும்.

எனினும் கிளைக்கதை நிகழ்ச்சிகள் மட்டுமே இடம் பெற்ற பிற காதைகள் இத்தகைய யாப்பு வகையால் பாடப்பெறவில்லை என்ற வேறுபாடும் சுட்டுதற்குரித்து. சான்ருக, தேவந்தியின் கிளைக்கதை இடம் பெற்ற கனுத் திறமுரைத்த காதையும் பத்தினிப் பெண்டிர் எழுவர் வரலாருய கிளைக்கதைகள் இடம் பெற்ற வஞ்சின மாலையும் கலிவெண்பா யாப்பில் அமைந்தவை. எனவே கிளைக்கதை நிகழ்ச்சிகளோடு சிறந்த உணர்ச்சிப் பொருண்மைகளும் இடம் பெறுமாயின், அக்காதை குறள்மிடை மண்டிலம் என்னும் யாப்பால் பாடப்பெறுதல் உண்டு என்ற வரையறையை இதனுல் அறியலாம்.

இனி, கட்டுரை காதைக்கண் சுட்டப்பெறும் கிளைக் கதை வரலாற்று நிகழ்ச்சிகள் ஊழ்வினையோடு இயைத் துக்கூறப்படும் சிறப்பும், முற்பிறவி நிகழ்ச்சிகளோடு இணைத்துக் கூறப்படும் கலவையும் உடையவை. இம் முறையில் பிற கிளைக்கதை உணர்த்தும் காதைகளி னின்றும் இக்காதை வேறுபடுகின்றது.

கிளைக்கதையும் கலிவெண்பாட்டும்

கிளைக்கதைகள் இடம் பெற்ற கனுத்திறமுரைத்த காதையும், வஞ்சினமாலையும் கலிவெண்பா என்னும் யாப்பில் அமைந்துள. இவற்றுள் கனுத்திறமுரைத்த காதை என்னும் பெயர் அமைப்பால் இக்காதை கனவுப் பொருண்மையது என அறியலாம். கோவலன் கண்ட கனவுப் பொருண்மை அடைக்கலக் காதையுள்ளும், பாண்டிமாதேவி கனவுப் பொருண்மை வழக்குரை காதை யுள்ளும் இடம் பெற்றிருப்பினும், கண்ணகியின் கனவுப் பொருண்மையைக் கொண்ட காதையே கனுத்திற

முரைத்த காதையெனக் கனவுப் பொருண்மையாலேயே பெயர் பெற்றது.

கலிவெண்பாட்டு ஒருபொருள் நுதலி வர வேண்டும் என்னும் யாப்பியலுக்கேற்ப கனாத்திறமுரைத்த காதை கண்ணகியின் கனவுப் பொருண்மையும் வஞ்சினமாலை கண்ணகியின் வஞ்சினப் பொருண்மையும் நுதலி வந்தன. இப்பொருண்மைச் சிறப்பால் காதைகளும் பெயர் அமைப்புப் பெற்றன.

காதைகளின் பெயர் அமைப்புக்குக் கனவு, வஞ்சினம் ஆகிய பொருண்மைகள் அடிப்படையாய் இருத்தல் போன்று, காதைகளின் யாப்பு வகைக்குக் கிளைக்கதைப் பொருண்மை அடிப்படையாய் அமைந்துள்ளது. கலி வெண்பாட்டு 'ஒருபொருள்' நுதலி வரவேண்டும் என்னும் தொல்காப்பிய வரையறை இவண் கிளைக்கதைப் பொருளாக வரையறுக்கப்பட்ட சிறப்பு நிலையை அறியலாம்.

கிளைக்கதை நுதலிவரும் பொருண்மைச் சிறப்பாலேயே இவ்விரு காதைகளும் கலிவெண்பா யாப்பால் அமைந்தன. கனாத்திறமுரைத்த காதையில் வரும் தேவந்தி வரலாறு, வஞ்சின மாலையுள் அமைந்த பத்தினிப் பெண்டிர் வரலாறு ஆகிய கிளைக் கதைகள் இடம் பெற்ற சிறப்பால் இவ்விரு காதைகளும் கலிவெண்பா யாப்பில் பாடப் பெற்றன. எனினும் அடைக்கலக் காதையுள் வரும் கருவிரல் வானவன் கதை கிளைக் கதையன்று; சான்றுக் கதையாம் என்னும் வேறுபாடும் இவண் நினையத் தகும்.

கூற்று மாற்றமும் உறழ்கலியும்

இருவர் அல்லது சிலர் கூற்றும் மாற்றமுமாய் உரை யாடும் பொருண்மை, இலக்கியத்தில் அருகிய வழக்கு உடைத்து. இப்பொருண்மைக்கு உரியதாய் உறழ்கலி

என்னும் பாவகையும் விளங்குகின்றது. தாழிசை, தனிச் சொல், அம்போதரங்கம் முதலாய உறுப்புக்களையும் இப் பாவகை பெற்றுவரும் என்பதை இலக்கண உரையாசிரியர் குறிப்புக்களால் அறியலாம்.

கோவலன் கொலைக்குப் பின்னர், பாண்டிமாதேவி தான் கண்ட தீக்கனவைப் பாண்டியன் நெடுஞ்செழிய னிடம் கூறுதல், பாண்டியனிடம் கண்ணகி தன் கணவன் குற்றமற்றவன் என வழக்காடுதல், குற்றம் உணர்ந்த கொற்றவன் மயங்கி வீழ்தல், பாண்டிமா தேவியும் உடன் உயிர் துறத்தல் ஆகிய கதை நிகழ்ச்சிகள் இக்காதைக்கண் இடம் பெற்றுள எனினும் இது நிலைமண்டில ஆசிரியப்பா வகையால் பாடப் பெறவில்லை.

கதை நிகழ்ச்சிகளுக்கு மேலும் இக்காதையில் சிறப்புப் பொருண்மை இருத்தலாற்றான், கதை நிகழ்ச்சியைப் பாடும் நிலைமண்டில ஆசிரியப்பாவை இளங்கோவடிகள் ஈண்டுப் பயன்படுத்தவில்லை என்பது தெளிவு. இக்காதை யில் இடம் பெற்ற பொருண்மைகளில் இளங்கோவடிகள் வழக்காடும் பொருண்மையையே சிறப்பாகக் கருதினர். இச்சிறப்புப் பொருண்மையின் காரணமாகவே இக் காதையும் பெயர் பெற்றது.

வழக்காடுதல் என்பது இருவர் இடையே கூற்றும் மாற்றமுமாக விரவி வரும் உரையாடலே! எனவே கூற்றும் மாற்றமுமாய் விரவி வரும் இவ்வழக்குரைப் பொருண்மை நிறைந்த காதையை உறழ்கலி என்னும் யாப்பு வகையால் அடிகள் பாடினர். இம்முறையில், கூற்றும் மாற்றமும் விரவி வரும் பொருண்மை உறழ்கலியால் பாடப் பெறும் என்ற பொருள் யாப்பு இயைபு நெறியும் சுட்டப்பட்டது.

இன்பதுன்ப உணர்வும் மயங்கிசையும்

மங்கல வாழ்த்துப் பாடலிலும், ஊர்சூழ்வரியிலும் முறையே இன்ப, துன்ப உணர்வுகள் மிக்கு வெளிப்படு கின்றன. கோவலன் கண்ணகி மணம் ஊராருக்கும் உற்றாருக்கும் பெருமகிழ்ச்சியைத் தந்த நன்மணம். மாகவான் நிகர் வண்கை மாநாய்கன் குலக் கொம்பருக்கும், வருநிதி பிறர்க்கார்த்தும் மாசாத்துவான் என்னும் இருநிதிக் கிழவன் மகனுக்கும் நிகழும் திருமணம் புகார் நகரின் சிறப்பு நிகழ்ச்சியாகும். உற்றாரின் உவகை உணர்வை 'மணவணி காண மகிழ்ந்தனர்' என வரும் குறிப்பால் விளக்குவர் அடிகளார். இரு மனம் இணையும் திருமண நிகழ்ச்சியின்போது அனைவரிடமும் இன்பம் என்னும் உணர்ச்சியே மீதூர்ந்து நிற்றல் இயற்கை.

இன்ப உணர்வுக்கு முரணாய துன்ப உணர்வு, அவலத்தோடு பிணைந்து வெளிப்படுவதை ஊர்சூழ் வரியில் காணலாம். கண்ணகி புது வாழ்வு காண வழித்துணையாகி வந்த வாழ்க்கைத் துணைவனை வேற்று நாட்டில் இழந்து யாரும் அற்ற அனாதையாய் மதுரை நகரின் வீதிகளில் துன்புற்றுத் திரிகின்றனள். 'பட்டேன் படாத துயரம்' என்றும், 'என்னுறு துயர் கண்டும் இடருறு மிவளென்னீர்' என்றும் இக்காதையில் வரும் அடிகள் இத்துயர உணர்வை வெளிப்படுத்துவன. இக்காதையுள் கண்ணகியின் துயர உணர்வு மிக்கிருத்தலைக் காண்கின்றோம்.

இன்பமும் துன்பமுமாய உணர்வுகள் மிக்குழி, யாப்பின் உறுப்புக்களும் மாறுபட்டும் வேறுபட்டும் வரும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் யாப்பு பயன் படுத்தப்பட்டது. இன்ப உணர்வை வெளிப்படுத்தும் மங்கல வாழ்த்துப் பாடலையும், துன்ப உணர்வை வெளிப் படுத்தும் ஊர்சூழ் வரியையும் அடிகளார் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் பாவகையால் பாடுவர்.

எனவே இன்ப துன்ப உணர்ச்சிப் பொருண்மையை வெளிப்படுத்துதற்கு உரிய யாப்பு வகையாக மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவை இளங்கோவடிகள் பயன்படுத்தினர் என்பது பெறப்படும்.

மனையறம் படுத்த காதையுள்ளும் இன்ப உணர்வின் மிகுதிப்பாடு வெளிப்பட்டு நிற்கிறது எனினும், இம்மிகுதிப் பாட்டை அடிகளார் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வால் பாடவில்லை. மாருக, கோவலன் கூறும் கூற்று வகையையே மயக்கத்தில் வெளிப்படும் உலவாக் கட்டுரை யாய்ப் படைத்துள்ளார் என்பதும் நினையத் தகும்.

இக்காதைகளுள் கதை நிகழ்ச்சிகளைவிட, இவ்வின்ப துன்ப உணர்வு வெளிப்பாடே சிறப்புடையது என்பது இளங்கோவடிசள்தம் கருத்தாம். எனவே கதை நிகழ்ச்சி களைப்பாடும் நிலைமண்டில ஆசிரியப்பா யாப்பினுல் இக் காதையைப் பாடாமல் வேறுபட்ட யாப்பு வகையால் பாடினர். இதனுல் இன்ப துன்ப உணர்வுகள் மிகுதியும் வெளிப்படும் காதைகளைப் பாடுதற்கு மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் பாவகை உரியது எனப் பொருள் யாப்பு இயைபு நெறி பெறப்பட்டது.

தொடர்ச்சிப் பொருண்மையும் கொச்சகவொருபோகும்

துன்பமாலை என்னும் பகுதி துன்ப உணர்வுகளின் தொடர்ச்சியை விளக்கிக் கூறுவது. கண்ணகிக்கு அவள் வாழ்வில் நிகழ்ந்த துன்பங்கள் ஒவ்வொன்றும் அவள் வாய்மொழியினுலேயே இக்காதைக்கண் சுட்டப்படுகின்ன. இக்காதையுள் கதைப் பொருண்மை இருப்பினும், துன்ப உணர்வுப் பொருண்மை இருப்பினும், அவற்றிலும் அத் துன்ப உணர்வுகளின் தொடர்ச்சி நிலையே இளங்கோ வடிகள் தம் உள்ளத்தை ஈர்த்த சிறப்பு பொருண்மை யாகும். மருட்கை அவலம், அரற்று, கவலை, கையாறு

என்னும் இப்பொருண்மைகள் இக்காதையுள் தொடர்ந்து வருகின்றன. இதனை 'மருட்கையென்னும் மெய்ப்பாடும், அவலம் அரற்றுக் கவலை கையாறென்னுமிவையும் நிகழ் தலியல்பினுல் இதனை மாலை என்முர் எனக் கொள்க' எனவரும் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியும் உணர்த்தும்[13]. இங்ஙனம் தொடர்ச்சிச் சிறப்பு இக் காதையுள் அமைந்திருத்தலால், இளங்கோவடிகள் இக் காதையைத் தொடர்ச்சியாக வரும் யாப்பினுல் வேறு பட்ட கொச்சகவொருபோகுப் பாக்களால் அமைத் துள்ளனர். எனவே பலவகை உணர்ச்சிகளின் தொடர்ச்சிச் சிறப்பு நிலையைப் பாடுதற்கு யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகை உரியதாகும் என்ற பொருள் யாப்பு இயைபு நெறியும் பெறப்படும்.

குழுப்பொருண்மையும் பாவினங்களும்

கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை ஆகிய ஐந்து காதைக ளும் குழுப்பொருண்மை உடையவை. இக்காதை நிகழ்ச்சி கள் மக்கட் குழுவினர் சேர்ந்து இயற்றும் சிறப்பின. இக் காதைகள் திணை மக்களின் வாழ்வியற் பாங்குகளையும் உணர்த்துவன. கானல்வரி, வேட்டுவவரி எனவரும் வரிப்பெயர்களும் ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை எனவரும் குரவைப் பெயர்களும் இக்காதைகளில் இசைக்கூறுகளும் நாடகக் கூறுகளும் விரவிவரும் இயல்பைச் சுட்டுப.

மக்கட் குழுவினர் பலதிறத்தினராதல்போல, இக் காதைகளுள் பயின்ற இசை நாடகக் கூறுகளும் பல திறத்தன. பல்வேறு யாப்பு அமைப்பில் அமைந்த இசைப்பாடல்களும், பல்வேறு வடிவ அமைப்பில் அமைந்த நாடகக் கூறுகளும் இக்காதைகளுள் இடம் பெற்றன.

13. சிலம்பு. பதிகம். அடி. கல். உரைவிளக்கம்

கானல்வரி: குழுமம்-காதல் வாழ்வு

கானல்வரியுள் அமைந்த இசைப்பாடல்கள் அனைத்தும் அகப்பொருள்துறை பயின்றவை. இவை நெய்தல் நிலத் தலைமக்களாகிய நுளையர் தலைவன் காதல் நெஞ்சத்தையும், நுளையர்தலைவியின் ஆற்றாமை நெஞ்சத்தையும், படம் பிடித்துக் காட்டுபவை. அகப்பொருள் துறை என்னும் இலக்கணச் சட்டத்துள் செறிக்கப்பட்டவையாயினும் நுளையர்சேரியின் காதல் வாழ்வை விளக்கிக் காட்டும், சமுதாயப் பாடல்களாய்க்-குழுமப் பாடல்களாய் இவை மிளிர்கின்றன.

வேட்டுவவரி - குழுமம்: வழிபாடு

வேட்டுவவரியுள் அமைந்த இசைப்பாடல்கள் வேடர்களின் சமுதாய மரபுகளை விளக்குவன. எனினும் தொடக்கத்தில் வேட்டுவ மக்களின் வழிபாட்டு நிலைகளையும் அவர்கள் தங்குலப் பெண்ணொருத்திக்குக் கொற்றவைக் கோலம் புனைந்த சிறப்பையும் நீண்டு செல்லும் அமைப்பினதாய நேரிசை ஆசிரியப் பாவால் இளங்கோவடிகள் பாடியுள்ளார். தனித்துவரும் கதைப் பொருண்மையை நிலைமண்டில ஆசிரியப்பாவால் பாடுதல் போன்று, குழுமப் பொருண்மை பயின்ற பாடல்களின் இடையே அமைந்த கதையோட்டப் பொருண்மை நேரிசையாசிரியப்பா யாப்பால் பாடப்பெறும் என்ற பொருள் யாப்பு இயைபு நெறியும் இதனாற் பெற்றும். இங்ஙனமே, அடுத்து அமைந்த வழிபாட்டுப் பொருண்மையை விளக்கும் பகுதி பஃறொழிசைக் கொச்சகக் கலிப்பாவால் அமைந்தது. குழுமப் பொருண்மைப் பாடல்களின் இடையே அமைந்த வழிபாட்டுப் பொருண்மைப்பாடல்கள் பஃறொழிசைக் கொச்சகக் கலிப்பாவால் பாடப்பெறும் என்ற பொருள் யாப்பு இயைபு நெறியும் இதனாற் புலனும்.

ஆய்ச்சியர் குரவை — குழமம் : இறை வாழ்த்து

முல்லை நிலத்து ஆயர் பெருமக்களின் வாழ்வியலையும் வழிபாட்டையும் விளக்கும் ஆய்ச்சியர் குரவைப் பாடல்களும் குழுமப் பொருண்மைக்கு உரியனவே. ஆய்ச்சியர் குரவைப்பாடல்கள் அனைத்தும் தேவபாணியாக, இறைவாழ்த்துப் பொருண்மை பயின்றவை. தேவபாணிப் பாடல்கள் கொச்சகவொருபோகாய் அமைதல் சிறப்புடைத்து. இதனை, 'ஏனையொன்றே தேவர்ப் பராவுதன் முன்னிலைக் கண்ணே' என்றாராகலின் அது முத்தமிழ்க்கும் பொது ; அஃது இயற்றமிழில் வருங்கால் கொச்சக வொருபோகாய் வரும்' எனவரும் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதி உணர்த்தும். தேவபாணியாய் வரும் இந்த இசைப் பாடல்கள் பல்வகை யாப்பின, இளங்கோவடிகள் இக்காதையின் தொடக்கத்தில் தன் கூற்றாய் வரும் காதை முன்னுரைப் பொருண்மையுடைய பகுதியைக் குறளடி வஞ்சிப்பா என்னும் யாப்பு வகையாலும், இடையே இசைப்பாக்களின் முன்னுரையாக அமைந்த பகுதிகளை யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு, தரவு கொச்சகக் கலிப்பா ஆகிய யாப்பு வகைகளாலும் கூறியுள்ளார்.

குன்றக்குரவை — குழமம் : வழிபாடும் காதலும்

குறவ மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளையும் வழிபாட்டுப் பொருண்மைகளையும் சுட்டுவது குன்றக்குரவை. குன்றவர் நிகழ்த்தும் வழிபாட்டுப் பொருண்மையமைந்த பாடல்களோடு, அகத்துறைப் பாடல்களும் இப்பகுதியில் அமைந்துள. இவ்விரு கூற்றுப் பொருண்மையும் உடைய இக்குழுமப் பாடல்களும் இசைப்பாடல்களாய்ப் பாவாலும் பாவினங்களாலும் அமைந்துள.

வாழ்த்துக்காதை : குழமம் : வழிபாடும் வாழ்த்தும்

கண்ணகித் தெய்வத்துக்குப் பல நாட்டாரும் கூடியிருந்து வஞ்சி நகரில் விழாச் செய்கின்றனர். கண்ணகியின் புறவாழ்வின் உச்சநிலையை விளக்கும் வாழ்த்துக் காதையுள் வழிபாட்டுப் பொருண்மையும், வாழ்த்துப் பொருண்மையும் அமைந்த இசைப்பாடல்கள் பல நிறைந்துள. கண்ணகி வழிபாடு, மூவேந்தர் வாழ்த்து ஆகிய பொருண்மைகளில் அம்மானைவரி, ஊசல்வரி, கந்துகவரி, வள்ளைப்பாட்டு போன்ற இசைப்பாடல்கள் பயின்றுள.

இங்ஙனம் குழுமப் பொருண்மை பயின்ற இக்காதைகள் ஐந்தும் பெரும்பாலான இசைப்பாடல்களாய் அமைந்துள. இடையிடையே இயற்பாவகைகளும் உள. பல்வேறு மக்கள் கூடி நிகழ்த்தும் இத்தகைய பொது விழாக்களின் இயல்புக்கேற்ப பல்வேறு யாப்பு வகையினவாய இசைப் பாடல்கள் இக்காதைகளில் அமைந்துள. இக்காதைகள் ஐந்தனுள் வாழ்த்துக் காதை தவிர எஞ்சிய நான்கு காதைகள் நானில வாழ்வை வெளிப்படுத்துவனவாய் அமைந்திருப்பதை நோக்க, இவ்விசைப் பாடல்சள் திணைப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் இயல்பும் நுட்பமாகச் சுட்டப்படுதல் அறியத்தக்கது. இனி, இவ்வைந்து காதைகளின் யாப்பமைப்பால், குழுமப் பொருண்மை பயின்ற காதைகள் பல்வேறு வகை இசைப் பாடல்களால் பாடப்பெறும் என்ற பொருள் யாப்பு நெறியும் விளக்கம் பெறும்.

சிலப்பதிகாரத்துள் பொருண்மை வேறுபாட்டுக்கேற்ப வழங்கிய பொருள் யாப்பு இயைபு நெறி, யாப்புவரிசையில் இவண் தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளது.

காதை	பொருள்	யாப்பு
மனை. காதை	கதையோட்டம் வண்ணனைப் பொருண்மை	நிலைமண்டில ஆசிரியப்பா
அரங். காதை	கதையோட்டம் இலக்கணம் கூறும் பொருண்மை	,,
அந்தி. காதை	கதையோட்டம் இயற்கை வண்ணனைப் பொருண்மை	,,
இந்திர. காதை	கதையோட்டம் நிகழ்ச்சிவண்ணனைப் பொருண்மை	,,
கடலாடு காதை	,,	,,
வேனிற் காதை	கதையோட்டம் இயற்கை வண்ணனைப் பொருண்மை	,,
நாடுகாண்காதை	கதையோட்டம் வண்ணனைப் பொருண்மை	,,
காடுகாண் காதை	கதையோட்டம் வண்ணனை, சமய வாதப் பொருண்மை	,,
புறஞ்சேரி. காதை	கதையோட்டம் நிகழ்ச்சிவண்ணனைப் பொருண்மை	,,
ஊர்காண் காதை	,,	,,
அடைக். காதை	கதையோட்டம் நினைவோட்ட நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை	,,
கொலைக். காதை	கதையோட்டப் பொருண்மை	,,
அழற்படுகாதை	கதையோட்டம் நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை	,,
காட்சிக் காதை	கதையோட்டம் நிகழ்ச்சி வண்ணனைப் பொருண்மை	,,

கால்கோட் காதை	கதையோட்டம் புறப் பொருண்மை	நிலைமண்டில ஆசிரியப்பா
நீர்ப்படைக் காதை	கதையோட்டம் நினைவோட்டத் தொடர்புப் பொருண்மை	,,
நடுகற் காதை	கதையோட்டம் புறப்பொருண்மை	,,
வரந்தரு காதை	கதை, நினைவோட்ட உத்திப்பொருண்மை	,,
கட்டுரைகாதை	கதை, உணர்வுப் பொருண்மை	குறள்மிடை மண்டிலப்பா
கனாத்திற. காதை	கதை, கிளைக்கதைப் பொருண்மை	கலிவெண்பாட்டு
வஞ்சினமாலை	,,	,,
வழக்குரை காதை	கதை, கூற்றும் மாற்றமும்	உறழ்கலி
மங்கல. பாடல்	கதை, இன்ப உணர்வு மிகுதிப் பொருண்மை	மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா
ஊர்சூழ்வரி	கதை, துன்ப உணர்வு மிகுதிப் பொருண்மை	,,
துன்பமாலை	கதை, தொடர்ச்சிப் பொருண்மை	யாப்பினால் வேறுபட்ட கொச்சக வொருபோகு
கானல்வரி	கதை, குழுமம்: காதல் வாழ்வு	இசைப்பாடல்கள், நாடகக் கூறுகள்
வேட்டுவவரி	கதை, குழுமம்: வழிபாடு	இயல், இசைப் பாடல்கள்
ஆய்ச்சியர் குரவை	கதை, குழுமம்: இறைவாழ்த்து	,,
குன்றக்குரவை	கதை, குழுமம்: வழிபாடும் காதலும்	இசைப் பாடல்கள்
வாழ்த்துக் காதை	கதை, குழுமம்: வழிபாடும் வாழ்த்தும்	,,

இளங்கோவடிகள் பாட எடுத்துக் கொண்ட காப்பியம் புது வகை அமைப்பினது. தனிப்பாடல்கள் பாடும் சங்க யாப்பியல் நிலையினின்றும் பொருட்டொடர் நிலைச்செய்யுள் பாடும் புதிய மரபை இளங்கோவடிகள் அறிமுகப்படுத்தினர். யாப்பாலும் பொருளாலும் புதுமை பொலியும் இக்காப்பியம்

'சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை'

எனப் பாரதி பாடுமாப்போல எந்நாளும் அழியாத உயர் காப்பியமாய்த் திகழ்வது. பொருளுக்கும் யாப்புக்கும் இயைபு நெறியைப் படைத்துக் காட்டி, பின்றைக் காப்பியர் களுக்கு முன்னோடியாய்த் திகழ்பவர் இளங்கோவடிகள்.

இலக்கண உரைகளும் சிலம்பின் யாப்பும்

இலக்கணிகள் தமக்கு முன்னுள்ள இலக்கியங்களில் காணப்படும் யாப்பு வகைகளுக்கு இலக்கணம் கூறும் கடப்பாடுடையர். இலக்கண உரையாசிரியர் தாம் உரை எழுதும் இலக்கண நூல் எழுந்த காலத்திற்குப் பின்னர் தம் காலத்துக்குள் அமைந்த பிற புதுவகை யாப்புக்களையும் புறநடையாலோ, விதப்புக் கிளவியாலோ தம் இலக்கணச் சட்டத்தில் செறிக்கும் நெறியினர். இம்முறையில் சங்க மருவிய காலத்து எழுந்த சிலப்பதிகாரத்தின் பாவகைகள் தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை மற்றும் பிற யாப்பியல் நூல்களின் உரையாசிரியரால் தத்தம் உரையுள் மேற்கோள்களாகவும், சான்றுகளாகவும் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. உரையாளர் சுட்டும் இலக்கணச் சட்டத்திற்கு அவர்கள் காட்டும் பாவகை பொருந்துவதுதானு என ஆய்வதும், சிலப்பதிகாரப் பாவகைகள் எந்த இலக்கண நூல்களுள் சான்றுகளாகக் குறிக்கப்பட்டன என்பதை ஒருசேரக் காண்பதும் இக் கட்டுரையின் கோளாம்.

சிலப்பதிகாரப் பாவகைகளுக்கு உரையாளர்கள் காட்டும் யாப்பு வகைகள் பல பொருத்தமற்றனவாய் இருப்பது இக்கட்டுரைக்கண் விளக்கப்படும். சிலம்பின் யாப்பமைதி, இவண் முழுமை நோக்கில் ஆய்பொருளாய் அமைந்தமையால், உரையாளர், அவர்தம் நோக்கில் கூறும் யாப்பு வகைகள் பல பொருந்தாதனவாய் அமைந்த திறத்தினை ஆங்காங்கு விளக்குவல். இவ்வாய்பொருளின் அடிப்படை நோக்கு வேறுபடுதலால் உரையாசிரியர்தம் நோக்கும், இவண் சுட்டப்படும் முடிபும் இயல்பாகவே பெருத்த முரணுக்கு உரியன.

சிலப்பதிகாரம்: புணர்ச்சி

சிலப்பதிகாரம் என்னும் பெயர் சிலம்பு, அதிகாரம் என்ற இரு சொற்களின் கூட்டு வடிவம். நிறுத்த சொல்லாய சிலம்பு, மென்றொடர்க் குற்றியலுகரச் சொல். தொல்காப்பியத்தில் குற்றியலுகரப் புணரியலுள் இச்சொல்லின் புணர்ச்சி இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மென்றொடர்க் குற்றியலுகரச் சொல் உயிர்க்கணத்தோடு புணருங்கால் நிலைமொழியில் உள்ள மெல்லொற்று இனவல்லொற்றாய்த் திரியும். இவ்விதியை,

மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதிக் கிளையொற் றாகும்[1]

என நூற்பிப்பர் தொல்காப்பியர். நச்சினார்க்கினியர் இந்நூற்பா உரையுள் 'சிலப்பதிகாரம் என்பதுமது' எனவரும் தொடரால் இச்சொற்களின் புணர்ச்சி விதியைச் சுட்டுவர்.

பாட்டிடை வைத்த குறிப்பு

பண்டைக் காலத்திய உரைநடை, செய்யுள் அளவுக்கு விரிந்த பெரும்பான்மை வழக்கன்று. உரைநடைப் பகுதிகள் இடம் பெற்ற இலக்கியங்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே வழக்குப் பயிற்சியில் இருந்தன. தொல்காப்பியர் உரைநடைப் பகுதிகளைப் பாகுபடுத்தி உள்ளமையால் இதனை அறியலாம். ஆங்கில இலக்கியங்களுள்ளும் செய்யுள் யாப்புக்குள் உரையாடலும் உரைநடையும் கலந்து வருதல் உண்டு என்பதை ஆங்கிலத் திறனாளி பிரேவர் வாக்கால் அறியலாம்[2]. இவ்வுரைநடையின் வகைகளைத் தொல்காப்பியர் நான்கு எனக் கூறுவர்.

1. தொல். எழு. நச்சி. நூ. 414
2. Shakespeare maintains a clear distinction between poetry and Prose. His servants and jesters allways speak prose, and others also in light conversation but the language of emotion and passion in invariably metrical-The Art of Varsification and the Technicalities of Poetry-R. F Brewar P. 5

பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப[3]

எனவரும் நூற்பா இதனை உணர்த்தும். இவற்றுள் பாட்டிடை வைத்த குறிப்பாவது, பாட்டின் இடையே அமைந்த பொருட் குறிப்பு உடைய உரைநடைப் பகுதியைக் குறிக்கும்.

ஆய்ச்சியர் குரவையுள் உரைப்பாட்டுமடை என்னும் தலைப்பில் 'கயலெழுதிய இமய நெற்றியின்' எனவரும் பகுதியை இளம்பூரணர் பாட்டிடை வைத்த குறிப்பு என்னும் வகைக்குச் சான்றாகக் காட்டுவர். 'உரைப்பாட்டு மடை' என்னும் பெயரமைப்பினைக் கொண்டு, இதனை உரைநடைப் பகுதியாகவே ஏற்றுக்கொண்ட நிலையில், 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்னும் உரைநடைப் பகுதிக்கு இதனைச் சான்று காட்டியுள்ளார் இளம்பூரணர். 'கயலெழுதிய இமய நெற்றியின்' எனத் தொடங்கும் ஆய்ச்சியர் குரவையின் முற்கூறு உரைநடைப் பகுதி அன்று; குறளடி வஞ்சிப்பா என்னும் யாப்பு வகையில் அமைந்த செய்யுட் பகுதியேயாம். உரைப்பாட்டுமடை என்னும் தலைப்பு இப்பகுதியில் பிழையாக அமைந்த தலைப்பாம். கருப்பத்திற்குப் பின்னுள்ள பகுதிக்கே உரைப் பாட்டுமடை என்னும் தலைப்பு உரியதாகும். விரிவாக முன்னரே கூறப்பட்ட இச்செய்திகள் இவண் நினையத் தகுவன எனினும் பாடலின் இடையே பொருள் குறித்த உரைநடைப் பகுதி பயின்று வருதல் உண்டு என்பதும், சிலப்பதிகாரத்துள் இத்தகைய பகுதிகள் சில இடம் பெற்றுள்ளன என்பதும் இளம்பூரணர் உரையால் அறியத் தகும் செய்திகளாம் சிலப்பதிகாரத்துள் அமைந்த உரைநடைப் பகுதிகளுள் தொல்காப்பியரால் சுட்டப் பெறும் பாட்டிடை

3. தொல். செய். இளம். நூ. 166

வைத்த குறிப்பு என்னும் உரை நடை வகையும் அடங்கி உள்ளது என்பதும் இதனால் அறியப்படும்.

'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பதை இளம்பூரணரினின்றும் சற்று வேறுபட்டு விளக்குவர் பேராசிரியர். இவர் 'ஒரு பாட்டு இடையிடை கொண்டு நிற்கும் குறிப்பினான் வருவன' என்று விளக்கம் கூறி, 'பாட்டு வருவது சிறுபான்மை' என அளவும் கூறுவர். இம்முறையில் வந்ததற்குச் சான்றாகத் 'தகடூர் யாத்திரை' பேராசிரியரால் குறிப்பிடப் பெறும். இந்நூல் இன்று முற்றும் கிடைக்கப் பெருமையால், இதன் அமைப்பு அறிதற்கு இயலவில்லை. எனினும் பேராசிரியர் விளக்கத்தால், இந்நூல் பெரும்பான்மை உரையும் சிறுபான்மை பாட்டும் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பது அறியலாம். உரைக்கும் பாட்டுக்கும் பெரும்பான்மை, சிறுபான்மை என அளவு கொண்டமையின், அம்முறையில் அமையாத சிலப்பதிகாரம் பேராசிரியரால் இவண், சான்றாகச் சுட்டப்படவில்லை போலும்!

பேராசிரியருக்குப் பின்னே வந்த நச்சினார்க்கினியர் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பதற்கு ஒரு பாட்டினை இடையிடைக் கொண்டு நிற்கும் கருத்தினான் வருவது' எனப் பேராசிரியரை ஒட்டியே விளக்கம் வரைந்திருப்பினும் அவர் போன்று, உரைக்கும் பாட்டுக்கும் பெரும்பான்மை சிறுபான்மை என அளவு கொள்ளவில்லை. எனவே 'அவை தகடூர் யாத்திரையும் சிலப்பதிகாரமும் போல்வன'[4] எனச் சிலப்பதிகாரத்தையும் சேர்த்து இதற்குச் சான்று காட்டுவர். பாட்டிடை வைத்த குறிப்பு என்னும் உரைநடை வகைக்குச் சிலப்பதிகாரத்தையும் தகடூர் யாத்திரையோடு சேர்த்து நச்சினார்க்கினியர் சான்று காட்டியுள்ளமையால், பேராசிரியர் போன்று நச்சினார்க்

4. தொல். செய். நச்சி. நூ. 173-உரை

கினியர், உரைநடையின் அளவை நோக்காமை பெறப்படும். இளம்பூரணர் போன்று, சிலம்பின் ஒரு பகுதியைச் சான்று காட்டாமல், நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரம் எனப் பொதுநிலையில் குறிப்பிட்டு உள்ளமையால், சிலப்பதிகாரத்துள் தொல்காப்பியர் கூறும் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்னும் உரைநடை வகைக்குச் சான்றாய சில பகுதிகள் உள என்பது நச்சினார்க்கினியர்தம் கருத்தாதல் பெறப்படும்.

சிலப்பதிகாரத்துள் கானல்வரியில் கட்டுரை என்னும் தலைப்பிலும் ஆய்ச்சியர் குரவையுள் கருப்பம் என்னும் தலைப்பிலும், வாழ்த்துக் காதையில் 'உரைப்பாட்டுமடை' என்னும் தலைப்பிலும் உரைநடைப் பகுதிகள் அமைந்துள.

பொருளொடு புணர்ந்த நகைமொழி

சிலப்பதிகாரத்துள், மேலே கூறியாங்கு, 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்னும் உரைநடை வகையேயன்றி, 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' என்னும் உரைநடை வகையும் அமைந்து உள்ளது என்பது அடியார்க்குநல்லார் கருத்து.

'பொருளொடு புணர்ந்த நகைமொழி' என்பது பொருளொடு கூடிய நகைமொழியாய் வருவது. நகைமொழி என்பதை, 'மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தாது என இகழ்ந்து கூறுதல்; அவ்விகழ்ச்சியின் பின்னர்ப் பொருள் உணர்த்தும் உரை பிறக்கும் ஆதலின் பொருளொடு புணர்ந்த நகைமொழியாலும் உரை வருமென்றார்' என இளம்பூரணர் விளக்குவர்.

வழக்குரை காதையில் தன் கணவன் கொல்லப்பட்டது முறையாகாது எனக் கூறிய கண்ணகியை நோக்கிக் 'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று' என விடையிறுத்தான் பாண்டியன். பாண்டியன் கூற்றாக வரும் இத்தொடர் 'பொருளொடு புணர்ந்த நகைமொழி'

என்னும் உரை நடை வகையின் பாற்படும் என்பர் அடியார்க்குநல்லார். இதனை 'அச்சிலம்பெனக் கோப் பெருந்தேவி சிலம்பைச் சுட்டிக் கூறினுனுயிற் கள்வனைக் கொன்று சிலம்பைக் கொணர்க என்ருன்; எனினும் குற்றம் இல்லை; அக்கருத்தினானன்றே வழக்குரை காதையுள்ளும் 'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று' என்றதும் என்க. இங்ஙனம் கூறியது 'பாட்டிடை வைத்த குறிப்பினுலும்.... உரைநடை வகையே நான்கென மொழிப' என்பதனு னென்க' எனவரும் பகுதி[5] உணர்த்துகின்றது.

வழக்குரைகாதை கூற்றும் மாற்றமுமாய் உறழ்கலி யென்னும் யாப்பு வகையால் அமைந்தது. கூற்றும் மாற்றமு மாக உரையாடலாக வரும் இப்பகுதிகள் உரைநடைச் சாயலுடையனவாய் இருத்தல் இயல்பே! எனவே அடியார்க்கு நல்லார் இதனை உரைநடையாகவே கொண்டு வகைப்படுத்தினர் போலும்! தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர், நச்சினர்க்கினியர் கருத்துப் படி, 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்னும் வகையதாகிய உரைநடைப் பகுதிகளும் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கருத்துப்படி, பொருளோடு புணர்ந்த நகை மொழி என்னும் வகையதாகிய உரைநடைப் பகுதிகளும் சிலப்பதிகாரத்துள் அமைந்துள என்பது இதனுல் பெறப்படும்.

தொன்மை

தொடர்நிலைச் செய்யுட்களில் எண் வகை வனப்புகள் இடம் பெறும் என்றும், அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகியன என்றும் தொல்காப்பியர் கூறுவர்[6]. தொல்காப்பியர் கூறிய இவ்வனப்புகள் காதல், வீரம் அல்லாத பொருண்மை பற்றிப் பாடப்பெறும் இலக்கிய வகைகளுக்கு உரிய பெயர்கள் என்பது டாக்டர் வ. சுப. மாணிக்கனுர்

5. சிலம்பு. அடி. நல். பதி, 27-30-உரைவிளக்கம்
6. தொல். செய். இளம். நூ. 227-234

கருத்து[7]. இம்முறையில் எண்வகை வனப்போடு காதல், வீரம் ஆகிய பாடுபொருள் பற்றிப் பிறக்கும் இருவகை இலக்கியங்களும் கூட, தொல்காப்பியர் காலத் தமிழ் பத்து வகை இலக்கிய வளம் உடையது எனவும் அவர் பாராட்டுவர்[8]. தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஒவ்வொரு வகை வனப்புக்கும் இலக்கிய நூல்களையே சான்று காட்டுவதாலும் அம்மையாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று, அழகாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று என இளம்பூரணர் அவற்றைச் செய்யுள் வகைகளாகவே குறிப்பிடுவதாலும் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் கருத்து ஏற்புடைத்து என்பது புலனும்.

சிலப்பதிகாரம் தொன்மை என்னும் வனப்புக்கு உரிய இலக்கிய வகையாக இலக்கண உரையாசிரியரால் சுட்டப்படும். தொல்காப்பியர்

> *தொன்மை தானே சொல்லுங் காலை*
> *உரையொடு புணர்ந்த பழமை மேற்றே*[9]

எனத் தொன்மையின் இலக்கணத்தை நூற்பிப்பர். இளம்பூரணர் 'தொன்மையாவது உரையொடு பொருந்திப் போந்த பழைமைத்தாகிய பொருண்மேல் வருவன' என விளக்கம் கூறியும் இராம சரிதம் பாண்டவ சரிதம் ஆகிய இலக்கியங்களைச் சான்று காட்டியும் உரைப்பர்.

---

7. பொது இலக்கிய வகைகளும் நம்மொழிக்கண் உள என்பதைத் தொல்காப்பியம் தெளிவாக்கும்.

 அம்மை அழகு தொன்மை தோலே
 விருந்தே இயைபே புலனே இழைபெனுஅப்
 பொருந்தக் கூறிய எட்டு

 என்றபடி எட்டுவகையான பிற இலக்கியங்கள் இருந்தன எனவும், இவை வனப்பு என்ற பொதுப் பெயரால் வழங்கப்படும் எனவும் வரலாறு, பழம் பொருள், புதுப்பொருள் என்ற கருத்து நிலைக்களத்தில் பல்வேறு யாப்பில் இவை செய்யப்படும் எனவும் செய்யுளியல் ஓரளவு விதந்து கூறுகிறது தமிழ்க்காதல்-டாக்டர் வ. சுப. மாணிக்கம் பக். 275

8. தொல்காப்பியர் காலத்தமிழ் பத்துவகை இலக்கிய வளம் உடையதாகும். தமிழ்க்காதல் டாக்டர் வ. சுப. மாணிக்கம் பக். 275

9. தொல். செய். இளம். நூ. 229

பேராசிரியர், பெருந்தேவனூர் பாரதம், தகடூர் யாத்திரை என்பவற்றைச் சான்று காட்டுவர். நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரமும் இத்தொன்மைக்குச் சான்றாகும் என்பர்[10].

இளம்பூரணர், பேராசிரியர் ஆகியோர் தொன்மைக்குச் சிலப்பதிகாரத்தைச் சான்றாகக் கூறாத நிலையில், நச்சினார்க்கினியர் ஒருவரே குறிப்பிட்டுள்ளார் என்பதும் சுட்டத் தக்கது. எனவே சிலப்பதிகாரம், தொல்காப்பியம் கூறும் தொன்மை என்னும் இலக்கிய வகைக்குச் சான்றாகக் கருதப்பட்டமை இதனாற் புலனாகும்.

தோல்

வனப்புக்களாகச் சுட்டப்படும் எண்வகை இலக்கிய வகைகளுள் தோல் என்பதும் ஒன்று.

இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்[11]

என இவ்வகையின் இலக்கணத்தை இயம்புவர் தொல்காப்பியர். அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் தோல் என்பதற்கும் சான்றாதற்குரியது என்று கருதுவர். இதனை 'அம்மை முதலிய எட்டு வனப்பும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணம் என்று கூறியவர் 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும் பரந்தமொழியான் அடிநிமிர்ந்தொழுகினும்' என்பதனால் குவிந்து மெல்லென்ற சொல்லானும் வல்லென்ற சொல்லானும் அறம் பொருள் இன்பம் பயப்ப, வீடென்னும் விழுமிய பொருள் பயப்ப ஒரு கதை மேற் கொச்சகத்தானும் ஆசிரியத்தானும் வெண்பா வெண்கலிப்பாவானும் மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுக என்றமையான், இத்தொடர்

10. தொல். செய். நச்சி. நூ. 237-உரை
11. தொல். செய். நூ. 230

நிலைச் செய்யுள் அங்ஙனம் கூறிய தொடர்நிலையென வுணர்க' எனவரும் உரைப்பாயிரப் பகுதி உணர்த்து கின்றது. இதனால், சிலப்பதிகாரம் தொன்மை என்னும் வகையேயன்றி, தோல் என்னும் வகைக்கும் உரிய இலக்கியமாய்க் கருதப்பட்டமை புலனும்.

நச்சினார்க்கினியர், தொன்மை என்னும் இலக்கிய வகைக்குச் சான்றாகவும், அடியார்க்குநல்லார் தோல் என்னும் இலக்கிய வகைக்குச் சான்றாகவும் சிலப்பதி காரத்தைக் குறிப்பிட்டுள்ளனர். எனவே சிலப்பதிகாரம் தொன்மை, தோல் ஆகிய இருவகை இலக்கியச் சாயலும் பெற்று விளங்குவது புலனாகும்.

சிலப்பதிகார யாப்புவகைகள், யாப்புநூல் உரைகளில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளதும், அவை உரையாசிரியர் களால் குறிப்பிடப்பட்ட யாப்பு வகைக்குப் பொருந்தும் இலக்கணம் உடையனவாவென்பதும் இனி விளக்கப் பெறும்.

அகநிலைக் கொச்சகக் கலி

சிலப்பதிகாரக் கானல்வரிப் பகுதியில் கானல்வரி என்னும் தலைப்பில் 'கழற்றெதிர்மறை' என்னும் அகப் பொருட்டுறையதாய்,

நிணங்கொள் புலாலுணங்க னின்றுபுள் ளோப்புதல்
தலைக்கீ டாகக்
கணங்கொள் வண்டார்த் துலாங்கன்னி நறுஞாழல்
கையி லேந்தி
மணங்கமழ் பூங்கானல் மன்னிமற் றுண்டோர்
அணங்குறையு மென்ப தறியே னறிவேனே லடையேன்
மன்னோ

எனவரும் பாடல் அமைந்துள்ளது. இப்பாடல் பேராசிரியர் நச்சினார்க்கினியர் இருவராலும் மேற்

கோளாகச் சுட்டப்பட்டுள்ளது. இருவரும் இதனை அகநிலைக் கொச்சகக் கலிப்பா என்னும் யாப்பு வகைக்கு உரியதாமென்பர்.

பேராசிரியர் அகநிலைக் கொச்சகக் கலியின் வகையாய யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகோடு ஒத்தவமைப்புடையது இது என்றும், இடையடி குறைந்து வந்தது என்றும் கூறுவர்[12]. இடையடி குறையாதிருப்பின் யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகாகவே இது கொள்ளப்படும் என்பதும் அவர்தம் கருத்தாதல் பெற்ரும். நச்சினுர்க்கினியர் இதனை ஈற்றயலடி குறைந்து வந்த தரவு கொச்சகம் என்பர்[13]. இருவரும் இப்பாவை அகநிலைக் கொச்சகக் கலிப்பாவின் வகையாகக் கூறினும் எவ்வகையில் ஒத்தது என்பதை விளக்குவதில் சற்றே வேறுபட்டுள்ளனர்.

கலிப்பாவினுள் அறுசீரடியும் வரும் என்பதை,

அறுசீ ரடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வருஉம் நேரடி முன்னே[14]

என நூற்பிப்பர் தொல்காப்பியர், இதற்கு,

முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத முழ்கிப் பெயர
அன்னக் குரைப்பல் அறிவாய் கடலேயென் றலறிப் பெயருந்
தன்மை மடவார் தணந்துகுத்த வெண்முத்தம்
புன்னையரும் பேயென்னப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே யெம்மூர்

எனவரும் சான்றுப் பாடலை உரையாளர்கள் இருவரும் சுட்டுவர். 'நிணங்கொள்' எனத் தொடங்கும் கானல்வரிப் பாடல் 'முன்னைத்தஞ் சிற்றில்' எனத் தொடங்கும் இப் பாடலோடு அமைப்பு நிலையால் ஒத்தமைந்தது உணரலாம்.

12. தொல். செய். பேரா. நூ. 155 உரை
13. தொல். நச்சி. நூ. 155 உரை
14. ,, ,, நூ. 64

எனவே இவ்வுரையாசிரியர் கருத்துப்படி, மேலேயுள்ள 'நிணங்கொள்' எனத் தொடங்கும் பாடல் அறுசீரடிபெற்று வந்த கலிப்பாவாகவும் கொள்ளப்படும் என்பதறியலாம்.

அறுசீரடி, கலிப்பாவில் வரப்பெறும் எனக்கூறும் இந்நூற்பாவை இளம்பூரணர் ஆசிரியப்பாவுக்கு விதி கூறும் நூற்பாவாகக் கொள்வர். அங்ஙனம் கொள்ளவே ஆசிரியப்பா அறுசீரடிபெற்று வரும் என்பது கருத்தாகும்.

சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே[15]

என வருவதை இதற்குச் சான்றுப் பாடலாக இளம்பூரணர் கூறுவர். தொல்காப்பிய நூற்பாவிற்குப் பொருள் கொள்வதில் இளம்பூரணர் வேறுபடுவது இதனாற் பெற்றும்.

கானல்வரியுள் அமைந்த 'நிணங்கொள் புலாலுணங்கல்' எனத்தொடங்குவது இசைப்பாடல்; முன்னும் பின்னுமுள்ள பாடல்களோடு இணைந்து ஒரு பொருள் மீது மூன்றடுக்கி வந்தது. ஆசிரிய நேர்த்துறை என்னும் யாப்பமைந்தது. ஆசிரியத் துறையுள் இடையில் ஓரடி குறைந்து வருபவை ஆசிரிய நேர்த்துறை என்றும் இடையில் ஈரடி குறைந்து வருபவை ஆசிரிய இணைக் குறட்டுறை என்றும் வழங்கப்படும் என்பதை யாப்பருங்கல விருத்தியுரையால் அறியலாம். இப்பாடல் முதல் இரண்டு அடிகளும் ஈற்றடியும் அறுசீரடிகளாவும், ஈற்றயலடி நாற்சீரடியாகவும் அமைந்தது.

கானல் வரிப்பாடல்கள், குழுமப் பொருண்மையதாய நெய்தற்றிணை மக்களின் காதல் வாழ்வியற் பாங்குகளை விளக்கும் பண்ணத்தி என்னும் இசைப் பாடல் வகையின. இவை இயற்றமிழ் யாப்பு வகையில் பல்வேறு பாவினங்களால் பாடப்பெறும். எனவே இசைப்பாவாய் இயற்றமிழ் யாப்பு வகையில் ஆசிரிய

15. புறம். 235

நேர்த்துறைக்குரியதாய் வரும் இப்பாடல் தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி வகையைச் சேர்ந்தது. இதனைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அகநிலைக் கொச்சக வகையாய், இடையடி குறைந்து யாப்பினால் வேறுபட்ட கொச்சக வொருபோகினின்று ஒத்தஅமைப்பு உடையதாகவோ. ஈற்றயலடி குறைந்து வந்த தரவு கொச்சகமாகவோ கொள்வது பொருந்தாதென்பது புலனாம்.

தரவின்றாகித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு

மூன்றடுக்கி நான்கடியால் வருவது

வேட்டுவ வரியுள் முன்னிலைப்பரவல் என்னும் தலைப்பில்,

ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமே னின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமே னின்றாயால்
அரியரன்பூ மேலோன் கைமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்க ணரிமான் சினவிடைமே னின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்

(வேட்டுவவரி 8—10)

எனவரும் மூன்று பாடல்கள் அமைந்துள. இவற்றை நச்சினார்க்கினியர் கொச்சகவொருபோகின் வகைகளுள் தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகுப் பாக்களாகக் கூறுவர். 'இவை முன்னிலைப் பரவலாய் மூன்றடுக்கி நான்கடியான் வந்தன' என்பர்[16]. பிறவுரை

16. தொல். செய். நச்சி. நூ. 149 உரைவிளக்கம்

யாசிரியர்கள் இவற்றை யாப்பு வகைக்குச் சான்ருக மேற்கோள் சுட்டவில்லை.

முன்றிற் சிறப்பு, வள்ளிக்கூத்து என்னும் தலைப்பில் அமைந்த ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள் போன்று, முன்னிலைப் பரவல் என்னும் தலைப்பிலும் ஒரு பொருள்மீது மூன்றடுக்கிய தாழிசைகளே அமைந்துள. இத்தாழிசைகளும் பின்னே வென்றிக் கூத்து என்னும் தலைப்பில் அமைந்த தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக் களும் இணைந்து பஃ்ருழிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் ஒரே பாவகையாய் விளங்குகின்றன.

தொல்காப்பியர் கூறும் தரவின்ருகித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என்னும் பாவகையே பிற் காலத்துப் பஃ்ருழிசைக் கொச்சகம் என்றும், சிஃ்ருழிசைக் கொச்சகம் என்றும் வழங்கின வென்பது பேராசிரியர்[17] நச்சினர்க்கினியர்[18] கருத்து. பஃ்ருழிசைக் கொச்சகமும் சிஃ்ருழிசைக் கொச்சகமும் தரவு தனிச்சொல் சுரிதகம் முதலான உறுப்புக்களையும் சிறுபான்மை பெற்றுவரும் எனக் காக்கைபாடினியர், யாப்பருங்கலத்தார் முதலியோர் கூறுவதும் நினையத்தகும்.

பஃ்ருழிசைக் கொச்சகக் கலிப்பாவில் ஒரு பொருள் மீது மூன்றடுக்கிய தாழிசைகளாய்ப் பின்னுள்ள தனிச் சொல் சுரிதகத்தோடு முடியும். இத்தாழிசைகளை- பஃ்ருழிசைக் கொச்சகக் கலிப்பாவின் உறுப்பாய் வரும் இத்தாழிசைகளைத்-தனித்து வந்த தரவின்ருகித் தாழிசை பெற்ற கொச்சக வொருபோகாக நச்சினர்க்கினியர் கொள்வது பொருந்தாதென்பது அறியலாம்.

17. பஃ்ருழிசைக் கொச்சகம் என அமையும். அவை சில வருவன சிஃ்ருழிசைக் கொச்சகம் எனப்படும்-தொல். செய். பேரா. நூ. 149 உரைவிளக்கம்

18. இவ்வாறு பலதொடர்ந்துவரிற் பஃ்ருழிசைக் கொச்சகம் என்றும், மூன்று தாழிசை வரிற் சிஃ்ருழிசைக் கொச்சகம் என்றும் கூறவமையும்.
-தொல். செய். நச்சி. நூ. 149 உரைவிளக்கம்

தாழிசையோசையின்றி அடுக்கி வருவது

20. வேட்டுவவரியுள் கொடையென்னும் தலைப்பில் புறத்துறைக் கருத்தினவாய்,

இளமா வெயிற்றி யிவைகாணின் னையர்
தலைநாளை வேட்டகத்துப் தந்தநல் லானிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன
முருந்தே ரிளநகை காணாய்நின் னையர்
கரந்தை யலறக் கவர்ந்த வினநிரைகள்
கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்
புள்வாய்ப்புச் சொன்ன கணிமுன்றி னிறைந்தன
கயமல ருண்கண்ணாய் காணாய்நின் னையர்
அயலூ ரலற வெறிந்தநல் லானிரைகள்
நயனின் மொழியி னரைமுது தாடி
எயினர் எயிற்றியர் முன்றி னிறைந்தன
(வேட்டுவ வரி 15-17)

எனவரும் மூன்று பாடல்கள் அமைந்துள. நச்சினார்க்கினியர் தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகினுள் தாழிசையோசையின்றி அடுக்கி வந்தமைக்குச் சான்றாக இப்பாடல்களைக் கூறுவர்[19].

தாழிசை பெற்று வருவது இதன் இலக்கணமாயினும், அத்தாழிசை தாழம்பட்ட ஓசையுடையதாயிருத்தல் வேண்டும் என்ற வரையறையில்லை என்பதையும் நச்சினார்க்கினியர் இதனால் பெற வைத்தார். இத்தாழிசைகள் தாழிசைக்குரிய இலக்கணம் பெற்றே வர வேண்டும் என்ற நியதியில்லை என்பதை 'இவையொத்து மூன்றாதலும், தரவிற்சுருங்கி நான்கும் மூன்றும் அடி பெறுதலும், ஒருபொருள்மேல் வருதலும் தாழம்பட்ட ஓசையவேயாதலும் கடப்பாடின்று என்றவாகும்'[20] என வரும் விளக்கப் பகுதியும் தெளிவுறுத்தும்.

19. தொல். செய். நச்சி. நூ. 149 உரைவிளக்கம்
20. தொல். செய். நச்சி. நூ. 149 உரைவிளக்கம்

கொடை என்னும் தலைப்பில் அமைந்த இப்பாடல்கள் புறத்துறைக் கருத்தினவாய இசைப்பாடல்கள் என்பதைத் 'துறைப்பாட்டுமடை' எனவரும் இப்பகுதிக்குரிய தொடரே விளக்கி நிற்கும். கூத்துள் படுதல் என்னும் தலைப்பு முதலாகப் பலிக்கொடை என்னும் தலைப்பீருக வரும் பாடல்கள் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் ஆகிய யாப்புவகையால் அமைந்த இசைப்பாடல்கள். எனவே பண்ணத்தியாய்க் கலிநிலை விருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகையாலமைந்த இவ்விசைப் பாடல் களாயவற்றைத் தரவின்றித் தாழிசை பெற்றுவந்த கொச்சக வொருபோகாக நச்சினர்க்கினியர் சுட்டுவது பொருந்தாது.

மூன்றடுக்கி முடுகியலாய் வருவது

வேட்டுவவரியுள் அவிப்பலி என்னும் தலைப்பில் ஒரு பொருள் மேல் அடுக்கி வரும் மூன்று பாடல்களுள.

சுடரொடு திரிதரு முனிவரு மமரரும்
இடர்கெட வருளுநி னிணையடி தொழுதேம்
அடல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறறரு விலையே

அணிமுடி யமரர்த மரசொடு பனிதரு
மணியுரு வினைநின மலரடி தொழுதேம்
கணநிரை பெறுவிற லெயினிடு கடனிது
நிணனுகு குருதிகொ ளிகரடு விலையே

துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய
வெடிபட வருபவ ரெயினர்கள் வரையிருள்
அடுபுலி யனையவர் குமரிநி னடிதொடு
படுகட னிதுவுகு பலிமுக மடையே

(வேட்டுவ வரி 18-20)

நச்சினர்க்கினியர் தரவின்றித் தாழிசைபெற்ற கொச்சகவொருபோகு என்னும் பாவகையில் மூன்றடுக்கி

முடுகியலாய் வந்தது என இப்பாடல்களைச் சான்று காட்டுவர்[21].

முடுகியலோசை பெற்றனவாய் இப்பாடல்கள் விளங்கிடினும், கலிநிலை விருத்தம் என்றும் இயற்றமிழ் யாப்பால் அமைந்த இசைப்பாடல்களாய் விளங்குகின்றன.

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனதன

எனவரும் எளிய இனிய முடுகியற் சந்தம் பெற்று விளங்குபவை இவ்விசைப்பாடல்கள். இவை தனித்து ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்தன. தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி வகையாய இவ்விசைப்பாடல்கள், நச்சினார்க்கினியர் கூறியாங்குத் தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகாய் அமையவில்லை என்பது இதனால் பெற்றாம்.

அரசரைத் தெய்வமென்று பரவுவதாய் வருவது

ஆய்ச்சியர் குரவையுள் உள்வரி வாழ்த்து என்னும் தலைப்பிலமைந்தன மூன்று பாடல்கள்

கோவா மலையாரங் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து
மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்

21. தொல். செய். நச்சி, நூ 149. உரைவிளக்கம்

முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னனி ருளோச்சி கடல்கடைந்தா னென்பரால்
(ஆய்ச்சியர் குரவை 29-31)

இப்பாடல்கள் மூன்றும் ஒருபொருள் மீது மூன்றடுக்கிய இசைப்பாடல்களாய்த் திருமாலை வாழ்த்தும் தேவபாணிகளாய் அமைந்துள.

இவை, நச்சினார்க்கினியரால் தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகுப் பாடல்களாகச் சுட்டப் பட்டன. அவற்றுள் அரசரைத் தெய்வமென்றே பராவும் பொருண்மைக்குரியனவாகவும் இவை கூறப்பட்டன[22]. கலிவிருத்தம் என்னும் இயற்றமிழ் யாப்பு வகையிலமைந்த இவ்விசைப் பாடல்கள் தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி வகைக்குரியவை. எனவே இவை நச்சர் கூறிய பாவகைக் குரியவையன்று என்பது தெளிவாம்.

தனிச்சொல் பெற்றுத் தனிவந்த தாழிசையாய் வருவது

ஆய்ச்சியர் குரவையை அடுத்தமைந்த துன்பமாலைப் பகுதியுள் இரு பகுதிகள் தனித்தனிப் பாடல்களாக நச்சினார்க்கினியரால் குறிப்பிடப் பெற்றுள்ளன.

சொன்னது:—
அரசுறை கோயி லணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
கரையாமல் வாங்கிய கள்வனு மென்றே
குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே
எனக்கேட்டுப்
பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாடன் கேள்வனை
எங்கணுஅ யென்னு வினைந்தேங்கி மாழ்குவாள்
(துன்பமாலை 24-33)

22. தொல். செய். நச்சி. நூ.149 உரைவிளக்கம்

என வருவது அப்பகுதியுளொன்று. இது தனிச் சொல் பெற்றுத் தனிவந்த தாழிசையாய்த் தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என நச்சினார்க் கினியரால் குறிப்பிடப் பெற்றது[23].

இப்பகுதி, முன்னுள்ள 'எல்லாவோ' எனத் தொடங்கும் தனிச்சொல் முதலாக இறுதிவரையமைந்த யாப்பினால் வேறுபட்ட கொச்சவொருபோகு என்னும் பாவகையில் தனிச்சொல், கொச்சகம் ஆகிய உறுப்புக் களாயமைந்தவை இங்ஙனம் தனிச்சொல்லும் கொச்சக முமாய உறுப்புக்களைத் தனித்துவந்த பாவகையாய்க் கொள்வது பொருத்தமன்றென்பது புலனாம். தொல் காப்பிய யாப்பு நெறிக்கேற்ப, யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகில் தனிச்சொல்லாயும் கொச்சக மாயும் அமைந்த உறுப்புக்களாகவே இவை கொள்ளுதற்கு உரியன.

தொடர்ந்த பொருளாய் நான்கடுக்கி வந்தவை

ஊர்சூழ்வரியின் இறுதிப் பகுதி கண்ணகி வழக்காடு தற்கு அரசன் செழுங்கோயில் சென்ற செய்தியைக் கூறுவது.

என்றிவை சொல்லி அழுவாள் கணவன்றன்
பொன்றுஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
நின்றா னெழுந்து நிறைமதி வாண்முகம்
கன்றிய தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற
அழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையா டன்கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்றப்
பழுதொழிந் தெழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்
எழுதெழில் மலருண்கண் இருத்தைக்க வெனப்போனான்
மாயங்கொல் மற்றென்கொல் மருட்டியதோர் தெய்வங்கொல்
போயெங்கு நாடுகேன் பொருளுரையோ விதுவன்று

23. தொல். செய். நச்சி. நூ. 149 உரைவிளக்கம்

காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் றனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்றாள்
என்றா ளெழுந்தாள் இடருற்ற தீக்கனா
நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்துடையாச்
சென்றா ளரசன் செழுங்கோயில் வாயில்முன்

(ஊர்சூழ்வரி 60-75)

என்னும் இப்பகுதியை நச்சினார்க்கினியர் நான்கு தாழிசைகளாகக் கொள்வர். தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சக ஒருபோகாய இத்தாழிசைகள் தொடர்ந்த பொருளாய் நான்கடுக்கி வந்தன என்பர்[24]. முதல் எண்வரிகளை இரு தாழிசைகளாகக் கொள்ளவியலாவாறு அவை குளகமாய்த் தொடர்ந்தன. எனவே அவற்றைத் தனித்தனித் தாழிசைகளாகக் கொண்டு நச்சினார்க்கினியர் கூறுவது பொருந்தாது. இவ்வெண் வரிகளும் ஊர்சூழ்வரியாகிய அயன் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவின் தரவு என்னும் உறுப்பாயும் அடுத்துள்ள நான்கு அடிகள் தனித்து வந்த தாழிசையாயும், இறுதியில் உள்ள நான்கு அடிகள் இடைமடக்கி வந்த நான்கு அடி அகவற் சுரிதகமாயும் கொள்ளுதற்கு உரியன. சுரிதகமாய் அமைந்த நிலைமண்டில ஆசிரியப்பா 'வாயில் முன்' என ஈறு பெற்று முடிந்துளது. னகர ஈற்றுச் சிறப்பு முடிபாய் இது கொள்ளுதற்குரித்து.

அடுக்கிவந்த தாழிசைகள் சுரிதகத்தால் முடிந்து வருவது

குன்றக் குரவையில் தெய்வம் பராஅயது என்னும் தலைப்பில் அமைந்த இசைப் பாடல்கள் முதலாயவற்றைத் தம் உரையுள் மேற்கோளாகச் சுட்டுவர் நச்சினார்க்கினியர்.

குன்றக் குரவையுள் 'சீர்கெழு செந்தில்' என்னும் தாழிசை முதல் பல அடுக்கி வந்து பின்னர் 'என்றியாம் பாடக்....கேட்டு' என்று அடக்கியல் பொருள் பெற்று முடிந்தவாறு காண்க'[25] எனவரும் பகுதியுள் நச்சினார்க்

24. தொல், செய், நச்சி.நூ. 149 உரைவிளக்கம்
25. ,,

கினியர் இப்பாடல்களை அடுக்கிவந்த தாழிசைகள் என்றும் இறுதியில் அடக்கியல் பொருள் பெற்றுச் சுரிதகத்தால் முடிந்தது என்றும் கூறி இவற்றைத் தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என்னும் வகையுள் அடக்குவர்.

நச்சினார்க்கினியரால் சுட்டப் பெறும் இப்பகுதிகள் கலிவிருத்தம், நிலைமண்டில ஆசிரியப்பா என வரும் இயற்றமிழ் யாப்பு வகைகளால் இயன்ற இசைத் தமிழ்ப் பாக்களாய் விளங்குவன. எனவே இவை நச்சினார்க்கினியரால் சுட்டப் பெறும் பாவகைக்கு உரியன அல்ல என்பது புலனும்.

ஆசிரியத் தாழிசை

ஆய்ச்சியர் குரவையுள் 'பாட்டு' என்னும் தலைப்பில் மூன்று பாடல்கள் அமைந்துள.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி

இப்பகுதி இலக்கண உரையாசிரியரிடையே மிகுதியும் ஆய்வுக்கு உட்பட்டது.

தொல்காப்பியர் கூறிய பண்ணத்தியைப் பாவினம் எனக் கொள்ளும் கருத்தினர் இளம்பூரணர். 'பண்ணத்தி எனினும் பாவினம் எனினும் ஒக்கும்' என வரும் அவர் விளக்கத் தொடர் இதனைத் தெளிவிக்கும். பாவினத்துள் ஆசிரியத் தாழிசையும் ஒன்று. ஆசிரியத் தாழிசை தனித்து

மூன்றடி ஒத்து வருவதோடு ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி யும் வரும் எனக் கூறி இப்பாடல்களைச் சான்றாய்க் காட்டுவர்[26]. எனவே இளம்பூரணர் இப்பாக்களை ஆசிரியத் தாழிசை என்னும் யாப்பு வகையினவாகக் கருதியமை பெற்றாம்.

பேராசிரியர் 'தரவின்றாகித் தாழிசை பெற்ற கொச்சக ஒருபோகு தேவபாணியாய்த் தனித்தும் அடுக்கியும் வரும்' எனக் கூறி, தாழிசை மூன்றடுக்கிய வழி மூன்றடியான் வருதற்கு இவற்றைச் சான்று காட்டுவர்[27]. நச்சினார்க் கினியரும் பேராசிரியரைப் பின்பற்றி இவை படர்க்கைப் பரவலாய் மூன்றடுக்கி மூன்றடியான் வந்த தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு என்பர்[28].

நச்சினார்க்கினியர், இப்பாடல்கள் கந்திருவ மார்க்கத் தான் இடைமடக்கி நான்கு அடியாகவும் வரப் பெறும் எனக் கூறுவர். எனவே

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயில்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

எனவரும் வடிவில் இப்பாடல்கள் அமைதல் வேண்டும் என்பது அவர் கருத்தாதல் புலனாம்.

யாப்பருங்கலம்[29], யாப்பருங்கலக் காரிகை[30], இலக்கண விளக்கம்[31], முத்துவீரியம்[32] ஆகிய பின்றை இலக்கண நூல்களிலும் இப்பாடல்கள் மூன்றும் ஒரு

26. தொல். செய். இளம். நூ. 175 உரைவிளக்கம்
27. தொல். செய். பேரா நூ 149. உரைவிளக்கம்
28. தொல். செய். நச்சி. நூ. 149 உரைவிளக்கம்
29. யாப். விருத்தி நூ. 22-உரைவிளக்கம்
30. யாப். காரிகை. செய். நூ. 9 உரைவிளக்கம்
31. இல. விள. நூ. 735
32. முத். வீரி. நூ. 927

பொருள்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை களாகவே சுட்டப்பட்டுள்ளன.

பேராசிரியர், நச்சினார்க்கினியர் தவிர இளம்பூரணர் உள்ளிட்ட இலக்கண உரையாசிரியரும் இப்பாக்களை ஆசிரியத் தாழிசை என்னும் யாப்பு வகையாகவே சுட்டினர் என்பது போதரும்.

இனி, இப்பாக்கள் பொருளினால் வேறுபட்ட கொச்சக ஒருபோகாய்க் கூறுதற்கு உரியனவாகக் கருதப்பட்டதை யும் அங்ஙனம் கூறுதல் பொருந்தாது எனப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மறுத்தனர் என்பதையும் அவர்தம் உரைகளால் அறியலாம்[33].

மேலும் இப்பாக்கள் போன்றவற்றைப் பாவினங்களா கக் கூறுதல் பொருந்தாது என்பதையும் இவ்விருவரும் வன்மையாக மறுப்பர். இவர்கள் மறுப்பு, இவற்றை ஆசிரியத் தாழிசை என்னும் பாவினமாக முதலில் உரைத்த இளம்பூரணரை நோக்கியது. வெண்பாவிற்கு உரிய வெண்டளையான் அமைந்ததை ஆசிரியத் தாழிசை என்றும், அதுவே நான்கு அடியால் வருமாயின் கலிவிருத்தம் என்றும் கூறப்படுவதை இவர்கள் மறுப்பர்[34].

---

33. அ 'கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்' என்பதோவெனின் அது முல்லை நிலத்துக்குத் தெய்வமாகலாலும், முல்லை நிலத்தார் தந்தெய் வத்தினை அவ்வாறு அன்பு செய்து முன்னிலைப் புறமொழியாகக் கூற தலாலும் அது கைக்கிளை யெனப்படாதென்பது-தொல். செய். பேரா நூ. 149 உரைவிளக்கம்

ஆ. 'கன்று குணிலா' என்பது அந்நிலத்திற்கு உரிய தெய்வத்தை அவர் பராவுதலிற் கைக்கிளை அன்று-தொல். செய். நச்சி. நூ. 149 உரை விளக்கம்

34. அ. கன்று குணிலா...... என மூன்றும் மூன்றடியான் முடிந்ததனை ஆசிரியத் தாழிசையெனின் அதனுட் கிடந்த வெண்டளை அதற் கொன்றுதென்னும் என்பது. இனி இதுவே நான்காகிவரிற் கலி விருத்தமென்ப-தொல். செய். பேரா. நூ. 149 உரைவிளக்கம்

ஆ. கன்று குணிலா.....இது வெண்டளையான்வருதலின் ஆசிரியத்திற் கினமாகாதென மறுப்பர். இனி இது நான்கடியான் வருமேற் கலி விருத்தமாம் என்பார்க்கு...... தொல். செய். நச்சி. நூ. 149-உரை விளக்கம்

சிலப்பதிகாரத்துள் அமைந்த இத்தாழிசைப் பாடல்கள் மூன்றும்,

'பலவுறு நறுஞ்சாந்தம் படுபவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே'[35]

என வரும் கலிப்பாடலின் தாழிசைகளே ஒத்துள்ளன என்று எடுத்துக்காட்டி, ஆசிரியத் தாழிசைகளாகக் குறிப்பிடப் பெறும் இவை போன்ற பாடல்களுக்கு எல்லாம் பெரும்பாலும் பழமையான கலிப்பாடல்களுள் மூலம் அமைந்து உள்ளது என்பர் டாக்டர் அ. சி. செட்டியார்[36].

தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி வகையினவாய் அமைந்த இவ்விசைப் பாடல்கள் இயற்றமிழில் ஆசிரியத் தாழிசை என்னும் யாப்புக்கு உரியன. எனவே, இயற்றமிழில் ஆசிரியத்தாழிசை யாப்பு வகையினவென இவற்றை இளம்பூரணர் கூறுவது பொருந்தும்.

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு

மூன்றடுக்கி ஓரடி மிக்கு வருவது

ஆய்ச்சியர் குரவையுள் முன்னுள்ள உள்வரி வாழ்த்துப் பாடல்களைப் போன்று, படர்க்கைப் பரவலாய

35. கலி. 9

36. All that is aimed at now is but to show that asiriya talisai-one of the twelve supplemental metres-had its origin in talisais which loomed large in Kali Verse of old-Advanced Studies in Tamil Prosody Dr.A'C. Chetiiar P.139

தேவபாணியாய்ப் பின்னுள்ள மூன்று பாடல்களும் அமைந்துள்ளன.

மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையுந் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பா னூற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே

இவை நச்சினார்க்கினியரால் யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகுக்குச் சான்றாகக் காட்டப்பட்டவை. படர்க்கைப் பரவலாய் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி நான்கடியிற்றபின் ஓரடிமிக்குவந்த யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகுப் பாடல்களாய் இவை அமைந்துள்ளனவென்பர் நச்சினார்க்கினியர்[37].

கொச்சகவொருபோகாக வரும் பாடல்கள் இடைமடக்கியோ, நான்கடி யிற்றபின் ஓரடி மிக்கோ வருதல் உண்டு. யாப்பினால் வேறுபடும் வகைகளை நச்சினார்க்கினியர் விரிவாக விளக்குவர். பாடல்களுள் முதல் நான்கடியும் ஒரு விகற்பமாகவும், இறுதியடி ஒரு விகற்பமாயும் அமையும் நிலையே இவை நான்கடியால் இற்று ஓரடிமிக்கு வந்ததைப் புலனாக்கும். எனவே இயற்றமிழ் யாப்பு வகையால் யாப்பினால் வேறுபட்ட கொச்சக வொருபோகாக

37. தொல். செய். நச்சி. நூ 149-உரை விளக்கம்

அமைந்த இப்பாடலுக்கு நச்சினர்க்கினியர் சுட்டும் யாப்பு வகை சாலவும் பொருந்துவதே. எனினும், இவை இசைப் பாடல்களாகவும் மூன்றடுக்கி வந்தன என்பதும் நினைவு கொளத்தகும்.

ஐந்தடிமுடிந்து ஈரடிமிக்கது

துன்பமாலையுள் இறுதியில் அமைந்த பகுதியும் நச்சசினர்க்கினியரால் மேற்கோளாகச் சுட்டப்படுவது.

வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளி ரெல்லீரும் கேட்டீமின்
ஆய மடமகளி ரெல்லீரும் கேட்டைக்க
பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனே வெண்கணவன்
கள்வனே வல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்

(துன்பமாலை. 47-53)

எனவரும் பகுதி நச்சினர்க்கினியரால் யாப்பினல் வேறு பட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகையாகச் சுட்டப்படும். இது ஐந்தடிச் செய்யுள் முடிந்தபின் ஈரடி மிக்கது என இப்பாவகையைக் குறிப்பர்[38] நச்சினர்க்கி னியர். இப்பகுதி துன்பமாலையின் பிற்கூருய யாப்பினல் வேறுபட்ட கொச்சகவொருபோகில் இடையடி மடக்கியும் அந்தாதித்தும் அமைந்த கொச்சகம் என்னும் உறுப்பாகும். பாவின் உறுப்பாக விளங்கும் பகுதியைப் பாவகையாகவே நச்சினர்க்கினியர் கூறுவது பொருந்தாது.

கீழ்வரும் பட்டியல் உரையாசிரியர்கள் பலரும் சிலப்பதிகாரப் பாக்களை எவ்வகை யாப்புக்களாக மேற் கோள் சுட்டினர் என்பதையும், இக்கட்டுரைக்கண் அப்பாக்களுக்குக் கூறப்படும் யாப்புப் பெயர்கள் யாவை என்பதையும் ஒருசேரத் தொகுத்துக் காணத் துணை செய்யும்.

38. தொல். செய். இளம். நூ, 149

எண்	பகுதி	பாடல்	உரையாசிரியர் கூறும் யாப்பு	கட்டுரைக்கண் கூறப்படும் யாப்பு
1.	கானல் வரி	கானல்வரி- நிணங்கொள்	அகநிலைக்கொச்சகக்கலி (பேரா, நச்சி)	பண்ணத்தி-ஆசிரியத்துறை
2.	வேட்டுவ வரி	முன்னிலைப்பரவல்	தரவின்றித்தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு (நச்சி)	பஃறாழிசைக்கொச்சகக் கலிப்பாவின் தாழிசைகள் ஆகிய உறுப்புக்கள்
3.	,,	கொடை	,,	பண்ணத்தி-கலிவிருத்தம்
4.	,,	அவிப்பலி	,,	,,
5.	ஆய்ச்சியர் குரவை	உள்வரிவாழ்த்து	,,	,,
6.	துன்பமாலை	அரசுறை ...... மாழ்குவாள்	,,	யாப்பினல் வேறுபட்ட கொச்சக வொருபோகின் தனிச்சொல், கொச்சகம் ஆகிய உறுப்புக்கள்
7.	ஊர்சூழ்வரி	என்றிவை...... வாயில்முன்	,,	அயன்மயங்கிசைக்கொச்சக கலிப்பாவின் தரவு, தாழிசை, சுரிதகம் ஆகிய உறுப்புக்கள்
8.	குன்றக்குரவை	தெய்வம்பராஅயது முதலிய பகுதிகள்	,,	பண்ணத்தி-கலிவிருத்தம், நிலைமண்டில ஆசிரியப்பா
9.	ஆய்ச்சியர் குரவை	பாட்டு	ஆசிரியத்தாழிசை (இளம். யாப்பருங்கலம், காரிகை, இல. விள, முத். வீரி) தரவின்றித்தாழிசைபெற்ற கொச்சகவொருபோகு- தேவபாணி (பேரா, நச்சி)	பண்ணத்தி-ஆசிரியத் தாழிசை
10.	ஆய்ச்சியர் குரவை	படர்க்கைப் பரவல்	யாப்பினல் வேறுபட்ட கொச்சகவொருபோகு (நச்சி)	பண்ணத்தி-யாப்பினல் வேறுபட்ட கொச்சகவொருபோகு
11.	துன்பமாலை	வாய்வதில் . . . - ஒருகுரல்	,,	யாப்பினல் வேறுபட்ட கொச்சக வொருபோகின் கொச்சகவுறுப்பு

இங்ஙனம் இலக்கண உரையாசிரியர் தொன்மைக் காப்பியமாய் விளங்கும் சிலம்பின் யாப்புவகையைத் தம் யாப்பிலக்கண உரையுள் மேற்கோள் சுட்டிப் போந்தனர். தொல்காப்பியச் செய்யுளியல் உரையாசிரியராய இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் மற்றும் யாப்பருங்கல விருத்தியுரைகாரர், காரிகை உரைகாரர், மற்றும் இலக்கண விளக்கம், முத்துவீரிய உரை ஆசிரியர்கள் இம்முறையில் சிலம்புப் பாக்களாகிய பூக்களை யாப்பு வகை மேற்கோளாய மாலையுள் சூட்டியோர் ஆவர்.

இவர்களுள், நச்சினார்க்கினியரே சிலம்பின் யாப்பு வகைகளை மிகுதியும் மேற்கோள் சுட்டிய உரையாசிரியர். ஏறத்தாழப் பத்திடங்களுள் இவர் சிலப்பதிகார யாப்புப் பகுதிகளை மேற்கோள் காட்டிய பெருமையர். கொச்சக வொருபோகின் வகைகளை விளக்குதற்கும், அகநிலைக் கொச்சகக் கலிப்பாவைக் கூறுதற்கும் இவர் மேற்கொண்ட சிலம்புப் பகுதிகளே சான்றுகளாயின.

தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொரு போகினைப் பல்வகைச் சிலம்பின் யாப்புக் கூறுகளால் விளக்கியபின்னரும் 'இன்னும் சிலப்பதிகாரத்துள் வரும் வேறுபாடெல்லாம் இவ்விலேசான் முடித்துக் கொள்க' என்று கூறியுள்ளதும்[39] நினையத்தகும். பேராசிரியர் உரையையே பெரிதும் பின்பற்றியது நச்சினார்க்கினியர் உரை. எனினும் பேராசிரியர் குறிப்பிடாத யாப்பு வேறுபாடுகளை மிகுதியும் சுட்டி, அவற்றுக்கு ஏற்ற சான்றுக் கொள்கலமாய்ச் சிலப்பதிகாரத்தைக் கொண்டார் நச்சினார்க்கினியர்.

யாப்புநோக்கில் சிலப்பதிகாரத்தை மேற்கோள் சுட்டிய உரையாசிரியர் முற்கூறியவர்களே. எழுத்து,

39. தொல். செய். நச்சி. நூ. 149-உரைவிளக்கம்

சொல், பொருள், அணி முதலாய இலக்கணக்கூறுகளுக்குச் சிலம்பைச் சான்றாகக் கொண்டோர் பலருளர். சிலப்பதிகாரம் பின்றை உரையாசிரியருக்கு மேற்கோள் எடுத்துக் காட்ட உதவிய யாப்புக் கருவூலமாய் விளங்கியது.

— — —

சிலப்பதிகார யாப்பு நெறி

இளங்கோவடிகள் உலகப் பெருங் கவிஞர்களின் வரிசையில் முதலிடத்தில் வைத்து எண்ணுதற்குரியவர். ஒரே காப்பியத்துள் பல்வேறு யாப்பு வகைகளைப் படைத்துக்காட்டி, பொருட்சிதைவும், கதைத் தொய்வுமின்றிக் காப்பியத்தை நடாத்திய பெருங்கவிஞர். இலக்கியங்கள் தம் காலத்துச் சமுதாய வாழ்வியல் பாங்குகளை உணர்த்துவதோடு, அக் காலத்துப் புலவர் படைத்த இலக்கியங்களின் யாப்பு நெறிகளையும் செவ்விய முறையில் செறிந்தினிது விளக்கும் செவ்வனுடியாய்த் திகழ்பவை. அடிகளின், சிலப்பதிகாரக் காப்பியமும் இம்முறையில் பாவியல் நெறிகளைப் பாங்குற உணர்த்தும் யாப்புக் கருவூலமாய்த் திகழ்வது.

சங்க மருவிய காலம், சங்கச் சாயலும் புத்திலக்கியப் படைப்புச் சாயலும் உடையது. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இக்காலவெல்லையில் எழுந்த இரு பேரிலக்கியங்கள். இவ்விரண்டனுள் யாப்பு நோக்குக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்வது சிலப்பதிகாரம். இயல் இசை, நாடகம் என்ற முப்பெருங் கூறுகளும் விரவிய யாப்புச் சுரங்கமாய்ச் சிலப்பதிகாரம் திகழ்கின்றது. மணிமேகலை, துறவின் பெருமையை இனிது விளக்கும் காப்பியமாதலால், இசை நாடகக் கூறுகள் சிலம்பினளவு அதனுள் இடம் பெறுதிருத்தல் இயல்பேயாம்.

சிலப்பதிகாரக் காப்பியம் பல்வேறு பொருண்மைகளின் அடிக்களமாய் விளங்குவது. சமுதாயப் பாடல்கள் பலவற்றுக்கும் இலக்கிய வடிவம் தந்தது சிலப்பதிகாரமே. மேலும் காப்பியன் தன் காப்பிய ஆக்கத்தின்போது பலவகைச்

செயல் வேறுபாடுகளும், சிந்தனைபொருமையும் உடையன் காப்பியனின் இவ்வியல்பு நிலையைப் பின்வருமாறு விளக்குவர் அறிஞர். 'நீண்ட காப்பியம்செய்யும் புலவன் ஒருவகையாற் கட்டுண்டவன். காப்பியத்தின் ஓட்டங் கருதிப் பல நிகழ்ச்சிகளை இடைமடுத்துக் கூறுவான். முழுமையும் ஒருமையும் கருதிக் கற்பனை குன்றிய கருத்துக்களைப் பொருத்துவான். மருட்கை முதலிய சுவைகருதி உலகிறந்த மிகைபாடுகளைப் புகுத்துவான். கற்பவரின் எண்ணத்தைக் கடைசிவரை கவரவேண்டி வேண்டுமென்றே சில சுவைப் படுத்துவான்' எனவரும் பகுதி[1] நினைதற்குரித்து. பொருள் வேறுபாடுகளும், முழுமை, ஒருமை, சுவை முதலாயவற்றை நோக்கும் காப்பியனின் இயல்பு வேறுபாடுகளும் காரணமாகக் காப்பியத்தில் பலவகை யாப்பு நிலைகள் தோன்றுகின்றன. கவிஞனின் அயர்ச்சியும் சுறுசுறுப்பு மறைவும் இல்லாதவாறு காப்பியத்தை ஆற்றொழுக்கான சுவையுணர்வோடு நடத்திச் செல்வன யாப்பு வேறுபாடுகளே. பொருள் மாற்றத்திற்கும், கூற்று வேறுபாட்டுக்கும், புதிய பகுதியின் தொடக்கத்திற்குமாக யாப்பு வகைகளை வேறுபடுத்தும் பாங்கு சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்பு. இதனால் சிலப்பதிகாரக் காப்பியம் பல யாப்பு வகைகளை பெற்று விளங்குகின்றது. முன்னைப் பழமைக்குப் பழமையாகவும் பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கும் இவ்வியாப்பு வகையால் சிலப்பதிகார யாப்பு நெறிகளை இனிதுணர இயலும்.

நிலைமண்டில ஆசிரியத்தின் யாப்பு நெறி

சங்க மருவிய காலத்துப் பெரும் பான்மை யாப்பாகப் பயின்றது நிலைமண்டில ஆசிரியமேயாகும். கதைப்பொருண்மையைப் பாடுதற்குரிய யாப்பு வகையாக இதுவே சிறந்து விளங்கியது என்பதை இவ்வியாப்பு வகையால் சிலப்பதிகாரத்தில் அமைந்த பதினெட்டுக்

1. தமிழ்க்காதல் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் பக். 336

காதைகளும், மணிமேகலையில் உள்ள இருபத்தேழு காதைகளும் இனிதுற உணர்த்துவ.

தளையமைப்பு

இப்பாவகையில் இடம் பெற்ற தளைவகைகள் காதை வரிசையில் இவண் சுட்டப்பட்டுள்ளன.

எண்.	காதைப்பெயர்	அடி எண்	நே	நி	இ	வெ	க	ஒன்றி வ	ஒன்றா வ
1.	மனையறம்	90	90	84	163	6	16	-	-
2.	அரங்கேற்று	175	213	140	315	16	15	–	–
3.	அந்திமாலை	84	108	75	126	12	14	-	–
4.	இந்திரவிழ	240	227	224	432	25	48	2	1
5.	கடலாடு	174	175	156	325	16	22	–	1
6.	வேனிற்	118	109	121	213	8	20	-	-
7,	நாடுகாண்	248	220	191	536	31	13	-	-
8.	காடுகாண்	216	245	175	413	16	14	-	-
9.	புறஞ்சேரி	196	210	189	358	19	6	-	1
10.	ஊர்காண்	218	231	190	390	28	31	-	1
11.	அடைக்கலக்	219	261	231	352	20	11	-	-
12.	கொலைக்களக்	217	286	253	309	9	9	-	1
13.	அழற்படு	157	188	143	279	6	10	1	-
14.	காட்கிக்	194	243	143	331	24	34	-	-
15.	கால்கோட்	254	322	212	434	17	28	2	-
16.	நீர்ப்படைக்	256	315	192	437	43	36	-	-
17.	நடுகற்	234	298	192	415	17	13	-	-
18.	வரந்தரு	202	258	152	383	10	4	-	-
	கூடுதல்	3492	3999	3063	6211	323	344	5	5

பெரும்பான்மை ஈரசைச் சீர்களும் சிறுபான்மை மூவசைச் சீர்களுமாய் இப்பாவகை பயின்றுளது. ஈரசைச்சீரால் பிறக்கும் மூவகைத் தளைகளுள் விகற்பத் தளையாய இயற்சீர் வெண்டளையே அனைத்துக் காதை

களிலும் மிகுதியும் பயின்றது. ஈரசைச்சீர்களில் ஒன்றுந் தளையிரண்டனுள் நேரொன்றாசிரியத்தளை மிகுந்த பயிற்சியும் நிரையொன்றாசிரியத்தளை அதனினும் குறைந்த பயிற்சியும் பெறுதல் காணலாம்.

மூவசைச் சீர்களால் பிறப்பனவற்றுள் வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் ஏறத்தாழ ஒத்தவளவு பயின்றுள்ளன. எஞ்சிய ஒன்றிய வஞ்சித்தளையும் ஒன்றாத வஞ்சித்தளையும் மிகவும் அருகிய வழக்காய் நூல் முழுதும் ஐந்தைந்திடங்களில் மட்டுமே ஆட்சி பெற்றுள. 3492 அடி எண்ணிக்கையுடைய பதினெட்டுப் பாடற் பகுதி களிலும் பயின்று வரவேண்டிய தளைகளின் மொத்த எண்ணிக்கை 13950. இப்பேரெண்ணில் வஞ்சித் தளை களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. யாப்பருங்கலத் தார் சுட்டுதல் போன்று இவை சிறப்பில் தளைகளாய் சிலப்பதிகாரக் காலத்தும் கருதப்பட்டன போலும்! பதினெட்டுக் காதைகளில் ஆறு காதைகள் தவிர எஞ்சிய பன்னிருகாதைகளில் இத்தளைகள் இடம் பெருதிருத்தலை நோக்க, இடம் பெற்ற தளைகளும் உரிய பிரிப்பு நிலையின்மையாலும் பாடவேறுபாட்டாலும் இடம் பெற்றிருத்தல் கூடுமோ என ஐயம் நிகழ்தல் இயற்கை.

தொடையமைப்பு

எதுகை மோனை முதலாய தொடை வகைகளால் கவிதையில் ஒலிநயம் சிறப்பதுமுண்டு; இறப்பதுமுண்டு. இவற்றுக்கு மேலாக உணர்ச்சியும் கற்பனையும் சிறப் புடையதாயிருத்தல் வேண்டும். 'உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் சிறப்பான முதலிடமும், ஒலி நயத்திற்கும் யாப்புக்கும் அடுத்த இரண்டாம் இடமும், எதுகை முதலியவற்றிற்கு மூன்றாம் இடமும் கொடுத்துப் பழம் புலவர்கள் பாட்டுக் கலையை வளர்த்தனர் எனக் கருத

லாம்' என உணர்ச்சி, கற்பனை, ஒலிநயம், யாப்பு, தொடையமைப்பு இவற்றின் இடவரிசையை வகைப்படுத்துவர்[2].

எதுகையால் பாடலில் ஒலிநயம் சிறக்கும் என்றும்[3] எதுகை என்பது தேவையற்ற மிகையான அணிகலன் என்றும்[4] திறனர் இருவகைக் கருத்தினர். மோனை என்பது செய்யுளுக்கு இன்றியமையாததன்று என்றும், வெளிப்படையாகத் தானாகவே அமைந்துவரும் மோனை ஒருவகையில் அழகு தருவதே என்றும் கூறுவர்[5].

சிலப்பதிகாரத்தில் எதுகை மோனை முதலாய தொடை வகைகளும், அவற்றின் விகற்ப வகைகளும் இயல்பாகவே செறிந்தமைந்து இனிய ஒலிநயம் தருவனவாயுள. இயற்பாடல்களைவிட இசைப்பாடல்களில் இத்தகைய ஒலிநயம் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

நிலைமண்டில ஆசிரியப் பாக்களில் அமைந்த தொடையமைப்புச் சிறப்புக்களை ஒரு சிறிது இவண் நோக்குவாம்.

> முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
> வழங்கத் தவாஅ வளத்த தாகி
>
> (மனை. காதை. 3-4)

என இரண்டடிகளில் ஒத்தஎதுகைச் சிறப்பும்,

2. இலக்கியத்திறன் - டாக்டர் மு. வரதராசன் பக். 213
3. Rhyme intensifies the effect of rhythm that is natural to all heightened on impassioned feeling-Some Principles of Literary Criticism-C.T.Winchester P. 265
4. In recent poetry there is a movement against the use of rime. The exponents of the advanced school denounce it as 'A silly ornament that is no ornament at all-a toy trinke added to poetry, .,-The Realm of Poetry-S J Brown P.39
5. Alliteration is at present only a secondary and incidental charm of verse. If concious or obstrusive, it is likely to offend as artificial; but irregular, spontaneous, and largely disguised, it lends a grace which, though often unrecognised, would be missed if absent.
-Some Principles of Literary Criticism-C.T.Winchester P. 268

உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்

(மணி.காதை.1-2)

என இரண்டடிகளில் வருக்க வெதுகைச் சிறப்பும்,

நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழிக்
கழுநீர் ஆம்பல் முழுநெறிக் குவளை

(மணி. காதை13-14)

என இரண்டடிகளில் உயிரெதுகைச் சிறப்பும் அமைந்துள இங்ஙனமே மோனைச் சிறப்பும் பல்லிடங்களில் பரந்து மணம் வீசக் காண்பாம்.

மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்
மடநடை மாதுநின் மலர்க்கையி னீங்கா

(மணி.காதை. 59-60)

என ஒத்த மோனைச் சிறப்பு ஈரடிகளிலும்,

அத்தகு திருவி னருந்தவ முடித்தோா
உத்தர குருவி னொப்பத் தோன்றிய

(மணி,காதை. (9-10)

என உயிர்மோனைச் சிறப்பு ஈரடிகளிலும்,

கலத்திலும் காலிலும் தருவன ரீட்டக்
குலத்திற் குன்றுக் கொழுங்குடிச் செல்வர்

(மணி.காதை.7-8)

எனவருக்கமோனைச் சிறப்பு ஈரடிகளிலும் அமைந்துள. எதுகைச் சிறப்பு ஈரடிகட்கிடையே மட்டுமின்றி,

'பண்ணமை முழவின் கண்ணெறி அறிந்து
தண்ணுமை முதல்வன் தன்னொடும் பொருந்தி
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்கு

(அர.காதை 61-63)

என மூன்றடிகளிலும்,

எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு

(அரங்.காதை.95-98)

என நான்கடிகளிலும்,

மண்களி நெடுவேல் மண்ணவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தனி துரைக்கும்
ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாம்
திண்டிறல் வேந்தே செப்பக் கேளாய்

(காட்சி 64-68)

என ஐந்தடிகளிலும் தொடர்ந்து பயின்றுள்ளன.

மறவுரை நீத்த மாசற கேள்வியர்
அறவுரை கேட்டாங் கறிவனை யேத்த

(நாடுகாண்.56-57)

எனவரும் பகுதியில் அடிமுரண்டொடையும்,

உழாஅ நுண்டொளி உள்புக் கழுந்திய
கழாஅமயிர் யாக்கைச் செங்கட் காரான்

(நாடுகாண்.178-179)

எனவரும் பகுதியில் அடியளபெடைத் தொடையும்,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே

(மனை. காதை 73-76)

எனவரும் பகுதியில் நான்கடிகளில் அடிஇயைபுத் தொடையும் அமைந்து விளங்குதல் காணலாம்.

மேலும் வந்த அடியே இரட்டித்து இடைமடக்கி வரும் சிறப்பை,

தேசிகத் திருவி னோசை கடைப்பிடித்துத்
தேசிகத் திருவி னோசை யெல்லாம்

(அரங். 30-31)

எனவரும் பகுதியிலும்,

இட்ட சித்தி யெய்துவி ராயின்
இட்ட சித்தி யெய்துவிர் நீரே

(காடுகாண். 102-103)

எனவரும் பகுதியிலும் காணலாம். இங்ஙனமே அடிதோறும் பயின்றுவரும் தொடை விகற்பங்களும் சிறப்புற அமைந்துள. தொடைகளும் தொடைவிகற்பங்களும் இயல்புற அமைந்து இன்னோசை பயக்கின்றன. எதுகைத் தொடையுமைப்பே இவற்றுள் சிறப்பாகப் பயின்றுள்ளது.

ஈற்றமைப்பு

சிலப்பதிகாரத்தில் நிலைமண்டில ஆசிரியப்பா 'என்' என்னும் ஈறு பெற்று முடிதலை நெறியாகக்கொண்டு இருந்தது. இப்பாவகையால் அமைந்த பதினெட்டுக் காதைகளிலும் 'என்' என்னும் ஈற்றமைப்பு அமைந்து உள்ளதைக் காணலாம். சிலம்புடன் ஒருங்கு தோன்றியதாகக் கருதப்படும் மணிமேகலையுள்ளும் 'என்'னீறுகளே சிறப்புறப் பயின்றுள்ளமை இம்முடிபைத் தெளிவிக்கும்.

பதினாறும் நூற்றாண்டில் செகப்பிரியரின் நாடகங்களுள் -ed எனவரும் ஈறு பயின்று வந்ததை இவண் ஒப்பு நோக்கலாம். தொடக்க காலத்தில் ஒலிப்பு நிலை பெற்றிருந்த இவ்வீறுகள், பின்னர் அழுத்தக் குறியீடு

களால் சுட்டப்பெற்றதும், இன்று ஒலிப்பின்றி வழங்கு வதையும் திறனர் சுட்டுவர்[6].

இசைப்பாவாய் வருதல்

நிலைமண்டில ஆசிரியப்பா இயற்றமிழ் யாப்பு வகையாய்ப் பெரும்பான்மையாகப் பயின்றமைக்கு மேலும் மிகச் சிறுபான்மையாய் இசைப்பாவுக்குரிய யாப்பு வகையாகவும் சிலப்பதிகாரத்துள் பயின்று வந்தது. குன்றக்குரவையுள் 'கடம்பு சூடி உடம்பிடி ஏந்தி' எனவரும் இசைப்பாடல் இதனை விளக்கும். நிலை மண்டில ஆசிரியப்பா இசைப்பாடலுக்குரிய யாப்பு வகையாக வருங்கால் 'என்' என்னும் ஈறு பெருது ஏகாரவீறு பெற்று முடியும் என்பதை 'மடவர் மன்றவிச் சிறுகுடி யோரே' எனவரும் ஈற்றடி விளக்கும்.

எண்.	பாடல் பெயர்	அடியெண்	நே.	நி.	இ.	வெ.	க.	ஒன்றிவ	ஒன்றுவ
1.	'கடம்புசூடி' பாட்டுமடை- இசைப்பா- குன்றக்குரவை	6	7	1	15	-	-	-	

இசைப்பாடலாய் நிலைமண்டில ஆசிரியப்பா வருங்கால் ஈரசைச்சீர்களாலேயே இயன்றுவரும் என்பதும் அதனுள் இயற்சீர் வெண்டளை நேரொன்றாசிரியத்தளை, நிரை யொன்றாசிரியத்தளை ஆகிய தளைகளே பயின்று வரும் என்பதும் இவ்வமைப்பால் பெற்றும்.

6. In the sixteenth century many syllables, now silent, were pronounced, and could be used in verse. Thus the ending-ed in Shakespeare is often sounded and sometimes forms a beat of the verse... Later, too, the ending-ed is somtimes sounded; it is then generally marked with a grave accent; lovèd, changèd.

-A Short History of English Versification - Max Kaluza P. 278

வாழ்த்தாய் வருதல்

இசைப்பாடலுள் வாழ்த்து என்னும் தனிப் பொருண்மை பயின்றதாயும் நிலைமண்டில ஆசிரியப்பா சிலப்பதிகாரத்தில் பயின்று வந்தது என்பதும் ஆய்ச்சியர் குரவையால் அறிதும். இப்பாடலுள் சிறுபான்மை மூவசைச் சீர்களும் பயின்று வருதல் உண்டு. 'துயர் தீர்க்க' 'மாறட்டு' எனவரும் மூவசைச்சீர்கள் இக்கருத்தை உணர்த்துவ.

எண். பாடல்பெயர்	அடியெண்	நே.	நி.	இ.	வெ.	க.	ஒன்றிவ	ஒன்றுவ
1. அரசவாழ்த்து- இசைப்பா- ஆய்ச்சியர் குரவை	6	5	3	12	3	-	-	-

இப்பட்டியல் இப்பாவில் பயின்ற தளைவகைகளை உணர்த்தும். மூவசைச்சீர்கள் சிறுபான்மை பயின்று வரினும் அதனால் இப்பாடல்களுள் வெண்டளையே பிறக்கும் என்பதும் சுட்டத்தக்கது. குன்றக்குரவையுள் பயின்ற இசைப்பாடல் போன்று இப்பாடலுள்ளும் 'தொடித்தோட்டென்னவன் கடிப்பிகு முரசே' என ஏகாரவீறு பயின்று வருதலைக் காண, நிலைமண்டில ஆசிரியப்பா இசைப்பொருண்மையுடைய பிறபாடலாகவோ அல்லது வாழ்த்துப்பாடலாகவோ வரின் 'ஏ' காரவீறே பெறுவது சிலம்பின் யாப்பு நெறியாய் வழங்கிற்று என்பதைத் தெள்ளிதின் உணரலாம்.

குறள்மிடை மண்டில யாப்பு நெறி

இளங்கோவடிகள் குறட்பாக்களை இடையே மடுத்து வரும் நிலைமண்டில ஆசிரியப்பா ஒன்றையும் கட்டுரை காதையில் இயற்றமிழ் யாப்பாய் அறிமுகப்படுத்தி

உள்ளார். புதிய அமைப்பினதாய இப்பாவகையில் முதல் இருபத்துநான்கடிகள் நிலைமண்டில ஆசிரிய யாப்பாகவும் அடுத்து மூன்று குறள்வெண்பாக்களும், பின்னர்த் தனிச் சொல்லொன்றும், அதனையடுத்து நூற்று எழுபது அடிகள் மீண்டும் நிலைமண்டில ஆசிரியப்பாகவும் அமைந்துள்ளன.

எண்	பாடற்பெயர்	அடி. யெண்	நே	நி.	இ.	வெ.	க.	ஒன்றி வ	ஒன்று வ
கட்டுரை காதை									
1.	நிலைமண்டிலக்கூறு	24	20	23	44	6	2	-	-
2.	குறள்வெண்பா 1.	2	-	-	4	2	-	-	-
3.	,, 2.	2	-	-	5	1	-	-	-
4.	,, 3.	2	-	-	4	2	-	-	-
5.	தனிச்சொல்	-							
6.	நிலைமண்டிலக்கூறு	170	228	130	288	18	15	-	-

இப்பட்டியலால் சிலப்பதிகாரத்தில் வழங்கிய இப் புதுப்பாவகையின் அமைப்பினை அறியலாம். முன்னும் பின்னும் நிலைமண்டில ஆசிரியக் கூறுகளையும் இடையில் குறள்வெண்பாக்களையும் பெற்று வருவது இப்பாவின் அமைப்பு. குறள் வெண்பாக்கள் பின்னுள்ள பாவகையுடன் இணைதற்கு இடையே இணைப்புச்சொல் பெற்றுவரும். நிலைமண்டிலக் கூறுகள், தனித்துவந்த நிலைமண்டில ஆசிரியப்பாக்களைப் போன்று இயற்சீர் வெண்டளை மிகுதியாகவும், நேரொன்றாசிரியத்தளையை அடுத்தும், அதனினும் குறைவாய் நிரையொன்றாசிரியத்தளையையும் பெற்றுவரும். ஈரசைச்சீர்கள் பெரும்பான்மையினவாயும், மூவசைச்சீர்கள் குறைந்த அளவினவாயும் பெற்றுவரும் பிற நிலைமண்டில ஆசிரியப்பாக்களைப் போன்றே இப்பாவகையும் அமையும் என்றும் ஈறுபெறுவதிலும்

நிலைமண்டிலம் போல என்னீற்றையே இப்பாவகை பெறும் என்றும் அறியலாம்.

நேரிசையாசிரிய யாப்புநெறி

சிலப்பதிகாரம், கதையும், வண்ணனைப் பகுதியும் பிறவும் நிறைந்த பொருட்டொடர் நிலைச் செய்யுளாதலால் இவற்றை உணர்த்துவதற்கு உரிமையும் பயிற்சியும் பெற்றிருந்த நிலைமண்டில ஆசிரியப்பாவே மிகுதியும் சிலப்பதிகாரத்துள் வழக்குப் பயிற்சி பெற்றிருந்தது. எனினும் சிறுபான்மை நேரிசையாசிரியப்பாவும் இதனுள் வழங்கக் காணலாம். பிற ஆசிரிய வகைகளாய இணைக் குறளாசிரியமும் அடிமறிமண்டில வாசிரியமும் மேலே குறிப்பிட்ட வகைகள் போன்று தனி இயற்றமிழ் யாப்பு வகையாகவோ. இசைத் தமிழுக்குரிய யாப்பு வகையா கவோ வழக்குப் பயிற்சி பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேட்டுவ வரிப் பகுதியுள் முற்கூறுய் இடம் பெற்றது நேரிசை யாசிரிய யாப்பு வகையாம். இப்பகுதியுள் இப்பா வகை இடம் பெற்றிருத்தலை நோக்க, சமுதாயப்பாடல் களாய் வரும் இசைப் பாடல்களினிடையே கதைப் பொருண்மையை விளக்கிக் கூறும் யாப்புவகையாக இந்நேரிசையாசிரியம் பயின்று வந்திருத்தல் அறியலாம்.

எண்	பாடற்பெயர்	அடி யெண்	நே.	நி.	இ.	வெ.	க.	ஒன்றி வ	ஒன்று வ
1.	நேரிசை ஆசிரியப்பா வேட்டுவ வரி	74	74	58	144	8	11	-	-

இப்பட்டியல் நேரிசையாசிரிப்பாவில் பயின்றுவரும் தளை வகைகளை உணர்த்துவது. நிலைமண்டில ஆசிரியப்

பாக்களைப் போன்று, இப்பாவகையிலும் இயற்சீர் வெண்டளையே மிகுதியும் பயின்றது. அடுத்து நேரொன்று சிரியத் தளையும் அதன்பின் நிரையொன்றுசிரியத் தளையும் இடம் பெற்றுள.

உரைச்சொல் பெறுதல்

நேரிசையாசிரிய யாப்பு வகைக்குரிய இப்பா உரைப் பாட்டு மடை என்னும் பெயரால் சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பெற்றுள்ளது. இப்பாவின் 46, 47 ஆகிய ஈரடி கட்கிடையே 'இவளோ' என்னும் தனிச்சொல்லும் பாட்டுப் பகுதியும் இடம் பெறுதலால் உரைப்பாட்டு மடை என்னும் பெயருக்கு இப்பகுதி உரியதாயிற்று. நேரிசையாசிரியப் பாவின் இடையே அடி யின் தொடக்கத்தில் இத்தகைய உரைக்கிளவிகளும் பாட்டுப் பகுதியும் இடம் பெறுதல் உண்டு என்றும் அவற்றைப் பெறுங்கால் உரைப்பாட்டு மடை என்னும் பெயரை இப்பாவகைகள் பெறும் என்பதும் சிலப்பதிகார அமைப்பால் நாம் அறியும் யாப்பு நெறியாம்.

ஈற்றமைப்பு

நிலைமண்டில ஆசிரியப்பாக்கள் இயற்றமிழ்ப் பாட லாய் வரின் 'என்'னீறும் இசைத் தமிழ்ப் பாவுக்குரிய யாப்புவகையாய் வரின் ஏகாரவீறும் பெறுவனவாம். நேரிசை யாசிரியமாகிய இப்பாவகை ஏகாரவீற்றைப் பெறும் நெறியுடையது என்பது இப்பாவின் அமைப்பால் அறிதற்குரிய கருத்தாம். ஈற்றயலடி முச்சீராய் ஏகாரவீற்று டன் முடிவது இப்பாவகைக்குரிய யாப்பு நெறியாய விளங்குகின்றது.

வாழ்த்துப் பாவாய் வருதல்

நிலைமண்டில ஆசிரிய வகை போலன்றி, இப்பாவகை வாழ்த்துப் பொருண்மைக்குரிய இசைப்பாடலாய் மிகுதி

யும் வழங்கியதென்னும் நெறியை அறிகின்ருேம். கானல் வரியுள் அமைந்த அரசவாழ்த்துக்கும், வேட்டுவ வரியுள் அமைந்த அரச வாழ்த்துக்கும். குன்றக்குரவையில் அமைந்த அரசவாழ்த்துக்கும் நேரிசையாசிரியப் பாவகையே உரியதாய் விளங்குகின்றது.

எண்.	பாடற்பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ.	க.	ஒன்றி வ	ஒன்ருவ
1.	அரசவாழ்த்து-கானல்வரி	4	5	3	5	1	-	-	-
2.	அரசவாழ்த்து-வேட்டுவ வரி	4	4	2	6	2	1	-	-
3.	அரசவாழ்த்து-குன்றக்குரவை	5	3	-	10	5	-	-	-

வாழ்த்துப்பாவாய் வந்துழி அனைத்துக் காதைகளுக்கும் சுருங்கிய அடியெண்ணிக்கையே பாவகைக்கு உரியதாயுளது. இதற்கேற்ப, நேரிசையாசிரிய யாப்பு வகையில் அமைந்த இவ்வாழ்த்துப் பொருண்மைக்குரிய இசைப்பாடல்களும் குறைந்த அளவு அடி எண்ணிக்கை உடையனவாயுள. இங்கும் இயற்சீர் வெண்டளை, நேரொன்ருசிரியத்தளை, நிரையொன்ருசிரியத்தளை என்ற முறையிலேயே தளைவகைகளின் எண்ணிக்கை வரிசை அமைந்துள்ளது குன்றக்குரவையில் அமைந்த பாடலில் நிரையொன்ருசிரியத்தளை இடம் பெருமையால் வெண்சீர் வெண்டளை மிகுதியும் அமைந்தது.

இப்பாடல்கள் முறையே 'ஆழிமால்வரை யகவையானைவே' என்றும் 'வெட்சிசூடுக விறல் வெய்யோனே' என்றும் 'கொல்லியாண்ட குடவர்கோவே' என்றும் ஈற்று அடிகளைப் பெற்று விளங்குகின்றன. இயற்பாவாய் வரும் இடத்தும், இசைப்பாவாய் வருமிடத்தும் இவை ஏகார வீற்றையே பெற்றுள்ளமையால் இப்பாவகை ஏகார வீற்றைப் பெற்று வருவதே சிலப்பதிகார யாப்பு நெறி எனலாம்.

வஞ்சிப்பாவின் யாப்பு நெறி

சங்கவிலக்கியத்துள் வஞ்சிப்பாவின் வரவு சிறுபான்மையே. இவ்வியாப்புப் போக்கே சங்க மருவிய காலமாகிய சிலப்பதிகாரக் காலத்திலும் நிலவியது. பலவகை யாப்பமைப்புக்கள் இடம் பெற்ற சிலப்பதிகாரத்துள் ஓரிடத்தில் மட்டுமே வஞ்சிப்பா யாப்பு பயின்றுள்ளது.

இளம்பூரணரால் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்னும் உரைநடை வகைக்குச் சான்றுகக் காட்டப் பெறும் 'கயலெழுதிய இமயநெற்றியின்' எனத்தொடங்கும் ஆய்ச்சியர் குரவையின் முற்கூறு குறளடி வஞ்சிப்பா என்னும் யாப்பு வகைக்குரிய பாவாகும். இக்குறளடி வஞ்சிப்பாவில் முதலில் ஆறு அடிகளாய பகுதியும், அடுத்து 'ஆகலின்' என்ற தனிச்சொல்லும், இறுதியில் இணைக்குறளாசிரியப்பா யாப்பு வகையில் அமைந்த ஆசிரியச்சுரிதகமும் முறையே அமைந்துள்ளன. தனிச்சொல்லும் அகவற் சுரிதகமும் பெற்று முடிவனவாய்க் குறளடி வஞ்சிப்பாக்கள் சிலப்பதிகாரத்துள்ளும் அமைந்து இருந்ததை இதனல் அறியலாம்.

எண்.	பாடற்பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	க	ஒன்றிவ	ஒன்ருவ
1.	குறளடிவஞ்சிப்பா	6	-	-	-	4	1	4	2
2.	தனிச்சொல்								
3.	அகவற்சுரிதகம்	4	3	-	7	1	1	-	-

இப்பட்டியல் இப்பாவகையில் அமைந்த தளைவகைகளை விளக்குகின்றது. வஞ்சிப்பாவினுள் தன்றளைக்கு மேலும் வெண்சீர் வெண்டளையும், கலித்தளையும் பயின்று வரும் என்பதும், அகவற் சுரிதகம் இணைக்குறளாசிரிய அமைப்பினதாயும் வருதலுண்டு என்பதையும், பிற ஆசிரியப் பாவகைகளைப் போன்று சுரிதகமாய் வரும் இணைக்குறளாசிரியப் பாவகையிலும் இயற்சீர்

வெண்டளையே மிகுந்து வரும் என்பதும் இதனுல் பெற்றும்.

குறளடி வஞ்சிப்பாவின் சுரிதகமாய் இணைக்குறள் ஆசிரியம் பயில்வுழி, னகரவீற்றை ஈருகப் பெற்று வரும் என்பதும் அறியத்தக்கது. குறளடி வஞ்சிப்பாவினுள் நாலசைச் சீர்கள் பயின்று வரும் என்னும் யாப்பு நெறியைப் 'புலியும் வில்லும்' 'ஏவல் கேட்பப்' 'பாரரசாண்ட' 'பாண்டியன் கோயிலில்' 'கனை குரலியம்பும்' என வரும் சீர்கள் விளக்கிநின்றன.

வெண்பாவின் யாப்பு நெறி

சிலப்பதிகாரம் கதை தழுவிய பொருண்மையது. ஆதலால், ஆசிரியப்பா, கலிப்பா என்னும் யாப்பு வகைகளே இக்காப்பியத்துள் பெருவரவின காதைகளின் இறுதியிலும் இடையேயும் வெண்பாக்களும் சிலப்பதிகாரத்துள் பயின்றுள. நீதி கூறும் போக்கு வெண் பாவுக்குரியது. ஆதலால் இக்கால எல்லையில் எழுந்த திருக்குறள் குறள்வெண்பா யாப்பினுல் அமைந்ததும் இவண் நினையத்தகும். இளங்கோவடிகளும் நீதி கூறும் போக்கினவாய காதையிறுதி வெண்பாக்களைப் படைத்து உள்ளமை இந்நெறியைத் தெளிவுபடுத்தும். காதையின் இடையிலும் இசைப்பாக்களுள் சிலவற்றை இளங்கோ அடிகள் வெண்பா யாப்பில் படைத்துள்ளது அறியத்தகும்.

வெண்பா வகைக்குரிய இயற்றமிழ்ப் பாக்கள் சிலப்பதிகாரத்துள் இல. குன்றக்குரவையுள் பஃறெடை வெண்பா வகைக்குரிய இசைப்பாடல் இரண்டும் வாழ்த்துக் காதையுள் இன்னிசை, நேரிசை வெண்பா யாப்புக்குரிய இசைப்பாடல்கள் இரண்டும் கூடுதல் நான்கு பாடல்களே சிலம்பில் காதையிடை இடம் பெற்ற

வெண்பா யாப்பினவாய பாக்கள் இவ்வமைப்பை நோக்குழி, வஞ்சிப்பா யாப்பு இயற்றமிழ்ப் பாவகைக்கு மட்டுமே பயன்பட்டது போன்று, வெண்பா யாப்புஇசைத் தமிழ்ப் பாவகைகளுக்கு மட்டுமே உரிய யாப்பு வகையாய் சிலம்பில் வழங்கியதை அறியலாம்.

பாடற்பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	க	ஒன்றி வ	ஒன்றா வ
பஃறொடை வெண்பா- இசைப்பாடல்கள்- குன்றக்குரவை	7	-	-	11	15	-	-	-
பஃறொடை வெண்பா (மருதரவில்லாளை) இசைப்பாடல்- குன்றக்குரவை	4	-	-	4	14	-	-	-
இன்னிசைவெண்பா- இசைப்பாடல்- வாழ்த்துக்காதை	4	-	-	8	6	-	-	-
நேரிசைவெண்பா- இசைப்பாடல்- வாழ்த்துக்காதை	4	-	-	8	6	-	-	-

இளங்கோவடிகள் காலத்திலும் வெண்பா வகைகளில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகை வெண்டளைகளே இடம் பெற்றிருந்தன. பஃறொடை வெண்பா இசைப்பாடலாய் வருங்கால் அனைத்தடிகளிலும் ஒருவிகற்பமே பெற்றுவருதல் சிறப்பு என்பதையும், இப்பாடல் அமைப்பு உணர்த்தும். இறுதியில் நாள் வாய்பாட்டு நேரசைச்சீரால் இப்பாக்கள் இற்றன. வாழ்த்துக் காதையுள் இடம் பெற்ற இன்னிசை வெண்பாப் பாடல் இசைப்பாடலாய் அரசவாழ்த்துப் பொருண்மையுடையதாய் விளங்குவது. முதலடி ஒரு விகற்பமாயும், இரண்டாமடி

ஒரு விகற்பமாயும் பின்னிரண்டடிகள் ஒரு விகற்பமாயும் மூவேறு விகற்பங்களால் இப்பாவகை அமைந்திருப்பதை நோக்க, இன்னிசை வெண்பாவுக்கு விகற்ப வேறுபாடு பற்றிய வரையறையில்லை என்பது அறியப்படும். நேரிசை வெண்பா யாப்பிலமைந்த இசைப்பாடல் முதல் தொடைக்கேற்ற தனிச்சொல் பெற்று இருவிகற்பத்தால் வந்ததென்பதும் உணரலாம். அரசவாழ்த்துப் பொருண்மை பயின்ற இசைப்பாடல்களைப் பாடுதற்குரிய வெண்பா வகையாக இன்னிசை வெண்பா யாப்பு சிலம்பில் வழங்கியுள்ளது.

கலிப்பாவின் யாப்பு நெறி

கலிப்பா, சிலப்பதிகாரத்தில் மிகுதியும் பயின்ற பாவகை. தொல்காப்பியர் கலிப்பாவை ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக் கலி, உறழ்கலி என நான்கு வகையாக்குவர். இந்நால்வகைக் கலிவகைகளும் சிலப்பதிகாரத்துள் வழக்குப் பயிற்சி பெற்றுள்ளன. ஒத்தாழிசைக் கலிவகையுள் அடங்கும் யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகும், கலிவெண்பா வகையும் கொச்சகக் கலியின் வகைகளுள் தரவு கொச்சகக் கலிப்பா பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா முதலியனவும் உறழ் கலிவகையும் என இந்நால்வகைக் கலிப்பாக்களும் சிலப்பதிகாரத்துள் அமைந்துள.

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு என்னும் பாவகை சிலப்பதிகாரத்தில் இயற்றமிழ்ப் பாவகையாக விளங்கியதோடு இசைத்தமிழுக்குரிய பாவகையாகவும் விளங்கியது. ஆய்ச்சியர் குரவையுள் ஈரிடத்திலும் துன்பமாலையுள் ஈரிடத்திலும் குன்றக்

உறுப்புக்களைப் பெற்று வருகின்றது என்பதையும், இப் பாவகையில் அமைந்த தளைவகைகளையும் தெளிவுறுத்தும்.

கொச்சகம், தனிச்சொல், தாழிசை, சுரிதகம் ஆகிய உறுப்புக்களை இப்பா வரையறையின்றிப் பெற்றுவரும். சுரிதகம் பெற்றும் பெருதும் வரும். சுரிதகம் அகவல் ஆகவோ, வெண்பாவாகவோ அமையும். இப்பா வகையில் தாழிசை அமைப்பினின்று வேறுபட்டு வரும் கொச்சகங்கள் ஈரடியாலும், நான்கடியாலும், ஆறடி யாலும் வருவன. கொச்சகங்கள் தனித்தும் ஒன்றுக்கு மேற்பட்டன அடுக்கியும் வரும் இயல்புடையவை. கொச்சகங்கள் வெண்பா அமைப்பினவாயின் வெண்டளை களையே பெறுவனவாம். இங்ஙனம் யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு இயற்றமிழ் யாப்பு வகையாய் வந்துழி அமையும் யாப்பு நெறிகளை இப்பட்டியல் விளக்கு கின்றது.

இனி, கீழேயுள்ள பட்டியல், யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு எவ்விடங்களில் இசைப்பாடலுக்குரிய யாப்பாய்ப் பயின்றுள்ளதென்பதை யும் அப்பாவகை பெற்றுவரும் தளைவகைகளையும் விளக்கும். இப்பாவகை இயற்றமிழுக்குரியதாய் வந்துழி பெறும் உறுப்பு வகைகளை இசைத்தமிழுக்கு உரியதாய் வருங்கால் பெறுவதில்லை என்னும் யாப்பு நெறி சுட்டத்தக்கது.

காதைப்பெயர்	அடி எண்	நே	நி	இ	வெ	க	ஒன்றிவ	ஒன்ருவ
படர்க்கைப் பரவல் ஆய்.குரவை.								
இசைப்பாடல்கள்-3	15	0-0-1	–	1-5-1	11-14 13	7-0-0	-	-

பாடற்பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	க	ஒன்றி வ	ஒன்று வ
கொளுச்சொல்- குன்றக்.குரவை இசைப்பா-2	8	0-2	–	12-4	7-5	-	-	-
சிறைப்புறம்- குன்றக்.குரவை- இசைப்பா-3	12	-	-	8-7-8	6-7-8	-	-	-
பாட்டுமடை- குன்றக்.குரவை- இசைப்பா-1	6	-	-	6	16	-	-	-
சொல்- வாழ்.காதை இசைப்பா-3	15	1-2-2	-	12-11 10	6-5-7	0-1-0	-	-
அரற்று- வாழ்.காதை- இசைப்பா-3	15	1-1-0	-	9-5-5	9-13- 14	-	-	-
ஐயைக்காட்டி அரற்று வாழ்.காதை- இசைப்பா-1	5	1	-	11	7	-	-	-
அம்மானைவரி வாழ்.காதை இசைப்பா-4	21	0-1-0- -0	-	7-7-3- 10	12-10- 15-13	0-1- 1-0	-	.
ஊசல்வரி- வாழ்.காதை இசைப்பா-3	15	-	-	8-9-8	11-10-11	-	-	-
வள்ளைப்பாட்டு வாழ்.காதை இசைப்பா-3	15	1-1-0	-	9-11- 13	9-7-5	0-0-1	-	-

இப்பாவகை இசைத்தமிழுக்குரிய யாப்பு வகையாய் வருங்கால் தனித்தும், இரண்டடுக்கியும், மூன்றடுக்கியும், நான்கடுக்கியும் வரும் மரபினையுடைத்து. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய தளை வகைகளே இவ்வியாப்பு வகையில் பெரும்பான்மைக்கு உரிய தளைகள். இசைத்தமிழுக்குரிய யாப்பாய் வருங்கால் வஞ்சித்தளைகள் முற்றிலும் பயின்று வருதலில்லை என்பதும் இப்பட்டியலால் அறியப்படும். இங்ஙனம் இயற்றமிழ் யாப்புக்கும் இசைத்தமிழ் யாப்புக்கும் உரிய யாப்பு வகையாய் இப்பாவகை விளங்கியது.

கலிவெண்பா

கலிவெண்பா என்னும் யாப்புவகை இயற்றமிழுக்கு உரியதாய் ஒருபொருள் நுதலி வரும் பகுதிகட்குரியதாய்ச் சிலப்பதிகாரத்தில் வழங்கக் காணலாம். கனாத்திறம் உரைத்த காதை, வஞ்சினமாலை என்னும் இரு காதைகளுக்குத் தனித்த யாப்பு வகையாகப் பயின்ற இப்பாவகை தொல்காப்பியரால் கலிப்பாவின் நான்கு பிரிவுகளுள் இரண்டாம் பிரிவாகச் சுட்டப்படுவது.

எண்.	காதையின்பெயர்	அடியெண்	நே	நி	இ	வெ	க	ஒன்றிய வ	ஒன்றா வ
1,	கனாத்திறமுரைத்த காதை	79	-	-	133	181	-	-	-
2.	வஞ்சினமாலை	57	-	-	127	96	1	-	2

இப்பட்டியல் கலிவெண்பா யாப்பமைந்த காதைகளில் பயின்றுவந்த தளைவகைகளைச் சுட்டுவது. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இருவகைத் தளைகளுமே இப்பாவகையில் இடம் பெறுதல் சிறப்பாகும். கனாத்திறமுரைத்த காதை அம்முறையில் அமைந்திருப்பினும், பின்னேயுள்ள வஞ்சினமாலையில் ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை

ஆகியனவும் ஓரோரிடங்களில் பயின்று வந்துள்ளன. பிறதளைகள் இடம் பெறுவது சிறுபான்மையெனக் கூறலாம் எனினும், ஏடெதுழுவோரால் இத்தகைய பிழைத் தளைகள் அமையுமாறு எழுதப்பட்டிருக்கலாம் எனவும் எண்ணவியலும். பிழைத்தளைகள் பிறக்கா வண்ணம் பிரித்தமைக்க வாய்ப்பில்லாது இவ்வடிகள் அமைந்துள்ளன. 'கனைசுடர் கால்சீயா முன்' எனவும் 'நற்றேரான் கூட னகர்' எனவும் ஈற்றடி முச்சீர் பயின்ற சிந்தடிகளால் இக்காதைகள் முடிந்துள்ளன.

தொடையமைப்பு

இப்பகுதிகளில் எதுகை, மோனை முதலாய தொடை வகைகள் சிறப்பாய் அமைந்துள.

பால்விக்கிப் பாலகன் ருன்சோர மாலதியும்
பார்ப்பா னெடுமனையா ளென்மேற் படாதனவிட்(டு)

(கனு. காதை 6-7)

என ஈரடிகளில் அடிமோனைச் சிறப்பும்,

உச்சிக் கிழான்கோட்ட மூர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்

(கனு. காதை.11-12)

எனவரும் ஈரடிகளில் அடியெதுகைச் சிறப்பும்,

முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகா ணற்பகலே

(வஞ். மாலை. 3-4)

எனவரும் ஈரடிகளில் அடிமுரண்டொடைச் சிறப்பும் அமைந்துள்ளன.

இக்காதைகளில் அடி எதுகைச் சிறப்பு ஈரடிக்கு மேலும் தொடர்ந்து செல்லும் அமைப்பினையும் காணலாம்.

படுபிணந் தாவென்று பறித்தவள் கைக்கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்றுங்
கிடுபிணந் தின்னு மிடாகினிப் பேய்வாங்கி
(கனா. காதை, 19 21)

என மூன்றடிகளிலும்,

மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவி ரேளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட வவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள் மன்னி
(வஞ். மாலை. 11-15)

என ஐந்தடிகளிலும்,

சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைத்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன
நலங்கேழ் முறுவ னகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மெனச் சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனே
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
(கனா. காதை. 69-75)

என ஏழடிகளிலும் இச்சிறப்பு அமைந்துள்ளது இப் பாவகையின் யாப்பு நெறியைச் சுட்டுகின்றது. கலி வெண்பா யாப்புவகை இயற்றமிழ்ப் பாவகையாகச் சிலப்பதிகாரத்தில் சிறந்து விளங்கிய யாப்புநெறியை இதனுல் அறியலாம்.

பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா

தொல்காப்பியர் குறிப்பிடும் கலிப்பாவின் மூன்ருவது பிரிவாய கொச்சகக் கலிப்பாவில் அடங்குவது பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா. எனினும் தரவின்றித் தாழிசை

பெற்ற கொச்சக வொருபோகாக இதனை அடக்கலாம் என்பர் உரையாசிரியர். இப்பாவகையின் பெயர் தொல்காப்பியத்தில் சுட்டப்பெறவில்லை என்பதும் நினையத்தகும்.

பஃறுழிசைக் கொச்சகம் என்ற பெயரால் தொல் காப்பியர் அல்லாத பிற யாப்பிலக்கணியரால் சுட்டப் பெறும் இப்பாவகை சிலப்பதிகாரத்தில் இயற்றமிழுக்கு உரிய யாப்பு வகையாக மட்டுமே ஆளப்பெற்றது. இப் பாவகை சிறுவரவினதாகவே விளங்கியது என்பதைச் சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியுள் ஒரு பகுதியாக இப்பாவகை பயின்று உள்ளமை புலனுக்கும்.

பாடற் பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	க	ஒன்றிவ	ஒன்றுவ
பஃறுழிசைக் கொச்சகக்கலிப்பா. வேட்டுவவரி								
உறுப்புக்கள்								
தாழிசை-3 முன்.சிறப்பு	12	5-4-5	0-0-3	10-11-6	-	0-0-1	-	-
தாழிசை-3 வள்ளிக்கூத்து	12	1-1-1	-	11-11-11	3-3-3	-	-	-
தாழிசை-3 முன்.பரவல்	12	-	-	9-5-7	5-9-7	-	-	-
தனிச்சொல் சுரிதகம்	4	4	2	6	2	1	-	-

பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பாவில் தாழிசைகள் மூன்றடுக்கியனவாய் ஒரு பொருள்மீது பயின்றுவரும் சிறப்பு அறியத்தக்கது. தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்கள் இப்பாவகைக்கண் பயின்றுள. சுரிதகப் பகுதி அகவலால் அமைந்து அகவலுள்ளும் நிலை

மண்டில வாசிரிய யாப்புக்குரியதாய் விளங்கியது என்பதும் 'குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே' என இசைப் பாவாய் வந்த நிலைமண்டிலம் போல ஏகாரவீறு பெற்று முடியும் என்பதும் இதனால் நாம் அறியும் யாப்பு நெறிகளாம்.

இப்பாவகையின் தாழிசைகள் அடுத்தடுத்து அமைந்திருப்பினும் சந்த வேறுபாட்டுடன் விளங்கும் இயல்புடையவை என்பதைத் தனை பற்றிய பட்டியல் விளக்கும். தாழிசைகட்கும் சுரிதகத்துக்குமிடையே தனிச்சொல் பெறும் நெறியும் இப்பாவகையில் விளங்கியது.

தரவுகொச்சகக் கலிப்பா

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா போல தரவு கொச்சகக் கலிப்பாவும் தொல்காப்பியர் அல்லாத பிற யாப்பியலக்கணியரால் மட்டுமே பெயர் சுட்டப்பட்டது. இப் பாவகையும் சிலப்பதிகாரத்தில் இயற்றமிழுக்குரிய யாப்புவகையாகவே பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவைப் போன்று விளங்கியது. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையுள் ஒருகூறு இத்தரவு கொச்சகக் கலிப்பா யாப்பு வகைக்குரியது. ஆடுநர்ப் புகழ்தல் என்னும் தலைப்பில் இப்பா அமைந்துள்ளது.

பாடற் பெயர்	அடி வெண்	நே	நி	இ	வெ	க	ஒன்றி வ	ஒன்று வ
தரவு கொ. கலிப்பா- ஆய். குரவை- ஆடுநர்ப்புகழ்தல்								
உறுப்புக்கள்								
தரவு	4	-	-	-	6	9	-	-
தனிச்சொல்								
சுரிதகம்	2	-	-	6	-	-	-	-

தரவினுள் வெண்சீர் வெண்டளை, கலித்தளை ஆகியனவும், சுரிதகத்துள் இயற்சீர் வெண்டளை ஒன்றும் அமைந்திருப்பது சிறப்புக்குரிய அமைப்பு நிலை. நான்கடித் தரவுக்கேற்ப இரண்டடிச் சுரிதகம் அமைந்து இருப்பது 'தரவிற் சுருங்கிற்று தாழிசை' என்னும் விதியை நினைவுறுத்தும். சுரிதகப் பகுதி குறள் வெண்பா யாப்பினதாய் அமைந்த வெள்ளைச் சுரிதகம். இயற்பா வகைக்குரிய இப்பாவகை அமைப்பு சிலப்பதிகாரத்தில் தரவு கொச்சகக் கலிப்பாவுக்குரிய யாப்பு நெறியை இனிது விளக்கும்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

தொல்காப்பியர் அல்லாத பிற யாப்பியலாரால் சுட்டப்படும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா சிலப்பதிகாரத்தில் இருகாதைகளில் பயின்றுள்ளது. மங்கல வாழ்த்துப் பாடல், ஊர்சூழ்வரி ஆகிய இரு காதைகளும் முறையே இயல்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாயும் அயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாயும் அமைந்து உள்ளன. இக்காதைகளின் அமைப்பு நிலை, மயங்கிசைக் கொச்சகத்தின் யாப்பு நெறிகளை நமக்கு உணர்த்தும் சான்றுகள்.

பாடற் பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	க	ஒன்றி வ	ஒன்று வ
மங்.வாழ்.பாடல் ம. கொ.கலி								
உறுப்புக்கள்								
தனிச்சொல் தரவு	6	6	10	7	-	1	-	-
தனிச்சொல் தாழிசை	4	–	6	2	4	3	-	-

பாடற்பெயர்	அடி யெண்	நே.	நி	இ.	வெ.	க.	ஒன்றி வ	ஒன்றா வ
தனிச்சொல் தாழிசை	4	–	8	-	5	2	–	–
தனிச்சொல் தாழிசை	4	–	6	–	3	5	-	1
தனிச்சொல் தாழிசை	4	–	2	3	6	4	-	-
தனிச்சொல் தாழிசை	4	-	3	9	2	-	-	-
அராகம் சுரிதகம்	21	4	17	39	17	5	–	-
ஊர்சூழ்வரி ம. கொ. கலி								
உறுப்புக்கள்								
தாழிசை-6	14	-	-	9-6-4	5-1-3	1-0-0	-	-
				6-6-4	1-1-3	0-0-0		
தனிச்சொல் தாழிசை-3	12	-	-	8-12-8	6-3-7	1-0-0	-	-
தாழிசை-1	4	-	-	10	5	-	-	-
சுரிதகம்	4	-	-	5	9	-	-	-
தாழிசை-1	4	-	-	7	8	-	-	-
தாழிசை-3	12	-	7-7-7	1-1-1	2-3-3	5 4-4	-	-
தாழிசை-3	9	-	-	11-7	0-4-1	-	-	-
				10				
தரவு	8	-	3	11	9	8	-	-
தாழிசை-1	4	2	-	1	7	5	-	-
சுரிதகம்	4	-	-	9	6	-	-	-

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, தரவு, தாழிசை, அராகம், தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்களை உறழ்ந்தும் பிறழ்ந்தும் பெற்று வந்தது இதனல் புலனும். தாழிசை தோறும் முதலில் தனிச்சொல் பெற்றும் வருதல் உண்டு. தாழிசையின் ஈற்றடி முச்சீராய்க் குறைந்தும் வரப்பெறுதல் உண்டு. இத்தகைய தாழிசைகள்

சங்கவிலக்கியத்துள்ளும் பயின்றமை அறியலாம்[7]. அராகம் என்னும் உறுப்பு, சிறுமையளவாய நான்கடியால் அகவல் விரவிய ஓசையாய் இப்பாவில் பயின்று வரும். தரவுக்கு முன்னர்த் தனிச்சொல் வரும். ஒரு பொருள் மேல் அடுக்கியனவாய்த் தாழிசைகள் ஆறு எண்ணிக்கை வரை வருதலுண்டு. இறுதியில் அமைந்த சுரிதகம் தரவின் அடியளவைவிட மிகுந்தும் வரும். அகவற் சுரிதகங்களே இப்பாவிற்கு மிகுதியும் உரிமையுடையன. ஏகாரச் சிறப்பீறு நேரிசையாசிரிய அகவற் சுரிதகத்திற்கு உரித்து. நிலைமண்டில ஆசிரியச் சுரிதகம் சிறப்பீறு இன்றியும் வருதலுண்டு. தாழிசைகள் அடுத்தடுத்து தனிச்சொல் இன்றியும் தொடர்ந்து வரப்பெறும். இங்ஙனம் சிலப்பதி காரத்துள் பயின்ற மயங்கிசைக் கொச்சகத்தின் யாப்பு நெறிகளை இப்பட்டியல் சுட்டுகின்றது.

தாழிசைகள் சந்த வேறுபாட்டுக்கு ஏற்பப் பலவகைத் தளைவகைகளையும் பெற்றுவரினும் வஞ்சித்தளைகள் இவற்றுள் ஓரேவிடத்தில் மட்டுமே பயின்றுள என்பதும் நினையத்தகும். நிலைமண்டில ஆசிரியச் சுரிதகத்துள் வெண்டளைகள் இரண்டு மட்டுமே இடம் பெறுதலும் நேரிசை ஆசிரியச் சுரிதகத்துள் வஞ்சித்தளைகள் நீங்கிய பிறதளைகள் இடம் பெறுதலும் சுட்டுதற்குரித்தாம்.

உறழ்கலி

தொல்காப்பியரால் கலியின் நால்வகையுள் ஒன்றாகச் சுட்டப்படும் உறழ்கலி என்னும் பாவகையும் சிலப்பதி காரத்துள் இடம் பெற்றுள்ளது. வழக்குரைகாதை இப்பாவகைக்குரித்து. கூற்றும் மாற்றமுமாய் அமைந்த இப்பகுதி தொடக்கத்தில் தனிச்சொல், தாழிசை,

7. ஏனல் இதணத் தகிற்புகை உண்டியங்கும்
வானும் மதியம் வரைசேரின் அவ்வரைத்
தேனின் இறாலென ஏணி இழைத்திருக்கும்
கானக நாடன் மகன்-கலி, 39 தாழிசை

அம்போதரங்கம், சுரிதகம் ஆகிய உறுப்புக்களையும் பெற்று விளங்குகின்றது.

பாடல்பெயர்	அடியெண்	நே.	நி.	இ.	வெ.	க.	ஒன்றில	ஒன்றில
வழக்குரைகாதை								
உறழ்கலி								
உறுப்புகள்								
தனிச்சொல்								
தாழிசை-3	6	-	-	5-5-6	2-2-1	-	-	-
தாழிசை-1	4	2	3	3	3	6	1	-
அம்போதரங்கம்	8							
சுரிதகம்	8	7	8	6	3	6	1	1
தனிச்சொல்								
பாட்டு								
கண்ணகி கூற்று	8	4	11					
வாயி.கூற்று	20	11	27	1	1	-	-	-
மன்னன் கூற்று	2	1	-	-	-	-	-	-
கவிக் கூற்று	5	1	1	-	-	-	-	-
மன்னன் கூற்று	5	–	2	-	-	-	-	-
கண்ணகி கூற்று	19	13	19	3	1	-	-	-
மன்னன் கூற்று	4	-	2	1	-	-	-	-
கண்ணகி கூற்று	4	2	1	-	1	-	-	-
மன்னன் கூற்று	4	3	4	-	-	-	-	-
கவிக் கூற்று	1	4	2	-	-	-	-	-
மன்னன் கூற்று	10	2	6	1	-	-	–	-
கவிக் கூற்று	1	6	7	1	-	-	–	-

கூற்றும் மாற்றமுமாய பகுதியுள் கவிக்கூற்றுப் பகுதிகள் தவிர எஞ்சிய பகுதிகளில் 'என' என்னும் தனிச்சொல் முறையாக இடம் பெற்றிருப்பதும், இடை இடையே நான்கிடங்களில் சொற்சீரடி என்னும் உறுப்பு அமைந்திருப்பதும் இப்பாவகையின் யாப்பு நெறியை விளக்கும். கூற்றுப் பகுதியுள் ஒன்றிய,

ஒன்றாத வஞ்சித்தளைகள் பெறாது வருதலும் இதற்குரிய சிறப்பு. உறழ்கலியுள்ளும் தாழிசைகள் ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வருதலுண்டு என்பதைத் தொடக்கப் பகுதியுணர்த்தும். பின்றை இலக்கணிகள் இப்பா வகைக்கு இலக்கணம் கூறாது விடுத்தனர்.

பாவின நெறி

இயற்றமிழ் யாப்பு வகைக்குரியனவாய்ப் பாவகைகள் பயன்படுத்தப்பட்டது போன்று, இசைத்தமிழ்ப் பாக்களுக் உரிய யாப்பு வகையாகப் பாவினங்கள் கொள்ளப் பட்டன. தொல்காப்பியர் கூறிய பண்ணத்தியின் வளர்ச்சி நிலையே பாவினங்கள். பாவகைகளுள் நிலை மண்டில ஆசிரியப்பா, நேரிசையாசிரியப்பா, பஃறொடை வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசைவெண்பா, யாப்பினுள் வேறுபட்ட கொச்சகவொருபோகு ஆகியவை இசைத்தமிழுக்குரிய யாப்பு வகைகளாக விளங்கின.

இயற்றமிழ் யாப்பு வகையாகப் பயன்படுத்தப் பெறாத தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சக வொருபோகு என்னும் பாவகை மட்டிலும் இசைத்தமிழுக்குரிய யாப்பு வகையாகவே விளங்கியது. இப்பாவகைகளுக்கு மேலும், ஆசிரிய விருத்தம், ஆசிரியத்துறை, ஆசிரியத்தாழிசை, கலிவிருத்தம், குறள் வெண்செந்துறை, வெண்டாழிசை ஆகிய பாவினங்களும் இசைத்தமிழுக்குரிய யாப்பு வகை யினவாய்ச் சிலப்பதிகாரத்துள் வழங்கக் காணலாம்.

ஏட்டில் எழுதா இலக்கியமாய்த் திகழ்ந்த இசைப் பாக்களுக்கு இலக்கிய வடிவம் தந்த பெருமை இளங்கோ அடிகட்குரியது. இசைத் தமிழ்ப் பாக்களுள் பாவகையாய தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகின் யாப்பு நெறியைச் சுட்டிப் பின்னர்ப் பிறபாவினங்களின் யாப்பு நெறிகளை முறையே மொழிகுவல்.

தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு

வாழ்த்துக் காதையில் வாழ்த்து என்னும் பொருண்மைக்குரிய இசைப்பாடல் இப்பாவகையால் இயன்றுள்ளது.

தொல்லை விணையாற் றுயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீர் வையை
சூழு மதுரையார் கோமான்றன் றொல்குலமே

மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண்முடிமே லேற்றினன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீ ரான்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமன்றன் றொல்குலமே

எல்லா நாம்
காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும்
பூவிரி கூந்தல் புகார்

இப்பாடல்களுள் முறையே தாழிசை இரண்டும், தனிச்சொல்லும், சுரிதகமும் பெற்று வருவது இப்பாவின் அமைப்பைத் தெளிவுறுத்தும்.

பாடற்பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	க	ஒன்றிவ	ஒன்றுவ
வாழ்த்து-								
வாழ்த்துக்காதை-								
த.தா. பெ.கொ.ஒ								
உறுப்புக்கள்								
தாழிசை-2	8	1-0	--	7-6	7-9	-	-	-
தனிச்சொல்								
சுரிதகம்	2	-	--	6	-	-	-	-

தாழிசை இரண்டடுக்கி ஒருபொருள் மேல் பயின்று வரும் சிறப்பும், இவற்றுள் பெரும்பாலும் வெண்டளைகள் இடம் பெறும் தன்மையும், சுரிதகத்துள் வெள்ளைச் சுரிதகம் அமைதலும், அதனுள் இயற்சீர் வெண்டளையே சிறப்பிடம் பெறுதலும் இப்பாவகையின் யாப்பு நெறிகள்.

ஆசிரிய விருத்தம்

ஆசிரிய விருத்த யாப்பு, சிலப்பதிகாரத்துள் மிகுதியும் இசைப்பாக்களுக்கு வழங்கிய பாவினம். கானல்வரி, வேட்டுவவரி, வாழ்த்துக் காதை ஆகிய மூன்று காதைகளில் இவ்வியாப்பு வகையில் இயன்ற இசைப்பாக்கள் நிறைந்துள. சான்ருக இவண் ஒரு பாடல் சுட்டப் பெற்றுள்ளது.

திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணுய்
மங்கை மாதர் கெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி

அறுசீர் ஆசிரிய விருத்தப் பாக்களின் அமைப்பு நெறியும் இயல்பு நெறியும் பின்னுள்ள பட்டியலால் விளக்கம் பெறும்.

பாடல் பெயர்	அடி யெண்	நே.	நி.	இ.	வெ.	க.	[illegible]	[illegible]	சிறப்பு நிலைகள்
கானல்வரி									
அ. ஆற்றுவரி-3									இடை மடக்கு, மூன்றடுக்கல் 2, 4 அடிகள் ஈரொத்தல்
திங்கள்	4	10	-	6	4	3	-	-	
மன்னுமாலை	4	10	-	6	2	5	-	-	
உழவர்	4	12	-	4	-	7	-	-	
ஆ. சார்த்துவரி-3									மூன்றடுக்கல், 2, 4 அடிகள் ஈரொத்தல்
கரியமலர்	4	4	-	8	7	4	-	-	
காதலர்	4	5	-	9	7	2	-	-	
மோதுமுது	4	8	-	6	7	2	-	-	
இ. ஆற்றுவரி-3									இடை- மடக்கு மூன்றடுக்கல் 2, 4 அடிகள் ஈரொத்தல்
மருங்கு	4	11	-	5	-	7	-	-	
பூவர்	4	10	-	6	3	4	-	-	
வாழி	4	10	-	6	3	4	-	-	

பாடற் பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	க	நேர்பு	நிரைபு	சிறப்பு நிலைகள்
ஈ. சார்த்துவரி-3									
தீங்கதிர்	4	6	-	8	7	2	-	-	மூன்றடுக் கல், 2, 4 அடிகள் ஈரொத்தல்
மறையின்	4	4	-	8	9	2	-	-	
உண்டாரை	4	5	-	8	7	3	-	-	
உ. மயங்குதிணை-நிலை வரி-3									
நன்னித்திலம்	4	6	-	10	4	3	-	-	,,
வாரித்தரள	4	6	-	10	4	2	-	1	
புலவுற்று	4	3	-	13	1	6	-	-	
வேட்டுவவரி									
அ. கூத்துள்படுதல் முதலியன									
ஆய்பொன்	4	3	-	2	14	2	-	2	மூன்றடுக் கல், இடை மடக்கு 4-ஆம் அடி ஈரொத்தல்
உட்குடை	4	7	-	11	4	1	-	-	
கள்விலை	4	7	-	8	7	1	-	-	
வாழ்த்துக்காதை									
அ. கந்துகவரி									
பொன்னிலங்கு	4	16	3	3	1	-	-	-	மூன்றடுக் கல், 3, 4 அடிகள் மூன்றும் ஒத்தல்
பின்னு	4	16	4	3	-	-	-	-	
துன்னி	4	16	4	3	-	-	-	-	

ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்த இவ்விசைப் பாடல்கள் அனைத்தும் ஒரு பொருள் மீது மூன்றடுக்கியே வருதற்குரியன. இவை இரண்டாமடியே மூன்ருமடியாக இடைமடக்கி வரும் இயல்பும் பெற்றவை. பெரும் பாலான பாடல்களில் இரண்டாமடியும் நான்காமடியும் ஈரொத்தமைதல் வேண்டும். சில பாடல்களில் பாடல்

தோறும் இறுதியடிகள் ஒத்தமைந்தே வருதலும் உண்டு. இப்பாவினம் இசைத்தமிழ்ப் பாவாய் வருங்கால் பெரும் பாலானவை நிரையொன்றுசிரியத்தளை பெறுதலில்லை. வஞ்சித்தளைகள், ஒரோவழி வரும் இயல்பின. நேரொன்றுசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை ஆகிய நால்வகைத்தளைகளே இப்பாக்களில் பெரும்பான்மையாய்ப் பயின்று வரும் தளைகள். பெரும்பாலும் ஒரு விகற்பம் பெற்றும் சிறு பான்மை இருவிகற்பம் பெற்றும் இவை வரும் இயல்பின.

மேலும், கானல் வரியுள் ஆற்றுவரி, சார்த்துவரி. மயங்குதிணை நிலைவரி ஆகியவற்றுக்கும் வேட்டுவ வரியுள்ளும் வாழ்த்துக் காதையுள் கந்துக வரியுள்ளும் இப்பாவினம் பயின்று வந்ததை நோக்க, வரிப்பாடலாய இசைப்பாடல்களுக்கே இப்பாவினம் உரியதாகவும் வழங்கியிருத்தல் கூடும் என எண்ணலாம்.

ஆசிரியத்துறை

ஆசிரியத்துறை என்னும் பாவினமும் சிலப்பதி காரத்தில் இசைப்பாவுக்குரிய யாப்பு வகையாய்த் திகழ்ந்தது. ஆசிரிய விருத்தப் பாக்களைப்போல் இவையும் ஒருபொருள் மீது மூன்றடுக்கியே வந்தன. முகமில்வரி என்னும் தலைப்பில் அமைந்த பாடலும் பின்னுள்ள கானல்வரி தலைப்பில் அமைந்த பாடல்களும் இணைந்து கழிக்கானல் சிறப்புரைத்தல் என்னும் பொருண்மைக்கு உரியனவாய் ஒருபொருள்மீது மூன்று அடுக்கி வந்தன.

துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற
மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது
போர்க்குங் கானல்

நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே
தீர்க்கும் போலும்

என வருவது இப்பாவகைக்குரிய சான்றும்.

பாடற்பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	க	சிறப்புநிலை
கானல் வரி							
அ *முகமில் வரி*							
துறைமேய்	4	3	-	9	9	-	*ஒருவிகற்பம்*
ஆ *கானல்வரி*							
திணங்கொள்	4	4	1	10	4	2	*ஒருவிகற்பம் 4 ஆம் அடியில் ஈற்றெத்தல்*
வலைவாழ்நர்	4	3	1	11	6	-	

இப்பட்டியல் சிலப்பதிகாரத்தில் பயின்றுவந்த பாவினமாகிய ஆசிரியத்துறையின் இயல்பினை நன்கு விளக்கும். பாடல் ஒவ்வொன்றும் ஒருவிகற்பமுடையன-வாய் ஒரு பொருள் மீது மூன்றடுக்கியனவாய் வரும். ஆசிரிய விருத்த யாப்பமைந்த பாடல்கள் போன்று, ஆசிரியத்துறை யாப்பமைந்த பாடல்கள் அனைத்தும் ஈற்றெத்து வருதல் வேண்டும் என்ற ஒழுங்கு வரையறை இல்லை போலும்! முதற்பாடல் ஒருவகையீறும், பின்னிரு பாடல்கள் ஒருவகையீறும் பெற்றுவரும் அமைப்பு நிலை இதனை விளக்கும்.

ஈற்றயலடி குறைந்த எண்ணிக்கையுடையதாய் அமைதல் வேண்டும் என்பது இப்பாவினத்தின் அமைப்பு நெறி. சிலப்பதிகாரத்துள் ஒரோவிடத்து மட்டும் இப் பாவினம் ஆளப் பெற்றிருத்தலை நோக்க இப்பாவினத்தின் சிறுவரவு புலனும். ஆசிரிய விருத்தம் போன்று பெரும் வரவின்றி ஆசிரியத்தாழிசை போன்று சிறுவரவினதாய்

விளங்கியது இப்பாவினம். அகத்துறைப் பொருண்மை உடையதாய் இப்பாவினம் அமைந்திருப்பதை நோக்க, இசைப்பாடலாய் வருங்கால் அகப்பொருண்மைக் உரியதாய் மட்டுமே வரும் என்றும் எண்ண முடிகின்றது.

ஆசிரியத்தாழிசை

ஆசிரியத்துறை என்னும் பாவினத்தைப் போன்று ஆசிரியத்தாழிசை என்னும் பாவினமும் ஓரிடத்தில் மட்டுமே ஆட்சி பெற்ற பாவினமாகும். சிலப்பதிகாரத்தில் இப்பாவினத்தின் சிறுவரவை இவ்வாட்சிநிலை விளக்கும்

காதைப்பெயர்	அடி எண்	நே	நி	இ	வெ	சிறப்புநிலை
ஆய்ச்சியர் குரவை						
பாட்டு						
கன்றுகுணிலா	3	-	-	7	4	ஒருவிகற்பம் அடிதோறும் ஈரெருத்தல், ஒருபொருள் மீது மூன்று அடுக்கல்
பாம்புகயிரு	3	-	-	8	3	
கொல்லை	3	-	-	6	5	

ஆசிரியத்தாழிசை யாப்பமைந்த பாடல்கள் மூன்றடிப்பாடலாய் ஒரு பொருள் மீது மூன்றடுக்கி வரும் இயல்பின.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ

என இப்பாக்கள் ஒரு பொருள் மீது மூன்றடுக்கி வந்தன. பிற பாவினத்திற்கு இல்லாத சிறப்பு நிலையாய், இப்பாவினப் பாடல்கள் அடிதோறும் ஈரெழுத்து வரும் சிறப்புடையனவாய் விளங்குவன, விருத்தப் பாடல்கள் போன்று இவையும் ஒருபொருள் மீது மூன்றடுக்கியனவாயுள்ளன. யாப்பு நூல்களில் ஒரு பொருள் மீது மூன்றடுக்கி வரும் சிறப்புத் தன்மை தாழிசைகட்கே சிறப்பாகப் பேசப்படும். ஆசிரியத் தாழிசை வெண்பாக்களுக்குரிய வெண்டளைகளையே பெற்றுவரும் சிறப்பினவாய் விளங்கின வென்னும் யாப்பு நெறியையும் இப்பாடல்கள் சுட்டுகின்றன.

குறள் வெண் செந்துறை

குறள் வெண் செந்துறை யாப்பிலமைந்த பாடல்கள் ஆய்ச்சியர் குரவையுள் இசைப்பாக்களாய் அமைந்து உள்ளன.

குடப்பா லுறையா குவியிமி லேற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு;
உறிநறு வெண்ணெ யுருகா வுருகும்
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு;
நான்முலை யாய நடுங்குபு நின்றிரங்கும்
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு;

எனவரும் இக்குறள் வெண் செந்துறைப் பாக்களும் ஒருபொருள் மேல் மூன்றடுக்கி வந்தன.

பாடற்பெயர்	அடி வெண்	நே	நி	இ	வெ	சிறப்புநிலை
ஆய்.குரவை						
குடப்பால்	2	-	-	7	-	இரண்டாம் அடியின் ஈற்றில் ஈரெழுத்தல், ஒரு பொருள் மீதுமூன்று அடுக்கல்
உறிநறு	2	-	-	7	-	
நான்முலை	2	–	-	6	1	

ஒரு பொருள் மேல் அடுக்கி வரும் சிறப்பு நிலை ஆசிரியத் தாழிசைக்குரிய சிறப்புப் பொருண்மையாகவே யாப்பு நூல்களில் பேசப்பெறும். ஆசிரியத் தாழிசைக் குரிய இச்சிறப்பு நிலை, சிலப்பதிகாரத்தில் குறள் வெண் செந்துறைக்கும் உரியதாக்கப்பட்டமையைக் காணலாம். முதலில் இரு பாக்களும் இயற்சீர் வெண்டளைகளாலேயே அமைந்திருப்பதும் இறுதிப்பாடலில் ஓரிடத்தில் மட்டும் வெண்சீர் வெண்டளை அமைந்திருப்பதும் இரண்டாம் அடியில் இறுதிதோறும் ஈரெதுகை அமைந்திருப்பதும் இப்பாவினத்தின் யாப்பு நெறியைச் சுட்டுவனவாம்:

வெண்டாழிசை

வெண்பாவின் இனமாய் வரும் வெண்டாழிசையும் சிலப்பதிகாரத்தில் வழங்கிய பாவினம். இனங்களுள் தாழிசையும், பாவகையுள் வெண்பாவும் சிறப்புஉடையன என்பர். எனவே வெண்பாவின் தாழிசைகளாய இந்த வெண்டாழிசைப் பாக்கள் நூலின் தொடக்கத்தில் திங்களையும் ஞாயிற்றையும், மாமழையையும் பூம்புகாரை யும் வாழ்த்துவனவாய் ஒரு பொருள்மீது நான்கடுக்கி அமைந்துள்ளன. நூல்வாழ்த்தாய் வரும் இப்பாவகை வெண்டாழிசை என்னும் பாவினமாய் அமைந்துள்ளது.

பாடற்பெயர்	அடி யெண்	நே	நி	இ	வெ	சிறப்புநிலை
நூல்வாழ்த்து						
திங்களைப்	3	-	-	7	3	ஒருவிகற்பம் நாள் வாய்பாட்டு ஈறு
ஞாயிறு	3	-	-	8	2	இனவெதுகை நாள் வாய்பாட்டு ஈறு

பாடற்பெயர்	அடி யெண்	நே.	நி.	இ.	வெ.	சிறப்புநிலை
மாமழை	3	-	-	7	3	இருவிகற்பம் நாள் வாய்பாட்டு ஈறு
பூம்புகார	3	-	-	8	2	இருவிகற்பம் நாள் வாய்பாட்டு ஈறு

இப்பாடல்களில் வரையறுத்த விகற்பமுறை இல்லை என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. முதற்பாடல் ஒருவிகற்பமாயுள்ளது. இரண்டாம் பாடலில் ஞாயிறு-காவிரி-மேரு-என இனவெழுத்துக்கள் எதுகையாய் அமைந்துள. மூன்றும் பாடலில் முதலிரு அடிகள் ஒரு விகற்பமாயும் ஈற்றடி தனிவிகற்பமாயும் அமைந்துள்ளது. நான்காம் பாடல் முதலடி ஒரு விகற்பமாயும், பிற ஈரடிகள் ஒரு விகற்பமாயும் அமைந்துள. விகற்பநிலையில் இப்பாடல்களின் அமைப்பு நெறியை நோக்க, சிலப்பதிகாரத்தில் வெண்டாழிசையாகிய பாவினத்துக்கு வரையறுத்த விகற்பநெறி இல்லையென அறியலாம்.

வெண்டாழிசைப் பாக்களில் முதலடியிலும் இறுதி அடியிலும் ஈறொக்கும் நெறி இருந்திருத்தல் வேண்டும் என்பதும் புலனும். போற்றுதும் என்ற சொல் முதலடிதோறும் ஈறொத்தமைந்திருப்பதும், இறுதியடிதோறும் நாள்வாய்ப்பாட்டுச் சீர் அமைந்திருப்பதும் இம்முடிபுக்கு வலியூட்டும் சான்றுகள்.

முதலடியில் சீர்கள் மடக்கியிருத்தலை நோக்குழி சீர்மடக்கு என்பதும் இவ்வினப்பாடல்களுக்குரிய நெறி ஆகலாம் என்று கருதவியலும். இப்பாவினம் பிற இசைப்பாக்களுக்கு உரித்தாக வாராது நூல் வாழ்த்தாய் வருதலை நோக்க. நூல் வாழ்த்துப் பொருண்மைக்கு இப்பாவினம் சிறப்புடையதாய் விளங்கியதும் அறியப்படும்.

கலிவிருத்தம்

பாவினங்களுள் மிகுதியாக இசைப்பாக்களுக்குரிய பாவகையாக விளங்குவது கலிவிருத்தமே. இப்பாவினத்துள் அமைந்த இசைப்பாக்கள், சிலப்பதிகாரத்தில் கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை ஆகிய பகுதிகளில் நிறைந்துள. கலி விருத்தப்பாடலும் ஆசிரிய விருத்தம்போல இசைப்பாவுக்கு உரிய பெரும்பான்மை பாவகையாக சிலப்பதிகாரத்தில் விளங்கியதை இவ்வமைப்பால் அறியலாம், கலிவிருத்தப் பாடலின் அமைப்பு நிலையைப் பின்வரும் சான்றுப் பாடல் விளக்குகின்றது.

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே

நாற்சீர் நாலடியால் அமைந்த இக்கலி விருத்தப் பாடல்களின் பயிற்சியிடங்களையும், தளைவகைகளையும், அப்பாடல்களுள் அமைந்த சிறப்பு நிலைகளையும் பின்வரும் பட்டியல் விளக்குகின்றது.

எண்.	பாடற் பெயர்	அடியெண்	நே	நி	இ	வெ	க	சிறப்புநிலை
1.	கானல்வரி							
அ.	நிலைவரி							மூன்றடுக்கல் அந்தாதியமைப்பு 2, 4 அடியிறுதி யொத்தல் இருவிகற்பம்
	கயலெழுதி	4	1	-	7	7	-	
	எறிவளைகள்	4	-	-	7	7	1	
	புலவுமீன்	4	-	-	9	6	-	
ஆ.	முரிவரி							மூன்றடுக்கல்; நான்கடியிலும் இயைபு. 4-அடியிறுதியொத்தல்; ஒரு விகற்பம்
	பொழிறரு	4	-	5	3	-	7	
	திரைவிரி	4	-	7	1	-	7	
	வளைவளர்	4	-	7	1	-	7	

இ. திணை நிலைவரி-1
(கோ)

கடல்புக்கு	4	-	-	8	7	-	மூன்றடுக்ககல் 2,4அடியிறுதி யொத்தல்; ஒருவிகற்பம்
கொடுங்கண்	4	-	-	10	5	-	
ஓடுந்திமில்	4	-	-	8	7	-	

ஈ. திணை நிலைவரி-11
(கோ)

பவளவுலக்கை	4	7	-	8	-	-	மூன்றடுக்கல்- இடையடிமடக்கு- இறுதிஇருசீர் இரட்டித்தல் ஒருவிகற்பம்
புன்னைநிழல்	4	9	6	-	-	-	
கள்வாய்	4	11	-	4	-	-	

உ. திணை நிலைவரி-111
(கோ)

சேரன்	4	-	-	8	7	-	தனித்துவந்தது 1, 2,4 அடியொத்தல்

ஊ. திணை நிலைவரி1
(மா)

புணர்துணை	4	-	-	8	7	-	தனித்து வந்தது

எ. திணை நிலைவரி-11
(மா)

தம்முடைய	4	-	-	5	10	-	ஒருவிகற்பம் இரண்டடுக்கி வந்தது
புன்கண்	4	-	-	11	4	-	

ஏ. திணை நிலைவரி-111
(மா)

புள்ளியன்	4	-	-	6	9	-	மூன்றடுக்கல்- ஒரு விகற்பம்- ஈற்றொத்த லில்லை 1,3 இல் இடையில் அந்தாதித்தல்
நேர்ந்த	4	-	-	11	4	-	
நேர்ந்த	4	–	-	8	7	-	

ஐ. மயங்குதிணைநிலைவரி
(மா)

இளையிருள்	4	-	4	1	2	8	மூன்றடுக்கல், ஈற்றொத்தல் (2, 4) ஒரு விகற்பம்
கதிரவன்	4	-	6	-	3	6	
பறவைபாட்டு.	4	-	4	2	1	8	

ஒ. சாயல்வரி

கைதைவேலி.	4	-	-	7	8	-	மூன்றடுக்கல் – ஒரு விகற்பம். இடை மடக்கு 2,3, 4- அடி ஈற்றொத்தல்
கானல்வேலி.	4	-	-	4	11	-	
அன்னந்	4	-	-	4	11	-	

ஓ. முகமில்வரி	1						ஒரு விகற்பம் 1,2,4
அடையல்	4	-	-	14	1	-	அடி யொத்தல்
ஒள.முகமில்வரி	11						மூன்றடுக்கல்-மூதற்
நுளையர்	4	-	-	7	8	-	பாடல் ஒருவிகற்பம்
பிரிந்தார்	4	-	-	6	9	-	2,3-இருவிகற்பம்
பையுணோய்	4	-	-	8	7	-	2, 4 ஈரொத்தல்
ஃ முகமில்வரி	111						தனித்துவந்தது ஒரு
தீத்துழைஇ.	4	-	3	8	2	2	விகற்பம்
2. **வேட்டுவவரி**							
அ. கொடை							
இளமா							மூன்றடுக்கல் -1. 3
வெயிற்றி	4	–	-	9	6	-	ஒருவிகற்பம்;2, இரு
முருந்தேரிள.	4	-	-	10	5	-	விகற்பம் 1,3,4அடி
கயமலர்	4	-	-	12	2	1	கள் ஈரொத்தது
ஆ. அவிப்பலி							மூன்றடுக்கல் - ஒரு
சுடரொடு	4	-	13	1	-	1	விகற்பம் 1, 2, ஆம்
அணிமுடி	4	-	13	1	-	1	பாடல் 2,3,4. அடி
துடியொடு	4	-	14	-	-	1	கள் ஈரொத்தல்; 3 ஆம் பாடலில் ஈரொத்தலில்லை
இ. பலிக்கொடை							மூன்றடுக்கல் -1,
வம்பலர்	4	-	-	15	-	-	ஆம் பாடல் இரு
துண்ணென்	4	-	-	13	2	-	விகற்பம் -2,3, ஆம்
பொருள்	4	-	1	12	2	-	பாடல் ஒருவிகற்பம் 2,4 அடிகளில் ஈரொத்தல் 1 ஆம் பாடலில் 4ஆம் அடி ஒத்தலில்லை
3. **ஆய்ச்சியர்குரவை**							மூன்றடுக்கல் - ஒரு
அ. பாட்டு							விகற்பம் 2,4 - அடி
இறுமென்	4	4	-	11	-	-	ஈரொத்தல்; இடை
வஞ்சஞ்	4	7	-	9	-	-	மடக்கு
தையல்	4	5	-	10	-	-	
ஆ- ஒன்றன்பகுதி							இரண்டடுக்கல்-ஒரு
கதிர்திகிரி	4	-	4	-	5	6	விகற்பம் -4 அடியி
மயிலெருத்	4	-	6	-	5	4	லும் ஈரொத்தல்-1-2 அடி முரணுதல்

இ. உள்வரி வாழ்த்து							மூன்றடுக்கல் - ஒரு விகற்பம் (1 ல் இரு விகற்பம்) இடைமடக்கு; 4-ஆம் அடி ஈறொததல்
கோவமாலை	4	-	-	5	10	-	
பொன்னிமய	4	-	-	9	6	-	
முந்நீரி	4	-	-	4	11	-	
ஈ. முன்னிலைப்பரவல்							இரு விகற்பம்- மூன்றடுக்கல் 2 - பொருளால் ஈறொத்கல் ;4- ஈறொத்தல்
வடவரையை.	4	-	-	2	6	7	
அறுபொருள்.	4	-	4	3	5	3	
திரண்டமரர்	4	-	1	1	5	8	
4. குன்றக்குரவை							தனித்துவந்தது, ஒருவிகற்பம்
அ. பாட்டுமடை							
உரையினி	4	-	-	11	4	-	
ஆ. தெய்வம்பராஅயது							மூன்றடுக்கல்- ஒருவிகற்பம் ஈறொத்தல்
சீர்கெழு	4	-	-	5	10	–	
அணிமுகங்கள்	4	-	-	3	11	1	
சரவண	4	-	-	8	7	-	
இ. பாட்டுமடை (அறத்தொடுநிலை)							நான்கடுக்கல் 1, 4- ஒரு விகற்பம் 2 மூன்று விகற்பம் 3- இரு விகற்பம்- ஈறொத்தலில்லை
இறைவளை	4	-	-	8	6	-	
ஆய்வளை	4	-	-	11	4	-	
செறிவளை	4	1	-	10	7	-	
நேரிழை	4	-	-	8	7	-	
ஈ. பாட்டுமடை							நான்கடுக்கல் ஒரு விகற்பம்-2,3,4- ஈறொத்தல்
வேலனார்	4	-	-	10	5	-	
கயிலை	4	-	10	2	1	-	
கலைமகள்	4	–	11	2	-	-	
குறமகள்	4	-	13	2	-	-	
(ஒன்று வஞ்சித்தளைகளும் உள)							
உ. பாட்டுமடை							தனித்து வந்தது ஒரு விகற்பம்
என்றியாம்	4	-	-	9	6	-	
ஊ. பாட்டுமடை							இரண்டடுக்கியது ஒரு விகற்பம் ஈறொத்தலில்லை இடைமடக்கு
பத்தினி	4	-	-	3	12	-	
வாகை	4	-	-	7	8	-	

5. வாழ்த்துக்காதை						
அ. செங்குட்டுவன்கூற்று என்னேயிது	4	-	-	5	10 -	தனித்து வந்தது
ஆ. கடவுள்நல்லணி தென்னவன்	4	-	-	8	7 -	தனித்து வந்தது

கலிவிருத்த யாப்பிலமைந்த இசைப்பாடல்கள் அறுபத்தியேழு சிலப்பதிகாரத்துள் அமைந்துள்ளன. இப்பாடல்களின் அமைப்பு நிலையாலும் பயிற்சிநிலையாலும், இசைப்பாவுக்குரிய பெரும்பான்மை யாப்பு வகையாக, இப்பாவகையே சிலப்பதிகாரத்தில் வழங்கியது என்பதை அறியலாம். இனி, இப்பாவகையின் யாப்பு நெறிக் கூறுகளை விளக்குவாம்.

பொருள்மீது அடுக்கல்

கலிவிருத்த யாப்பிலமைந்த இசைப்பாக்கள் தனித்தும் ஒரு பொருள்மீது இரண்டடுக்கியும் மூன்று அடுக்கியும், நான்கடுக்கியும் வரும் யாப்பு நெறியைப் பெற்றிருந்தன. இவற்றுள் மூன்றடுக்கி வருதலே பெரும்பான்மை நெறி. வரிப்பாடல்களாய் அகப்பொருண்மை பயின்றனவாயும் தேவபாணியாய் இறைவழிபாட்டுப் பொருண்மை பயின்றனவாயும் இப்பாடல்கள் வந்தன.

> இளையிருள் பரந்ததுவே யெற்செய்வான் மறைந்தனனே
> களைவரும் புலம்புநீர் கண்பொழீஇ யுகுத்தனவே
> தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங்கொல்
> வளைநெகிழ வெரிசிந்தி வந்தவிம் மருண்மாலை
>
> (கானல்-40)

எனவரும் மூன்றுபாடல்கள் வரிப்பாடல்களாய் அகப்பொருண்மை பயின்று வந்தன.

> ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
> கானத் தெருமைக் கருந்தலைமே னின்றாயால்

வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்

(வேட்,வரி.8)

எனவரும் மூன்று பாடல்கள் தேவபாணியாய் இறைவழி பாட்டுப் பொருண்மை பெற்று வந்தன.

விகற்பநிலை

இவ்விசைப் பாடல்கள் ஒருவிகற்பமாயும், இருவிகற்ப மாயும், மூவேறு விகற்பமாயும் அமைந்துள. எனினும் ஒரு விகற்பமாய் வருதலே பெரும்பான்மை யாப்பு நெறி.

வஞ்சஞ் செய்தான் றொழுதைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா யிறையென் கோயாம்
நெஞ்சங் கவர்ந்தா னிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்

(ஆய்.குர.24)

எனவரும் பாடல் ஒருவிகற்பத்தால் அமைந்ததும்

செறிவளைக்கை நல்லா யிதுநகையா கின்றே
வெறிகமழ் வெற்பனோய் தீர்க்கவரும் வேலன்
வேலன் மடவ னவனினுந் தான்மடவன்
ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்

எனவரும் பாடல் இருவிகற்பத்தால் அமைந்ததும்,

ஆய்வளை நல்லா யிதுநகை யாகின்றே
மாமலை வெற்பனோய் தீர்க்கவரும் வேலன்
வருமாயின் வேலன் மடவ னவனிற்
குருகு பெயர்க்குன்றங் கொன்றான் மடவன்

எனவரும் பாடல் மூன்று விகற்பத்தால் அமைந்ததும் அறியத்தக்கது.

பிற சிறப்பு நிலைகள்

இவ்விசைப் பாடல்கள் சில அந்தாதி யமைப்பு பெற்றுவரும். நான்காமடி தோறும்இறுதி யொத்துவருதல்

இப்பாடல்களின் சிறப்பு நிலைகளிலொன்று, நான்காம் அடியில் இறுதியொத்தலேயன்றி இரண்டாம் அடியிலும் இறுதியொத்து வருதலுண்டு.

நுளையர் விளரி நொடிதருந்தீம் பாலை
இளிகிளையிற் கொள்ள விறுத்தாயான் மாலை
இளிகிளையிற் கொள்ள விறுத்தாய்மன் னீயேற்
கொளைவல்லா யென்னுவி கொள்வாழி மாலை

இப்பாடலுள் அந்தாதிச் சிறப்பும், இரண்டு நான்காம் அடிகளில் ஈறொத்தல் சிறப்பும் அமைந்துள்ளன. நான்கு அடியிலும் அடியியைபுத் தொடை அமைந்த சிறப்பினையும் சில பாடல்கள் பெற்று வருவன. இதற்கு,

பொழிறரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே எனையிடர் செய்தவையே
(கானல். 14)

எனவரும் பாடல் சான்றுயுளது. மேலும் இப்பாடலுள் அடிதோறும் பொழிப்பு இயைபுத் தொடை விகற்பம் சிறப்புற அமைந்துள்ளதும் குறிக்கத்தக்கது,

முதலடியே இரண்டாமடியாயும் நான்காமடியாயும் மடக்கி வரும் சிறப்பு நிலையும் இரண்டாம் அடி மூன்றும் அடியாய் மடக்கிவரும் சிறப்பு நிலையும், ஓரடிக்குள் வந்த சொல்லே இரட்டித்துச் சொற்றொடர் மடக்கு அமைந்த சிறப்பு நிலையும் இப்பாடல்களுக்கு உரியவை.

இங்ஙனம் இசைத்தமிழுக்குரிய யாப்பு வகைக்குப் பெருவரவிற்றுய கலிவிருத்தப்பாவின் யாப்பு நெறியைச் சிலப்பதிகாரத்துள் பயின்ற இப்பாடல்கள் இனிதுற இயம்புகின்றன.

புதுவகைப் பாவினம்

சிலப்பதிகாரத்துள் குறள் வெண்பாவை நிலைமண்டில ஆசிரியப்பாவின் இடையே மடுத்துப் புதுவகைக் 'குறள் மிடை மண்டிலம்' என்னும் யாப்பு வகையைத் தோற்றிய புதுமையைப் போல, இசைப்பா வகையிலும் புதிய பாவின அமைப்பொன்றை அறிமுகப் படுத்தியுள்ளார் இளங்கோ. ஒருபொருள் குறித்துவரும் ஒரேவகைப் பாவினங்கள் மூன்றடுக்கி வருதல் நெறியாம். எனினும் மூவேறு பாவினங்களைச் சேர்ந்த மூன்று பாடல்கள் ஒரு பொருள் மீது மூன்றடுக்கி வரும் புதுமை இளங்கோவின் படைப்புக்களில் ஒன்ருகும்.

வஞ்சியீர் வஞ்சி யிடையீர் மறவேலான்
பஞ்சடி யாயத்தீ ரெல்லீரும் வம்மெல்லாம்!

கொங்கையாற் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்ருளைப் பாடுதும் வம்மெல்லாம்!
தென்னவன் றன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்!

செங்கோல் வளைய வுயிர்வாழார் பாண்டியரென்
றெங்கோ முறைநா வியம்பவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்!
பாண்டியன் றன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்!

(வாழ்த்துக்காதை-11)

எனவரும் பகுதி வாழ்த்துக் காதையில் அமைந்துள்ளது. இப்பகுதி அனைத்தையும் ஒரேபாடலாகப் பதிப்பிப்பர் டாக்டர் உ.வே.சா. இரட்டைக் காப்பியப் பதிப்பர் டாக்டர் வ.சுப.மாணிக்கனர் முதல் ஐந்தடியை ஒரு பாவாகவும், பின்னுன்கடியை ஒருபாவாகவும் பிரித்து அமைப்பர்.

மூன்றுபாவாக அமைந்த இப்பாக்களில் முதற்பாடல் குறள் வெண்செந்துறை யாப்பினதாயும், இரண்டாம் பாடல் ஆசிரியத்தாழிசை யாப்பினதாயும் மூன்ரும் பாடல் கலிவிருத்த யாப்பினதாயும் அமைந்துள்ளன.

இம்மூவகைப் பாவினங்களும் இசைப்பாவுக்குரியனவாக இளங்கோவடிகளால் பயன்படுத்தப்பட்டனவேயாம் மூவேறு பாடல்களையும் ஒரு பொருள்மீது மூன்று அடுக்கியனவாய் அமைத்துள்ள யாப்புப் புதுமை இவண் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரித்து மேலும் பா இனங்களின் வகைகளாய துறை, தாழிசை, விருத்தம் என்பவற்றை முறையே இளங்கோவடிகள் பயன்படுத்தி உள்ளார். துறைப்பாடலுக்கு வெண்பாவையும் தாழிசைப் பாடலுக்கு ஆசிரியத்தையும், விருத்தப்பாடலுக்குக் கலிப்பாவையும் அவர் கொண்டுள்ளமையால் வஞ்சியினங்கள் அவர்காலத்து மிகுதியும் பயிற்சி இல்லாதவை என்னும் யாப்பு நெறியும் புலனாகும்.

யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் வரிசையில் இப் பாவினங்களைச் சுட்டுவன. காக்கைபாடினியார் விருத்தம், துறை, தாழிசை என்ற வரிசை முறைக் கருத்தினர். பாவினங்களை யாப்பிலக்கணிகள் பலவகை வரிசை முறையினவாக வைத்து வழங்கும் கருத்தினர் என்பதைப் 'பாவினங்களை விருத்தம், துறை, தாழிசை என்று காக்கைபாடினியார் வைத்த முறையாலே வையாது, தாழிசை துறை விருத்தம் என்று தமது மதம் படுத்து முறை பிறழச் சொன்னாரல்லர் இந்நூலுடையார், சிறுகாக்கைபாடினியார் முதலாகிய ஒருசாராசிரியர் வைத்த முறைபற்றிச் சொன்னார்........' எனவரும் பகுதி [8] உணர்த்தும். இளங்கோவடிகளும் இப்பாவினங்களை துறை, தாழிசை, விருத்தம் என்னும் வரிசைமுறையில் அமைத்திருத்தலால் அம்முறையில் கூறுவதையே தம் கருத்தாகவும் குறிப்பால் பெறவைத்தாரெனலாம். பின் வரும் பட்டியல் இப்பாவினங்களின் யாப்பியல் நெறியை விளக்குவன.

8. யாப். நூ. 56. உரைவிளக்கம்

எண்	பாடற் பெயர்	அடியெண்	நே	நி	இ	வெ	க	[illegible]	[illegible]	சிறப்பு நிலைகள்
1.	குறள்வெண் செந்துறை	2	-	-	4	3	-	-	-	ஒருவிகற்பம்
2-	ஆசிரியத் தாழிசை	3	-	-	4	7	-	-	-	இருவிகற்பம் இரு அடிகள் ஈரெுத்தன
3.	கலிவிருத்தம்	4	-	-	9	6	-	-	-	மூவிகற்பம் ஷை

இப்பாக்கள் 'வம்மெல்லாம்' என்னும் தொடரை ஈருகப் பெற்றுள்ளதும், ஆசிரியத்தாழிசையும், கலிவிருத்தமும் ஈற்றயலடியின் இறுதியிலும் வம்மெல்லாம் என்னும் தொடரைப் பெற்றுள்ளதும் அவை முறையே, ஒரு விகற்பம், இரு விகற்பம், மூவிகற்பம் பெற்றுள்ளதும் இப்பாடல்களின் அமைப்பு நிலை. இதனுல் இப்புதிய பாவகையின் யாப்புநெறியும் சுட்டப்பட்டது. மூவகை யாப்புக் கலவைத் தொகுதியாய் விளங்கும் இப்பாவினங்கள் இசைப்பாவுக்குரிய புதிய அமைப்பினவாய் விளங்குவன.

நாடகக்கூறுகள்

சிலப்பதிகாரம் இயலுக்கென்றும், இசைக்கென்றும் நாடகத்துக்கென்றும் தனித்தனிப் பாக்களைப் பெற்றிருத்தலால் இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள் என்னும் பெயரால் சுட்டப்பட்டது. சிலப்பதிகாரத்தில் இயற்பாவகைகளும் இசைப்பா வகைகளும் இடம் பெற்ற அளவு நாடகக்கூறுகள் இடம் பெறவில்லை. நாடகக் கலையாய கூத்துக்கலை பற்றிய செய்திகள் இடம் பெறுதலோடு உரைநடை, கட்டுரை உரைத்தொடர்கள் முதலாயவை இவண் நாடகக்கூறுகளாய்ச் சுட்டப்படுகின்றன.

'உரைப்பாட்டுமடை' என்னும் தலைப்பில் சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக் காதை ஆகிய காதைகளில் பகுதிகள்

அமைந்துள்ளன. இயற்பாவின் இடையே உரையாகிய சொல் அல்லது தொடரும் பாட்டும் பெற்றுவரும் பகுதியே உரைப்பாட்டுமடை என்னும் பெயரால் சிலப்பதிக்காரத் துள் சுட்டப்பட்டுள்ளது.

உரைப்பாட்டுமடை

வேட்டுவவரியுள் முற்கூறுயமைந்த நேரிசையாசிரியப் பாவில் 46-47 ஆம் அடிகளின் இடையே 'இவளோ' என் னும் உரைச்சொல்லும் பாட்டும் இடம் பெறுதலால் அப் பகுதி உரைப்பாட்டுமடை எனப் பெயர் பெற்றது என்றும், ஆய்ச்சியர் குரவையுள் உரைப்பாட்டுமடை என்றும் தலைப் பிலமைந்த பகுதி குறளடி வஞ்சிப்பா என்னும் யாப்பு வகையிலமைந்த இயற்றமிழ்ப்பாவென்றும், கருப்பம் என் னும் பகுதியை அடுத்து யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகுப் பாடலில் கொச்சகங்கட்கிடையே 'சுட்டு' என்னும் உரைச்சொல்லும் பாட்டும் இடம்பெற்றிருத் தலால் இப்பகுதியே ஆய்ச்சியர் குரவையுள் உரைப் பாட்டுமடை என்னும் பெயருக்குரியது என்றும், குன்றக் குரவையுள் 'இவள் போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம் இல்லை' எனவரும் உரைத்தொடரொன்றும் பாட்டும் இடம் பெற்றமையால் அப்பகுதி உரைப்பாட்டு மடை என்னும் பெயரால் வழங்கப்பட்டதென்றும், வாழ்த்துக்காதையுள் உரைப்பாட்டு மடை என்னும் பெயரால் அமைந்த பகுதி கட்டுரை என்னும் பெயருக்குரியதேயாம் என்றும் முன் னர்க் கூறிய செய்திகள் இவண் நினையத்தகுவன. பாடலில் இடையே மடுக்கப்பெறும் உரைச்சொல் அல்லது உரைத்தொடர் நாடகவுறுப்பாய் விளங்குவது.

உரைநடைப்பகுதிகள்

இனி, சிலப்பதிகாரத்தில் நாடகவுறுப்பாய் விளங்கும் உரைநடைப் பகுதிகள் கட்டுரை என்னும் பெயராலும்,

கருப்பம் என்னும் பெயராலும் இடம் பெற்றுள்ளன என்பது குறித்தற்குரித்து. வாழ்த்துக்காதையுள் உரைப்பாட்டு மடை என்னும் தலைப்பில் இடம்பெற்ற பகுதியும் கட்டுரையாய உரைநடையேயாம்.

இவ்வுரைநடைப் பகுதிகளில் ஆய்ச்சியர் குரவையுள் கட்டுரை என்னும் தலைப்பில் இவ்வுரைநடைப் பகுதி அமையாமல் கருப்பம் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது. கருப்பம் என்பது கேட்டுக்குக் கருப்பம் என்னும் பொருளது. கேட்டுக்குக் கருப்பமாய செய்திகள் உரைநடையாயினும், செய்யுளாயினும் கருப்பம் எனப் பொருண்மை வகையாற்றுன் பெயர் பெறும் என அறியலாம். வழக்குரை காதையுள் செய்யுட் பகுதியாய் அமைந்தது கருப்பம் என்னும் பெயரால் வழங்குவதும் ஆய்ச்சியர் குரவையுள் உரைநடைப்பகுதியாய் அமைந்தது கருப்பம் என்னும் பெயரால் வழங்குவதும் இந்நெறியை உணர்த்தும் சான்றுகள்.

சிலப்பதிகாரத்துள் நாடகவுறுப்பாய் அமைந்த கட்டுரைப் பகுதிகள் இவண் தொகுத்துரைக்கப்படும்.

1. சித்திரப்படத்துட்புக்கு......வாசித்தல் தொடங்குமன் (கானல்வரி)
2. கானல்வரிப்பாடல் ......பாடத்தொடங்குமன் (கானல்வரி)
3. ஆங்ஙனம்பாடிய ......பண்ணுப்பெயர்த்தாள் (கானல்வரி)
4. கானல்வரியான்பாட ......மனைபுக்காள் (கானல்வரி)
5. குடத்துப்பால் ......நீங்குகவெனவே (ஆய்.குரவை)
6. குமரியொடு ......திறமுரைப்பர்மன் (வாழ். காதை)

இவ்வுரைநடைப்பகுதிகள் அனைத்தும் இசைப்பாக்களுக்கும் இயற்பாக்களுக்கும் இடையில் இடம் பெறுவதும், இப்பகுதிகள் கவிஞனின் விளக்கவுரை அல்லது இணைப்புரை போல

கவிஞன் கூற்றுய் விளங்குவதும் இக்கட்டுரைப் பகுதிகளின் இயல்பு நெறியை நன்கு புலனுக்கும்.

இவ்வுரைநடைப் பகுதிகள் 'மன்' னீற்று அசைச் சொல்லாலும் ஏகாரவீற்றசையோடும், இவை யாதும் இன்றியும் முடியும் இயல்பினவாய் விளங்கினவென்பதும் அறிதற்குரித்து. இவை கட்டுரைப் பகுதியாயினும் இனிய சந்தவமைப்பும் எதுகை மோனைச் சிறப்பும் உடையன வாய் விளங்கின. இங்ஙனம் சிலப்பதிகாரத்தில் விளங்கிய கட்டுரைப் பகுதியின் இயல்பு நெறிகள் சுட்டப்படுகின்றன.

உரையிடையிட்டவை

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பது சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. இடை இடையே உரைநடைப் பகுதிகளைப் பெற்றமையால் இக் காப்பியம் இப்பெயர் பெறவில்லையென்பதும் இடை இடையே இணைப்புச் சொற்களாய் அமைந்த உரை அல்லது சொல்லைப் பெற்றமையால் இப்பெயர் வழங்கிற்று என்பதும் நினைவுகொளத்தகும். சிலப்பதிகாரத்துள் அமைந்த இத்தகைய உரைச்சொற்கள் இவண் தொகுத்தமைக்கப்பட்டுள்ளன.

1. கானல்வரி	ஆங்கு	23-24	இசைப்பா-கட்டுரைஇணைப்பு
2. கானல்வரி	எனக்கேட்டு	51-52	இசைப்பா-கட்டுரைஇணைப்பு
3. கானல்வரி	ஆங்கு	52இறுதி	கட்டுரை-வாழ்த்துஇணைப்பு
4. ஆய்ச்சியர்குரவை	என்றியாம்	37-38	இசைப்பா வாழ்த்துஇணைப்பு
5. குன்றக்குரவை	என்றீங்கு	20-21	இசைப்பா-இசைப்பாஇணைப்பு
6. குன்றக்குரவை	பாடுற்று	22-23	இசைப்பா-இசைப்பாஇணைப்பு
7. குன்றக்குரவை	என்றியாம்	25-26	இசைப்பா-வாழ்த்துஇணைப்பு-
8.வாழ்த்துக்காதை	ஆங்கு	28-29	இசைப்பா-வாழ்த்துஇணைப்பு

மங்கலவாழ்த்துப்பாடல், ஊர்சூழ்வரி, துன்பமாலை, வழக்குரைகாதை ஆகிய காதைகளுள்ளும் இத்தகைய தனிச்சொற்கள் பயின்றுள்ளனவெனினும் அவை அக் காதைகளின் யாப்பு வகையாகிய கலிப்பாக்களின் உறுப்புக்களாய தனிசொற்களாய்க் கொள்ளப்படுபவன. இத்தகைய தனிசொற்களை மிகுதியாகப் பயன்படுத்தி அதனுல் கதைப்போக்கின் விறுவிறுப்பை இயக்கிச் செல்வர் இளங்கோவடிகள்.

கலியுறுப்புக்களாகிய இத்தனிச்சொற்களுக்கு மேலும், முன்னும் பின்னுமுள்ள உறுப்புக்களை இணைக்கும் இச் சொற்களே நாடகவுறுப்புக்களாய் அமைபவை. இச் சொற்கள் பொருண்மையுடையனவாய் முன்னும் பின்னும் உள்ள பகுதிகளை இணைத்துவரும் பணிக்குரியனவாய் விளங்கின.

இங்ஙனம், சிலப்பதிகாரத்துளமைந்த யாப்பு நெறிகள் இவண் சுட்டப்பெற்றன. சங்கவிலக்கிய யாப்பியல் நெறிகளின் தடத்தில் பயின்று, புதுவகை யாப்பு நெறிகளாய தடங்களையும் தோற்றுவித்து பெருமைக்குரியராய்த் திகழ்பவர் இளங்கோவடிகள். தம் காலத்து யாப்பு நெறிகளைச் சுட்டும் கலங்கரை விளக்கமாயும், பழமைக்கும் புதுமைக்கும் உரியனவாய பல்வேறு யாப்பு நெறிகளை உள்ளடக்கிய கருவூலமாயும் தம் காப்பியமாளிகையாய சிலப்பதிகாரத்தை அமைத்துள்ளார். அவர் தோற்றுவித்த அல்லது பின்பற்றிய யாப்பு நெறிகளென்னும் வித்துக்கள் தமிழ் இலக்கிய வளநிலத்தில் பல்கிப் பெருகி தழைத்து விளங்குகின்றன.

———

இறுவாய்

தமிழிலக்கியத்துக்குரிய யாப்புப் பெட்டகமாய்த் திகழ்வது சிலப்பதிகாரம். இக்காப்பியத்தின் யாப்பு அமைதியை முழு நோக்கில் விளக்கி இவ்வாய்வுக் கட்டுரையின் இறுவாய்க் கண் யாப்புக் கண்ணோட்டத்தில் பிறந்த சில சிந்தனைகளும் தொகுத்துச் சுட்டப்பட்டுள.

தொல்காப்பியர் பொருளுக்கும் யாப்புக்கும் இடையே வரையறை செய்த முன்னோடி. குறிப்பிட்ட பொருள் வகைகளைக் குறிப்பிட்ட யாப்பு வகையாற்றான் பாடுதல் வேண்டும் என்ற பொருள் யாப்பு நெறி தொல் காப்பியத்துள் சுட்டப்பட்டுள்ளது. சங்ககாலத்திலும், அதற்குப் பின்னரும் தொல்காப்பியர் சுட்டிய பொருள் யாப்பு பற்றிய வரையறைகள் பொருளற்றனவாய்ச் சென்றன. இலக்கியர்கள் தாம்வாழும் காலத்திற்கும் சூழலுக்குமேற்பப் புதுப்புது பொருள் யாப்பு நெறிகளைப் பின்பற்றினர். பொருளுக்கும் யாப்புக்கும் இடையே அமைந்த இயைபுநெறி காலந்தோறும் வேறுபட்டும் மாறுபட்டும் அமைந்தமை இதனாற் புலனும். பெருகி வரும் காலப்பேராற்றின் பெருவெள்ளத்தில் இத்தகைய நெறிப்பாடுகள் கரைந்தொழியினும், தன்காலப் பொருள் யாப்பு நெறியின் மரபுகளை நினைவுறுத்தும் கலங்கரை விளக்கமாகச் சிலப்பதிகாரம் திகழ்கின்றது.

புதுமை படைக்க விரும்புவது கவிஞர்தம் உள்ளப் போக்கு. பழமையான பாவகைகளைத் தத்தம் வேட்கைக்கு ஏற்ப மாற்றியமைக்கும் போக்கே பாவகை ஒன்று பல வாகப் பல்குதற்குக் காரணமாயமைந்தது. நிலைமண்டில ஆசிரியப்பாவின் ஈற்றயலடியை முச்சீராக்கிப் பாட

முனைந்த புதுமை வேட்கை நேரிசையாசிரியப்பா என்னும் வகையைத் தோற்றுவித்தது. ஈற்றயலடிபோல இடை இடையே ஒருசீரும் இருசீரும் குறைத்துப் பாடத் தொடங்கிய புதுமை நிலை இணைக்குறளாசிரியத்தை உருவாக்கியது. நிலைமண்டிலத்தின் அடிதோறும் பொருள் கோள் நெறியைப் பின்பற்றிப் பொருள் முற்றுப் பெறப் பாடிய புதியநெறி அடிமறி மண்டில ஆசிரியப் பாவைத் தோற்றியது. இங்ஙனம் ஆசிரியப்பா ஒன்றே பலவாகப் பல்கிய வளர்ச்சிநிலை இத்தகைய புதுமை வேட்கையின் பயனேயாகும். சிலப்பதிகாரக் காப்பியம் பழமைப்பாட்டைக்கும் புதுமைத் தடத்துக்கும் இடைப்பட்ட இணைப்புப் பாலமாய்த் திகழ்கின்றது.

இவ்வாய்வுக் கட்டுரை, சிலப்பதிகாரத்தில் யாப்பு வகையைக் குறிக்கும் நிலையில் பண்டைய உரையாசிரியர், இற்றைய உரையாசிரியர். பதிப்பாசிரியர் மற்றும் இலக்கண உரையாசிரியர்தம் நோக்கினின்றுச் செம்பாகம் வேறுபடுகின்றது. நிலைமண்டில ஆசிரியம் கலிவெண்பா ஆகிய யாப்புக்களிலமைந்த காதைகள் தவிர எஞ்சிய மங்கலவாழ்த்துப் பாடல், கானல்வரி, வேட்டுவரி, ஆய்ச்சியர் குரவை. ஊர்சூழ்வரி, துன்பமாலை, வழக்குரை காதை, கட்டுரைகாதை, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை முதலியவற்றின் யாப்புவகையைச் சுட்டுவதில் இவ்வேறுபாட்டைத் தெள்ளிதின் உணரலாம்.

நிலைமண்டில ஆசிரியம் அல்லது கலிவெண்பா யாப்பிலமைந்த காதைகளைப்போன்று, பிற காதைகளும் ஒரே யாப்புவகையால் அமைந்திருத்தல் வேண்டும் என்ற எண்ணத்தினுல், பிற காதைகளுக்குரிய யாப்பு வகை களையும் ஒரே பாவகையாகச் சுட்டும் மனப்போக்கு எழுந்ததுபோலும்! அன்றியும் இயலுக்கென்றும், இசைக்கு என்றும், நாடகத்திற்கென்றும் தனித்தனிப் பாவகைகள்

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள என்ற பாகுபாட்டு உண்மை பற்றிய அறியாமையும் இதற்குக் காரணம் ஆகலாம். எனவே சிலம்பின் யாப்பமைதி பற்றிய முழு நோக்குப் பொருண்மை முந்தையோர் சிந்தனையில் இடம் பெறவில்லை.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தம் இலக்கண உரைமேற்கோள்களுக்குப் பயன்படும் வகையில் சிலப்பதிகாரப் பாவகைகளில் துண்டுப் பார்வையை மட்டுமே செலுத்தினர். இதனால் இசைப்பாவகைகளையும் கூட இயற்பாக்களுக்கு உரியனவாக மொழிந்துள்ளமையைக் காணலாம். எனினும் இயலிசை நாடகக் கூறுகட்குத் தனித்தனியே பாவகைகள் இக்காப்பியத்துள் பயின்றுள என்பது இக்கட்டுரைக்கண் விளக்கப்படும் அடிப்படைக் கோட்பாடு. இதன்கண் முழுநோக்கில் இப் பாவகைகள் ஆயப்பட்டுள்ளமையால், இலக்கண உரையாசிரியர்தம் நோக்கினின்று இக்கட்டுரைப் பொருண்மை முற்றிலும் வேறுபட்டுள்ளது. இவ்வகையில் இவ்வாய்வுரை முழு நோக்குச் சிறப்பினது.

தமிழ் யாப்பியலுக்கு அரும்பணி புரிந்த அறிஞர் இளங்கோவடிகள். பாட்டுமடை, துறைப்பாட்டுமடை, உரைப்பாட்டுமடை என்றின்னோரன்ன யாப்புக் குறியீடுகள் பொதுளிய கருவூலமாய்ச் சிலப்பதிகாரம் திகழ்கின்றது. இயற்பாக்களின் இடையே இசைப்பாக்கள் மடுக்கப்படுங்கால் பாட்டுமடை என்றும், புறத்திணைத் துறைக் கருத்துக்களை உள்ளடக்கிய இசைப்பாக்கள் இடையே மடுக்கப் பெறுங்கால் துறைப்பாட்டுமடை என்றும், உரையும் பாட்டும் இடையில் விரவிய இயற் பாக்களை உரைப்பாட்டுமடை என்றும் நுட்பவேறுபாடு களுடன் இவ்வியாப்புக்குறியீடுகளை வழங்கிய இளங்கோவின் நுண்மாணுழைபுலம் பாராட்டுதற்

குரித்து. இம்முறையிலேயே இயற்றமிழ்ப் பாக்கள் பயின்று வரும் பகுதிகளேக் காதை என்னும் யாப்புக் குறியீட்டுச் சொல்லால் வழங்கும் திறமும் நயத்தற்குரித்து.

தமிழ் யாப்பியல் நோக்கில் எதிர்காலத்தில் தமிழ் கூறு நல்லுலகத்திற்குரிய இன்றியமையாப் பணிகள் சிலவற்றைக் கண்ணேட்டத்திற்குரியனவாகக் கொணர் தலும் என்கடன்.

அ) தமிழிலக்கியத்தின் தொன்மைச் செல்வமாய சங்கவிலக்கியந் தொடங்கி இன்றைய புதுக் கவிதையீருக அனைத்துவகைப் பாக்களேயும் இயலுக்குரியன, இசைக் குரியன, நாடகத்திற்குரியன எனத் தனித்தனித் தலைப்பிற் பகுத்து வெளிப்படுத்தும் முயற்சி தமிழ்ச் சமுதாயத்தின் பொறுப்பு. சங்கப்பாக்கள் பெரும்பான்மை இயலுக்கும் சிறுபான்மை இசைக்கும் உரியன. நாடகக் கூறுகளின் சாயலும் சங்கப் பாக்களிலுள. சிலப்பதிகாரம் முவ்வகைக் கூறுகளுக்கும் உரிய யாப்புவகைகள் பொதுளியது. நாளும் இன்னிசையால் நற்றமிழ் வளர்த்த பத்திபபாக்கள் இசைக்குரியன. குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் முதலாய இலக்கியப் பாக்கள், இசைப்பாக்களாயும் நாடகப் பாக்களாயும் திகழ்வன. இன்றைய திரையிசைப் பாடல்கள், இசைமேடைகளில் ஒலிக்கும் கீர்த்தனங்கள் என்பவை இசைக்குரியன, இத்தகைய பாகுபாட்டுநெறி தமிழிலக்கியத்தின் முத்தமிழ்க் கூறுகளை முறைப்படுத்திக் காக்கும் முயற்சிக்குரியது.

ஆ) தொல்காப்பியர் கூறிய பாவகைகட்கு மேலாகப் பலநூறு பாவகைகள் இன்று பல்கிப் பெருகியுள. தமிழ் இலக்கியச் செல்வங்களாய இப்பாவகைகட்குச் செவ்விய முறையில் பாகுபடுத்தப்பட்ட புதுவகை யாப்பிலக்கண நூல் ஒன்று எழுதலும் இன்றியமையாதது. புலவர் குழந்தையின் 'யாப்பதிகாரம்', அ.கி.பரந்தாமனுரின்

'கவிஞராக', கே.இராசகோபாலாச்சாரியாரின் 'இலக்கண விளக்கம்-யாப்பியல்' முதலிய நூல்கள் இம்முயற்சியில் ஓரளவு நிறைவு செய்வன. இப்பணி மேலும் முழுமையாக நிறைவெய்தல் இன்றியமையாதது.

இ) தொல்காப்பியர் பழமைக்கு விதிவகுத்துப் புதுமைக்கு வித்திட்டுச் சென்ற எதிர்நோக்குத் திறனி. கால வேறுபாட்டுக்கேற்ப, சூழல் மாறுபாட்டுக் கேற்ப புதுவனவெழுதல் யாப்புநெறி. இந்நெறித் தடத்திற்றான், இளங்கோவடிகள் குறள்மிடை மண்டிலப் பாவகையைப் படைத்தார். பாவினங்களை இசைப்பாடல்களின் வடிவில் வெளிப்படுத்தினர். தேவாரம் பாடிய மூவர் முதலிகளும் புதுவகைப் பாவினங்களைப் படைத்து இசைப்பாக்கள் பாடினர். தேவர், விருத்தப்பாவகையில் சந்தவேறு பாட்டுடன் காபபியம் தந்தார். சிற்றிலக்கியர்கள் கலிவெண்பாவை இரண்டாமடிதோறும் தனிச்சொல் பெற்று வரும் கண்ணியாகக் கண்டனர். அருணகிரியார் சந்தப் பாடல் தந்தார். இத்தகைய படைப்பாளிகள் யாப்புலகின் ஒளி விளக்குகள். இவ்வொளிப் பாட்டையில் புதுவகைப் பாக்களையும் பாவினங்களையும் படைத்தலும் தமிழுலகின் தலைப்பணி.

இத்தகைய சிந்தனையாக்கங்கள் இன்றைய நிலையில், யாப்புலகின் வளர்ச்சிக்கும் வலிவுக்கும் வனப்புக்கும் இன்றியமையாதன.

காப்பியங்களுள் சிலப்பதிகாரம் ஒன்றுதான் பல் வகை யாப்புவகைகளை உரைநடையிலும் செய்யுளிலும் பெற்றது. இசையொடும் தோய்ந்தது. முத்தமிழ் என்று சொல்லுதற்குரிய பாங்கும் உடையது. பின்னெழுந்த காப்பியங்கள் இவ்வளவு யாப்புப் பன்மை உடையன அல்ல என்பது வெளிப்படை. எனினும், விருத்தம் போன்ற ஓர் இனத்தில் பின்னைக் காப்பியர்கள் பல

புதுத்தடங்களை வகுத்துள்ளனர். அப்புதுவினங்களுள் இசைக் கூறுகளும் நாடகப் பாங்கும் ஆராய்ந்து பார்ப்பார்க்குக் கண்டுபிடிக்க முடியும். பெருங்காப்பியங் களை இதுகாறும் சுவைநோக்கிலும் வரலாற்று நோக்கிலும் ஆராய்ந்து வரும் தமிழுலகம், யாப்பு நோக்கிலும் ஆராயும் முற்போக்கு வேண்டும் என்பது என் கருத்து. ஏனெனில் பெரும்புலவர் செய்த தமிழ் நூல்களெல்லாம் செய்யுள் யாப்பு என்னும் அழியாப் புறவுடம்பு பெற்றவை. என் ஆய்வில் புதுவதாக விளக்கப் பெற்ற யாப்பியல் நெறிகள் ஏனைக் காப்பியங்களையும் ஆராய்வதற்குப் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்திலும் என் ஆய்வுக் கட்டுரையை எழுதியிருக்கின்றேன் எனப் பணிவுடன் சொல்லிக் கொள்கின்றேன்.

———

பிற்சேர்க்கை-1

மறைந்த யாப்பியல் நூல்கள்

தமிழ் யாப்பியல் வரலாறு என்னும் கட்டுரைக்கண் சுட்டப்பெற்ற மறைந்த யாப்பியல் நூல்கள் பற்றிய இன்றியமையாக் குறிப்புக்கள் இவண் தொகுத்துக் கூறப்பட்டுள.

எண்	நூல்	ஆசிரியர்	காலம் (அ) குறிப்பு
1.	அகத்தியர் யாப்பியல்	அகத்தியர்	கி.பி.10 ஆம் நூற். முன்
2.	அகத்தியர் பாட்டியல்	அகத்தியர்	கி.பி. 12 ஆம் நூற். பின்
3.	அவிநயம்	அவிநயனார்	கி.பி. 5(அ) 6 ஆம் நூற்
4.	அவிநயப் புறனடை	நக்கீரர்	அவிநயக் காலம்
5.	காக்கை பாடினியம்	காக்கை பாடினியார்	தொல்காப்பியர் காலம்
6.	கையனார் யாப்பியல்	கையனார்	கி.பி 7(அ)8 ஆம் நூற்.
7.	சங்கயாப்பு	—	சங்ககாலத்திற்குப் பின்
8.	சிறுகாக்கை பாடினியம்	சிறுகாக்கை பாடினியார்	குமரியாறு கடல் கொள்ளப்பட்டபின்னர்
9.	செய்யுளியல்	—	தொல்காப்பியருக்குப் பின்னர்
10.	நத்தத்தம்	நத்தத்தனார்	யாப்பருங்கல உரை யாசிரியருக்கு முன்னர்
11.	பல்காயம்	பல்காயனார்	காக்கைபாடினியத் துக்குப் பின்னர்

எண்	நூல்	ஆசிரியர்	காலம்(அ)குறிப்பு
12.	மயேச்சுரம்	மயேச்சுரர்	யாப்பருங்கலஉரை யாசிரியருக்கு முன்னர்
13.	இன்மணியாரம்	—	இலக்கண உரையாசிரியர் குறிப்புக்களால் அறிவது
14.	கைக்கிளைச் சூத்திரம்	கடிய நன்னியார்	,,
15.	கவிமயக்கறை	—	,,
16.	நக்கீரர் நாலடி நானூறு	—	,,
17.	நல்லாறன் மொழிவரி	—	,,
18.	யாப்பிலக்கணம்	பரிமாணஞர்	,,
19.	பல்காப்பியம்	பல்காப்பியனர்	,,
20.	பல்காப்பியப் புறனடை	—	,,
21.	பாடலம்	பாடலஞர்	,,
22.	போக்கியம்	—	,,
23.	கிரணியம்	—	,,
24.	வதுவிச்சை	—	,,
25.	பெரியபம்மம்	—	,,
26.	பெரியமுப்பழம்	—	,,
27.	முள்ளியார் கவித்தொகை	—	,,

பிற்சேர்க்கை-2

சிலம்பில் பயின்ற இயற்பாக்களும், இசைப்பாக்களும்

சிலம்பில் பயின்ற யாப்புவகைகள் என்னும் கட்டுரைக் கண் குறிப்பிடப்பெற்ற பாவகைகளும் பாவினங்களும் இவண் நிரலே சுட்டப்பெற்று, அவை எவ்விடத்து இயற் பாக்களாகவும், இசைப்பாக்களாகவும் பயின்று வந்துள என விளக்கப்பட்டுள்ளது.

எண்	பா	இயற்பா	இசைப்பா
	அ ஆசிரியப்பா வகையும் இனங்களும்		
1.	நிலைமண்டில ஆசிரியப்பா	1. மனை.காதை	1. ஆய்ச்சியர்குரவை-அரசவாழ்த்து
		2. அரங்.காதை	2. குன்றக்குரவை-பாட்டுமடை கடம்புகுடி
		3. அந்தி.காதை	
		4. இந்திர.காதை	
		5, கடலாடுகாதை	
		6. வேனிற்காதை	
		7. நாடு.காதை	
		8. காடு.க்காதை	
		9. புறஞ்.காதை	
		10. ஊர்.காதை	
		11. அடைக்.காதை	
		12. கொலைக்.காதை	
		13. அழற்படுகாதை	
		14. காட்சிக்காதை	
		15. கால்.காதை	
		16. நீர்.காதை	
		17. நடுகற்காதை	
		18. வரந்தருகாதை	

2. நேரிசை யாசிரியப்பா	1. வேட்டுவவரி முற்கூறு	1. கானல்வரி-அரசவாழ்த்து 2. குன்றக்குரவை-அரசவாழ்த்து 3 வேட்டுவவரி அரசவாழ்த்து
3. ஆசிரியத் தாழிசை	—	1. ஆய்ச்சியர் குரவை-பாட்டு
4. ஆசிரியத்துறை	—	1. கானல்வரி முகமில்வரி-கானல்வரி
5. ஆசிரியவிருத்தம்	—	1. கானல்வரிஆற்றுவரி (கோ) சார்த்துவரி (கோ) ஆற்றுவரி (மா) சார்த்துவரி (மா) மயங்குதிணைநிலை வரி
6. குறள்மிடை மண்டிலம்	1. கட்டுரைகாதை	—

ஆ வெண்பா வகையும் இனங்களும்

7. இன்னிசை வெண்பா	—	1. வாழ்த்துக்காதை-அரசவாழ்த்து
8. நேரிசைவெண்பா	—	1. வாழ்த்துக்காதை-ஆயத்தார் சொல்
9. பஃறொடை வெண்பா	— —	1. குன்றக்குரவை-பாட்டுமடை அ. அலர்பாடு ஆ. மறுதரவில்லாளை
10. வெண்டாழிசை	—	1. மங்.வாழ்.பாடல் நூல்வாழ்த்து
11. குறள்வெண்செந்துறை	—	1. ஆய்ச்சியர்குரவை-குடப்பால்- ஒன்றுண்டு

இ. கலிப்பா வகையும் இனங்களும்

12. கலிவெண்பா	1. கனாத்திற.காதை	
	2. வஞ்சினமாலை	
13. உறழ்கலி	1. வழக்குரைகாதை	
14. பஃருசைக் கொச்சகக்கலிப்பா	1. வேட்டுவவரி-நடுக்கூறு	
15. யாப்பினுல்வேறு பட்ட கொச்சக-வொருபோகு	1. ஆய்.குரவை காரி கதனஞ்சான்... பெயரே	1. ஆய்ச்சியர்குரவை-படர்க்கைப்பரவல் 2. குன்றகுரவை-கொளுச்சொல். சிறைப்புறம்; பாட்டுமடை (பாடுகம்-வா......)
	2. ஆய்.குரவை-மாயவன்...பாட்டெடுட்பாள்	1. வாழ்த்துக்காதை-சொல், அரற்று,
	3. துன்பமாலை-ஆங்கு...சொல்லாடுந்தான்	தேவந்தி ஐயையைக் காட்டியரற்றியது; அம்மானைவரி. ஊசல்வரி, வள்ளைப்பாட்டு
	4. துன்பமாலை-எல்லாவோ... ஒருகுரல்	
	5. குன்றக்குரவை குருவியோப்பியும்... சுரக்கெனவே	
16. தரவுகொச்சகக் கலிப்பா	1. ஆய்ச்சியர்குரவை மாயவன்... ஒன்றுற்று	

17. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா	1. மங்கல வாழ்த்துப் பாடல் 2. ஊர்சூழ்வரி	
18. தரவின்றித் தாழிசை பெற்றகொச். ஒருபோகு	—	1. வாழ்த்துக்காதை-வாழ்த்து
19. கலிவிருத்தம்	—	1. கானல்வரி-நிலைவரி, முரிவரி, திணைநிலைவரி (கோ) திணைநிலைவரி (மா) மயங்குதிணைநிலைவரி, சாயல்வரி, முகமில்வரி. 2. வேட்டுவவரி-கொடை, அவிப்பலி, பலிக்கொடை 3. ஆய். குரவை-பாட்டு, ஒன்றன் பகுதி, உள்வரிவாழ்த்து, முன்னிலைப்பரவல். 4. குன்றகுரவை–பாட்டுமடை, தெய்வம் பராஅயது, பாட்டுமடைகள் பாட்டுக்கள். 5. வாழ்த்துக்காதை-செங்குட்டுவன் கூற்று, கண்ணகி தோற்றம்.

ஈ. வஞ்சிப்பா வகை

20. குறளடி வஞ்சிப்பா	1. ஆய். குரவை-கயலெழுதிய... வந்துதோன்றுமன்

பிற்சேர்க்கை-3

வரியும் குரவையும்

காதைத் தலைப்பும் முத்தமிழும் என்னும் கட்டுரைக் கண் சுட்டப்பெறும் வரிப்பாடல், வரிக்கூத்து, குரவைப் பாடல், குரவைக்கூத்து ஆகியவற்றின் பிரிவு விளக்கமும் இவற்றை அடிப்படையாகக் கொண்டு காதைகள் பெயர் பெற்று விளங்கும் திறமும் இவண் உரைக்கப்பட்டுள்ளன.

அ) கூத்தின் பிரிவுகள்

கூத்து

- அகக்கூத்து
  (இதற்குரிய விலக்குறுப்புக்கள் 14. பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம, சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதம், ஆகியவை. விலக் குறுப்பில் 13 ஆவதாக அமைவது **வரிக்கூத்து**
  - சாந்திக்கூத்து
  - விநோதக்கூத்து
    - குரவை
      (விநோதக்கூத்தின் அறுவகைப் பிரிவில் முதலாவதாக அமைந்து விளங்குவது குரவைக் கூத்து)
    - கலிநடம்
    - குடக்கூத்து
    - கரணம்
    - நோக்கு
    - தோற்பாவை
- புறக்கூத்து

ஆ. பாட்டும் கூத்தும்



இ. காதைகளின் விளக்கம்

அ) வரிப்பாடலின் விளக்கமாய் அமைந்தது **கானல்வரி**

ஆ) குரவைப் பாடலின் விளக்கமாய் அமைந்தது **குன்றக்குரவை**

இ) வரிக்கூத்தின் விளக்கமாய் அமைந்தவை **வேட்டுவவரியும், ஊர்சூழ்வரியும்**
(உள்வரி விளக்கம்-வேட்டுவவரி; காட்சி வரி, கண்கூடுவரி, ஆகியவற்றின் சாயல் பெற்றது-ஊர்சூழ்வரி)

ஈ) குரவைக்கூத்தின் விளக்கமாய் அமைந்தது **ஆய்ச்சியர் குரவை**

பிற்சேர்க்கை-4

காதை வரிசையில் முத்தமிழ்க் கூறுகள்

காதைகளின் யாப்பமைதி என்னும் கட்டுரைக்கண் கூறப்பட்ட நெறிப்படி காதைதோறும் இடம் பெற்ற இயலிசை நாடகக் கூறுகளும் அவற்றின் யாப்பமைதியும் இவண் தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன.

எண்	காதை	பகுதி	முத்தமிழ்க் கூறு	யாப்பு
1.	மங்கல வாழ்த்துப் பாடல்	அ) நூல் வாழ்த்து	இசைக்கூறு	வெண்டாழிசை
		ஆ) காதை	இயற்கூறு	மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா
2.	மனையறம்படுத்த காதை	காதை	இயற்கூறு	நிலைமண்டில ஆசிரியப்பா
3.	அரங்கேற்றுகாதை	,,	,,	,,
4.	அந்திமாலைச் சிறப்புச்செய் காதை	,,	,,	,,
5.	இந்திரவிழவூரெடுத்த காதை	,,	,,	,,
6.	கடலாடுகாதை	,,	,,	,,

7, கானல்வரி	கட்டுரை	நாடகக்கூறு	—
	ஆற்றுவரி	இசைக்கூறு	அறுசீர் ஆசிரியவிருத்தம்
	சார்த்துவரி	,,	,,
	முகமில்வரி	,,	ஆசிரியத்துறை
	கானல்வரி	,,	,,
	நிலைவரி	,,	கலிவிருத்தம்
	முரிவரி	,,	,,
	திணை நிலைவரி	,,	,,
	தனிச்சொல்	நாடகக்கூறு	—
	கட்டுரை	,,	—
	ஆற்றுவரி	இசைக்கூறு	அறுசீர் ஆசிரியவிருத்தம்
	சார்த்துவரி	இசைக்கூறு	அறுசீர் ஆசிரிய விருத்தம்
	திணை நிலைவரி	,,	கலிவிருத்தம்
	மயங்குதிணை		
	நிலைவரி-1	,,	அறுசீர் ஆசிரிய விருத்தம்
	மயங்குதிணை		
	நிலைவரி-11	,,	கலிவிருத்தம்
	சாயல்வரி	,,	,,
	முகமில்வரி-1	,,	,,
	கட்டுரை	நாடகக்கூறு	—
	முகமில்வரி-11	இசைக்கூறு	கலிவிருத்தம்
	தனிச்சொல்	நாடகக்கூறு	—
	கட்டுரை	நாடகக்கூறு	—
	தனிச்சொல்	நாடகக்கூறு	—
	அரசவாழ்த்து	இசைக்கூறு	நேரிசையாசிரியப்பா

8. வேனிற்காதை	காதை	இயற்கூறு	நிலைமண்டில ஆசிரியப்பா
9. கனாத்திறமுரைத்த காதை	,,	,,	கலிவெண்பா
10. நாடுகாண் காதை	,,	,,	நிலைமண்டில ஆசிரியப்பா
11. காடுகாண் காதை	,,	,,	,,
12. வேட்டுவவரி	உரைப்பாட்டு	,,	நேரிசையாசிரியப்பா
	மடை		
	முன்றிற்சிறப்பு		
	முதல்வென்றிக் கூத்துவரை	,,	பஃறொழிசைக் கொச்சகக் கலிப்பா
	கூத்துள்படுதல்,		
	வெட்சி, வெட்சிப்		
	புறனடை	இசைக்கூறு	அறுசீர ஆசிரிய விருத்தம்
	கொடை	,,	கலிவிருத்தம்
	அவிப்பலி	,,	,,
	பலிக்கொடை	,,	,,
	அரசவாழ்த்து	,,	நேரிசையாசிரியப்பா
13. புறஞ்சேரியிறுத்த காதை	காதை	இயற்கூறு	நிலைமண்டில ஆசிரியப்பா
14. ஊர்காண்காதை	,,	,,	,,
15. அடைக்கலக்காதை	,,	,,	,,
16. கொலைக்களக்காதை	,,	,,	,,

17. ஆய்ச்சியர் குரவை	கயலெழுதிய... தோன்றுமன்	,,	குறளடி வஞ்சிப்பா
	குடப்பால்... ஒன்றுண்டு	இசைக்கூறு	குறள்வெண்செந்துறை
	கருப்பம்	நாடகக்கூறு	
	கொளுவும் எடுத்துக் காட்டும்	இயற்கூறு	யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகு
	மாயவன் பாட்டு எடுப்பாள்...	,,	,,
	பாட்டு	இசைக்கூறு	ஆசிரியத்தாழிசை
	தொழுநைத்...	,,	குறள்வெண்பா (இடைச் செருகல்)
	இறுமென்... என்கோயாம்	,,	கலிவிருத்தம்
	ஒன்றன்பகுதி	,,	,,
	ஆடுநர்ப்புகழ்தல்	இயற்கூறு	தரவுகொச்சகக் கலிப்பா
	உள்வரி வாழ்த்து	இசைக்கூறு	கலிவிருத்தம்
	முன்னிலைப்பரவல்	,,	,,
	படர்க்கைப்பரவல்	,,	யாப்பினுல்வேறுபட்ட கொச்சக வொருபோகு
	தனிச்சொல்	நாடகக்கூறு	
	அரசவாழ்த்து	இசைக்கூறு	நிலைமண்டில ஆசிரியப்பா

18. துன்பமாலை	ஆங்கு...சொல் லாடுந்தான்	இயற்கூறு	யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகு
	எல்லாவோ... ஒரு குரல்	,,	,,
19. ஊர்சூழ்வரி	காதை	,,	மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா
20. வழக்குரை காதை	,,	,,	உறழ்கலி
21. வஞ்சினமாலை	,,	,,	கலிவெண்பா
22. அழற்படுகாதை	,,	,,	நிலைமண்டில ஆசிரியப்பா
23. கட்டுரை காதை	,,	,,	குறள்மிடைமண்டில யாப்பு
24. குன்றக் குரவை	உரைப்பாட்டுமடை	,,	யாப்பினுல்வேறுபட்ட கொச்சக வொருபோகு
	கொளுச்சொல்	இசைக்கூறு	,,
	சிறைப்புறம்	,,	,,
	பாட்டுமடை	,,	கலிவிருத்தம்
	தெய்வம் பராஅயது	,,	,,
	பாட்டுமடை (அறத்தொடுநிலை)	,,	,,
	பாட்டுமடைI	,,	,,
	பாட்டுமடைII	,,	நிலைமண்டில ஆசிரியப்பா
	தனிச்சொல்	நாடகக்கூறு	
	பாட்டுமடைIII	இசைக்கூறு	பஃறொடை வெண்பா
	பாட்டுடைIV	,,	யாப்பினுல்வேறுபட்டகொச்சக வொருபோகு
	தனிச்சொல்	நாடக்கூறு	

	பாட்டுமடை V	இசைக்கூறு	கலிவிருத்தம்
	பாட்டுமடை VI	இசைக்கூறு	பஃறொடைவெண்பா
	தனிச்சொல்	நாடகக்கூறு	
	அரசவாழ்த்து	இசைக்கூறு	நேரிசை ஆசிரியப்பா
25. காட்சிக்காதை	காதை	இயற்கூறு	நிலைமண்டிலஆசிரியப்பா
26. கால்கோட்டுகாதை	,,	,,	,,
27. நீர்ப்படைக்காதை	,,	,,	,,
28. நடுகற்காதை	,,	,,	,,
29. வாழ்த்துக்காதை	உரைப்பாட்டு மடை	நாடகக்கூறு	
	சொல்	இசைக்கூறு	யாப்பினால் வேறுபட்ட கொச்சக வொருபோகு
	அரற்று	,,	,,
	தேவந்தியைக் காட்டிஅரற்றியது	,,	,,
	செங்குட்டுவன் கூற்று	,,	கலிவிருத்தம்
	கடவுள் நல்லணி காட்டியது	,,	,,

	வஞ்சிமகளிர் சொல்	இசைக்கூறு	துறை, தாழிசை, விருத்தம்
	ஆயத்தார்சொல்	,,	நேரிசைவெண்பா
	வாழ்த்து	,,	தரவின்றித் தாழிசைபெற்ற கொச்சகவொருபோகு
	அம்மானைவரி	,,	யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகு
	கந்துகவரி	,,	அறுசீர் ஆசிரிய விருத்தம்
	ஊசல்வரி	,,	யாப்பினுல் வேறுபட்ட கொச்சக வொருபோகு
	வள்ளைப்பாட்டு	,,	,,
	தனிச்சொல்	நாடகக்கூறு	
	அரசவாழ்த்து	இசைக்கூறு	இன்னிசை வெண்பா
30. வரந்தருகாதை	காதை	இயற்கூறு	நிலைமண்டில ஆசிரியப்பா

பிற்சேர்க்கை-5

சிலப்பதிகார யாப்பு மேற்கோள்

சிலப்பதிகாரப் பாவகைகள் எந்த இலக்கண நூல்களில் எந்த உரையாசிரியரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது என்பதைத் தொகுத்துணர்த்துவது இப்பட்டியல்.

எண்	பாடல்	காதையும் பகுதியும்	மேற்கோள் காட்டப்பெற்ற நூல்	மேற்கோள் காட்டிய உரையாசிரியர்
1.	அ) நிணங்கொள்	கானல்வரி-கானல்வரி	1. தொல். செய். 64 2. தொல். செய்.155	பேராசிரியர், நச்சினார்க்கினியர்
2.	அ) ஆனைத்தோல் ஆ) வரிவளைக்கை இ) சங்கமம்	வேட்டுவவரி முன்னிலைப்பரவல்	தொல்,செய்.149	நச்சினார்க்கினியர்
3.	அ) இளமாவெயிற்றி ஆ) முருந்தேரினநகை இ) கயமலர்	வேட்டுவவரி- கொடை	தொல்.செய். 149	நச்சினார்க்கினியர்
4.	அ) சுடரொடு ஆ) அணிமுடி இ) துடியொடு	வேட்டுவவரி-அவிப்பலி	தொல்.செய்.149	நச்சினார்க்கினியர்

5.	அ) கயலெழுதிய	ஆய்ச்சியர்குரவை-முற்கூறு		தொல்.செய்.165	இளம்பூரணர்
6.	அ) கன்றுகுணிலா ஆ) பாம்புகயிருக் இ) கொல்லையஞ் சாரல்	ஆய்ச்சியர்குரவை-பாட்டு	1. 2. 3. 4. 5.	தொல்.செய்.174 தொல்.செய்.149 யாப்.விருத்தி 22 யாப்.காரிகை 9 இல.விளக்கம் 735	இளம்பூரணர் பேரா.,நச்சினார்க்கினியர் உரையாசிரியர் ,, ,,
7.	அ) கோவாமலை ஆ) பொன்னிமய இ) முந்நீரின்	ஆய்ச்சியர்குரவை-உள்வரி வாழ்த்து		தொல்.செய்.149	நச்சினார்க்கினியர்
8.	அ) மூவுலகும் ஆ) பெரியவனை இ) மடந்தாழும்	ஆய்ச்சியர்குரவை-படர்க்கைப் பரவல்		தொல்.செய்.149	நச்சினார்க்கினியர்
9.	அரசுறை	துன்பமாலை-அடி 24-33		தொல்.செய்.149	நச்சினார்க்கினியர்
10.	வாய்வதின்	துன்பமாலை-அடி 47-53		தொல்.செய்.149	நச்சினார்க்கினியர்
11.	என்றிவைசொல்லி	ஊர்சூழ்வரி-அடி 60-75		தொல்.செய்.159	நச்சினார்க்கினியர்
12.	சீர்கெழு செந்திலும்	குன்றக்குரவை-தெய்வம் பராஅயது (8-10) பாட்டுமடை (11-14) பாட்டுமடை (15-18) பாட்டுமடை (19)		தொல்.செய்.149	நச்சினார்க்கினியர்

பிற்சேர்க்கை-6

சிலப்பதிகாரம்

முத்தமிழ் யாப்பு வடிவப் பதிப்பு

சிலப்பதிகாரப் பகுதிகளில் நிலைமண்டில ஆசிரியப் பாவால் அமைந்தவை பதினெட்டு. கனாத்திறமுரைத்த காதை, வஞ்சினமாலை ஆகிய இருபகுதிகளும் கலி வெண்பவால் ஆயவை. குறள் வெண்பாவும் நிலை மண்டில ஆசிரியப்பாவும் இணைந்த குறள்மிடை மண்டில யாப்பு வகையால் இயன்றது கட்டுரை காதை. இப் பகுதிகள் இருபத்தொன்றும் நீங்கலாக எஞ்சிய ஒன்பது பகுதிகளின் யாப்பு வடிவங்களே இவண் பதிக்கப் பெறுவன. பாவின் உள்ளுறுப்புக்களும் இயல், இசை, நாடகக் கூறுகளும் இப்பகுதியின் கண் தனியே விதந்து சுட்டப்பட்டுள.

யான் ஆய்ந்து முடிவுகண்ட கீழ்வரும் ஒன்பது பகுதிகளின் யாப்பு வடிவங்கள் இப் பிற்சேர்க்கையின் கண் தரப்பட்டுள.

பதிக்கப்பெறும் பகுதிகள்

1. மங்கல வாழ்த்துப் பாடல்
2. கானல் வரி
3. வேட்டுவ வரி
4. ஆய்ச்சியர் குரவை
5. துன்ப மாலை
6. ஊர்சூழ் வரி
7. வழக்குரை காதை
8. குன்றக் குரவை
9. வாழ்த்துக் காதை

1. மங்கல வாழ்த்துப் பாடல்

நூல் வாழ்த்து

வெண்டாழிசை

திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்

மாமழை போற்றுது மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்தும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்

நான்கு தாழிசைகளும் ஒருபொருள்மேல் அடுக்கி வந்தன

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

ஆங்கு,

இது தனிச்சொல்

பொதியி லாயினு மிமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
ஒடுக்கங் கூறா ருயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே

இது தரவு

அதனால்,

இது தனிச்சொல்

நாகநீ ணகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்
மாகவா னிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னா ளீராறுண் டகவையாள்

இது தாழிசை

அவளுந்தான்,

இது தனிச்சொல்

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாண்மன்னோ

இது தாழிசை

இரு தாழிசைகளும் ஒருபொருள்மேல் அடுக்கி வந்தன.

ஆங்கு,

இது தனிச்சொல்

பெருநில முழுதாளும் பெருமகன் றலைவைத்த
ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
இருநிதிக் கிழவன்மக னீரெட்டாண் டகவையான்

இது தாழிசை

அவனுந்தான்,

இது தனிச்சொல்

மண்டேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென் பான்மன்னோ

இது தாழிசை

இரு தாழிசைகளும் ஒருபொருள்மேல் அடுக்கி வந்தன.

அவரை,

இது தனிச்சொல்

இருபெருங் குரவரு மொருபெரு நாளான்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி
யானை யெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்

இது தாழிசை

தனித்து ஒருபொருள்மேல் வந்தது

அவ்வழி

இது தனிச் சொல்

முரசி யம்பின முருட திர்ந்தன
முறையெ ழுந்தன பணிலம் வெண்குடை
அரசெ ழுந்ததொர் படியெ ழுந்தன
வகலுண் மங்கல அணியெ ழுந்தது

இது நாற்சீர் நான்கடியால் வந்த அராகம்

மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை
விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டின ரொசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
ஏந்திள முலையின ரிடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்ந்த மூரலர்
போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியன்னார்
காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
அங்க ணுலகி னருந்ததி யன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினார் தங்கிய
இப்பா லிமயத் திருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா வெப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி யாழி யுருட்டுவோ னெனவே

இது அகவற் சுரிதகம்

ஆறடித்தரவும் தாழிசைகளும் அராகவுறுப்பும், ஆசிரியச் சுரிதகமும் இடையிடையே தனிச்சொற்களும் பெற்று, கலிக்கோதப் பட்டவுறுப்புக்களோடு மயங்கி வந்த இயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

2. கானல்வரி

கட்டுரை

(நாடகக்கூறு)

சித்திரப் படத்துட்புக்குச் செழுங் கோட்டின் மலர்புனைந்து, மைத் தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்திப் பத்தருங் கோடு மாணியு நரம்புமென் றித்திறத்துக் குற்றநீங்கிய யாழ்கையிற் றொழுதுவாங்கிப் பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ் நண்ணிய குறும் போக் கென்று நாட்டிய எண்வகையா லிசையெழீஇப் பண்வகையாற் பரிவு தீர்ந்து, மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தள் மெல் விரல்கள் பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், சீருட னுருட்டல், தெருட்டல், அள்ளல், ஏருடைப் பட்டடையென விசையோர் வகுத்த எட்டு வகையி னிசைக்கர ணத்துப் பட்டவகை தன் செவியினோர்த்து ஏவலன்பின் பாணியாதெனக் கோவலன்கை யாழ் நீட்ட அவனும் காவிரியை நோக்கினவுங் கடற்கானல் வரிப்பாணியும் மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்,

ஆற்றுவரி

அறுசீர் ஆசிரிய விருத்தம் - இசைப்பாக்கள்

திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி

மன்னு மாலை வெண்குடையான் வளையாச் செங்கோ லதுவோச்சி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி

கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி

உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த வெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

சார்த்துவரி

அறுசீர் ஆசிரிய விருத்தம்-இசைப்பாக்கள்

கரியமலர் நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங் காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தா றறனிலரென் றேழையம் யாங்கறி கோமைய
விரிகதிர் வெண்மதியு மீன்கணமு மாமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையு முத்துங்கண் டாம்பல் பொதியவிழ்க்கும் புகாரே யெம்மூர்

காதல ராகிக் கழிக்கானற் கையுறைகொண் டெம்பின் வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதை யாங்கறி கோமைய
மாதரார் கண்ணு மதிநிழனீ ரிணைகொண்டு மலர்ந்த நீலப்
போது மறியாது வண்டூச லாடும் புகாரே யெம்மூர்

மோது முதுதிரையான் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணன்மேல் வண்ட லுழுத ழிப்ப மாழ்கி யைய
கோதை பரிந்தசைய மெல்விரலாற் கொண்டோச்சுங் குவளை மாலைப்
போது சிறங்கணிப்ப போவார்கண் போகாப் புகாரே யெம்மூர்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

முகமில்வரி

ஆசிரியத்துறை-இசைப்பாக்கள்

துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண் டா து
போர்க்குங் கானல்
நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே தீர்க்கும் போலும்

கானல்வரி

ஆசிரியத்துறை - இசைப்பாக்கள்

நிணங்கொள் புலாலுணங் கனின்று புள்ளோப்புத றலைக்கீ டாகக்
கணங்கொள் வண்டார்த் துலாங்கன்னி நறுஞாழல் கையி லேந்தி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் றுண்டோர்
அணங்குறையு மென்ப தறியே னறிவேனே லடையேன் மன்னோ

வலைவாழ்நர் சேரி வலையுணங்கு முன்றின் மலர்கை யேந்தி
விலைமீ னுணங்கற் பொருட்டாக வேண்டுருவங் கொண்டு வேறோர்
கொலைவே னெடுங்கட் கொடுங்கூற்றம் வாழ்வ
தலைநீர்த்தண் கான லறியே னறிவேனே லடையேன் மன்னோ

இவை ஒரு பொருள்மீது அடுக்கி வந்தன.

நிலைவரி

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே

எறிவளைக ளார்ப்ப விருமருங்கு மோடும்
கறைகெழுவேற் கண்ணோ கடுங்கூற்றங் காணீர்
கடுங்கூற்றங் காணீர் கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயன் மகளா யதுவே

புலவுமீன் வெள்ளுணங்கற் புள்ளோப்பிக் கண்டார்க்
கலவுநோய் செய்யு மணங்கிதுவோ காணீர்
அணங்கிதுவோ காணீ ரடும்பமர்தண் கானற்
பிணங்குநே ரைம்பாலோர் பெண்கொண் டதுவே

இவை ஒருபொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

முரிவரி

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

பொழிறரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே

திரைவிரி தருதுறையே திருமணல் விரிபிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகய லிணைவிழியே யெனையிடர் செய்தவையே

வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவ டிரியிடமே
முளைவள ரிளநகையே முழுமதி புரைமுகமே
இளையவ ளிணைமுலையே யெனையிடர் செய்தவையே

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

திணை நிலைவரி

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

கடல்புக் குயிர்கொன்று வாழ்வர் நின்ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் னீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக் கிடுகு மிடையிழவல் கண்டாய்

கொடுங்கண் வலையா லுயிர்கொல்வா னுந்தை
நெடுங்கண் வலையா லுயிர்கொல்வை மன்னீயும்
வடங்கொண் முலையான் மழைமின் னுப்போல
நுடங்கி யுகுமென் னுசுப்பிழவல் கண்டாய்

ஒடுந் திமில்கொண் டுயிர்கொல்வர் நின்னையர்
கோடும் புருவத் துயிர்கொல்வை மன்னீயும்
பீடும் பிறரெவ்வம் பாராய் முலைசுமந்து
வாடுஞ் சிறுமென் மருங்கிழவல் கண்டாய்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய

புன்னை நீழற் புலவுத் திரைவாய்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
அன்ன நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்

கள்வாய் நீலங் கையி னேந்திப்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வே லல்ல வெய்ய வெய்ய

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன

கலிவிருத்தம்-இசைப்பா

சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்
சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்
ஊர்திரைநீர் வேலி யுழக்கித் திரிவாள்பின்
சேரன் மடவன்னஞ் சேர னடையொவ்வாய்

இது ஒரு பொருள்மீது தனித்து வந்தது

கட்டுரை

(நாடகக்கூறு)

ஆங்கு,

இது தனிச்சொல் (நாடகக்கூறு)

கானல்வரிப் பாடல் கேட்ட மானெடுங்கண் மாதவியும் மன்னுமோர் குறிப்புண்டு, இவன் தன்னிலை மயங்கினன் எனக் கலவியான் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ்வாங்கித் தானுமோர் குறிப் பினள்போல் கானல்வரிப் பாடற்பாணி நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக் கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தாற் பாடத் தொடங்குமன்.

ஆற்றுவரி

அறுசீர் ஆசிரிய விருத்தம்-இசைப்பாக்கள்

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த வெல்லா நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழி காவேரி

பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை யருகசைய நடந்த வெல்லா நின்கணவன்
நாம வேலின் றிறங்கண்டே னறிந்தேன் வாழி காவேரி

வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி
ஊழி யுய்க்கும் பேருதவி யொழியா தொழுக லுயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோ னருளே வாழி காவேரி

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

சார்த்துவரி

அறுசீர் ஆசிரிய விருத்தம்-இசைப்பாக்கள்

தீங்கதிர் வாண்முகத்தாள் செவ்வாய் மணிமுறுவ லொவ்வா வேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலு மான்மகன் போல்வரு தீரைய
வீங்கோதந் தந்து விளங்கொளிய வெண்முத்தம் விரைசூழ் கானற்
பூங்கோதை கொண்டு விலைஞர்போன் மீளும் புகாரே யெம்மூர்

மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து மடவார் செங்கை
இறைவளைக டூற்றுவதை யேழைய மெங்ஙனம் யாங்கறி கோமைய
நிறைமதியு மீனுமென வன்னநீள் புன்னை யரும்பிப் பூத்த
பொறைமலிபூங் கொம்பேற வண்டாம்ப லூதும் புகாரே யெம்மூர்

உண்டாரை வென்னரு வூணொளியாப் பாக்கத்து ளுறையொன் றின்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி யென்பதி யாங்கறி கோமைய
வண்டறி ரையழிப்பக் கையான் மணன்முகந்து மதிமே னீண்ட
புண்டோய்வே னீர்மல்க மாதர் கடறூர்க்கும் புகாரே யெம்மூர்

இவை ஒருபொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

திணை நிலைவரி

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

புணர்துணையோ டாடும் பொறியலவ னேக்கி
இணர்ததையும் பூங்கான லென்னையு நோக்கி
உணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரி யைம்பாலோய் வண்ண முணரேனல்

இது ஒரு பொருள்மீது தனித்து வந்தது.

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மெ னிணர வடும்புகா ளன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்

புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்ப முழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தான் யெய்துங் கனவிலுள்
வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ

இவை ஒரு பொருள்மீது இரண்டடுக்கி வந்தன.

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

புள்ளியன்மான் றேராழி போன வழியெல்லாம்
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றெம்மோடீங்
குள்ளாரோ டுள்ளா யுணராய்மற் றென்செய்கோ

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுத்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய வூர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
ஈர்ந்தண் டுறையே யிதுதகா தென்னீரே

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய வூர்ந்தாய் (வாழி) கடலோதம்
ஊர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்மற் றெம்மோடு
தீர்ந்தாய்போற் றீர்ந்திலையால் வாழி கடலோதம்

இவை ஒருபொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

மயங்குதிணை நிலைவரி

அறுசீர் ஆசிரிய விருத்தம்-இசைப்பாக்கள்

நன்னித் திலத்தின் பூணணிந்து நலஞ்சார் பவளக் கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறுந் திரையு லாவு கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத்திண் கொடியோ னெய்த புதுப்புண்கள்
என்னைக் காணு வகைமறைத்தா லன்னை காணி னென்செய்கோ

வாரித்தரள நகைசெய்து வன்செம் பவள வாய்மலர்ந்து
சேரிப் பரதர் வலைமுன்றிற் றிரையு லாவு கடற்சேர்ப்ப
மாரிப் பீரத் தலர்வண்ண மடவாள் கொள்ளக் கடவுள்வரைந்
தாரிக் கொடுமை செய்தாரென் றன்னை யறியி னென்செய்கோ

புலவுற் றிரங்கி யதுநீங்கப் பொழிற்றண் டலையிற் புகுந்துதிர்ந்த
கலவைச் செம்மல் மணங்கமழத் திரையு லாவு கடற்சேர்ப்ப
பலவுற் றொருநோய் துணியாத படர்நோய் மடவா டனியுழப்ப
அலவுற் றிரங்கி யறியாநோ யன்னை யறியி னென்செய்கோ

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

இளையிருள் பரந்ததுவே யெற்செய்வான் மறைந்தனனே
களைவரும் புலம்புநீர் கண்பொழீஇ யுகுத்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங்கொல்
வளைநெகிழ வெரிசிந்தி வந்தவிம் மருண்மாலை

கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
எதிர்மலர் புரையுண்க ணெவ்வநீ ருகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் போனார்நாட் டுளதாங்கொல்
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தவிம் மருண்மாலை

பறவைபாட் டடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே
நிறைநிலா நோய்கூர நெடுங்கணீ ருகுத்தனவே
துறுமல ரவிழ்குழலாய் துறந்தார்நாட் டுளதாங்கொல்
மறவையா யென்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

சாயல்வரி

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்த லழித்துப் போனா ரொருவர்
பொய்த லழித்துப் போனா ரவர்தம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர்

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்ரு ரொருவர்
நீறல் கென்றே நின்ரு ரவர்நம்
மானேர் நோக்க மறப்பா ரல்லர்

அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்ன ஞேக்கி நின்ரு ரொருவர்
நென்ன ஞேக்கி நின்ரு ரவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

முகமில்வரி

கலிவிருத்தம்-இசைப்பா

அடையல் குருகே யடையலெங் கானல்
அடையல் குருகே யடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே யடையலெங் கானல்

இது ஒரு பொருள்மீது தனித்து வந்தது,

கட்டுரை

(நாடகக்கூறு)

ஆங்கனம் பாடிய வாயிழை பின்னரும் காந்தன் மெல்விரல் கைக்கிளை சேர் குரல் தீந்தொடைச் செவ்வழிப் பாலையிசை யெழீஇப் பாங்கினிற் பாடியோர் பண்ணுப் பெயர்த்தாள்.

முகமில்வரி

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

நுளையர் விளரி நொடிதருந்தீம் பாலை
இளிகிளையிற் கொள்ள விறுத்தாயான் மாலை
இளிகிளையிற் கொள்ள விறுத்தாய்மன் னீயேற்
கொளைவல்லா யென்னுவி கொள்வாழி மாலை

பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளி னீழல்
இருந்தேங்கி வாழ்வா ருயிர்ப்புறத்தாய் மாலே
உயிர்ப்புறத்தாய் நீயாகி லுள்ளாற்ரு வேந்தன்
எயிற்புறத்து வேந்தனே டென்னுதி மாலே

பையுணேய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருண்மாலே
மாலேநீ யாயின் மணந்தா ரவராயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலே

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

தெய்வ வணக்கம்

கலிவிருத்தம்-இசைப்பா

தீத்துழைஇ வந்தவிச் செல்லன் மருண்மாலே
தூக்காது துணிந்தவித் துயரெஞ்சு கிளவியாற்
பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்

இது ஒரு பொருள்மீது தனித்து வந்தது

எனக்கேட்டு,

இது தனிச்சொல் (நாடகக்கூறு)

கட்டுரை

(நாடகக் கூறு)

கானல்வரியான்பாடத் தானென்றின்மேன் மனம் வைத்து மாயப் பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினுள் என யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினே வந்து உருத்ததாகலின் உவவுற்ற திங்கள்முகத்தாளேக் கவவுக்கைஞெகிழ்ந்தனனுய்ப் பொழுதீங்குக் கழிந்தது ஆகலின் எழுதும் என்று உடன்எழாது ஏவலாளருடன் சூழ்தரக் கோவலன் தான் போனபின்னர்த் தாதவிழ் மலர்ச்

சோலே ஓதையாயத் தொலியவித்துக் கையற்ற நெஞ்சினளாய் வையத்தினுள்புக்குக் காதலனுடன் அன்றியே மாதவிதன் மனே புக்காள்.

ஆங்கு,

இது தனிசொல் (நாடகக்கூறு)

அரச வாழ்த்து

நேரிசை ஆசிரியம்-இசைப்பா

மாயிரு ஞாலத் தரசு தலேவணக்கும்
சூழி யானேச் சுடர்வாட் செம்பியன்
மாலே வெண்குடை கவிப்ப
ஆழி மால்வரை யகவையா னெனவே,

3. வேட்டுவ வரி

நேரிசை ஆசிரியப்பா

உரைப்பாட்டுமடை

கடுங்கதிர் திருகலி னடுங்கஞ ரெய்தி
ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்தாங்
கையை கோட்டத் தெய்யா வொருசிறை
வருந்துநோய் தணிய விருந்தன ருப்பால்
வழங்குவிற் றடக்கை மறக்குடித் தாயத்துப்
பழங்கட னுற்ற முழங்குவாய்ச் சாலினி
தெய்ய முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்
கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப
இடுமுள் வேலி யெயினர்கூட் டுண்ணும்
நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடிக்
கல்லென் பேரூர்க் கணநிரை சிறந்தன
வல்வி லெயினர் மன்றுபாழ் பட்டன
மறக்குடி தாயத்து வழிவளஞ் சுரவா
தறக்குடி போலவிந் தடங்கின ரெயினரும்
கலையமர் செல்வி கடனுணி னல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்
மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயிற்
கட்டுண் மாக்கள் கடந்தரு மெனவாங்
கிட்டுத் தலையெண்ணு மெயின ரல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்
சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்
குறுநெறிக் கூந்த னெடுமுடி கட்டி
இளைசூழ் படப்பை யிழுக்கிய வேனத்து
வளைவெண் கோடு பறித்து மற்றது
முளைவெண் டிங்க ளென்னச் சாத்தி
மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற
மாலை வெண்பற் றாலிநிரை பூட்டி
வரியும் புள்ளியு மயங்கு வான்புறத்

துரிவை மேகலை யுடீஇப் பரிவொடு
கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்
திரிதரு கோட்டுக் கலைமே லேற்றிப்
பாவையுங் கிளியுந் தூவி யஞ்சிறைக்
கானக் கோழியு நீனிற மஞ்ஞையும்
பந்துங் கழங்குந் தந்தனர் பரசி
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையு மேவிய விரையும்
ஏவ லெயிற்றிய ரேந்தினர் பின்வர
ஆறெறி பறையுஞ் சூறைச் சின்னமும்
கோடுங் குழலும் பீடுகெழு மணியும்
கணங்கொண்டு துவைப்ப வணங்கு முன்னிறீஇ
விலைப்பலி யுண்ணு மலர்பலி பீடிகைக்
கலைப்பரி யூர்தியைக் கைதொழு தேத்தி
இணைமலர்ச் சீறடி யிணைந்தனள் வருந்திக்
கணவனோ டிருந்த மணமலி கூந்தலை

இவளோ

இது உரை-சொல்

கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்
தொருமா மணியா யுலகிற் கோங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப்

இது பாட்டு

பேதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டியென்
றரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூர லரும்பின ணிற்ப
மதியின் வெண்டோடு சூடுஞ் சென்னி
நுதல்கிழித்து விழித்த விமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளா ணகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்
தரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி

வளையுடைக் கையிற் சூல மேந்தி
கரியி னுரிவை போர்த்தணங் காகிய
வரியி னுரிவை மேகலை யாட்டி
சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
இரண்டுவே றுருவிற் றிரண்டதோ ளவுணன்
தலைமிசை நின்ற தையல் பலர்தொழும்
அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாட் டடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை யருங்கலப் பாவை
தமர்தொழ வந்த குமரிக் கோலத்
தமரிளங் குமரியு மருளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே

இது உரையும் பாட்டும் இடையே விரவி உரைப்பாட்டுமடையாய் வந்த நேரிசை ஆசிரியப்பா

ப:ஃருழிசைக் கொச்சகக் கலிப்பா

முன்றிற் சிறப்பு

நாக நாறு நரந்தை நிரந்தன
ஆவு மாரமு மோங்கின வெங்கணும்
சேவு மாவுஞ் செறிந்தன கண்ணுதல்
பாக மாளுடை யாள்பலி முன்றிலே

செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்
கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன
பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கினந்
திங்கள் வாழ்சடை யாடிரு முன்றிலே

மரவம் பாதிரி புன்னை மணங்கமழ்
குரவங் கோங்க மலர்ந்தன கொம்பர்மேல்
அரவ வண்டின மார்த்துட னியாழ்செயும்
திருவ மாற்கிளை யாடிரு முன்றிலே

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள்

வள்ளிக்கூத்து

கொற்றவை கொண்ட வணிகொண்டு நின்றவிப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ
பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
விற்றொழில் வேடர் குலனே குலனும்

ஐயை திருவி னணிகொண்டு நின்றவிப்
பையர வல்கு றவமென்னை கொல்லோ
பையர வல்குல் பிறந்த குடிப்பிறந்த
எய்வி லெயினர் குலனே குலனும்

பாய்கலைப் பாவை யணிகொண்டு நின்றவிவ்
வாய்தொடி நல்லா டவமென்னை கொல்லோ
ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வேய்வி லெயினர் குலனே குலனும்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள்

முன்னிலைப் பரவல்

ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமே னின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமே னின்றாயால்
அரியரன்பூ மேலோ னகமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்க னரிமான் சினவிடைமே னின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கிவந்த தாழிசைகள்

ஆங்கு,

இது தனிச்சொல்

வென்றிக் கூத்து

கொன்றையுந் துளவமுங் குழுமத் தொடுத்த
துன்று மலர்ப்பிணைய லேண்மே லிட்டாங்
கசுரர் வாட வமரர்க் காடிய
குமரிக் கோலத்துக் கூத்துள் படுமே

இது அகவற் சுரிதகம்

இது ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த தாழிசைகளும் தனிச் சொல்லும் அகவற் சுரிதகமும் பெற்று முடிந்த பஃருழிசைக் கொச்சகக் கலிப்பா.

கூத்துள் படுதல்

அறுசீர் ஆசிரிய விருத்தம்-இசைப்பாக்கள்

ஆய்பொன் னரிச்சிலம்புஞ் சூடகமு மேகலையு மார்ப்ப வார்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை மரக்கால்மேல் வாளமலை யாடும்போலும்
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை மரக்கான்மேல் வாளமலை யாடுமாயிற்
காயா மலர்மேனி யேந்திவானோர் கைபெய்மலர் மாரிகாட் டும்போலும்

வெட்சி

உட்குடைச் சீறு ரொருமகனு னிரைகொள்ள வுற்ற காலை
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டும் போலும்
வெட்சி மலர்புனைய வெள்வா ளுழத்தியும் வேண்டின் வேற்றூர்க்
கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக் காட்டும் போலும்

வெட்சிப்புறநடை

கள்விலை யாட்டி மறுப்பப் பொருமறவன் கைவி லேந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகும் போலும்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகுங் காலைக்
கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையுங் கொடுமரமுன்
செல்லும் போலும்

இவை மூவேறு தலைப்பில் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்தன.

கொடை

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

இளமா வெயிற்றி யிவைகாணின் னையர்
தலைநாளை வேட்டகத்துத் தந்தநல் லானிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்த முன்றி னிறைந்தன

முருந்தே ரிளநகை காணாய்நின் னையர்
கரந்தை யலறக் கவர்ந்த வினநிரைகள்
கள்விலை யாட்டில்நல் வேய்தெரி கானவன்
புள்வாய்ப்புச் சொன்ன கணிமுன்றி னிறைந்தன

கயமல ருண்கண்ணாய் காணாய்நின் னையர்
அயலூ ரலற வெறிந்தநல் லானிரைகள்
நயனின் மொழியி னரைமுது தாடி
எயின ரெயிற்றியர் முன்றி னிறைந்தன

இவை துறைப்பாட்டுமடையாய் ஒருபொருள்மீது மூன்றடுக்கிவந்தன.

அவிப்பலி

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

சுடரொடு திரிதரு முனிவரு மமரரும்
இடர்கெட வருளுநி னிணையடி தொழுதேம்
அடல்வலி யெயினர்நி னடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறறரு விலையே

அணிமுடி யமரர்த மரசொடு பனிதரு
மணியுரு வினைநின மலரடி தொழுதேம்
கணநிரை பெறுவிற லெயினிடு கடனிது
நிணனுகு குருதிகொ ணிகரடு விலையே

துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய
வெடிபட வருபவ ரெயினரக ளரையிருள்
அடுபுலி யனையவர் குமரிநி னடிதொடு
படுகட னிதுவுகு பலிமுக மடையே

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

பலிக்கொடை

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

வம்பலர் பல்வி வழியும் வளம்பட
அம்புடை வல்வி லெயின்கட னுண்குவாய்
சங்கரி யந்தரி நீலி சடாமுடிச்
செங்க ணரவு பிறையுடன் சேர்த்துவாய்

துண்ணென் றுடியொடு துஞ்சூ ரெறிதரு
கண்ணி லெயின ரிடுகட னுண்குவாய்
விண்ணோ ரமுதுண்டுஞ் சாவ வொருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்

பொருள்கொண்டு புண்செயி னல்லதை யார்க்கும்
அருளி லெயின ரிடுகட னுண்குவாய்
மருதி னடந்துநின் மாமன்செய் வஞ்ச
உருளுஞ் சகட முதைத்தருள் செய்குவாய்
இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

அரச வாழ்த்து

நேரிசை ஆசிரியப்பா-இசைப்பா

மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறர்நாட்டுக்
கட்சியுங் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய் யோனே.

4. ஆய்ச்சியர் குரவை

குறளடி வஞ்சிப்பா

கயலெழுதிய விமயநெற்றியின்
அயலெழுதிய புலியும்வில்லும்
நாவலந்தண் பொழின்மன்னர்
ஏவல்கேட்பப் பாரரசாண்ட
மாலைவெண்குடைப் பாண்டியன்கோயிலிற்
காலைமுரசங் கனைகுரலியம்பும்

ஆகலின்

நெய்ம்மு றைநமக் கின்ரு குமென
ஐயைதன் மகளைக் கூஉய்க்
கடைகயிறு மத்துங்கொண்
டிடைமு துமகள் வந்து தோன்றுமன்

குறள்வெண் செந்துறை

குடப்பா லுறையா குவியிமி லேற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு

உறிநறு வெண்ணெ யுருகா வுருகும்
மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு

நான்முலை யாய நடுங்குபு நின்றிரங்கும்
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு

கருப்பம்

(உரைநடை-நாடகக்கூறு)

குடத்துப்பால் உறையாமையும் குவியிமிலேற்றின் மடக்கண்ணீர் சோர்தலும் உறியில் வெண்ணெ யுருகாமையும் மறிமுடங்கி

ஆடாமையும் மான்மணி நிலத்தற்று வீழ்தலும் வருவதோர் துன்பம் உண்டென மகளை நோக்கி மனமயங்காதே மண்ணின் மாதர்க் கணியாகிய கண்ணகியும் தான்காண ஆயர்பாடியில் எரு மன்றத்து மாயவனுடன் தம்முனுடிய வாலசரிதை நாடகங்களில் வேனெடுங்கண் பிஞ்ஞையோடாடிய குரவையாடுதும் யாம் என்ருள் கறவை கன்று துயர் நீங்குக எனவே.

கொளு
யாப்பினுல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு

காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள்

சுட்டு

இது உரை (சொல்)

நெற்றிச் செகிலே யடர்த்தாற் குரியவிப்
பொற்றெடி மாதரா டோள்

மல்லன் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
முல்லையம் பூங்குழ ருன்

நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிப்
பெண்கொடி மாதர்தன் ருேள்

பொற்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகுமிந்
நற்கொடி மென்முலே தான்

வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக்
கொன்றையம் பூங்குழ லாள்

தூநிற வெள்ளை யடர்த்தாற் குரியளிப்
பூவைப் புதுமல ராள்

இது பாட்டு

எடுத்துக்காட்டு

ஆங்கு

இது தனிச்சொல்

தொழுவிடை யேறு குறித்து வளர்த்தார்
எழுவரிளங் கோதையார்
என்றுதன் மகளை நோக்கித்
தொன்றுபடு முறையா னிறுத்தி
இடைமுது மகளிவர்க்குப்
படைத்துக்கோட் பெயரிடுவாள்
குடமுத லிடமுறை யாக்குர றுத்தம்
கைக்கிளை யுழையினி விளரி தாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே

இது அகவற்சுரிதகம்

இது உரையும் பாட்டும் இடையே விரவி உரைப்பாட்டுமடையாய் வந்த யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு.

யாப்பினுல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு

மாயவ னென்றுள் குரலை விறல்வெள்ளை
ஆயவ ளென்ரு ளினிதன்னை-யாய்மகள்
பின்னையா மென்ருளோர் துத்தத்தை மற்றையார்
முன்னையா மென்ருண் முறை.

இது கொச்சகம்

மாயவன் சீருளார் பிஞ்ஞையுந் தாரமும்
வால்வெள்ளை சீரா ருழையும் விளரியும்
கைக்கிளை பிஞ்ஞை யிடத்தாள் வலத்துளாள்
முத்தைக்கு நல்விளரி தான்.

இது கொச்சகம்

அவருள்

இது தனிச்சொல்

வண்டுழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவைதா னுள்படுவாள்-கொண்டசீர்
வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப்
பெய்வளைக் கையாணம் பிள்ளைதா னுமென்றே
ஐயென்ரு ளாயர் மகள்

இது கொச்சகம்

அவர்தாம்

இது தனிச்சொல்

கூத்துள் படுதல்

செந்நிலை மண்டிலத்தாற் கற்கடகக் கைகோஒத்
தந்நிலையே யாடற்சீ ராய்ந்துளார்-முன்னைக்
குரற்கொடி தன்கிளையை நோக்கிப் பரப்புற்ற
கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தாற் பாடுதும்
முல்லைத்தீம் பாணியென் றாள்

இது கொச்சகம்

எனக்

இது தனிச்சொல்

குரன்மந்த மாக விளிசம னாக
வரன்முறையே துத்தம் வலியா-உரனிலா
மந்தம் விளரி பிடிப்பா ளவணட்பின்
பின்றையைப் பாட்டெடுப் பாள்

இது வெள்ளைச் சுரிதகம்

பாட்டு

ஆசிரியத் தாழிசை-இசைப்பாக்கள்

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ

குறள்வெண்பா

தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை அணிநிறம் பாடுகேம்யாம்)
இது இடைச்செருகல்-அரும்பதவுரைகாரர் குறிப்பு

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

இறுமென் சாய னுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்
அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கோயாம்

வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம்
நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்

ஐயல் கலையும் வளையு மிழந்தே
கையி லொளித்தாள் முகமென் கோயாம்
கையி லொளித்தாள் முகங்கண் டழுங்கி
மைய லுழந்தான் வடிவென் கோயாம்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

ஒன்றன்பகுதி

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

கதிர்திகிரி யான்மறைத்த கடல்வண்ண னிடத்துளாள்
மதிபுரையு நறுமேனித் தம்முனோன் வலத்துளான்
பொதியவிழ் மலர்க்கூந்தற் பிஞ்ஞைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனார் முந்தைமுறை நரம்புளர்வார்

மயிலெருத் துறழ்மேனி மாயவன் வலத்துளாள்
பயிலிதழ் மலர்மேனித் தம்முனோ னிடத்துளாள்
கயிலெருத்தங் கோட்டியநம் பின்னைசீர் புறங்காப்பார்
குயிலுவரு ணாரதனார் கொளைபுணர்சீர் நரம்புளர்வார்

இவை ஒருபொருள்மீது இரண்டடுக்கி வந்தன.

ஆநிரைப் புகழ்தல்

தரவுகொச்சகக் கலிப்பா-இசைப்பா

மாயவன்றம் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
ஆய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தந்
தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே

இது தரவு

எல்லாநாம்

இது தனிச்சொல்

புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
உள்வரிப் பாணியொன் றுற்று

இது வெள்ளைச் சுரிதகம்

உள்வரி வாழ்த்து

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

கோவா மலையாரங் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரந் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்

முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிரே ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்

இவை ஒரு பொருண்மீது மூன்றடுக்கி வந்தன.

முன்னிலைப் பரவல்

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே

அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினா னுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே

திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

படர்க்கைப் பரவல்

யாப்பினால் வேறுபட்ட கொச்சகவொருபோகு-இசைப்பாக்கள்

மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பா லாற்றிசையும் போற்றப்

படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணவென்னு நாவென்ன நாவே

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

என்றியாம்

இது தனிச்சொல் (நாடகக்கூறு)

அரச வாழ்த்து

நிலைமண்டில ஆசிரியப்பா-இசைப்பா

கோத்த குரவையு ளேத்திய தெய்வநம்
ஆத்தலைப் பட்ட துயர்தீர்க்க வேந்தர்
மருள வைகல் வைகன்மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்
திடிப்படை வானவன் முடித்தலை யுடைத்த
தொடித்தோட் டென்னவன் கடிப்பிகு முரசே.

5. துன்பமாலை

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு

ஆங்கு

இது தனிச்சொல்

ஆயர் முதுமக ளாடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினள் மேவிக்
குரவை முடிவிலோ ரூரரவங் கேட்டு
விரைவொடு வந்தா ளுளள்

இது கொச்சகம்

அவடான்

இது தனிச்சொல்

சொல்லாடாள் சொல்லாடா நின்ருளந் நங்கைக்குச்
சொல்லாடுஞ் சொல்லாடுந் தான்

இது வெள்ளைச் சுரிதகம்

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு

எல்லாவோ

இது தனிச்சொல்

காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சன்றே
ஊதுலை தோற்க வுயிர்க்குமென் னெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ

நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்
அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சன்றே
அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சாயின்
மன்பதைச் சொன்ன தெவன்வாழி யோதோழீ

தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ வுண்டு மயங்குமென் னெஞ்சாயின்
எஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள்

சொன்னது
இது தனிச்சொல்

அரைசுறை கோயி லணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனா மென்றே
கரையாமல் வாங்கிய கள்வனா மென்றே
குரைகழன் மாக்கள் கொலைகுறித் தனரே

இது நாற்சீர் நான்கடியால் வந்த கொச்சகம்

எனக்கேட்டு
இது தனிச்சொல்

பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் கேள்வனை
எங்கணாஅ வென்னா வினைந்தேங்கி மாழ்குவாள்

இது நாற்சீர் நான்கடியால் வந்த கொச்சகம்

இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை யலர்தூற்ற மன்னவன் றவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யா னவலங்கொண் டழிவலோ

நறைமலி வியன்மார்பி னன்பனை யிழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோன் மன்னவன் றவறிழைப்ப
அறனெனும் மடவோயா னவலங்கொண் டழிவலோ

தம்முறு பெருங்கணவன் றழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போல்
செம்மையி னிகந்தகோற் றென்னவன் றவறிழைப்ப
இம்மையு மிசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள்

காணிகா

இது தனிச்சொல்

வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளி ரெல்லீரும் கேட்டீமின்
ஆய மடமகளி ரெல்லீருங் கேட்டைக்க
பாய்திரை வேலிப் படுபொரு ணீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ வென்கணவன்
கள்வனோ வல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்

இது நாற்சீர் ஏழடியால் வந்த கொச்சகம்

௬. ஊர்சூழ் வரி

அயன் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

என்றனன் வெய்யோ னிலங்கீர் வளைத்தோளி
நின்றில ளின்ற சிலம்பொன்று கையேந்தி
முறையி லரசன்ற னூரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்கா ளீதொன்று

பட்டேன் படாத துயரம் படுகாலை
உற்றே னுறாத துறுவனே யீதொன்று

கள்வனோ வல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே யீதொன்று

மாதர்த் தகைய மடவார்கள் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே யீதொன்று

காதற் கணவனைக் கண்டா லவன்வாயில்
தீதறு நல்லுரை கேட்பனே யீதொன்று

தீதறு நல்லுரை கேளா தொழிவேனேல்
நோதக்க செய்தாளென் றெள்ள லிதுவொன்று

இவை ஒரு பொருள்மீது அடுக்கி வந்த தாழிசைகள்

என்று

இது தனிச்செல்

அல்லலுற் றாற்றா தழுவாளைக் கண்டேங்கி
மல்லன் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்

மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்
தென்னவன் கொற்றஞ் சிதைந்த திதுவென்கொல்
மண்குளிரச் செய்யு மறவே னெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல்

செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல்
ஐயரி யுண்க ணழுதேங்கி யரற்றுவாள்
தெய்வமுற் றுள்போலுந் தகைய ளிதுவென்கொல்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள்

என்பன சொல்லி யினைந்தேங்கி யாற்றவும்
வன்பழி தூற்றுங் குடியதே மாமதுரைக்
கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான்காணுன்

இது தாழிசை.

மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற்
செல்லென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
ஒல்லென் றொலிபடைத்த தூர்

இது வெள்ளைச் சுரிதகம்

வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டா ளவன்றன்னைக் காணுக் கடுந்துயரம்

இது தாழிசை

என்னுறு துயர்கண்டு மிடருறு மிவளென்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர்செய்த மறவினை யறியாதேற்
கென்னுறு வினைகாணு விதுவென வுரையாரோ

யாருமின் மருண்மாலை யிடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பந் தரைமூழ்கிக் கிடப்பதோ
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் றவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணு விதுவென வுரையாரோ

கண்பொழி புனல்சோருங் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியராய்ப் பொடியாடிக் கிடப்பதோ
மன்பதை பழிதூற்ற மன்னவன் றவறிழைப்ப
உண்பதோர் வினைகாணு விதுவென வுரையாரோ

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள்

பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுந ருறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்

சான்றேரு முண்டுகொல் சான்றேரு முண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉம்
சான்றேரு முண்டுகொல் சான்றேரு முண்டுகொல்

தெய்வமு முண்டுகொ றெய்வமு முண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள்

என்றிவை சொல்லி யழுவாள் கணவன்றன்
பொன்றுஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
நின்று ளெழுந்து நிறைமதி வாண்முகம்
கன்றிய தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற
அழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையா டன்கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்றப்
பழுதொழிந் தெழுந்திருந்தான் பல்லமார் குழாத்துளான்
எழுதெழின் மலருண்க ணிருந்தைக்க வெனப்போனன்

இது எட்டடியால் வந்த தரவு

மாயங்கொன் மற்றென்கொன் மருட்டியதோர் தெய்வங்கொல்
போயெங்கு நாடுகேன் பொருளுரையோ விதுவன்று
காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் றனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்றாள்

இது தாழிசை

என்று ளெழுந்தா ளிடருற்ற தீக்கனு
நின்று ணினைந்தா ணெடுங்கயற்க ணீர்சோர
நின்று ணினைந்தா ணெடுங்கயற்க ணீர்துடையாச்
சென்று ளரசன் செழுங்கோயில் வாயின்முன்

இது அகவற்சுரிதகம்

தரவும், தாழிசைகளும் அகவற்சுரிதகமும் இடையிடையே தனிச் சொற்களும் பெற்று வேற்றடி விரவப் பெற்று வந்த அயல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

7. வழக்குரை காதை

உறழ்கலி

ஆங்கு

இது தனிச்சொல்

குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்
கடைமணி யின்குரல் காணபென்கா ணெல்லா

திசையிரு நான்கு மதிர்ந்திடு மன்றிக்
கதிரை யிருள்விழுங்கக் காண்பென்கா ணெல்லா

இடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழும்
கடுங்கதிர் மீனிவை கான்பென்கா ணெல்லா

நாற்சீர் ஈரடியாய் வந்த இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்த தாழிசைகள்

கருப்பம்

செங்கோலு வெண்குடையும் செறிநிலத்து மறிந்து வீழ்தரும்
நங்கோன்றன் கொற்றவாயில் மணிநடுங்க நடுங்குமுள்ளம்
இரவு வில்லிடும் பகல்மீன்விழும் இருநான்கு திசையும் அதிர்ந்திடும்
வருவதோர் துன்பமுண்டு மன்னவற் கியாமுரைத்தும்

இது ஐஞ்சீரடி, அறுசீரடி, முடுகியலடி பயின்ற தாழிசை.

என

இது தனிச்சொல்

ஆடி யேந்தினர் கலனேந்தினர்
அவிர்ந்து விளங்கும் அணியிழையினர்
கோடி ஏந்தினர் பட்டேந்தினர்
கொழுந்தி ரையலின் செப்பேந்தினர்
வண்ண மேந்தினர் சுண்ணமேந்தினர்

மான்ம தாந்தின் சாந்தேந்தினர்
கண்ணி யேந்தினர் பிணையலேந்தினர்
கவரி யேந்தினர் தூபமேந்தினர்

இது முச்சீர் எட்டு அம்போதரங்க உறுப்பு

கூனும் குறளும் ஊமும் கூடிய
குறுந்தொழி லிளைஞர் செறிந்து சூழ்தர
நரைவி ரைஇய நறுங்கூந்தல
ருரைவி ரைஇய பலர்வாழ்த்திட
ஈண்டுநீர் வையங் காக்கும்
பாண்டி யன்பெருந் தேவி வாழ்கென
ஆயமும் காவலுஞ்சென் றடியீடு பரசியேத்தக்
கோப்பெருந் தேவி சென்றுதன்
தீக்கனுத் திறமுரைப்ப
அரிமா னேந்திய அமளிமிசை யிருந்தனன்
திருவீழ் மார்பிற் றென்னர் கோவே

இதுஅகவற் சுரிதகம்

இப்பால்
இது தனிச்சொல்

கூற்றும் மாற்றமும்

வாயி லோயே வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே அறிவிப் பாயே

இது கொச்சகம் அல்லது பாட்டு

என

இது தனிச்சொல்

வாயிலோன்

இது சொற்சீரடி

வாழியெங் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பிற் றலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்ந்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை யிறைவனை
ஆடல்கண் டருளிய வணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழிந்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே

இது கொச்சகம் அல்லது பாட்டு

என

இது தனிச்சொல்

வருக மற்றவட் டருக வீங்கு
இது கொச்சகம் அல்லது பாட்டு

என

இது தனிச்சொல்

வாயில் வந்து கோயில் காட்டக்
கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி
இது கவிக்கூற்று

நீர்வார் கண்ணை யெம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய் (எனத்)
இது கொச்சகம் அல்லது பாட்டு

என
இது தனிச்சொல்

தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புண்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே யவ்வூர்
ஏசாச் சிறப்பி னிசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி
நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே (எனப்)

இது சொற்சீரடி பயின்ற கொச்சகம் அல்லது பாட்டு

என

இது தனிச்சொல்

பெண்ணணங்கே

இது சொற்சீரடி

கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்

இது கொச்சகம் அல்லது பாட்டு

என

இது தனிச்சொல்

ஒள்ளிழை

இது சொற்சீரடி

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை யரியே

இது கொச்சகம் அல்லது பாட்டு

என

இது தனிச்சொல்

தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்

இது கொச்சகம் அல்லது பாட்டு

கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே

இது கவிக்கூற்று

மணிகண்டு

இது சொற்சீரடி

தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னுயுள் (என)

இது கொச்சகம் அல்லது பாட்டு

என

இது தனிச்சொல்

மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தன ணடுங்கிக்
கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி

இது கவிக்கூற்று

தாழிசை தனிச்சொல் அம்போதரங்கம் சுரிதகம் சொற்சீரடி கொச்சகம் அல்லது பாட்டு ஆகிய உறுப்புக்களைப் பெற்றுக் கூற்றும் மாற்றமுமாய் வந்த உறழ்கலி.

8. குன்றக் குரவை

யாப்பினல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு-உரைப்பாட்டுமடை

குருவியோப்பியுங் கிளிகடிந்துங் குன்றத்துச் சென்றுவைகி
அருவியாடியுஞ் சுனைகுடைந்து மலவுற்று வருவேமுன்
மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க
முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோவென முனியாதே
மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையங் கிழந்துபோந்த கடுவினையேன் யானென்ருள்
என்றலு மிறைஞ்சியஞ்சி யிணைவளைக்கை யெதிர்கூப்பி
நின்றவெல்லையுள் வானவரு நெடுமாரி மலர்பொழிந்து
குன்றவருங் கண்டுநிற்பக் கொழுநனெடு கொண்டுபோயினர்

இது கொச்சகம்

இவள்போலு நங்குலக்கோ ரிருந்தெய்வ மில்லை

இது உரைத்தொடர் (சொற்டெர்)

ஆதலின்

இது தனிச்சொல்

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
நிறங்கிள ரருவிப் பறம்பின் ருழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்
குறிஞ்சி பாடுமி னறும்புகை யெடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்

ஒருமுலை யிழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே

இது அகவற்சுரிதகம்-பாட்டாக வந்தது

கொளுச்சொல்

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு-இசைப்பா

ஆங்கொன்று காணு யணியிழா யீங்கிதுகாண்
அஞ்சனப் பூழி யரிதாரத் தின்னிடியற்
சிந்துரச் சுண்ணஞ் செறியத்தூய்த் தேங்கமழ்ந்
திந்திர வில்லி னெழில்கொண் டிழுமென்று
வந்தீங் கிழியு மலையருவி யாடுதுமே

இது கொச்சகம்

ஆடுதுமே தோழி யாடுதுமே தோழி
அஞ்சலோம் பென்று நலனுண்டு நல்காதான்
மஞ்சுசூழ் சோலை மலையருவி யாடுதுமே

இது கொச்சகம்

சிறைப்புறம்

யாப்பினுல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு-இசைப்பாக்கள்

எற்ருென்றுங் காணேம் புலத்த லவர்மலைக்
கற்றீண்டி வந்த புதுப்புனல்
கற்றீண்டி வந்த புதுப்புனன் மற்றையார்
உற்ருடி னேந்தோழி நெஞ்சன்றே;

என்னுென்றுங் காணேம் புலத்த லவர்மலைப்
பொன்னுடி வந்த புதுப்புனல்
பொன்னுடி வந்த புதுப்புனன் மற்றையார்
முன்னுடி னேந்தோழி நெஞ்சன்றே;

யாதொன்றுங் காணேம் புலத்த லவர்மலைப்
போதாடி வந்த புதுப்புனல்

போதாடி வந்த புதுப்புனன் மற்றையார்
மீதாடி னேங்தோழி நெஞ்சன்றே

இவை ஒரு பொருள் மீது மூன்றடுக்கி வந்தன

பாட்டுமடை

கலிவிருத்தம்-இசைப்பா

உரையினி மாதரா யுன்கண் சிவப்பப்
புரைதீர் புனல்குடைந் தாடினோ மாயின்
உரவுநீர் மாகொன்ற வேலேந்திக் யேத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி

தெய்வம் பராஅயது

கலிவிருத்தம்-இசைப்பா

சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமு நீங்கா விறைவன்கை வேலன்றே
பாரிரும் பெளவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே

அணிமுகங்க ளோராறு மீராறு கையும்
இணையின்றித் தானுடையா னேந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் றிருக்கைவே லன்றே
வன்திகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றங் கொன்ற நெடுவேலே

இவை ஒ பெபா ள்மீது மூன்றடுக்கி வந்தன

பாட்டுமடை-வெறிவிலக்கல்

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

இறைவளை நல்லா யிதுநகையா கின்றே
கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க

அறியாண்மற் றன்னை யலர்கடம்ப னென்றே
வெறியாட ருன்விரும்பி வேலன்வரு கென்ருள்

ஆய்வளை நல்லா யிதுநகை யாகின்றே
மாமலை வெற்பனேய் தீர்க்கவரும் வேலன்
வருமாயின் வேலன் மடவ னவனிற்
குருகு பெயர்க்குன்றங் கொன்ருன் மடவன்

செறிவளைக்கை நல்லா யிதுநகையா கின்றே
வெறிகமழ் வெற்பனேய் தீர்க்கவரும் வேலன்
வேலன் மடவ னவனினுந் தான்மடவன்
ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்

நேரிழை நல்லாய் நகையா மலை நாடன்
மார்பு தருவெந்நோய் தீர்க்க வரும்வேலன்
தீர்க்க வரும்வேலன் றன்னினுந் தான்மடவன்
கார்க்கடப்பந் தாரெங் கடவுள் வருமாயின்

இவை நான்கும் ஒரு பொருள்மீது அடுக்கி வந்தன.

பாட்டுமடை-அறத்தொடுநிலை

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

வேலனுர் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமே னேரிழை தன்னேடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வரும்வந்தால்
மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே

கயிலைநன் மலையிறை மகனை நின் மதிநுதல்
மயிலியன் மடவரன் மலையர்தம் மகளார்
செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்
அயன்மன மொழியரு ளவர்மன மெனவே

மலைமகண் மகனை நின் மதிநுதன் மடவரல்
குலமலை யுறைதரு குறவர்தம் மகளார்
நிலையுயர் கடவுளின் னிணையடி தொழுதோம்
பலரறி மணமவர் படுகுவ ரெனவே

குறமக ளவளெம குலமக ளவளொடும்
அறுமுக வொருவனின் வடியிணை தொழுதேம்
துறையிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமண மெனவே

இவை நான்கும் ஒரு பொருள்மீது அடுக்கி வந்தன.

பாட்டுமடை

கலிவிருத்தம்-இசைப்பா

என்றியாம் பாட மறைநின்று கேட்டருளி
மன்றலங் கண்ணி மலைநாடன் போவான்முன்
சென்றே னவன்றன் றிருவடி கைதொழுது
நின்றே னுரைத்தது கேள்வாழி தோழி

இது ஒரு பொருள் மீது தனித்து வந்தது

பாட்டுமடை

நிலைமண்டில ஆசிரியப்பா-இசைப்பா

கடம்பு சூடி யுடம்பிடி யேந்தி
மடந்தை பொருட்டால் வருவ திவ்வூர்
அறுமுக மில்லை யணிமயி லில்லை
குறமக ளில்லை செறிதோ ளில்லை
கடம்பூண் டெய்வ மாக நேரார்
மடவர் மன்றவிச் சிறுகுடி யோரே

இது ஒரு பொருள் மீது தனித்து வந்தது

என நீங்கு

இது தனிச்சொல் (நாடகக் கூறு)

பாட்டுமடை

ப∴ரொடை வெண்பா-இசைப்பா

அலர்பாடு பெற்றமை யானுரைப்பக் கேட்டுப்
புலர்வாடு நெஞ்சம் புறங்கொடுத்துப் போன
மலர்தலை வெற்பன் வரைவனும் போலும்
முலையினல் மாமதுரை கோளிழைத்தாள் காதல்
தலைவனை வானோர் தமராருங் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும் யாம்

இது ஒருவிகற்பத்தால் வந்தது.

யாப்பினல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு-இசைப்பா

பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுகம்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே

இது முதல் மடக்கி இருவிகற்பத்தால் வந்தது

பாடுற்று

இது தனிச்சொல்

கலிவிருத்தம் இசைப்பா

பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குனம் பைம்புனத் துள்ளாளே
பைத்தர வல்குல் கணவனை வானோர்கள்
உய்த்துக் கொடுத்து முரையோ வொழியாரே

இது தனித்து ஒரு பொருள்மீது வந்தது

கலிவிருத்தம் இசைப்பா

வானக வாழ்க்கை யமரர் தொழுதேத்தக்
கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே

கான நறுவேங்கைக் கீழாள் கணவனெடும்
வானக வாழ்க்கை மறுதரவோ வில்லாளே

இது தனித்து ஒரு பொருள் மீது வந்தது

பஃறொடைவெண்பா-இசைப்பா

மறுதர வில்லாளை யேத்திநாம் பாடப்
பெறுகதில் லம்ம விவ்வூரு மோர்பெற்றி
பெற்றி யுடையதே பெற்றி யுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றி யுடையதிவ் வூர்

இது ஒரு விகற்பத்தால் வந்தது

என்றியாம்

இது தனிச்சொல் (நாடகக்கூறு)

அரசவாழ்த்து

நேரிசை ஆசிரியம்-இசைப்பா

கொண்டு நிலைபாடி யாடுங் குரவையைக்
கண்டுநங் காதலர் கைவந்தா ராணு
துண்டு மகிழ்ந்தானு வைகலும் வாழியர்
வில்லெழு தியவிம யத்தொடு
கொல்லி யாண்ட குடவர் கோவே

௯. வாழ்த்துக்காதை

கட்டுரை

(நாடகக் கூறு)

குமரியொடு வடவிமயத்து ஒருமொழிவைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன், கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப் பேரியாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன், சினஞ் செருக்கி, வஞ்சியுள் வந்திருந்த காலை, வடவாரிய மன்னர் ஆங்கோர் மடவரலை மாலைசூட்டி உடனுறைந்த இருக்கை தன்னிப் ஒன்று மொழி நகையினராய்த் தென்றமிழ் நாடாளும்வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்றவழும் இமயநெற்றியில் விளங்கு விற்புலி கயல்பொறித்த நாள், எம்போலும் முடி மன்னர் ஈங்கில்லைபோலும் என்ற வார்த்தை, அங்குவாழும் மாதவர் வந்து அறிவுறுத்தவிடத்து, ஆங்கண், உருள்கின்ற மணிவட்டைக் குணில்கொண்டு துரந்ததுபோல் இமயமால் வரைக் கற் கடவுளாம் என்ற வார்த்தை இடந்துரப்ப ஆரியநாட்டு அரசோட்டி அவர் முடித்தலை, அணங்காகிய பேரிமயக் கற் சுமத்திப் பெயர்ந்துபோந்து, நயந்த கொள்கையிற் கங்கைப்பேர் யாற்றிலிருந்து நங்கை தன்னை நீர்ப்படுத்தி, வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி வஞ்சிமா நகர்புகுந்து, நிலவரசர் நீண்முடியால் பலர்தொழு படிமங்காட்டித் தடமுலைப் பூசலாட்டியைக் கடவுண் மங்கலம் செய்த பின்னாள், கண்ணகிதன் கோட்டத்து மண்ணரசர் திறை கேட்புழி அலம்வந்த மதி முகத்திற் சில செங்கயல் நீருமிழப் பொடியாடிய கருமுகிறன் புறம் புதைப்ப அறம்பழித்துக் கோவலன்றன் வினையுருத்துக் குறுமகனாற் கொலையுண்ணக் காவலன்றன் இடஞ்சென்ற கண்ணகி, தன் கண்ணீர் கண்டு மண்ணரசர் பெருந்தோன்றல் உண்ணீரற்று உயிர் இழந்தமை மாமறையோன் வாய்கேட்டு மாசாத்துவான் றான்றுறப்பவும், மனைக்கிழத்தி உயிர் இழப்பவும் எனைப் பெருந்துன்பம் எய்திக் காவற்பெண்டும் அடித்தோழியும் கடவுட் சாத்தன் உடனுறைந்த தேவந்தியும் உடன்கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரைமாநகர் புகுந்து, முதிரா

முலைப்பூசல்கேட்டு, ஆங்கு அடைக்கலம் இழந்து உயிரிழந்த இடைக்குலமகள் இடம் எய்தி ஐயை அவள் மகளோடும் வையையொரு வழிக்கொண்டு, மாமலை மீமிசையேறிக் கோமகடன் கோயில்புக்கு, நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவற்குத் திறமுரைப்பர்மன்.

யாப்பினுல் வேறுபட்ட கொச்சகவொருபோகு-இசைப்பாக்கள்

தேவந்திசொல்

முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து
கடுவரற் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்
சோணுட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்

காவற்பெண்டு சொல்

மடம்படு சாயலாள் மாதவி தன்னைச்
கடம்படாள் காதற் கணவன் கைப்பற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்
தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர்

அடித்தோழி சொல்

தற்பயந்தாட் கில்லைத் தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கு மெனக்குமோர் சொல்லில்லைக்
கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றெடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்
இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன

யாப்பினுல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு-இசைப்பாக்கள்

தேவந்தி அரற்று

செய்தவ மில்லாதேன் றீக்கனுக் கேட்டநாள்
எய்த வுணரா திருந்தேன்மற் றென்செய்தேன்

மொய்குழல் மங்கை முலைப்பூசல் கேட்டநாள்
அவ்வை உயிர்வீவுங் கேட்டாயோ தோழி
அம்மாமி தன்வீவுங் கேட்டாயோ தோழீ

காவற்பெண்டு அரற்று

கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் தன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பலசெய்து
மாசாத்து வான்றுறவுங் கேட்டாயோ அன்னை
மாநாய்கன் தன்றுறவுங் கேட்டாயோ அன்னை

அடித்தோழி அரற்று

காதலன் தன்வீவுங் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறு மேச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவுங் கேட்டாயோ தோழீ
மணிமே கலைதுறவுங் கேட்டாயோ தோழீ

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன

யாப்பினல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு-இசைப்பா

தேவந்தி ஐயையைக் காட்டி அரற்றியது

ஐயந்தீர் காட்சி யடைக்கலங் காத்தோம்ப
வல்லாதேன் பெற்றேன் மயலென் றுயிர்நீத்த
அவ்வை மகளிவடா னம்மணம் பட்டிலா
வையெயிற் றையயைக் கண்டாயோ தோழீ
மாமி மடமகளைக் கண்டாயோ தோழீ

இது ஒரு பொருள்மீது தனித்து வந்தது

கலிவிருத்தம்-இசைப்பாக்கள்

செங்குட்டுவன் கூற்று

என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை

நல்வயிரப் பொற்றேட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றோன்றுமால்

கலிவிருத்தம்-இசைப்பா

கண்ணகி கடவுள் நல்லணி காட்டியது

தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினு னவன் தன்மகள்
வெள்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடும் தோழிமீ ரெல்லீரும் வம்மெல்லாம்

துறை, தாழிசை, விருத்தம்-இசைப்பா

வஞ்சி மகளிர் சொல்

வஞ்சியீர் வஞ்சி யிடையீர் மறவேலான்
பஞ்சடி யாயத்தீ ரெல்லீரும் வம்மெல்லாம்
இது குறள் வெண் செந்துறை

கொங்கையாற் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்மெல்லாம்
தென்னவன் தன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்

இது ஆசிரியத் தாழிசை

செங்கோல் வளைய உயிர்வாழார் பாண்டியரென்
றெங்கோ முறைநா வியம்பவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் தன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்

இது கலிவிருத்தம்

குறள்வெண்செந்துறை ஆசிரியத்தாழிசை கலிவிருத்தம் ஆகிய மூவேறு இனப்பாடல்களும் ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன

ஆயத்தார்சொல்

நேரிசைவெண்பா-இசைப்பா

வானவ னெங்கோ மகளென்றாம் வையையார்
கோனவன்றான் பெற்ற கொடியென்றாள்-வானவனை

வாழ்த்துவோ நாமாக வையையார் கோமானை
வாழ்த்துவாள் தேவ மகள்

வாழ்த்து

தரவின்றித் தாழிசை பெற்ற கொச்சகவொருபோகு-இசைப்பா

தொல்லை வினையாற் றுயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுன்னீர் வையை
சூழு மதுரையார் கோமான்றன் றொல்குலமே

இது தாழிசை

மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண்முடிமே லேற்றினுன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனனீ ரான் பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் றொல்குலமே

இது தாழிசை

எல்லா நாம்

இது தனிச்சொல்

காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும்
பூவிரி கூந்தல் புகார்

இது வெள்ளைச் சுரிதகம்

அம்மானைவரி

யாப்பினுல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு-இசைப்பாக்கள்

விங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஒங்கரணங் காத்த உரவோன்யா ரம்மானை
ஒங்கரணங் காத்த உரவோ னுயர்விசும்பில்
தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை

புறவு நிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை

கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன்யா ரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன் திக்கெட்டும்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானை
கொற்றவன்றன் பூம்புகார் பாடேலோ ரம்மானை

அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே அம்மானை
கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை

இவை ஒரு பொருள்மீது நான்கடுக்கி வந்தன.

கந்துகவரி

அறுசீர் ஆசிரிய விருத்தம்-இசைப்பாக்கள்

பொன்னி லங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னி லங்கு மேகலைக ளார்ப்ப வார்ப்ப வெங்கணும்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்று பந்த டித்துமே
தேவரார மார்பன் வாழ்க வென்று பந்த டித்துமே

பின்னு முன்னு மெங்கணும் பெயர்ந்து வந்தெ ழுந்துலாய்
மின்னு மின்னி ளங்கொடி வியனி லத்தி ழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்று பந்த டித்துமே
தேவரார மார்பன் வாழ்க வென்று பந்த டித்துமே

துன்னி வந்து கைத்தலத் திருந்த தில்லை நீணிலம்
தன்னி னின்று மந்தரத் தெழுந்த தில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்று பந்த டித்துமே
தேவரார மார்பன் வாழ்க வென்று பந்த டித்துமே

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

ஊசல் வரி

யாப்பினுல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு-இசைப்பாக்கள்

வடங்கொண் மணியூசன் மேலிரீஇ யையை
உடங்கொருவர் கைநிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்
கடம்பு முதறடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறை வாடாமோ வூசல்
கொடுவிற் பொறிபாடி யாடாமோ வூசல்

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்

வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக் குங்கோமான் மன்னன் றிறம்பாடி
மின்செ யிடைநுடங்க வாடாமோ வூசல்
விறல்விற் பொறிபாடி யாடாமோ வூசல்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

வள்ளைப்பாட்டு

யாப்பினுல் வேறுபட்ட கொச்சக ஒருபோகு-இசைப்பாக்கள்

தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழ லவைப்பார் புகார்மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்

பாடல்சான் முத்தம் பவழ வுலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோ னாரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்

சந்துரற் பெய்து தகைசா லணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டால்
கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்
பனந்தோ டுளங்கவரும் பாடலே பாடல்

இவை ஒரு பொருள்மீது மூன்றடுக்கி வந்தன.

ஆங்கு

இது தனிச்சொல்

அரசவாழ்த்து

இன்னிசை வெண்பா-இசைப்பா

நீணில மன்னர் நெடுவிற் பொறையனல்
தாடொழார் வாழ்த்த றமக்கரிது சூழொளிய
எங்கோ மடந்தையு மேத்தினு ணீடுழி
செங்குட் டுவன்வாழ்க வென்று.

துணை நூல்கள்

1. அகநானூறு
2. ஆய்வுக்கோவை-மலர்கள்-
ஐந்து, ஆறுவது கருத்தரங்கு
3. இலக்கண வரலாறு - புலவர் சோம - இளவரசு 1963, தொல்காப்பியர் நூலக வெளியீடு
4. இலக்கண விளக்கம்
5. இலக்கியத்திறன் - டாக்டர் மு. வரதராசன், 1965, தாயக வெளியீடு
6. இலக்கிய மரபு - டாக்டர் மு. வரதராசன், 1960, தாயக வெளியீடு
7. இறையனுர் களவியல்
8. ஐங்குறுநூறு
9. கலித்தொகை
10. கவிஞராக - அ. கி. பரந்தாமனுர், 1964, அல்லிநிலைய வெளியீடு
11. கவிதையனுபவம் - டாக்டர் ந. சுப்புரெட்டியார்
12. கானல்வரி, டாக்டர் தெ. பொ. மீனுட்சிசுந்தரம், 1965-கலைக்கதிர் வெளியீடு
13. குடிமக்கள் காப்பியம், டாக்டர் தெ. பொ. மீனுட்சி சுந்தரம், 1961, தொல்காப்பியர் நூலக வெளியீடு
14. குறுந்தொகை
15. சித்தாந்த தீபிகை, தொகுதி-2
16. சிவகசிந்தாமணி
17. சிலப்பதிகாரம்
18. சிலப்பதிகாரத் திறனாய்வு, ம. பொ. சிவஞானம், 1974, பூங்கொடி பதிப்பக வெளியீடு
19 சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம்

எஸ். இராமநாதன், 1965, கலைமகள் இசைக்கல்லூரி வெளியீடு
20. சேதுப்பிள்ளை வெள்ளி விழா மலர்
21. தண்டியலங்காரம்
22. தமிழ் இலக்கிய வரலாறு-தொல்காப்பியம், க. வெள்ளைவாரணன், 1957, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு
23. தமிழ்க்காதல், டாக்டர் வ. சுப. மாணிக்கம், 1962 பாரிநிலைய வெளியீடு
24. தமிழ் நெறி விளக்கம், டாக்டர் உ. வே. சா. பதிப்பு
25. தமிழ்ப்பொழில்
26. திருக்குறள்
27. தூது இலக்கியங்கள், ந. வீ. செயராமன், 1965, மணிவாசகர் நூலக வெளியீடு
28. தொல்காப்பியம்-எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம்
29. தொல்காப்பியம்-செய்யுளியல், நச்சினார்க்கினியம்
30. தொல்காப்பியம்-சொல்லதிகாரம், சேனாவரையம்
31. தொல்காப்பியம்-பொருளதிகாரம், இளம்பூரணம்
32. தொல்காப்பியம்-பொருளதிகாரம், பேராசிரியம்
33. நன்னூல்
34. நாமதீபநிகண்டு
35. நான்மணிக்கடிகை
36. நீலகேசித்திரட்டு
37. நேமிநாதம்
38. பதிற்றுப்பத்து
39. புறநானூறு
40. மணிமேகலை
41. மலைபடுகடாம்
42. மறைந்துபோன தமிழ் நூல்கள், மயிலை. சீனி. வேங்கடசாமி, 1967, சாந்தி நூலக வெளியீடு
43. முத்துவீரியம்
44. மூதுரை

45. யாப்பதிகாரம், புலவர் குழந்தை 1968, பாரிநிலைய வெளியீடு
46. யாப்பருங்கலக் காரிகை
47. யாப்பருங்கலம்
48. யாழ்நூல், தவத்திரு விபுலானந்த சுவாமிகள், 1974, கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு
49. விருத்தப்பாவியல், டி. வீரபத்திர முதலியார்
50. வீரசோழியம்
51. A History of English prosody-G. Saintsbury, Vol. 3, 1961
52. A Short History of English versification, Max. Kaluza, Ph. D., 1911, The Macmillan Company
53. Advanced Studies in Tamil prosody, Dr. A. Chidambaranatha Chettiar, M. A., Ph. D., 1972, Annamalai University publication.
54. An English Prosody on Inductive lines, George Young, Cambridge.
55. Principles of English metre, E. Gerton Smith M. A., 1923, Oxford University Press.
56. Principles of English verse, Charlton Minar Lewis, 1929, Yale University Press
57. Some principles of Literary Criticism, C. T. Winchester
58. The Art of Versification and the Technicalities of poetry, R. F. Brewar, B. A., 1923, Edinburgh
59. The realm of Poetry, S. J. Brown
60. The rudiments of Criticism, E. A. G. Lamborn, 2nd Edition, 1925, Oxford Uuiversity Press.

பொருளடைவு

எண் : பக்க எண்

அகத்தியர் பாட்டியல் 46
அகத்தியர் யாப்பியல் 46
அகநிலைக்கொச்சகக்கலி 354
அடிப்படை இலக்கண நூல்கள் 64
அடிப்படை விளக்கங்கள் 10
அடுக்கிவந்த தாழிசைகள் 364
அடைக்கலக்காதை 251
அந்தாதி அமைப்பு 250, 275
அந்திமாலைச் சிறப்பு செய் காதை 199
அம்மானைவரி 305
அரங்கேற்றுகாதை 197
அரசரைத் தெய்வமென்று பரவுதல் 361
அரசவாழ்த்து 232, 267
அரசவாழ்த்துப்பாடல் 248
அவிப்பலி-இசைப்பாடல் 246
அவிநயப்புறநடை 48
அவிநயம் 47
அழற்படுகாதை 287
அறுவகை இலக்கணம் 21
ஆங்கிலச்சாகுசன் காலம் 33
ஆசிரியத் தாழிசை 107, 261, 365
ஆசிரியத்துறை 106, 409
ஆசிரியப்பாவகை 113
ஆசிரியவிருத்தம் 105, 407
ஆய்ச்சியர் குரவை 252
ஆய்ச்சியர் குரவை-யாப்பு அமைதி 252
ஆயத்தார் சொல் 304
ஆற்றுவரி 207, 221
இசைக்கவிதை 35
இசைக்குரியயாப்பு 156
இசைத்தமிழ்ப்பாவகைகள் 99
இசைப்பாக்களின் யாப்பு வடிவங்கள் 205
இசைப்பாடல்கள் 261
இசைப்பாவாய் வருதல் 382
இடைமடக்குச் சிறப்பு 271
இணைக்குறளா? இடைக்குறளா? 136
இணைக்குறளாசிரியம்-தோற்றக் கீர்ணம் 138
இணைக்குறளாசிரியப்பாவின் ஈறு 138
இதுவென்கொல் தாழிசை 276
இந்திரவிழவூரெடுத்தகாதை 200
இயல்பொருட்பொதிவு 14
இயலிசை நாடகப்பொருட் டொடர் நிலைச்செய்யுள் 6
இயற்றமிழ்ப்பாவகைகள் 68
இயற்றமிழ் யாப்புச் சொல் 181
இரங்கற் பாடல் 35
இரண்டடுக்கல் 263
இலக்கணக்கூறு வரையறை 19
இன்பதுன்ப உணர்வும் மயங்கிசையும் 337
ஈதொன்று தாழிசைகள் 275
ஈற்றமைப்பு 381, 386
ஈறுகள் 129
உண்டுகொல் தாழிசைகள் 278
உரைச்சொல் பெறுதல் 386
உரை-சொல் 9
உரைத்தொடர் 290
உரைநடைப் பகுதிகள் 425
உரைப்பாட்டு 9,256
உரைப்பாட்டுமடை 238, 289 298 425
உரைபெறுகட்டுரை 141
உரைபெறுகட்டுரை-நுவல்-பொருள் 143
உரையாசிரியர்கள் 122

உரையாசிரியர்களும் பதிப்பு ஆசிரியர்களும் 2
உரையாரோதாழிசைகள் 278
உரையாளிகள் சான்றுரை 125
உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் 8
உரையிடையிட்டவை 427
உள்வரி வாழ்த்து 264
உறழ்கலி 84, 403
உறுப்புக்களின் விளக்கம் 165
ஊசல்வரி 307
ஊர்காண்காதை 251
ஊர்சூழ்வரி 274
ஊர்சூழ்வரி பெயர்க்காரணம் 117
எடுத்துக்காட்டு 258
எதுகையிலாச்செய்யுள் 38
ஐந்திலக்கணநூல்கள் 22
கட்டுரை 231
கட்டுரை-அமைப்புநிலை 144
கட்டுரை காதை 287
கட்டுரை-பொருள் 144
கடலாடுகாதை 200
கண்டுணர் திறனாய்வு 1
கதைநிகழ்ச்சியும் நிலை-மண்டிலமும் 315
கதையும் காதையும் 180
கந்துகவரி 306
கருத்தொற்றுமை 127
கருப்பம் 255
கலிப்பாக்களில் தனிச்சொல் 191
கலிப்பாவகை 113
கலிப்பாவின் யாப்புநெறி 391
கலிவிருத்தம் 108, 262, 302, 415
கலிவெண்பா 78, 396
கனாத்திறமுரைத்தகாதை 234
காக்கைபாடினியம் 49
காட்சிக்காதை 297
காடுகாண்காதை 236
காண்டக் கட்டுரை 143
காதாவும் காதையும் 180
காதை 179
காப்பியகாலம் 37
காப்பியங்களின் உட்பிரிவுகள் 152
கால்கோட் காதை 297
காவியக் கவிதை 35
கானல்வரி 201, 212
கானல்வரி-இசைப்பாடல்கள் 204
கானல்வரி-நாடகக்கூறு 203
கானல்வரி-பெயர்க்காரணம் 166
கானல்வரி-யாப்புவகை 201
கிளைக்கதையும் கலிவெண்-பாட்டும் 334
குட்டச்செந்தூக்கு 139
குரவை 173
குரவைக்கூத்து 174
குரவைப்பாடல் 176
குழூப்பொருண்மையும் பாவினங்-களும் 339
குறள்மிடைமண்டிலம் 75
குறள்மிடைமண்டில யாப்புநெறி 383
குறள் வெண்செந்துறை 109, 254, 412
குறள்வெண்பா 262
குறள்வெண்பாவும் நிலை-மண்டிலமும் 75
குறளடி வஞ்சிப்பா 96, 253
குறுவெண்பாக்கள் 235
குன்றக்குரவை 288
கூத்து வகை 169, 174
கூற்றுமாற்றமும் 284
கூற்றுமாற்றமும் உறழ்கலியும்- 335
கூன் 139
கையனூர் யாப்பியல் 51
கொச்சகங்கள் 271
கொச்சகம் 257
கொச்சகவொருபோகு 259
கொடை-இசைப்பாடல்கள் 244
கொலைக்களக்காதை 251
கொளு 256
கொளுச்சொல்-இசைப்பாக்கள் 291

சங்ககாலப் பொருள் யாப்பு-
நெறி 314
சங்கப்பாடலும் சிலப்பதிகாரமும்
சங்க யாப்பு 53
சாகுசன் சாயல் காலம் 34
சாயல்வரி 233
சார்த்துவரி 210,222
சானட்டுக்கவிதை 53
சானட்டுக் காலம் 34
சிலப்பதிகாரம்: புணர்ச்சி 347
சிலம்பில் இசைப்பாக்கள் 104
சிலம்பின் காலம் 63
சிற்றிலக்கிய இலக்கணம் 44
சிற்றிலக்கிய காலம் 37
சிறுகாக்கை பாடினியம் 53
சிறுபாவமைப்பு 286
சிறைப்புறம் 291
செய்யுள்-பாட்டு-யாப்பு 28
செய்யுளியல் 54
தமிழ் யாப்பியல்திறனுக்கு 3
தரவின்றுகித் தாழிசை பெற்ற
கொச்சக ஒருபோகு 357, 406
தரவு கொச்சகக் கலிப்பா 93, 263
400
தனியமைப்பு 376
தனிச்சொல் 130, 266
தனிச்சொல் பெற்ற தனித்-
தாழிசை 362
தனிச்சொல்லும் கொச்சகமும் 273
தாழிசை-கருப்பம் 282
தாழிசைகள் 272
தாழிசை யோசையின்றி அடுக்கி
வருவது 359
திணை நிலைவரி 217, 223
திருக்குறட் கருத்துக்கள் 131
திறனாய்வு நிலை விளக்கம் 30
துன்பமாலை 161, 269
தெய்வம் பராஅயது 292
தொடக்க அமைப்பு 129
தொடக்கக் கட்டுரை 206
தொடர்ச்சிப் பொருண்மையும்
கொச்சக ஒருபோகும் 338
தொடர்ந்த பொருளாய் நான்கடுக்
கல் 363
தொடையமைப்பு 337, 391
தொல்காப்பியர் காலப் பொருளும்
யாப்பும் 312
தொன்மை 351
தோல் 353
நகைக்கவிதை 35
நடுகற்காதை 29
நத்தத்தம் 56
நாட்டுப்பாடல் 35
நாடகக்கவிதை 35
நாடகக்காப்பியம் 7
நாடகக்கூறுகள் 424
நாடகத்தமிழ்க்கூறுகள் 114
நாடுகாண் காதை 236
நிகழ்ச்சிப்பாடல் 35
நிலைமண்டில ஆசிரியஈறு 72
நிலைமண்டில ஆசிரியத்தின்
யாப்பு நெறி 375
நிலைமண்டில ஆசிரியம் 68
நிலைமண்டிலத்தின் பழைமைச்
சிறப்பு 316
நிலைமண்டிலத்துக்கு உரிய
பொருண்மைகள் 331
நிலைவரி 214
நீதிக்கவிதை 35
நீர்ப்படைக்காதை 297
நுவல்பொருள் 119
நுவலும் பொருள் 299
நூற்கட்டுரை 147
நூற்கட்டுரை-அமைப்பு 147
நேரிசையாசிரியப்பா 77
நேரிசையாசியப்பா யாப்புநெறி
383
பஃறுழிசைச் கொச்சகக் கலிப்பா
87, 240, 398
படர்க்கைப்பரவல் 265
பண்ணத்தி 100
பத்திப்பாடல் 35
பதிகம் 133

பதிகப் பாடியதுயார் 133
பல்காயம் 56
பலிக்கொடை-இசைப்பாட 247
பாட்டிடை வைத்த குறிப்பு 347
பாட்டியல் நூல்கள் 41
பாட்டு சுரிதகம் 290
பாட்டும் காதையும் 180
பாட்டுமடை 292, 293
பாட்டுமடை (அறத்தொடு நிலை) 293
பாடல் 153, 159
பாடல்-அடியார்க்கு நல்லார் - கருத்து 153
பாவினநெறி 405
பிறயாப்பியல் நூல்கள் 58
புதுவகைப் பாவினம் 422
புறஞ்சேரியிறுந்த காதை 250
புறத்தமைத்த பிறபகுதிகள் 149
புறத்தேயமைந்த செய்யுட்கள் 117
பொதுப்பாயிரம் 134
பொதுப்பாயிரம்-யாப்பமைதி 135
பொருத்தங்கள் 42
பொருள்மீது அடுக்கல் 419
பொருளொடு புணர்ந்த நகை மொழி 350
மங்கலம் 156
மங்கல வாழ்த்துப் பாடல் 183
மயங்கிசைக் கொச்சகக்- கலிப்பா 95,187,401
மயங்குதிணை நிலைவரி 225
மயேச்சுரம் 57
மறைந்தயாப்பியல் நூல்கள் 45
மனையறம் படுத்தகாதை 195
மனையறம் படுத்தகாதை- புதியபகுதி 196
மாலை 159
மாலை-பொருண்மை 161
முகமில்வரி 211, 229
முத்தமிழ்ப் பொருட்கூறுகள் 7
முத்தமிழ் யாப்புக்கூறுகள் 7
முத்தமிழ் யாப்பு வடிவப்பதிப்பு 13
முரிவரி 215
முன்னிலைப்பரவல் 265
மூன்றடுக்கி முடுகியலாய் வருதல் 360
மூன்றடுக்கிய தாழிசைகள் 271
மூன்றுதலைப்பில் இசைப்பாடல் 242
யாப்பியல் திறனிகள் 3
யாப்பினால் வேறுபட்ட கொச்சக ஒருபோகு 90, 301, 368, 391
யாப்புநூல்களின் நுவல்பொருள் 38
யாப்புநெறி 128
யாப்பு நெறியாளர் 315
யாப்பு நோக்கி லெழுந்த சிறப்புப் பெயர்கள் 5
யாப்பு பல்பொருள் 29
யாப்பு பொருள் மாறுபாடு 27
யாப்பு பொருசுள விளக்ம் 24
யாப்பு வகைகளின் காலகள் 33
யாப்பு வடிப்பதிப்பு 13
வசனகவிதைகள் 38
வஞ்சிப்பாவின் யாப்பு நெறி 388
வஞ்சிமகளிர் சொல் 302
வஞ்சின மாலை 162, 286
வண்ணனைக்கவிதை 35
வரந்தரு காதை 310
வரி 163
வரிக்கூத்து 167
வரிப்பாடல் 163
வரிப்பாடல் ஒற்றுமை வேற்றுமை 232
வழக்குரை காதை 20
வள்ளைப்பாட்டு 307
வாழ்த்தாய் வருதல் 383
வாழ்த்து 157, 304
வாழ்த்துக்காதை 298
வாழ்த்துப் பாவாய் வருதல் 386
விகற்பங்கள் 130
வெண்டாழிசை 110, 413
வெண்டாழிசை-தளையும் பொருளும் 186
வெண்டாழிசைப் பொருண்மை 184
வெண்டாழிசை-யாப்பமைதி 185
வெண்பா அடிகள் 275
வெண்பா-ஈறுகள் 129
வெண்பாக்கள் 117
வெண்பா-தனிச்சொல் 130
வெணபா-தொடக்கஅமைப்பு 129
வெண்பா பாடியவர்யார் 123
வெண்பாவகை 111
வெண்பாவிகற்பங்கள் 130
வெண்பா யாப்புநெறி 128
வெண்பாவின் யாப்புநெறி 389
வேட்டுவவரி 237
வேட்டுவவரி-பெயர்க்காரணம் 170
வேனிற்காதை 234